முழுமுதற்றுணை

MEENATCHI

OR

THE ROMANCE OF A BRAHMAN FAMILY.

மீனாக்ஷி

அல்லது

ஒரு பிராமணகுடும்பத்தின் விசித்திரகதை.

த. இ. அ. மணவாள நாயகர்

பிரசுரித்தது.

1912

முழுமுதற்றுணை.

MEENATCHI

OR

THE ROMANCE OF A BRAHMAN FAMILY.

---o---

மீனாக்ஷி

அல்லது

ஒரு பிராமணகுடும்பத்தின் விசித்திர கதை.

ஓர் வானவாசியால்

இயற்றப்பட்டது,

த. இ. அ. மணவாள நாயகர்

பிரசுரித்தது.

விலை ரூபாய் ஒன்று.

1912.

தபாற் சிலவு பிரத்தியேகம்,

THE PROGRESSIVE PRESS, 14, BAKER STREET, MADRAS.

உ

முழுமுதற்றுணை

முகவுரை.

Full many a gem of purest ray serene
The dark unfathomed caves of ocean bear
Full many a flower is born to blush unseen
And waste its sweetness on the desert air.

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதனை மென்னுமச் சேறகத் தின்மையால்
கோதென்று கொள்ளாதாங் கூற்று. (நாலடியார்)

பதினைந்துவயதில் இவ்வரிய புதியகதையை யெழுதத் தொடங்கித் தமது பதினாறாமாண்டில் பீ. ஏ. பட்டம்பெற்றுச் சிறிதுகாலம் கணிதசாஸ்திர போதகாசிரியராயிருந்து பின்பு நான்கு வருடகாலம் இஞ்சினீரிங்காலேஜில் சிக்ஷைபெற்ற இந் நூலாசிரியர் "கற்றீண்டு மெய்ப்பொருள்கண்டா" ராகலின் தமது இருபத்திரண்டாமாண்டிலேயே "மற்றீண்டுவாராநெறி" தலைப் பட்டார். மின்னல்போற் றோன்றிமறைந்த இவரது வாழ்நாளில் இவர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தமது திருக்குறளில் இல்லறவியலை விளக்குங்கால் கூறியுள்ள—அன்புடைமை, விருந் தோம்பல், இனியவைகூறல், செய்ந்நன்றிமறவாமை, நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில்விழை யாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங் கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல்,

ஈகை, புகழ் முதலிய மேலாய குணங்களையெல்லாம் குறைவின்றிக்கொண்டிருந்தாராதலான் இவர் புகழொடு தோன்றினரென்றே சொலல்வேண்டும்.

ஒன்றாவுலகத்துப் பொன்றாது நிற்பதாகிய உயர்ந்த புகழுக்குச் சாதனமாய் இவர் இவ்வற்புதநூலையுமியற்றி இல்லறத்தார்க்குரிய இலட்சணங்களனைத்தையும் பூரணமாய்ப்பூண்டிருந்தார். இவருக்குக்கிட்டிய மனைத்தக்க மாண்புடையமனையாளினிடம் பழிபிறங்காப் பண்புடையபுதல்வனொருவனு முற்பவித்து இவர்க்கு எழுபிறப்புந் தீயவை தீண்டாது செய்தான்.

நிற்க, மீனாக்ஷியென்னு மிந்நூல் நூலாசிரியர் தாமே சுயமாகக் கற்பனைசெய்த கதையேயாம். இதையெழுதுங்கால் இவர் ஏனைய நூலெதனினின்றுஞ் சிறிதுமுதவிபெறவில்லை. பயனில்சொல்பாராட்டாத இவர் எவ்விஷயத்தையு முற்றுநோக்குந்தன்மையும் செவிகொடுத்துணருங்குணமுங் கொண்டவராகலான் தமது இளமைப்பருவத்திலேயே மானுடவியற்கையை யறியத் திறனுடையவராயிருந்தார். இக்கதையில் வரும் பல ஸ்திரீபுருஷர்களுக்கு மாறு பெயர் கொடுக்கப்பட்டிருப்பினும் அவர்களுடன் நூலாசிரியர் நெருங்கிப்பழகியுள்ளார். இக்கதை உண்மையில் நடந்தவிஷயமல்லாதபோதினும் இதில்கூறியுள்ள பாத்திரங்களின் நடவடிக்கைகள் வாஸ்தவமானவைகளே.

தற்காலம் வெளிவரும் உரைநடை நூல் பலவற்றுள் 'நூல்' என்னும் பதத்தின் பொருளுக் கமையக் கிடைக்கும் நூல் மிகுசிலவே. வெற்றுரைபொதிந்து வெறுக்கக்கூடிய விஷயஞ்செறிந்து, தமிழல்லாத வேறு பாஷைகளின் சொற்பிரயோகமலிந்து, படிப்பதாற் பயன் சிறிதுமுதவாவாகி இழிந்துகிடக்கும் அந்நூற்குப்பைகளை ஒருங்கே பொசுக்கிச் சாம்பராக்கற்கு வெளிவந்த ஊழித்தீப்போன்ற இந்நூலில், குன்றின்மேலேற்றிய தீபம்போல் விரவியிருக்கும் பொருட்சுவை சொற்சுவை செறிந்த விஷயங்களை யிம்முகவுரையிற் காட்டவேதியலாதாயினும், சிற்சிலவிடங்களில் இலைமறை காய்மறையாய்க் கிடக்கும் விஷயத்தினைமாத்திரம் காட்டுதும்.

கதைவாயிலாக லௌகிக ஞானம் புகட்டுவது மேனாட்டாரது தொன்று தொட்டவழக்கம். இவ்வழக்கம் நம்மனோருள் புராணேதிகாசங்கள் வழியாய்க் கொள்ளப்பட்டது. இப்புராணேதிகாசங்கள் வரவரப் பழம்பாட்டி கதையாய்ச் சொள்ளப்படுதலின் தற்காலநாகரிகத்திற்கும், கல்வியாராய்ச்சிமுறைக்கும் ஒக்க லௌகிக ஞானமுணர்த்தவல்ல நூல்கள் வெளிவருதல் தக்கதே. அதற்கேற்ப வெளிவந்த இந்நூல் உள்ளதையுள்ளவாறே காட்டக்கூடிய தன்மையில், ஆசிரியர் வயதிற் சிறியராயினும் அறிவிலும் அனுபவத்திலும் கல்வியினும் பெரியராய், நூலில் அடங்கிய ஒவ்வொரு பாத்திரத்தின் செய்கைக்கேற்ப வாசகம், நடை முதலியவை பிழையாது காட்டியிருப்பதால் அவை மிகவுங் பாராட்டற்பாலவாம். பிராமணர்கள் உயர் குலத்தவர்களாயிருந்தும் புருஷர்கள் மாத்திரம் எல்லாவகையிலும் திருத்தமடைந்து கல்வி கேள்விகளில் நிரம்பியிருக்கின்றார்களேயன்றிப் பெண்களுள் அவ்வறிவு பரவவில்லை என்றும், அது பரவாததால் அந்தகாரம் மூடிப் பூர்வதுராசாரங்களும், கொள்கைகளும், தாழ்ந்தபுத்தியும் அவர்களைவிட்டகலவில்லை என்றும், அதனால் தங்களுக்கேயன்றி ஆண்களுக்கும், சமயம் நேர்ந்துழித் துன்பம் உண்டாகின்றதென்றும் இந்நூலால் இனிதுகாணலாம். அன்றி இதன் ஆசிரியர் பிராமணரே யாதலின் அவர் தம்மினத்தாரில் மிகுந்து கிடக்கக்கூடிய குற்றங்குணங்களைத் தெள்ளிதில் எடுத்துக்காட்டவல்லுநராதல்பற்றி அங்ஙனமே காட்டியுள்ளார். எவ்வளவு கல்வியில்மேம்பட்டுள்ளோராயினும், எந்தகைய உயர்பதவியிலிருந்தோராயினும், சமயத்தில் சுயநலம்பாராட்டலும், தமதுபிடியைச்செலுத்தலும் உலகவழக்கென்பதைக் கதாநாயகியின் குடும்பத்திலுள்ளார் செய்கைகளிலும், அவள்புக்ககத்தின் செய்கைகளிலும் நன்குகாட்டியுள்ளமை கூர்ந்துநோக்கத்ததாம். பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் எந்தெந்த சகவாசங்களை யொழிக்கவேண்டுமென்றும், விளையாட்டுக்கும் பொய்யுரையாடலாகாதென்றும், தம்மனம்போனபோக்கில் புத்தியைச் செலுத்தலாகாதென்றும், அவசரப்பட்டுப் பெற்றோர் உற்றோர், மித்திரர் அறிவோர் வார்த்தையை யலக்ஷியப்படுத்தலாகாதென்றும், அங்ஙனஞ்செய்யின் படாது படுவரென்றும் கதா

நாயன் பட்ட கஷ்டநஷ்டங்களில் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற் காட்டியுள்ளதை லௌகிகத்திற்புகும் இளைஞர் ஆய்ந்தறிந்து ஒழுகக்கடவர்.

புத்தி கூர்மையா யிருந்தும் அதனைத் தக்கவழியிற் செலுத்தித் தனக்கேயன்றிப் பிறர்க்கும் பயன்படுத்தாது அல்வழியிற் பிரயோகித்து இந்நூலின்கதாநாயகி நாயகனுக்கும், அவர்கள்குடும்பங்கட்கும் தீராத்துயரும், மாளாக்கஷ்டமும், நீங்காவசையும் நிலைக்க வைத்த நாராயணசாமிஐயர் கதி என்னவாயிற்று ? தற்கொலையன்றோ நற்பயனுக்கிடைத்தது ! இவைபோன்ற அறிவைப்புகட்டவல்ல விஷயமே இப்புத்தகவுருவாயமைந்துள்ளதால் அவையாவையும் இங்கெடுத்தியம்புதல் மிகையாம், ஆசிரியரே தெற்றென விளக்கியுள்ளாராகலின்.

இனிஆசிரியரது உரை நடைமாதிரியைக் கவனிப்போம். நல்ல மாதிரியில் தற்காலம் எழுதப்பட்ட உரை நடை நூல்கள் கிடைத்திலது. எல்லாப்புலவர்களும் பாவினத்தில் நூலியற்றினார்களேயன்றி உரை நடையிலியற்றினாரில்லை. உரை யிடையிட்டபாட்டியல் போன்றவைகளிலும், சங்கநூல்களுக்கேற்பட்ட வுரைகளிலும் சிறிது உரை நடை காணலாம். அவை பின்பற்றற்கு முடியாத தன்மையில் எழுதப்பட்டுளவால் உரை நடையிற் பழகவிரும்புவோருக்குத் தக்க மாதிரி யில்லாதொழிந்தது. பிற்றைக்காலத்தில் வெளிவந்த புலவர்வள் கேவலம் கர்நாடகவழியிற் சென்றாரேயன்றிக்காலவேற்றுமையையும்,இளைஞர்கள் மனப்போக்கையும், அவர்கள் தமிழ் கற்கக் கிடைத்திருக்கும் வசதியையுங் கவனித்தாரில்லை. இதனால் அவர்கள் நடை தற்காலம் பயன்படா தொழிந்து, முடிவாய் ஆங்கிலம்பயின்ற தமிழ்ப்புலவர்கள் தங்களுக்கென ஓர் நடையைப் புதிதேபற்றியுள்ளாராகலின் அதனையே கடைப்பிடித்துச் சில கல்விமான்கள் சில அரிய நூல்கள்செய்து உலகிற்கு உதவினர். அவ்வகையில் இந்நூலும் அமைந்துஉரைநடைபயில அவாவுற்றமாணுக்கர்களுக்கு நன்னடைபயிற்று மென்பதிலையமில்லை. இலக்கியவிலக்கணக்கடலை நிலைகண்டுணர்ந்த இவ்வாசிரியர் எவ்வகைய அரியநடை எழுதவுந் தக்காரேனும், தம்நூலைப் பயில்வோர்

பெரிதும் பெண்பாலரும் சிறிது ஆண்பாலருமாகலின் அன்னே
ருக் கெளிதில் விளங்க இனியசெந்தமிழில் கொடுஞ்சொல், இழி
சொல், வேற்றுச்சொற் பிரயோகங்கள் விரவாமல் இயற்றியுள்ளா
ராகலின் அவர்க்குத் தமிழுலகம்பெரிதும் கடப்பாடுடையதாம்.

அதிபாலிய முதல் இந்நூலாசிரியருடன் வளர்ந்து பழகி அவ
ருடைய குணத்திலும், நடக்கையிலும் ஈடுபட்டு அவரது பிரிவினை
யாற்ருது நான் கவன்றிருக்கையில் அவரது ஞாபகார்த்தமாக இப்
புத்தகத்தை அச்சிட்டுத் தமிழ்நாட்டுக்குத்தந்து நூலாசிரியரிட
மெனக்கிருக்கும் மதிப்பையும் வியப்பையு மொருவாறு அறிவிக்
கும்படி என்னை இடைவிடாது தூண்டிக் கிலமாயிருந்த ஏட்டுப்
பிரதியை வெகுநேர்த்தியாக எழுதிக்கொடுத்தும் இன்னும் பல
விதமாக எனக்கு உதவி புரிந்துமுள்ள என் ஆப்தநண்பர் தரங்கம்
பாடி அழகியமணவாளநாயகருக்கு நான் மிக்க கடமைப்பட்டுள்
ளேன்.

RANGOON,
20—7—1912.

V. S. I.

மீனாள் அல்லது மீனாக்ஷி.

முதல் அத்தியாயம்.

சம்பந்தி வருகை.

பட்டினமுழுது நிசப்தமாயிருந்தது. இடைவெளியின்றி நிறைந்திருக்கும் கடைவீதியிற்கூட வொருவரையுங் காணோம். எல்லோரும் பகலிற்செய்த வேலையினாற் களைத்து நல்ல நித்திரையி லிருந்தார்கள். பார்த்தவருக்குப் பயத்தைப் பயப்பதான அப்பாதிராத்திரி வேளையில் திருப்பாதிரிப்புலியூர் என்னுந் திவ்ய ஸ்தலத்திலுள்ள தேவாலயத்திலும் அர்த்தஜாம பூசைமுடிந்து கோவில் வேலையாட்களெல்லாம் துயிலிடம்போயினர்; கடவுளுந் துயில்பவர் போன்றிருந்தார். அவ்வூரின் வீதிகளெங்கும் கொலை, களவு நடவாதபடிக்கு ஊர் சுற்றிவருங் காவலர் தவிர, வேறு ஒருவருடைய போக்குவரவுமில்லை.

இப்படிப்பட்ட அமைதியிலிருக்கும் திருப்பாதிரிப் புலியூர்ப் பட்டினத்தில் ஒரு வீட்டில் மாத்திரம் அதிக சந்தடியாயிருந்தது. பொழுதுவிடிந்தால் அவ்வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ வக்கில் இராஜகோபாலய்யர் குமாரி, சௌ. *மீனாள் என்னும் மீனாக்ஷிக்குக் கலியாணமாம்.

மீனாக்ஷிக்கு அப்பொழுது வயது 12. மிக்க ரூபவதி. பொன்போலுந் திருமேனியுடையவள். பார்ப்பவர் கண்களைப் பறிக்கத்தக்கவள். மிக்க கல்வியுடையவள். பூமி தேவியின் பொறுமையுடையவள். அவயவங்களெல்லாம்

---

* மீனாள் அல்லது மீனாக்ஷி என்னும் பெயர் இருவகையாயிருப்பதால் படிப்போருக்குச் சந்தேகம் நிகழாதபடி இனி மீனாக்ஷி என்னும் ஒரு பதத்தையே வழங்குவோம்.

நன்கு அமைந்து சரியான தகுதியுடையனவாயிருந்தன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, அறநெறிச்சாரம், நன்னெறி, நல்வழி, திரிகடுகம், நீதிநெறி விளக்கம், நளவெண்பா, நாலடியார், பாரதம் முதலிய இலக்கியமும், நன்னூல், இலக்கணவிளக்கமாதி இலக்கணமுங்கேட்டு முடித்து அப்பொழுது கம்ப இராமாயணமும் திருக்குறளும் படித்துக் கொண்டிருந்தனள். கணக்கு, பூகோளசாஸ்திரம், சரித்திரம் முதலிய நூல்களையும் நன்குணர்ந்தவள். நன்றாய்ப் பாடுவள். சிலபேரை யொத்துச் சபைக்கோழையல்ல. அவளது வள்ளைபோன்ற காதும், சூல்கொண்ட மேகம்போன்ற குழலும், குவளைபோன்ற கண்களும் தரளம்போன்ற பற்களும், பவளம்போன்ற வாயும், பூர்ணசந்த்ரன் (வட்டம்) போன்ற முகமும், மூங்கிலையொத்த தோட்களும், அவளுடைய படிப்பிற்குங் குணத்திற்கும், சாதுத்தனத்திற்கும் அழகுசெய்தன. அவளுருவத்தில் மிக்க உயரமும் குள்ளமுமின்றி மத்திமதரமாக விருந்தாள்.

அப்படிப்பட்ட மீனாக்ஷிக்குப் பொழுதுவிடிந்தால் கலியாணமாம். இராஜகோபாலய்யர் மிக்க தனவான். கலியாணத்துக்கு 5000-ரூபாய் செலவுசெய்வதாகக் கணக்குப் போட்டிருந்தார். அனேக வேலையாட்களும், பரிசாரகர்களும் வந்து ஓடிக்கொண்டும் வேலைசெய்துகொண்டும் இறைந்துகொண்டுமிருக்கிறார்கள். "வண்டி வண்டி" என்கிறார் சிலர், "ஜல்தி ஜல்தி, ரெயில்வந்துவிடும், நாழியாயிற்று" என்கின்றார் சிலர். "ரெயிலித்தனை நாழி கூடலூரைவிட்டுப் புறப்பட்டிருக்கும்" என்கின்றார் சிலர். "எல்லாரும் சேர்ந்திருந்தால் காரியமெப்படியாகும்" என்றார் இராஜகோபாலய்யர். இப்படி இவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது இரண்டு குதிரைகட்டிய ஒருவண்டி யிவர் வீட்டு வாசலில்வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் கீழே இறங்கினார். "இராமசுவாமி, ஏன் இத்தனைநாழி" என்றார் இராஜகோபாலய்யர், "வண்டிக்காரனை வீட்டில் காணவில்லை, அவன் போனயிடம் கண்டுபிடித்து அழைத்துவந்தேன்" என்றார் இராமசுவாமியென்று கூப்பிடப்பட்ட

வர். "இந்த வண்டிக்காரன் இப்படித்தான். இவன் சுபாவம் எனக்குந்தெரியும். நல்ல வேளையில் மோசஞ்செய்துவிடுவான்" என்றார் இராஜகோபாலய்யர். "கடைத்தெருவிலே புகையிலைக்காப்பு வாங்கப்போயிருந்தேன்" என்றான் அவ்வண்டிக்காரன். "நல்லது, உன்னை யொன்றுங்கேட்கவில்லையே நான், நாழியாகிறது. இராமசுவாமி, வண்டியில் ஏறிக்கொண்டுபோ. அவனெங்கே பையன்கிட்டு? அவனையுங்கூட அழைத்துக்கொண்டுபோனால், அவர்கள் இந்த ஒருமணிவண்டிக்கு வருகிறதும் வராததும் வந்துசொல்லலாம்" என்று இராஜகோபாலய்யர் சொல்லிக்கொண்டிருக்குப்போதே ஒருபையன் அரைச்சீலைகூட இன்றி ஓடிவந்து "என் பெயரைச்சொல்லி யாரழைத்தார்கள்? யாரழைத்தார்கள்?" என மிகவுங்கோபத்துடன் கேட்டான். "அப்பா! தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிறாயே? இன்னம்" என்றார் இராமசுவாமி அய்யர். "அக்கா கலியாணத்துக்கு நான் தூங்குவேனோ? நாளைக்கி அத்திம்பேர்வருவார். அத்திம்பேருக்கும் அக்காவுக்குஞ்சேர்த்து முடித்துவிட்டு, அப்புறம்—ஏன், பெரியப்பா, ஏனின்னம் அதிகம்பேர்வரவில்லை?—நாளைக்குக் கலியாணமன்னு?—" என்று சரமாரியாய்ப்பொழிந்தான் 7-வயதுள்ள அச்சிறுபையன். "அப்பா, நீயும் வண்டியிலேறிக்கொண்டுபோய் அவர்கள்வந்தார்களா, இல்லையா வென்பதையோடிவந்து சொல்லவேண்டும். தெரியுமா?" என்று இராஜகோபாலய்யர் சொன்னார். "சரி சரி, அத்திம்பேர்வரப்போகிறார்! அக்காவுக்குக்கலியாணம்" என்று குதித்துக்கொண்டோடி வண்டியிலேறினான். இராமசுவாமி அய்யரும் ஏறினார், வண்டி புறப்பட்டது. "அப்பா, திரும்பிவரும்பொழுது நாய் ஏதாவது குரைக்கப்போகின்றது?" என்று எச்சரிக்கைகொடுத்தார் இராஜகோபால அய்யர். வண்டி லாந்தர், கண்ணுக்குமறைந்தபின், இராஜகோபால அய்யருக்கும் மற்றொருவர்க்கும் சம்பாஷணை நடந்தது.

இராமசாமி ஐயர்—ஏய் நாராயணசுவாமி அய்யரே! ஏன் அவர்களின்னம்வரவில்லை? ஏதேனுமபாயம் நேரிட்டு

ருக்குமோ? எல்லோரும் வந்துவிட்டார்கள். முக்கியமான வர்களைக் காணோம்.

நாராயணசாமி ஐயர்—என்னமோ? ஏதோ ? வந்துவிடு வார்கள், ரெயில் தப்பிப்போயிருக்கும்.

இரா—என்ன இரண்டுவண்டியுமா தப்பியிருக்கும்? காலேவண்டியில் வருவதாகச் சொன்னார். அதிலேயும் வர வில்லை. $7\frac{1}{2}$-மணி சாயங்காலம் வண்டியிலும் வரவில்லை. மனக்கவலையே பெரிதாயிருக்கின்றது.

நாரா—கலியாணத்துக்கு நீங்களும் புறப்பட்டிருந் தால் அப்பொழுது தெரியும்.

இரா—ஒருவேளை நம்முடைய 1000-ரூபாயையும். வாங்கிக்கொண்டு, இன்னுமோரிடத்தில் வேறு பணமும் வாங்கிக் கலியாணம் செய்கிறாரோ வென்னமோ?

நாரா—என்ன ஐயா, முந்நூறு ரூபாய் உத்தியோகஸ் தன், டெபுடி கலெக்டர். அப்படியெல்லாம் செய்வாரா ?

இரா—அப்படி நினையாதேயும். தஞ்சாவூர் ஜில்லா பேர்வழிகளெல்லாம் எமப்பேர்வழிகள். நாராயணசுவாமி ஐயர் என்றுபெயருடைய ஒரு வைக்கீல் இருந்தாராம். அவர் ஆள் டம்பமாய், ஒரு வண்டியென்ன குதிரையென்ன 5-வேலி நிலமென்ன, இப்படி பணக்காரராயிருந்தாராம். அவ ருக்கு ஒரு பிள்ளை. அவன் 16-வயதுள்ளவனாய் 5-வது கிளாசில் வாசித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு 1500-ரூபாய் எதிர் ஜாமீன் வாங்கிக்கொண்டு கலியாணத்திற்கு ஒத்துக்கொண்டார். மறுநாள் ஒருவன் பெண் கொடு க்கிறதாக வந்தான். அவனிடத்தில் பிள்ளை வேறிடத் தில் நிச்சயமாய்விட்டதென்று சொல்லலாமே. அது இல்லை. கலியாணத்துக்கு ஒத்துக்கொண்டு அவனிடத்திலும் 1500-ரூபாய் வாங்கிக்கொண்டார். இந்த சேதி முதல் வந்தவனுக்குத் தெரிந்தது. அவன் இரண்டாந்தரம் வந் தவனிடத்தில்போய் தான் நிச்சயம் பண்ணியிருப்பதைச் சொல்லவே இருவருக்கும் வருத்தமாகிவிட்டது. ஆயி னும் ஒன்றுசேர்ந்து இரண்டாவானுடைய பெண்ணையே கொடுப்பதாய் நிச்சயித்துக்கொண்டு ஒரு அழகான சூத்

திரச்சிறுவனைக் கூப்பிட்டு அவனுக்கு இவர்கள் சொன்னபடி ஏழுநாள் கேட்டுக்கொண்டிருந்தால் 50-ரூபாய் தருவதாக ஏற்பாடுபண்ணி, அவனுக்குப் பெண்வேஷம்போட்டு நல்லாடையுடுத்தி, அவனைக் கன்னிகாதானஞ் செய்வித்து, திருமங்கிலியதாரணமும் முடித்து கிரகப்பிரவேசத்திற்காகவும் பின்னுமிரண்டுநாள் வைத்திருப்பதாக மாமிசொல்லவே சரியென்று அதற்காகப் பெண்ணையும் விட்டுவிட்டு எல்லாரும் தந்தம் ஊர்வந்து சேர்ந்தனர். இச்சிறு சூத்திரப்பையன் 7-நாளாயிற்றே யென்று வக்கீலுடன் நேராகப்போய் "அவங்கே யெங்கே போனாங்கோ?' என்று தன் சொந்தப்பாஷையில் சம்பாஷிக்கத் தொடங்கினான். நாட்டுப்பெண், நேரே மாமனாரிடம் பேசுவதைக்கேட்டு மாமியாரோடிவந்து "ஏண்டி, யப்படித்தான் பேசுகிறதோ மாமனாரோடே? நன்றாயிருக்கு, உள்ளேவாடி" என்றிழுக்க, "25-ரூபாய் கொடுத்து 25-ரூபாய் அப்புறந்தரேன் என்னாங்களே" என்று இவன் மறுமொழிசொல்ல "அதற்கென்ன, ஊருக்குப்போய் வாங்கிக்கொள்ளுநெ, இரண்டுநாள் கழித்து போகலாம், உள்ளேவா. எல்லாந்தான்! அருமைபாப்பிள்ளைக்குக் கலியாணம் பண்ணினாரே! எங்கேயோ போய்ப் பள்ளப்பேச்சும், வெக்கங்கெட்டத்தனமும், குறைச்சலில்லை! வாடிவா!" என்றாள். "என்னம்மா நீ சொல்ரது தான், 7-நாளைக்கு 50-ரூபாயோ, 9-நாளைக்கு 50-ரூபாயோ" என்று பேசவே, அவர்கள் இவனுடைய உண்மையை யறிந்து வீட்டைவிட்டுத் துரத்தி, சம்பந்திபேரில் வியாச்சியம் செய்ய அவன் இவருடைய குற்றங்களை யெடுத்துரைக்கவே, கோர்ட்டு முழுவதுஞ்சிரித்து, அதனால் தனது யோக்கியதை யுலகமுழுவதும் வெளியாய் அவமானப்பட்டு வந்தாராம். இது என்னுடைய தகப்பனார் எனக்குச் சொல்லியது. அவர் காலத்தில் நடந்தது என்று தன் பெரியபேச்சை முடித்தார்.

முடிந்ததுதான் தாமஸம், தடதடவென்று ஒரு ஓசை கேட்டது. ஒரு நொடிக்குள் கிருஷ்ணசுவாமியென்ற அச்சிறுபையன் எதிரே நின்றான்.

"என்ன செய்தி" என்றார் இராமகோபாலய்யர்.

"அவர்கள் வரவில்லை" என்றான் சிறுவன்.

"இதற்குத்தானா இவ்வளவு ஓட்டம்?"

"நாய் துரத்தின, கடிக்கும்போலேயிருந்தது"

"போகும்பொழுதே சொன்னேனன்றோ?"

"ஆமாம். நான் இன்னுமொருதரம் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும்; சுவாமி, ஆண்டவனே, இந்தவிசை அவர்கள் வந்துவிட்டால் 10-தேங்காயுடைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஓட்டம்பிடித்தான் கிருஷ்ணசுவாமி.

"கிட்டு, அப்பா, கிட்டு" என்று கூப்பிட்டுக்கொண்டிருக்கவேண்டியதுதான் இராமகோபாலய்யர். கிட்டு இருப்புப்பாதை நிலையிலிருக்கின்றான்.

"அந்த வண்டியிலும் வரவில்லை பார்த்தீர்களா? அவர்கள் யான்சொன்னபடித்தான் போயிருக்கின்றது. உம்முடைய பிள்ளைக்குக் கொடுத்துவிடலாம், சிறுவனுமிருக்கிறதே யென்று பார்த்தேன்" என்றார் இராமகோபாலய்யர்.

"அதற்கென்ன விப்பொழுது கலியாணமெல்லாம் நிச்சயமாய்விட்டது, அந்தப்பேச்சு என்னத்திற்கு?" என்று சிறிது மனவூக்கமுற்றவரைப்போல வியம்பினர் நாராயணசுவாமி அய்யர்.

இரா—அப்படி மனஸ்தாபப்பட்டுக் கொள்ளக்கூடாது.

நாரா—அடடா! எனக்கா, மனஸ்தாபமென்பதேயில்லை.

இரா—அவர்கள் வராவிட்டால், செய்தகாரியங்களெல்லாம் பாழாகும், வந்தவர்களெல்லாம் வீணே திரும்பிவிட்டுப் போகவேண்டும், நாமும் அவமானப்படவேண்டும், பாலீசுவரா! நீயே எனக்குத் துணை.

நாரா—"அவ்வளவு விசனம் வேண்டாம் அண்ணா, இந்தவண்டியில் வந்துவிடுவார்கள்" என்று தைரியப்படுத்தினர் நாராயணசுவாமி அய்யர்.

இவ்வாறிருவருமிருக்க, உள்ளே கூடத்தில் மண்ணெண்ணெ விளக்கொன்றும், குத்துவிளக்கொன்றும் வைத்திரு

ந்தன. அங்கு கூடியிருந்தவர்களின் பெயர் லக்ஷ்மி, காமாக்ஷி சுந்தரி, ப்ரஹன்னாயகி, பாகீரதி, சுப்பம்மாள். இவர்களுடைய குணாதிசயங்கள் இவர்கள் பேச்சிலே விளங்கும். இவர்கள் இன்னார் என்பதும் தானே தெரியவரும். ஆகையால் இங்கே எடுத்துரைக்கவில்லை. இவர்கள் இராத்திரி 10-மணிமுதற் கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். எல்லாம் கலியாணப் பேச்சுத்தான். சம்பந்தி வராததற்குக் காரணமும் வராவிட்டால் தங்களுக்குண்டாகக்கூடிய அவமானத்தினெல்லையும் இன்னும் அவர்கள் பேசதற்குரியனவைகளும் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பேசியவற்றில் சிலவற்றை யெடுத்துரைப்போம். இலக்கணப்பிழைகளையுந் திருத்திப்போகிறோம்.

சுப்பம்மாள்—பெண்ணுக்குக் கலியாணமென்று காமாக்ஷியம்மாளுக்குத் தூக்கங்கூட வரவில்லை.

காமாக்ஷி—முதலே மோசமாயிருக்கின்றதாம், நமக்குத் தூக்கம் ஒன்றுதான் குறைச்சல்.

சுப்—உங்களுக்கென்ன குறைச்சல் மகராஜி, பதிவிரதை. நானு முங்களோடு பழகி 10 வருஷமாயிற்று, உங்களைப் போல் நல்லவர்களை நான் எங்கேயும் கண்டதில்லை.

கா—போதும், சுப்பம்மாள், ஸ்தோத்திரத்தை நிறுத்தும். உங்களைப்போல் ஸ்தோத்திரஞ் செய்ய ஒருவராலும் முடியாதென்பதெனக்குத் தெரியும்.

சுப்—நான் சொல்லுகிறது ஸ்தோத்திரமா? அப்படியென்றால் வாயை மூடிவிட்டேன்.

பாகீரதி—ஸ்தோத்திரஞ் செய்கிறவர்களைக் கண்டா லெனக்குப் பிடிக்காது, முன்னாலே யொன்றுசொல்லுகிறது, பின்னாலே யொன்றுசொல்லுகிறது. ஸ்தோத்திரஞ்செய்கிறவர்களும் பொய்பேசுகிறவர்களும் சமானமே. பொய்பேசினால் எவ்வளவுபாவமோ அவ்வளவு பாவம் ஸ்தோத்திரஞ்செய்தாலும்.

லக்ஷ்மி—எல்லாருமே யுன்னைப்போ லிருப்பார்களா? எல்லோரும் நல்லவர்களாகவே யிருந்தால் அவர்களுடைய

குணம் வெளிக்கு வராது. பல்லக்கு ஏறுகிறவர்கள் இருந்தாலும் தூக்குகிறவர்கள் நாலுபேர் வேண்டாமா?

பா—உன் பேச்சுக்கு நான் வரவில்லையே அம்மா!

ல—உன்பேச்சுக்கு நான் எங்கேவந்தேன்? உன்னையார் சீண்டுகிறார்கள்.

பா—போதும், நீ வாயாடியென்பது எனக்குத்தெரியும்.

ல—அப்படியா? நீ மிகவும் நல்லவள், நான் வாயாடி. காமாக்ஷிக்காகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் வாயாடியென்று சொன்ன நாக்குத் தவிடுபொடியாய்ப் போயிருக்கும். நான் வாயாடியென்றதைப் பார்த்தாயோ? வாயாடியாம், நாக்கிலே புழு புழுகக.

பா—என்ன அதிகமாய் மிஞ்சுகிறாயே? என்னடி?

ல—இங்கே யடிகிடி என்று பேசினாற்றெரியுமா? பல்லெல்லாம் சுக்குத்தூளாய்ப் போய்விடும். உன் மாமனாருக்கும் பயப்படமாட்டேன், உன் மாமியாருக்கும் பயப்படமாட்டேன். கிடந்தாற்போகிறது என்றால் ஒன்றுந் தெரியவில்லையோ? ஆமாம்! கொட்டினாற்றேளும் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சியும். நீங்களெல்லாம் காசுபணத்திலே பருத்தவர்கள், நாங்கள் ஏழைகள். உன் அகத்துக்காரரைப்போல் என் அகத்துக்காரரும் முனிசீபு வேலையா பண்ணுகிறார்? என் அகமுடையான்றான் என்னை நடுச்சந்தியிலே விட்டுவிட்டு 16-வயதுக்கெல்லாம் போய்விட்டானே சண்டாளப்பையன். ஒருவருமில்லை யென்றுதானே இப்படியெல்லாஞ் சொல்லுகிறாய்? பட்டாமணிய முனிசீபு செய்கிறபோதே இவ்வளவுராங்கி, இவ்வளவு ஒய்யாரம், இவ்வளவு ஆணவம், இன்னும் டிஸ்டிரிக்டு முனிசீபு செய்தால் நாங்களெல்லாம் பிழைக்கிறதேது?

இன்னு மைந்துமணி நேரம் பேசிக்கொண்டேயிருப்பாள். ஆனால் வாசலில், முன்னே தடதடவென்ற ஒரு ஓசையும், அப்புறம் வண்டியின் சப்தமும் அப்புறம் 10-அல்லது 15-வண்டிகளின் கூச்சலும் அனேக மனிதர்

சப்தமுங்கேட்டு எல்லோருமெழுந்துபோக, இவளுமெழுந்துபோனாள். இவள் பேச்சிலிருந்து இவள் குணம் இன்னதென்பது வெளிப்பட்டிருக்கலாம். இவள் ஆறு, குளம், கோவில் முதலானவைகளில் பேச ஆரம்பித்துவிட்டால், எல்லோரும் நடுநடுங்கி இடியைக்கேட்ட சர்ப்பம்போல ஒடுங்கியிருப்பார்கள். தவறிப்பேச ஆரம்பித்துவிட்டால், மாலையிற் கட்குடித்த மூடர்களே! எச்சனுக்குச் சண்டை பிடிக்கிறவர்களே! புத்தகத்திலுள்ள பிழைகளையும், கர்த்தாவையும், ஆன்ற வருந்தமிழ்ப்பதங்களால் பழிக்கும் புலவர்களே! நீங்கள் வசைமொழி பயிலவேண்டுமென்றால் மாதுஸ்ரீ லக்ஷ்மி அம்மாளிடம் கற்றுக்கொள்ளலாம். மாதம் 10, 15-ரூபாயாகச் சம்பளங்கொடுத்து எப்.ஏ., பீ.ஏ., முதலான பரீக்ஷைகளுக்கு வாசிக்கிறார்களே, இனாமாய் லக்ஷ்மி அம்மாள் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறாள்; நிபுணர்களாய் விடலாம், சிற்சில சமயங்களில் அவளது உபதேசத்தை ஒழிந்தவேளையில் தெய்வச்செயலால் காதில் வீழ்த்திய என்னை அவ்வசைமொழி பரீக்ஷையில் ஜயிக்க ஒருவரானுமாகாதென்றால், அவள் மகிமையை யாரால் சொல்லக்கூடும், லக்ஷ்மி! உன்னைப்போல அம்மனும் இருந்துவிட்டால் உலகுபிறகெவ்வாறாகுமோ? தேவர்கள் பெயரை மக்களுக்கிடுவதினாலேயே மக்களுக்கு அவர்கள் குணங்கள் வாய்க்கமாட்டா என்பதை நீ உண்மையாக்கியதனால் உனக்கு மிகவும் வந்தனஞ் செய்கின்றோம்.

2-வது அத்தியாயம்.

கலியாணம்—முற்பகுதி.

கலியாணப்பெண் மீனாக்ஷியைப்பற்றி யொன்றுஞ் சொல்லவேண்டாமா? மத்தியானம் $10\frac{1}{2}$-மணி வண்டியிலே தன் புருஷன் வந்துவிடுவான், வந்துவிடுவான், என்று வாசற்பக்கமாயிருக்கும் அறையிற்புகுந்து ஜன்னல் கதவை பாதிதிறந்து வைத்து ஒருவருமறியாமல் எட்டி யெட்டிப்

பார்த்துக்கொண்டிருந்தாள். $10\frac{3}{4}$-மணி ஆயிற்று, சமயந்தான். முதலில் நம்முடைய வண்டிதான் வரும் என்று கண்கொட்டாமற் பார்த்துக்கொண்டிருந்தாள். கலியாணம்பண்ணிக்கொள்ளும் பெண்களுக்கே முதல்முதல் நாயகனைப்பார்ப்பதென்றால் மிகுந்த ஆசை. அவ்வாசைக்கும் நியாயமுண்டு. தன்னுடைய வாழ்நாள் முழுவதுங் கூட இருந்து தனது சுகதுக்கங்களுக்குப் பாத்திரனாய், அவைகளுக்குக் காரணமாயும் இருப்பிடமாயும், அடிமையாகிய தனக்கு எஜமானனாகியும், அறியாதவளாகிய தனக்கு அறிகருவியாகியும், படர்கொம்பற்றுப் பரிதவிக்கின்ற தனக்குக் கொழுக்கொம்பாகியும் இருக்கப்பட்டவன் எப்படிப்பட்டவனோ என ஆசை தோன்றுவது நியாயந்தானே. பிதாவும் பந்துக்களும் பிரயாசைப்பட்டுத் தேடியவன் தன் மனத்திற்கேற்றவனோ இல்லையோ? படித்திருந்தால் பிதாவுக்குப் போதும், நற்குலமாயிருந்தால் பந்துக்களுக்குப் போதும், படிப்பும் நற்குடிப்பிறப்புமிருந்தும் அரூபியாயிருக்கிறானோ? ஏழையாயிருக்கிறானோ? ஏனெனில் படித்தும் ஏழையாகின் என்செய்வது? சற்று உடம்பு சரியில்லையாயின் தன்கதி யெப்படி? அவர் கதிதா னெப்படி? அரூபியாயிருந்தால் சுக மனுபவிப்பதெப்படி? ஆகிலும் தன்பிதா, தன்னை மிகவும் கஷ்டப்பட்டு அன்பாய் வளர்த்தவர், தான் அழுதால்கூட அழுதும், கஷ்டப்பட்டால் கூட வருத்தப்பட்டும், உயிருக்குயிராய்வளர்த்தவர், நல்லவனைத்தான் பார்ப்பார், கூடியவரைக்கும் அழகுள்ளவனைத்தான் தேடுவர், ஏதோ அப்படி தேடப்பட்டவன் தன்மனத்துக்குத் தக்கவனாயிராவிட்டாலும் அவனோடு நேயமாயிருக்கவேண்டுமேயொழிய மறுக்கலாமோ? நல்லது, கலியாணமெல்லாம் நிச்சயமானபிறகு மறுத்தாற்றான் நன்றாயிருக்குமோ? உலகம் பழிக்காதோ? ஆகையால் பிதா பார்த்தவரைப்பற்றி யாதொரு குற்றமுந்தான் சொல்லாதிருப்பதே நல்லது, ஆயினும் அவர் இவ்வாறாயிருக்கின்றாரென்பதைத் தானறிந்துகொள்ளவேண்டுமன்றோ? தன்மனத்தைத் திருப்திசெய்யவேண்டுமன்றோ? அழகாயிருந்தால் சந்தோஷம், மத்திமதரமாயிருந்தால் சிறிது சந்தோஷம், அரூபியாயிருந்தால் 'ஏதோ நமக்குக்கிடைத்தது இதுதான், நம்மு

டைய பூர்வஜன்மப் பலனிவ்வளவுதானென் றிருக்கவேண்டி யது' என்ற எண்ணங்களெல்லாம் கலியாணமாகப்போகிற பிராமணப் பெண்களுக்கு இருக்கிறது வழக்கம். மீனாக்ஷியும் அப்பெண்களி லொருத்திதானே, ஆகையால் மீனாக்ஷி இவ்வளவு பெண்ணினுள் ஜன்னல் அருகேநின்று கொண்டு இவ்வாறிருக்கையில் தன் வீட்டுவண்டி வருவதைப்பார்த்து, கண்கொட்டாது, கண்களைத் துடைத்துக்கொண்டனள். நன்றாய்ப்பார்த்தாள், தன்வண்டி யொன்றுமே வந்ததேயொழிய வேறுவண்டி யொன்றையுங் காணேம். அவர்கள் வரவில்லையென்று அறிந்துகொண்டாள். மீனாக்ஷிக்கு மிக்க சந்தோஷம், ஏனெனில் அன்றுகாலையில் மீனாக்ஷியும் அவள் தோழி யொருத்தியும் வேடிக்கையாகச் சம்பந்திவந்தால், மீனாக்ஷி தோழிக்கு ஒரு ரூபாய்க் கொடுத்துவிடுகிறதென்றும், வராமற்போனால் தோழி, மீனாக்ஷிக்கு ஒருரூபாய் கொடுத்துவிடுகிறதென்றும் ஒரு பந்தயம் போட்டுக்கொண்டார்கள். மீனாக்ஷி காலை 7½ மணிவண்டியில் வருவார்களேயொழிய காலையில் வரார்களென்று நிச்சயமாய் நம்பியிருந்தாள். ஆயினும் ஒருவேளை வருவார்களோவென்று எட்டிப்பார்த்தவள், வராது தன்மொழி மெய்யானதைப்பற்றிச் சந்தோஷப்பட்டாள். குழந்தைகள் பந்தயம் போடுவார்களேயொழிய கொடுக்கமாட்டார்களென்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம். அப்படியே அத்தோழியை யவள் ரூபாய் கேட்டபோது, தோழி “நான் வேடிக்கையாய்ச் சொன்னேனே யல்லாமல் என்னிடத்திலேது” என மறுமொழி பகர்ந்தனள். பிறகு பகல் சாப்பாடு முடிந்தும் தோழியும் மீனாக்ஷியும் வேடிக்கையாய் ஒரு மூலையில் பேசிக்கொண்டிருந்தார்கள். கலியாணத்துக்குக் காரியஞ் செய்பவர்கள் கஷ்டப்படுவார்களே யொழிய அக்கலியாண முக்கிய மனுஷ்யாளுக்கு யாதொரு வேலையுமில்லை யென்பது சித்தம். ஆகையால் பல கூடைகள் நிறைய வாழைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய் மற்றுங் காய்கறிகளும், பலவித பழதினுசுகளும் கூலிக்காரர்கள் கொண்டுவந்தனர். அவற்றை வாங்கி யொழுங்காய் வைப்பவர் சிலர், பணங் கொடுப்பவர் சிலர், இரகசியமாய் ஒருவரும் பார்க்காமல்

சில பதார்த்தங்களைத் திருடித் தம்வீடு சென்று வைத்துவிட்டு திரும்பிவந்து "இப்பூனையும் பாலைக்குடிக்குமோ" என்கிற உலகவசனத்தின்படி யிருப்பவர் சிலர்; மேளக்காரன், புஷ்பக்காரன், நடிப்பவள், சந்தனக்காரன் முதலியவர்களோடு ஏற்பாடு செய்பவர் சிலர்; ஐயரைச்சுற்றிலு முட்கார்ந்து கொண்டு வம்புப்பேச்சுப்பேசி அவர் சொல்வதற்கு மாறுபட்டொன்றுஞ் சொல்லாமல் கும்பல்கூடியவர் சிலர். இவர்கள் வேலையை யிவர்கள் பார்ப்பதுபோல மேற்கூறிய இரண்டு கன்னிகைகளும் தங்கள் வேலையாகிய சம்பாஷணையைத் தாங்கள் செய்துகொண்டிருந்தார்கள்.

"என்னுடைய அண்ணனைக் கலியாணம் பண்ணிக் கொண்டால், உன்னை மன்னியென்று கூப்பிடுவேனா? அது இல்லையே" என்றாள் தோழி.

"அவன் சிறுவன்" என்றாள் மீனாக்ஷி.

"உன்னுடைய பெற்றோர்களுக்கு இஷ்டமிருந்தால் அவன் பெரியவனாய் விடுவான். அவர்களுக்கு இஷ்டமில்லாமையால் சிறியவனாகிவிட்டான்."

"அவனுக்கெத்தனை வயது?'

"15-வயது."

"என்னைவிட 3-வயது தானே மூத்தவன்."

"போதாதோ? ஆங்கிலேயர் சரி வயதிலும் வயது குறைந்திருந்தபோதிலும் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறார்களே."

"நாமும் ஆங்கிலேயரோ?'

"என்னமோ உன்னோடு பேச என்னால் முடியாது. மொத்தத்தில் நீங்கள் பணக்காரர்கள்."

"சில்லரையில் ஏழைகள்போலும்."

"நான் பேசுவதிலெல்லாம் நீ தப்புகண்டு பிடிக்கிறாயே?'

"பேசுவதில் சிலவற்றில் தானே கண்டுபிடிக்கிறேன்."

"நானும் கம்பராமாயணம் வாசித்தால் அப்படிப் பேசுவேன்."

" சப்பராமாயணத்தில் இப்படிப் பேசுவதைப்பற்றி யொன்றுஞ் சொல்லவில்லையே"

" மொத்தத்தில் நீ கெட்டிக்காரி, போ.

" அப்பா, சில்லரையில் நான் முட்டாள்தான்; நான் எங்கே போகட்டும்?'

" போவானேன்?"

" போ வென்றாயே."

" இல்லையே."

" போவென்ற அர்த்தத்தில் நீ சொல்லவில்லை, அநேக அசைகளைப்போலே நீயும் ஒரு அசையேற்படுத்தினாய்."

" எனக்கு அசையுந்தெரியாது பசையுந்தெரியாது."

" பசைகூடத்தெரியாதா? பசையென்றால் ஒட்டுவதற் குபயோகப்படுவதோர் வஸ்து."

" இந்த வம்புப்பேச்செல்லாம் வேண்டாம்."

" நல்லபேச்சு பேசு பார்ப்போம்."

" நான் சொல்வதை முழுவதும் கேட்காமல் உபாத்தி யாயருக்கு மிஞ்சிய சிஷ்யைப்போல் ஆரம்பிக்கிறாயே."

" உனக்கு என்னைப்போல் பேசக்கூடத் தெரியாதென் றாய். அப்படியிருக்க நீ உபாத்தியாயராவதெப்படி? நான் சிஷ்யையாவதெப்படி?'

" நான் சொல்வதைக் கேள் என்றேனே."

" கேட்கிறேன் சொல்!"

" என்னுடைய தகப்பனாருக்கு உன் தகப்பனார்பேரில் மிகவும் கோபம். அன்றைக்கு உன்னைக்கொடுக்கவில்லையே யென்று மிகவும் மனஸ்தாபம்."

" என்னுடைய தகப்பனாருக்கு உன்தகப்பனார்பேரில் மிகவுங் கோபம். என்றாள் மீனாக்ஷி.

" ஏன்"

" உன்தகப்பனார் மருமகளாக என்னைக் கேட்டதின் பேரில் மிகவும் என் அப்பாவுக்குக் கோபம்."

" உனக்கு கூடக் கூடச் சொல்லத்தான் தெரியும்."

" எனக்கு இன்னும் அநேக விஷயங்கள் தெரியும். படிப்பேன், தூங்குவேன், ஆடுவேன்—''

'நான் சொல்வதைக் கேளடியென்றால்—"

"கேட்கிறேன் சொல்"

"உன்பேரில் கோபித்துக்கொண்டபடியினாலே—என் பேரில் கோபமோ? அப்பாபேரில் கோபமோ?"

"உன்னுடைய அப்பாபேரில் தாண்டி: உன்பேரில் என்று சொன்னேனா? உன்னுடைய அப்பாபேரில் கோபித்துக்கொண்டு. 'இந்தக்கலியாணம் நடக்கிறதைப் பார்க்கிறேன்' என்று கோபமாய் அம்மாவிடத்தில் சொல்லிக்கொண்டிருந்தார் அப்பா" என்றாள் தோழி.

"அதற்கென்ன, கோபத்தில் அப்படித்தான் சொல்வது வழக்கம்."

"அதுதான் என்னசெய்வாரோ என்று பயமாயிருக்கிறது"

"அவர் அடடா! தங்கமான மனுஷியர். அவர் தீங்கு செய்வது எங்கேயாகிலுமுண்டா? அப்பாவுக்கு எவ்வளவு உதவிகள் புரிந்திருக்கிறார்? போடி பைத்தியக்காரி, கனவிலும் தீங்குநினையார் அவர்" என்றாள் மீனாக்ஷி.

"அதென்னவது. அவ்வளவு சப்தம் கேட்கின்றதே?"

என்று தோழிசொல்ல ஏதோ கிடுகிடுவென்று சப்தத்தைக்கேட்டு இருவரும் வாசற்புறமா யோடினார்கள். வாசலில், குரட்டிற்கருகில், படிகள்தாண்டி, வெள்ளையாய் இருந்தது. அதனருகில் ஒரு உடைந்த மட்குடம் சிதறியிருந்தது. ஒருவன் அழுதவண்ணம் சமீபத்தில் நின்றுகொண்டிருந்தான். அவனைச்சுற்றி அநேகர் பரிதாபத்துடனும் சிலர் சிரிப்புடனும், சிலர் தலையில் தயிருடனும் நின்று கொண்டிருந்தார்கள். இவைகளெல்லாவற்றையும் பார்த்து ஊகித்து, யோசித்து, எண்ணுமளவில், சப்தம் உண்டானதற்குக் காரணம் தயிர்க்குடமேயென்று தெரிகின்றது. குடமே! சிறுபெண்கள் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்ததை நிறுத்திவிட்டனையே! இதையறிந்துதான் கடவுளும் உன்னை யடித்துக்கொன்று சிறு துண்டங்களாகச்செய்துவிட்டார்போலும்! அந்தத் தயிர்க்காரன்பேரில் பச்சாத்

தாபப்படுபவர்களுடன் மீனாக்ஷியும் தோழியும் பச்சாத்தாபப்பட்டிருப்பவும் தாங்கள் உட்கார்ந்திருந்தவிடம் வந்து சேர்ந்தார்கள். இராமகோபாலய்யர் காருண்ணியத்துக்கு உதாரணமாக தயிர்க்காரனுக்குக் கொடுக்கவேண்டிய ரூபாயைக் குடமுடைந்து தயிரில்லாமற்போயும் கொடுத்துவிட்டார். சரியாகத் தயிர்க்கொண்டு வந்தபோதிலும், அவன் கூலியைக் கொடேனென்று அநேக ஆக்ஷேபனைகள் செய்கின்ற மகான்களுக்கும் இவருக்கு மெவ்வளவு வித்தியாசம்! இருகன்னிகைகளும் வேடிக்கையாய் மாலைநேரம்வரையிலும் பேசிக்கொண்டிருந்து, பிறகு 7½-மணி ரெயிலுக்கு வண்டியனுப்பியபொழுதும் காலை 10½-மணி வண்டிக்கு இருந்த இடத்திலேயே இரண்டுபேரும் இருந்தார்கள். இந்த வண்டியில் வந்துவிடுவார்களென்று நிச்சயமாய் நம்பியிருந்தாள் மீனாக்ஷி. மணி 8-ஆயிற்று 8½-யுமாற்று. "சரி இந்த வண்டியில் வந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் ரெயிலுக்குப் போனவர்கள் திரும்பி வந்திருப்பார்கள். நல்லது ரெயில்தான் வந்ததோ யில்லையோ, வந்திருந்தால் சப்தம் கேட்குமே" என்று யோசனையிலாழ்ந்திருக்கையில் இரண்டொருந்தர்கள்போட்ட குதிரைவண்டி தன்னகத்துக்கு வருவதைக்கண்டாள். கண்கொட்டாமல் விழித்துப் பார்த்தனள். சுப்பாநாயக்கர் குதிரைவண்டி 1, வக்கில் அமிர்தசாமிப்பிள்ளை பீடன் 1, சிரஸ்ததார் வேங்கடகிரி முதலியார் டாக்கார்ட் 1, தன் இருகுதிரைகட்டிய கோச் 1, ஆகிய நான்குடனும் ரெயிலுக்குப்போன தன் தகப்பனார், தன் வண்டியிலேறிக்கொண்டு தனியாய் அகத்து வாசலிலிறங்குவதைக்கண்டாள். வாசற்றிண்ணைக்கடுத்த நடையில் ஆரமாய் நின்றுகொண்டிருந்த தன் தாயார் காமாக்ஷியம்மாளுக்கும் தன் தகப்பனுருக்கும் நடந்த கீழ்வரும் சம்பாஷணையைக் கேட்டாள்.

காமாக்ஷி—வந்தார்களா?

இரா—இல்லை

கா—மற்றவண்டிகளெங்கே?

இரா—எங்கெங்கே போகவேண்டுமோ அங்கங்கே போயின.

கா—கூடவந்தவர்களெங்கே?

இரா—பின்னால் வருகிறார்கள்.

சௌபாக்கியவதி மீனாக்ஷியம்மாள் இராஜகோபாலய்யர் பகர்ந்த மூவெழுத்து எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று விடையைக் கேட்டாளேயொழிய மீதி யொன்றுந் தன் காதில் படவில்லை. ஓர் பிரதிமைபோல் ஸ்தம்பித்து நின்றாள். அதைகண்ட தோழி "இதற்குள் அகமுடையான் மேல் எவ்வளவு பிரியம், அவர் வரவில்லையென்று துக்கம் அசாத்தியமாயிருக்கிறாப்போ லிருக்கிறதே என்று பரிகசிக்கத் தொடங்கினள்.

"அது ஒன்றுமில்லை. எனக்கு இரண்டுநாளாய் உடம்பு சரியாயில்லை. அது இப்பொழுது வந்து எனக்கு வயிற்றை வலிக்கிறது. பேசாமல் நான் படுத்துக்கொள்ளப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அங்கு ஒரு மூலையில் வைத்திருந்ததோர் பாயை யெடுத்துப் போட்டுக்கொண்டு முழு முக்காடிட்டுப் படுத்துக்கொண்டனள். "என்ன, என்னடி! என்ன உடம்பு, அம்மாவைக் கூப்பிடட்டுமா?' என்று அம்மா என்ற அரவத்துடன் அறையை விட்டு வெளியே யோடினள். "அடீ! சாவு! இங்கேவா! இங்கேவா! வேண்டாம், அம்மாவைக் கூப்பிடவேண்டாம்" என்று மீனாக்ஷி தோழியைக் கூப்பிட்டவுடன் தோழி திரும்பிவந்தனள். "எனக்கொன்று மதிகமில்லை. சாவு! உடம்பை டென்னமோ செய்கிறது. பேசாமலிரு நீ "என்றனள் மீனாக்ஷி. தோழி, அவள் கன்னத்தையும் உடம்பையும் தொட்டுப்பார்த்து சுடவில்லையென்று தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு நன்றாக ஒரு போர்வையாற் போர்த்துவிட்டு அறைக்கதவை யிழுத்துச் சாத்திக்கொண்டு தன் வீடு போய்ச்சேர்ந்தாள்.

(இந்த கலியாணத்தில் சாவு எங்கிருந்து வந்தது என்று அநேகர் யோசிக்கக்கூடும். கிருஷ்ணசுவாமியை கிட்டு என்

றும், இன்னும் செல்வமாய்க் கிட்டப்பாவென்றும், இராமசுவாமியை ராமுவென்றும், மூன்றாவது வல்லின வெழுத்தின்பேரில் டுகாரமுஞ்சேர்த்து, ராமுடுவென்றும், லக்ஷிமி என்ற மூவெழுத்துப்பெயரைக் குறுக்கி "லக்ஷா" என்றும், "லச்சு" "லச்சி" "லச்சுமி" "லச்சிமி" என்றும், கோகிலாம்பாள் என்பதை "கோகாம்பாள்" "கோகம்" "கோகு" "கோகா" என்பதாகக் குறுக்கல் விகாரத்தைக் கொடுத்தும் சிறிது அவசரமாய்க் கூப்பிடும்பொழுது எழுத்துவலிந்தோர் பக்ஷியின் நாமதேயத்தை யம்மனுக்குக்கொடுத்து "கொக்கு" என்றும் அழைக்கும் விதம் போல் ம-ள-ள-ஸ்ரீ நாராயணசுவாமி அய்யர் குமாரி சௌபாக்கியவதி சாவித்திரியை மீனாக்ஷி சாவு! சாவு! என்று கூப்பிடுவது வழக்கம், மற்றப்படி யொன்றுமில்லை. மலையாதேயுங்கள்)

சாவித்திரி யறையைவிட்டதுதான் தாமதம், எழுந்திருந்தாள் மீனாக்ஷி. இரண்டு தலையணைகளை யொன்றின்மேலொன்றாய் வைத்துக்கொண்டாள். அதன்மேல் சாய்ந்துகொண்டாள். என்னுதவெல்லாம் எண்ணவாரம்பித்தாள். "ஏன் அவர்கள் வரவில்லை, ரெயில் தப்பிப்போயிருக்குமோ? காலை, மாலை இரண்டு தடவையுமா தப்பியிருக்கும், அவருக்கு ஏதாவது அபாயம் நேரிட்டிருக்குமோ? அபாயமாயிருந்தால் தந்திவந்திருக்கும். நம்மை மோசஞ்செய்துவிட்டார்களோ? டெபுடி கலெக்டராச்சே, அவ்வாறு செய்வாரா? நம்மைப்பற்றி வேறுவிதமாயும் அவலக்ஷணமென்றும் கேள்விப்பட்டு நம்முடைய அகத்துக்காரர், வேண்டாமென்று விட்டாரோ? இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு யார் போய்ச் சொல்லி யிருப்பார்கள். ரெயில் கீழே விழுந்திருக்குமோ என்றால் அதுதான் இப்பொழுது வந்ததே, என்னமோ தெரியவில்லையே. அவர்கள் வந்திருந்தால் அவரைக் குதிரைவண்டியில் வைத்து அவர் ஜாகைக்கு மேளதாளத்துடன் வேடிக்கையாய்ப் போவதை நான் இப்பொழுது எட்டியெட்டிப் பார்த்துக்கொண்டிருப்பேன். பிறகு என் மாமனாரையும் சம்பந்தி முதலானவர்களையும், மாமியாரையும் கண்குளிரக்கண்டு அப்பாமடியில் புன்சிரிப்

புடன் உட்கார்ந்திருப்பேன். அதெல்லாமில்லாமல், இப்பொழுது இந்த இரண்டு தலையணைகள்தான் கதி. இராத்திரி வண்டிகளிலும் வராவிட்டால், ஐயோ! கலியாணமெல்லாம் வீணாய்ப்போய்விடும்: அது மாத்திரமா? என்னை யெல்லாருந் துரதிர்ஷ்டம்பெற்ற பீடையென்றும், சுவாமியின் கருணை சிறிதேனுமற்றவளென்றும், பலவிதமாய்ப் பழிப்பார்கள், என்னை மறுபடியும் கலியாணஞ்செய்துகொள்ள எல்லாருந் தயங்குவார்கள். சுவாமி! உம்மையன்றி வேறு துணை யெனக்கொருவருமில்லை. உமக்குத் தெரியும் அவர்கள் வராததற்குக் காரணம். போன வெள்ளிக்கிழமைகூட கோவிலுக்கு வந்திருந்தேனே, தயவில்லையா யுமக்கு" என்று எண்ணமிட்டுக்கொண்டே யிருந்து தூங்கிப்போய்விட்டனள். தன் தாயார் எழுப்புவதாகக்கேட்டு எழுந்தாள். "சாப்பிடவில்லையா, வா" என்ற தன் தாயாருக்கு "எனக்குப் பசிக்கவில்லை" என்றனள். "ஆனாலிந்தப் பாலைச்சாப்பிடு" என்று அவள் கொடுத்த பாலைச்சாப்பிட்டனள். திரும்பவும் படுத்துக்கொண்டாள். நடுத்தூக்கத்திலெழுந்தவளாகையால் சரேலென மறுபடியும் படுத்து உறங்கிவிட்டனள். தூக்கத்தில் தான் ஏதோ ஒரு காட்டுவழியாய்ப் போவதாயும் அங்கு புலியைக்கண்டு கீழேவிழுந்து விட்டதாயும், பிறகு எழுந்து ஓராற்றங்கரைக்குச்சென்று, அவ்வாற்றில் நீர்பருக இறங்கினதாயும், ஒன்றுமில்லாத அந்த வாற்றுள் திடீரென பெருவெள்ளமொன்று வந்து தன்னையடித்துக் கொண்டு போவதாயும், அடித்துக்கொண்டுபோன அவ்வாற்றங்கரையில் தன்வீடும் தன்பெற்றோர்களுமிருப்பதாயும், உடனே ஏதோ சப்தமுண்டாயிருப்பதாயும் கனாக்கண்டு திடீரெனவிழித்து, "பாடலீசுவரா! இன்னும் வரவில்லையா அவர்கள்" என்று எழுந்து உட்கார்ந்தாள். தெருப்பக்கமாய் வெளிச்சத்தையும் சப்தத்தையுங் கண்டாள். எழுந்தாள். பார்த்தாள். அநேகவண்டிகளை நோக்கினாள். சந்தோஷப்பட்டாள். பாடலீசுவரரே கதியென்றடைந்தவரையு மவர்கைவிடுவாரோ!-

மீனாக்ஷியை இவ்வறையில் எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கவிட்டு வாசலுக்குப் போவோம். இராஜகோபாலைய

ஒரு குதிரைகட்டிய வண்டியில் 4-பேர் உட்கார்ந்திருக்கின்றனர். இராஜகோபாலையர் எழுந்திருந்து கதவைத்திறக்கின்றனர். முதலில், ஒருவர் இறங்குகின்றார். அவர் தேககாந்தியையும் பெரிய உதரத்தையும் காதிலணிந்திருக்கும் வைரக்கடுக்கனையும், சரிகைவேஷ்டியையும், கட்டிப்பட்டிச் சொக்காயையும் (பெங்களூருக்கடுத்த) ஹாசன் என்னும் நகரத்தில் செய்யப்படுவதால் ஹாசன் குல்லாய் எனப்பெயர்பெற்ற குல்லாயையும், செகப்பாயிருக்கிற முகத்தையும் உற்றுப்பார்த்தால் இவர்தான் சம்பந்தி டெபுடி கலெக்டரோ என்று சந்தேகமுண்டாகிறது. இராஜகோபாலையரோடு இந்த மனிதர் கைகுலுக்கியதைப்பார்த்தால் நம்முடைய சந்தேகம் தீர்ந்து நிச்சயமாயிருக்கிறது. அவர்கள் ஏதோ அங்கிலேயத்தில் பேசிக்கொள்ளுகிறார்கள். உமக்குத் தெரியாதா? நான் மொழிபெயர்க்கிறேன்.

இரா—வாருங்கள் வாருங்கள்.

டெ—தங்கள் குமாரிக்கு வேறு எங்கேயும் கலியாணமாக வில்லையே?

இராஜகோபாலையருக்கு ஒன்றுந்தோன்றவில்லை. அவர் முதலில் நினைத்தது டெபுடி கலெக்டருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்பதுதான். அப்புறம் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு பயப்படாமல் "கலியாணமா யாருக்கு?" என்றார்.

உடனே வண்டிக்குள்ளிருந்த மற்றொருவருடைய குரல் "அண்ணா! கலியாணம் வேறிடத்தில் நிச்சயமாய் விட்டது, ஆகையினால் வரவேண்டாம் என்று நாம் தந்தியடித்தோமே" என்றது. அப்பேச்சினால் இந்த குரலுடைய சொந்தக்காரர் இராஜகோபாலையருடைய தம்பியென்றேற்படுகிறது. அவரும் கீழேயிறங்குகிறார். ஆம். நாம் உத்தேசித்தது சரிதான், என்று சொல்லிக்கொண்டே அவர் பின்னால் உடனே இன்னொருவர் வண்டியிலிருந்து இறங்குகிறார். இவரைப்பற்றி யோசிக்கவேண்டாம். டெபுடி கலெக்டர் உருவம் அப்படியே அமைந்திருக்கிறது. அவர் தம்பிதான். இன்னும் அந்த வண்டிக்குள்ள

ராவது இருக்கிறார்களா? ஓர்வாலிபன் உட்கார்ந்திருக்கின்றான். அவன் பெயர் இராமசுவாமி. அவனுக்கு வயது 18 இருக்கலாம். பையன் புத்திசாலி போற்றான் இருக்கின்றது. முகத்தைப்பார்த்தாற் றெரியவில்லையா? டெபுடி கலெக்டர் தம்பி கீழேயிறங்கினவுடன் "நாங்கள் சொன்னது உங்களுக்குப் பொய்யாயிருந்தால், இதோ இருக்கின்றன தந்திகள் பாருங்கள்" என்று தன் சொக்காயிலிருந்து 4-தந்திகளையெடுத்து இராமசுவாமியய்யரிடத்தில் கொடுத்தார். (இந்த இராமசுவாமியய்யர் இராஜகோபாலையர் தம்பி வாலிபன் அல்ல: அவனினின்றும் வேறுபடுத்தும் பொருட்டு, இவரைப் பெரிய இராமசுவாமியய்யர் என்போம்.) பெரிய இராமசுவாமியய்யர், தன் தமயனிடத்தில் அவற்றைக்கொடுக்க, அவர் ஆவலுடன் வாங்கி அவைகளை வாசித்தார்.

1. மேமீ 4உ சனிக்கிழமை மாலை இரண்டுமணி 15-நிமிஷம், திருப்பாப்புலியூர் இராஜகோபாலையரிடத்திலிருந்து தஞ்சாவூர் டெபுடி கலெக்டர் கோபாலசுவாமி அய்யரவர்களுக்கு.

கலியாணம் வேறிடத்தில் நிச்சயமாகிவிட்டது, தாங்கள் புறப்படவேண்டாம், மன்னிக்கவும்.

இதைப்பற்றி யோசிக்கவாவது நன்றாய்ப் படிக்கவாவது சாவகாசமில்லாமல் இராஜகோபாலய்யர் மற்றொன்றைப் பிரித்துப் பார்த்தார்.

2. மேமீ 4உ சனிக்கிழமை மாலை 4-மணி 20-நிமிஷம் கும்பகோணம் சேஷய்யரிடத்திலிருந்து தஞ்சாவூர் டெபுடிகலெக்டர், கோபாலசுவாமியய்யருக்கு.

என் தங்கை மீனுக்ஷிக்கு, வேறிடத்தில் கலியாணம் தகப்பனுர் தங்களுக்குச் சொல்லச்சொன்னுர்.

3. மேமீ 8உ ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணி 45-நிமிஷம் கும்பகோணம் காலேஜ் ஐயாசாமியிடத்திலிருந்து தஞ்சாவூர் டெபுடிகலெக்டர் கோபாலஸ்வாமியய்யர் குமான் இராமசுவாமியய்யருக்கு.

இராஜகோபாலையர் பெண், நீறி உனக்கு இல்லை மிகவும் விசனமாயிருக்கிறது.

4. மேமீ 5வ ஞாயிற்றுக்கிழமை காலை, 11-மணிக்கு திருப்பாப்புலியூர், இராஜகோபாலையரிடத்திலிருந்து, தஞ்சாவூர் டெபுடிகலெக்டர் கோபாலசுவாமியய்யருக்கு.

தாங்கள், 10½-மணி வண்டியில் வருவதாகச் சொன்னீர்கள். வராததினால் மிகவும் விசனம். உடனே எப்படியிருந்தபோதிலும் புறப்படவேண்டும். தாங்கள் வராவிட்டால் கலியாண காரியங்கள் வீணாகும்.

தந்தி (அவசரம்.)

இராஜகோபாலையர் வாசித்தார் இந்த தந்திகளை. கடைசி தந்தி மாத்திரந்தான் தான் நேரே 10½-மணிக்கு போஸ்ட் ஆபிஸுக்குப்போய் அடித்தது. மீதி தந்திகளைப்பற்றி தனக்கு யாதொன்றுந்தெரியாது, என்று சொல்லித் திகைத்தார். இது என்னடா மோசம் என மலைத்தார், யாரோ போக்கிரிகள் இப்படி பொய்த்தந்தி கொடுத்திருக்க வேண்டுமென நினைத்தார். தன் மூத்தகுமாரன் சேஷப்பாகூடவா இவ்வாறு மோசஞ்செய்வானென அவனைப்பகைத்தார். 3-ம் தந்தியடித்த கும்பகோணங்காலேஜ் ஐயாசாமி யாவராயிருக்கக்கூடுமென கோபத்தினால் பூமியை உதைத்தார். உலகமும் இவ்வாறிருக்கக் கூடுமோவென நகைத்தார். இவர் இவ்வாறு யோசனையிலாழ்ந்திருக்க, மற்றைய சம்பந்திகளெல்லாரும் முதல் தந்தியையடித்தவர் இவரன்றோ எனக்கேள்விப்பட்டவுடன் மிகவும் ஆச்சரியப் பட்டவர்களாகி, இவர் பொய் சொல்லுகிறாரென்றே முதலில் நினைத்துப் பிறகு இவ்வளவு படித்தவர் இப்படிச் செய்யமாட்டாரென்று தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டு யாரோ துட்டர்கள் இப்படிச் செய்ததற்காக அவர்களை நிந்தித்துக்கொண்டு எல்லாரும் இராஜகோபாலையர் வீட்டு வாசற்றிண்ணையில் வந்துட்கார்ந்தார்கள். வண்டியில் வந்த சாமான்களெல்லாம் வண்டியினின்றும் பெயர்க்கப்பட்டு 6-வீட்டிற்கப்புறம் ஒரு மாடி வீட்டிற்கொண்டுபோய் வைக்கப்பட்டன. அந்த

வீடுதான் பிள்ளையகத்துக்காரர்களுக்கு விடப்பட்ட வீடு. சத்தவண்டி ஏழுக்கும், வண்டி 1-க்குப்பேசினது $1\frac{1}{2}$ அணா கூட $\frac{1}{4}$ அணா ஆக $1\frac{3}{4}$ அணா வீதம் பெரிய இராமசுவாமியய்யர் கொண்டுபோய்க்கொடுக்க, அவர்கள் இதுதான் சமயம் என்று நினைத்து "போசாமிபோ, வண்டிக்கு 3 அணா கொடுக்கிறேனாட்டு பேசுக்கிட்டு—நீங்களே வச்சிக்குங்கசாமி. இருட்டிலே வண்டி கிராக்கியுங்க, இப்பவந்து $1\frac{3}{4}$ அணா கொடுக்கிறங்களே, ரொம்ப யோக்கிதங்கசாமி" என்றார்கள். இந்த சப்தத்தைக்கேட்டு இராஜகோபாலையர் அடே இராமசுவாமி! கூடகாலணா கொடுத்து ஒழிபடா. அவனோடென்னடா சண்டை, என்று சொல்ல 2 அணா வீதங்கொடுக்க, அதையுமவர்கள் மறுக்க, இரண்டு பேருக்கும் சண்டைபலமாகி, கடைசியில், ஊர்சுற்றிவரும் சேவகர்கள்வந்து சண்டையைவிலக்கி, இரண்டணாவீதம் வாங்கிக்கொள்ளச்சொல்லி, ஆள் ஒன்றுக்கு 1-அணாவீதம், 7-அணாவைத் தாங்கள் வாங்கிக்கொண்டு போய்ச்சேர்ந்தார்கள். அதிக ஆசை அதிக நஷ்டம்' என்பதும் பொய்யாகுமோ?-

கலியாணத்துக்கு முதல் நாள் மருகப்பிள்ளையை, சம்பந்தி யிறங்கியிருக்குமிடத்திலிருந்து, அவர்களுக்காக விடப்பட்ட வீட்டிற்கு மேளதாளத்துடன் அழைத்துப்போவது வழக்கம். வக்கீல் இராஜகோபாலய்யர் அந்த சமயத்தின் போது ஊர் முழுவதுஞ் சுற்றிவருவதாய் நிச்சயித்திருந்தார். ஆனால் சம்பந்திவரும்போது மணி 3 ஆனதினாலும், மறு நாள் காலை 8-மணிக்குக் கலியாணம் ஆனதினாலும் ஊர் முழுவதுஞ் சுற்றவில்லை. தன் வீட்டிலிருந்தே புறப்பட்டார்கள். கோச் வண்டி வாசலில் வந்து நின்றது. சுமார் 100-தீவர்த்திகள் வரையும் கொளுத்தியாய்விட்டன. இரண்டு பக்கங்களிலும் மத்தாப்புகள் இரவைப் பகலாக்கிக்கொண்டிருந்தன. அறை ஜன்னலின் ஓரத்தில் நின்றுக்கொண்டிருந்தாள் மீனாக்ஷி. தீவர்த்திகளையும், மத்தாப்புகளையும், நடுவில் வருகிறவர்களுக்குக் கொடுப்பதற்காக வெற்றிலை, பாக்கு, சர்க்கரை, சந்தனம், பன்னீர், புஷ்பம், முதலியவற்றை யெடுத்துக்கொண்டு போகிறவர்களையும், அவற்றின்

பின்னால் போகும் தன் தகப்பனார், மாமனார், சிற்றப்பா, சிறியமாமனார், அவர்களுடைய பந்துக்கள் முதலியோரையும் மீனாக்ஷி பார்த்தாளாயினும், அவளது முக்கிய கவனம் வண்டியின் மேலேயேயிருந்தது. கண்கொட்டாமல் விழித்துப் பார்த்தாள். வண்டி நிறைய குழந்தைகள் உட்கார்ந்திருந்தார்கள். "சி! சி! யாருக்கும்வேண்டாம், இந்தக்குழந்தைகள்" என்று நினைத்தாள். வண்டியின் பக்கத்தில் ஓர் கிழவர் நின்றுக்கொண்டு "ராமு! ராமு! இங்கேவாடா, அப்பா இங்கேவா. உட்காரு இங்கே" என்றார். உடனேயொரு சிறுவன்வந்தான். அவன் பின்புறத்தைப் பார்த்தனள். தலைமயிர் கொஞ்சமாயிருந்தது. மற்றவைகளைப் பார்ப்பதற்கு முன் வண்டியிலேறி யுட்கார்ந்துவிட்டான். நல்லவேளை; ஓரத்தில்தான் உட்கார்ந்தான். சரேலென்று கண்களைத் துடைத்தனள், விழித்துப்பார்த்தாள். கிழவர் மறைத்துக்கொண்டிருந்தனர். ஐயோ! பாழுங்கிழவர்! இன்னுமிவரேன் உயிரோடிருக்கிறார்? எத்தனையோ வாலிபர்கள் இறக்கின்றனரே. இவர்க்கு மேலோர் காலம் வரவில்லையா? என நினைத்தாள். கிழவர் சற்று ஒதுங்கினர். ஆனால் அவ்வாலிபன் குழந்தைகளுடன் பேசிக்கொண்டு முகத்தை மற்றப் பக்கந் திருப்பிவிட்டான். காதைப்பார்த்தாள். ஒரு கடுக்கனையுங்காணோம், தலையில் ஒரு சரிகைத்தலைப்பாகை தரித்துக்கொண்டிருந்தான். குல்லாய் வைத்துக்கொண்டிருந்தால் நன்றாயிருந்திருக்குமென்று நினைத்தாள். வண்டி நகர்ந்தது. ஐயோ, இன்னும் அந்தப்பக்கந்தான் பார்த்துக்கொண்டிருக்கிறான், திரும்புகிறான் மெதுவாய். ஐயையோ! மீனாக்ஷியினிடத்தில் ஒரு துப்பாக்கியிருந்தால் கிழவரைச் சுட்டிருப்பாள். பையன் இவள் பக்கம் முகத்தைத்திருப்பின சமயத்தில் கிழவர் அவனிடத்திற் பேசப்போய்விட்டார். "சிறுவர் கலியாணத்திற்கு கிழவர்கள் வருவானேன்" என்று நினைத்தாள். வண்டி போய்க்கொண்டிருந்தது. ஒருவரும் நிறுத்துவாரில்லை "வண்டியை நிறுத்தடா" என்ற வார்த்தை அவளையும் அறியாமல் அவள் வாயினின்றும் வெளிப்பட்டது. நல்லவேளை, அது ஒருவர் காதிலும் படவில்லை. திரும்பிப்பார்த்தாள். ஒருவரும் இல்லை. வண்

டிப்பக்கந் திரும்பினாள். வண்டி தன்னகந்தாண்டிப் போய் விட்டது. ஐயோ! தான் சொன்னது வண்டிக்காரன் காதில் பட்டிருக்கக்கூடாதாவென்று விசனப்பட்டாள், பட்டிருந்தால் எல்லாரும் தன்னைப் பரிகசிப்பார்கள், தன்னுடைய அதிர்ஷ்டந்தான் ஒருவர் காதிலும் படவில்லையெனச் சந்தோஷப்பட்டாள். கலியாணம் பண்ணிக்கொள்ளுகிற சமயத்திலேயே தன்னை யலக்ஷியம் பண்ணினானே தன் கனவன் என்று வருத்தப்பட்டாள். "சீ! சீ, முட்டாள்! அவனுக்கு நான் ஜன்னலின் ஓரமாயிருப்பது என்னமாய்த்தெரியும்! தெரிந்தாற்றானே பார்ப்பன்" என்று தன் மனத்தை நிந்தித்துக்கொண்டாள். "நாளைய தினந்தான் இனிமேல் பார்க்கமுடியும், அப்பொழுது யாராவது வந்துவிடுவார்கள். எப்பொழுதும் ஏதாவது நேரிட்டுக்கொண்டிருக்கும், எப்பொழுதும் பார்க்கவே முடியாது" என நினைத்துக் கண்ணீர்விட்டழுதனள். "மாலையிடும்பொழுது நன்றாய்ப்பார்க்கலாம், அப்பொழுது ஒருவரும் நடுவே வந்து மறைக்கமாட்டார்கள்" என நினைத்துச் சிரித்தனள். "கிழவர் யாராயிருக்கலாம்?" என்று யோசித்தனள். "நானுமவனுந் தனியாய்க் குடித்தனம் பண்ணும்போது அவர் அங்கேயும் வந்து மாரடித்தால் என் செய்வது?" என விசனப்பட்டாள். அப்பொழுது நேரே யவரைக்கண்டு "நீங்கள் இங்கே யிருக்கவேண்டாம் என்பேன்" என்று சந்தோஷப்பட்டாள். தான் அப்படிச்சொல்லியது தன் கணவனுக்குத் தெரிந்தால் அடிப்பானே யென்றழுதனள். இவ்வாறு பலவகையான வெண்ணங்களி லாழ்ந்திருக்கும்போது தன்னறையில் காலடிச் சப்தங்கேட்டது. திரும்பிப்பார்த்தாள். தன் சின்னம்மையாகிய பிரஹன்னாயகியைக் கண்டாள்.

"ஏஏஏஏஏண்டி உஉஉஉஉங்கம்மாமியார் மாமாமனார் எஎஎஎஎல்லாரும் இஇஇங்கே வ்வ்வ்வந்திருக்கா ந்ந்ந்நிச்சிதார்த்தம்பண்ண ந்ந்ந்நீவந்துங்கே இஇஇஇருக்கியே, நநநநநன்னாருக்கு வ்வ்வ்வ்வ்வ்வ்வாடி" என்றாள். ஏற்கனவே ப்ரஹன்னாயகியம்மாள் கறுப்பு. இரண்டு பல் முன்னுக்கு வந்திருக்கும். முகமெல்லாம் அம்மைவடு. கன்னம்

ஒட்டியிருக்கும். இதோடுகூட வாய் சிறுது தத்து. இவ்வளவு அவலக்ஷணம் பொருந்தியவளை, பண்ணுருட்டியில் சப் மாஜிஸ்திரேட் வேலைசெய்யும் இராஜகோபாலையர் தம்பி இராமசுவாமியய்யருக்குக் கலியாணஞ்செய்த விதமெவ்வாறென அநேகர் யோசிக்கலாம். இராஜகோபாலையர் தகப்பனார் பணத்தின்மே லாசைகொண்டவர். தன் முதற்பிள்ளையை ஏழையிடத்திற் கொடுத்துவிட்டதாக மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு சிறிய பிள்ளையை 1000-ரூபாய் எதிர்ஜாமீன் கொடுக்கிறவிடத்தில் கொடுப்பதாய் நிச்சயித்தார். ப்ரஹன்னாயகியம்மாள் தகப்பனார் தஞ்சாவூர் ஜில்லாவில் 100-வேலி நிலமுள்ள பெரிய மிராசுதார். ஆனபடியால் தன் பெண்ணை நல்லவிடத்திற் கொடுக்க இச்சைகொண்டு பெரிய இராமசுவாமியய்யர் தகப்பனாரிடத்தில் பிரஸ்தாபித்தார். பெண் எப்படியிருந்தாலென்ன. அதைவைத்து ஆள்கிறவன் வேறொருவனன்றோ? அவளாயிற்று, அவன் அகமுடையானாயிற்று. தனக்கென்ன. தனக்கு வேண்டியது பணம். ஆகையால் தன் இரண்டாவது பிள்ளைக்குக் கொடுப்பதில் சம்மதித்தார். பிள்ளை யென்னசெய்வான்? பெண் அவலக்ஷணமென்று கேள்விப்பட்டிருந்தபோதிலும் மாமனாருக்கு இந்த ஒரே பெண் ஆனபடியினால், ஆஸ்தி முழுவதுந் தனக்கே வருமென்று நிச்சயித்து அதற்கு ஒத்துக்கொண்டான். எவ்வளவு ஆஸ்திவந்தபோதிலும் அதை யாரோடு இருந்து அனுபவிக்கிறது அவ்வாறு தன்னுடன் கூட இருப்பவர் நிலைமையென்ன வென்பதைப்பற்றிச் சிறிதும் யோசிக்கவில்லை. கலியாணம்பண்ணி 3-வருஷத்திற்கெல்லாம், தானுமவளுந் தனியாயிருந்து வாழும்பொழுதுதான், தான் செய்தபிழை நன்றாய்த் தெரிந்தது. இனிமேலென்னசெய்வது. நமக்குக் கிடைத்தது இவ்வளவுதானென்றெண்ணிக்கொண்டார். அவர், பி. ஏ. பி. எல். தேறி, சப் மாஜிஸ்திரேட்டு வேலையானவுடன் தன் பெண்சாதிக்கு, 300-ரூபாய்க்கு ஒரு அட்டிகை பண்ணிப்போட்டார், 150-ரூபாய்க்கு, கையில் தங்கக்காப்பு செய்துபோட்டார். அந்தோ ! என்ன போட்டுத்தானென்ன. அநேக குடிசைகளினடுவில் ஒரு மெத்தைவீடு இருந்தால் அப்பெரிய வீட்

டின் அழகினால் குடிசைகளினிழிவு எவ்வாறு விளங்குகின் றதோ அதுபோல நகைகளின் ஒண்மையினால் அவளங்கங் களின் கறுப்பும் அவலக்ஷணமும் செவ்வையாய் விளங்கின.

ப்ரஹன்னாயகி மீனாக்ஷியை யிவ்வாறு விளித்தவுடன், புன்சிரிப்புடன் மீனாக்ஷி அவளுடன்கூடப் போயினள். முற் றத்தில் தன் தகப்பனார் மடியில் உட்கார்ந்தாள். நிச்சய தாம்பூலத்திற்காக வாங்கின கூரைப்புடவையைக் கட்டிக் கொண்டாள். தன்னழகைத் தானே கண்டுகண்டு வியந்து கொண்டாள். எதிரிலிருக்கும் மாமனாரைக் கடைக்கண் ணால் பார்த்துக்கொண்டாள். நடக்கவேண்டியவை யெல் லாம் நடந்தபின் எல்லாருமெழுந்து போகவே, தானுமெழு ந்து அறைக்குட்போயினள்.

உடனே பெண்ணகத்துக்காரர்கள் பெண்ணுக்கு ஜாத கரணம், அன்னப்பிராசனம் முதலியவைகளைச் செய்ய வாரம்பித்தார்கள். பெண்ணுக்கு வயது 12. அன்னப்பிராச னம் செய்கிறார்களாம். பாவம்! குழந்தை இதுவரையும் உண்டிருக்காதன்றோ?

பிள்ளை யகத்துக்காரர்களும் பிள்ளைக்குவேண்டிய பிரமசரிய விரதம் முதலியவைகளைமுடித்து, சர்வாங்கமும் க்ஷவரஞ்செய்வித்து அறுபது ரூபாய் பெறுமான பட் டுவேஷ்டியை ஆடையாகக்கட்டி மேலுக்கு அங்கவஸ்திரம் தரித்து, கண்ணுக்கு மையெழுதி, கன்னங்களில் கறுப் புப் பொட்டிட்டு, நெற்றியில் சந்தனம் குங்குமம் முத லியவைகளையிட்டு, இருபூணூல் தரிக்கச்செய்து, காலில் 4-ரூபாய் விலைபெற்ற ஜோடுகளைமாட்டி, பட்டுக்குடை யொன்றை மேலே பிடிக்கச்செய்து, காசியாத்திரை (பர தேச கோலம்) போவதாகப் புறப்பட்டார்கள். இதனுடைய ஐதீகம் வருமாறு.

"முன் காலங்களில் பெண்ணினுடைய தகப்பனாராவது அல்லது அப்பெண்ணை யாதரிப்பவர்களாவது பெண்ணுக்கு 7-வயதானவுடன், நன்றாய் வேதம், சாஸ்திரம் முதலியவை களை யத்யயனம் பண்ணும் பிரமசாரிகளுக்குக் கன்னிகா

தானஞ்செய்வது வழக்கம். ஆகவே, பிரமசாரியாசிரமத்தை 7-வயது முதற்கொண்டு அனுஷ்டானஞ் செய்து வரும் வாலிபர்கள் 16-வயது ஆனவுடன் அவ்விரதத்தை முடித்துக்கொண்டு, தனிமையாயிருக்கும்பொழுதே காசியாத்திரைபோக வெண்ணி, ஒரு ஓடு, குடையுடன் (வேஷ்டியாக ஆடைதரித்து) கையில் ஒரு காசுமின்றி, புறப்பட்டுப்போவான். இவனுக்கு வழியிலுணவு முதலியன தேடவேண்டிய அவசியமில்லை, எதேனுமொரு வீட்டிற்குச் சென்று "பவதி பிக்ஷாந்தேகி" யென்றால் அவ்வகத்துக்காரி சிறிதன்னங்கொண்டுவந்து போடுவள் : அல்லது அவ்வீட்டு எஜமானன், தயாளகுண முள்ளவனாயிருந்தால், "இங்கேயே சாப்பிடும்" என்பான். இப்படி அநேக வகங்களினின்றும் கொண்டுவந்த வன்னத்தைப் புசித்துக் காசிக்குப் போகும்போதோ, அல்லது போய்விட்டுத் திரும்பும்போதோ, இவன் செல்லுமகங்களில் கன்னிகைகளிருந்து, இவன் குலம், கோத்திரம் முதலியவைகள் ஏற்றனவாயிருப்பின், உபயகக்ஷிகளின் ஜாதகங்களையு மொப்பிட்டுப்பார்த்து, பிள்ளையின் சம்மதமறிந்து அவன் உறவினர், சுற்றத்தார், பந்துக்கள், சிநேகிதரெல்லாரையும் வரவழைத்து, கலியாணம் நடத்துவது வழக்கம்."

அந்த ஐதிகத்தின்படி சிரஞ்சீவி இராமசுவாமியும் காசியாத்திரை சென்றான், அல்லது பரதேசகோலம் போனான். நடுவழியிலே இராஜகோபாலையர் வந்து "என்னிடத்தில் கன்னிகையொன்றிருக்கின்றது, தாங்கள் மணம்புரியுங்கள்" என்று (சொல்வதுபோல) ஒரு தேங்காயைக் கொடுத்தார். மருமகப்பிள்ளையு மொத்துக்கொண்டவன் போன்று, தேங்காயை வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். பிறகு பரதேசிகோலம் கலியாணகோலமாகி, காசியாத்திரை மணயாத்திரையாகி, பிள்ளை மாமனார் வீட்டிற்குச்சென்றான். வாசலில் நின்றதுதான் தாமதம். "எங்கே மீனாக்ஷி" யென்றார் சிலர். உடனே ஒரு பெண் வெளியில் வந்து நின்றது. இவள்தானே மீனாக்ஷி. எனக்கே சந்தேக

மாயிருக்கின்றது. வருகின்றாள் வெளியில், கடைக்கண்ணால் கண்டாள் மீனாக்ஷி தன் நாயகனை, நாயகனுமவளைக் கண்டான், ஒருத்தி புன்சிரிப்புகொண்டாள், மற்றொருவன் சிறிது கோபங்கொண்டான். கலியாணத்தில் கோபமென்ன? என்றால் இராமசுவாமிக்கு நகைகளின்மேல் வெறுப்பு, நகையணிந்து கொள்பவர்களைக்கண்டால் அவன் மனம் வாடும், உயிர்வருந்தும், தேகம் பதைபதைக்கும். எழுந்திருந்து நகையைப் பலாத்காரமாய்க் கழற்றிவிடுவோமா வென்றுஞ் சில சமயங்களிலெண்ணுவான். தன்றாயாரணிந்திருக்கும்போதும் அவ்வாறே சிற்சில வேளைகளில் செய்வான், அவள் திட்டினால் கேட்டுக்கொள்ளுவான், நகைகளினால்வருந் தீங்குகளைப்பற்றி உபந்நியாசம் செய்வான். இப்படிப்பட்டவன் மீனாக்ஷியின் றலைச்சாமான்களையும், காதிலணிந்திருக்கும் முருகையும், 200-ரூபாய் பெறுமான தோடையும், பச்சைக்கல்லையும், ஜம்பஸரத்தையும், வாளியையும், குஞ்சரங்கட்டினாற்போலிருக்கின்ற ஜிமிக்கையையும், இவ்வளவு பாரமுமேறி யிருப்பதால் எங்கே அறுபட்டு கீழே விழுந்துவிடுமோ என்று எண்ணிக் கட்டினாற்போலுமிருக்கின்ற மயிர்மாட்டியையும், மூக்கிலணிந்திருக்கும் நத்தையும், மூக்குக்குத்தியையும், புல்லாக்கையும், தோளிலிருக்கும் வங்கியையும், கையிலணிந்திருக்கும் வளையல்களையும், தங்கக் கொலுசையும், கழுத்திலிருக்கும் பவழமாலை, காரை, அட்டிகைகளையும், இடுப்பில் இறுகக்கட்டியிருக்கும் மேகலை ஒட்டியாணத்தையும், காலிலணிந்திருக்கும் வெள்ளிக்காப்பையும், கொலுசையும், பகலையிரவாக்கவல்ல பச்சைக்கற்களும் நீலமணிகளும் கோத்த சதங்கையையும், காலின் விரலிலணிந்திருக்கும் மெட்டையும் பார்த்தால் அவன் சிறிது கோபங்கொண்டதற்கு ஆச்சரியப்படுவீர்களோ! நீங்கள் இன்னுமதிகமாய்க் கோபித்துக் கொள்ளாததற்காகவன்றோ ஆச்சரியப்படவேண்டும்?

இவ்வளவு நகைகள்தாமெனக்குத் தெரியுமென்றும் விட்டுப்போயின வெல்லாமெனக்குத் தெரியாவென்றும் நீங்கள் நினைக்கவேண்டாம். எனக்கு இன்னுமநேக நகைகள்

தெரியும். ஆனால் மீனாக்ஷி யறிந்துகொண்டது இவ்வளவு தான்.

இது நிற்க. தன்னாயகன் முகத்தில் கோபக்குறியைக் கண்டவுடன் மீனாக்ஷி முகமுழுவதும், கல்விழப்பெற்ற தெளிந்த நீர் தடாகம்போல் மாறிற்று. இதற்குள் தன் மாமன் தன்னைத் தூக்குவதையுணர்ந்தாள். பிள்ளையையொருவர் தூக்கிக்கொண்டார். மாலைமாற்றினார்கள். கன்னியூசலாடினார்கள். உள்ளே நுழைந்தனர். முற்றத்திலுட்கார்ந்து, அனேக வேதவேதியர் குழாம் தன்னைச் சூழாநிற்க, ம-ா-ா-ஸ்ரீ இராஜகோபாலையரும், ம-ா-ஸ்ரீ காமாக்ஷியம்மாளும் மீனாக்ஷியைக் கன்னிகாதானஞ்செய்து தாரைவார்த்துக்கொடுக்க, அனேகவாழைகளும், கமுகமரங்களும், குலைகளுடன் தன்னைச்சூழ்ந்துகொண்டிருக்க, வாசலில் தஞ்சாவூர் பாண்டுவாத்தியம் முழங்க, தாழ்வாரத்தில் நாட்டுவாத்தியம் கல்கல்லெனச் சப்திக்க, தனது உபாத்தியாயர் தனது காதினருகில் சில மந்திரங்களை யுபதேசிக்க, இவன் ஏதோ சிலவற்றை முணுமுணுக்க, தனது தகப்பனார் தன்னையே நோக்கிக்கொண்டிருக்க, தனது பாரியாள் கடைக்கண்ணால் தன்னை யடிக்கடி பார்த்துக்கொண்டிருக்க "குழந்தை பட்டினியாயிருக்கிறதே, சீக்கிரம் முடியுங்கள்" என்று கிழவர் உரையாநிற்க, தனது மாமனாரும் மாமியாரும் புன்சிரிப்புடன் நோக்காநிற்க, அனேக சுமங்கிலியப் பெண்டுகள் "கௌரீ கல்யாணமே வைபோகமே! கௌரீ கல்யாணமே வைபோகமே!" என்று மங்களம்பாட, தாயத்து, குண்டுடன்கூடிய திருமங்கிலியத்தை சிரஞ்சீவி இராமசுவாமி தனது கையில்பிடித்து, சௌபாக்கியவதி மீனாக்ஷியின் கமுகம் போலுமுள்ள கழுத்தில் தம்பல் முதலிய யாதொரு தடங்கலுமின்றிக் கட்டி முடித்தனன். தம்பதிகள் நீடூழி காலம் வாழ்வார்களாக, மீனாக்ஷி! தீர்க்காயுஷ்மஸ்து, தீர்க்க சுமங்கலீபவ! அநேகாவதாரிபு முன்னால் கடைக்கணிக்கப்பட்ட உன்கணவனும் சௌக்கியமாய் வாழ்வீர்களாக! சுபமஸ்து என்னும் ஆசிர்வாதங்கள் எங்கும் முழங்கின.

3-வது அத்தியாயம்.

கலியாணம்—பிற்பகுதி.

"இல்லை! கலியாணத்தில் என்னை யார் லக்ஷியம்பண்ணினார்கள். இல்லை போனாற்போகிறதென்றுதான் கேட்கிறேன். இல்லையே. வந்தாயா போனாயா என்று என்னை விசாரித்தவர்கள் யார்? ஒன்றுமில்லை நாய் தானே சாப்பிடுவது போல் நானே போயுட்கார்ந்தேன். ஏதோ, எல்லாரோடுமெனக்குந் தண்ட எழவை என்று சாதம்போட்டான். கலியாணமானால் முதல் தாம்பூலம் யாருக்குக்கொடுக்கிறது. இல்லை போனாற்போகிறதென்றுதான் கேட்கிறேன். இல்லையே ஒரு பெரியவனைக் கேட்டானா? போனானா? வந்தானா? அவனென்ன என்றால் குட்டிச்சுவற்றிற்கு ஆகிறதுபோல் ஆயிற்று வயது. ஏதோ பீ. எ. பாஸ் பண்ணியிருக்கிறானாம். இதுதவிர விஷயமா காரியமா? அவனுக்கென்ன தெரியும். விட்டுத்தள்ளு. இல்லையடாவென்றால், நானொருவன் வெட்கங்கெட்டுப்போய் வந்திருக்கிறேனே! என்னமோ வந்துவிட்டேன் தெரியாத்தனமாய், இல்லை வந்தவனை மரியாதைபட அனுப்பவேண்டுமன்னோ? முதல் தாம்பூலத்தை அவனுங்கொடுக்கிறான். இவனும் வாங்கிக்கொள்ளுகிறான். நானென்ன போனாற்போகிறது? கிழம், ஒன்றுமில்லை." என்று மகா கோபத்துடன் ஒரு பெரியவர் சம்பந்தி யிறங்கியிருக்கும் அகத்துத்திண்ணையில் சுமார் மணி 2-க்கு திங்கட்கிழமை சாயங்காலம் இறைந்தார்.

அப்படியவர்சொல்லி முடித்தவுடன் அங்கிருந்த மற்றொருவர் "நான் சொல்லுகிறேனே! அவர்மேலொருபிழையுமில்லை. பக்கத்திலிருந்தவர்கள் அவரைச் சரியானபடி செய்யச் சொல்லவேண்டும். அவர்கள் பேசாதிருந்துவிட்டார்கள். ஆகையினாற்றான் அவருக்கு ஒன்றுந்தெரியவில்லை" என்றார்.

அப்படியாயின். அவர் "சரியான மந்திரிமார்களை வைத்துக்கொள்ளவேண்டும். தன்னைப்பார்க்கிலுமொன்றுந் தெரியாதவர்களையெல்லாம் வைத்துக்கொண்டால் முடியு

மா?" என்றார் முதல் பேசினவர். "என்ன அத்தான்! என்ன கோபம்?" என்று கோபாலசுவாமியய்யர் தம்பி வீராசாமியய்யர், உள்ளேயிருந்து வெளியில் வந்து வினவினார்.

அதற்கு அத்தான் அல்லாத மற்றொருவர் "எல்லாம் உங்களைப் பற்றித்தான், ஐயரவர்களைப் பற்றித்தான். மூத்து முளையாவதற்கு முன் கலியாணகாரிய முழுவதுந் தானே செய்யவேண்டுமென்றாலென் செய்வது?

"என்ன சமாசாரம்?" என்றார் வீராசாமியய்யர்.

அத்தான் "நீ யெங்கிருந்தடா வந்தாய்? உனக்கென்னடா தெரியும்? உலகவிஷயங்களை நீ யெங்கடா கண்டாய்? இதற்குள் நீ யேன் சகல விவகாரங்களையும் மேற்போட்டுக் கொள்கிறாய்? சக்கரம் அறுக்கின்றது, காலம் ; எங்குகின்றது என்றிராமல் மகா துறுதுறுப்பாயுனக்கு" என்றார்.

அதற்குள் நாம் சொன்ன கிழவர், உள்ளிருந்து வெளியில் வந்து "என்ன சண்டையிங்கே? என்றார்."

"அண்ணா! வாருங்கள். உங்களைப்பற்றித்தானே! இன்றையதினம் கலியாணம் முடிந்து போனவுடன் முதற்றாம்பூலம் யார்க்குக் கொடுத்தார்கள் தெரியுமோ?" என்றார் அத்தான்.

"மருமகப்பிள்ளைக்கு" என்றார் கிழவர். (கிழவர் கோபாலஸ்வாமியையரின் மாமனார் ஆனபடியால் அவருக்கு மருமகப்பிள்ளை கோபாலசுவாமியய்யர்.)

"நல்லது நீர் பெரியவர் இருக்கிறபோது அதை அவன் வாங்கிக்கொள்ளலாமா? அத்தான்."

அதற்குக் கிழவர் "அதைப்பற்றித்தானா? அவர் அற்பதனர் : அவர் செய்கிற முதற்கலியாணம் இதுதான். இதுவரையிலும் ஒரு கலியாணமும் செய்யாததினால், அவர்க்கு நாமே முந்தியிருக்கவேண்டுமென்ற ஆசை யிருக்குமோ யில்லையோ?" என்றார்.

"அடா நாந்தான் போனாற்போகிறேன், இனிமேல் கொண்டவிடத்திலும் கொடுத்தவிடத்திலும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டாமா?"

'அப்பா! சிறிது தூங்குவோமென்றால் எவ்வளவு இரைச்சல்" என்று சொல்லிக்கொண்டே டெப்டிகலெக்டர் கோபாலசுவாமியய்யர் வெளியே வந்தார்.

"நீ தூங்கிப் பாழாய்ப்போகவில்லையா" என்று மனத்திற்குள்ளேயே சொல்லிக்கொண்டார் அத்தான். அத்தான் எவ்வளவு கோபித்துக்கொண்டபோதிலும் வாய்திறந்து கோபாலசுவாமியையர்முன் ஒன்றுஞ் சொல்லமாட்டார். எப்படியிருந்தாலும் அவர் டெபுடிகலெக்டர்.

"என்ன? அத்தான் முணுமுணுத்துக்கொண்டிருக்கிறார்" என்றார் கோபாலசுவாமியையர்.

அதற்கு அத்தானேடிருந்தவர், "முதற்றும்பூலவிஷயத்தைப்பற்றி" என்றார்.

இதற்குள் கிழவர் "அலுவலென்ன, நமக்கென்ன, அவனெங்கே குழந்தை ராமு, ஏதாகிலும் சாப்பிட்டானே? பாவம்? இன்றைய முழுவதும் பட்டினி கிடக்கவேண்டுமே. முடிந்தாலிருக்கட்டும். இல்லாமற்போனால் ஏதாகிலும் சாப்பிடட்டும், தூங்குகிறானே?" என்று சொல்லிக்கொண்டு "ராமு! அப்பா ராமு!" என்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே போயினார்.

டெபுடிகலெக்டர் "அத்தான்! அதைப்பற்றியொரு கவலையும் வேண்டாம், இன்றையதினம் அவரே யோசித்துப்பார்த்துக் கொடுக்கவேண்டும். பிசகிப்போய் என்னிடத்தில் கொண்டுவந்து கொடுத்தார். நான் என்ன செய்கிறது? வாங்கிக்கொள்ளுகிறதா? வேண்டாமென்கிறதா? நீ சொல் பார்ப்போம்" என்றார்.

வேண்டாம் என்று கண்டித்துச் சொல்லிவிடவேண்டும். அவருக்கென்ன தெரியும். நீதான் பெரியவராகவிருக்கிறார் என்று சொல்லவேண்டும். அவரா சொல்வர். நீதான் சொல்லவேண்டும்" என்று சொன்னார் அத்தான் சிறிது கோபத்துடன்.

"இனிமேல் அப்படியே செய்கிறேன்" என்றார் கோபாலசுவாமியய்யர்

இதுபோன்ற சம்பாஷணையினால் இவர்கள் காலங் கழித்துக்கொண்டிருந்தனர்.

*   *   *   *

"ஓய் சாஸ்திரியாரே, என்ன தூக்கங்காணும், மணி 3-ஆயிவிட்டது. எப்பொழுதும் இங்கேயே இருக்கலா மென்றெண்ணமோ? எழுந்திருங்காணும், எழுந்திரும். நன்றாய்த் தூங்கினர், புண்ணியவான் இராஜகோபாலையர் போட்ட சோறு அல்லவா உம்மையப்படி செய்கிறது, ஓய் ஐயாசாஸ்திரி காத்திருக்கிறார்காணும், வருகிறீரா இல்லையா? நீர் வராமற்போனால் நாங்கள் போகிறோம். இரண்டி லொன்று சொல்லிவிடும், ஓய்! கூப்பிடக்கூப்பிட வென்ன காணும் அதிகமாய்த் தூங்குகிறீர்? ஓய்! நாங்கள் போகி றோம்." என்று சுப்பண்ணா சாஸ்திரிகள் திங்கட்கிழமை சாயங்காலம் அப்பா சாஸ்திரிகளை யெழுப்பிக்கொண்டிருந் தார். இராஜகோபாலையர் வீட்டிற்கு இரண்டுவீடு அப்பால் நின்றுகொண்டிருந்த நாராயணசாஸ்திரிகள் என்பவர் இவர் நின்றுகொண்டிருந்த வீட்டின் திண்ணையில் இருந்த சுப் பண்ணா சாஸ்திரிகளை நோக்கி இவர் "அவரெழுந்திருக்கா மற்போனாற் போகிறது, நீர் வாருங்காணும்" என்று சொல் லிமுடிவதற்குள்ளேயே அப்பாசாஸ்திரிகளுமெழுந்தனர். "மலை கெல்லி எலிபிடிக்கிறதாமையா?" என்றனர் ஐயாசாஸ்திரிகள்.

"பிள்ளை எப்போது வந்தது" என்றார் அப்பா சாஸ்திரிகள்.

"10-மணி வண்டியில்தான் அவர்கள் வந்தார்கள்.

"நம்முடைய சேஷையர் முன்னமேயே வந்திருந்தால் நமக்கு 1-ரூபாய் அகப்பட்டிருக்கும். எல்லாவற்றிற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா?" என்றார் நாராயண சாஸ்திரிகள்.

"அது கிடக்கிறது காணும், ரூபாய் ரூபாய் தான் உமக்கு" என்றார் அப்பா சாஸ்திரிகள்.

"உமக்கென்ன ஒரு ரூபாய் அகப்பட்டுவிட்டது, நீர் குதிக்கமாட்டீரோ" என்றார் நாராயண சாஸ்திரிகள்.

"அதெல்லாம் சரிதான், ஏன் சேஷையர் நேற்றயதினை மேவரவில்லை?" என்றார் அப்பா சாஸ்திரிகள்.

“ யாரோ துஷ்டர்கள் நடுவிலே யிருந்துகொண்டு கலகமூட்டுகிறார்காணும். சம்பந்திக்கு நேற்றையதினம் யாரோ தந்தியடித்தார்களாம். அவர்களே சேஷையருக்கு மடித்ததாகத் தெரிகிறது.”

“ அதென்னகாணும் அது? தந்தியா ? என்றார் அப்பா சாஸ்திரிகள்.

அதற்குமுன் மறுமொழிசொன்ன சுப்பண்ணா சாஸ்திரிகள் “ உமக்கேது, எல்லாம் பூலோகமே கைலாசம் என்றிருக்கிறது. அப்படியென்றால் தந்தியடித்த விஷயமே யுமக்குத் தெரியாதோ ?” என்றார்.

“ எனக்கு அதைப்பற்றி யொன்றுந் தெரியாதே” என்றார் அப்பா சாஸ்திரிகள்.

சு—இராஜகோபாலையர் சம்பந்திக்கு முந்திய நேற்றையதினம் ஒரு தந்தியடித்தாராம்.

ஐ—இராஜகோபாலையர் இல்லைகாணும், வேறே யாரோ அடித்ததாம்.

சு—தெரியுங்காணும். என்ன அவசரம். நீரே சொல்லுங்காணும்.

ஐ—இல்லை இல்லை, நீரே சொல்லும். எங்கே மறந்துவிட்டீரோ என்று சொன்னேன்.

சு—அந்த தந்தியில் “ நீங்கள் ஒருவரும் வரவேண்டாம், கலியாணம் நடக்கவில்லை இந்த வருஷம்” என்று எழுதியிருந்ததாம்.

நா—அன்னு, அன்னு, ‘கலியாணம் வேறிடத்தில் நிச்சயமாய்விட்டது’ என்று எழுதியிருந்ததாங்காணும்.

சு—ஏதோ ஒன்று. இப்படி யெழுதினதின் பேரில் தான் அவர்கள் வரவில்லையாம்.

ஐ—சேஷையர்கூட சம்பந்திக்கு ஒரு தந்தி அடித்தாராமே.

சு—அப்பா! என்ன அவசரம்? சேஷையரும் அவ்வாறே தந்தியடித்து விட்டாராம் சம்பந்திக்கு. இது

மாத்திரமா? சேஷையர் மூலமாய் கும்பகோணத்தில் வாசிக்கும் ஐயாசாமியென்ற மருமகப்பிள்ளையின் சிநேகன் ஒருவனும் அவ்வாறேயடித்துவிட்டானும். இந்த மூன்று தந்தியையும் பார்த்தவுடனே சம்பந்தி வராமல் நின்றுவிட்டார். 11-மணிக்கு நேற்றையதினம் இராஜகோபாலையர் ஒரு தந்தியடித்தாராம். 'நீங்கள் அவசியம் வரவேண்டு' மென்று. அதைப்பார்த்துக்கொண்டு வந்தார் சம்பந்தி. இதுதான் நடந்ததன் விவரம்.

அ—சரிதான். இராஜகோபாலையரா முதலில் வரவேண்டாமென்றும் அப்புறம் வாவென்றும் அடித்தாராம்?

ச—இராஜகோபாலையரைக் கேட்டால் நான் கடைசித் தந்தி தவிர வேறே ஒன்றையும் அடிக்கவில்லை யென்கிறார். சேஷையரைக் கேட்டாலோ, அவருக்கு சனிக்கிழமை சாயங்காலம் ஒரு தந்திவந்ததாம். அதில் "மீனாக்ஷிக்கு வேறிடத்தில் கலியாணம் நிச்சயம் பண்ணியிருக்கிறேன். நாளையதினம் நீர் வரவேண்டாம், இப்படிக்கு சம்பந்திக்கும் நீயொருதந்தியடித்து விடவும்' என்றிருந்ததாம். அதன் பேரில்தான் அவருமடித்தாராம். அவருக்கு ஐயாசாமியென்றவனை நன்றாய்த்தெரியுமாம். அவனிடத்திலு மிதைச் சொன்னாராம். இதுதான் காணும் விஷயம், தெரிந்ததா இப்போது.

அ—சரிதான், சேஷையருக்குத்தான் வரவேண்டாமென்று தந்தியடித்து விட்டாரே, அவரப்புறம் எப்படி வந்தார்?

ச—என்னகாணும்? அடிக்கடி கேட்கிறீர். உமக்கே புத்தியில்லை. நேற்றியதினம் 7½-மணிக்கு சேஷையர் வராமற்போகவே, 8-மணிக்கு போஸ்ட் ஆபீஸுக்குப்போய், சேஷையருக்கும் தந்தியடித்தார், அவருக்கு 8¾-மணிக்குப் போயிற்று. அவர் புறப்பட்டு வருவதற்குமுன் வேகமான ரயில் போய்விட்டது. ஆகையினால் 10½-மணி வண்டியில் வந்தார்.

ஐ—நாங்கள் பட்டிக்காட்டு மனிதர் என்று எண்ணினீரோ, என்காணும் தபாலாபீஸில் இராத்திரி 8-மணிக்கு

எங்கேகாணும் தந்தி வாங்கிக் கொள்ளுகிறார்கள்? இரயிலிலன்றோ வெப்பொழுதுந்தந்தி? அவர்கள் கூட இராத்திரியில் வாங்கிக்கொள்ளுகிறார்களோ வென்னமோ? என்னமோ யாருக்கோ சொல்லுகிறாப்போல் சொல்லுகிறீரே.

சு—ஓய் நில்லும். இப்பொழுது வாரும் தபாலாபீஸுக்கு, உடக்கு மெய்ப்படுத்துகிறேன்.

ஐ—இந்த மிரட்டெல்லா மிங்கே காட்டாதேயுங்காணும். பட்டிக்காட்டானென்று எண்ணமோ? வாருமே காணும் போவோம்.

என்று சொல்லிக்கொண்டே ஐயா சாஸ்திரிகளைக் கையைப்பிடித்துப் பரபரவென்று இழுத்துக்கொண்டே போனார். நாராயண சாஸ்திரியும் அப்பாசாஸ்திரியும் ‘ஓய் ஐயா! ஓய்! சுப்பண்ணா! பாருமே, என்னகாணும் வீண் சண்டை, ஓஓஓய்! நாளைக்கு நெல்லிக்குப்பம் சப் ரிஜிஸ்தார் பிள்ளைக்கு உபநயனம் ஓய்! இன்றையதினம் வெறுமனே நடந்தால் அங்கே போகமுடியாது ஓஓஓய்! கெடிலாற்றங்கரை கிட்டவந்துவிட்டோம். இனிமேல் 3-மைல் இருக்கிறது; ஓஓஓஓஓய்! வாஅஅஅரும்" என்று தங்களடித்தொண்டையோடு கூச்சலிட்டுக்கொண்டே யிருக்கவேண்டியதுதான். இரண்டுபேரும் தபாலாபீசுக்குப் போய்க்கொண்டே யிருந்தனர். மீதி யிரண்டுபேரும் தங்களூராகிய பாலூரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

* * * *

அன்றையதினம் சாயங்காலமே நலங்குநடந்தது. பந்தாடும்போது மருமகப்பிள்ளை நகையின்மேல் தனக்கிருந்த வெறுப்பினால் புஷ்பமாகிய பந்தைச் சாடையாகச் சமயம் பார்த்து சிறிது தூக்கிப்போட்டு,ஜிமிக்கின்யிமேல் படும்படியாய்ப் போட்டான். இராமசுவாமிக்கு ஜிமிக்கையை யுடைக்கவேண்டுமென்ற வெண்ணமேயில்லை. பரிகாசத்துடனே வேடிக்கையாய் அவ்வாறு எறிந்தான். மீனாக்ஷி தன் தேகத்தை நோக்கி வருவதைக்கண்டு சிறிது அசைத்தாள். அவள் கண்ணின்மேல் குறிபார்த்தாற்போன்று சரியாய் விழுந்தது. சடேரென்று இரண்டு கைகளையும் கண்ணி

ளிடத்தில் கொண்டுபோய் வைத்துக்கொண்டாள். அதற்குள்ளே

கோபாலசுவாமியப்பர்—குழந்தை கண்ணைக் குத்திவிட்டாயே. உனக்கு பறா விஷமமடா? நீ யென்னமா யினிமேல் வாழப்போகிறாய்? சில்லரை விஷமம். உனக்கு மிகவும் அதிகம்.

இராஜகோபாலையர்—வேண்டுமென்றுகுத்தினார் என்னமோ போட்டார், கண்ணில் பட்டுவிட்டது. சரி பப்புறமாகட்டும்.

பெரிய இராமசுவாமியப்பர்—மீனாக்ஷி! தெரியாத்தனமாய்ப் பட்டுவிட்டால் என்னமையது? நன்றாயிருக்கின்றது.

நாம் முன்சொன்ன கிழவர், எங்கிருந்தோ ஓடிவந்து "ராமுவுக்கு கண் போய்விட்டதாமே. என் குழந்தைக்குக் கண் போய்விட்டதாமே அப்பா! ராமு!' என்று சொல்லிக்கொண்டே இராமசுவாமியினிடம் சேர்ந்தார். அருகிலிருந்தவர்கள் இராமசுவாமிக்கல்லவென்று சொன்னபிறகு தான் பாதியுயிர் வந்தது கிழவருக்கு. பேரனருமைபாட்டனுக்குத் தெரியும்!

மீனாக்ஷியின் தோழியாகிய சாவித்திரி—மீனாக்ஷி! அகமுடையான் நன்றாய் அடித்துவிட்டானோ?

மற்றொரு தோழி—மாப்ளே என்னகொழுப்பு உமக்கு?

மற்றொருத்தி—பெண்டாட்டியாத்துக்குவல்லே இதுக்குள்ளேயா யிப்படி யடிக்கிறது.

இன்னொருத்தி—மெள்ளவே! மெள்ள! அவர் தாம் பாவம். எங்கே ஐயோ அடிச்சூட்டமேனூட்டுருக்காரோ, வெரும்மனே யழாதே?

வேறொருத்தி—பெண்டாட்டி பழரானூட்டு மாப்பிள்ளையைப் பாத்தியா முகம் வாடிப்போச்சே!

நம்முடைய சிறுபையன் கிட்டு.

'மாப்பிள்ளை மரக்காசட்டி,
இடுப்பிலே கயத்தைகட்டி,

வடவண்டை தோப்பிலே யடிபட்டநாயே,
சாப்பிடவா, கூப்பிடமாட்டேன்.'

என்றான். பையன் எந்தப் பாட்டையாவது சொல்ல வேண்டும், அதை யெப்பொழுது சொன்னாலென்ன?

பிறகு மீனாக்ஷி தன்னைத்தானே தேற்றிக்கொண்டு பந்தாட வாரம்பித்தாள். நலங்குமுடிந்தது. சாயங்காலம் பிரவேச ஹோமமுமாயிற்று. மறுநாள் முதற்கொண்டு கிரமமாய் காலையில் ஔபாசனமும், உடனே ஊசலும், சாயங்காலம் நலங்கும், உடனே ஔபாசனமும், இரவில் ஊசலும் நடந்து கொண்டிருந்தன. இரண்டாநாள் இரவில் ஊசலாடிக்கொண்டிருந்தபொழுது, கிட்டுவும் சில பெண்களுமாய்ச் சேர்ந்து, இராமசுவாமியின் பூணூலுக்கும் மீனாக்ஷியின் தலைப்பின்னலுக்கும் முடிந்துவிட்டார்கள். இன்னும் இவன் அங்கவஸ்திரத்தையும் அவள் புடவையினோரத்தையுஞ் சேர்த்து முடிந்து விட்டார்கள். இராமசுவாமிக்கப்பொழுது தூக்கம். மீனாக்ஷியோ தன்னாயகன் தன்னைக் கண்ணிற் குத்தினதைப்பற்றியும் குத்தினதன் காரணத்தைப் பற்றியும் யோசித்து ஒன்றுந்தோன்றாமல் "ஐயா! அவர் முரடர்போலிருக்கின்றதே! திடீரென பந்தைத் தூக்கிப்போடுவானேன்? ஒருவேளை பைத்தியமோ?" என்று பலவாறெண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். ஆகையால் இவர்கள் முடிந்ததையவளும் கவனிக்கவில்லை, மணியும் இராத்திரி 1-ஆயிற்று. 10-மணிவரையும் அகத்திலிருந்த பெண்டுகள் பாடினார்கள். 11-மணிவரையும் ஒரு பாடகன் நன்றாய்ப்பாடினான். 12-மணிவரையும் ஒரு விகடகவி விகடம் பண்ணிக்கொண்டிருந்தான். 1-மணிவரையும் ஒரு வீணைவாசிப்போன் வெகு நன்றாய் வீணை வாசித்துக் கொண்டிருந்தான். 1-மணியடித்தது. வந்திருந்த வைநகருக்கும், சந்தனம், புஷ்பம், பன்னீர், வெற்றிலைபாக்கு, எல்லாம் கொடுத்தாய்விட்டது. தம்பதிகளிருவருக்கும் ஹாரத்தி செய்தாய்விட்டது. எழுந்திருந்தார்கள் இருவரும். இராமசுவாமியின் பூணூல்தடைபட்டது, கைகொட்டினார்கள் எல்லாரும். இராமசுவாமிக்குயாரோ ஒரு சிறு பெண் இழுக்கிறதாக வெண்ணம்.

"விடடியென்றால்" என்று பலாத்காரமாயிழுத்தான் அகமுடையாளுடன் பேசிவிட்டான் இதற்குள்" என்று மறுபடியும் கைகொட்டினார்கள் எல்லாரும். திரும்பிப்பார்த்தார்கள் தன்னகமுடையாள் கூந்தல் பூணூலுடன் முடிபட்டிருப்பதைப்பார்த்து அறுத்து விட்டான் பூணூலை. இனிமேல்தான் படப்போகிற கஷ்டங்களைச் சகிக்கமனமில்லாமல் அவ்வாறு பூணூலையறுத்து சந்நியாசங்கொள்ள வெண்ணங்கொண்டானோ வென்னமோ பூணூலறுபட்டதும், மிகவும் விரைவாய்ப் புறப்பட்டான் இராமசுவாமி. இரண்டடி நகருமுன்னமே, தன்னங்கவஸ்திரத்தையாரோ இழுப்பதாகத் தெரிந்தது. முன்னமேபட்ட அவமானத்தால் அங்கவஸ்திரத்தைவிட்டுவிட்டுத் தான்மாத்திரம், விரைவாய் நடந்து சென்று, தானிறங்கியிருக்கும் அகஞ்சென்றான். இங்கே அங்க வஸ்திரத்தைத் தோழிகள் மெதுவாய் அவிழ்த்து, அதனைப் பிள்ளை யகத்துக்காரர்களிடம் கொடுத்துவிட்டு, சபையெல்லாம் கொல்லென்று சிரிக்க சிறு பெண்களெல்லாம் பரிகசிக்க, தம்பதிகளிருவரும் அழுதுகொண்டிருக்க உள்ளேபோய்ச் சேர்ந்தனர் இது நிற்க மீனாட்சியுள்ளேபோனதும் ஆலோசிக்கத்தொடங்கினாள். "மூர்க்கர்போலேயேயிருக்கின்றது, சாயங்காலம் புஷ்பத்தினால் எறிந்தார், இப்பொழுதோ அகாரணமாய் நம்முடைய தலைமயிரைப் பிடித்திழுத்தார். தோழிகள் முடிந்துவிட்டால் நாமென்னசெய்கிறது இதற்கு நம்மை யென்னத்திற்கு உபத்திரவப்படுத்தவேண்டும், நல்லது. அதுதானேவென்றால் அங்கவஸ்திரத்தைப் பிடித்திழுத்து அதன் மூலமாய் யென் புடவையையும் பாதியவிழ்த்துவிட்டார். நான் அவிழ்க்கிறதற்குள் மகாகோபங்கொண்டு அங்கவஸ்திரத்தையும் விட்டுவிட்டுப் போய்விட்டார். இப்பொழுதே யிவர் இவ்வளவு கோபங்கொண்டால், இதென்ன வம்பாயல்லவோ யிருக்கிறது. நல்லது நாளையதினம் ஒரு கடிதம் எழுதுகிறேன் சீச்சீ! கடிதம் எழுதிப் பிரயோஜனமில்லை. யாராகிலும்பார்த்துவிட்டால் என்ன செய்கிறது? போகப் போகப் பார்த்துக் கொள்ளுவோம்.

இராமசுவாமி தன்னகம்போனவுடன் "ஏதேது? மகா கஷ்டமா யிருக்கும்போலிருக்கிறதே இவளை வைத்துக் குடித்தனம் பண்ணுகிறது. நேற்றையதினம் புஷ்பச்செண்டு தெரியாத்தனமாய்ப் பட்டுவிட்டால், அதற்காக ஒரு நாழி உட்கார்ந்துகொண்டழுதாள். மகாநீலிபோலிருக்கிறது. இன்றையதினம் நாம் தான் தூங்கிப்போய்விட்டோம், அவளென்ன செய்துகொண்டிருந்தாள்? அவள் இதற்கெல்லாம் இடம் கொடுத்துத்தானிருக்கவேண்டும். மகா துஷ்டைபோலிருக்கின்றது. அவளுடைய தகப்பனார் தாயார் இவர்கள் செல்வமாய் வளர்த்துவிட்டார்கள்போலும். என்னிடத்தில் வரட்டும், அப்புறம் பார்த்துக்கொள்வோம்" என்று நினைத்துக்கொண்டே யிருந்தான்.

மறுநாள் காலையில் ஔபாசனம் ஊஞ்சல், காலைபோஜனம் எல்லாம் முடிந்தது. பகல் 2மணியிருக்கலாம். இராஜகோபாலையர் வீட்டுக் கூடத்துள்ளில் காமாக்ஷி மீனாக்ஷியைப் பார்த்து எங்கேயடி வைத்தாய்? வைத்தவிடத்தையாகிலும் சரியாய்ச் சொல்லடி, ஐயோ! என் வயிற்றில் நெருப்பைப் போட்டுவிட்டாயேயடி என்னடி செய்வேன், உன்னை வைத்துக்கொண்டு ஜாக்கிரதையாய்க்கொடு கொடு என்று அப்பொழுதே சொன்னேனடி! எங்கேயடி வைத்தாய்? என்றாள். "இல்லையம்மா! கட்டிலின்மேலேதான் வைத்தேன்" என்றாள் மீனாக்ஷி.

"அங்கே யாரடி உன்னை வைக்கச்சொன்னார்கள். அடீ பாவி! அனியாயமாய் போய்விட்டதேயடி. தெய்வங்களே! உங்களுக்கிரக்கம் என்பதில்லையே" என்றாள் காமாக்ஷி.

"இந்த உள்ளே வேறே யாரம்மா வருவார்கள் ஒன்று அப்பா கையிலே யிருக்கவேண்டும். இல்லாமற்போனால் சித்தப்பா கையிலே இருக்கவேண்டும்."

"நீ வாயை மூடிக்கொண்டிரடீ! ஐயையோ! உங்கப்பாவினிடத்திலுமில்லையாம். சித்தப்பாவினிடத்திலுமில்லையாமடி, யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களே, ஐயோ அது 700 ரூபாய் பெறுமாமே! அது நம்நகையுமல்லவே?

எடுத்தவர்கள் கொடுப்பார்களா? ஈசுவரா! என்ன செய்வீரோ?' என்றாள் காமாக்ஷி.

'இங்கே வைத்துவிட்டு சாவித்திரி கூப்பிட்டாள், அங்கே போனேன், அதற்குள் நகைபோய்விட்டதே, அப்பா, சித்தப்பா எங்கே? அவர்களைப் போய் கேட்கிறேன்' என்றாள் மீனாக்ஷி.

"நீ இப்படித்தானா வெளியே வைத்துவிட்டுப் போகிறது? 12-வயதாயிற்றே, புத்தி கொஞ்சங்கூடவில்லையே. அந்த 700-ரூபாய் அனியாயமாய்ப் போகிறதே?

"இல்லையப்பா! அதற்குள்ளே சாவித்திரி கூப்பிட்டாள்."

"உன் சாவித்திரியுமாயிற்று நீயுமாயிற்று ஐயோ! இந்த விளையாட்டுப் புத்தி யுனக்குப் போகவில்லையே? என்று சொல்லிக்கொண்டே யிருக்கும்பொழுது மாதுஸ்ரீ லக்ஷ்மியம்மாள் வந்துசேர்ந்தாள் அங்கே.

"என்னடி! காமாக்ஷி! என்ன மோசமடி! ஐயையோ! என்ன வந்துவிட்டது? வயற்றிலே யார் நெருப்பைப் போட்டுவிட்டார்கள். ஐயையோ! ஐயோ! என்ன சமாச்சாரமடி?" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தாள்.

"நம்முடைய காசிமாலையைக் காணோமே! என்ன செய்வேன்' என்றழுதுகொண்டிருந்தாள் காமாக்ஷி.

அடாடா! ஐயையோ! நல்ல காசிமாலையாயிற்றே? நான் அப்பொழுதே இரவல் நகை வேண்டாமென்றேனே! அந்த பங்காரு முண்டை பாகீரதி செய்தது அல்லவோ? அது அவள் அகமுடையான் பாழாய்ப்போக, அவன் கிராமமுனிசீப்வேலை குட்டிச்சுவராய்ப்போக, அவன் மணியம்பண்ணின மண்ணாய்ப்போக, அவன் எங்கெங்கேயோ போய் நகை வாங்கிக்கொண்டுவந்து விடுகிறானே. அந்தநகை யில்லாமற்போனதி லிப்பொழுது யார் அழுதார்கள். ஐயையோ! நல்ல நகையாயிற்று. 15-நாழிகைக்குமுன் நான்கூட இங்கே வந்து பார்த்தேனே. அப்பொழுது இந்தக் கட்டிலிலே யிங்கேதான் வைத்திருந்தது. அதற்குள்ளே யாரோ எடுத்துக்கொண்டே போய்விட்டார்களே" என்று சொல்லிக்கொண்டே

யிருக்கும்பொழுது இரண்டு சேவகர்களை யழைத்துக் கொண்டு இராஜகோபாலையரும் அவர் தம்பி இராமசுவாமி யையரும் உள்ளே வந்தார்கள். சற்றுநேரங்கழித்துப் போலீஸ் ஸ்டேஷன் ரயிட்டரும்வந்து சேர்ந்தார். ரயிட்டர் கையிலொரு நோட்டுபுஸ்தகங் கொண்டுவந்தார். இவர்களை யநேக கேள்விகள்கேட்டு, மறுமொழிகளைக் குறித்துக்கொண்டிருந்தார்

ரயிட்டர்—களவுப்போனது எந்த நகை, யாருடையது?

இராஜ—காசிமாலை அது ஜமீந்தார் காசி நாயக்கருடையது.

ர—அதை யெங்கே வைத்தீர்கள்? யார் வைத்தது?

இராஜ—கட்டிலில்தான், என்மகள் வைத்தாள்.

ர—ஏன் அம்மா, அந்த நகையை யங்கே வைத்த போது இந்த உள்ளே யார் இருந்தார்கள்? அவர்கள் பெயரென்ன?

மீ—சித்தப்பா, பெயர் இராமசுவாமிஐயர்.

ர—நல்லது, அவர் இந்த உள்ளைவிட்டு எப்பொழுது வெளியே போனார்?

இராம—11-மணிக்கு.

ர—ஏன் அம்மா! தாங்கள் நகையை யெப்பொழுது கொண்டுவந்து வைத்தீர்கள்?

மீ—$10\frac{1}{2}$-மணிக்கு.

ர—நல்லது, திரும்பி இந்த உள்ளுக்குள்ளே யார் வந்தார்கள்?

இராம—நான்றான்.

ர—தாங்கள் போகிறபொழுது கதவைப் பூட்டிக் கொண்டு போனீர்கள் வரும்போது திறந்திருந்ததோ?

இராம—ஆம், திறந்திருந்தது.

ர—வரும்பொழுது மணியென்ன?

இராம—1-இருக்கும்.

ர—நடுவிலொருவரும் உள்ளே போகவில்லையா?

இராஜ—இல்லை.

லக்ஷ்மி—நான் வந்தேன், பொய்சொல்லுவானேன்? பொய்சொன்ன வாய்க்குப் போஜனங்கூட கிடைக்காது.

ர—அம்மா! தாங்களெப்பொழுது வந்தீர்கள்?

ல—எனக்கு மணியுந்தெரியாது. கணக்குந்தெரியாது, வழக்குந்தெரியாது. நான் வருகிறபோது 16-நாழி இருக்கும். தாவாரத்திலே படியிறங்கிற்று புருஷர்கள் சாப்பிட்டாயிற்று பெண்டுகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். காமாக்ஷி! உனக்குக்கூடத் தெரியுமே அங்கே யந்தப் பரிச்சாரகன் அப்பளம் போட்டுக்கொண்டிருந்தான், பாரடி அப்போதானடி.

ர—அதெல்லாம் சரிதான் அம்மா, மணி சுமார் 12-இருக்குமா?

ல—அட இழவே! என் அகமுடையான் எனக்கு மணி பார்க்கச் சொல்லிக்கொடுத்தானு? அவன் இருந்த இதுக்கு ஒன்றுதான் குறைச்சல். அந்த வயற்றெரிச்சலை யேன் கேட்கிறீர்கள்.

ர—அதெல்லாம் வன் இப்பொழுது சொல்லுகிறீர்கள்? 16-நாழிகைக்கு உள்ளே வந்தீர்கள்.

ல—ஆமாம்! ஆமாம்! ஆமாம்! எத்தனைதரஞ் சொல்லுகிறது?

ர—என்னத்திற்காக உள்ளே வந்தீர்கள்?

ல—அடே! இந்த வீட்டிலே உனக்கென்னடா இவ்வளவு அதிகாரம். மாமாகூட இப்படிச் சொல்லுகிறதில்லையடா, அடே பாவி! நீவந்து என்னைக் கேட்கிருயா? நீ யாரடா அவன்? சீ! வீட்டைவிட்டு வெளியேபோ.

கா—கோபித்துக்கொள்ளாதே லக்ஷ்மி! அவன் சாதாரணமாய்க்கேட்டான். எங்களைக் கேட்கவில்லையா? அதைப்போல, அதற்கென்ன சொல்லேன்.

ல—உள்ளே ஏதோ சப்தங்கேட்டது வந்தேன்.

ர—ஏன் அம்மா! நீங்கள் வந்தீர்களே; அப்பொழுது கதவு என்னமாயிருந்தது.

ல—உன் தலைமேபாலே யிருந்தது. நீ கழிச்சலிலே போனாற்போலிருந்தது.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் ரயிட்டருக்குக் கோபம்வந்துவிட்டது. உடனே இராஜகோபாலையர் ரயிட்டரை நோக்கி "அந்த அம்மணி மிகவும் வாயாடி! அவள் எனக்குத் தூரபந்து. அவள் கலியாணத்துக்கு நாங்கள் மரியாதைக்குப்போட்ட கடிதத்தைக்கண்டு வந்தாள். ஆகையினால், அவளோடு கோபித்துக் கொள்ளாதேயுங்கள்" என்று ஆங்கிலேயத்தில்மொழிந்து அவர் கோபத்தை மாற்றி தான் கேள்விகள்கேட்க ஆரம்பித்து ரயிட்டரை யெழுதிக் கொள்ளச் சொன்னார்.

இராஜ—ஏனம்மா! கோபித்துக் கொள்ளுகிறீர்கள்? பொறுமையாய்ப் பதிற்சொல்லக்கூடாதா? கதவு என்னமா யிருந்தது?

ல—திறந்திருந்தது.

இராஜ—நன்றாய்த்திறந்திருந்ததோ? ஒரு பக்கமாய்த் திறந்திருந்ததோ?

ல—எனக்கு அவ்வளவு ஞாபகமில்லை. நான் உங்களை யெல்லாம்போல அவ்வளவுவாசித்திருக்கிறேனா? என்ன நான் படிக்காத மொட்டைப் பெண்சாதிதானே?

இராஜ—நீ வந்தபோது கதவு திறந்திருந்ததே, அப்பொழுது நாசிமாலை யெங்கேயிருந்தது?

ல—கட்டிலின்மேலயிருந்தது. வெளியேவைத்திருந்தது. நான் அதை யெடுத்து யாரானும் பார்க்கப் போகிறார்களே யென்று அந்தத் தலையணைக்கும் இதோ இந்தத் தலையணைக்கும் மத்தியில்வைத்துவிட்டு, ஒரு துணிபோட்டு மூடிவிட்டு நான் போய்விட்டேன்.

இராஜ—கதவைச் சாத்திக்கொண்டு போனையோ?

எங்கே? கதவை சாத்திக்கொண்டு போகிறதற்குள்ளே தான், லக்ஷ்மி! லக்ஷ்மி! லக்ஷ்மி! என்று மூச்சுவிடாமற் கத்தினார்கள், நான் என்னமோ எதோவென்று ஓடிப்போ

ப்பார்த்தேன். கடைசியில் “ அப்பளம் போராது, பொரி” யென்றார்கள். நான் போய் பொரிக்கப் போய்விட்டேன்.

ர—அந்த நகை களவு போனது முதலில் யார்க்குத் தெரியும்?

கா—நான்வந்து தலைவாரிபின்னி, இன்றையதினம் 3-மணிக்குச் சம்பந்தி தாம்பூலம் கொடுக்கப்போகிறார்களே யென்று, நகைபோடுவதற்காக மீனாக்ஷியைவிட்டுக் கேட்கச்சொன்னேன். அவள் கேட்டாளாம். இல்லையென்று சொல்லிவிட்டாராம் மைத்துனர், என்று மிகுந்த விசனத்துடன் தாழ்ந்த குரலாய்ச் சொன்னாள்.

இராம—என்னைவந்து மீனாக்ஷி நகையெங்கே யென்று கேட்டாள். ‘என்னிடத்திற் கொடுக்கவில்லையே யென்றேன்! ஐயையே இங்கேதானே வைத்தேன்’ என்றாள். உடனே யெழுந்து கட்டில் முழுவதுந் தேடினேன், உள் முழுவதுந் தேடினேன். நான் தப்பியெங்கே பெட்டிக்குள் வைத்து விட்டேனோ என்று பெட்டி முழுவதுந் தேடினேன்.

ர—நீர் வந்து கட்டிலில் தேடும் பொழுது தலையணைகளென்னமா யிருந்தன?

இராம—வெவ்வேறாய்த் தானிருந்தன.

ரயிட்டர் உடனே புறப்பட்டு இராஜகோபாலையரிடத் திலுத்திரவு பெற்றுக்கொண்டு தனக்கு லக்ஷிமிபேரில் சந்தேகமிருக்கிறது என்று ஆங்கிலேயத்தில் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

போலீசார் விசாரணை முடியுமுன்னர் மணி 3-ஆயிற்று. அன்றையதினம் பெண்ணகத்துக்காரர்களை அழைத்துக் கொண்டுபோய்த் தாங்களிறங்கியிருக்கும் ஜாகையில் பிள்ளையகத்துக்காரர்கள் தாம்பூலம் கொடுப்பதாய் நிச்சயித்திருந்தனர். நகை களவுப்போன துக்கத்தையும் அடக்கிக் கொண்டு இராஜகோபாலையரும் அவர் பந்துக்களும் கிரமப் பிரகாரம் சம்பந்தி இறங்கியிருக்குமகத்திற்குச் சென்று தாம்பூலம் முதலியவைகளை வாங்கிக்கொண்டு திரும்பினர். அன்றையதினமும் வழக்கம்போல, நலங்கு, ஔபாசனம்,

போசனம், ஊசல் எல்லாமுறைமையாயிற்று. ஊசலாடும் பொழுது கலியாணப்பெண்ணை பாடச்சொன்னார்கள் (மீனாளுக்குச் சாதாரணசமயங்களில் பாடம் நன்றாய்த் தெரியும். பரீக்ஷை அரங்கத்திற் போய்விட்டால் எல்லாம் மறந்துபோம். பெண்களுக்குச் சமைக்கிறபொழுதும் வேலைசெய்கிறபொழுதும் நன்றாய் பாடத்தெரியும், மற்ற சமயங்களில், முக்கியமாய் ஒருவர் பாடச்சொன்ன சமயத்தில் பாட்டு ஒன்றும் ஞாபகத்திற்கு வராது, வெட்கமு மறதியுமொன்று சேர்ந்து இதுவரையுங் கற்ற பாடல்களையெல்லாம் ஒருங்கேகொண்டுபோய்விடும்) அதுபோலன்றி, மீனாக்ஷி தனக்குத் தெரிந்த பாடல்களையெல்லாம் நன்றாய்ப் பாடினாள். அவள் கணவனான இராமசுவாமிக்கு இதுவரையும் அவள் மேலிருந்த கோபத்தைவிட இப்பொழுது அதிகப்பட ஆரம்பித்துவிட்டது. அவன் நினைத்ததாவது "இவளுக்குப் பெண்களுக்கின்றியமையாத குணங்களாகிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியவொன்றுமில்லைபோலிருக்கிறது. அச்சமுளதேல் நாம் முந்திய நேற்றையதினம் எறிந்த பந்து தவறிப் பட்டுவிட்டதற்காக அழுவாளா? நாணமென்பதின் நாமதேயத்தை இவள் சிறிதேனு முணர்ந்திருப்பளேல் பாடச்சொன்னார்களோ வில்லையோ, சட்டென்றாரம்பித்திருப்பாளா? மடமும் பயிர்ப்பும் அநேகமாயிரா வென்று இப்பொழுதே புலப்படுகின்றது. இத்துடன் கர்வமுஞ்சிறிதுளதென்பதற் கையமில்லை. தன்னுடைய வழகிய குரலைக்காண்பிக்கும் பொருட்டன்றோ இவ்வளவு சீக்கிரமாய்ப் பாடவாரம்பித்தாள்" என்றிவ்வாறு (பலவாறு) நினைத்துக் கடைசியில் நம்மதிர்ஷ்ட மிவ்வளவுதானென்று தன் மனத்தை யொருவாறு தேற்றிக்கொண்டனன்.

மறுநாளாகிய வியாழக்கிழமை நான்காநாள். காலை 12-மணி முதல் 3-மணி வரைக்கும் பாட்டுக் கச்சேரி நடந்தது. 3-மணி முதல் 4½-மணி வரையிலும் நலங்கு, அப்புறம் பச்சை பூசினார்கள். எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வித்தார்கள் 6 - மணிக்கு ஊர்வல மாரம்பித்து, 7 - மணிக்கு இலைபோட்டு, 8 - மணிபோது போஜனத்

தை முழுத்துக்கொண்டு 9-மணிக் ஊர்கோலம் வருவதாக எண்ணம்.

‘ எங்கேயடா பையன் இராமசுவாமி ; நாழியாயிற்றே, ஔபாசனத்திற்குப் போகவேண்டாமா? என்றார் கோபாலஸ்வாமிஐயர்.

“ அவன் தோழன் ஐயாசாமி யுடனெங்கேயாவது உட்கார்ந்துகொண்டிருப்பான் ” என்றார் அத்தான்.

“ ஒரு நாழிக்குமுன் ஆற்றங்கரைக்குப் போனான் அவன் தோழனுடன் ” என்றார் வீராசாமிஐயர்.

“ இருட்டிப்போய் விட்டதே யாரையாகிலு மனுப்பிப் போய்ப்பார்த்து வரச்சொல்லுங்கள், இருட்டிலே குழந்தை யென்ன செய்வான் ? ” என்றார் கிழவர்.

உடனே டெபுடிகலெக்டர் இரண்டு சேவகர்களையனுப்பி யாற்றங்கரைக்குச்சென்று பார்த்துக்கொண்டு வரச்சொன்னார்.

கோபாலஸ்வாமிஐயர் “ இதுவரையுமாற்றிலென்ன வேலை? நன்றாயிருட்டிப்போய்விட்டதே ” என்றார்.

“ எதாகிலும் வம்பளந்துகொண்டேயிருப்பன் ” என்றார் வீராசாமிஐயர்.

“ நமக்கு அத்தான்! கலியாணமாரம்பித்தது முதற்கொண்டு எதாவது அபசகுனங்கள் நேரிட்டுக்கொண்டேயிருக்கின்றன. யாரோ பொய்த்தந்திகளெல்லாமடித்தார். சம்பந்தியாத்திலோ நல்ல காசிமாலை களவுப்போய்விட்டது. இப்பொழுதோ இராமசுவாமியைக் காணோம். என்னமோ எனக்குப் பயமாயிருக்கிறது ’ என்றார் கோபாலஸ்வாமிஐயர்.

“ இராமசுவாமிக்கென்ன இதோ வந்துவிடுவான். மற்ற விஷயங்களை வேண்டுமென்றால் சொல்லும் என்றுசொல்லி அத்தான் வாய்மூடுவதற்குமுன் இராமசுவாமியின் தோழன் ஐயாசாமி இவர்களுக்கெதிரே வந்து நின்றான்.

“ இராமசுவாமி யெங்கே ? ’

“ எனக்குத் தெரியாதே. ”

"அவனைத் தேடிக்கொண்டுவந்த சேவகர்களெங்கே?"

"சேவகர்கள் தேடிக்கொண்டுபோன விஷயமே யெனக்குத் தெரியாதே"

"இதுவரையிலும் நீ எங்கேயிருந்தாய்?"

"பக்கத்திலிருந்தேன்"

"அவனோடு நீ யாற்றுக்குப் போகவில்லையா?"

"இல்லையே, இன்றையதினம் என்னைக் கூப்பிட்டுக் கொண்டு போகவில்லையே"

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் எல்லாருக்கு முண்மையாகவே பயம்பிறந்துவிட்டது. ஐயோ! பாவம்! ஒரேபிள்ளை. யாராவது கொன்றுவிட்டார்களோ? என்றிவர்கள் யோசிப்பதற்குமுன் இரண்டு சேவகர்களும் எதிரே வந்து நின்றனர்.

"எங்கே பையன்?'

'நாங்களாற்றங்கரை முழுவதுந்தேடினோம் எங்கேயுங்காணோம், இங்கே வந்திருப்பானென்ற வெண்ணத்துடன் வந்துவிட்டோம் சாமி!'

"அப்பா! நீ யெங்கேயடாயிருக்கிறாய் இப்பொழுது? எத்தனையோநாள் பிள்ளையில்லாமல் நீவந்து பிறந்தனையடா! ஐயையோ!' என்று டெபுடிகலெக்டர் பிரலாபிக்கத்தொடங்கினர். கலியாணப்பண்ணி சந்தோஷமாய்ப் போகலாமென்று வந்தவிடத்திலே பிள்ளையை யிழப்பதென்றால் மனமெவ்வளவு வருந்தும்? பிள்ளைகாணாமற்போன விஷயம் ஊரெங்கும் பரவிற்று. இராமசுவாமியைய்யர், இராஜகோபாலைய்யர், கோபாலசுவாமியையர், நாராயணசுவாமியையர், வீராசாமியையர், இராஜகோபாலையருக்குத் தெரிந்த இன்னுமனேக வக்கீல்கள், பெரிய மனுஷ்யர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீஸ் சேவகர்கள் எல்லோருமொன்று சேர்ந்து ஆலோசிக்கத்தொடங்கினர். கடைசியாய் அவர்கள் தீர்மானித்ததென்னவென்றால், வீராசாமியையர் கூடலூர் மார்க்கமாய்ப்போகிற ரஸ்தாவிலே இரண்டு சேவகர்களையழைத்துக்கொண்டு தேடிப்பார்க்கவேண்டும். இராம

ஸ்வாமியையர் திருவகிந்திரபுரம் ரஸ்தாவிற்குப் போகவேண்டும். இரண்டு சேவகர்களுடன் நாராயணஸ்வாமியையர் கருடநதிக்கு போகவேண்டும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் அத்தானும் மஞ்சகுப்பம் புதுப்பாளையம் முதலிய ஊர்களில் ஒவ்வொரு வீட்டிலேயும் புகுந்து பார்க்கவேண்டும். இராஜகோபாலையரும் கோபாலஸ்வாமியையரும் திருப்பாப்புலியூரிலேயே நன்றாய்த் தேடவேண்டும் என்று முடிவுகட்டி, அப்படியே தேட ஆரம்பித்தனர்.

ஒவ்வொருவருந் தேடினதைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இவர்களிவ்வாறுதேட வாரம்பிக்கும்பொழுது மணி சுமார் 7½-இருக்கலாம். கூடலூர் மார்க்கஞ்சென்ற வீராசாமியையர் காலில் ஒரு ஜோட்டை மாட்டிக்கொண்டு மகாவேகமாய் ஏதோ பருமகப்பிள்ளை இருக்கிற விடந்தெரிந்தாற்போல் சென்றுகொண்டிருந்தார். பின்னால் இரண்டு சேவகர்களும் ஓடிக்கொண்டிருந்தனர். அப்படிச்சென்ற வீராசாமியையரின் எண்ணம் என்னமோ? ரஸ்தாவோடேயே சென்றுகொண்டிருந்தால் இராமசாமி காலில் இடர்ப்படுவன், கண்டுபிடிக்கலாமென் றிருந்தனர்போலும்! மகா அவசரமாய்ச்சென்றவர் திருப்பாப்புலியூர் இருப்புப்பாதை நிலைக்குள் பிரவேசித்தனர். அங்கேபோய் கட்டடம் முழுவதுந்தேடினர், பிறகு திரும்பிவந்து ஒரு குறுக்கு வழியினுட்புகுந்து கனவேகமாய்ப் போய்க்கொண்டிருந்தனர். இவர் சென்ற வேகத்தினால் பின்னால் வந்த சேவகர்களுக்குமிவர்க்கும் ¼ மைல் தூரமிருக்கும். இவர்கையில் மெழுகுவர்த்தி விளக்கு ஒன்று, தடி ஒன்று ஆக இரண்டுகையில் இரண்டையு மெடுத்துக்கொண்டு போனவர் தடதடவென்று பின்னால் சப்தம் கேட்டவுடன் நின்று பின்னால் திரும்பிப்பார்த்தார். பார்ப்பதன்முன் தடியினால் தன்னையாரோவடித்தது மாத்திரந்தான் தெரிந்தது, ஐயையோ என அரவமிட்டுக்கொண்டு கீழேவிழுந்தனர். அப்புறமென்னவாயிற்றோ அவருக்குத்தெரியாது.

திருவகிந்திரபுரஞ்சென்ற இராமஸ்வாமியையர் மகாசாவதானத்துடன் அக்கம் பக்கம் முழுவதுஞ் சுற்றிப்பார்த்

துக்கொண்டு யாராகிலும் வழியிலகப்பட்டாலவர்களைக் கேட்டுக்கொண்டும் போய்க்கொண்டிருந்தார். சுமார் இரண்டு மைல் தூரஞ்சென்றவுடன், கரியை மேலே பூசினாற்போன்ற கருமை நிறத்துடனும் அரையில் கௌபீனமும் தலையில் முண்டாசும், கையில் யானைத்துதிக்கைபோன்ற தொரு தடியும், ஆகிய இவைகளுடன் ஒருவன் வந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். ஏய்! அப்பேன் உன்பெயரென்ன? உன்னைத்தானே கூப்பிடுகிறேன்! என்றான் ஒரு சேவகன் அவ்வாளை நோக்கி.

அந்த ஆள் ஏதோ மயக்கந் தெளிந்தவன் போன்று "எம்பேரா? கூத்திமவன் பண்ணை வம்புன்னு இது. ஐயோ! ஒத்தனை வொருத்தன் ஆப்பூட்டுன்னுனாட்டு அவனை பெவ்வளவுதாம் பண்ணுவாங்கோ? அந்தப்பய எங்கேயிருந்தோ வந்து இங்கே யம்பிட்டுக்கிட்டான். அந்தப் படவாப்பய மகங்ககிட்ட அம்பிட்டானேயவன்?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருந்தான் "ஏய்! அப்பேன்! உன்னைத் தான் ஒரு நாழியாப் பெயர் கேட்கிறேன்?" என்றான் அந்த சேவகன்.

"என்னேங்களாசாமி! என்பேர் கந்தன் கந்தன்னுட்டு கூப்பிடு வாங்க" என்றான்.

"இந்த மார்க்கமாய் யாராவது ஒரு பையன் போவதைப்பார்த்தாயா?" என்று அதிகாரத்துடன் கேட்டான் மற்றொரு சேவகன்.

"ஐயா ஷாமீ! பிஷ்சைக்கு வந்தபாப்பானை பருங்கா ஷமின் கண்டாயாங்கிறது போலயிருக்கே சாந்தாக்கே மேலு அந்தப்படவாங்கபண்ண அநியாயத்தைப்பார்த்துட்டு கூசாம இப்படியு முண்டாணுட்டுவரேனே. என்னைப் பார்த்து பின்னே சாக்ஷியைக்கண்டியாங்கறேளே? என்சாமீ!" என்று ஏதோவொரு வாச்சரியத்தைப் பார்த்ததுபோல் மொழிந்தனன்.

ஏன் அப்பேன்! என்ன ஆச்சரியம்? என்ன அநியாயம்? எங்கே?" என்றார் இராமசுவாமியையர்.

" ஐயோ ஷிவனே! அதையேன் சொல்ரேபோங்க, அங்கே ஒரு இருவது வயசு இருக்கும் பிள்ளாயாண்டான், அவனை 4, 5-பசங்கெல்லாங்கூடி கிட்டு போட்டு போட்டு நொக்கு நொக்கு நொக்குன்னூ கொல்றுங்க போட்டு. அந்தக் கண்ராவியே யெண்ணனூ சொல்வேன்" என்றான் மிகவும் வருத்தத்துடன் அந்த ஆள்.

1-ம் சே—நீ சொல்லுகிற பிள்ளையாண்டானுக்கு வய சென்னவிருக்கும்?

2-ம் சே—கறுப்பா செகப்பா அந்தப் பையன்?

இராம—கையில்காப்பு காலில்காப்பு போட்டுக்கொண் டிருந்தானு இல்லையா?

1-ம் சே—அவர்கள் அடித்துக்கொண்டிருக்கிற இடம் எத்தனை மைல் இருக்கும்.

2-ம் சே—4, 5-பேரா அடிக்கிறார்கள்?

ஆள்—ஓ ஷாமிகளே! எனக்கு ஈஷ்வரன் ஒரு நாக்கு கொடுத்திருக்கானே ரண்டுநாக்கு கொடுத்திருக்கானே, சும்மா கேட்டுகிட்டே போறேங்களே.

இரா—எல்லாரும் பேசாதிருங்கள். நான் கேட்கிறேன். அப்பேன் கந்தா! அந்தப்பிள்ளை கறுப்பா செகப்பா.

ஆ—இருட்டிலே ஷெவ்வையா தெரியலேங்க. சேப்பு போலேதானிருக்கு.

இரா—என்னமாதிரி வேஷ்டி கட்டிக்கொண்டிருந்தான்?

ஆ—வேட்டியுங்களா? அந்தபசக அதுக்குத்தானே நொக்கராங்கா. நல்ல கரைபோட்ட வேட்டியுங்க அது. கண்ணைப் பரிச்சிகிட்டுப்போவுது.

இரா—ஐயோ! நம்முடைய பையன்போலேயே யிருக்கிறதே. அந்த துஷ்டர்கள் இத்தனைநாழி யென்னசெய்திருப்பார்களோ தெரியவில்லையே என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டிருந்தார்,

1-ம் சே—பிள்ளை பாப்பானே இல்லையோ என்றான்.

ஆ—ஐயோ சாமி! பயப்படாதேயிங்க அது. செவ் வெவ்வென்னு நாட்டுப் புறத்தானைப் போட்டுக்கிட்டிருக்கு அங்க சீக்கிரம்வாறு வாங்க, கப்பிடுதாங்காணிருக்கும்' என்றான்.

இராமசுவாமிஐயருக்கு உண்டாகிய வருத்தம் இவ்வளவு அவ்வளவு என்றில்லை. அந்த ஆள்சொன்ன அடையாளங்களைக்கொண்டு பார்த்தால் சந்தேகமில்லாமல் மருமகப்பிள்ளையாய்த்தா னிருக்கவேண்டும். பிள்ளையை யாரோடு கண்டாற்போதுமென்றிருந்த அவர்க்கு மிகவும் வருத்தத்துடன் ஆள் காட்டின வழியே எல்லோருஞ்சென்றனர். அந்த ஆளோ தனக்குத்தானே யேதோ சிலவற்றைப் பேசிக்கொண்டு இவர்களை பாலாற்றங்கரைக்கு சமீபத்தில் கொண்டுபோய்விட்டனன். அவ்விடந்தான் கருடகிரி. அக் கருடகிரி திருப்பதியிலிருந்து மூன்று பக்கங்களிலும் ஓடுகின்றது. அப்படி யவர்களை மலையாற்றங்கரையோரமாய்க் கொண்டுபோய். "நீங்க இங்கியே இருங்கஸாமி, நான்போய் அந்த பைய இருக்காரொட்டுப் பாத்துவிட்டு வாரேன். எல்லாருமா சேந்துபோனுக்க அந்தத் திருட்டு பைய வெங்கையறு ஓடிப்போயிடுவாங்க. நான்போய் ரகஸியமாய்ப் பார்த்துக்கிட்டுவாரேன். இங்கியே இருங்க ஸாமி" என்றுசொல்லி மூன்றுபேரையு மவ்விடத்திலேயே விட்டுவிட்டு அந்த ஆள் போய்விட்டான். காலமணிநேரமாயிற்று, அரைமணியுமாயிற்று, ஆளைக்காணோம். இதென்ன ஆச்சரியம்! ஆளைக்கூட அவர்கள் கட்டிவிட்டார்களோ? அல்லது அவர்கள் அகப்படவில்லையோ! அகப்படாமற்போனால் இவ்விடத்தில் வந்து சொல்லலாமே! இல்லையோ! பிள்ளைக்கு என்னவாயிற்றோ?" என்று இராமசுவாமியையர் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். கடிகாரத்தைப்பார்த்தார். மணி 11-ஆயிற்று. ஒருவரையுங்காணோம். எல்லோரும் என்ன செய்வதென்று யோசித்தார்கள். யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது கருடகிரிமார்க்கஞ் சென்ற நாராயணசுவாமியையர் இவர்களின் முன்வந்து நின்றார்.

நாரா—இங்கேயேன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்.?

இராம—வாரும் ஐயா! ஒரு கிழவன்வந்து—

நாரா—அந்தக் கிழவனிங்கேயும் வந்தானா?

இராம—அப்படியென்றால் உங்களிடத்திலும் வந்தானோ?

நாரா—அதேதான் சொல்லுகிறீர்கள்! அவன் பொல்லாத கிழவனாயிருக்கிறான். அந்தக் கிழவனே பிள்ளையை யேதாவது செய்திருப்பான்! அவனென்னிடத்தில் வந்து இங்கேயாரோ ஒருபிள்ளையை ௪. ௫-பேராய் உதைக்கிறதாகச் சொல்லி எனக்கு வழிகாட்டி வான்போல் சிறிதுதூரம் அழைத்துவந்து ஆற்றங்கரையோரத்தில் விட்டுவிட்டுப் போய்விட்டான். சற்றேயுட்கார்ந்து பார்த்தேன். திரும்பிவருவதாகச் சொல்லிப்போன கிழவன் வரவேயில்லை. அதன்பேரில் நானே வந்தேன்.

இராம—உம்முடன் வந்த சேவர்கள்?

நாரா—அவர்கள் வேறேயிடத்துக்குப் போயிருக்கிறார்கள் நாங்கள் மூன்றுபேரும் வெவ்வேறாய்ப் பிரிந்து போனோம்.

இராம—அந்தக்கிழவன் நம்மிடத்துக்குவந்த பிறகு இவரிடம் போயிருக்கவேண்டும்" என்று சேவகர்களை நோக்கிக்கூறினார்.

1-ம். சே—இந்தக்கிழவன்தானோ அல்லது அவன்வேறோ?

இராம—அந்தக்கிழவன் இடுப்பில் கௌபீனந் தரித்துக் கொண்டிருந்தானா?

நாரா—ஆம். தலையில் முண்டாசு.

இராம—கையில் தடி.

நாரா—நிறம் கரி பூசியதுபோல்.

இராம—மூக்கு நீண்டிருக்கும்.

நாரா—மீசை யென்னை வந்தெட்டும்.

இராம—அவன்பேர்?

நாரா—கந்தன்.

இராம—அவனே! அந்தப்பேர்வழிதான். அவனைக் கண்டு பிடிக்கவேண்டுமே! அவன்தான் பையனை யேதாவது செய்திருப்பான்.

1-ம். சே—ஆமாம்! எனக்குமிப்பொழுதுதான் தெரி கிறது. நாம்கேட்டவுடன் முதலில் மயங்கினான். பிற்பாடு தான் ஏதோவுரைத்தான்.

இராம—சரிதான், அவனைக்கண்டு பிடிக்கவேண்டுமே?

நாரா—அவன் என்னிடத்தில்பேசி ½-மணி நேரந்தா னிருக்கும். இந்த வழியாய்த்தான் வந்தான். நீங்களிரண்டு பேர்களும் ஒரேயோட்டமாய் ஓடினால் ஒருவேளை யகப் படுவான்.

இராம—ஆம். நீ அப்படியோடு, அவன் அந்தமார்க்க மாய் ஓடட்டும், அவன் நடுவில் அகப்பட்டுக் கொள்ளுவான்.

நாரா—நீங்கள் அந்த ஆளைக்கண்டுபிடித்து விட்டீர் களோ உங்களுக்கு மிகுந்தபெருமையுண்டு. ஐயாவினிடத் தில் சொல்லி 20-ரூபாய்—

இராம—இருபதா? அவன் அகப்பட்டால் பிள்ளை பிழைத்ததுபோல்தானே? 100-ரூபாய் வரைக்கும் வாங்கித்--

1-ம் சே—நீங்கள் அதிகமாய்ச் சொல்லவேண்டாம். எங்களுக்கு இருக்காதா அந்த அக்கறை?

2-ம் சே—பேசுவதிற் காரியமில்லை

என்றுசொல்லி இரண்டு சேவகர்களும் இவன் ஒரு பக்கமும் அவனொரு பக்கமுமாக ஓடினார்கள்.

நாராயணசுவாமியையரும் இராயசுவாமியையரும் அடி யில் வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள்.

இராம—என்னமோ கலியாணம் ஆரம்பித்ததுமுதல் ஏதாவது பிசகுகள் நேரிட்டுக்கொண்டே யிருக்கின்றன.

நாரா—உள்ளுக்குள்ளேயிருக்கிறான் திருடன். இல்லா விட்டால் உள்ளே வைத்திருந்த நகை வேறே யெங்கே போய்விடும். மருமகப்பிள்ளை சிறுவனா? அவனை எங்கே

யை அழைத்துப்போய்விட்டார்களே? தந்தி சரியான பேர் வழிக்கு அடித்திருக்கிறார்களே?

இரா—யார் இருப்பார்? அந்தரங்க விஷயமெல்லாந் தெரிந்துகொண்டு யாரிருப்பார்?

நாரா—நன்றாக விசாரித்து அவனைக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாமற்போனால் பாருங்கள், சமீபத்திலிருக்கிற பேர்களிடத்தில் சந்தேகமுண்டாகும். நான்றானிருக்கிறேன். இல்லை பேச்சுக்குச் சொல்லுகிறேன். எனக்கு உங்களுடைய குடும்ப விஷயமெல்லாம் நன்றாய்த்தெரியும். நான்றான் ஒருவேளை—

இராம—அடடா! நீங்கள் எங்கேயாவதுண்டா?

நாரா—இல்லையென்றால் பேச்சுக்குச் சொல்லுகிறேன்.

இராம—எப்பொழுது உங்களிடத்தில் சந்தேகமுண்டாகிறதோ அப்பொழுது என்னிடத்திலுமுண்டாகலாம்.

நாரா—ஆகையினால் எப்படியாவது உளவாயிருந்து திருட்டைக் கண்டுபிடிக்கவேண்டும்.

இராம—எல்லாவற்றிற்கும் கலியாணம் செவ்வையாய் முடிந்தாலல்லவோ?

நாரா—நான் சொல்லுகிறேனே. இவனே யெங்கேயாவது போயிருப்பான் கேட்டீர்களா? இவனுக்குக் கலியாணத்தில் அதிக திருப்தி இல்லைபோலேயே யிருக்கின்றது. அதை ரகசியமா யறிந்துகொண்டேன்.

இராம—என்னமாய்? என்னமாய்?

நாரா—என்ன ஐயா? தெரியாதா? இதெல்லாம். பட்டி மேய்கிற மாட்டை கட்டிப்போட்டால் விசனமாய்த்தானே யிருக்கும்.

இராம—அப்படி யேதாவதுண்டா என்ன?

நாரா—அதையேன் இப்பொழுது கேட்கிறீர்? ஜாடையாய் அதை உங்கள் தமயனாரிடம் சொன்னேன். அவர் அதை கவனிக்கவில்லை. இப்பொழுது கலியாணமாய்விட்டது. இனிமேல் என்னசெய்கிறது.

இராம—என்னிடத்தில் நீங்கள் சொல்லவில்லையே.

நாரா—எங்கே? எல்லாருமென்ன நினைத்துவிட்டார்களோ? என் பிள்ளைக்குக் கொடுக்கிறதற்கு இப்படி செய்கிறேன் என்றுசொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அதன்பேரில் நமக்கென்ன கிரகசாரம் என்று நான் பேசாமலிருந்துவிட்டேன்.

அதற்கு இராமசுவாமி அய்யர் மிகவும் விசனப்பட்டுக்கொண்டு “சரிதான்” என மொழிந்தார். இப்படி இவர்களை பேசிக்கொண்டிருக்கவிட்டு, சேவகர்களையும் தேடிக்கொண்டிருக்கவிட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டரும், அத்தானும் தேடினதைப்பற்றி விசாரிப்போம்.

போலீஸ் இன்ஸ்பெக்டருக்குப் பையன் உள்ளூரிலேயேயிருக்கமாட்டான் என்று நன்றாய்த்தெரியும். பையனாய் ஓடிபோனாலும் வெளியூருக்குத்தான் போயிருப்பான். இல்லை வேறே யாராவது அழைத்துக்கொண்டு போனாலும் வெளியூருக்குத்தான் போயிருப்பான். ஆகையினால் அவர் வக்கீல் இராஜகோபாலையரைத் திருப்திசெய்யும்பொருட்டுத் தேடுவதாக ஒத்துக்கொண்டு மஞ்சக்குப்பத்திற்குச் சென்று தன்னகத்திற் படுத்துறங்கிவிட்டார். அத்தானோ புதுப்பாளையஞ்சென்று வீடுவீடாய் நுழைந்து திண்ணையிலெல்லாந் தேடிக்கொண்டிருந்தார். ஒரு திண்ணையில் முழு முக்காடிட்டுக்கொண்டு ஒருவன் படுத்து இருந்தான். அவன் முக்காட்டை யெடுத்துவிட்டு. முகத்தின்கிட்ட இராந்தலைக் கொண்டுபோய்ப் பார்த்தார். அவன் திடுக்கென விழித்து “யாரடாவது” என்றனன். அத்தான் “எங்கள் வீட்டுப்பிள்ளையோ என்று பார்த்தேன்” என்றார். ‘இந்தப் பார்ப்பானுக்குக் கொழுப்படா ஆனாலும்’ என்று சொல்லிவிட்டு மறுபடியுந் தூங்கினன். மற்றொரு வீட்டுத் திண்ணையில் அத்தான் போய்ப்பார்க்க அங்கேயுமொருவன் முகத்தை மூடிக்கொண்டு படுத்திருந்தான். அவன்மேலிருந்த துணியை நீக்கி இராந்தலைச் சமீபத்திற் கொண்டுபோகவே அவன் திடுக்கென வெழுந்திருந்து அந்தணர் காலில் அடியற்ற மரம்போல் விழுந்து “சாமி, சாமி, என்னை விட்டு

ளை ஒருக்காசுகூட நான் தொடவில்லை. எல்லாம் அங்கேயே போட்டுவிட்டேன் எனக்கு வைத்தியமில்லாத கொடுமைக்கோ இப்படியெல்லாம் செய்யச்சொன்னது இங்கே உங்கவீட்டுக்கே நான் வரவில்லை. வீணைத்தொடுத்தாட்டுக ள்ளை யல்லவே என்று சமாசாரமாய்ப் பொழிந்து இருகாலை யும் கெட்டியாய்க் கட்டிக்கொண்டான் பார்ப்பான் இனைய வெட்டப் புகைமூறப்பட்ட கைதயாகிறோ என நினைத்து, சம்பந்தி பகுதியில் வைத்த காசிமாலைப்பற்றி விவ ராக பிறர் நிறைவேற திக்காலோசனைபண்ணி, காசி மாலைத் திருட்டு வெளிப்பட்டால் மிகுதியெல்லாம் வெளி யாகுமென்று நினைத்து "அடே! அந்த நகையை யெங்கே போட்டுவிட்டாய்"? என்றார்.

திருடனே சற்று முன்னுள் புறப்பாளையத்தில் ஒரு வீட்டின் கன்னம்வைத்து வீதா அகப்பட்டதை யெடுத்துக் கொண்டு வெளியிலேபோக நிச்சயித்து வாசற்கதவைத் திறக்க, அப்பொழுதுண்டான சத்தத்தினுல் அவ்வீட்டுக் காரர் விழித்துக்கொள்ளவே, திருடன் ஓடோடியும்போய், அங்கிருந்த ஒரு குப்பைத்தொட்டியில்தான் கொண்டுவந்த நகை பணத்தையெல்லா மெறிந்துவிட்டு, கைப்பெட்டியை யும் போட்டுவிட்டு சத்திரத்தாழ்வாரத்தில் கடைசியாக பேர்சொன்ன திண்ணையில் படுத்துக்கொண்டான். படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் வீதா பேச்சுக்குரல்கேட்டு கண்ணைவிழித்துப் பார்த்தான் வீதா வெளிச்சத்தோன் றவே தன்னை யாரோ தேடவருவதாய் நினைத்து, முழு முக்காடிட்டுப் படுத்துக்கொண்டான். வெளிச்சமும் சத்த மும் தன்னை நோக்கிவரவே தான் படுத்திருப்பது அவர் களுக்குத் தெரிந்துவிட்டதுபோல் நினைத்தான். அத்தான் துணிவைத்தன்னாலே தன்னை நன்றாய் அவர் அறிந்திருக்க வேண்டுமென்று நினைத்தான். இராகதேவயங் காட்டவே அவனுக்குச் சந்தேகம் நிச்சயமாகி முன் சொன்னவாறு மொழிந்தனன். அதற்குத் தான் கூறியதைக்கேட்டுத் தான் திருடிவந்த நகையைப்பற்றியே கேட்கிறரென்றெ ண்ணி "சாமி, சாமி, அந்தக் குப்பைத்தொட்டியிலேயே

போட்டுட்டேனுங்க" என்றான். நகையைக்காண ஓராசை தோன்றவே, திருடனை நோக்கி 'எனக்கு குப்பைத்தொட்டி தெரியாது, நீ வந்துகாட்டு' என்றார். 'என்னை யொண்ணுஞ் செய்யலே இன்னா சத்தியஞ் செய்தாக்கா காட்டுரங்க' என்றான் திருடன். அந்த சமயத்தில் சத்தியஞ்செய்யாவிட்டால் திருடன் ஓடி விடுவானென்றெண்ணி யவ்வாறு சத்தியமுஞ்செய்தார் அந்தணர். பிறகு திருடன் அத்தானைப் பார்த்து 'சாமி! இந்த ராந்தலையிங்கியே அணைச்சுவைச்சு விட்டுவாங்க. ராந்தலோடு வந்தா யாரானுஞ் சேவகன் பிடிச்சுக் கொண்டுப்போயுடுவன். எனக்கு நீங்கதான் (குரு) வுங்க. நீங்கதான் காப்பாத்தணங்க' என்றனன். அத்தானு மவ்வாறே செய்வதற்கிணங்கி, இராந்தலையும் அங்கேயே அணைத்துவைத்துவிட்டு திருடன் முன்னும் இவர் பின்னுமாகக் குப்பைத்தொட்டியை நோக்கிச் சென்றனர்.

திருடனுக்கு அந்தணர் சத்தியஞ்செய்தாரேனும் அவனுக்கு சந்தேகமாகவேயிருந்தது. இவர் தன்னை எங்கேயாவது ஒரு சேவகனிடத்தில் பிடித்துக்கொடுப்பாரோ என்றபயம் அவன் மனத்திலிருந்து கொண்டேயிருந்தது. ஆயினும் தெய்வமேதுணையென்று இவர் முன்னாலேயே போய்க்கொண்டிருந்தான். திருடனுக்குந் தெய்வந்துணையாம்!

குப்பைத்தொட்டிக்கு அந்தண அழைத்துக் கொண்டு போய், அதோயிருக்கிறது நகைப்பெட்டியென்று சொல்லவே, அத்தானும் அவனுடன் ஆபரணப்பேழையை யெடுத்துப்பார்த்து, பூட்டியிருக்கக்கண்டு தன்சாவியால் அது திறக்குமோ என்று பார்க்கையில், நன்றாய்த்திறந்தது. அதற்குள் காசிமாலையும் இன்னுஞ் சில வாபரணங்களுமிருக்கக் கண்டனர். அவையெல்லாம் சிவலிங்கச் செட்டியினுடைமைகள். அந்தவீட்டில் கன்னம்வைத்து திருடன் யெடுத்துக்கொண்டுவந்த நகைகளாம். அத்தானுக்கு சம்பந்தி வீட்டில் காசிமாலை களவு போயிற்றெனத் தெரியுமேயொழிய, காசிமாலையுடன் இன்னுமேதாவது நகைகள் போயிற்றாவென்பதையுமறியார். களவுபோன காசிமாலை பெட்டியுடன்போயிற்றா அல்லது தனியாய்ப்போயிற்றா என்பதை

புபறியார். சாசிராலையைச் கண்டவுடன் பின்வருமாறு யோசிக்கலானார். அடடா! நாம்செய்ததல்லவோ காரியம் சம்பந்தி நம்மிடத்தில் எவ்வளவுதூரம் சந்தோஷப் பட்டுக் கொள்ளுவர். சிறிதேனும் நினைத்திருப்பாரா அவர் நகை யகப்படுமென்று? இரண்டுநாளைக்கு முன் இங்கேபோட்ட நகைப்பெட்டி யிப்படியேயிருக்கிறதே. என்ன முனிசிபாலிடீ! என்ன நன்றாய் குப்பைவாருகிறார்கள்! நாம்மைபமேறு என்ன வோ என்று ஆளைப்பார்த்தோம்! குற்றமுள்ளநெஞ்சு குறு குறு என்னும் என்பதற்குச்சரியாக அவன் நகையிருக்கு மிடத்தைக்காட்டினான். நடுப்பகலில் ஒருவருக்குந் தெரி யாமலல்லவா கொண்டுவந்திருக்கிறான்? பகாகெட்டிக்காரன். அவனே பொய்த்தந்தியடித்திருப்பான். அவனேபிள்ளையை யொளித்திருப்பான். அவனை விடக்கூடாது" என்று யோ சித்துக்கொண்டு திரும்பிப்பார்க்கையில் தன்னுடன் கூட விருந்த திருடனைக்காணோம். திருடன் காணமற்போக வே நாலு பக்கங்களிலுஞ் சுற்றிப்பார்த்தார். இரண்டு பக்கங்களில் வீட்டுவரிசையும், மற்றொருபக்கத்தில் 60-கெ ஜத்திற்குப்பின்னால் இராந்தலெடுத்துக்கொண்டு இரண்டு பேர்வருவதையும், சுமார் 50-கெஜத்திற்குமுன்னால், மற் றொருபக்கத்தில் ஒரு ஆள் ஓடுவதையும்பார்த்தார். அந்த ஆள்தான் திருடனென்று ஐயருக்குத்தெரிந்தது. உண்மை யாகவே அவன்றான் திருடன். அவன் அந்தணர் முன் சொன்னவாறு யோசனையிலாழ்ந்திருக்கையில் சுற்றிச் சுற் றிப்பார்த்துக்கொண்டிருந்தான். ஒருபக்கத்தில் வெளிச்சத் தைக்காணவே தன்னைத்தேட யாரோ வருவதாக நினைத் துக்கொண்டு அவர்களுக் கெதிர்ப்பக்கத்தில் முன்சொன் னவாறு ஓடினான். அத்தான் திருடனோடுவதைக்கண்டு அவனைத்துரத்திக்கொண்டு கையில்நகைப் பெட்டியுடனே யோடினார்.

பின்னால் வெளிச்சந் தோன்றினதாகக் கூறினோம். அவ்வெளிச்சம் போலீஸ்சேவகன் ஒருவனது. சிவலிங்க செட்டியார் வீட்டில் களவுபோகவே, அவ்வீட்டிலுள்ளோர் யாவரும் கூச்சலிட்டுக்கொண்டு தெருவிலிங்குமங்குமோடி

ஞர்கள். அந்த ஊர்சுற்றிக் கொண்டு வந்த சேவகனொருவனிடத்தில் சங்கதியைச் சொல்லவே அவன் செட்டியார் வீட்டினுட் சென்று களவு நடந்த இடம், சொத்து முதலியவைகளைப்பற்றிச் சிலவிஷயங்களைத் தன் குறிப்பிற் பதிந்துகொண்டு செட்டியார் தம்பதிகளிருவரையுங்கூட அழைத்துக்கொண்டு, பயப்படாதேயுங்கள், திருடன் அகப்படுவான், என்று தைரியஞ் சொல்லிவிட்டு வந்துகொண்டிருந்தான். நிலா நன்றாயெரிந்தது. முன்சொன்ன குப்பைமேட்டியருகே அந்தணரும் திருடனும் நின்றுகொண்டிருப்பதைக் கண்டார்கள். சேவகன் செட்டியார்களைப் பார்த்து 'அதோ இரண்டுபேர் நின்றுகொண்டிருக்கிறார்கள்,' என்று சொல்லி வாய்மூடுமுன்னமே ஒருவன் ஓடுவதைக் கண்டு, 'அவர்கள்தான் திருடர்கள்' என்று, சொல்லிய ஒருவனையாவது பிடிப்போம் என்று விரைவாய் நடந்துகொண்டிருக்கையில் அந்தணரும் முன்கூறியவாறு ஓடக் கண்டு, "இவனுமோடுகிறான்" என்று சொல்லியவரைத் தூக்கிக்கொண்டு சேவகனோடே வாராநின்றான். திருடன், அந்தணன், சேவகன், ஆகிய இவர்கள் தனித்தனியாய்ப் பிசகான எண்ணத்துடன், ஒருவரை யொருவர் தூக்கிக் கொண்டோடவே, திருடனும் சேவகனும் ஓட்டத்தில் வெகு சமர்த்தர்களானபடியால் திருடனோடிவிட்டான் அந்தணர் சேவகன் கையிலகப்பட்டார்.

அந்தணனுடன் இரண்டு சேவகர்கள் வந்ததாய்க் கூறினோம். அவர்கள் பிள்ளையைத் தேடுவதற்கு வெவ்வேறாகப் பிரிந்து போனார்கள். இப்பொழுது தன் தோளில் ஒரு சேவகன்கைபோடவே தன்னுடன் வந்த சேவகன் சினேகித நிமித்தமாய்க் கைபோடுகிறான் என்று நினைத்துக்கொண்டு "அதோ, அதோ ஓடுகிறான் திருடன், பிடிபிடி." என்றார். 'அவன்போனாப் போகட்டுண்டா, படவாப் பயலே! நீயாப் பட்டுக்கிட்டே போருண்டா. அவனைப் பிடிக்கப்போனா நீயும் தப்பிச்சுக்கிட்டு போகலாம்னாட்டா, உன்னை யிம்மைவிடுவேனா நான் அங்கெங்கடா போறே' என்று முதுகில் ஓங்கியறைந்தான் சேவகன். அந்தணருக்குக் கோபம்

வந்து விட்டது. அவர் நினைத்தது: இவனுக்குப் பயித்தியமாவது பிடித்திருக்கவேண்டும்—எதுவாகிலுஞ் சரி, என்றெண்ணிக் கொண்டு தன் கையிலிருந்த நகைப்பெட்டியைச் சேவகனை நோக்கியெறிந்தார். அது அவன் கண்ணிற்பட்டு மண்டையைக்குத்தவே, கீழேவிழுந்தான். இதற்குள் செட்டிகாரியஸ்தன், இவனருகில்வந்து, நகைப்பெட்டியுடன், சேவகன்கீழே இரத்தத்துடன் விழுந்திருப்பதைக் கண்டு, நகைப் பெட்டியைத் திருடினது மல்லாமல், சேவகனையும் கொலைசெய்தாயா என்று சேவகன் கைத்தடியை யந்தணர் மேலெறியவே, அந்தணர்கையிற்பட்டு அதை பெயர்ந்து விட்டது. உடனே அத்தானுக்கு உண்மைவெளிப் பட்டுவிட்டது. திருடன்சேதியும் நகைப்பெட்டி சங்கதியும் ஒருவாறாக வெளிப்படவே இப்பொழுது தன்னைக் கையுங் களவுமாகக்கண்டு பிடித்துவிட்டதனால் தன்னைத் திருடனென்று நினைக்கப்போகிறார்களே யென்று பயந்துகொண்டிருக்கையில், செட்டி காரியஸ்தன் தானடித்த அடியிற் சோர்ந்திருக்கிறானென்று நினைத்து அடே திருடத்தான் திருடினாய், பெட்டியைத்தா னெடுத்துவந்தாய், சேவகனை யேனடா கொன்றாய்? என்று மறுபடியுமோங்கி அந்தணா முதுகில் குத்தினான். அந்தணர் வந்ததுபாட்டுமென்றெண்ணி சேவகன் இராந்தலை செட்டி காரியஸ்தன்மேலெறிய நடுமார்பிற்பட்டு எண்ணெயெல்லாம் மேலே கொட்டி கண்ணாடியோடெல்லாம் பொத்துக்கொண்டு, நெருப்புஞ் சுட்டுவிட்டது, காரியஸ்தனும் கீழே விழுந்தான் கீழே விழுந்தார்களேயொழிய, இரண்டுபேருமிறக்கவில்லை. அத்தான் பார்த்தார். இங்கே யிருந்தால் பழிவருமென்று நினைத்து இரண்டுபேரும் மூர்ச்சையாய்க் கிடக்கிறபொழுதே வீடுபோய்ச் சேர்வோமென்று சந்து சந்தாய் நுழைந்து கடைசியில் வீடுபோய்ச் சேர்ந்தார்.

இவர் வீடுபோகும்பொழுது வீட்டின் நிலைமையைப் பற்றி சற்றே விசாரிப்போம். இராஜகோபாலையரும் கோபாலஸ்வாமியய்யரும் திருப்பாப்புலியூரில்தேட வாரம்பிக்கையில் இவர்களுடைய சினேகிதர்களில் சிலர் ஓடோடியும்

வந்து “அடடா! தங்களுக்கேனிவ்வளவு சிரமம், தாங்களிருங்கள். நாங்கள்போய் ஒருவீடு பாக்கியில்லாமல் தேடிவிட்டு வருகிறோம்.” என்றுசொல்லி புறப்பட்டுவிட்டார்கள். சம்பந்திகளிருவரும் இராஜகோபாலையர் கிரகத்திலுட்கார்ந்துகொண்டு அடியில் வருமாறு பேசவாரம்பித்தார்கள்.

இராஜ—மருமகப்பிள்ளை யெங்கே ஐயா போயிருப்பார்?

கோபா—ஐயா! என்னமோ நீங்கள் செய்வதெல்லாம் முழுமோசமாயிருக்கிறது. தங்கள் கன்னிகையைத் தாங்களே சுகமாய் வைத்திருங்கள். என் பிள்ளையைக் கொண்டு வந்து விட்டுவிடுங்கள். நான் இவ்வளவு வஞ்சனைக்காளல்ல. தெரியாத்தனமாய் அகப்பட்டுவிட்டேன். என்பிள்ளை யிருக்குமிடத்தைச் சொன்னால் உமக்குக் கோடி நமஸ்காரம்.

இராஜ—அப்படியென்றால் நீர் சொல்வதைப் பார்த்தால் நான்றான் பிள்ளையை யொளித்துவிட்டுப் பொய்சொல்கிறேன்போலும்! என்னையா? மருமகப்பிள்ளையைப்பற்றி யுமக்கு உள்ள அக்கரையைவிட எனக்குப் பதின்மடங்கு அதிகமையா! எனக்கிருக்கிற விசனம் எனக்குத் தெரியும்.

கோபால—ஏனையா வெறும்பேச்சு பேசுகிறீர். கலியாணத்தில் நடந்த கோலாகலங்களை யெல்லாம் பார்த்தால் உமது பேச்சை யாரையா நம்புவார்? காசிமாலை போய் விட்டதென்று உண்டான அட்டகாசமெல்லாம் செய்தீரே யொழிய அதற்கப்புறம் விசனப்பட்டது சிறிதேனு முண்டாகாணும். இதையெல்லாம் யோசித்தால் காசிமாலைபோனது உண்மையோ என்னமோ என்று ஓரையங்கூட வுண்டாகின்றது.

இராஜ—ஐயா அதிகமாய்ப் பேசாதேயும். என் பெண்ணை யினிமேல் ஒருவருங் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டாம். என்பெண் வாழாவிட்டாற்போகிறது. தாங்களிவ்வாறதிகமாய்ப் பேசினால் வீண் மனஸ்தாபத்திற்கு இடமுண்டாகும். (இறந்ததோர் பிணத்தை) காகங்கள் கொத்துவதுபோல் எத்தனையோ அனேக கஷ்டங்களால் நொந்த

வென்னைத் தாங்களின்னு மதிகமாய்க் கஷ்டப்படுத்தவேண்டாம்.

கோபால—இந்த வார்த்தைகளெல்லாஞ் சரிதானையா! என்பிள்ளை யெங்கே.

இராஜ--சொல்லச்சொல்ல என்னகாணுமதையே பேசுகிறீர். என் மருமகப்பிள்ளை யெங்கேகாணும், நீர்தான் சொல்லுமே.

கோபால—எட்டிக்கு போட்டி சொல்லுகிறதா யெண்ணமா? பெரிய மனுஷியத்தனம் சிறியதேனுங் காணுமே?

இராஜ—தாங்கள் சொன்னது போதும். அதிகமாய்ச் சொல்லவேண்டாம். எனக்கு மருமகப்பிள்ளை யிருக்குமிடந் தெரியாது. தாங்கள் வேண்டியதைச் செய்துகொள்ளலாம்.

கோபால ஸ்வாமியையர் ஏதோ சொல்லவாய் திறக்குமுன் ஓர் ஒற்றைமாட்டுவண்டி வாசலினெதிரில் வந்துநின்றது. அதனின்றும் இரண்டு சேவகர்கள் கீழேகுதித்து ஒரு தேகத்தைத் தூக்கித்திண்ணையின்மேல் கொண்டுவந்து போட்டார்கள். திண்ணையில்போடும் பரியந்தம் உபயவாதிகளுக்கும் சமாசாரமேதெரியாது. பிறகு இரண்டு பேரும் எழுந்து தேகத்தினருகிற் சென்றனர். கோபால ஸ்வாமியையர்பார்த்து 'அப்பா வீராசாமி' என்று சொல்லிக்கொண்டே கீழேவிழுந்தனர். இராஜகோபாலையர் மார்பில்கை வைத்து உயிரிருக்கிறதெனத்தெளிந்து நீர் கொண்டு வரச்சொல்லி முகத்தைத்துடைத்துக் காயமிருப்பதைப்பார்த்து ஈரத்துணியால் மூடிவிட்டுத் தன்வேலைக்காரனைவிட்டு அவ்வூர் ஆஸ்பத்திரி வைத்தியனையழைத்துவரச்சொல்லி, அவர் தேகமுழுவதையுந் தடவிக்கொண்டிருந்தனர். இதற்குள் பக்கத்திலிருந்த சிலர் கோபால ஸ்வாமியய்யரை எழுப்பி வேண்டிய உபசாரங்களை யெல்லாஞ்செய்து, அவரை மூர்ச்சைதெளிவித்துத் திண்ணையில் உட்கார்த்தி விசிறிக்கொண்டிருந்தார்கள். இராஜகோபாலையர், சேவகர்களைக்கேட்டதில், தங்களுக்கு முன்னால் வீராசாமியையர் நடந்துகொண்டு

போயிருந்ததாயும், திடீரென ஐயோ வென்று சத்தமிட்டதாயும், தாங்கள் ஓடிப்போய்ப்பார்த்ததில் இவர் கீழேவிழுந்திருந்ததாயும், மண்டையிலிருந்து இரத்தம் ஓடிவந்துகொண்டிருந்ததாயும், தாங்கள் அவரை தூக்கிச்சாலையில் கொண்டுவந்துபோட்டு ஒருவண்டியிலேற்றிக்கொண்டு வந்ததாயுஞ் சொன்னார்கள்.

ஈரத்துணி மேலேபட்டவுடன் வீராசாமியையரும் கண்ணை விழித்துப்பார்த்தார். உயிரிருக்கிறதென்று நிச்சயங்கொண்டு கோபால ஸ்வாமி அய்யரும் சமீபத்தில் வந்துட்காரந்துகொண்டு இராஜ கோபாலையரைப்பார்த்து நெறு நெறெனப்பற்களைக் கடித்துக்கொண்டும். வீராசாமியையரைப்பார்த்து கணணீர் வடித்துக்கொண்டும் அவரது தேகத்தைத்தடவிக்கொண்டும் இருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் ஆஸ்பத்திரி வைத்தியரும்வந்து சேர்ந்தார். வந்தவுடன் கும்பல்விலகிற்று. இராஜகோபாலையரும் கோபால ஸ்வாமியையரும் கைகொடுத்தழைத்துக் கொண்டுபோனார்கள். வைத்தியர் வீராசாமியையரிடம் சென்று கைபார்த்து மார்புபார்த்து, முதுகுபார்த்து, காயத்திற்கெல்லாம் துணி கட்டி, மனுஷியனை அனுப்பினால் மருந்து தருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டுப்போனார்.

அவர்போனவுடன் இராஜகோபாலையர் கும்பலையெல்லாம் விலக்கிவிட்டு பெண்டுகளையெல்லாம் உள்ளேயனுப்பிவிட்டுத் தன் சிநேகிதர்கள் சிலருடன் உட்கார்ந்தார் திண்ணையில். **உள்ளேசென்ற ஸ்திரீகளின்பேர்** :—

காமாக்ஷி, ப்ரஹன்னாயகி, பாகீரதி, சுப்பம்மாள், லக்ஷிமி, சுந்தரி, விசாலாக்ஷி, பார்வதி, சரஸ்வதி, மதுராம்பாள், செல்லம்மாள், அழகம்மாள், குட்டியம்மாள், தாயம்மாள், கல்யாணி, சாவித்திரி, ஜானகி, இன்னுஞ்சில பேர்கள்.

இவர்களின்னார்கள் என்றுரைக்க சாவகாசமில்லை. இனிமேல் தானாகவே வெளிப்பட்டாலென்னமோ? இவர்கள் பேச்சைச் சற்று கவனிப்போம். எப்பொழுதும் எனக்குப் பெண்கள் பேச்சைக் கவனிப்பதென்றால் மிகுந்த ஆசை.

அவர்கள் பேச்சிலுள்ள பிழைகளைத்திருத்த நம்மால் முடியாது. ஆகையால் அவ்வாறே அறைகுவாம்.

அழகம்—கல்யாணம் ஆரம்பித்தது முதற்கொண்டு, அடியம்மா, ஒண்ணுமாத்தி ஒண்ணு, ஒண்ணுமாத்தி ஒண்ணு ஏதாவது ஆய்க்கிண்டே யிருக்கடியம்மா!

தாயம்—நான் அப்பவே மங்கிலிப்பொண்டு இடு, மங்கிலிப்பொண்டு இடு, இன்னா முட்டிணையென கேட்டானு.

குட்டியம்—அடீ! ஏழைசொல் அம்பலமேறுமா, எங்கியாணும்.

அழகம்—ஆமாண்டீ! நம்மளெ எத்தத்தனைபேர் மஞ்சள் குங்குமத்தோடெ போயிருக்காங்க. பின்னெ நம்ப பையன் கோபாலன் மூத்தாளெச் சொல்லு. அவடாவும் பதினஞ்சு வயசிலே போனளே.

தாயம்—அவமகா பொறுமைக்காரி. அடீ அம்மா, மங்கிலிப்பொண்டுகளா! ஒரு ரூபாய் முடிஞ்சுவைக்கிறேன். எங்குழந்தையைக் காப்பாத்தணும்.

செல்வம்—தெரித்திரம், தெரித்திரம், அஷ்டதெரித்திரம், மூதேவி, ஒரு ரூபாயாம். எங்குழந்தை யாப்பிட்டாக்கா நான் நூறு ரூபாய்க்கின்னு செய்கிறேன்.

தாயம்—ஐயோ அம்மா நன்றுநக்கு. இப்ப ஒரு ரூபாய் முடிஞ்சுவைச்சா அப்புறம் செய்யாத்துக்குச் செய்யேன் யார் வணுங்கிறு?

லக்ஷ்மி—அடீ! ஊரிலெழுந்த புறப்பட்டவா ஒரு மங்கிலிப்பொண்டு பண்ணிகின்டு வரமாட்டாளோ? நன்றுருக்கு நன்றுருக்கு.

தாயம்—அம்மா! நீ சொல்லுமடியம்மா! நன்னுச் சொல்லு, நீ சொன்னுத்தான் படும். விசாலாக்ஷி! பாத்தியா? நான் சொன்னேனே கேட்டியா?

விசாலா—ஏது! நன்னுருக்கு. நீங்க சொல்லத்தைப் பாத்தாக்கா அவர் செய்பவந்ததை நான்தான் வாணும் இன்னேன் போலேயிருக்கு. வார்த்தையைப் பாத்தியாடீ!

குட்டியம்—அத்தைத்தான் சொல்வானேன்! வாயைத்தான் வலிப்பானேன்! அக்கா! பேசாதிரு நீ.

லக்ஷ்மி—தெற்கித்தியாளெல்லாம் இப்படித்தான். மங்கிலிப்பெண்டு பண்ணமாட்டா. வெங்கடாலபதிக்கு சமாராதனை செய்யமாட்டா. ஒரு பிராமணனை யழைச்சு ஒரு வேளைச் சாதம்போடமாட்டா. ஒரு சுமங்கிலிக்கு இந்தான்னு வெத்தலைப்பாக்கு கொடுக்கமாட்டா. வீட்டுக்கு வந்தவாளை வா இங்கமாட்டா. அவாசேதி இப்படித்தான்டீ அம்மாமி! இப்படித்தான்.

செல்வம்—ஐயோ பாவம்! வடக்கத்தியா மகா யோக்கியா! நீதான் அவாளைச் சிலாக்கிச்சுக்கணும்.

அழகம்—மல்லுமல்லுனாட்டு ஆரம்பிச்சூயாளே தெற்கத்தியா, அவ்வளவு இளக்காரமா போச்சோனுக்கு.

குட்டியம்—தங்கருத்தத்தை தாங்கா பாப்பாளோ யெங்கியானும்.

தாயம் — வடக்கத்தியா ரொம்ப யோக்கிதைதான். அவாப் பொய்த்தந்தியும் அவாப்புனைசுருட்டும் அவாப்பித்தலாட்டமும், ஐயோ! ஐயோ! உங்களுக்கும் வாயிருக்கேயம்மா!

லக்ஷ்மி—ஏதுடீ! ஏது! ஓகோகோ! ஒண்ணு ரண்டு மூணு,நாலுபேரும் ஆரம்பிச்சூட்டாளே மல்லுக்கு. அடேயப்பா! வாயை மூடிக்கிண்டிருந்தா விடமாட்டாங்கபோலேயிருக்கே, போறும் ஊத்தைவாயை மூடுங்க, போறும். பேசக்கூடவாயிருக்கே அம்மா உங்களுக்கு. ஆயிரம் ரூபாயை வாங்கி பொட்டியிலே வைச்சுப் பூட்டிக்கிண்டு வெறுங்கையை முழம்போட்டுண்டு வந்தாளாம் இங்கே. இதுக்கு வாய் ஒண்ணுதான் குறைச்சல். ஒரு குழந்தைக்கு ஒரு நகைக்குவழியா? ஒரு காசிமாலையுண்டா? ஒரு காரையுண்டா? மகராஜி பாகீரதியிருந்தா. ஆப்டையான் கிட்டச் சொல்லி வாங்கிக்கிண்டு வரச்சொன்னா. அதிலேகூட என்னம்மா நீங்களெல்லாம் கண்வைச்சு காசிமாலை போச்சு! பொய்த்தந்தியாம்! புனைசுருட்டாம்! வார்த்தையைப்பார்த்

தியா. காமாக்ஷியம்மா சாதுவா இருக்கக்கண்டு குதிரை யேர்று எல்லாரும். அடீயம்மாடீ! செல்லம் (லவண்டீச் சிறுக்கி) வாயைமூடு!

அழகம்—ஊத்தைவாயாம்! உதைவாயிலே அப்படியே!

குட்டியம்—கடித்தாற்பாம்பும் கடிக்காவிட்டாற் பழுதையுமா!

தாயம்—மூட்டாரோ வையை இல்லியா கேளிப்போ.

சரஸ்—யாருண்ணு பாத்துண்டா இங்கேயிருக்கிறவா யெல்லாம்.

மதுராம்--பேமானி முண்டைகளையெல்லாம் அழைச்சு வசிகிண்டு சோறு போட்டாக்கா? அறைஞ்சா?

தாயம்—உன்னைத்தான் (தெய்வம்) முட்டாக்குபோட்டு மூலேயே உக்காத்தி வச்சிறுக்கே!

அழகம்—தண்ணித் தெளிச்சுத் தரையிலே விட்டிருக்கே!

செல்லம்—கட்டிவச்ச கழுதையை காளாட விட்டிருக்கே!

லக்ஷ்மி—என்னமிஞ்சரது வார்த்தை. யார் லவண்டிச் சிறுக்கி? நீ தான் லவண்டிச் சிறுக்கி, படவாமுண்டை, பேமானி, கழுதை, வண்ணான் வீட்டுக்கழுதை என்வாயிலே உதையண்டீபார்ப்போம். உதைச்சாத்தெரியாதா? உதவாக்கட்டை முண்டைகளா? பேமானியாம். பேமானி. யாருடீபேமானி. நீயா நானோ? கேடு கெட்டபேமானி! நீயா நானோடி! பதங்கெட்டபேமானி! நான்தான் முழுமுக்காடு போட்டிண்டிருக்கேன். நீங்களாம்! பாரு! பளபளன்னூ மின்னரது பொடவை! ஐய! கொழந்தைக்கு நகை போடலியே இன்னேன் வேறெநான் என்னசொன்னேன். அதுக்கு பேமானியாம், கழுதையாம் நாரமுண்டைகள். அவிசமுண்டைகள், கேடுகெட்ட முண்டைகள். ஓச்சா முண்டைகள். நான் அப்பவே காமாக்ஷியம்மாகிட்ட சொன்னேன். அந்த இடத்திலே வாண்டாம், வாண்டாம்னூட்டு, பணம், பணம், பணமாம், பணம், பணத்தைப்

பாக்கலே, பொணம். இவாளைப் பணத்தோடே பொதைக்கப்போறதோ. இவாளைக் காசோடே குழியிலே வைக்கப் போறதோ.

முன்னிவள்பேச்சை நிறுத்தியது வண்டியென்று சொன்னோம். இப்பொழுதும் ஏதோ ஒரு வண்டி வாசலில் வந்துநிற்க, புருஷர்களுக்குள் ஒருவிதமான இரைச்சலுண்டாகவே, பெண்டுகளும் அதைப்பார்க்க ஓடவே, மாது ஸ்ரீ லக்ஷ்மியம்மாளும் தனது பேச்சை நிறுத்திவிட்டு வாசலிற்குப்போனாள். முன்னிவள் பேச்சே முதல் அத்தியாயத்தை முடித்ததுபோல், இப்பொழுதும் இம் மூன்றாவது அத்தியாயத்தை முடிக்கட்டும். லக்ஷ்மி! ஆறுபேருடன் சண்டைசெய்து வெற்றிபெற்றதற்காக உமக்கு மிகவும் வந்தனமளிக்கிறோம்.

4-வது அத்தியாயம்.

கிரகப் பிரவேசம்.

ஒரு வண்டி வந்து வாசலில் நின்றதாகக் கூறினோம். அப்பொழுது மணி 1½-இருக்கும் நிசிவேளை அந்த வண்டியிலிருந்து மருமகப்பிள்ளை இராமசுவாமி கீழே குதித்தான் குதித்தும் திண்ணையிலிருந்தவர்களெல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். மருமகப்பிள்ளையைப் பார்த்ததும் அவர்கள் ஆனந்தத்திற்கு 'மோராசா வந்தேடா' கோபாலஸ்வாமி அய்யர் மார்புறத் தழுவினார். இராமு கோபாலையர் முக மலர்ச்சியுடன் பார்த்தார். சேஷையர் இத்தனை நாழி எங்கே போயிருந்தீர்? என்றார். கிழவர் ஓட்டோடியும் வந்து 'என் கண்மணியே! என் ராஜாவே! என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாயே? என் அப்பா! என்றார். பெண்டுகளெல்லாம் வாசற்படியில் நின்றுகொண்டு, ஒருத்திமேல் மற்றொருத்தி விழுந்துகொண்டு 'ஒத்திப்போயண்டி' 'ஒத்திரேன் பார்ப்போம்' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதற்குள் மருமகப்பிள்ளையைத் திண்ணையின்மேல் உட்காரவைத்து கோபாலஸ்வாமி அய்யர் 'எங்கே போயி

ருந்தாய்? இது வரைக்கும்' என்று கேட்டார். அதற்குப்
பையன் சொல்லத் தொடங்கினான்.—'அப்பா! நான் இன்
றையதினம்பட்ட கஷ்டம் ஒருநாளும் பட்டதில்லை. சாயங்
காலம் 5½-மணிக்கு ஐயாசாமியைப் பார்த்தேன் காணோம்.
நான் ஆற்றங்கரைக்குப் போகிறதா வேண்டாமா என்று
யோசித்துக்கொண்டு வாசலில் நின்றுகொண்டிருந்தேன்.
நீங்கள் அப்பொழுது உள்ளேயிருந்தீர்கள். நான் நின்று
கொண்டிருக்கையில் நாராயணஸ்வாமி அய்யர் 'ஆற்றங்
கரைக்கு வரவில்லையா'? என்றார் நான் ஒரு தோழ
னுக்காக நின்று கொண்டிருந்தேனாகையால் 'போவோம்
வாரும்' என்றேன். சிறிது நேரங்கழித்து, 'எனக்கு வேலை
யிருக்கிறது. நீ போ', என்றார். 'நான்மாத்திரம் என் போக
வேண்டும்' என்றேன், உன் தோழனெங்கே? என்றார். 'அவனை
க்காணோம்' என்றேன். 'சரிதான்' என்று சொல்லிவிட்டுப்
போய்விட்டார். அவர்போய் சற்று நேரத்திற்கெல்லாம்
யாரோ ஒரு கிழவன் வந்தான். 'சாமி! ஆற்றங்கரைக்குப்
போரவழி இதுதானே' என்றான் 'ஆம்' என்றேன்.
இந்த வீட்டில்தானே தஞ்சாவூரிலிருந்து டெபுடி கலெக்
டர் யாரோ வந்திருக்கிறாராமே? 'ஆம்' 'மாப்பிளை ஐயா
இருக்காராமே இந்தவீடுதானே','ஆம் நான்றான்','பழம் நழு
விப்பாலிலே விழுந்தாப்போலே ஆச்சு. உங்ககிட்ட ஒத்தர்
கடிதாசு கொடுக்கச்சொன்னார்' என்றான் 'கொடு பார்ப்
போம்', 'தனியாய் அழைத்துக்கொண்டுபோய் கொடுக்கச்
சொன்னார்.' என 'இங்கே ஒருவருமில்லையே,' என 'இருந்
தாலும் அங்கே வாங்களேன்' என்றான். நானும் அவன்
சொற்படியே ஆற்றங்கரை மார்க்கத்திலிருக்கிற ரயில்
ரோட்டுவரைக்கு மழைத்துக் கொண்டுபோனான். அங்கே
யிந்தக் கடிதத்தை யெடுத்துக் கொடுத்தான்!

இங்கே இராமசுவாமி கடிதத்தைத் தன் தகப்பனாரிட
த்தில் கொடுத்தான். அதில் அடியில் வருமாறு எழுதியிருந்
தது:—

மாப்ளே இராமசுவாமி அய்யருக்கு நான் ஊருமெழுத
மாட்டேன், தேதியுமெழுதமாட்டேன். நான் இன்னாரென்

பது முனக்குத்தெரியாது காலாவர்த்தியில் தெரியவரும். நீ அனியாயமாய் இராஜகோபாலையர் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டுவிட்டாய். அந்தப்பெண் மிக்க அழகென்று உன் மனத்தில் அபிப்பிராயம். வெளியழகுதான். அதை நானிப்பொழுது சொல்லவேண்டியதில்லை நீயே போகப் போக அறிந்து கொள்வாய். அந்தப் பெண்ணை யெனக்குத் தெரிந்தவிதம் ஒருவரும் அறியார். ஆயினும் கல்யாணஞ் செய்து கொண்டுவிட்டாய். உனக்கு உயிர் வேண்டுமானால் ஜாக்கிரதையாயிரு அவளிடம் நெருங்காதே. நானிவ்வளவு எழுதினதேமேல். நான் கையெழுத்துப் போடமாட்டேன்

இந்தக் கடிதத்தை கோபாலஸ்வாமி அய்யர் உரக்க வாசித்தார். அவருக்கு உண்டான எண்ணம் இவ்வளவு என்றுசொல்ல முடியாது பொய்த் தந்திகளைக் கண்டவுடனே அவருக்குச் சம்பந்திமேல் சந்தேக முண்டாயிற்று. காசிமாலையைப்பற்றிக் கூச்குரல் போட்டுவிட்டு மறுபடி யிவர் அதைப்பற்றிக் கவலைகொள்ளாதிருந்தது அவருக்கு அருவருப்பாகவே யிருந்தது. மாப்பிளை காணாது போனது இராஜகோபாலையர் மேலிருந்த சந்தேகத்தை யதிகப்படுத்தியது. வீராசாமி அய்யர் அடிபட்டு வீடு வந்தது சந்தேகத்தை நிச்சயப்படுத்தியது. இப்பொழுது இந்தக் கடிதம் இராஜகோபாலையர் அயோக்கியர் என்கிறவரையில் உறுதிப் படுத்தியது.

இஃதிப்படி நிற்க, இராஜகோபாலையருக்கு இது வரையிலில்லாதவெண்ணம் இப்பொழுது புதிதாயுண்டாயிற்று. அவரெண்ணினதாவது "நாம் ஒரு தந்தியுமடிக்காதபொழுது நாம் அடித்ததாகச் சொல்லி இரண்டு தந்திகளைக்கொண்டுவந்தார். நம்முடைய காசிமாலை களவுபோனபொழுது அதைப்பற்றிச் சிறிதும் கிலேசப்பட்டாரில்லை. அது தான் போகிறது, மாப்பிளைக்கு என்னமாயோ ஒரு தப்புக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறது. வீராசாமியையரை யாரோ அடித்ததற்கு நாம் தான் அடித்தோம் என்று பற்களைக்கடித்தார். எல்லாம் யோசித்துப் பார்த்தால், நம்பேரில் பழிபோடுவதற்காகவே யிவர் இவ்வாறு செய்கின்றனர்போலும்."

இவரிவ்வாறு என்னை மிட்டுக்கொண்டிருக்கையில், கோபாலஸ்வாமி அய்யர் "இந்தக்கடிதத்தி னுண்மையென்ன? சரியாய்ச் சொல்லாவிட்டால் உமது பேரில் கோர்ட்டில் தாவா செய்யப்படும்" என்றார்.

இராஜகோபாலைய ரிதுவரையு மெண்ணினதெல்லாம் உண்மை போற்பட்டது. 'நம்பேரில் கோர்ட்டில் தாவா செய்யவல்லவோ இவரிவ்வளவும் செய்தார் என நினைத்துக் கொண்டு, 'இது எழுதினவர் இன்னாரென்று நீர் சொல்லாவிட்டால் உமக்குமித்த கதியென்றறிக' என்றார். 'அது எழுதினவரைப்பற்றி யிப்பொழுதென்ன' என்றார் கோபாலஸ்வாமி அய்யர். 'அந்தக்கடிதம் என் பெண் பெயரைக் கெடுப்பதற்காக உங்களால் ஏற்படுத்தப்பட்டது' என்றார் இராஜகோபாலையர்.

இரண்டுபேருக்கும் சண்டைவலுக்கும் போலிருந்ததைக்கண்டு அங்கிருந்தவர்கள் இரண்டுபேரையுஞ் சமாதானஞ்செய்து மருமகப்பிள்ளை மேல் நடந்தவற்றைச் சொல்லச் சொன்னார்கள். உபயகக்ஷிக்காரரும் தற்காலம் சமாதான மடைந்து இராமசுவாமி சொல்வதைக் கேட்கத் தயாராயிருந்தனர் அவனுஞ் சொல்லத்தொடங்கினான்:—

அப்பா! நீ என் கோபித்துக்கொள்ளுகிறாய்? நானப் புறம் பட்டபாடு அதிகம். 'எனக்குக் கடிதங்கொடுத்த ஆளை யார் இதை உன்னிடத்தில் கொடுத்தார்?' என்றேன் 'நான் சொல்லமாட்டேன்' என்றான். 'நீ சொன்னால் உனக்கு மிகுந்த வெகுமதிக ளகப்படும்' 'தாங்க கொடுக்கவேனுட்டு சொல்ரதே போறும் நான்மாத்திரம் பேர் சொல்லமாட்டேன்.' 'குறிப்பாயாகிலுஞ்சொல். 'நான் அதைப்பற்றி யொன்றுஞ் சொல்லவேமாட்டேன்'. 'ஒன்றுஞ்சொல்லாவிட்டால் இந்தக்கடிதத்தை மாத்திரம் என்னிடத்திலேன் கொண்டுவந்துகொடுத்தாய்?' 'அவர் கொடுக்கச்சொன்னார் கொடுத்தேன்'. 'அவர் என்றால் யார்?' 'யாரோ' 'உன்னுடையதரித்திரம் பறந்துபோகும்படிச் செய்வேன், இந்தக்கடிதம் எழுதினவரைச் சொன்னால்.' 'தாங்க என்னகொடுத்தபோதிலும் சொல்லவேமாட்டேன்', 'அப்படியென்

னால் நீ போகலாம்'. 'இல்லை இன்னுமொரு சமாசாரமிருக்குங்க நீங்க என்னோடே ரண்டுமைலில்வந்தால் நான் அவரிருக்கிற இடங்காட்டுகிறேன் என்றான், எனக்கு இந்தக்கடிதம் எழுதினவரைக்கண்டு பிடிக்கவேண்டுமென்ற ஆவலினால் தங்களிடத்திலும் சொல்லிக்கொள்ளவில்லை. ஒருவரிடத்திலுஞ் சொல்லிக்கொள்ளவில்லை. சொல்லிக்கொள்ளாமல் போகலாமா என்பதையும் யோசிக்கவில்லை. இந்த ஆளுடன் நாம் தனியாய்ப் போகலாமாவென்பதையும் யோசிக்கவில்லை. நான்தானே ஔபாசனம் முதலியவற்றைச் செய்யவேண்டுமே யென்பதையும் யோசிக்கவில்லை. அந்த ஆளைக்கண்டு பிடித்தாற் போதுமென்ற வெண்ணத்துடன், அவாள் பின்னாலேயே போனேன். அவனும் நானும் ஒன்றும் பேசாமல் ஆற்றங்கரை கடந்தோம். அப்புறம் அந்த ஆள் என் குடும்ப போக க்ஷேமங்களைப்பற்றிக் கேட்கவாரம்பித்தான். நாம் அந்த ஆளினிடத்தில் என்னத்திற்காகச் சொல்லவேண்டு மென்பதைப்பற்றி யோசிக்காமல், எல்லாவற்றையுஞ்சொன்னேன். அவனுங் கவனமாய்க்கேட்டான். பிறகு ஒன்றும்பேசாமல், மாமரங்களடர்ந்த தோப்பினுள்ளும், வயல்களிலுள்ள குறுக்கு வழியிலும், 4, 5, குடிசைகளி னடுவிலும், அழைத்துக்கொண்டேபோய்த் தனியான வோரிடத்திற்சென்று நின்றுகொண்டு எதையோ யோசிப்பவன் போலிருந்தான். நானுமவனை 'என்னப்பா யோசிக்கிறாய்?' என்றேன்: அவன் மறுமொழிகூறவில்லை. எனக்குப் பயமாகவேயிருந்தது. நாங்களிருந்தஇடம் புளியமரத்துநிழல். சுற்றுப்பக்கங்களிலு மொருவரையுங்காணோம். நானோ சிறுவன்; அவனோ ஒரு பெரிய ஆள். எனக்குப் பயமாகவே யிருந்தது. அவனை 'ஏன் யோசிக்கிறாய்'? என்று 5. 6, தரம் கேட்டபிறகு, 'ஒன்றுமில்லை அவங்க இங்கேயிருக்கிறதாகச் சொன்னாங்க. அவங்களை யெங்கேயோ காணோமே,' என்றான். பிறகு 'நீங்க இங்கெயே யிருங்க, நான்போய் அழைத்துவாரேன்' என்றுசொல்லி நான்மறுமொழி சொல்லுமுன் போய்விட்டான். நானும் அவன் பின்னால் போயிருக்கலாமே. இல்லை. பேசாமல்—

என்று இவன் சொல்லிக்கொண்டிருக்கையில் தடதட வென்ற சப்தங்கேட்டது. ஓருருவம் ஓடிவந்தது. வந்து 'எங்கேயிருந்தடா வந்தாய்?' என்றது. அந்த உருவத்தைப் பார்த்து ஒருவராலும் இன்னாரென்று சொல்லமுடியவில்லை. ஆனால் சப்தத்தைக்கேட்டு அத்தான் என்று எல்லாரும் அறிந்துகொண்டார்கள். சோமனமுக்கும், உடம்புகாயமும், உடம்பு அழுக்கும், அவ்வளவாயிருந்தது. எல்லாரும் 'என்ன அத்தான்! என்னகாயம்?' என்றவுடன் அத்தான் 'என் கதை யப்புறம் ஆகட்டும். பையன் எங்கேபோயிருந்தான்? எப்பொழுதுவந்தான்?' என்றார். 'அதுதான் சொல்லிக் கொண்டிருக்கிறானே பையன்' என்றார்கள் எல்லாரும். 'ஆனால் சொல்லடா அப்பா' என்றார் அத்தான். பையனும் சொல்லத்தொடங்கினான்:—

'நான் அங்கேயே நன்றாய் இருட்டிபட்டும் நின்று கொண்டிருந்தேன்' 'எங்கே?' என்றார் அத்தான்.

'முன்னுக்குத்தெரியாமல் பின்னுந்தெரியாமல் நடுவில் வந்து எங்கேயென்றால் என்ன சொல்கிறது' என்றார்கள். 'இல்லை இல்லை நானப்புறங் கேட்கிறேன். நீங்கள் கேளுங்க ளிப்பொழுது' என்றார் அத்தான். பையனு மாரம்பித்தான்.

"நன்றாய் இருட்டிபட்டும் அங்கே உட்கார்ந்திருந்தேன். ஒருவரையுங் காணோம். கிழவனையுங் காணோம். கடிதம் எழுதினவனையுங் காணோம். ஒருகாகம் புளிய மரத்தின்மேல்வந்து உட்கார்ந்துகொண்டு சத்திக்கொண் டிருந்தது. இரண்டு குருவிகள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்தன. இதுதவிர உயிருள்ள பிராணிகள் ஒன்றையும் காணோம். எழுந்தேன். எங்கேயும் ஒரேயிருட்டு. திக்குகளை தெரியவில்லை. புறப்பட்ட சந்திரனையும் மேகம் வந்து மூடிக் கொண்டது எங்கேயாவது போவோமென்று அடிமேலடி யெடுத்துவைத்துப் புறப்பட்டேன். மரங்களில் மோதிக் கொள்ளுகிற சமயத்தில் கையால் தடவி அவற்றை நீக்கியும், முள்ளின்மேல் கால்படும்பொழுது காலை விலக்கியும், மிகவும் ஜாக்கிரதையாய்ப் போய்க்கொண்டிருந்தேன் அப்

படியிருந்தும் காலிலும் கையிலும் முள் தைத்துவிட்டது. இந்தக் கண்ணைப்பார் சிவந்திருக்கிறது. ஓர் மாமரத்தில் உலர்ந்துபோய் நீண்டிருந்த குச்சி நன்றாய்க் குத்திவிட்டது. இவ்வளவு கஷ்டங்களையும் நான் ஒருநாளும் அனுபவித்த தேயில்லை.' என்று சொல்லிக்கொண்டே, இவனுமழுதான். இவன் தகப்பனாரும் அழுதார். இதைக்கண்ட எல்லோர் கண்களிலும் ஜலம் தளும்பிற்று. இவ்வாறு ஐந்து நிமிஷம் இருந்தவுடனே, பிள்ளையகத்து உபாத்தியாய ரெழுந்து ஆனகாரியம் ஆய்விட்டது. இனிமேல் விசனப்படுவதில் காரியமில்லை. மேல் நடப்பவற்றைப்பற்றிப் பேசவேண்டும். மணியோ ஒன்றரையும் ஆய்விட்டது. இனிமேல் ஔபாசனம் ஆகவேண்டும், அதற்குமேல் போஜனமுதலியவற்றை முடித்துக்கொண்டு அம்மான் ஊர்கோலமாகி, பெரிய ஊர் கோலமாகி அதற்குமேல் ஊஞ்சல்நடந்து, அப்புறம் சேஷ ஹோமம் நடக்கவேண்டும். ஆகையால் காரியத்திற்கு ஆரம்பிக்கவேண்டும் என்றுசொல்லி உபாத்தியாயர் வாய்மூடு முன்னே, கோபாலஸ்வாமி அய்யர் 'வேண்டாம் எனக்கு ஒன்றும் வேண்டாம். போதும் இதுவரைக்கும் நடந்தது போதும் கடிதத்தின் உண்மையை யாராயவேண்டும். பொய்த்தந்தி யுண்மையை யாராயவேண்டும். நானதுவரைக்கு மொன்றுஞ் செய்யமாட்டேன். எனக்கு சந்தேகமாகவே யிருக்கிறது. அத்தான் வந்து பார்த்தாரே பெண்ணை!' என்றார்.

அ—எனக்கென்னடாதெரியும், பெண்ணைப் பார்த்தேன். பெண் நன்றாயிருக்கிறதா யில்லையா பார். இந்த சூதெல்லாம் எனக்குத் தெரியுமா என்ன? அத்தான் ஒருவர் அகப்பட்டுவிட்டாரென் றெண்ணமோ! என் கிழவர் கூடத்தான் வந்தார்.

கி—என்னை யிழுக்காதேடா. நான் கிடக்கிறேன் தெய்வமேயென்று எனக்குக் கண்ணு மண்ணு என்ன தெரிகிறது. நான் போகிறேன் உள்ளே. அப்பா! குழந்தை! இராமு! அந்த காயத்துக்கு என்னடா போட்டாய், ஜலத்தைவிட்டு நன்றா யலம்பிவிட்டு நிலக்கரியை விளக்கெண்ணெயில் குழை

க்குப்போடு. இங்கே வாடா! அப்பா! இங்கேவா! 'ஆழந்தெரியாமல் காலிட்டுக்கொண்டேனே தெய்வமே தெய்வமே!' என்றுவிட்டு இரைக்கிறது என்று சொல்லி கிழவர் வாய் மூடி முன்னமே இராஜகோபாலையருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் பொறுமையும் மீறிவிட்டது.

இராஜ—ஓய்! கிழவரே! நீர் கிழவராய் இருந்தும் உம்முடைய வார்த்தை நன்றாயிருக்கவில்லை. என்ன ஆழந்தெரியாமல் காணும் காலிட்டுக்கொண்டுவிட்டீர். அத்தான் என்னமோ சூது செய்துவிட்டேன் என்கிறார். சப்பந்தி சந்தேகமா யிருக்கிறது என்கிறார். இதென்ன! திருகல்தாள்விடா? இல்லை திருடர்களுடையதா? என்னவென்று நினைத்து விட்டீர்?

கோ—எல்லாம் சரிதான் காணும். இந்தக் கடிதத்திற்கென்ன சொல்லுகிறீர்?

இராஜ—நீங்களே தப்புந்தவறுமாய் எழுதிவைத்துக் கொண்டிருக்கிற கடிதங்களுக்கு இங்கே யாரை என்ன சொல்லச் சொல்லுகிறீர்?

கோ—ஓய்! இன்னுமொருதரம் சொல்லும் இந்தக் கடிதம் எழுதினது யார்.

இராஜ—நீங்கள்.

கோ—எல்லோரும் சாக்ஷி! என்னை மோசக்காரனாக்குகிறா ரிவர்.

இராஜ—எல்லோரும் சாக்ஷி! என்னை சூதுக்காரனென்றும் என்பேரில் சந்தேகமிருக்கிறதென்றும் சொல்லுகிறா ரிவர்.

அத்தான்—கோபாலா! பேசாமலிரேன். நடுக் கலியாணத்தில் இதெல்லாம் நன்றாயில்லை. எழுந்து காரியத்தைப் பாரேன்.

கோ—நான் ஒன்றையும் பார்க்கவே மாட்டேன்.

இராஜ—பார்க்காவிட்டால் இங்கே யாருக்கு நஷ்டம்.

சேஷையர்—அப்பா! பேசாமலிரேன். கொடுத்தாயிற்று

பெண்ணை. கலியாணம் முழுவதும் முடியவேண்டுமோ இல்லையோ?

உபா—இராமசுவாமீ! எழுந்திரு. போய் ஸ்நானம் பண்ணு. இல்லாவிட்டால் மங்கள ஸ்நானஞ்செய் போதும். தலையிலே தீர்த்தத்தைப் புரோக்ஷணஞ் செய்துகொள், எழுந்திரு. இப்படியிருக்காதே. வா போவோம் உள்ளே. அடிபெண்களா! முற்றத்திலே கோலம் போடுங்கள். பட்டுப் பாயை மடித்துப் போடுங்கள். அடியம்மா! கொஞ்சம் நெருப்புக் கொண்டா வாடி. எல்லோரு முள்ளே போங்கடி! இங்கே யென்னடீயிங்கே! யாரடி அவிழ்த்து நின்று ஆடுகிறார்கள்? (எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள், உபய சம்பந்திகள் தவிர) வாடா அப்பாவா! நாழியாயிற்று, கிழக்குக்கூட வெளுத்துப்போயிற்று.

என்று சொல்லிக்கொண்டு இராமசுவாமியின் கையைப் பிடித்திழுத்தார்.

இராம—ஓய்! ஓய்! கையைவிடுங்காணும். காயம். காயம்.

உபா—பின்னே வாயேன் நீயே.

என்றுசொல்ல, இரண்டுபேரும் பெண்டுகள் கூட்டத்தை விலக்கிக்கொண்டு, வாத்தியார் முன்னும் பையன் பின்னுமாகப்போய் முற்றத்தில் உட்கார்ந்தான். ஒருத்தி பெருக்கினாள். மற்றொருத்தி பட்டுப்பாய் கொண்டுவந்து போட்டாள். இராமசுவாமி உட்கார்ந்தான். இன்னுமொருத்தி மணையொன்று கொண்டுவந்தாள். உபாத்தியாயர் உட்கார்ந்தார். ஒருத்தி நெருப்புக்கொண்டு வந்தாள். வாத்தியார் முன்னிருந்த நெருப்புடன் போட்டு மூட்டினார்.

உபா—அவள் எங்கே மீனாக்ஷி!

சொன்னவுடனே மீனாக்ஷியைச்சுற்றி நாலைந்து பெண்கள் நின்றுகொண்டு என்னமோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

உபா—அடியம்மா! நாழியாயிற்றடி! வாடி! அம்மா!

சாவித்திரியாகிய தோழி முன்னேவந்து நின்றுகொண்டு, மாப்பிள்ளை கூப்டாமே பெண் வந்தூடுமோ?'

உபா—இப்பொழுது அதெல்லாம் வேண்டாமடீ!

சாவி--வேண்டாவிட்டாப் போங்க, பெண் வரமாட்டா.

உபா—அடீ அப்பா! நீபோய் அந்தக் குட்டிகள் சொல்கிறதை யெல்லாம் சொல்லடா! நாழியாகிறது!

இராம—எனக்குத் தூக்கம் வருகிறது காணும். வந்தால் வரட்டும். வராவிட்டாற் போகட்டும். நான்போய் படுத்துக்கொள்ளப் போய்விடுகிறேன்.

உபா—அடீ! மாப்ளே கோபித்துக்கொண்டு போய் விடுவன்.

சாவி—மாப்ளே கோவிச்சண்டா பொண்ணும் கோவிச்சுக்கொள்றது.

உபா—நான் சொல்கிறேன். இதுகள் பண்ணுகிறதைப் பார்த்தாயா.

என்று சொல்லிக்கொண்டே எழுந்து பரபரவென்று போய் பெண்களையெல்லாம் விலக்கி, நடுவிலிருந்த மீனுக்ஷியின் கையைப்பிடித்துக் கொண்டுவந்து உட்காரவைத்து ஔபாசனத்திற்கு ஆரம்பித்துவிட்டார். ஔபாசனம் முடிந்தவுடன் இலை போட்டுவிட்டு வாத்தியார வாசலிலுள்ளவர்களைக் கூப்பிடச் சென்றார் அப்பொழுது அவர்கள் எல்லோரும் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். 'எல்லாம் சாப்பிட்டுவிட்டுப் பார்த்துக்கொள்வோம்' என்று வாத்தியார் சொன்னவுடன் வாத்தியார் பேச்சைக்கேட்டோ அல்லது வயற்றுப் பசியினலோ அல்லது மேலே நடக்கவேண்டியவற்றை அப்புறங் கவனித்துக்கொள்வோம் என்ற எண்ணத்தினலோ அல்லது சம்பந்தியாய்ப் போன பிறகு கோபமென்னத்திற்கென்றோ அல்லது இவருக்காக பயந்து நாம் சாப்பிடாமலிருக்கிறதாவென்றோ இரண்டு முக்கியமானவர்களும் எழுந்து உள்ளே சென்றார்கள். இவர்களிரண்டுபேரும் போகவே மிகுதியுள்ளவர்களும் உள்ளே சென்றனர். போஜனம் முடிந்தது. உபய சம்பந்திகளும் ஒருவரோடொருவர் பேசவில்லை. தாம்பூல சர்வணம் முதலியவையாயிற்று. அப்புறம் ஊர்கோலம். இடைவிடாமல்

ஒன்று அணைந்தால் மற்றொன்றாக இரண்டு பக்கங்களிலும்
மத்தாப்புகளும், வெள்ளைபோட்ட சமயத்தில் வேறே விதம்
போடாமல் வெள்ளையும், செகப்பும் செகப்பும் ஆக இப்
படியே ஜோடிஜோடியாய் அந்தந்த வர்ண மத்தாப்புக
ளேற்றப்பட 4, ௫, ஜோடி மத்தாப்புகள் புடைசூழ, விளக்
கெண்ணெய் விட்டால் கீழேசிந்துமென்றும், அடிக்கடி
விட வேண்டுமென்றும் மண்ணெண்ணெயினால் ஏற்பட்ட
வரிசை வரிசையாயுள்ள அனேக விளக்குகளும், தீவர்த்தி
களும், மத்தாப்பு மொன்றுசேர்ந்து அதிக பிரகாசத்தைக்
கொடுத்தபடியினாலே, அதிக சத்தத்தைக் கேட்டால் காது
செவிடாவதுபோல, அதிக வெளிச்சத்தைக் கண்டால்
கண் குருடாகுமென்கிற வுண்மையை யறிந்து, கண்
அவ்விதந் தெரியாமற்போனால், வெளிச்சம் வேண்டுமே
என்று தலைக்கொரு மெழுகுவர்த்தி விளக்குக்கொண்டு
புறப்பட்ட கல்யாணக்காரர்களின் வெளிச்சமும் அடிக்
கடி அநேக விதமான பாணங்களும் எப்பொழுது மாகாச
பாணமும் விட்டுக்கொண்டிருப்பதினாலுண்டான வெளிச்
சமும் மங்கையர்கள் காதிலணிந்திருக்கும் வைர நகை
களின் வெளிச்சமும், மத்தாப்பு, தீவர்த்தி, கைவிளக்கு,
பாணங்கள், நகைகள் ஆகிய வெளிச்ச கூட்டங்களும் போ
துமோ என்னவோ என்றெண்ணி சுவாமி ஏற்படுத்தினாற்
போன்ற நிலாவெளிச்சமும், ஒன்றற்கொன்று தோல்வி
யடையாமல் பிரகாசித்துக்கொண்டிருக்க, சம்பந்திகள்
ராஜகோபாலையரும் கோபாலஸ்வாமியையரும் உள்ளுக்
குள் மனஸ்தாபப்பட்டாலும் வெளிக்குக் காட்டிக்கொள்
ளக் கூடாதென்ற எண்ணத்துடன் சமீபத்தில் அடிமேலடி
யெடுத்து வைத்து நடந்துகொண்டிருக்கவும், மற்றை
யிவர்களுக்கு வேண்டியவர்கள் உல்லாசமாய்க் கைகோத்
துக்கொண்டும், ஒருவர் மற்றொருவருக்குத் தெரியாமல்
தலையில் புஷ்பஞ் சூட்டிக்கொண்டும் முதுகில் சந்தனம்
பூசியும், தாங்களே பூசிக்கொண்டும், வெற்றிலை போட்டுக்
கொண்டும், போட்டு வெற்றிலையி னெச்சிலை யுமிழ்ந்து
கொண்டும், சிலர் கைநிறைய வெற்றிலையும் பாக்கும் அள்ளி

மடியில் வைத்துக்கொண்டு வேலையகப்படாது திண்டாடின ஒருவனுக்கு திடீரென 400-ரூபாய்க்கு ஒரு வேலையகப்பட்டால் எவ்வளவு சந்தோஷமடைவனோ அவ்வளவு சந்தோஷமடைந்துகொண்டும், வெற்றிலைக்கூடையும் பாக்குக்கூடையும் புஷ்பக்குடலையும், சந்தனச்சட்டி, பனிநீர்ச்சொம்பு வாழைப்பழக்குலைகள், சர்க்கரைக்கூடை, மாம்பழக்கூடை இவைகளை அநேகர் தூக்கிக்கொண்டுவர இவ்வளவும் பொருத்தமாய் அவரவர்கள் தூக்கிக்கொண்டிருக்க, இவைகளைச் சில்லரையாய், தங்கள் தங்கள் கையில் வைத்துக்கொண்டு, ஆராத்தி யெடுப்பவர்களுக்கெல்லாம் கொடுப்பவரும், கூலியற்ற இவ்வேலைக்குப் போட்டியாக 'உனக்குத் தெரியாதென்று நான் முன்னாலேயே சொல்லவில்லையா? நீ பேசாதிருடா! என்று மிரட்டிவிட்டுத் தாங்களே வாங்கிக்கொள்வோரும் 'அடேடே! அந்த அசத்துக்குக் கொடுத்தாயாடா? அட! என்னடா நீ!' என்போரும், சதா பனிநீர் தெளிப்போரும், பேசாதிருந்தால் சிறிது தெளித்துவிட்டு, போதும் போதும் என்றால் விடாமல் தெளிப்பவரும். இவர்களுக்கு நேர்நேராகப் பெண்பாலர்பக்கத்திலும் மேற்படி வேலைக்கு ஏற்பட்டிருப்பவர்களும், ஆனால் அவர்களுள் போட்டிபோடுவதுபோக 'நான்றான் ஆப்பட்டனேயம்மா நோக்கு தேவல்டி நீ' என்போரும், 'இதேதாடியம்மா, இது இந்த ஓலை புதிசாயிருக்கு' 'நேக்கு இந்த ஓலை ஒண்ணுதான் குறைச்சல், என் ஒடப்பொறந்தான் ஆம்படையாளது' என்போரும், இன்னும் விதவிதமான பாஷைகளின் வேடிக்கை பார்ப்பதற்காகவே வந்திருப்போரும் ஆகிய இவர்கள் முன்னும் பின்னும் வந்துகொண்டிருக்க, 'அப்பராமு! காயமெல்லாம் எப்படிடா அப்பா இருக்கிறது? கொஞ்சமாகிலும் தாவலையா? அப்பா! தூக்கம் வந்தால் தூங்கு; அப்பா! தூங்கு' எனக்கிழவரும், 'தூக்கம் வருகிறதோயடி அம்மா' என்று சொல்லிக்கொண்டே பன்னீர் தெளிக்கும் சேஷையரும், 'என்னகாணும் குளிர்வேளையில் பன்னீர் தெளிக்கிறீர்? குழந்தைக்குச் சலதோஷம் பிடித்தால்' எனக்கிழவரும், 'உம்மு

டைய குழந்தையைப்பற்றி யெனக்குங் கொஞ்சம் அக்கறை யுண்டு காணும்' என சேஷையரும், 'சேஷப்பா! இன்னும் இராமஸ்வாமியும் நாராயணஸ்வாமி அய்யரும் வரவில்லையோ' என இராஜகோபாலையரும், 'இன்னுங் காணவில்லை, அப்பா!' எனச்சேஷையரும், 'அப்பா ராமு! பசிக்கிறதாடா? பசித்தாற்சொல்! ஒரு வாழைப்பழம் வாங்கித்தாரேன் சாப்பிடடா! வேணுமாடா, அப்பா! ராமு வேணுமென்று சொல்லடா' எனக் கிழவரும், ஆகிய இவர்களு மின்னும் பலரும், இன்னன பல தங்கள் காதுபட பேசிக்கொண்டிருக்க, திறந்ததும், எதிரெதிராய் உட்கார இடமுள்ளதும் நாலு சக்கரமுள்ளதும். இரண்டு வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்டதும், இப்பொழுது தான் செய்ததோ என்னும்படிப் புதிதாயுள்ளதுமானதோர் குதிரை வண்டியில் தம்பதிகளிருவரும்; தஞ்சாவூர் பாண்டுவாத்தியம் எல்லாருக்கு முன்னே முழங்கிக்கொண்டிருக்க, நாட்டு வாத்தியம் இவர்கள் சமீபத்திலொலிக்க, மங்கையர்கள் ஹாரத்தியெடுக்க, திருப்பாதிரிப்புலியூர் அக்ராஹார முழுவதுஞ்சுற்றி, தங்கள் வீட்டிற்குவந்து மாலைமாற்றி, ஊசலாடி, உள்ளே புகுந்து, சேஷஹோமஞ் செய்து, தாம்பூல சரணம் முதலியவை யெல்லாம் ஆனபிறகு யாதொன்று மில்லாமல் உட்கார்ந்திருந்தார்கள். உட்கார்ந்து சற்றுநேரத்திற்கெல்லாம் நாராயணஸ்வாமி அய்யரும், இராமஸ்வாமி அய்யரும் அழுதுகொண்டே வந்தார்கள். இராஜகோபாலையர் அவர்களைப்பார்த்து 'வாருங்கள், ஏனித்தனை நாழி, ஏனழுகிறீர்கள்?' என்று இரேழியிலவர்களைக் கண்டவுடனேயே கேட்க வாரம்பித்தார். 'மாப்பிள்ளையை ஒரு கிழவன்—' என்று சொல்லிக்கொண்டேவந்த இராமஸ்வாமி அய்யர் மாப்பிள்ளையைப்பார்த்து 'இதோ இருக்கிறாரே மாப்பிள்ளை. எங்கே போயிருந்தார்? எப்பொழுது வந்தார்? நீங்களிருப்பதைப் பார்த்தால் ஊர்கோலமாய் விட்டாற்போலிருக்கிறதே ஆசிர்வாதத்திற்காகவா காத்துக்கொண்டிருக்கிறீர்கள்? ஸ்வாமிக்கு இன்றையதினம் அர்ச்சனை செய்யவேண்டும். நான் மாப்பிள்ளை யகப்பட்டால் செய்வதாக வேண்டிக்கொண்டேன்' என்றார்.

இராஜ—இராமஸ்வாமி! எல்லாஞ் சரிதான், உடம்பு என்னமோ போலிருக்கிறதே! காது கடுக்கனெங்கே? இடுப்பு அரைஞாண் எங்கே?

இராம—எல்லாமப்புறஞ் சொல்லுகிறேன். நடக்கவேண்டிய காரியத்தைப் பாருங்கள்.

இராஜ—இப்பொழுதே ஆசீர்வாதத்திற்காக ஊரழைக்கப் போயிருக்கின்றார்கள். அதற்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறோம்.

இராம—நானப்புறஞ்சொல்லுகிறேன். மருமகப்பிள்ளை எங்கேயிருந்து வந்தார்? அதைச் சொல்லுங்கள்

என்றவுடனே இராஜகோபாலையர் இதை வாசிப்போருக்குத் தெரிந்தவரைக்குஞ் சொல்லிப் பிறகு 'இதுவரைக்குந்தானவர் சொன்னார்' என்று முடித்தார்.

பிறகு பெரிய இராமஸ்வாமி அய்யர் மருமகப்பிள்ளையை நோக்கி 'அப்புறம் என்னமாய் இங்கே வந்தீர்?' என்றார். அதற்கு மருமகப்பிள்ளை சொல்ல வாரம்பித்தார்.

ஒன்றுமில்லை. இந்தவிதம் கஷ்டப்பட்டுக் கொண்டு போகையில் ஒரு வெளிச்சத்தைக் கண்டேன். வெளிச்சம் இருக்குமிடமெல்லாம் மனிதரிருப்பது என நிச்சயப்படுத்திக்கொண்டு போனேன். அவ்வெளிச்சத்தினருகில் போனபொழுது நடுவில் ஒரு வேலியிருந்தது. அதைத் தாண்டிக் குதித்தேன். அதில் எவ்வளவு முள்தைத்தது! இன்றையதினம் தைத்தமுள்ளுக்கு அளவேயில்லை. பிறகு அந்த வெளிச்சம் ஒரு குடிசையினது எனத்தெரிந்தது. அந்தக் குடிசைக்கருகிற்போய் 'இது என்னவூர்?' என்றேன். 'பூலோகநாதர் கோயில்' என்றார்கள். 'சமீபத்தில் ரயில்வே ஸ்டேஷனிருக்குமோ?' என்றேன். 'நெல்லிக்குப்பம் கூப்பிடுதூரம்' என்றார்கள் 'யாராவது வழிகாட்டினால் ஏதாவது தருகிறேன்' என்றேன். என்னைக்கண்டு பரிதாபப்பட்டு, ஒரு ஆள் எழுந்துவந்து, 'வாங்கசாமி என் பின்னாலே' என்றான். நானுமவனும் நடந்துபோனோம். நெல்லிக்குப்பம் ஸ்டேஷனைச்சேர்ந்து மணி பார்த்தேன்,

$8\frac{1}{2}$-ஆயிற்று என்னிடத்தில் ஒரு காசுமில்லை, கையில் அப்பா கட்டாயம் பண்ணிப்போட்டுக் கொள்ளச்சொல்லிய மோதிரம் மாத்திரம் இருந்தது. அதைக் கொண்டுபோய் ஸ்டேஷன்மாஸ்டரிடம் காண்பித்தேன். 'சரிதான் இதற்கென்ன?' என்றார். 'இதை வைத்துக்கொண்டு இரண்டு ரூபாய வேண்டுமென்றேன். உனக்கு இந்த மோதிரமேது?' என்றார். நானிதுவரைக்கும் ஒருவரிடத்திலும்போய் கடன் கேட்டதில்லை, எனக்குப் பேசுவதற்கே அவமானமாயிருந்தது. 'என்னுடையது' என்றேன். 'உனக்கேது?' என்று ஏதோ என்பேரில் சந்தேகப்பட்டவர்போல் மொழிந்தார். 'ஐயா என்னை வருத்தப்படுத்தவேண்டாம். நான் சவிஸ்தாரமாய் தங்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன். இப்பொழுது ஒரு ரூபாயாகிலும் கொடுங்கள்' என்றேன். என்மேல் மிகவும் பரிதாபப்பட்டு $1\frac{1}{2}$-ரூபாய் கொடுத்து தன்னகத்துக்குப்போய் எனக்கு சாதமும் போட்டார். நான் மானமும் பார்க்கவில்லை, லஜ்ஜையும் பார்க்கவில்லை. பூர்ணமாய்த் தின்றேன். ஆளுக்கு $\frac{1}{2}$-ரூபாய் கொடுத்தேன். 1-அணாவுக்கு டிக்கெட்வாங்கி இராத்திரி லோகலில் வந்து சேர்ந்தேன் என்று கண்களில் ஜலந்தளும்பச் சொல்லி முடித்தான்

இதைக் கேட்டிருந்த எல்லாரும் வருத்தப்பட்டார்கள். இப்படியார் செய்திருப்பார் என்றார் சிலர். இராமஸ்வாமி அய்யர் மருமகப்பிள்ளையை நோக்கி 'நீங்கள் பார்த்த கிழவன் எப்படியிருப்பான்?' என்றார். அதற்கு இராமஸ்வாமி 'இடுப்பில் கௌபீனமும் தலையில் முண்டாசும் கையில் தடியும் கன்னங்கரேலென்று நிறமும்—' என்று சொல்லிக் கொண்டேயிருக்கையில் பெரிய இராமஸ்வாமி அய்யர் 'போதும், போதும்; நாராயணஸ்வாமி அய்யரே! பார்த்தீரா? நம்மிடத்தில்வந்த கிழவன்தான் போலிருக்கிறதென 'நாராயணஸ்வாமி அய்யர் 'அந்தக்கிழவன்றான் காணும், அதற்குக்கூட சந்தேகமுண்டா? அவனை யெப்படியாகிலும் கண்டுபிடிக்கவேண்டும்' என்றார். சபையிலுள்ளவர்களெல்லோரும் 'அந்தக்கிழவ னும்மிடத்தில்

எப்பொழுது வந்தான்? என்ன, பெரிய இராமஸ்வாமி அய்யர் நானும் நாராயணஸ்வாமி அய்யரும் யோசித்தவரைக்கும் இதைவாசிப்போர்க்குத் தெரிந்தபடி சொல்லி, பிறகு சொல்லவாரம்பித்தார். 'இவ்விதம் நானும் நாராயணஸ்வாமி அய்யரும் பேசிக்கொண்டிருக்கும்போது, ஏதோ சத்தங் கேட்கிறதென்று சொல்லி நாராயணஸ்வாமி அய்யர் எழுந்து போனார். நான்மாத்திரம் யோசித்துக்கொண்டிருக்கையில், சற்றுநேரத்திற்கெல்லாம் அந்தக்கிழவன் என்னிடத்திற்குவந்தான் எனக்குப் பயம் பிடித்துவிட்டது. ஆனபோதிலும் அவனை 'என்னப்பேன்! இப்பொழுது எங்கே வந்தாய்? பையன் எங்கே? என்று கையைப் பிடித்துக் கொண்டேன். அவன் கிழவன்போல் பார்வையிற்றோன்றினபோதிலும் மிக்க பலசாலியாயிருந்தான். ஒரேதிமிறாய்த் தன்கைகளைத் திமிறிக்கொண்டதுமல்லாமல் ஏதோ ஒரு சீசாவை என் மூக்கினருகிற்பிடித்தான். அப்புறம் எனக்கு ஒன்றுந்தெரியாது. நாராயணஸ்வாமி அய்யாவந்து எழுப்பினார். சிறிது தீர்த்தம் வேண்டுமென்றேன். கொண்டு வந்தார். குடித்தபிறகு சிறிது ஆயாசந் தீர்ந்து எழுந்து உட்கார்ந்தேன் நாராயணஸ்வாமி அய்யர் காதுகடுக்கன் எங்கேயென்றார். அப்பொழுதுதான் கடுக்கன் காணமற்போனது முதல் முதல் தெரிந்தது. பிறகு அரைஞாணும் காணவில்லை. இரண்டும் 1000-ரூபாயிக்கு வாங்கினேன். அநியாயமாய்ப் போய்விட்டது. ஏது போனபோதிலும் மருமகப்பிள்ளையகப்பட்டு விட்டாரே, மிகவும் சந்தோஷம். ஸ்வாமி நம்மை முழுவதும் கைவிடவில்லை' என்று சொல்லிமுடித்தார். பிறகு இராஜகோபாலையர் நாராயணஸ்வாமி அய்யரைப்பார்த்து 'என்ன ஐயா! இப்படி யொருவரைத் தனியே விட்டுப்போகலாமா?' என்றவுடன் நாராயணசாமி அய்யர் 'நானென்னசெய்வேன். சத்தங்கேட்டது: ஒருவேளை மருமகப்பிள்ளையைத்தான் கிழவன் ஏதோ செய்கிறானோ என்று ஓடினேன், சத்தங்காதில்விழுந்த இடத்திற்குப்போனேன். அங்கே யொருவரையுங்காணோம். இங்குமங்குமாய் காட்டிலும் முள்ளிலும் திரிந்தேன், கடை

சியாய் இவர் உட்கார்ந்திருக்குமிடத்தில் வந்துபார்க்கை
யில் இவர் கீழேவிழுந்திருந்தார் அநேககுரல் கூப்பிட்ட
தன் பிறகு கண்விழித்துப்பார்த்தார் தீர்த்தம் வேண்
டுமென்றார், கொண்டுவந்தேன் தேகம் என்னமோபோலி
ருந்தது அதன்பேரில்தான் கடுக்கனெங்கேயென்றேன்
எல்லாவற்றிற்கும் காரணம் அந்தக்கிழவன்தான் அவன்
யாரோ அவனைக்கண்டுபிடித்தால் எல்லாம் வெளியாகும்
என்று சொன்னார்.

அதற்கு நீங்கள்தானேதாவது வழிசொல்லவேண்டும்.
நீங்கள்தானவனைப்பார்த்தீர்கள் உங்களுக்கு இல்லாத
அக்கறை யெனக்குமில்லை, நீங்கள் என்ன வேண்டுமாகிலு
ஞ்செய்து அவனைக்கண்டு பிடியுங்கள் என்றார் இராஜகோ
பாலையர். 'அப்படி யென்னிடத்திலேயேவிட்டால், நானென்
னசெய்வேன், நான்வேண்டுமென்றால் தங்களுக்குவேண்டிய
உதவிகளைச்செய்கிறேன் என்றார் நாராயணஸ்வாமி அய்யர்

அந்தக் கிழவனுக்கும் நமக்குமென்ன பகை? அவ
னேது இவ்வளவு காரியங்களைச் செய்வனா? அவன் யார்?
நாம் அவனுக்கென்ன செய்தோம்? நாமறிய ஒருவருக்கும்
ஒருகுற்றமும் செய்யவில்லையே. ஒருவேளை ஈஸ்வரர்தான்
நம்மைப் பரிசோதிக்கின்றனரோ? மாறு வேடம் பூண்டு
நம் மனத்தை யாராய்கின்றனரோ? இக்கலிகாலத்திலும் ஈஸ்
வரன் பூலோகத்திற்கு மனுஷ்ய உருவந் தரித்துவருவதுண்
டோ? அல்லது நம்முடைய புண்ணியத்தின் மிகையினால்
அவ்வாறு செய்கின்றனரோ? இல்லாவிடில் நடந்த சங்கதி
களைப்பார்த்தால் மனுஷியாளால் முடியாதுபோலிருக்கிறதே
என்று இராஜகோபாலையர் யோசித்துக்கொண்டிருக்குமள
வில், ஆசீர்வாதத்திற்காக ஊர்முழுவதுந் தேடிப்போனவர்
வந்து சேர்ந்தார். அதுமுதற்கொண்டு அரைமணி நேரம்
வரையில் காத்திருந்து இராஜகோபாலையர் ஆரம்பிக்க
லாமென்றார். ஆனால் சம்பந்தி கோபாலஸ்வாமி அய்யர்
'அத்தானைக் காணோம்' சற்று இருங்கள்' என்று அத்தா
னைக் கூப்பிட இரண்டுபேரை யேவினார். கால்மணி நேரத்
திற்கெல்லாம் அத்தான் வந்து சேர்ந்தார். 'அத்தான் எங்

கொயிருந்தாய்? ஆசீர்வாதத்திற்கு ஆரம்பிக்கலாமா? என்று கோபாலஸ்வாமியையர் வினவினார். அதற்கு அத்தான் 'எனக்கு ஒரு ஆக்ஷேபணையுமில்லை, கிழவர் இருக்கிறாரா? என்றவுடன் கிழவர் நானிருக்கிறேனடா, என்னைப் பற்றி என்ன? குழந்தை இராத்திரி முழுவதும் கண் விழித்திருந்தான். சீக்கிரமாய் முடித்தால் சிறிது தூங்குவான், சீக்கிரமாகட்டும்' என்றார். உடனே ஆரம்பித்தார்கள். ஆசீர்வாதம் முடிந்தது அதில் 100 ரூபாய் விலையுள்ள ஒரு பட்டும், 4. 5. சில்லரை மட்டபட்டுகளும் 10, 15, பட்டுக்கரை வேஷ்டிகளும், சுமார் 20-சரிகை யங்கவஸ்திரங்களும், 75-ரூபாய் விலையுள்ள பட்டுப் புடவையொன்றும். 3-இதர புடவைகளும், 30-ரவிக்கைகளும், ரூபா 500-ம் வந்தன. ஆசீர்வாதத்துடன் நாலுநாளைய கலியாணமும் பூரணமாயிற்று. எல்லாருக்கும் கலியாண சிரமமாயிருக்குமாதலால், கதையின் போக்கை சற்றே நிறுத்தி நமது மீனாக்ஷியைப் பற்றி சற்று விசாரிப்போம்.

மீனாக்ஷிக்கு அவளது அகமுடையான் மேலுண்டான வெறுப்பும் அதற்குக் காரணமும் முன் சொல்லியிருக்கிறோம். அவற்றின்மேலும் சிலவுள. அவற்றை இங்கே கூறுவாம் காசிமாலை களவுபோனவன்றிரவு ஊசலாடும்பொழுது இவள் பாடினதாகக் கூறினோம். அதற்குக் காரணம் இவளது கபடின்மையேயன்றி வேறு ஒன்றும் உண்டு. நம்முடைய அகமுடையானுக்குப் பாட்டிலே ஞானம் உண்டா என்று பார்ப்போமென யோசித்துப் பாடினாள் அவனுக்கு அப்பொழுது வந்தகோபமும் அதன் காரணமும் இதை வாசிப்போர்க்குத் தெரிந்திருக்கலாம். தன் கணவன் முகத்தைக் கடுமையாய் வைத்துக்கொண்டதைப் பார்த்து இவருடைய காது மனுஷ்யகாது அல்ல, மரச் செவியாகவே யிருக்கவேண்டும் என நிச்சயம் பண்ணினாள். சங்கீத ஞானம் தன் நாயகனுக்கில்லையெனக் கண்டுகொண்டதும், அவனுக்கு முகமலர்ச்சி எவ்விதத்திலாவது உண்டாகுமோ என அறிவான் கருதி நான்காநாள் மாலை நலங்கில் அடிக்கடி தன் முகத்தைப் புன்சிரிப்பாய் வைத்துக்கொண்டாள். முத

னாள் இராத்திரி உண்டாகிய எண்ணத்தை இவள் புன்னகை வற்புறுத்தியதனால், இராமஸ்வாமியின் முகக்கடுமை அதிகரித்தது. ஆகவே மீனாக்ஷி தன் நாயகன் ஒருபொழுதும் சந்தோஷிக்கமாட்டானென வெண்ணங்கொண்டாள். அவளெண்ணியதாவது 'இவனோ முரடனாயிருக்கிறான். சங்கீதத்திலோ கிஞ்சிற்றேனும் ஞானமில்லை. ஆளோ கோபக்காரன்போலிருக்கிறான். முகமலர்ச்சி என்பது எப்பொழுதுமில்லை. இவனோடென்னமாய்வாழ்வது. ஆளழகாயிருக்கிறான். அழகாயிருந்து பிரயோஜனமென்ன? பி. எ. வகுப்பில் வாசிக்கிறான், வாசித்துமென்? மிகவும்பணக்காரன்தான். இருந்துமென்ன? கோபம், விசனம், கடுமை, இன்சொலின்மை, இவைகளோடு கூடாமலிருந்தாலன்றோ பயனுடைத்தாம்' என்று யோசனையிலாழ்ந்திருக்கையில் ப்ரஹன்னாயகி மூலமாய்த் தன் கணவனைக்காணோமென்றும் ரஸ்தாவிற்கு ஒருவராகத் தேடப்போயிருக்கிறதாகவும் அறிந்துகொண்டாள். அடடா! என்ன புத்திசாலிகள்! பதினெட்டுவயது. பி. எ., வகுப்பில் வாசிக்கிறான். அவனைத் தேடுவதற்காக ரஸ்தாவிலே யெல்லாம் ஆட்கள் போயிருக்கின்றனராம்! சிறு குழந்தையோ? அப்படிச் சிறு குழந்தையாயிருந்தாலும், அதை யெடுத்துக்கொண்டு போகும் திருடர்கள் நடுரஸ்தாவில்தான் போடுவார்களோ? அப்பாவுக்குமா புத்தியில்லை? அண்ணாகூடவா யோசிக்கவில்லை. சிற்றப்பாவுக்குக்கூடவா தோற்றவில்லை. மாமனார்கூடவா மதியிலராய்ப் போய்விட்டார். எல்லாருக்கும் அவசரத்தில் ஒன்றுந் தோன்றவில்லைபோலும்! பதினெட்டு வயது பிள்ளையைக் காணோமாம்! ரஸ்தாவெல்லாம் தேடுகிறார்களாம்!' என்று தனக்குத்தானே யோசித்துக்கொண்டிருந்தாள். தன்னாயகன் காணாமற்போனதினால் உண்டாகும் அவமானங்களைப் பற்றி எண்ணவாரம்பித்தாள்:—அவன் வேண்டுமென்று ஓடியிருக்கவேண்டுமேயொழிய இரண்டாவது மனுஷியாள் சம்பந்தம் இந்த சங்கதியில் சிறிதேனுமில்லை. அவனுக்குக் கலியாணஞ்செய்துகொள்ள இஷ்டமில்லாமலிருக்கலாம். தகப்பனார் கட்டாயத்தின்பேரில் செய்துகொண்ட

படியினாலே இப்பொழுது ஓடியிருக்கலாம். அவன் ஓடினதே சரி, அவனிடத்தில் சுகமனுபவிக்க நம்மால் முடியாது. அவனுக்கு நானேற்றவளல்ல. எனக்குமவன் ஏற்றவனன்று. ஏதோ கலியாணமாய்விட்டது, இனிமேல் வேறு கலியாணம் செய்துகொள்ளப் போகிறதில்லை. ஆயினும் இதற்குள் எப்படி குணாதிசயங்களை யெல்லாம் நன்றாய்ச் சொல்லமுடியும்? அனேக வருஷங்கள் பழகியும் ஒன்றுஞ் சொல்ல முடியாதிருக்கையில் நாலுநாள் அற்பப்பழக்கத்திலதிகமாய்ச்சொல்லத் துணிவது பிழை. போனவன் வந்தால் ஏதோ கொஞ்சகாலம் பார்ப்பது. இல்லையேல் அதுவும் நல்லதுதான். நமக்கு இனிமேல் கலியாணமாகவில்லையெனப் பெயர்வராது. அகமுடையான் ஓடிவிட்டானென்பார்கள். அவனுக்குப் பழியேயொழிய எனக்கென்ன? என்னை யதிர்ஷ்டமற்றவளென்பார்கள். பிறர் சொல்வதற்கு யானென்னசெய்வேன். அவர் மாத்திரம் சாகாமலிருக்க வேண்டியது. மீதியெப்படி யிருந்தாலென்ன?' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தவள், தன் தோழி சாவித்திரி வருவதைகண்டாள்.

மீனா—வா! அம்மா! வா!

சாவி—என்னடி உன்னகமுடையானெங்கேயோ போய் விட்டாராமே.

மீனா—ஆமாம்.

சா—ஏன் போய்விட்டார்?

மீனா—அவரைப்போய்க்கேள்.

சா—இல்லை, எங்கேபோயிருப்பார் என்கிறேன்

மீ—அவருக்கெங்கே யிஷ்டமோ அங்கேபோயிருப்பார்.

சா—திடீரென நடக்கலியாணத்தில் ஏன் போனார்?

மீ—அதுதான் அவரைக்கேள் என்றேனே.

சா-அவருக்கு ஏதாவது அபாயம் நேரிட்டிருக்குமோ?

மீ—நூறில் குறைந்த எண்சொல்.

சா—ஐந்து.

மீ—அபாயம் இல்லை, உண்டு, இல்லை, உண்டு, இல்லை, என் ஜோஸியத்திலில்லையென்று தோன்றுகிறது.

சா—முதலில் உண்டு என்று ஆரம்பி.

மீ—அகப்படுவது உண்டு இல்லை—

சா—நீ யென்னமோ வேடிக்கைசெய்கிறாய், எனக்கு என்னமோபோலிருக்கிறது.

மீ—எனக்கும் என்னமோபோல் தானிருக்கிறது.

சா—நீ யப்படியிருந்தால் இப்படியா இருப்பாய்?

மீ—பின்னெவ்விதமிருப்பேன்?

சா—உன் முகத்தில் விசனமென்பதே யில்லையே.

மீ—விசனப்பட்டு நீ யென்ன செய்துவிட்டாய்?

சா—அதொன்றுமில்லை. சாசிமாலையைப்பற்றி யேதாவது ஏற்பட்டதா?

மீ—ஏற்பட்டது. ஏற்படவில்லை. அதைப் பற்றிப் பேசி யென்ன பிரயோஜனம். எடுத்த திருடன் கொடுத்தாலல்லோ வுண்டு.

சா—கலியாணமாரம்பித்தது முதல் ஏதாவது ஆகிக் கொண்டுவருகிறது பார்த்தாயா?

மீ—ஆமாம்.

சா—அப்பா கலியாணம் எவ்விதம் நடக்கும்? என்று முன்னே சொன்னாரே, அதற்குச் சரியாயிருக்கிறது பார்த்தாயா?

மீ—ஒருவேளை உன் அப்பாதான் இவ்வாறு செய்திருப்பாரோ என்னவோ?

சா—அப்படியென்றால் என்னப்பா அயோக்கியரா?

மீ—என்னவோ? உனக்குத்தான்தெரியும்.

சா—நாங்களெல்லா மேழைகளாகையாலே நீ யவ்வாறு சொல்கிறாய்.

மீ—நான் வேடிக்கைக்குச் சொன்னேன் அம்மா நீ உண்மையென்று வைத்துக்கொள்ளாதே.

சா—நீ உண்மையாய்த்தான் சொல்லேன். நீங்கள் எதுவேண்டுமென்றாலும் சொல்லலாம்.

உண்மையாய் மீனாக்ஷி யவ்வாறு நினைத்தவளல்ல ஆகையால் பேச்சை வேறு விஷயமாய் மாற்றி சாவித்திரியை தான் சொன்னது வேடிக்கை யென்னும்படி செய்து விட்டாள்.

பிறகு வீராசாமி அய்யரை யேற்றிக்கொண்டு வண்டி வந்தவுடன் இரண்டுபேருமெழுந்து போனார்கள். திரும்பி வரும்போது மீனாக்ஷிமாத்திரம் உள்ளேசென்றாள். தூக்கமோ வரவில்லை. சாவித்திரியோ மீதிபெண்களோடு சேர்ந்து பேசப்போய்விட்டாள். ஆகையால் மீனாக்ஷி கம்பராமாயம் திறந்தாள்.

"உருப்படிவ மன்மதனை யொத்துளரே யாயினுமுன்
செருப்படியிற் பொடியொவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொடிசிதற நிரைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடிபத் தோணிமிர்த்த வலியோனே."

என்கிற செய்யுள் தன் கண்ணுக்குத் தற்செயலாய்த் தோன்றிற்று. இதை யிவள் முன்னமேயே வாசித்திருக்கிறாள். இவளுக்குச் சொல்லிக்கொடுத்தவர் 'செருப்படியிற் பொடியொவ்வா' என்பதற்கு 'உன் புத்தகளத்திலுள்ள புழுதிக்குச் சமானமாகாத' என்று அர்த்தஞ்சொல்லிக் கொடுத்ததும் அதற்குத்தான் செருப்பு அடி எனப் பிரித்தல் பொருந்தாதோ என்று கேட்டதும், உபாத்தியாயர் உன்னைப்போன்ற சில மதியிலிகள் இவ்வாறுதான் பிரித்துக் கூறுவர்; ஆனால் அவ்வாறு கொண்டக்கால் ஸ்ரீ பகவானை மிகவும் தாழ்த்தியதுபோலல்லவோ ஆகும். ஸ்ரீமந் நாராயணனை, எம்பெருமானை யிவ்வாறு பழித்தவர் மோக்ஷத்தை யடைவரோ' என அவர் மொழிந்ததும், அவரது மதவைராக்கியத்தை நோக்கி இவள் சிரித்ததும் எல்லாம் ஞாபகத்துக்குவந்தது. சிறிது புன்னகைகொண்டாள்.

இதுபோன்ற சில பாட்டுக்களைச் சொல்லுவதும் கவிசாதுரியங்களைக்கண்டு மனமகிழ்வதும் பழைய ஞாபகங்கள் வர புன்னகைகொள்வதுமா யிருந்தாள். இப்படியாகத் தன் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்க, இராமஸ்வாமியை யேற்றிக்கொண்டுவந்த வண்டியைக்கண்டு எல்லோருமோட

தானுமெட்டிப் பார்த்தாள். நாயகனைக்கண்டாள். பிறகு அவன் மொழிந்ததையெல்லாம் கேட்டாள். கடிதம் வாசித்ததும் 'என்னைவிட்டு மறுகலியாணஞ் செய்துகொள்ளவதற்கு ஒரு சாக்கு ஏற்படுத்திக்கொண்டனர்போலும், என்னைப்பற்றி யவ்வாறு யார் எழுதியிருப்பர். எல்லாம் இவராயேற்படுத்திக்கொண்டதுதான்' என்று யோசித்துவிட்டு அப்புறஞ்சொன்னதையுங் கவனித்துக்கேட்டாள். இந்தக் கிழவன்றான் யாராயிருக்கலாம் நம்முடையபேரில் இவ்வளவு வைராக்கியத்தோடு ஒருவருமில்லையே. எல்லாமிவரேயேற்படுத்தியதுதானெனத் தீர்மானித்தாள். பிறகு ஔபாசனத்திற்குக் கூப்பிடுவரோவெனப் பார்த்தாள். அதற்கு மிகவும் அலக்ஷியமாய்ப் பதிலுரைக்கவே தன்பேரிலவருக்குச் சிறிதேனுமிஷ்டமில்லையென நினைத்தாள். தன் சிறிய தகப்பனார் 'கிழவனைக்கண்டேன்' எனவே கிழவன் உண்மையாய்த்தானிருக்கிறான், என எண்ணினாள். 'அவன் யாரோ தெரியவில்லையே. அவன் இன்னுமென்னென்ன உண்டுபண்ணுவதற்கு நினைத்திருக்கின்றானோ? இவ்வளவே போதுமே. அகாரணமா யெங்கள் குடும்பத்தை யேன் கெடுக்கவேண்டும்? நமக்கோ அகத்துக்காரரோ பேதமுள்ளவராய் விட்டார், நம்முடைய தகப்பனாருக்கும் மாமனாருக்குமோ மனஸ்தாபமாய்விட்டது. தேடிப்போன ஒவ்வொருவருக்குமேதாவது குறைநேரிட்டிருக்கிறது. இவ்வளவும் போதாமல் பேர், ஊர் குலமொன்றுந் தெரியாமல் ஒரு கிழவனேற்பட்டுவிட்டான். இன்னுமென்னென்ன வேடிக்கைகள் நடக்கின்றனவோ பார்ப்போம்' என்று இதுபோன்ற எண்ணங்களிலாழ்ந்திருந்தனள்.

இனி யிவள்நாயகனைப்பற்றிச் சிறிதுரைப்போம். இவனுக்கும் இவள்மேலுண்டாகிய வெறுப்பும் அதன் காரணமும் முன்னாலே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வெறுப்பைக் கிழவன் கொண்டுவந்த கடிதம் அதிகப்படுத்தியது. அவன்தான்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் இவளேயென நினைத்தான். நம்முடைய தகப்பனாரை எல்லாரும் ஏமாற்றிவிட்டாரென வெண்ணினான். 'சரிப்பட்டால் நாம்

வேறே கலியாணம் பண்ணிக்கொள்வோம், ஸ்திரீகள் தாம் ஒருவனையே கலியாணஞ் செய்துகொண்டிருக்க வேண்டும். நமக்கென்ன பார்ப்போம் இன்னுஞ் சிறிது காலம், அதுவரைக்கு மிவளுடைய குணம் என்னமாயிருக்கிறதென்று பார்ப்போம். எதையும் அவசரப்பட்டுச் செய்யக்கூடாது. கிழவன்யாரோ ஒருவன் புதிதாயிருக்கிறான். அவன் அவர்கள் பக்கமிருக்கிறானென்பதற்கு மில்லை. இராமஸ்வாமி அய்யர் அணிந்து கொண்டிருந்த நகைகளைத் திருடிப்போய்விட்டான். ஆகையால் நம்மெல்லாரையும் யாரோ மோசஞ் செய்கிறதாகத்தெரிகிறது. சிறிதிருந்தால் இன்னும் நல்லவளாய்ப் பார்க்கலாம். ஏதோ அப்பா அவசரப்பட்டார் என்று இதுபோன்றவைகளை எண்ணிக் கொண்டிருந்தான்.

வாசிப்போர்க்குச் சிறிது சிரமம் தீர்ந்திருக்குமென்று எண்ணிமேல் நடந்த விஷயங்களைப்பற்றிச் சொல்வாம்.

ஆசீர்வாதம் முடிந்து சாப்பாடு முடிந்ததும் முதனாள் இராத்திரி கண்விழித்ததனால் எல்லோரு முறங்குகிறார்கள். அன்றையதினமொன்றும் விசேஷம் நடக்கவில்லை. மறுநாள் சனிக்கிழமை எல்லோரும் தஞ்சாவூர் போவதற்காகப் புறப்பட்டார்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூரில் கிரகப்பிரவேசம். அதற்காக இவர் கலியாணத்திற்கு முன்னமேயே தஞ்சாவூரிலுள்ள உத்தியோகஸ்தரெல்லார்க்கும் முகூர்த்தப்பத்திரிகை கொடுத்துவிட்டார். தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டுவரும்பொழுது தன் காரியஸ்தனுக்குக் கலியாணம் ஆகிறதா இல்லையா என்பதைப்பற்றித் தானெழுதுகிறதாகவும், அவ்வாறு இவர் எழுதுகிற கடிதத்தில் கிரகப்பிரவேசத்திற்கு வேண்டியவைகளைச் சேகரித்து வையென்றும், வீட்டைச் சுத்தப்படுத்து என்று மெழுதியிருந்தால் அவ்வாறே செய்யும்படியாகவும் சொல்லியிருந்தார். அவ்விதமே கலியாணம் நடந்த இரண்டாம்நாள் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் கலியாணம் நடந்துவிட்டது, ஞாயிற்றுக்கிழமை கிரகப்பிரவேசம், அதற்காக நாங்கள் சனிக்கிழமை இராத்திரி அவ்விடம் வருகிறோம்,

வீட்டின் முன்னால் பந்தல் போட்டு, திரைகள் கட்டி, பொம்மைகளொட்டவும், வாத்தியக்காரனை ஞாயிற்றுக் கிழமை காலையில் வரச்சொல்லவும், தான் சொல்லியிருந்த பரிசாரகர்களிடத்தில் சொல்லிச் சனிக்கிழமை மாலையிலேயேவந்து சமையல்செய்து வைக்கும்படியாகவும் சனிக்கிழமை இராத்திரி $8\frac{1}{2}$-மணிக்கு தன்னுடைய கோச்சைக்கொண்டு வருவதுடன் தாசீல் தாரிடஞ்சொல்லி அவர் பீட்டனையும், வக்கீல் முத்துகிருஷ்ண செட்டியார் கோச்சையும் கொண்டுவரவும், வழக்கம்போல் அலக்ஷியஞ்செய்யாமல் ஜாக்கிரதையா இருக்கவும் கண்டு யெழுதி யிருந்தார். அதற்கேற்ப சனிக்கிழமை புறப்படுவதாயிருந்தார்கள். அவ்வாறே சனிக்கிழமை பகல் $2\frac{1}{2}$-மணிக்கு புறப்பட்டார்கள். சம்பந்திகள் தவிர திருப்பாதிரிப்புலியூரிலிருந்து புறப்பட்டவர்கள் இராஜகோபாலையர், இராமஸ்வாமியையர், சேஷையர், பையன் கிட்டு, மீனுக்ஷிதோழி காமாக்ஷி, ப்ரஹ்ன் நாயகி, ஜானகி இவர்களாம். மாது ஸ்ரீ லக்ஷ்மி அம்மாள், காமாக்ஷியிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தன் பிறந்த அகமாகிய குரிஞ்சிப்பாடி போய்ச்சேர்ந்தாள். அங்கே தன்னுடைய தமயனுக்குப் பயிரிடுகிறவேலை, சொற்பநிலம் உண்டு. அவனுடைய மனைவிக்கு மவனுக்கு மாகாதவண்ணஞ் செய்துவிட்டாள். ஆகையால் அவன் பெண்சாதி லக்ஷிமியில்லாத சமயம் பார்த்து இங்கேவருவள். லக்ஷிமிவந்து விட்டாளோ புறப்பட்டோடிவிடுவள். லக்ஷிமியும் அவளைச் சற்றுநேரங்கூட வைத்துக்கொள்ளமாட்டாள். ஆனல் லக்ஷிமி வீட்டில் அதிக நாழிதங்கமாட்டாள். எங்கேயாவது கலியாண மாவதாயிருந்தாற்போதும். அவர் யாராயிருந்தபோதிலும் அங்கே போய்விடுவள். சிறிது உறவுமாத்திரமிருக்கவேண்டும். இந்தவிதம் இவள் மீனுக்ஷி கலியாணத்திற்கும் போயிருந்தாள். கலியாணத்திற்குப் போய் வந்ததும், தமயன் வாசலிலிருந்தான். நீபோயிருந்தாயோ? உனக்கென்ன கொடுத்தார்கள்? என்றுன் உடனே லக்ஷிமி அம்மாள், 'போனேன் வந்தேன் எனக்கென்ன கொடுப்பார்கள். கண்ணுக்குக் கணிசமா

யிருந்தால் எல்லாரும் வா என்றுவிட்டு உபசாரப்பல்லவி நார்மடி முங்காமடி எல்லாம் கொடுப்பார்கள். என்னமோ வேலைக்காரிபோல வேலைசெய்தேன். நாலுநாளுந் தின்றேன், வந்து சேர்ந்தேன். என்னம்மா வந்து விட்டாளா? துடைகாலி! இல்லையில்லை யென்றேனே? ஐயோ! எங்கேயடியம்மா போயிருந்தாய் இதுவரைக்கும்? என்று தன் தமயன் மனைவியைப் பார்த்துக் கூறினான்.

இனிமேல் இவளைப்பற்றி சிறிது சொல்லவேண்டியிருக்கும். ஆனால் இப்பொழுது பெரிய உத்தியோகஸ்தர்களை தஞ்சாவூருக்கழைத்துக்கொண்டு போவோம். வீட்டை நாராயண ஸ்வாமியையரிடம் பார்த்துக்கொள்ளும்படியாகவிட்டு கலியாண சாமான்களையும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி இராஜகோபாலையர் தம்பி பிள்ளை சகிதமாய் ரயில்வே ஸ்டேஷன் போய்ச்சேர்ந்தார். சம்பந்தியு மிவரும் இரண்டாவது வகுப்பிலேறிக்கொண்டனர். மற்றையோர் எங்கே இடம் அகப்பட்டதோ அங்கங்கே யேறினார்கள். ரெயில் நிற்பது மூன்று நிமிஷந்தானாகிலும் அன்றையதினம் ஸ்டேஷன் மாஸ்டர் இராஜகோபாலையருடைய சினேகிதத்தினால் வண்டியை 7-நிமிஷம் வரையிலும் நிறுத்தினார். போகும் வழியில் யாதொன்றும் விசேஷமில்லை. ஆலப்பாக்கத்திற்கு அப்புறம் சுமார், 4-மைல் தூரம் போய்க்கொண்டிருந்தபொழுது வயலில் ஒரு குள்ள நரி நிற்பதை ப்ரஹந்நாயகியம்மாள் கண்டு அதைத் தன் குமாரனுக்குக் காட்டுவான் எண்ணங்கொண்டு 'வவவவவவய், வவவய்! அஅஅஅஅஅஅதோ பார்டா! வவவட்டி குகுகுகுள்ளநரி, பார்டா! குகுகுகுள்ளநரி என்றாள். அவன் எங்கே? 'என்றான். அதோ பார்டா! எஎஎஎஎழவுபிள்ளை, இஇஇத்தனை நாழிகழிச்சு எஎஎஎஎன்று' ப்ரஹன்னாகியம்மாள் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது ரயில் மூன்றுமைல்தூரம் வந்துவிட்டது. அப்பொழுது எதிரிலிருந்த நாயொன்றைப் பார்த்து கிட்டு 'அதோ இருக்கம்மா குள்ளநரி; நான் பாத்தூட்டேன்' அம்மா என்றான். ப்ரஹன்னாயகிக்கோ வாய்தந்து தன் வாயை

மூடிக்கொண்டிருக்கலாமே: இல்லை இல்லை, அடிக்கடி பேசுவாள்.

பார்வதி, கல்யாணி, வீராஸ்வாமியையர் மூன்றுபேரும் ஒருவண்டியி லேறிக்கொண்டிருந்தனர் குற்றாலம் ஸ்டேஷனில் பார்வதி வாழைப்பழம் வேண்டுமென்றாள். கல்யாணி வீராஸ்வாமியையரைப்பார்த்து 'சித்தப்பா! சித்திக்கு வாழைப்பழம் வேண்டுமாம் என்றாள். வீராஸ்வாமியையருக்குப் பார்வதிமேல் உள்ள ஆசையை என்றால் சொல்ல முடியாது. பார்வதியை திருப்திசெய்வதற்காகவே, பி. ஏ., வாசித்துத் தேறினாரென்று சொல்லலாம். பார்வதி, இவர் பி. ஏ. யில் ஒருவருஷந் தவறிப்போனவுடனே 'எங்களூரில் சின்னா அகமுடையான் பி. ஏ. பாஸ் பண்ணியிருக்கிறார், அடுத்த அகத்து சேஷையகமுடையான் எம். ஏ. பாஸ்பண்ணியிருக்கிறார். நீங்கள் மாத்திரம் ஒன்றும் பாஸ் பண்ணவில்லை' என்று இவர் தஞ்சாவூருக்குப் பட்டணத்திலிருந்து வந்தபொழுது ஒருதரஞ்சொன்னாள். உடனே அவர்க்குச் சுருக்கெனப்பட்டு நன்றாய் வாசித்து, பீ. ஏ. பாஸ் பண்ணினார். இவருக்கு பி. எல். வாசிக்க எண்ணம். ஆனால் பார்வதி யவரைப்பார்த்து 'வக்கீலாயிருந்தால் என்ன வரும்? எங்களூர் சுப்பராமன் வக்கீலாயிருக்கிறான், மாதம் ஐந்து ரூபாய்க்கு வழியைக்காணோம்! ஒருமாதம் வரும் ஒரு மாதம் வராது. கலெக்டர் ஆபீஸிற்குப்போனால் நாளாவர்த்தியில் மைத்துனன்போல் டெபுடிகலெக்டர் ஆகலாம்'! என்றதன்பேரில் இருபது ரூபாய்க்கு குமாஸ்வாக நுழைந்து விட்டார். இவர் கீழே விழுந்ததில் தான் காயப்பட்டதற்காக வருத்தப்படவில்லை பார்வதி விசனப்படுவளே! அவள் அழுவளே' என்று தான் விசனப்பட்டார். ஸ்வாமியின் கிருபையினால் ஏதோ அதிக காயமில்லாமல் கால்மாத்திரம் சுளுக்கிக்கொண்டது. மண்டையில் ஒரு அற்ப காயம்பட்டது. பார்வதியம்மாள் இப்பொழுது வாழைப்பழங்கேட்கவே வீராஸ்வாமி அய்யர் எட்டிப்பார்த்துக் கூப்பிட்டார். அவனுக்குக் காதில் படவில்லை, கதவைத்திறந்துகொண்டு கீழேயிறங்கிக் கூப்பிட்டார்.

௪-வது அத்தியாயம்.

அவன்யாருக்கோ கொடுத்துக்கொண்டிருந்தான். அவன் வருவதற்கு நாழியாகுமென்றெண்ணி, அங்கேபோனார் பொண்டிக்கொண்டு: அவனிடம் விலை கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே வண்டியை விட்டுவிட்டான். இவர் வண்டியோ முதலிலிருப்பது, இவர் வாழைப்பழம் வாங்குவதோ நடுவில். ஒரு வண்டியினெதிரில் வாழைப்பழத்தைக் கையில் வாங்கினதும் வண்டி நகர்வதைக்கண்டார். ஏதேனும் ஒரு வண்டியிலேறிக் கொள்ளலாமே தானிருக்கும் வண்டியை நோக்கியே ஓடினார் இவர் அங்கே ஓடுவதற்கு முன் வண்டியதிவேகமாய் ஓட ஆரம்பித்துவிட்டது இவர் தன் வண்டியிலேறுவதற்கும் சகவாசப்படாமல் கண்கலங்கி விழித்துக்கொண்டிருகையில் சம்பந்தி கோபாலஸ்வாமி அய்யர் அகஸ்மாத்தாய் இதைக்கண்டு கதவைத்திறந்து வைக்க, அவரும் இராஜகோபாலையரும், வீராஸ்வாமியை பரையிழுப்பது போலிழுத்து தங்கள் வண்டியில் போட்டுக் கொண்டார்கள்

செல்லம்மாள், குட்டியபட்மாள், தாயம்மாள், அழகம்மாள், அத்தான், இவர்களைவரும் ஒரு வண்டியிலேறிக் கொண்டிருந்தார்கள்.

அத்தான்--கலியாணம் ஒருவாறாய் முடிந்ததடியம்மா, அதென்ன சண்டை! அதென்ன கலகம்! ஐயையையோ! போதும் போதும். இன்னுமிரண்டு ஜனமத்துக்கும் போதும்.

அழகம்மாள்—ஆங்! கலியாணத்தைப் பார்க்கவில்லை! என்ன கலியாணம்! ஆரம்பித்தது முதற்கொண்டு நகையைக் காணுமே, பிள்ளையைக்காணுமே, அத்தைக்காணுமே, இத்தைக்காணுமே; இதுதானாபோச்சு. சீ

தாயம்—நான் அப்பொழுதே மங்கிலிப்பொண்டு இடு, மங்கிலிப்பொண்டு இடு என்று சொன்னேன்.

அத்தாள்—நீ சொன்னால் கேட்பானோ? அம்மாமி சொன்னால் கேட்பான்.

செல்லம்—ஆமாம், நான் சொன்னவுடனே கேட்டுவிடுவான். நானந்தப்பெண்ணுக்கு தாவடம் கொண்டுபோய்

போடவேண்டும் போடவேண்டும் என்றேனே. கேட்டானா? அடே! நன்றாயிருக்காது நன்றாயிருக்காது; எட்டுசவரனுக்கு ஏதாவது பண்ணிப்போடு என்றேனே. கேட்டானா?

குட்டி—சொல்லுகிறவர்கள் சொன்னால் கேட்கிறவர்கள் கேட்பார்கள் நாம் சொன்னால் கேட்பார்களா?

அத்தான்—அதெல்லாமில்லை, பணமென்றால் யார் சொன்னாலுங் கேட்கமாட்டான்

அழகப்—போகிறான் எப்படியாகிலும் வுக்கியமாயிருக்கவேண்டியதுதானே.

செல்லம்—அதைச் சொல்லு அக்கா! அதைச் சொல்லு.

தாயம்—மாட்டுப்பொண் என்னவோ நன்றாய்த் தானிருக்கிறாள்.

குட்டி—மூக்கும் முழியும் நன்றாய்த் தானிருக்கிறாள், அவளுக்கென்ன இப்பொழுது.

தாய்—அந்த பெண்ணுக்கு வாசிக்கத் தெரியுமாமே?

அழகு—இந்தக்காலத்திலே எல்லாருக்குந் தெரியும், உனக்குத் தெரியாது, எனக்குத் தெரியாது, நம்முடைய காலத்திலே யல்லவோ வெட்கம், இப்பொழுதென்ன வாசிக்காமலிருந்தால் தான் வெட்கம்.

தாய்—காலம் வர வர அப்படித் தான் அனியாயங்களும் அக்கிரமங்களுந் தானே யதிகமாய்க் கொண்டுவருகிறது. ஒன்றுமில்லை. நம்முடைய வீருவை (யெடுத்துக்கொண்ணு) பொய் யென்றாலும் வைத்துக்கொள், உண்மையென்றாலும் வைத்துக்கொள் ஒரு நாள் சாயங்காலம் நான் பாட்டிற்கு வெளியேயிருந்து உள்ளே போனேன். கூடத்து ஊஞ்சலில் வீருவும் உட்கார்ந்திருக்கிறான். பக்கத்திலே, பொய்யோ மெய்யோ. எப்படியென்றாலும் வைத்துக்கொள்ளு, பக்கத்திலே பார்வதி—சொன்னாற் பொய்போலிருக்கும். வீரு பக்கத்திலே பார்வதி காலை மடித்து. உட்கார்ந்துகொண்டு ஊஞ்சலாடுகிறாள்.

அழகு—ஆங்! ஆங்! அப்புறம்.

செல்லம்—கொஞ்சங்கூட வெட்கமிருக்காதோ?

குட்டி—கலிகால மகிமையை யென்ன சொல்வேன்!

செல்லம்—என் குலத்தைக் கெடுத்துவிடுவள் அவள்.

குட்டி—'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு' என்று இந்த விதம் பேசிக்கொண்டு இவர்கள் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தார்கள். இவர்களும் மற்றவர்களும், ஒரே ரெயிலில் ஏறியிருந்தபடியினால் மீதிப்பேர்களும் தஞ்சாவூரைச் சேர்ந்தன ரென்பது நான் சொல்லாமலே இதை வாசிப்போர் அறிந்துகொள்ளலாம்.

சம்பந்தி கோபாலஸ்சுவாமி அய்யர் ரெயிலை விட்டுக் கீழே யிறங்கினதும் நாகஸ்வாமி என்று கூப்பிட்டார். (இவர் காரியஸ்தன் பெயர் நாகஸ்வாமி) ஒருவரையுங்காணோம். ப்ளாட்பாரத்திற்குள் விடவில்லை அவனையென்று நினைத்துக்கொண்டு 4 ஆட்களை வைத்து மூட்டைகளை வெளியில் கொண்டுபோய்ச் சேர்த்தார். டிக்கெட்டை கொடுத்துவிட்டு வெளியே போகும்பொழுதே முன் கூப்பிட்டவாறே கூப்பிட்டார். இப்பொழுதும் ஒருவரும் மறுமொழி கூறவில்லை. நாகஸ்வாமி ரெயிலடிக்கே வரவில்லைபோலிருக்கின்றதே? என்று கோபாலஸ்வாமி அய்யர் தன் தம்பியை நோக்கிக் கூறினார். 'அவர் வழக்கம்போலிருந்துவிட்டார்' என்றார் வீராஸ்வாமி அய்யர். தான் வரும்படி யெழுதியிருந்த வண்டிகள் வருகின்றனவோ எனப் பார்த்தார். குதிரை வண்டிகளையே காணோம். ஏதோ காரணம் வரவில்லையென நினைத்துக்கொண்டு நான்கு இரட்டை மாட்டு வண்டிகளை யமர்த்திக்கொண்டு எல்லாரும் டெபுடிகலெக்டர் வீடு போய்ச் சேர்ந்தார்கள். இவரிருக்கும் வீடு மெத்தை வீடு. வாடகை 25-ரூபாய். இவர் அவ்வீட்டுக்கு முன்னாலே பந்தல் போட்டு வைக்கும்படியாய்க் கடிதம் எழுதியிருந்தார். பந்தலையேகாணோம். இவர் கடிதம் வந்து சேரவில்லையென நினைத்துக் கொண்டார். வீட்டின் முன் வழக்கமாய்ப் போடும் விளக் கொன்றையுங்காணோம். 'இஃதென்ன

புதுமை? இஃதென்ன வாச்சரியம்? எனமிக்கவருத்தத் துடனும் கோபத்துடனும் வண்டியைவிட்டுக் கீழே யிறங்கி கதவை யிடித்தார்.

'யாரங்கே அது? சும்மா தூக்கத்திலே கதவை யிடித் துக்கொண்டு. ஐயா இல்லே. நாளைக்குவா' என்றது ஒரு குரல்.

'முனியா! கதவைத்திறவடா' என்றார் வீராசாமி அய்யர். வீராசாமி அய்யர் குரல் கேட்டவுடன் முனியன் ஓடோடியும் எழுந்து வந்து கதவைத்திறந்தான்.

'அவரெங்கே ஐயர்? என்று கேட்டார் கோபாலஸ் வாமி ஐயர்.

'ஐயா ஒசரத்தூங்குறாங்க' என்றான்.

போய்க்கூப்பிடு என்று கோபாலஸ்வாமியையர் சொல் லிக் கொண்டிருக்கும் பொழுது ஒருத்திகையில் ஒரு விளக் குடன் வாசலில் வந்தாள்.

என்னடீ! வீராயி! நாளைக்குக் கிரகப் பிரவேசமா யிருக்கும் பொழுது இப்படித்தானா இருக்கிறது வீடு? என் றாள் செல்லம்மாள்.

'ஐய்யாவுக்குக்காயலா இன்னாங்களே' என்றாள் வீராயி.

'என்தையாவுக்கு? என்று தாயம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, நாகஸ்வாமியையர் மேலே யிருந்து கீழே வந்து 'தங்களுடம்பு சவுக்கியமா? நேற்றை யதினம் தந்தி வந்தது முதற் கொண்டு எனக்கு என்னமோ போலிருந்தது? நல்லவேளை—' என்று சொல்லிக் கொண் டிருக்கும்பொழுதே வீராஸ்வாமி அய்யர் 'என்ன தந்தி காணும் இங்கேயும் யார் தந்தி யடித்தார்கள்'? என்றார்.

'நேற்றையதினம் நீங்கள் தானே யடித்தீர்கள்'?

'கொண்டுவா பார்ப்போம்' என்றார் கோபாலஸ்வாமி அய்யர்.

கலியாணத்தோடு எல்லா சண்டைகளும் முடிந்து விடும் என்றெண்ணங் கொண்டிருந்தார். கலியாணமுடிவே

மனச்சஞ்சலத்திற்கும் முடிவென்று நினைத்திருந்தார். இதற் கென்ன செய்வது? புதிது புதிதாய்க் கலகங்கள் நேரிட்டுக் கொண்டிருக்கின்றனவே என்று யோசனையிலாழ்ந்திருக் கையில் தந்தியைக் கொண்டுவந்து கொடுத்தார். பிரித்துப் பார்த்தார்:

மேமீ 9உ வியாழக்கிழமை. மாலை 8-மணி 5-நிமிஷம். தஞ்சாவூரிலிருந்து தற்காலம் திருப்பாப்புலியூரிலிருக்கும் வீராஸ்வாமி யையரிடத்திலிருந்து.

தஞ்சாவூர் டெபுடிகலெக்டர் கோபாலஸ்வாமியையர் வீட்டிலிருக்கும் ராமஸ்வாமியையருக்கு.

அண்ணாவுக்கு அதிக ஜ்வரம், கிரகப்பிரவேசம் இல்லை, விபரத்திற்கு கடிதம் வரும்.

இந்த தந்தியை கோபாலஸ்வாமி யையர் உரக்க வாசித்தார்.

எல்லாம் கிழவன் செய்கிற வேலை என்றார்

'கிழவனைத்தான் வியாழக்கிழமை இராத்திரி 8 மணிக்கு நான் பார்த்தேனே' என்றார் பெரிய இராமஸ் வாமி யையர்.

'அதற்குமுன் தபாலாபீசுக்குப் போயிருக்கவேண்டும்' என்றார் இராஜகோபாலையர்.

8-மணிக்குத் தானே திறக்கிறான் என்றார் சேஷையர். 'ஆனால்-5 மணிக்கு முந்தியே போயிருக்கவேண்டும்' என்றார் இராஜகோபாலையர். 5½-மணி வரைக்குந் தான் என்னிடத்திலிருந்தானே என்றார் மருமகப்பிள்ளை இராமஸ்வாமி யையர்.

'அங்கிருந்து தபாலாபீசுக்குப் போயிருக்கவேண்டும்' என்றார் கோபாலஸ்வாமியையர்.

'மருமகப்பிள்ளை சொல்வதைப் பார்த்தால் தபாலாபீ சுக்கும் அவருடன் கிழவனிருந்த விடத்திற்கும் 4-மைல் இருந்திருக்கவேண்டும் ½-மணி நேரத்திலேயா போயிருப் பான்' என்றார் பெரிய இராமஸ்வாமியையர்.

'ஆனால் கிழவனிதைபடிக்கவில்லையென்கிறீர்' என்றார் கோபாலஸ்வாமியையர்.

'அவனே படித்திருக்கமுடியாது, அவன் யாரிடத்திலாவது சொல்லி படித்திருக்கவேண்டும்' என்றார் பெரிய இராமஸ்வாமியையர்.

'எப்போது இரண்டுபேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அப்பொழுது எதாவது ஒருவர் அகப்பட்டுவிடுவார்கள்' என்றார் வீராஸ்வாமியையர்.

'எனக்கு ஒருவர்மேல் சந்தேகமிருக்கிறது, சொன்னால் சம்பந்திக்குக் கோபம்வரும்' என்றார் அத்தான்.

'யார் அது' என்று இராஜகோபாலையர் வினவினார்.

'உம்முடைய வீட்டில் வண்டிக்காரன் நம்பிக்கையான மனுஷ்யன் தானா?' என்றார் அத்தான்.

'அவன் 15-வருஷமாய் என்னிடத்திலிருக்கிறான்' என்றார் இராஜகோபாலையர்.

அவனைச் சற்றே கவனியுங்கள்'

'அவனுக்கெழுதப்படிக்கக் கூடத்தெரியாதே' என்றார் இராஜகோபாலையர்.

'அப்படியிருக்காதேயுங்கள். அவன்பேரில் எனக்கு மிகுந்த சந்தேகமாயிருக்கிறது' என்றார் அத்தான்.

'தந்தியடித்தவன் கிழவன்றான்' என்றார் இராஜகோபாலையர்.

'கிழவனுக்கு நாகஸ்வாமியையர் பெயர்எப்படித்தெரியும்?' என்றார் கோபாலஸ்வாமி அய்யர்.

எல்லோரும் திகைத்தனர்.

'கிழவனல்ல தந்தியடித்தது' என்றார் அத்தான்.

'எனக்கு இப்போது தான் ஞாபகம்வருகிறது. நானும் கிழவனும் தனியாய்ப்போகையில் குடும்பயோக க்ஷேமத்தைப் பற்றிக்கேட்டான். அப்போது இந்த வீட்டில் யாரிருக்கிறார்களென்று அவன் கேட்டதற்கு நான் நாகஸ்

ஸாமியையர் பெயரைச்சொன்னேன்' என்றார் இராமஸ்வாமி ஐயர்

'சரி, சரி' என்றார் எல்லாரும்.

'கடிதம் எழுதுகிறதாக இருக்கிறதே. உனக்கு ஏதாவது கடிதம் வந்ததா?' என்று கேட்டார் கோபாலஸ்வாமியையர்.

'இன்றையதினம் காலையில் ஒரு கடிதம் வந்தது' என்று சொல்லி ராமஸ்வாமியையர் உள்ளேபோய் சற்றுநேரத்திற்கெல்லாம் ஒருகடிதம் கொண்டுவந்தார். அதில்

திருப்பாப்புலியூர்,
10—5—91.

க்ஷேமம் ஆசிர்வாதம்.

நான் நேற்றையதினம் ஒரு ஜுரமடித்திருக்கிறேன். அன்றைக்கு அதிகஜுரம். நேற்றையைவிட இன்றைக்கு அதிகமாயிருக்கிறது. நாங்கள் உடம்பைப்பார்த்துக்கொண்டு நாலைந்து தினத்தில் வருகிறோம். நான் முன்னெழுதின கடிதப்படிக்கு ஒன்றுஞ்செய்யவேண்டாம். விளைப்பந்தல் போட்டு தாளிகட்டவேண்டாம். மற்றக் காரியங்கள் ஒன்றுமே செய்யவேண்டாம். நாங்கள் வருகிறதினம் பிற்பாடு எழுதுகிறேன். வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவும்.

வீராசாமி அய்யர் சொற்படி,
சுந்தரம்.

இதைப் கோபாலஸ்வாமி அய்யர் உரக்க வாசித்தார்.

'அது ஆர் சுந்தரம்?' என்றார் வீராசாமி அய்யர்.

'வண்டிக்காரன் பெயரென்ன?' என்றார். அத்தான்.

'வண்டிக்காரனுக்கு ஒரு எழுத்துக்கூட எழுதத் தெரியாது. நீரென்ன அவனையே சொல்லுகிறீரே?' என்றார் இராஜகோபாலையர்

'இல்லை. இல்லை. பின்னேயிதையாரெழுதினது?' என்றார் அத்தான்.

'கிழவன்றான்' என்றார் இராஜகோபாலையர்.

கோ—கிழவனுக்கெழுதத் தெரியுமோ?

பெரிய இராம—எனக்குத் தெரிந்த வரைக்கும் பேசவே யன்றித் தெரியாதென்றே நினைக்கிறேன்.

மருமக இராம—அவனுக்கெழுதவே தெரியாது.

சேஷையா—வேறு யாரிடத்திலாவது சொல்லி யெழுதியிருக்கவேண்டும்.

கோ—அதுவாகவே! இரண்டும் நன்றெழுதின கடிதத்திலும் இதிலும் கையெழுத்து ஒன்றாயிருக்கிறதா பார்ப்போம்.

மரு இராம—இதோ இருக்கிறது அந்தக் கடிதம் என்று தன் சொக்காய்ப் பையிலிருந்து கடிதத்தை யெடுத்து கோபால்சாமியையிடத்திற் கொடுத்தான்.

கோபால்சாமி இவ் இரண்டையும் ஒத்திட்டுப்பார்த்து ஒன்றுக்கொன்று கிஞ்சித்தும் ஒத்திலே, வேறு மநிதருமாயிருக்கின்றது! என்றார்.

பெரிய இராம—அப்படியென்றால் மூன்றுபேராவது சம்பந்தப்பட்டிருக்கவேண்டும்.

வீரன்—ஆமாம் தந்திகொடுத்தவன் 1, கடிதம் இப்பொழுது எழுதினவன் 2, பெண்ணைப்பற்றிக் கடிதம் எழுதினவன் 3.

இராஜ—இதில் கிழவன் ஒருவன்.

அ—வண்டிக்காரன் ஒருவன்.

கோ—அத்தான் வண்டிக்காரனே விடமாட்டார்போலிருக்கின்றது.

அ—இல்லை, அவன்பேரில் எனக்கு மெத்தச் சந்தேகமுண்டாகியிருக்கிறது.

என்றுசொல்லி முடிக்குமுன் உள்ளேயிருந்து மணி 10-அடித்தது. கிழவன் இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு மணி 10-அடித்தவுடனே, 'மணியோ 10-ஆய்விட்டது, இனிமேல் யோசித்துக்கொண்டிருப்பதில் காரியமில்லை பையனோ பட்டினிகிடக்கிறான், எப்பொழுதோ காலையில் சாப்பிட்டது' என்றார்.

3-ம் வ—பெரிய கேஸ்தான் போலிருக்கிறது.

4-ம் வ—ஆமாம், எஸ்டேட் ஒரு மாமூல் வழக்கத்தைப் பற்றிய கேஸாம்.

3-ம் வ—இந்த அப்பீல் அநேகமாய் டாழியாகுமோ? எனக்கொன்றிருக்கிறது.

4-ம் வ—இது இன்னும் 4-5 நாள் செல்லும், இராஜகோபாலையர் பேச ஆரம்பித்துவிட்டால் என்னமோ தங்கள் வீட்டுச் சொத்து போய்விட்டாற்போல்தான்.

2-ம் வ—மிகவும் 'க்ளியர் அண்ட் அனாலிடிகல் ஹெட்' அவரது.

3-ம் வ—எஸ், எஸ், பிட் டு பி தி லீடர் ஆப்-தி-பார்.

1-ம் வ—என்ன ஸார், அவர் வீட்டுக் கலியாணம் என்னமோபோ லிருந்ததாமே.

2-ம் வ—நீங்கள் வரவில்லையோ? ஜோராய்த்தானிருந்தது.

1-ம் வ—யாரோ ஒரு கிழவன் போக்கிரித்தனமெல்லாம் செய்தானாமே.

3-ம் வ—ஆமாம்! ஸார்? நானுமப்படித்தான் கேள்விப்பட்டேன். பாருங்களேன்! என்ன போக்கிரித்தனம்! என்ன ஆச்சரியம்! கொயட் ஏ வொண்டர் ஸார்

4-ம் வ—அதற்கென்ன ஸ்டெப்ஸ் எடுத்துக்கொண்டார்களா?

1-ம் வ—நீங்கள் ஹிண்டு பார்க்கவில்லையோ? அதில்தான் நோட்டீஸ் போட்டிருக்கிறார்களே.

4-ம் வ—நான் பார்க்கவில்லையே!

1-ம் வ—பார்க்கர்! 14-வது ஹிண்டு கொண்டுவா.

2-ம் வ—மெயிலில்கூட இருக்கிறது; நான் பார்த்தேனே பார்க்கர்! அப்படியே 15-வது மெயில் கூட கொண்டுவா.

பார்க்கர் இரண்டு பேப்பரையும் கொண்டுவந்தான்.

1-ம் வ—ஹிண்டிலிருந்து ஒரு வாக்கியம் வாசித்தார், அது ஆங்கிலேயத்திலிருந்தது. அதை வாசிப்பவர்களுக்காக மொழிபெயர்க்கிறேன்.

100-ரூபாய் வெகுமதி.

ஒரு கிழவன், அறுபது வயதாம். பெயர் கந்தன், நீட்டு மீசை, மூக்கு நீண்டிருக்கும், நிறம் கரிபூசியதுபோலிருக்கும். அநேகமாய்த் தலையில் முண்டாசும் கையில் தடியும் வைத்துக்கொண்டிருப்பான். ஸம்ஸ்கிருதம் கலந்தபாஷையில் பேசுவான். வாயில் எப்பொழுதும் வெற்றிலைதரித்திருப்பான். இவ்வளவு அடையாளமுள்ளவனைப் பிடித்துப் போலீசார்வசம் ஒப்புவிப்பவர்களுக்கு 100-ரூபாய் வெகுமானங்கொடுக்கப்படும்.

இதை வாசித்தவுடன்,

1-ம் வ—இப்படி யெல்லாமானால் அவன் அகப்படுவான்.

2-ம் வ—இதைக் கேளுங்கள்.

அவரும் மெயிலிலிருந்து ஒரு வாக்கியம் வாசித்தார் அதையும் மொழிபெயர்க்கிறேன்.

வேடிக்கையான சமாசாரங்கள்.

கூடலூரிலிருந்து ஒருவர் எழுதுகிறார். தந்திகளை நம்பவேண்டாம். தந்தியடித்தால் உண்மையென்றும் அதில் பொய்யிருக்காதென்றும் இதுவரையு மெல்லாரு மெண்ணியிருந்தனர். இனிமேல் தந்திகளைக்கூட நம்பக்கூடாது. இவ்வூரில் பிரபலமான வக்கீல் இராஜகோபாலையர் குமாரத்திக்குக்கலியாணம் ஆனபொழுது அவர் சம்பந்திக்கும் பிள்ளைக்கும், வரவேண்டாமென்று யாரோ தந்தியடித்து விட்டனராம். கிரகப்பிரவேசத்திற்கு இவர்கள் தஞ்சாவூருக்குப்போவதற்கு முந்தி கிரகப் பிரவேசமில்லையென யாரோ தந்தியடித்து விட்டனராம் ஆகையால் எல்லோரும் ஜாக்கிரதையாயிருங்கள்".

கல்யாண இடையூறுகள். கூடலூர். ம-ள-ள-ஸ்ரீ, இராஜகோபாலையர். வீட்டுக்கலியாணத்தில் முதல்நாள் சம்பந்தி வரவில்லையாம். யாரோ பொய்த்தந்திபடித்து விட்டார்களாம். மூன்றாநாள் காசிமாலை போய்விட்டதாம். நான்காம் நாள் இராத்திரி மருமகப்பிள்ளையை யாரோ ஒரு கிழ

வன் எங்கேயோ அழைத்துப்போய்விட்டானும், கிரகப்பிரவேசத்திற்குத் தஞ்சாவூர்போனபொழுது யாதொரு ஏற்பாடும் செய்யமுடியாமல் பொய்த்தந்தியடித்து விட்டாராம். இவைகளைக் கேட்க மிகவும் விசனப்படுகிறோம்.

இவற்றை இரண்டாவது வக்கீல் வாசித்தார்.

3-ம் வ—நல்ல வேடிக்கை ஸார் இது! இதுவரைக்கு மொருவருமகப்படவில்லையோ?

இதுவரைக்கும் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்த 5-ம் வக்கீல், பேப்பரினின்றும் நிமிர்ந்து 'யாரோவொரு வண்டிக்காரனை ஸ்டேஷனில் பிடித்து வைத்ததாகக் கேள்விப்பட்டேன் ஸார்' என்றனர்.

2-ம் வ—அவர் வண்டிக்காரனன்று. சம்பந்தியகத்திலொருவர் தந்தியாபீஸ் சமீபத்தில் இவனைப் பார்த்தாராம், அதன்பேரில் அவனைப் பிடித்துவைத்ததாகக் கேள்வி.

1-ம். வ—அவனை விட்டுவிட்டாராமே. சம்பந்திகளில் ஒருவர் இவனை ஸ்டேஷனில் வைத்தால் உண்மை வெளிப்படுமென்றனராம். அதன்பேரில் போலீசார் அவனைப்பிடித்து அனேக விதமாய் உபத்திரவப்படுத்திக் கேட்டும் அவனொன்றுஞ் சொல்லவில்லையாம். அதன்பேரில் விட்டுவிட்டார்களாம் என்று இதுபோன்ற வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது பேசப்பட்டவர் அங்கு வந்து சேர்ந்தனர்.

1-ம். வ—வாருங்கள். அப்பீல் என்னமாயிற்று?

இராஜு—துரை சாப்பாட்டுக்குப் போய்விட்டார். மார்க்கர் லெமனேட் 1-புட்டி கொண்டுவா.

2-ம் வ—யார்பக்கம் இருக்கிறான் துரை?

இராஜு—அவனுக்கென்ன பூல், முட்டாள், எல்லாப் பக்கமுமிருப்பான். இப்பொழுது நான்பேசினால் என்பக்கம் இருக்கிறாப்போலிருப்பான். நாளை யவன் பேசினால் அவன் பக்கமிருப்பான்.

3-ம். வ—நகையைப்பற்றி யேதாவது தெரிந்ததோ?

இரா.—ஒன்றுமில்லை, என்று விட்டு லெமனேட்புட்டியை உடைத்துச் சாப்பிட்டுவிட்டு ஏதோ ஒரு சட்டபுத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

இவர் சட்டபுத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது, ஒருவராகிலும் மற்றவரோடு பேசினாரில்லை.

இப்படியாக இவரிருக்கும் பொழுது 1-மணி நேரங் கழித்து, ஒரு சேவகன் வந்து துரை தங்களைக் கூப்பிடுகிறாரென்றான். இவரெழுந்து போய்விட்டார்.

1-ம். வ—இராஜகோபாலையா எப்பொழுதும் லாபுக்கையே பார்த்துக்கொண்டிருக்கிறார் ஸார்.

3-ம். வ—இந்த கேஸில் 500 ரூபாயாவது இருக்குமா?

2-ம். வ—என்னப்பச் சொன்னீர்! 1000 ரூபாய் வாங்கிக்கொண்டுதானே கேஸைப்பார்த்தார்.

இதுபோன்ற இதர விஷயங்களில் இவர்கள் காலங் கழித்துக்கொண்டிருந்தார்கள்.

இராஜ கோபாலையர் கோர்ட்டில் 5-மணிவரைக்கும் இருந்துவிட்டு வீடுவந்து சேர்ந்தார். வந்ததும், உடுப்புகளை கழற்றிவைத்துவிட்டு கால் கையலம்பி உடம்பு முழுவதும் ஈரத்துணியால் துடைத்து வேறு வேஷ்டி கட்டி அங்கவஸ்திரம் தரித்து சிற்றுண்டிகள் சிலவற்றையுண்டு நீர்பருகி, வாசலில் ஒரு நாற்காலியின்மேல் வந்து உட்கார்ந்தார் இவர் வீட்டிற் கெதிரில் கோவில் குளமாதலால் குளிர்ந்தகாற்று வீசிக்கொண்டிருந்தது உட்கார்ந்து ஏதையோ யோசிப்பவர்போல் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கையில் நாராயணஸ்வாமி அய்யர் வருவதைக் கண்டார். இராஜகோபாலையர் வந்தவரைநோக்கி 'வாருங்கள் உட்காருங்கள் என்று திண்ணையைக் காண்பித்தார். திண்ணையில் உட்கார்ந்ததும் சற்றுநேரம் சும்மாவிருந்து, பிறகு 'கோர்ட்டில் இன்றையதினம் அதிகவேலைபோலிருக்கின்றது' என்றார்.

அதற்கு மற்றவர் யோசனையிலிருந்து விழித்துக் கொண்டவர்போல் 'ஆம்! இன்றையதினம் ஒரு அப்பீல்

அதற்கு நான் முழுவதும் பேசாப்படியாய்க் கேட்டது' என்றனர்.

இதைக்கேட்டதும் பக்கத்தவர் 'ஒரு சமாசாரம் சொல்லலாமென்று வந்தேன். மிகவும் சிரமம் போலிருக்கின்றதே' என்று சந்தேகத்துடன் தாழ்ந்த குரலாயும் மொழிந்தனர்.

இதற்குமுன்பு இராஜகோபாலையரிடத்தில் நாராயணஸ்வாமி ஐயர் அநேக கேள்விகளைக் கொண்டுவந்து விட்டிருக்கிறபடியால், இப்பொழுதும் ஒருவேளை விஷயமாய் வந்திருக்கிறாரென் றெண்ணங்கொண்டு, 'மிகவும் முக்கியமானதாய் இருந்தால் சொல்லலாம். இல்லாவிட்டால் நாளையதினம் ஆகட்டும்' என்று சிரமத்துடன் பதிலுரைத்தார். அதற்குத்திருமாலி ஐயபேதயங்கொண்டவர் 'அதிக முக்கியமோ? சிறிது முக்கியமோ? அவசியமோ? அது தங்களுக்குத்தான் தெரியும். நம்முடைய கலியாணக் கைங்கர்யப்பற்றிச் சிற்றுபலன் அகப்பட்டிருக்கின்றது வேண்டுமென்றால் இப்பொழுது சொல்லுகிறேன். இல்லாவிடில் தாங்கள் சொல்லியபடி நாளையே ஆகட்டும்' என்று புன்சிரிப்புடனும் சிறிது வருத்தத்துடனும் மொழிந்தனர்.

வக்கீல் 'நம்முடைய வண்டிக்காரன் பேரிலேயா? அவன்மிகவும் நல்லவன், அவனை அத்தான் பேச்சைக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்தேன். எனக்கு இஷ்டமேயில்லை. அத்தான் ஒரேபிடிவாதமாய் அவன்தான் செய்திருப்பின் என்றனர் பாவம், போலீசார் அவனைப் பலவிதத்திலும் தொந்தரவு செய்தார்கள். அவனே செய்திருந்தாலும் அவனை வெளிசெய்வதிலும் எனக்கிஷ்டமில்லை. ஆகையால் தாங்கள் தயவுசெய்து அவன்பேரிலாயிருந்தால் சொல்லாமல் விட்டுவிடலாம்' என்று சாய்ந்துகொண்டிருந்தவர் எழுந்து உட்கார்ந்து சிறிது ஊக்கத்துடன் மொழிந்தனர்.

தரகு வியாபாரமுடைய மற்றவர் 'நான் முன்னமேயே வண்டிக்காரன் செய்திருக்கமாட்டான் எனச் சொல்லவில்லையா? அவன் பரம சாது. இதுபோன்ற விஷயங்களுக்கு

அருகிலும் அவன் செல்லவே மாட்டான். எனக்கு அவன் பேரில் சிறிதேனும் சந்தேகமில்லை. நான் சொல்வது வேறு என்று மிகவும் வண்டிக்காரன்மேல் பச்சாபாதத்துடனுரைத்தனர். அதற்கு பீ.ஏ. பீ எல். பாஸ்பண்ணினவர் 'தங்களுக்கு எங்கே சந்தேகம் விழுந்திருக்கின்றது? என மிக்க ஆவலுடன் வினவினார்.

ஒன்றும் பாஸ்பண்ணாத மற்றவர் 'நான் நிச்சயமாய்ச் சொல்லமாட்டேன். நடந்தசங்கதியைச் சொல்லுகிறேன். அதற்குமேலவன்மேல் சந்தேகப்படுதல் தகுதியா யல்லவா என்பதைத் தாங்களே யூகித்துக்கொள்ளலாம்' என்று சொல்லி மறுமொழியை எதிர்பார்ப்பவர்போலிருந்தனர்.

இராஜகோபாலையர் 'நீங்கள் நின்று விட்டதைப்பார்த்தால் நானேதாவது சொல்லவேண்டும் போலிருக்கிறது. நான் முன்னாலேயே தங்களிடத்தில் இது விஷயத்தை விட்டுவிட்டேன். ஆகையால் தாங்களே கண்டுபிடித்துக்கொண்டு, திருடனைக் கொண்டுவந்தால் சட்டப்படி நான் நடத்துகிறேன். ஆயினும் என்னுதவிதங்களுக்கு வேண்டுமென்றிருந்தால் என்னாலானதைச் செய்கிறேன். அப்பொழுதும் முக்கியமானவர் நீங்கள்தான்' என்று புன்சிரிப்புகொள்ளுபவர்போல் உதட்டை வைத்துக்கொண்டு கூறினார்

இம்மாதிரியாக இவர்கூறவே, நாராயணஸ்வாமி அய்யர் 'நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. நானே எல்லாம் செய்துவிடுவேன். ஆனபோதிலும் தங்களிடத்தில் சொல்லிவிட்டுச் செய்யலாமென்றிருந்தேன். இன்றையதினம் நான் கூடலூர்போன சமாசாரந் தங்களுக்குத் தெரியுமே?' கூடலூர்போய்த் திரும்புகிற பொழுது மணி 3-இருக்கும் உப்பனாற்றுப் பாலத்தைவிட்டுக் கீழே யிறங்கினதும், என்முன்னே இருவர் போகக்கண்டேன். அதிலொருவன் சூத்திரனாயும் நான்பார்த்த கிழவன்போலுமிருந்தான். ஆனால் அந்தக் கிழவனுக்கு மிவனுக்குஞ் சில வேறுபாடுகள் காணப்பட்டன. அவன் மூக்கும் மீசையும் இதைப்போலவே யிருந்தது. ஆனாலவ்வளவு கறுப்பு இல்லை. தொனியும் சிறிது வேறுபட்டிருந்தது. ஆனா

போகிறும் அந்தக் கிழவனை பிலனென்ற சந்தேகம் என் மனத்திலொருவாறுபடவே, நான் அவர்களைப்பார்க்காதவன் போல் பின்னாலேயே சென்றேன். அதில் ஒருவன் கிழவனைப்பார்த்து 'என்ன அண்ணே! உடம்பு என்னமோ போலிருக்கிறது' என்றான். கிழவன் 'இரண்டு மூன்று நாளாய் அலைந்தேன் அந்தப்பார்ப்பான் பேச்சைக்கேட்டுக்கொண்டு. அது இப்பொழுது என்னமோ செய்கிறது' என்றவன்?' என்ன அலைச்சல் என்று வினவினான் மற்றவன். அதற்குக்கிழவன் 'வக்கீலையா வீட்டிலே கலியாணமாயிற்றே இல்லையோ, அந்தக் கலியாணத்தில் ஒரு பார்ப்பான், 30 வயதிருக்கும். என்னைவிட்டு கலியாணப்பிள்ளைக்கு இந்த கடிதத்தைகொடு, எழுதினவனை மாத்திரம் சொல்லாதே. அவரேதாவது கேட்டால் இரண்டுமைல் தூரத்திற்கப்பால் எழுதினவரைக் காட்டுகிறேன் என்று அழைத்துப் போய்ப் பிள்ளையைக் கொன்றுவிடு என்றான். இந்தப்பார்ப்பாரப்பயல்களுக்கு இரக்கமென்கிறதே யிருப்பதில்லை. நானழைத்துப்போன அந்தப் பிள்ளையாண்டான் அழகாயிருந்தான். கொல்லுகிறதா வேண்டாமா என்று யோசித்தேன். சீச்சீ! நமக்குப் பார்ப்பான் கொடுத்தது 10-ரூபாய் இதற்காகவா பிள்ளையைக் கொல்வதென்று பிள்ளையைவிட்டுவிட்டு அந்தப் பார்ப்பானிடத்தில் போய்ச்சொன்னேன். அவன் என்னைதிட்டு திட்டுகிறான். அந்தப்பார்ப்பான். சீச்சீ, அந்தத்திட்டு நாம் திட்டமாட்டோம்!' என்று கிழவன் மற்றவனை நோக்கிச் சொல்லிக்கொண்டிருக்கையில் என்னைப் பார்த்துவிட்டு சொல்வதை யெல்லாம் நிறுத்திவிட்டான். நான் யோசித்தேன். நல்ல சந்தர்ப்பத்தில் நிறுத்திவிட்டான். ஒளிந்து கொள்ளலாமா என்றும் யோசித்தேன். அவர்கள் பார்த்தபிறகு ஒளிவதில் பிரயோஜனமில்லை எனக் கண்டுகொண்டு அவர்களிடத்திலேயே நேரேபோய் 'அந்தப்பார்ப்பான் யார்' என்றேன், அவன் சித்தஸ்வாதீன மில்லாதவன்போல் சிரித்தான். மது குடித்திருந்தான் போலும். 'உள்ளதைச்சொல்! உனக்கேதாவது வெகுமதிசெய்கிறேன்' என்றேன். 'சொல். தொல், பொல்,

கொல், மொல், வொல்,' என்று வரிசையாய் மொழிந்துகொண்டேபோய் 'பார்ப்பானிடத்தில் சொல், பழங்கூழைத்தின், இந்தப் பார்ப்பாரப்பயல்களையெல்லாம் நம்பலாமா?' என்றான். நான் அவனைக்கேட்பதில் பிரயோஜனமில்லை யெனத்தெரிந்துகொண்டு பேசாமல் கூடவேபோனேன். சூரப்பநாய்க்கன் சாவடிமார்க்கமாய்க் கிழவன் திரும்பிச்சென்றான், மற்றவன் நேரேபோனான். யாமெம்மார்க்கஞ் செல்வதெனக் கலங்குங்கால், என்புத்தி மற்றவன் மார்க்கம் செல்ல அவனைப் பின்பற்றிக் கண்டு 'உன் கூடவந்தவன் யார்?' என்றேன். 'எனக்கு ஒன்றுந்தெரியாது. கூடலூரிலிருந்து நான் வந்து கொண்டிருக்கும்பொழுது அவனைப் புகையிலைக் காம்பு கேட்டேன். சிறிது கொடுத்தான். அவன் முகம் வாடி யிருப்பதைக்கண்டு, அண்ணை என்பது முதலாக முன்சொல்லியபடி நடந்த சம்பாஷணையை அவன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, 'நிறுத்து உனக்கு அவன் பெயர் தெரியாதா?' என்றேன். 'எனக்கவனைப்பற்றி வேறேயொன்றுந் தெரியாது' என்றான். நான் சற்றுயோசித்துக் கிழவனெங்கே போகிறான் பார்ப்போம், என்று கிழவன் மார்க்கமாய்ப் போனேன். ஒரு பர்லாங் முன்னே சென்றுகொண்டிருந்தான். பார்த்துக்கொண்டே போனேன். வேறுபாதைவழியாய்ச்சென்றனன். யானும் அவ்வாறே போனேன். அங்கே ஒரு குடிசையிற் புகுந்துகொண்டான். அந்தக் குடிசையை அடையாளப் பார்த்துக்கொண்டு, அக்கம் பக்கங்களில் விசாரித்தேன். அவன் பெயரை உத்தண்டி என்றார்கள். 'வேலையென்ன' என்றேன். 'கூலிவேலை' என்றார்கள். 'நிலம் இருக்கிறதா?' என்றேன். 'இல்லை, அவன் இங்கேவந்து நான்குமாதமாயிற்று, அந்தக் குடிசையில் குடியிருக்கிறான்' என்று இவ்விஷயங்களை விசாரித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். இதற்குமேல் யோசனை தாங்கள்தான் சொல்லவேண்டும்" என்று நாராயணஸ்வாமி அய்யர் அரைமணிநேரம் மெதுவாகப் பேசி முடித்தார்.

இவர் முடித்ததும் இவர் பேச்சை மிகுந்த ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்த இராஜகோபாலையர் சட்டென எழுந்து உட்கார்ந்துகொண்டு 'நங்களோடு கூடவந்தவன் பெயர் என்ன?' என்றார். அதற்கு நாராயணஸ்வாமி அய்யர் எதையோ யோசிப்பவர் போலிருந்து 'அந்தக்கிழவனோடு வந்தவன் பெயரா' எனக் கேட்டார் இவர் திரும்பிக்கேட்குமளவுங் கூடபொறுக்காமல், இராஜகோபாலையர் 'ஆம்' என்றனர்.

நாராயணஸ்வாமி அய்யர் மிகவும் வருத்தத்துடன் 'அடடா! நான் செய்கிற வேலையெல்லாமிப்படிதான். அவன் பெயரைக்கேட்க மறந்துவிட்டேனே! அடடா! என்ன புத்தி கெட்டத்தனம்! இப்படித்தானையா நான் செய்கிறதெல்லாம்! அவனிருக்கிற விடத்தையாவது கேட்டேனா? அதுவுமில்லை. என்னைப்போல் மதியீனர்களுமுண்டோ?' என்றுதாழ்ந்த விசனமடைந்த குரலுடன் மொழிந்தனர். வக்கீல் 'அவன் பெயரும் தெரிந்திருந்தால் இரண்டுபேர் சாக்ஷிகள் கொண்டுபோய் மாட்டிவிடலாம். இப்பொழுதும் பரவாயில்லை. நம்முடைய சாக்ஷியமே போதுமானது. பார்ப்போம். அவன்பெயர் உத்தண்டியா?'

நாராயணஸ்வாமி அய்யர்—ஆம்.

வ—நீர்பார்த்த கிழவன் பெயர் கந்தனா?

நா—ஆம் ஆனபோதிலும் உண்மையான பெயரையா அவன் சொல்லுவான்?

வ—அது சரிதான். நாளையதினம் மாஜிஸ்திரேட் முன்பாகப் பிராது செய்வோம்.

நா—ஆமாம். அதுதான் நல்லவழி. ஆனபோதிலும் எனக்கொன்று தோன்றுகிறது. அவன் வீட்டை சோதனை போட்டால்,—

வ—சோதனையில் ஒன்றுமகப்படாது. அவன் சொன்னதிலிருந்து பார்த்தால் ஒரு பிராமணன் தூண்டி செய்திருக்கிறான்போலும். அதைப்போல் திருடின நகைகளை யிவன் வைத்திருக்கமாட்டான். அவனிடத்தில் கொடுத்திருப்பான்.

ஆனபடியால் இவன்வீட்டைப் பரிசோதனை செய்வதில் பிரயோஜனமில்லை.

நா—அப்படியல்ல அண்ணா! அவன் பாதிநகைகளும் இவன் பாதிநகைகளுமாகத்தான் வைத்திருப்பான். எப்பொழுது இரண்டுபேர் கூட்டாளிகளோ அப்பொழுது கொள்ளைச்சொத்தை இரண்டுபேரும் சமானமாகத்தான் பங்கிட்டுக்கொள்வார்கள். ஆகையால் கடுக்கன், காசுமாலை, அரைநாண், இவைகளிலேதாவது இவன் வீட்டிலிருக்கும் சோதனைபோடுவது தான் எனக்கு நலமெனத் தோற்றுகிறது.

வ—அதைவிட அவனைச் சேவகர்கள் கையில்பிடித்துக்கொடுத்து, அவர்களைக்கொண்டு உண்மையை விசாரிக்கச்சொன்னால்.—

நா—அப்படியுஞ் செய்யலாம். சேவகர்களிடம் ஒருதரம் அகப்பட்டுவிட்டால் அப்புறம் நகையவனிடத்திலிருந்தாலும், ஒளித்துவிடுவான். ஆகையால் எதற்கும் சோதனை செய்வதே நலம்.

வ—அப்படியானால் செய்வோம். எனக்கு ஏதாவது அகப்படுமென்று தோன்றவில்லை.

நா—போடுவதை சற்று சீக்கிரம் நடத்தவேண்டும்.

வ—நாளைக்குக் காலையிற் போடுவோமா?

நா—செய்கிறது.

வ—விடியற்காலமே புறப்படுவோம்.

நா—இரண்டு சேவகர்களிடத்தில் சொல்லிவைக்கவேண்டுமே.

வ—அதற்கென்ன! இப்பொழுதே சொல்லிவைத்தாற் போகிறது.

என்றுசொல்லி முடித்தவுடன் மணி 7-ஆயிற்று. 'பெரியா' என்றனர் இராஜகோபாலையர். 'ஸ்வாமி' என்றனன் வண்டிக்காரன். 'போய் நான் சொன்னேனென்றுவிட்டு இரண்டுசேவகர்களை அழைத்துவா' என்று கட்டளையிட்டனர் வக்கீல்.

வ—நம்முடைய கலியாணம் எவ்வளவு விந்தையாய் முடிந்தது பார்த்தீர்களா ?.

நா—இருக்கட்டும். நான் திருடனைக் கண்டுபிடிக்கா விட்டால் நான் என்னத்திற்கிருக்கிறேன்.

இப்படியாக இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது இரண்டு சேவகர்கள் வந்து சேர்ந்தனர்.

சேவகர்கள் கும்பிட்டான பிறகு இராஜகோபாலையர் அவர்களைப்பார்த்து 'சூரப்ப நாய்க்கன் சாவடியில் உத்தண்டியென்று ஒருவனையுங்களுக்குத் தெரியுமா ?'

'தெரியாதுங்க' என்று தலை குனிந்துகொண்டு வணக்கத்துடன் இருசேவகர்களும் மறுமொழி பகர்ந்தனர்.

'அவன்பேரில் சந்தேகமாயிருக்கிறது. நாளைதினம் காலையில் சோதனை போடலாமென்றிருக்கிறேன். அதற்கென்னசெய்கிறது?'

நீங்கள் நாளைதினம் காலையில் வரவேண்டியதே.

'அதற்கென்ன! இராத்திரியே திண்ணையில் படுத்துக் கொள்ளுகிறோம்.'

'சரி காலை 7-மணிக்குப் போவோம்' என்று இராஜகோபாலையர் சொன்னதும் 'அப்படியே ஆகட்டும்' என உத்திரவு பெற்றுக்கொண்டு இரண்டு சேவகர்களும் போய்ச்சேர்ந்தனர்.

பிறகு சற்றுநேரம் வக்கீலும் தாருக்காரரும் பேசி இருந்துவிட்டு காலை 7-மணிக்குச் சந்திப்பதாக முடிவு பண்ணிப் பிரிந்தனர்.

மறுநாட்காலை 7-மணிக்கு நாராயணஸ்வாமி அய்யர் இராஜகோபாலையர் அகம்வந்து சேர்ந்தார். இராஜகோபாலையருக்குத் தெரிந்ததும் ஒருஷர்ட், சரிகை அங்கவஸ்திரம், இவைகளைத் தரித்துக்கொண்டு கையில் ஒரு பிரம்புடன் வாசலில்வந்து நின்றார். காலில் ஜோடு மாட்டிக் கொண்டிருந்தார். 'போகலாமா?' என்றார் நாராயணஸ்வாமி அய்யர் 'வாருங்கள். சேவகர்களைக் காணோமே' என்றார் இராஜகோபாலையர்.

வாசலிலெழுதிக் கொண்டிருந்த இவர் குமாஸ்தா, 'எங்கேயோ வெளியேபோனார்கள், இப்பொழுது வருகிறோம் என்றார்கள்' என்றான்.

'சேவகர்கள் உத்தண்டி வீட்டுக்குப்போய் அங்கும் சொல்லிவிடுகிறார்களோ என்னமோ?' என்று மகாவிசனத்துடன் சொன்னார் நாராயணஸ்வாமியையர்.

'அப்படிச் செய்வார்களா?' என்று வக்கீல் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வெறுங்கேள்வியாய் உத்தரித்தார். 'செய்தாலுஞ்செய்வார்கள்' என்று சந்தேகத்துடன் நாகுக்காரர் மொழிந்தவுடனே, 'சேவகர்கள் எந்தப்பக்கம் போனார்கள்?' என்று வக்கீல் குமாஸ்தாவை வினவினார். 'ஆற்றங்கரைப்பக்கம்' என்றான் வினவப்பட்டவன். ஆகையினால் அவன் வீட்டுக்குப்போகவில்லை என இராமகோபாலையர் உறுதியாய்க் கூறினதும் சேவகர்கள் சற்று திரும்பி வருவதைக்கண்டார்கள். சமீபத்தில் வந்தவுடன் 'எங்கே போயிருந்தீர்கள்?' என்று வக்கீல் கேட்டவுடன் 'ஆற்றங்கரைக்கு' என்றார்கள்.

நான்குபேரும் புறப்பட்டனர். வழியில் 'குட்மார்னிங்' 'நமஸ்காரம் என்பவரும் 'வண்டியில்லையோ?' என்பவரும், 'எங்கேயிவ்வளவு தூரம்' என்பவரும், 'வெயிலில் அடடா!' என்பவரும் 'ஒரு கேஸிருக்கிறது. அதத்துக்குப் போயிருக்கட்டுமா?' என்பவருமாய்ப் பலர் பேசிக்கொண்டிருக்க நான்குபேரும் வேறு ஒரு விசேஷமுமின்றி, நாராயணஸ்வாமியையர் சொற்படிச்சென்று ஒரு குடிசையினருகில் போய்ச்சேர்ந்தனர். கதவு மூடியிருந்தது. 'கதவைப்பிடிக்கட்டுமா?' என்றானொரு சேவகன். 'எல்லாரும் திண்ணையில் போயுட்காருவோம்' என்று நாராயணஸ்வாமி அய்யர் சொல்லவே, அப்படியே சிறிதான அத்திண்ணையில் எல்லாரும் போயுட்கார்ந்தார்கள். உலக்கைசப்தமும், ஜலத்தைக் கொட்டுகிற சப்தமும், காலடிச் சப்தமும் உள்ளே கேட்டுக்கொண்டிருந்தது. கதவை இடித்தார்கள். 'யாரது?' என்றது ஒருகுரல். 'கதவைத்திற

என்றார்கள். உடனே ஒரு ஸ்திரீ கதவைத் திறந்தனள். சேவகர்களைக் கண்டதும் மிகவும் பயந்து நின்று கொண்டிருந்தாள். 'உத்தண்டி வீடுதானே இது?' என்றான் ஒரு சேவ 'ஆமாங். அவங்க இங்கேயில்லிங்க' என்றாள் அவள். நாராயணஸ்வாமிஐயர் எட்டிப்பார்த்து, 'அதோ யாரோ படுத்திருக்கிறார்களே, அது யார்?' என்றனர். 'இல்லிங்க. அது. அவங்கதான். அவங்க வெளிலே போரேன்னு சொன்னாங்க. அத்தாட்டு அவங்க இங்க இல்லிங்க' என்று முன் சொன்னதற்கும் பின் சொன்னதற்கும் சம்பந்தமில்லாமல் வாய் குழறிப் புலம்பினாள்.

'இதோ, உண்மையைச்சொல், சும்மா அவங்க இல்லிங்க, இருக்காங்க என்று சொன்னால் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அது ஆரது அங்கே படுத்திருக்கிறது?' என்று மிகவும் உரக்க ஸ்திரமான தொனியுடன் ஒரு சேவகன் கேட்டதும் பாக்கியிருந்த சிறு தயிரியமும் அவளை விட்டோடி 'அவங்கதாங்க, நான் முன்னமே அவங்கதாங்கனு சொன்னேனே!' என்றாள்.

'பின்னே சீக்கிரம் எழுப்பு அவனை' என்று மறுசேவகன் மொழிந்ததும் ஓடோடியும் சென்று தன் புடவையின் முனையினால் அவனைத் தட்டித்தட்டி யெழுப்பவாரம்பித்தாள். 'தோ! என்ன! தோ! பாரேன்! அவங்கதோ! ஐய! தோ! என்னத்தே! ஐய! அவங்க காத்திருக்காங்க ரேன்! ஐய! பாரேன்! தோ!' என்று அர்த்தமில்லாத அனேக பதங்களைப் பிரயோகித்தாள். எழுப்பப்பட்டவன், 'என்டி சும்மா தொந்தரவு பண்ணரே. நாரமுண்டை மவளே! போடி! பில்லேனு சொல்லுடி போடி! என்ன போடிறேக்க!' என்று சொல்லியும் அவள் போகாதபடியால், எழுந்து தலைமயிரைப் பிடித்துக்கொண்டு 'நாலுராவா தூக்கமில்லே, அந்தப் பாப்பான் வந்து வந்து இழவுகொடுத்தான். திருவந்தேபுரத்துக்கும்ம்ம், கூட்ளூருக்கும், இங்கேபோ, இங்கேவானூட்டு, அவங்கொடுத்த இருபது ரூபாய்க்கு. போரும் போராத்துக்கு நீ வந்தியே தேவடியாமவளே!

லீ வெங்கேர்ந்துடிவந்தே' என்றுசொல்லிக்கொண்டு தலையில் குட்டியும், முதுகில் உதைத்தும் கீழேதள்ளி வயற்றிலுதைத்தும், கையால் அடித்தும், ஆக இவ்விதமான சிக்ஷைகளை பவன் செய்துகொண்டிருக்கும்போது சேவகர்கள் விலக்கினார்கள். இராஜகோபாலையரும் நாராயணஸ்வாமியையரும் யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

'பார்த்தீர்களா? அண்ணா! அவன் சொல்லுகிற வார்த்தையை! நான் சொல்வது பொய்யோ மெய்யோ நீங்களேயறிந்துகொள்ளுங்கள்.'

'இப்பொழுதுதான் எனக்குத் தங்கள் வார்த்தையில் நம்பிக்கை வந்ததோ? நேற்றையதினம் தாங்கள் சொன்னபொழுதே நான் நம்பிவிடவில்லையா? தங்கள் வார்த்தையை நம்பாவிட்டால் வேறுயார் சொல்வதை நான் நம்பப்போகிறேன்?' என்று நாராயணஸ்வாமியையரைப் புகழ்ந்துகொண்டதும் சேவகர்கள் உள்ளேயிருந்து அந்த ஆளைக்கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

இராஜகோபாலையர் அந்த ஆளைப்பார்த்ததும்
'உன் பெயரென்ன' என்று கேட்டார்.

'உத்தண்டி' என்றான். இவன் நிறுத்தி யோசனை செய்து சொன்னதில் எல்லோரும் ஒருவரைப்பார்த்து மற்றொருவர் புன்னகைகொண்டனர்.

'உனக்கு வேறே யேதாவது பேருண்டா?'

'இல்லே' இந்த பதில் சொல்வதற்கு இரண்டு நிமிஷம் பிடித்தது.

'ஏன் மெதுவாய்ப் பதில்சொல்லுகிறாய்? கேட்டவுடன் சொல்' என்றான் சேவகன்.

பதில் ஒன்றுமில்லை.

'உனக்குக் கந்தனென்று பெயர் இல்லையா?'

'இல்லிங்க'

'உள்ளே யாரோ ஒரு பார்ப்பானைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தனையே அவன் யார்?'

'எனக்கொன்றுந் தெரியாதுங்க.'

'உனக்கென்ன தெரியாது? நீ யிப்பொழுது உள்ளே யாரோ ஒரு பார்ப்பானைப்பற்றித் திட்டிக்கொண்டிருந்தனையே!'

'எனக்கொன்றுந் தெரியாதுங்க.'

'என்னடா! சொன்னபதிலையே சொல்லுகிறாய்? நீ யிப்பொழுது ஒரு பார்ப்பானைப்பற்றித் திட்டவில்லையா?'

'எனக்கொன்றுந் தெரியாதுங்க.'

'என்னதெரியாது?' என்று சேவகன் தன் கையால் உத்தண்டியை யடித்தான்.

இராஜகோபாலையர் 'வேண்டாம், வேண்டாம், அடிக்க வேண்டாம்' என்றுகூறி ஆளைப்பார்த்து, 'என்னடா முழுப்பூசினிக்காயை ஒருசோற்றுப் பருக்கையில் மறைக்கலாமென்று பார்க்கிறாய், இப்பொழுது ஒரு பார்ப்பானைப் பற்றி நீ யொன்றுஞ் சொல்லவில்லையா?'

'எனக்கொன்றுந் தெரியாதுங்க.'

'அவனைக் கேட்டுப் பிரயோஜனமில்லை. மேலாக வேண்டியகாரியத்தைப் பார்க்கலாம்' என்றார் நாராயணஸ்வாமியையர்.

'சரி! அப்பேன், இந்த ஆளை நீ பிடித்துக்கொள்' என்று இராஜகோபாலையர் ஒரு சேவகனை நோக்கிக்கூறிவிட்டு, மற்றொரு சேவகனை யழைத்துக்கொண்டு நாராயணஸ்வாமியையருடன் உள்ளே போனார். உள்ளே யழுதுகொண்டிருந்த அந்த ஸ்திரியையும் வெளியே போகச் சொல்லிவிட்டு, கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு சோதனைக்கு ஆரம்பித்தார்கள். முதலில் ஒருசட்டியைத் திறந்தார் இராஜகோபாலையர். அதில் பழங்கூழ் இருந்தது. அதிலிருந்து வீசிய புளிப்பினால், வக்கீல் 'நாராயணா! நாராயணா!' என்று வெளியில் போய்விட்டார். கால்மணி நேரம் நாராயணஸ்வாமியையரும் சேவகர்களுமாத்திரந் தான் தேடினார்கள். திரும்பவும் இராஜகோபாலையர் உள்ளே

சென்று 'ஏதாவது அகப்பட்டதா?' என்றார். 'ஒன்றுமில்லை' என அவர்கள் இருவருமொழிந்ததும், 'நான் சொல்லவில்லையா? இத்துடன் தேடினது போதும். இங்கேயவன் ஒன்றுங் கொண்டுவந்து வைத்திருக்கமாட்டான்' என்றார் வக்கீல். 'எல்லாமாய்விட்டது. இன்னுங் கொஞ்சந் தானிருக்கிறது. அதையும் பார்த்துவிட்டுப் போவோம்' என்றார் தரகுக்காரர்.

'மணி 8-ஆய்விட்டது, இன்னுமெங்கே பாக்கி? நானுந் தேடுகிறேன்' என்று வக்கீ லியம்பினதும் சேவகனொருவனிசையைக் காண்பித்தான்.

இராஜகோபாலையர் ஒரு பானையைத்திறந்து 'கம்பு' என்று கீழேகொட்டினார். மற்றொரு பானையைத்திறந்து 'கேழ்வரகு' என்று கொட்டினார்.

மீதியிரண்டு பேர்களும் பொதுவாய்ச் சாமான்களைச் சட்டியில் வைத்துக்கொண்டு தேடுகிறதும், கையால் சட்டிக்குள் தடவிப்பார்க்கிறதுமாயிருக்க இவர் மாத்திரம் சட்டியை யெடுக்கிறதும் கீழே கொட்டுகிறதுமாயிருந்தார்.

'அண்ணா! அண்ணா! அப்படி எல்லாம் செய்யாதேயுங்கள்' என்று நாராயணஸ்வாமியையர் சொன்னதும் பாக்கியிருந்த மற்றொருசட்டியையும் அவ்வாறே கவிழ்த்து 'இது சோளம்' என்று கீழே கொட்டினார் கொட்டினவுடன் சோளம் அல்லாததொருவஸ்து அச்சட்டியிலிருந்தமையால் ஒருவிதமான சப்தஞ்செய்தது. 'இது கடுக்கன்' என்று சிரித்துக்கொண்டு இறைந்தார் இராஜகோபாலையர்.

கடுக்கன் என்றவார்த்தைகேட்டது தான் தாமதம். ஓடி வந்தார்கள் வேறு இடத்தில் தேடிக்கொண்டிருந்த நாராயணஸ்வாமியையரும் சேவகனும். 'எங்கே' என்றார். தரகுக்காரர், 'இதோ' என்று கொடுத்ததைக் கையில் வாங்கிப்பார்த்து. 'பேஷ்! பல் பேஷ்! அகப்பட்டான் திருடன்! கடுக்கன் தங்கள் தம்பியது! எனக்கு நன்றாய்த் தெரியும். என்னிடத்தில் கழற்றிக்கொடுத்து மதிப்புப்

பார்க்கச் சொன்னார். 'அதுதானிது இதுதானது' என்றார் நாராயணஸ்வாமியையர்.

'இது அவனுடையதுதானா? உமக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறதா? என்றார் வக்கீல்.

ஆனால் உங்களுக்குத் தெரியாதோ?

நான் பார்த்ததில்லை. பார்த்திருக்கிறேன். ஞாபகமில்லை. ஒருகடிக்கலை மற்றொன்றினின்றும் வேறுபடுத்தத்தக்க அவ்வளவு நன்றாய்ப் பார்த்ததில்லை.

'ஆனால் தங்கள் தம்பியாருக்குத் தந்தியடியுங்கள். 'ஆமாம் இப்பொழுது அடித்தால் 2½-மணி வண்டியில் வந்துவிடுவான்' என்று சொல்லிக் கொண்டே கடிக்கலைத்திருப்பிப்பார்க்கையில் பின்புறத்தில் வெகுசிறிய எழுத்தில், 'பி. ஆர். அண்ட்ஸன்ஸ். மெட்ராஸ்' என்றெழுதியிருந்தது. அதன்கீழ் இன்னுஞ் சிறிய எழுத்துகளாய், 'ஆர். ஆர். என்றெழுதியிருந்தது. இவற்றை இராஜகோபாலையர் மூக்குக் கண்ணாடி மூலியமாய் வாசித்ததும், 'நாராயணஸ்வாமி அய்யரே! இது என் தம்பியதுதான். அவன் பி. ஆர். அண்ட் ஸன்ஸ் கம்பனியில் வாங்கினதாகவே கூறினான். இதோ பாரும். அப்படியே எழுதியிருக்கிறது. அவன்பெயர் ஆர். ராமஸ்வாமி. அதற்குச் சரியாக இதோ ஆர். ஆர். இருக்கிறது பாரும் என்று வாசித்துக் காண்பித்தார். மூவரும் பிறகு வெளியில் வந்தனர். வெளியில் அசாத்தியகும்பலாயிருந்தது. கும்பலை விலக்கிக்கொண்டு இராஜகோபாலையரும் நாராயணஸ்வாமி அய்யரும் வெளியே வந்தார்கள்.

வக்கீல் இரண்டு சேவகர்களையும் பார்த்து, 'அவனை ஸ்டேஷனுக்குக் கொண்டுவா' என்று சொல்லிவிட்டு நாராயணஸ்வாமி அய்யருடன் போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார்.

அங்கேயிருந்த ரயிட்டர் 'ஏதேனும் அகப்பட்டதா?' என்றார்.

'இதோ இந்தக்கடுக்கன் அங்கேயிருந்தது தான் என்று' இராஜகோபாலையர் தன் கைக்கடுக்கனை ரயிட்டரிடம் கொடுத்தார்.

ரயிட்டர் வாங்கி அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்து அதிலெழுதி யிருப்பதையும் வாசித்துப்பார்த்து, 'அந்த ஆள் எங்கே?' என்றார். 'பின்னால் சேவகர்கள் கொண்டு வருகிறார்கள்' என்றார் நாராயணஸ்வாமி அய்யர்.

'அவனைக் கேட்டாலென்ன சொல்லுகிறான்?'

'அவன் சொல்வதெல்லா மொரேபதில். எனக்கொண்ணுந் தெரியாதுங்க.'

'இங்கேவரட்டும் எல்லாம் தெரியச்சொல்லுகிறேன்' என்றார் ரயிட்டர்.'

'நான் போகிறேன் எனக்கு வேலையிருக்கிறது, நீரிருந்துபார்த்துக்கொண்டு வாரும்' என்று இராஜகோபாலையர் நாராயணஸ்வாமி ஐயரைப்பார்த்துச் சொல்லவே, 'அப்படியல்ல அண்ணா! நீங்களுமிருங்கள்!' என்றார் தாருக்காரர்.

'இல்லை நான்போகவேண்டும். நீங்களேயிருந்து பார்த்து வாருங்கள்!' என்றுவிட்டு இராஜகோபாலையர் மறுமொழி சொல்லுமளவுங்கூட நிற்காமல் போய்விட்டார்.

இவர்போன சற்று நேரத்திற்கெல்லாம் இரண்டு சேவகர்களும் ஆளைக்கொண்டு வந்தார்கள். பின்னால் வந்தகூட்டம் சுமார் இருநூறுபேர் இருக்கும். போலீஸ் ஸ்டேஷனுக்குள் ஆள்போனதும், ரயிட்டர், அவனைப்பார்த்து விட்டு 'உன்பெயரென்ன?' என்றார். 'உத்தண்டி' என மொழிந்தான்.

'உனக்குக் கந்தனென்று பெயரில்லையா?'

'இல்லிங்க'

'அந்தக்கடுக்கன் உன் வீட்டில்தானே யகப்பட்டது?

'எனக்கொண்ணுந் தெரியாதுங்க.'

நாராயணஸ்வாமி அய்யர் சிரித்துக்கொண்டு 'ஆரம்பித்துவிட்டான் வழக்கமானபதில் சொல்வதற்கு' என்றார்.

'இப்பொழுது உண்மையைச் சொல்கிறாயா? இல்லாவிட்டால் நான் செய்கிறதைச் செய்யட்டுமா?' என்றார் ரயிட்டர்.

'எனக்கொண்ணுந் தெரியாதுங்க.'

எல்லோருஞ் சிரித்தார்கள்.

ரயிட்டர் உடனே ஒரு ட்வைன்கயறு ஒரு கெஜம் கொண்டுவரச்சொல்லி கையில் இறுகக்கட்டினார். வெகு ஆழம் பதிந்துபோயிற்று அதன் மேல் குளிர்ந்த தண்ணீர் விடச்சொன்னார். விட்டுக்கொண்டே இருந்தார்கள். ஒரு நிமிஷம் ஆயிற்று. 'ஐயையோ! ஐயோ! இல்லை! இல்லை! என்னை அவிழ்த்து விட்டாலுண்மையைச் சொல்லுகிறேன். விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள். தயவுசெய்து விட்டுவிடுங்கள்' என்று அரவமிட்டான். ஆள் 'உண்மையைச் சொல்கிறாயா?' என்ன. 'சொல்கிறேன், சொல்கிறேன். அவிழ்விடச்சொல்லுங்கள். ஐயோ! ஐயோ! ஐயோ!' என்று கத்தினான். ரயிட்டரும் அவிழ்த்துவிடச்சொன்னார்.

'இந்தக் கடுக்கன் உன் வீட்டில்தானே அகப்பட்டது?'
'ஆமாங்க.'
'அங்கே யார் கொண்டுபோய் வைத்தார்கள்?'
'நான்தாங்க.'
'உன்னிடத்தில் அது என்னமாய் வந்தது?'
'ஒரு கிழவன்—இல்லிங்க அது நான் திருடினேங்க.'
'ஒரு கிழவன்—என்றாயே அதென்ன?'
'அது ஒண்ணுமில்லிங்க.'

'அடே! இவன் உண்மையைச் சொல்லமாட்டேன் என்கிறான். திரும்பவும் முன்போல்செய்.'

'வேண்டாங்க! வேண்டாங்க! சொல்லரேன்! சொல்லரேன்! சொல்லரேன்!'

'ஒரு கிழவன்—என்று ஆரம்பித்தனையே அதென்ன?'

'அது வாய் தப்பிவந்துவிட்டதுங்க.'

'இவன் உண்மையைச் சொல்லவில்லை, யாரடா அது? இவனை முன்போலவே—'

அதற்குள் நாராயணஸ்வாமி ஐயர் மிகவும் பச்சாதாபத்துடன் 'என்னத்திற்கு வேண்டாம். அவன்றான் வாய் தப்பிவந்துவிட்டது என்கிறானே. இவன் கிழவனாயிருப்பதும், கிழவனாய்த் திருடினதும் இவன் மனத்திலேயே இருக்குமாதலால், ஒரு கிழவன் என்று வாய்குழறிச் சொல்லிவிட்டான்' என்று வருத்தப்பட்ட தொனியுடன் கூறினார்.

உடனே ரபிட்டர் 'ஆனால் வேண்டாம். ஐயா வேண்டாமென்கிறார். அடே உத்தண்டி! இனிமேல் யோசித்துச் செவ்வையாய்ப் பதில்சொல்.'

'ஆகா! சாமி! என்னை விட்டுவிடணும்.'
'சரிதான். அந்த நகையை யெங்கே திருடினாய்?'
'திருவந்தீரபுரம் ரோட்டில்.'
'நீ திருடின நகை யார்காதி லிருந்தது?'
'பேர் மறந்துபோச்சுதுங்க'
'அப்படியென்றால் முன்னாலே ஞாபகமிருந்ததோ?'

'இல்லீங்க. தெரியாதுங்க இங்கிரத்துக்கு மறந்து போச்சுதுங்க இன்னேன்.'

'என்னமோ மயங்கி மயங்கிப் பதில்சொல்கிறாய்?'
'இல்லீங்க. இம்மே சரியாய்ச் சொல்றேங்க.'
'அந்த ஐயா பேர் உனக்குத் தெரியாதா?'
'தெரியாதுங்க'
'நீயேன் அதைத் திருடினாய்?'
'அந்தப் பாப்பான் திருடச்சொன்னாங்க.'
'எந்தப் பார்ப்பான்?'
'அவங்க பெயரும் எனக்குத் தெரியாதுங்க.'
'அவன் எங்கேயிருக்கிறது?'
'அதுவுந்தெரியாதுங்க.'
'உண்மையைச்சொல் இல்லாவிட்டால்.—
'உண்மைதாங்க.'

'அந்தப் பார்ப்பானைப்பற்றி உனக்கென்னதான் தெரியும்?'

'எனக்கொண்ணுந் தெரியாதுங்க. நான் ஒருநாள் இப்ப போய்கிட்டே யிருந்தேங்க. அப்ப இந்தப் பார்ப்பான் வந்து நான் சொல்ரதைச்செய், உனக்கு அம்பது ரூபா தாரேன் இன்னுங்க. அதின்பேரிலேதாங்க இப்படியெல்லாஞ் செஞ்சேன். என்னமோ எசமாங்க ஏழையின்மேலே தயவு வச்சு விட்டுவிடணுங்க.'

அதற்குள் நாராயணஸ்வாமி அய்யர் புன்சிரிப்புகொண்டு 'அடே, நீ உண்மையைச்சொல். உன்மேல் பூரணதயைவைப்பார் எஜமான். நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில்சொல் தெரியுமா? ஸார் இதையெல்லாம் எழுதிக்கொள்ளுங்கள்' என்று ரயிட்டரிடம் சொல்லிவிட்டு கிழவனைப்பார்த்து,

'நான் சொல்வதற்கு சரியாய்ப் பதில் சொல்லவேண்டும்.'

'சொல்ரங்க'

'கடலூர் ரோட்டிமேல் ஒரு ஸேயாவை நீதானே படித்தாய்?'

'ஆமாங்க.'

'இதையும் அந்தப் பார்ப்பான் சொல்லியா செய்தாய்?'

'ஆமாங்க.'

'அந்தப் பார்ப்பான் ௫0-ரூபாயா கொடுத்தான்?'

'ஆமாங்க.'

'என்னை யுனக்கு ஞாபகமிருக்கிறதா?'

'இல்லிங்க.'

'கருடநதியில் வந்து 4, ௫-பேர் அடிக்கிறதாகச் சொன்னாயே ஞாபகமிருக்கிறதா?'

'ஆமாங்க, இருக்குதுங்க.'

'நின்னொரு ஸோவினிடத்திலும்போய் என்னிடத்தில் சொன்னதுபோல் சொன்னையா?'

'ஆமாங்க.'

'இதெல்லாம் பாப்பாரு செய்யச்சொன்னுன்?'

'ஆமாங்க.'

'அந்தப் பார்ப்பான் கறுப்பா செகப்பா?'

'கறுப்புங்க.'

'மெலிஞ்சவனிருக்குறா?'

'மொப்பதா இருக்குறாங்க.'

'உன்னிடத்தில் அந்தப் பார்ப்பான் தாலிகொடுத்து அதைக் கொடுக்கச் சொன்னானா?'

'ஆமாங்க.'

'உன்னிடத்தில் ஒரு கடுதாசு கொடுத்தானா?'

'கொடுத்தாங்க.'

'அவனைப்பற்றி ஒன்றும் சொல்லாதே என்று சொன்னானா?'

'ஆமாங்க.'

'தனியாயிருந்தப்போய் பெண்பிள்ளையாண்டாளைக் கொண்டுவா என்றானா?'

'ஆமாங்க.'

'ஏன் சொல்லவில்லை?'

உனக்கென்ன இரக்கம் வந்துவிட்டதோ? இதோபார் பாவம் ஏதி ஆற்றில் பெண்பிள்ளையாண்டாளை போகவேண்டியதெல்லாம் விசாரித்தாயா? 'ஆமாங்க.' 'எல்லாவற்றையும் பார்ப்பானிடத்தில் சொன்னாயா?' 'சொன்னேனுங்க.' 'தாயாரிடம் போய் இருக்குறாய்?' 'ஆமாங்க.' அவர்கள் வீட்டிற்குப் போய் இருக்குறாய்?' 'இல்லிங்க.'

'தபிக்கலா போயிருக்குறாய்?'

'ஆமாங்க.'

'தபிக்கல் போட்டுக்கொண்டிருந்தவர் தானே அவர்கள் வீட்டிற்கும் போட்டிருந்தார், நீயென்ற மனுஷனும் தானா இருக்குவீர்கள்?' 'இல்லிங்க. நான் கம்பேதிருக்கேன். அவனென்றவன் இருக்குறார்!' 'அவர் இருக்கிறது காணுமோ?' 'ஆமாங்க' 'முன்னே காணும் நீ இருக்கலே

சொன்னாயே? 'எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க.' 'கடுக்கன் ஒன்றுதானா உன்னிடத்தில் கொடுத்தார்?' 'ஆமாங்க.' 'மீதியெல்லாம் அவரே எடுத்துப் போய்விட்டார்?' 'ஆமாங்க.' 'அவர் எங்கே போய்விட்டார்?' 'எங்கியோ கப்பலேறிப் போவதாச் சொன்னாருங்க.' 'நீ பார்த்தாயா கப்பலேறிப்போகிறதை?' 'பார்த்தேங்க.' 'புதுச்சேரியிலேயா, கூடலூரிலேயா?' 'புச்சேரியிலேங்க.' 'அந்தப் பிள்ளையாண்டானை பூலோகநாதர் கோயில் வரைக்குமா அழைத்துப்போனாய்?' 'ஆமாங்க.'

இவ்வளவு கேள்விகளையும் நாராயணஸ்வாமி அய்யர் கேட்டுவிட்டு ரயிட்டரைப்பார்த்து, 'இன்னமுங்களுக் கேதாவது வேண்டுமென்றால் கேட்கலாம்' என்றார்.

'அந்தப் பார்ப்பானைப் பற்றி யுனக்கு வேறொன்றுந் தெரியாதா?' 'தெரியாதுங்க.' சேவகர்களுக்கும் ரயிட்டருக்கும், இன்னு மங்கிருந்தவர்களுக்கும் வெகு ஆச்சரியமாகி விட்டது. இக்கிழவன் யாரோ வொரு பார்ப்பானிடத்தில் இன்னதென்றறியாமல் இவ்வளவு குற்றங்களுக்கும் தன்னை யாளாக்கிக்கொண்டானே, இவ்வளவு புத்தி கெட்டவனுமிருப்பானோ? என்று ரயிட்டர் தனக்குத் தானே யோசித்துக் கொண்டு 'உனக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னது ஐம்பது ரூபாயா?' என்று அவ்வாளை வினவினார். எதையோ யோசித்துக் கொண்டிருந்த அந்த ஆள் திடுக்கென இவர் கேள்விக்கு மறுமொழி பகர்வான்கருதி 'அந்த அஞ்நூறு ரூபாயுங்க' என்றான். 'ஐந்நூறு ஐம்பதா?' என்று சேவகன் வினவியதற்கு 'எப்பொழுது?' என்று மறுகேள்வியால் பதிலுரைத்தான். 'நீ யந்தப் பார்ப்பானிடத்தில் எவ்வளவு பணம் வாங்கிக்கொண்டாய்?' என்று விவரமாய்க் கேட்டனர் நாராயணஸ்வாமி அய்யர். 'ஐம்பது ரூபாயுங்க' என்றான். 'முன்னே ஐந்நூறு என்றாயே?' என்று ரயிட்டர் வினவியதற்கு 'ஞாபகமில்லிங்க' என்றான். 'குடித்துவிட்டு வந்திருக்கிறாயோ?' என்றார் நாராயணஸ்வாமி அய்யர். 'அப்படித்தானிருக்கிறது. நேற்று இராத்திரி கள்ளு குடிச்சயோடா?' என்றார் ரயிட்டர்.

'தஞ்சாவூருக்கு நீ யெத்தனை தந்தியடித்தாய்?' 'தெரியாதுங்க.'

உனக்கு வாசிக்கத் தெரியுமா?' 'தெரியாதுங்க.' என்றான்.

நாராயணஸ்வாமி அய்யர் 'நீ தபாலாபீஸுக்கு எத்தனை தரம் தந்தியடிக்கப் போனாய்?' 'ஒரு தரந்தாங்க.'

'எத்தனை நாள் ஆயிற்று?' 'பத்துப்பதினஞ்சு நாளிருக்குங்க'

'அப்புறம் நாலைந்து நாள் கழித்து இன்னுமொரு தந்தியடித்தாயா?' 'ஆமாங்க'

'ஆகவே இரண்டுதரமா தபாலாபீசுக்குப் போனாய்?' 'ஆமாங்க' 'முன்னே ஒருதரமென்றாயே.' 'ஞாதியில்லிங்க' என்றான்.

இந்தஆள் குடித்திருக்கிறான், உளறுகிறான் தகவலில்லாமல் என்று நாராயணஸ்வாமி அய்யர் சொன்னவுடன் 'இந்த ஆள்தானா ஸார் நீங்கள்பார்த்த ஆள்' என்று ரயிட்டர் தாருக்காரனை நோக்கி வினவினார். 'ஆமாம் ஸார், அவனை ஒத்துக்கொண்டானே' என்றார் வினவப்பட்டவர். ரயிட்டர் ஏதோ அதிருப்தியடைந்தவர் போன்று 'அடேய்! அன்றையதினம் இராத்திரி ஸப்மாஜிஸ்திரேட் இராமஸ்வாமி அய்யரோடுபோன சேவகர்கள்யார்? என்ன, 'ஏன்' என்று இரண்டு சேவகர்கள் ரயிட்டர் சமீபமாய் வந்தனர், 'நீங்கள் பார்த்த கிழவன்றானாபாருங்கள்' என்ன 'நாங்கள் செவ்வையாய்ப் பார்க்கவில்லை. அந்த ஆள் இன்னம் கறுப்புப்போலிருந்தானே அல்ல?' என்று ஒருவரையொருவர் வினவிக்கொண்டனர். நாராயணஸ்வாமி அய்யர் 'நான் முன்னமேயே இவ்வாள் அவ்வளவு கறுப்பல்லவென்று சொல்லியிருக்கிறேனே. அந்தக்கேள்வியும் முன்னமேயே கேட்டிருக்கவேண்டியது தான். அப்பேன் உத்தண்டி! நீ யன்றையதினம் மிகவும் கறுப்பாய்க் காணப்பட்டனையே, ஏதாவது பூசிக்கொண்டிருந்தாயா? இல்லை நாங்கள்தான்

இருட்டில் செவ்வையாய்ப் பார்க்கவில்லையோ? என்று கிழவனை நோக்கி வினவினார். 'அண்ணிக்கிங்களா? கரிபூசியிருக்கங்க உடம்பு முழுதும்' என்றான். 'அதுவும் அவா சொல்லித்தானோ?' 'ஆமாங்க' என எல்லாரும் சிரித்தார்கள். ஒரு சேவகன் மற்றொரு சேவகனைப்பார்த்து, 'அந்தக் கிழவன் தொனிவேறுபட்டிருந்தது. அவன் என்னமோ போல் பேசினான்' என்றான். 'ஆமாம். எனக்கும் அந்த சந்தேகம் முன்னமேயிருந்தது. உத்கண்டே! நீ முன்னாலே யொருவிதமாய்ப்பேசினாயே, இப்பொழுது எனிவ்விதம் பேசுகிறாய். அதுதான் சுபாவமான பேச்சா? இல்லை. அன்றையதினம்மாத்திரம் அவ்விதம் பேசினாயா? என்று நாராயணஸ்வாமி அய்யர் அந்த ஆளை நோக்கிக்கேட்டார். 'அண்ணிக்கி அவங்கசொல்லிக் கொடுத்தாங்க. நான் வழக்கமாய் இப்படித்தான் பேசுவேங்க' என்று ஆள் கூறினவுடன் ஒரு சேவகன் இவனைப்பார்த்து 'அந்தமாதிரி இப்பொழுது பேசு பார்ப்போம்.' என்றான். 'அது மறந்துபோச்சுதுங்க' என்றான் ஆள். 'அன்றையதினம் மாத்திரம் உனக்குப் பாடம் பண்ணிக்கொடுத்தானோ பார்ப்பான்?' என 'ஆமாங்க' என்றான் சேவகர்கள் இருவரும் ஒருவரையொருவர் நோக்கி 'எனக்குச் சந்தேகமாயிருக்கிறது' என்றார்கள். ராபிட்டர் என்னசெய்வார். இவனோ ஒப்புக்கொள்கிறான். ஒப்புக்கொள்வதையும் நிச்சயமாய் ஒப்புக்கொண்டால் சரிதான். கேட்டகேள்விக்கு மாத்திரம் பதில் சொல்கிறானேயொழிய, மேலே யொன்றுஞ்சொல்லவில்லை. நாராயணஸ்வாமியையரோ கூடலூர் ரோட்டில் நடந்த சங்கதியைச் சொல்லுகிறார். இராஜகோபாலையர் நாராயணஸ்வாமி அய்யர் இருசேவகர்கள் ஆகிய நால்வரும் இவன் வீட்டில் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டிருக்கிறார்கள். இரண்டு சேவகர்களும் இவனைப்பற்றிச் சந்தேகப்படுகிறார்கள். என்னசெய்யலாம். என்னமாயிருந்தபோதிலும் சட்டப்படி நடக்கத் தீர்மானித்து இவனை மாஜிஸ்திரேட்டுமுன்பாக அழைத்துக்கொண்டு போனார்கள். மணியப்பொழுது 10-இருக்கும் நாராயணஸ்வாமி அய்யர் போஜனம் பண்ணி

விட்டுவருவதாகச் சொல்லிப்போனார். சேவகர்களும் ரயிட்டரும் உத்தண்டியையழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். போகும்வழியில் என்ன என்ன கேள்விகளோ கேட்டார். எல்லாவற்றிற்கும் 'எனக்கொண்ணுந் தெரியாதுங்க' அல்லது 'இல்லிங்க' அல்லது 'ஆமாங்க,' என்று இந்தப்பதிலைத்தவிரவேறொன்றுமில்லை. கடைசியாக மாஜிஸ்டிரேட்டினிடம் $10\frac{1}{2}$-மணிக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

ரயிட்டர் மாஜிஸ்திரேட்டைநோக்கி 'ஐயா' இவன் வக்கீல் இராஜகோபாலையர் வீட்டில் நடந்த அனியாயங்களையெல்லாம் தான் செய்ததாக ஒப்புக்கொள்கிறான். இதோ இருக்கிறது வாக்குமூலம் என்று தான் போலீஸ் ஸ்டேஷனில் எழுதிவைத்ததை எடுத்துக்கொடுத்தார். மாஜிஸ்திரேட்டு அவனை ஏற இறங்க விழித்துப்பார்த்து 'நீயாடா உத்தண்டி?' என்றார் 'ஆமாங்க சாமி! எஜமாங்க மன்னிக்கணம்' என்றான். 'இதோ வாசிக்கிறேன், இது சரிதானாகேள், இந்தப்படி நீ போலீஸ் ஸ்டேஷனில் சொன்னதுண்டா பார்?' என்று மாஜிஸ்திரேட் காகிதத்திலுள்ளதை வாசித்தார்.

என் பெயர் உத்தண்டி. எனக்குக் கந்தனென்று பெயரில்லை. இந்தக் கடுக்கன் என்வீட்டில்தான் அகப்பட்டது. அதை நான் திருடினேன். திருவகீந்திரபுரம் ரோட்டில் திருடினேன். அந்த நகை இன்னவர்காதிலிருந்ததென்று எனக்குத் தெரியாது, அவர் பெயருந்தெரியாது. ஒருபார்ப்பான் திருடச்சொல்லித் திருடினேன். அந்தப் பார்ப்பான் பெயருந்தெரியாது. அவனிங்கு இருக்கிறானென்பதுந் தெரியாது. நான் ஒருநாள் போய்க்கொண்டேயிருந்தேன். அப்பொழுது அந்தப் பார்ப்பான்வந்து 'நான் சொல்வதைச் செய்தால் ஐம்பது ரூபாய் தருகிறேன்' என்றான். அதன் மேலேதான் இப்படியெல்லாம் செய்தேன். கூடலூர்ரோட்டிலே ஒரு ஐயாவை நான்றான் அடித்தேன். இதுவும் அந்தப் பார்ப்பான் சொல்லித்தான் செய்தேன். கருடநதியில் வந்து நாராயணஸ்வாமி அய்யரிடத்தில் 4, 5 பேர் அடிப்பதாகச்சொன்னது ஞாபகமிருக்கிறது. இன்னொரு ஐயாவி

னிடத்திலும் இதுபோலவே சொன்னேன். இதையெல்லாம் செய்யச்சொன்ன பார்ப்பான் கறுப்பு, வயது முப்பதுஇருக்கும். என்னைவிட்டு அவன் தந்திகொடுத்துவரச் சொன்னான். என்னிடத்திலொரு கடிதமும் கொடுத்தான். அவனைப்பற்றி யொன்றுஞ் சொல்லாதே என்றுஞ் சொன்னான். பிள்ளையாண்டானைத் தனியாயழைத்துப்போய்க் கொன்றுவிடு என்றான். ஆற்றிலே பிள்ளையாண்டானை யோகக்ஷேமங்களெல்லாம் விசாரித்தேன், எல்லாவற்றையும் பார்ப்பானிடத்தில் சொன்னேன். நானிரண்டுநகை திருடினேன், அந்தப் பார்ப்பான் ஒன்று திருடினான். நான் திருடினது கடுக்கனும் அரைஞாணும். அவன் திருடினது காசிமாலை. கடுக்கனென்றுதான் என்னிடத்தில் கொடுத்தான். மீதியெல்லாம் அவன் யெடுத்துப்போய்விட்டான். அந்தப் பார்ப்பான் எங்கேயோ கப்பலேறிப்போகிறதாகச் சொன்னான். புதுச்சேரியில் கப்பலேறிப்போகிறதைப் பார்த்தேன். அந்தப் பிள்ளையாண்டானை பூலோகநாதர் கோவில் வரைக்கு மழைத்துப்போனேன். அந்தப் பார்ப்பானைப்பற்றி யெனக்கு வேறொன்றுந்தெரியாது. தஞ்சாவூருக்கு இத்தனை தந்தியடித்தேனென்பது எனக்குத் தெரியாது. எனக்கு வாசிக்கத்தெரியாது. நான் 10, 15-நாளைக்குமுன்னொரு தந்தியடித்தேன். அப்புறம் 4, 5-நாளைக்குப்பிறகு மற்றொரு தந்தியடித்தேன். ஆகவே இரண்டுதரம் போனேன். அன்றையதினம் இராத்திரி உடம்பு முழுவதும் கரிபூசியிருந்தேன். இன்றையதினம் சுபாவமாய்ப் பேசுகிறேன். நான் அப்பொழுது பேசினபேச்சு மறந்துபோயிற்று. அன்றையதினம் பார்ப்பான் எனக்குப் பாடம் பண்ணிக்கொடுத்தான்.

மாஜிஸ்திரேட்—இது நீ சொன்னபடிதானா இருக்கிறது?

உத்தண்டி—ஆமாங்க.

மா—இன்னுமேதாவது சொல்லவேண்டுமா?

உ—நான் என்னாங்க சொல்லப்போறேன். மன்னிக்கணுங்க.

மா—நீ இப்பொழுது சொன்னதெல்லாம் நீயே சொல்கிறாயா? வேறு யாராகிலும் சொல்லச்சொல்லி சொல்கிறாயா?

உ—அப்படின்னா, அது எஜமாங்களுக்குக்கூடத் தெரியுமோ?

மா—எது?

உ—ஒண்ணுமில்லிங்க, எனக்கு சொல்லிக்கொடுத்தது எஜமாங்களுக்கு என்னமாத் தெரியும்?

மா—அப்படியானால் உனக்கு யார் சொல்லிக்கொடுத்தார்?

உ—அதொண்ணுமில்லிங்க எனக்குச் சொல்லிக் கொடுத்தா இன்னீங்களே. அதாங்கேட்டனங்க.

மா—என்னடா உளறுகிறாய்? சொல்வதைச் செவ்வையாய்ச் சொல்லடா.

ரயிட்டர்—இவன் இன்றையதினம் முழுவதும் இப்படித்தான் உளறுகிறான் முன்னுக்கும் பின்னுக்கும் தகவில்லாமல்.

மா—எய்! உத்தண்டி! இப்பொழுது வாசித்ததெல்லாம் நீயேதானடா சொன்னாய்?

உ—ஆமாங்க. நான்தான் சொன்னங்க.

மா—உனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லையே ஒருவரும்?

உ—அதெல்லாம் என்னத்துக்குங்க உங்களுக்கு?

மா—சொல்லிக் கொடுத்தார்களா? இல்லையா? சொல்லடா!

உ—இல்லிங்க, போங்களேன் என்று புன்சிரிப்பு கொண்டான்!

மா—போலீஸார் உபத்திரவப்படுத்தியதனால் சொன்னாயா? இல்லை உண்மையே இதுதானா?

உ—போலீஸாங்களெல்லாம் தொந்தரவு பண்ணுங்க, அதுமேலே தான் சொன்னேன்.

மா—அப்படியென்றால் அது உண்மையல்ல?

உ—உம்மைதாங்க, அவங்க தொந்தரவு பண்ணுங்க.

மாஜிஸ்திரேட்டுக்கு மிகவும் கோபம்வந்து விட்டது. மேஜையை உரக்கத்தட்டி 'நீ சொல்வது உண்மையா? சொல்' என்றார்.

உ—உம்மைதாங்க இங்கேறனே.

மா—உன்கேஸ்வருகிற திங்கட்கிழமை வைத்திருக்கிறது, நீ போகலாம் என்றார்.

கடிதமெழுதி சப்மாஜிஸ்திரேட் இராமஸ்வாமி அய்யரையும் தந்தியடித்து மருமகப்பிள்ளை இராமஸ்வாமியையரையும் வரவழைத்தார்கள்.

திங்கட்கிழமை பகல் 10-மணிக்கு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு முழுவதும் கும்பல்; கிழவன் அகப்பட்டுவிட்டான், இவ்வளவு பாடுபடுத்தின கிழவன் அகப்பட்டுவிட்டான் அந்தக்கிழவனைப் பார்ப்பதற்காகவே அநேகபேர் வந்திருந்தனர். இருதிறத்தார்க்கும் வக்கீல்களில்லை. 10½-மணிக்கு விசாரணை யாரம்பித்தது.

முதல்சாக்ஷி நாராயணஸ்வாமி அய்யர். அவர்சொன்ன சாக்ஷியமாவது :—

இராஜகோபாலையர் வீட்டில் கலியாணம் நடந்தது எனக்குத்தெரியும். நான்காம் நாள் மாலையில் ஐந்து மணிக்கு 'பிள்ளையைக்காணோம்' என்று அரவம் என் காதில்விழுந்தது. நானெழுந்து இராஜகோபாலையர் வீட்டிற்கு ஓடினேன். மருமகப்பிள்ளையைக்காணோம். என்னைக் கருடநதி ரோட்டிற்கு இரண்டு சேவகர்களுடன் போகச் சொன்னார்கள். நான் சிறிதுதூரம் போனவுடன் சேவகர்களைத்தனியே போகச்சொல்லிவிட்டேன் நான்மாத்திரம் கருடநதியில் தேடினேன். மணலிலேயே மேற்குத் திக்காய்ப்போனேன். சிறிதுதூரம் போனபிறகு ஒருகிழவன்

என்னிடத்திற்கு வந்தான். 'ஒருபிள்ளையாண்டானைப் பார்த்தாயா? என்று கேட்டேன். அவன் பிள்ளையாண்டானை நாலைந்துபெயர் அடிக்கிறகாகச் சொன்னான். நான் இடத்தைக்காட்டு என்றேன். சிறிதுதூரம்போய் 'இங்கேயே இருங்கள். நான்போய்ப் பார்த்து வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப்போனான். அரைமணி நேரம்பார்த்தேன். காணோம். நான்போனவழியே நோக்கிச்சென்றேன். அங்கே சப்மாஜிஸ்திரேட் இராமஸ்வாமி அய்யரைக்கண்டேன் என்று சொல்லியபிறகு இதை வாசிப்போர் அறிந்ததெல்லாஞ் சொல்லிக் கூடலூர் ரோட்டில் நடந்த விஷயங்களையுஞ்சொன்னார். பிறகு கோர்ட்டாரவர்கள் கேட்டதின்பேரில் 'நான் கூடலூர் ரோட்டில் பார்த்தது இந்தக் கிழவன்தான். நிச்சயமாய்ச் சொல்கிறேன். இருட்டில் பார்த்தபடியால் ஆற்றங்கரையில் பார்த்தவன் இவனென்று என்றால் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஆயினும் யானறிந்தமட்டும் இந்தக் கிழவன்தான் ஆற்றங்கரைக்கு வந்தவன். இவன் கரிபூசியதும் வேறு தொனியுடனும் பாஷை யுடனும் பேசியதும் உண்மை எனவே தோற்றுகிறது என்று சொல்லிப் பிறகு சனிக்கிழமை காலையில் குடிசையில் நடந்த விஷயங்களும் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த விஷயங்களும் சவிஸ்தாரமாய்ச் சொன்னார். பின்னும் 'இதோ இருக்கிற கடுக்கன் இராமஸ்வாமி அய்யரது. நான் அவரிடமிருந்து வாங்கிப்பார்த்தேன்' என்றுசொல்லி முடித்தார்.

இரண்டாவது சாக்ஷி மருமகப்பிள்ளை இராமஸ்வாமி. இவர் முன்னே தன் தகப்பனாருக்குச் சொல்லிய விதம் முழுவதுஞ் சொன்னார். பிறகு கோர்ட்டாரவர்கள் கேட்டதின்பேரில் 'இந்தக் கைதி நான் பார்த்தகிழவனன்று. அவனுக்கும் இவனுக்கு மனேக வேறுபாடுகளுள. இரண்டு பேருங் கிழவர்கள் என்கிற ஒற்றுமையைத்தவிர வேறொன்றையுங் காணோம். நான் நிச்சயமாய்ச் சொல்லமாட்டேன். ஒருவேளை இந்தக்கைதி அந்தக் கிழவனாயிருந்தாலுமிருக்கலாம். எனக்குத் தெரிந்தவரைக்கும் நானில்லையென்பேன்.

இந்தக் கடுக்கன் எனக்குத் தெரியாது. இராமஸ்வாமி அய்யர் காதில் கடுக்கன் போட்டிருந்ததைக்கூட நான் பார்க்கவில்லை. அவர் கடுக்கன் காணாமற் போய்விட்டது' என்று தான் தெரியும்.

மாஜிஸ்திரேட்டார் கிழவனைப்பார்த்து 'இந்த ஐயாவை ஞாபகமிருக்கிறதா?' என்று கேட்டார். 'இங்க இம்மாத்தம் சொன்னாங்களே எம்மேலே எனக்கு ஞாதியிருக்காதா?' என்றான் கிழவன்.

ஏய்! இந்த ஐயா உன்னைத்தெரியாது என்கிறார். உனக்கு இவரைத்தெரியுமா?

'அவருக்கு என்னைத்தெரியாதுன்னாக்கா எனக்கு மாத்திரம் அவரைத்தெரியுமோ? என்றான் கிழவன். எல்லாரும் சிரித்தார்கள்.

'இவன் பைத்தியக்காரன் போலிருக்கிறது ஸார்' என்று மாஜிஸ்திரேட் இராஜகோபாலையரை நோக்கிக் கூறினார்.

'வேஷம் போடுகிறான். விட்டுவிடுவார்களென்று' எனச் சிறிது கோபத்துடனும் நகையுடனும் மொழிந்தனர் நாராயணஸ்வாமி யய்யர்.

'அப்படித்தானெனக்குந் தோன்றுகிறது' என்றார் இராஜகோபாலையர்.

3-வது சாக்ஷி ஸப்மாஜிஸ்திரேட் இராமஸ்வாமி அய்யர். அவர் சொன்னது இதை வாசிப்போருக்குத் தெரிந்த விஷயம். எல்லாவற்றையும் முடித்து, கோர்ட்டாரவர்கள் கேட்டதின்பேரில் இன்னமும் சொல்ல வாரம்பித்தார். 'எனக்கு இந்தக்கிழவன்பேரில் சந்தேகமில்லை. நான் பார்த்த கிழவன் இவனன்று. நான் நிச்சயமாய்ச் சொல்லமாட்டேன். இராத்திரியில் பார்த்தபடியால் எனக்குச் செவ்வையாய்த் தெரியாது. நானறிந்தமட்டும் இவனன்று. இந்தக் கடுக்கன் என்னுடையதுதான். பி. ஆர். அண்ட்ஸன்ஸ் கம்பெனியில்வாங்கினது. இதில் போட்டிருக்கும் முத்திரை

என் பெயர் தான், நான் போட்டதுதான், எனக்கு நன்றாய்த் தெரியும்.

4-வது சாக்ஷி இராஜகோபாலையர். அவர் சொன்னதாவது ‘நான்சென்ற வெள்ளிக்கிழமை சாயந்திரம் நாற்காலியில் உட்கார்ந்திருந்த பொழுது நாராயணஸ்வாமியையர் என்னிடத்தில் வந்து அடியில் வருமாறு உரைத்தார் என்று நாராயணஸ்வாமி அய்யர் கூறியதெல்லாஞ்சொல்லி, பிறகு ஏற்பாடு செய்ததும் குடிசைக்குச்சென்றதும், ஆங்கு அவர் கேட்டதும் கண்டதும் சொன்னார். கோர்ட்டாரவர்கள் கேட்டதின்பேரில் பின்னுஞ் சொல்கிறார்:—இந்தக் கடுக்கன் நான்றானெடுத்தது. இந்தக் குற்றவாளியின் வீட்டில் ஒரு பானையிலிருந்தது. இது என் தம்பியது என்று இதிலுள்ள குறிகளாற்றெரிந்தது. என் கலியாணத்தின்போது இடையூறுகளிழைத்த கிழவனை நான் பார்த்ததில்லை. ஆகையினால் இவன் அவனென்றென்னால் சொல்லமுடியாது.’

5-வது சாக்ஷி இராஜகோபாலையர் பரிசோதனையின்போது கூட இருந்த சேவகன். அவன் கடுக்கனகப்பட்டதும், அந்தக் கடுக்கனிது என்பதும் சொன்னான்.

குற்றவாளிக்குக் குற்றப்பத்திரிகை வாசித்துக் காட்டினார்கள்.

அதில் திருட்டுக்குற்றமும், சாவையுண்டாக்கத்தக்க அடிக்குற்றமும், மோசக்குற்றமும், பெயர் மாற்றினதில் கலந்தகுற்றமும், கலியாணத்தில் அனேக இடையூறுகளிழைத்து’ அதை நிறுத்துவதற்காக முயன்ற குற்றமும் ஆகிய இவ்வளவு குற்றங்களுங் காணப்பட்டிருந்தன.

மா—குற்றப்பத்திரிகை வாசித்ததைக் கேட்டாயா?

உ—கேட்டங்க.

மா—நீ குற்றவாளியா அல்லவா?

உ—இம்மாத்த குத்தங்க நானெங்கே செஞ்சேன். என்னமோ தெரியாத்தனமா பண்ணியூட்டங்க, மன்னிக்கணுங்க

மா—நானென்னே செய்தேனென்கிறாய், தெரியாத்தனமாய்ப் பண்ணிவிட்டேன் என்கிறாய்? எதுவடா உண்மை?

உ—உம்மையா நானொண்ணும் செய்யலிங்க, சேஞ்சாலும் மன்னிக்கணங்க, அதான் நான் சொல்றேன், மன்னிச்சூடுங்க, சாமி! என்னே மன்னிச்சூடுங்க.

மா—நீ குற்றவாளியா அல்லவா?

உ—இல்லிங்க. நாங்குத்தமொண்ணுஞ் செய்யிலிங்க.

மா—முன்னே யெல்லாம் செய்ததாக ஒப்புக்கொண்டாயே அடா!

உ—சேஞ்சேங்க, மன்னிக்கணங்க.

மா—அப்படியென்றால் 'நான் குற்றவாளிதான் மன்னிக்கவேணும்' என்கிறாய்?

உ—ஆமாங்க.

மா—நாளையதினம் தீர்ப்புச் சொல்வோம்.

என்றவுடனெல்லாருமெழுந்து தத்தம் வீட்டிற்குச் சென்றார்கள்.. நாராயணஸ்வாமி அய்யர் தன் வேலையை நோக்கிச் சென்றார். இராஜகோபாலையர் கோர்ட்டிற்குப் போனார். மணி 3½-ஆயிற்று. இராமஸ்வாமியையர் இருவரும் இராஜகோபாலையர் குதிரைவண்டியி லேறிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார்கள்.

வீடுவந்ததும் இருவருமுள்ளேசென்று சொக்காய்களைக் கழற்றி வைத்துக் காலலம்பி வாசலில்வந்து உட்கார்ந்தார்கள்.

பெரிய இராமஸ்வாமியையர்—இன்றையதினம் லீவ் வாங்கிக்கொண்டு வந்தீர்களோ?

மருமகப்பிள்ளை—எங்களுக்கு இப்பொழுது லீவ்தான். கலாசாலை சாத்தியாய் விட்டது.

பெ. இ—ஆமாம். மறந்துவிட்டேன். எல்லோரையும் என்னைப்போல் நினைத்துவிட்டேன்.

ம—தங்கள் ஆபீஸுக்கு லீவே யில்லையோ?

பெ. இ—அதேன் கேட்கிறீர். இராமுழுவதும் பகல் 10-மணி வரைக்கும் லீவ்தான்.

இருவரும் சிறிது புன்னகை கொண்டார்கள்.

பெ. இ—தாங்கள் கும்பகோணத்தில் தானே வாசிக்கிறீர்கள்?

ம—ஆமாம்.

பெ. இ—ப்ரின்ஸிபல் (தலைமை உபாத்தியாயர்) யார்?

ம—ஓர் ஆங்கிலேயர், டம், எம். ஏ.

பெ. இ—ஓகோ! டம்மா? அவன் உங்களுக்கென்ன எடுத்துக்கொள்ளுகிறான்?

ம—இங்கிலீஷ்.

பெ. இ—நீங்களென்ன பிராஞ்சு, பி. ஏ. ல்.

ம—மென்டல் அண்ட் மாரல் ஸைன்ஸ். அந்த பாடத்தின் பெயர், வாசிக்கவேண்டிய 3-பாடங்களில் ஒன்று.

பெ. இ—உங்கள் வகுப்பில் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

மருமகப்பிள்ளை பதில்சொல்ல வாய்திறக்குமுன் உள்ளேயிருந்து தடதடவென்று ஓர் சப்தங்கேட்டது. மாஜிஸ்திரேட் ஒரு திண்ணையின் ஓரத்திலுட்கார்ந்திருந்தார், மருமகப்பிள்ளை மற்றொரு திண்ணையில் சிறிது தூரத்திற்கப்பாலுட்கார்ந்திருந்தனர். சப்தங்கேட்டவுடன் ஒருவர் பக்கமொருவராய் முகத்தைத் திருப்பியிருந்தவர்கள். உள் பக்கமாய்ச் சிறிது திருப்பினார்கள். உடனே யொரு பெண் சுமார் 12-வயது இருக்கும், ஓடிவந்து மாஜிஸ்திரேட் பக்கம் நின்றுகொண்டு 'சித்தப்பா! அம்மா உன்னைப் பலகாரம் பண்ணக் கூப்பிடுகிறாள்' என்று சொல்லி மருமகப்பிள்ளையின் பக்கம் முகத்தைத் திருப்பினாள். நாயகனும் நாயகியும் ஒருவரையொருவர் காண்டலுமே, முதன்முதல், கண்டவுடன், இருவர் முகங்களும் எந்நிலைமையை யடைந்தனவோ, அறக்குறைய அதே நிலைமையை இப்பொழுதுமடைந்தன. நாயகன் அலக்ஷியத்துடனும், வெறுப்புட

னும், கோபத்துடனும் நாயகியைப்பார்த்தான். நாயகியோ பார்த்தவுடன் புன்சிரிப்புக்கொண்டாள். இப்படியே சிறிது நேரம் இருவரு மிருந்தனர். இவர்களை வேறொருவர் நோக்கியிருப்பின்.அவர்கள் முகங்கள்; முறையே. எவ்வெவ்வாறு மாறியிருக்குமென்பதை யவர்களே அறிவார்கள். நாமும் சொல்லவில்லை இன்னவிதமாயிருக்குமென்று மீனாக்ஷி தன் னாயகனைத் திரும்பிப்பார்த்ததும், அவன் புன்சிரிப்புகொண்டதும், அவள் திரும்பி யுள்ளேயோடினதும், எல்லாம் ஒருவன் ஐந்து எண்ணுவதற்குள்ளேயிருக்கும். மீனாக்ஷி யுள்ளே சென்றதும் பெரிய இராமஸ்வாமி அய்யரும் உள்ளே போனார். இராமஸ்வாமி மாத்திரம் வாசலிலே யுட்கார்ந்திருந்தான். 'இஃதென்னவிந்தை! நம்மை யொரு துரும்பாகக்கூட மதித்தாளில்லை இவள். நாமிருக்கும்பொழுது உரக்கப்பேசுகிறாள். கலியாணமாய் ஒருமாதங்கூட ஆகவில்லை, இன்னும். 10-பிள்ளைகள் பெற்றவர்கள்கூடக் கணவனிருக்கும்போது வாய்திறப்பதற்கு அஞ்சுகிறார்கள். கலியாணப்பெண்கள் தனிமையாய்க் கணவனுடன் பேசினதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதுவும் நாம் நேரே கண்டதில்லை. கலியாணப்பெண் கணவனெதிரே பிறரிடத்தில் பேசுவதைத்தா னிப்பொழுது பார்த்தோம். நாமிருக்கிறது தெரியாதோ இவளுக்கு. தெரியாதவள் முதன்முதல் சிற்றப்பாவைத்தான் பார்ப்பளோ? தெரியாதவள் சமாசாரம் முழுவதுஞ் சொல்லிவிட்டுத்தான் திரும்புவளோ? தெரியாதவள் நம்மைப்பார்த்தவுடன் புன்னகைதான் கொள்வளோ? வெட்கமன்றோ படுதல்வேண்டும்! தெரியாதவள் வருகிறபொழுதே அந்தப் பக்கந்தான் பார்ப்பளோ? நாமிங்கிராமல் எங்கேகினோமென்றெண்ணினாள்? நன்று, நன்று, அவள் படிப்பெல்லாம் நன்றாயிருக்கிறது. இவளை வளர்த்த விதமென்ன? அப்படியாயிருக்கப் பேசினாலென்ன என்பர் சில ஆசாரத் திருத்தசபையார். பெண்களும் புருஷர்களும் ஒரேமாதிரியாக இருக்க ஆரம்பித்துவிட்டால் இப்பொழுது புருஷர்கள் ஸ்திரீயை நேசிக்கிற அவ்வளவு அப்பொழுதும் நேசிப்பார்களோ? ஒருவஸ்து எப்பொழுதும் கண்

மிடத்தில் இருந்து கொண்டிருந்தால் நமக்கு அதன் பேரில் வெறுப்புண்டாகவில்லையோ? அதைப்போல் நம்முடைய எதிரில் ஒரு அழகானவஸ்து எப்பொழுதுமிருந்தால் அதனழகு குறையவில்லையா. அவ்வாறே நம்மெதிரில் ஒரு அழகான பெண் எப்பொழுதுமிருதால் அவளழகு குறையுமன்றோ? நம் மெதிரில் அவள் எப்பொழுதும் பேசிக்கொண்டிருந்தால், அவள் தொனியின் விசேஷந்தோன்று தன்றோ? மேலுமொருபொருளின் அருமை. அதையடையக் கூடிய கஷ்டத்திற் கேற்ப அதிகப்படுகின்றது. ஆகையால் ஒரு ஸ்திரீயின் நேசம், எவ்வளவு அபூர்வமாய்க் கிடைக்கின்றதோ அவ்வளவுக் கதிகம் இன்பங்கிடைக்கிறது. இத்தியாதி காரணங்களாலன்றோ நாயகனெதிரில் நாயகியதிகமாய் வரப்படாதென்றும், அவனெதிரில் அதிகமாய்ப் பேசக்கூடாதென்றும் முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர் என்றிவ்வாறெண்ணமிட்டு முடிகிறதற்குள் இவன் இரண்டாந்தரம் சாப்பிட்டு, பெரிய இராமஸ்வாமி அய்யருடன் வாசலிலுட்கார்ந்து தாம்பூலம் மென்றுகொண்டிருந்தான்.

மீனாக்ஷிக்கு அவள் நாயகன் றிண்ணையிலிருப்பது தெரியாது. இவளது தாயார் 'வாசலில் சித்தப்பா இருந்தால் இரண்டாந்தரத்திற்குக் கூப்பிடு' என்றாள். இவள் ஓடினாள். இடைகழியிற்சென்றதும், வாசற்றிண்ணையில் சிற்றப்பா இருப்பதைக்கண்டு அவரைப்பார்த்து தாய் சொன்னவாறு மொழிந்தனள். பிறகு உள்ளே போவதற்காகத் திரும்பினதும் தன்னாயகனைக் கண்டு தன் வழக்கமான சுபாவத்தின்படி, புன்னகைகொண்டாள். உள்ளே சிறிது தூரம் சென்றதும் தன்னகமுடையான் முகம் சிறிது ஞாபகத்துக்கு வந்தது, அவன் கோபக்குறியையும், அலக்ஷியமானபார்வையும் ஞாபகத்திற்கு வர முன்னெண்ணினவிதமே தனக்கு அவனால் ஒரு சுகமுங்கிடைக்காதென்றும், அவனோடு வாழ்வதிலும் தன் பிறந்த அத்திருப்பதே நல்லதென்றும், இம்மாதிரியான வெண்ணங்களிலாழ்ந்தாள்.

மறுநாள் காலை 10-மணிக்கு முந்திய தினத்தைவிட அதிகமாகவே மாஜிஸ்திரேட்டார் கோர்ட்டில் கும்பல்

கூடிற்று. சப் மாஜிஸ்திரேட் இராமஸ்வாமி அய்யர் ஊருக்குப்போய்விட்டார். தாருக்காரரும், மருமகப்பிள்ளையும், வக்கீலும் கோர்ட்டுபோய்ச் சேர்ந்தார்கள்.

மாஜிஸ்திரேட்டார் தீர்ப்புசொல்ல வாரம்பித்தார். அதை வாசிப்பதற்கு அரைமணி நேரம் ஆயிற்று. ஆங்கிலேயத்திலிருந்ததைத் தமிழில் மொழிபெயர்ப்பாம்

இந்தக்கேஸ் வக்கீல் இராஜகோபாலையர் வீட்டில் நடந்த அநியாயங்களைப்பற்றியது. அவர் வீட்டில் நடந்த இடையூறுகள் மிகவும் வியக்கத்தக்கன. இப்பொழுது என்னெதிரில் கொண்டுவரப்பட்ட கேஸோ இன்னும் வியக்கத்தக்கது.

இதில் ஒரு கிழவன்பேரில் ஐந்து குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை யொவ்வொன்றாய் எடுத்து விசாரிப்போம்.

இவன் சப்மாஜிஸ்திரேட் இராமிசுவாமியையர் நகையாகிய கடுக்கனைத் திருடினதாகக் குற்றம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நகையைத் திருடும்பொழுது பார்த்தவர் சப் மாஜிஸ்திரேட். அவர் தன்கையை யொருகிழவன் பிடித்ததாகக் கூறுகிறாரேயொழிந்து, இவன்தான் அக்கிழவனென்று சொல்லவில்லை. வேறு யாராகிலும் திருடிப்போயிருந்தாலுமிருக்கலாம். முதல் சாக்ஷியும், 4-வது சாக்ஷியும், 5-வது சாக்ஷியும் நகை குடிசையிலகப்பட்டபொழுது கூட யிருந்தவர்கள். அவர்களுக்கும் இந்தக் கிழவன்றான் நகையைத் திருடினனென்பது தெரியாது. இவன் வீட்டிலகப்பட்டது மாத்திரந்தான். வேறு யாராவது இவன் வீட்டில் வைத்திருந்தாலும் வைத்திருக்கலாம். கூடலூர் ரோட்டில் கிழவன் தானிந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்ததாக முதல் சாக்ஷி சொல்லுகிறார். மேற்கண்ட மூன்று சாக்ஷிகளும் குடிசையிலிவன் பேசிக்கொண்டிருந்தவற்றைப்பற்றிச் சொல்கிறார்கள். ஆகையால் இவன்தான் திருடினனென்பதற்கு இவன் பேச்சேயன்றி வேறு சாக்ஷியம் யாதொன்றுமில்லை.

இவன் மரணமுண்டாக்கும்படியாய் அடித்தானென்ற குற்றத்திற்கு ஒரு சாக்ஷியுமில்லை. இவனொத்துக்கொண்டதே சாக்ஷியாகின்றது. கூடலூர் ரோட்டில் வீராஸ்வாமியையரை யடித்ததற்கு இவனைத்தவிர வேறே சாக்ஷியொருவரையுங்காணோம்.

மூன்றாவதாகிய மோசக்குற்றத்திற்கு மூன்று சாக்ஷிகள் இருக்கிறார்கள். அவர்களில் முதல் சாக்ஷி தானாற்றங்கரையோரமாய் நடந்துபோனதாயும், அப்பொழுது இந்தக் கிழவன் பிள்ளையைப்பற்றி யேதோ பொய்ச்சமாசாரங்களைச் சொன்னதாயும், தன்னை யந்தவிதம் மோசஞ்செய்துவிட்டதாயும் சொல்லுகிறார். அப்பொழுது வந்த கிழவன் இவனோ வென்னமோ சந்தேகமாயிருக்கிறதுஎன்கிறார். மீதியிரண்டு சாக்ஷிக்காரர்களின் வார்த்தையும் இந்தக் கேஸைப் பற்றினதல்ல. யாரோ ஒரு கிழவன் தங்களை மோசஞ்செய்துவிட்டானென்கிறார்களே யொழிய அந்தக் கிழவன் இவனென்று அவர்கள் சொல்லவில்லை. சொல்லாமலிருந்ததோடு 'இவனன்று' என்கிறார்கள். ஆகையால் இவனிக்குற்றத்தைச் செய்தானென்பதற்குப் போதுமான சாக்ஷியம் இல்லை. இங்கேயும் இவன் வார்த்தையே இவனைக் குற்றவாளியாக்கினாலாக்கலாம்.

தந்திகளை, இவன் சொல்லுகிற பிரகாரம், ஒரு பிராமணன் அடித்தானாம். அவனெழுதிக்கொடுத்த தந்திகளை இவன்போய்த் தபாலாபீஸில்கொடுத்து அடித்ததினால் பெயர் மாற்றினதில் இவன் கலந்த குற்றமாகின்றது. இதற்குமிவன் பேச்சைத்தவிர வேறு சாக்ஷியமில்லை.

கடைசிக் குற்றத்துக்காக 2-வது, சாக்ஷி மருமகப்பிள்ளை அவனை யழைத்துப்போனதால் அக்குற்றமாகின்றது. 2-வது சாக்ஷி தன்னை யொரு கிழவன் என்னவென்னமோ செய்ததாகச் சொல்கிறாரேயொழிய, அக்கிழவனிவனென்று சொல்லவில்லை. ஆகையா லிக்குற்றத்திற்கு அவன் பேச்சே சாக்ஷியாகின்றது.

ஆகவே, இவன்மேற் கொண்டு வரப்பட்ட எல்லாக் குற்றங்களுக்கும், இவன் ஒத்துக்கொண்டதுதான் சாக்ஷிய

பாகின்றதே யொழிய வேறு ஒன்றனையும் காணோம். ஒருவன் சாதாரணமா யொத்துக்கொண்டாலே, அவன் பேச்சைக்கொண்டு அவனைக் குற்றவாளி யென்பது சட்டத்திற்குப் பொருந்தாததாயிருக்கின்றது. இவனொத்துக்கொண்ட மாதிரியோ மிகவும் வேடிக்கையாயிருக்கின்றது. ஒன்று யாராகிலும் சொல்லி யிப்படி யிவன் சொல்லவேண்டும். இதைவிட எனக்குத் தோன்றுகின்ற தென்னவென்றால், இராஜகோபாலையரும் நாராயணஸ்வாமியையரும் ஒத்துக்கொண்டபடி, சித்தஸ்வாதீனமில்லையென்பதேயாம். இவன் சொல்வதில் முன்னுக்கும் பின்னுக்கும் சிறிதேனும் பொருத்தமில்லை.

ஆகையால் யாம் செய்கிற தீர்ப்பென்னவென்றால் இந்தக் கிழவன் ஐந்து குற்றங்களிலொன்றனையுஞ் செய்யவில்லை, இவன் குற்றவாளியேயல்ல. இவன் சித்தஸ்வாதீனமற்றவன்போற் றோன்றுகிறது. ஆகையால் இவனை விடுதலை செய்து டாக்டரினுடைய பார்வையின்கீழ் இரண்டு மாதம் வைத்திருப்போம். அப்பொழுது பைத்தியக்காரனென்றேற்பட்டால், பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுங்கள். இல்லையேல் விடுதலை செய்வார்கள்.

இந்தத் தீர்ப்பைக் கேட்டவுடன் முகத்தை விசனக்குறியாக வைத்துக்கொள்ளாதவரில்லை. ஒருவரை யொருவர் பார்த்தனர். 'இந்தப் பொல்லாக்கிழவனை விட்டுவிட்டார்களே, இனிமேலென்செய்வானோ' என்றார் சிலர். 'கிழவன் பைத்தியக்காரன் என்றாரே, உண்மையான பைத்தியக்காரன் மாஜிஸ்திரேட்' என்றார் சிலர். 'பாவம் நாராயணஸ்வாமியையர் கஷ்டப்பட்டனரே, என்னமாயிற்று?' என்றார் சிலர். 'இரண்டு மாதங்கழித்து இந்தக் கிழவனென்னென்னசெய்யக் காத்திருக்கின்றானோ' என்றார் சிலர். இவ்விதமாக கோர்ட்டுக்குவந்த எல்லோரும் வாடின முகத்துடன் வீடுபோய்ச்சேர்ந்தனர். இவர்களுக்குள் அதிகவருத்தம் இராஜகோபாலையருக்கும் நாராயணஸ்வாமி யையருக்குந்தான். இருவரும் கிழவன்தான் செய்தானென்று நிச்சயமாய் நம்பியிருந்தார்கள். மாஜிஸ்திரேட்டார் செய்த

சிக்ஷையை பதிகப்படுத்த மேலதிகாரிகளுக்கு நியாயமில்லை. அவ்வாறிருப்பின் அப்பீலை செய்திருப்பார்கள். மருமகப் பிள்ளைக்கு விசனமில்லை. அவனுக்கு இந்தக் கிழவன் பேரில் சந்தேகமேயில்லை. ஆகையால் மாஜிஸ்திரேட்டார் செய்த தீர்ப்பு அவனுக்கு விசனத்தையே யுண்டாக்கவில்லை.

விசாரணை முடிந்த அன்றையதினமே 2½-மணி வண்டியில் ஊர்போய்ச் சேர்ந்தார் மருமகப்பிள்ளை.

* * * *

முன் சமாசாரங்களெல்லாம் நடந்த மறு வருஷம் மார்ச்சுமீ ஒருநாள் மாலை 4½-மணிக்கு சென்னபட்டணம் தம்புசெட்டி வீதியில் ஒரு வீட்டில் மேலறையிலிருந்து இருவாலிபர்கள் கீழேயிறங்கித் தெற்குமுகமாய் நடந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் ஏதோ ஆங்கிலேயத்திலும் தமிழிலுமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். யாம் அச் சம்பாஷணையை சுத்த தமிழிலெழுதுவோம். இருவரையும் சுருக்கமாய். ஆ. ஏ. என்னு மிரண்டெழுத்துப் பெயருடையோராய்க் கூப்பிடுவோம்.

ஆ—நம்முடைய அறையில் தினம் சீட்டுக்கச்சேரியாகவே போகின்றது.

ஏ—முத்துவும் சொக்கலிங்கமும் வந்தாலிப்படித்தான், தாங்களும் வாசியார், பிறர் வாசிக்கவும் பாரார்.

ஆ—ஆம், ஆம், மிகவும் தொந்திரவு செய்கிறவர்கள்.

ஏ—அவர்கள் நாளையதினம் வந்தால் கண்டித்துச் சொல்லப்போகிறேன், கூச்சல் போடவேண்டாமென்று.

ஆ—அதுதான்சரி, அவர்களுக்காக நாமும் நமது பாடத்தை யிழப்பதா வென்ன?

ஏ—அவர்களென்னமாய்த்தான் பீ. ஏ. பாஸ் பண்ணினார்களோ?

ஆ—என்னமாயென்றால் வாசித்து. முன்னெல்லாம் நன்றாய்த்தான் வாசித்திருப்பார்கள். பீ. ஏ. ஆனதும் இப்

படிச் சோம்பலாய்க் காலத்தைக்கழிக்கிறது. பீ. எல். ஜன்மம் நாத்துக்குந்தோரது. அவர்களென்னமாய்ப்போனாலும் போகிறார்கள். நாம்மட்டும் ஜாக்கிரதையாயிருப்போம்.

ஏ—ஆம், ஆம் கண்டித்துச் சொல்லிவிடுவோம், தாக்ஷண்யமென்ன?

ஆ—அது சரிதான். காலை சரியாய் 10-மணிக்குவந்துவிடுகிறார்கள், மாலை 5-மணிக்கெழுந்து போகிறார்கள். சிலவேளை இன்றையதினம்போலே 4-மணிக்கும் போகிறார்கள். அதில் என்னமாகிறது? நமக்குளேதாவது இரகசியம் இருந்தாலும் பேசச் சரிப்படுகிறதில்லை.

ஏ—அதற்கென்ன? இராத்திரி நம்மையார் தொந்திரவு செய்கிறார்கள்? அப்பொழுது பேசினாற்போகிறது?

ஆ—அடே! பேச்சுக்குச் சொல்லுகிறேனென்றால். காலை 10-மணிக்கு ஏதாவது இரகசியமான சமாசாரம் வந்ததென்று வைத்துக்கொள். அதையென்னமாய்ப் பேசுகிறது?

ஏ—(புன் சிரிப்புகொண்டு) நீ சொல்வதைப்பார்த்தால் இன்றையதினம் ஏதோ இரகசியமான சமாசாரம் வந்திருக்கிறாப் போற்றோன்றுகிறதே.

ஆ—(புன்சிரிப்புகொண்டு) நீ சொல்வது உண்மையாயிருந்தாலும் இருக்கலாம்.

ஏ—(ஆவலுடன்) எங்கேயிருந்து? என்ன சமாசாரம்?

ஆ—(சிரிப்புடன்) அப்படியென்றாலுனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறதோ? இதோ இந்தக் கடிதத்தைப்பார்.

என்று தன் பையிலிருந்த கடிதத்தைஎடுத்து ஏ என்பவரிடம் கொடுத்தார். ஏ அதை ஆவலுடன் வாங்கிவாசித்து, மிகுந்த புன்சிரிப்புடன்:

ஏ—கையைக்கொடு, கையைக்கொடு; மெத்த சந்தோஷம் மிகுந்த சந்தோஷம்: அதுதான்சரி; மிகவும் நல்லது. ஏனிவ்வளவு சீக்கிரமாய் விடுமென நினைக்கவில்லை. பீ. எ.

பாஸ் செய்ததற்கும், அந்தவிஷயம் நடந்ததற்கும் இது தான் சரி. இதுதான் சரி. மிகவும் அதிர்ஷ்டசாலி.

ஆ—நீயென்ன சொல்லிக்கொண்டே போகிறாயே?

ஏ—என் சந்தோஷம் என்னால் அடக்கமுடியவில்லை. இனிமேல் நடக்கப் போகிறதைப்பற்றி. சாந்திமுகூர்த்தம்.

ஆ—(புன்சிரிப்புடன், ஏ என்பவனையடித்துக்கொண்டு) உன்னுடன் இதைச் சொல்லியே யிருக்கக்கூடாது. நீ மென்மேல் போய்க்கொண்டே யிருக்கிறாயே?

ஏ—என்னிடத்தில் சொல்லக்கூடாதா? நானவ்வளவு பாக்கியசாலி யல்லவா?

ஆ—நீ மிகவும் துரதிர்ஷ்டசாலி. எங்கேபோகிலும் உன்னைப்போலுண்டா?

ஏ—எல்லாமப்புறமாகட்டும். அதோ வருகிறான் கன்னாட் என்று சொன்னவுடன் கன்னாட் என்னுமோர் ஆங்கிலேயன் இவர்களை வந்துசேர்ந்தான். அவன் வந்து சேர்ந்த பொழுது இவர்களும் சட்டகலாசாலைக்குச் சமீபத்தில் போய்விட்டார்கள்.

ஆ—வாருங்கள்! வாருங்கள்! நமஸ்காரம் கன்னாட்! எங்கே பைஸிகில் ஒன்றுங்காணோம்.

க—நமஸ்காரம். நமஸ்காரம், அது சிறிது ஒடிந்திருக்கிறது. ஆனபடியால் ரிப்பேர் செய்வதற்குக் கொடுத்திருக்கிறேன்.

ஆ—நல்லது. சீக்கிரம் போவோம். அதோ வந்துவிட்டான் கெல்டன்.

க—காரியத்திலொன்றுமில்லாமற்போனாலும், ஜம்பத்தில் குறைச்சலில்லை கெல்டனுக்கு.

மூன்றுபேருஞ் சிரித்துக்கொண்டு கலாசாலைக்குள் நுழைந்தார்கள். மூன்றுபேரும் ஒரு வகுப்பிற்குள் புகுந்து கும்பலில்லாத தொருவிடத்தில் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்த சற்றுநேரத்திற்கெல்லாம் மணியடித்தது. மணி

பார்த்து ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் மேற்சொல்லப்பட்ட கெல்டன் துரை வகுப்பிற்குணுழைந்தார். அவ்வகுப்பிலுள்ளவர் எல்லோரும் எழுந்து உட்கார்ந்தார்கள். ஒரு குமாஸ்தா வந்து ஒவ்வொரு பெயராய் வாசித்தான். வந்தவர்கள் 'இங்கே' என்றார்கள். அப்படிச் சொல்லாதவர்களை வராதவர்களென்றெண்ணிக்கொண்டான். துரை யெழுந்தான் படிப்பிப்பதற்கு. ஏதோ காகிதத்தைப் பார்த்துப்பார்த்து சொல்லிக்கொண்டே போனான் சற்று ஓய்ந்தானில்லை அவ்வகுப்பிலுள்ளவர்களில் சிலர் தூங்கினார்கள். சிலர் அக்கம் பக்கம் இருப்பவரோடு பேசிக்கொண்டிருந்தனர். சிலர் தாங்களேதோ கதைப் புஸ்தகங்களை வைத்து வாசித்துக் கொண்டிருந்தனர். சிலர் தாங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்த ஒருநோட்புஸ்தகத்தில் ஏதோ ஐந்து நிமிஷத்திற்கொருதரம் ஒருவார்த்தை எழுதிக்கொண்டிருந்தனர். சிலர்விடாமல் ஏதோ எழுதிக்கொண்டேயிருந்தனர். சிலர் அசைவற்ற மரம்போல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர். இப்படி 6-மணி வரையில் இருந்தது. அதற்குமேல் இரு சேவகர்கள் வெளிச்சங்கொண்டு வந்தார்கள். வேறொரு துரைவந்தான். இவன் சொன்னபொழுதும் வகுப்பிலுள்ளார் அனேகமாய் முன்மாதிரியே யிருந்தார்கள். வித்தியாச மென்னவென்றால் முன் பேசிக்கொண்டிருந்தவர்களும் இப்பொழுது தூங்க வாரம்பித்துவிட்டார்கள். இம்மாதிரியாய் ஏழுமணி படிக்கும் வரையிலிருந்து, பிறகு புறப்பட்டுவிட்டார்கள் தத்தம் இல்லம் சேர்வதற்கு. முன்னே சொன்ன ஆ, வ இருவரும் கீழே யிறங்கி தங்களகத்தை நோக்கிச் சென்றனர். அப்பொழுதும் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டிருந்தனர்.

ஏ—அப்படியென்றால் இப்பொழுது சாந்திமுகூர்த்தமென்று நீ சொல்லமாட்டாய்?

ஆ—எனக்கு சாந்திமுகூர்த்தம் நடந்தாலல்லவோ நான் சொல்லப்போகிறேன்.

ஏ—(சிரித்துக்கொண்டு) உனக்கு சாந்தியே யில்லையோ?

ஆ—(வருத்தத்துடன்) என் மனத்தை நீ யறிந்திருந்தால் இவ்வாறு சொல்லியிருக்கமாட்டாய்.

ஏ—உன் மனத்திலுள்ளதை என்னிடத்தில் சொன்னாலல்லவோ?

ஆ—(வருத்தத்துடன்) உண்மையாகச் சொல்கிறேன். நான் வேறே கலியாணஞ் செய்துகொள்ளப்போகிறேன்.

ஏ—(புன்சிரிப்புடன்) இதுதான் மிகவும் உண்மை!

ஆ—(கடூரமான முகத்துடன்) இன்னுமொருதரஞ் சொல்லுகிறேன், எனக்கு அவள்மேற் சிறிதேனு மாசையென்பதே யில்லை.

ஏ—காரணமென்னவோ?

ஆ—முன்னமேயே சொல்லியிருக்கிறேனே.

ஏ—அதெல்லாமென்னமோ! அவளுடைய அழகை யோசித்துப்பார். பிறப்பைப்பார். கல்வியைப்பார். முகவிலக்ஷண்யத்தைப்பார். மயிர்ச்சுருளைப்பார். இதையெல்லாம் விட்டுவிட்டு வேறே கலியாணமாவது செய்யவாவது என்ன நீ சொல்வது ஒன்றும் நன்றாயில்லை.

ஆ—உனக்கொன்றுந்தெரியாது. நான் எவ்வளவோ பொறுத்துவிட்டேன் இனிமேல்.—

ஏ—ஐயோ! கலியாணம்பண்ணி 8-வருஷமாயிற்று? மிகவும் பொறுத்துவிட்டாயோ?

ஆ—8-வருஷமானாலென்ன? 8-நாளானாலென்ன? ஒரு நாளில் கண்டுபிடிக்கலாம் ஒருவர் சுபாவத்தை.

ஏ—அவருடன்பேசாமல்?

ஆ—பேசினாலென்ன? பேசாவிட்டாலென்ன? பேசினாற்றான் தெரியுமோ எல்லாம்?

ஏ—நான் சொல்வதைக்கேள். அவளுடன் நேரிற் பேசினால் மாத்திரம் அவளுடைய குணங்கள் ஸ்பஷ்டமாய் விளங்குமேயொழிய மற்றப்படி அவள் நீ யிருக்கும் பொழுது பேசினதால் அது ஒரு குற்றமாகாது.

ஆ—அதுவே அல்ல அப்பா! அது போனாற்போகிறது அவள் கடிதம்?

ஏ—என்னகடிதம்?

ஆ—உனக்குச் சொல்லவில்லையோ? தீபாவளிக்கு நான் சென்றபொழுது பண்டிகையெல்லாம் நடந்து நான் வாசலில் உட்கார்ந்திருந்தேன். ஒருவருமில்லாத சமயம் பார்த்து என்னிடத்தில் ஒருகடிதம் கொண்டுவந்து கொடுத்தாள். அந்தக் கடிதத்தை நீயேதான் பார்க்கவேண்டும்.

இதற்குள் இவர்களிருவரும் தங்களறைவந்து சேர்ந்தார்கள். உடுப்புகளையெல்லாங் கழற்றின பிறகு ஆ என்பவர் ஒரு பெட்டியைத்திறந்து ஒரு காகிதத்தை எடுத்து ஏயினிடத்திற் கொடுத்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

திருப்பாப்புலியூர்.

10—11—01.

க்ஷேமம், அநேக நமஸ்காரம்.

என மனத்திற் சனித்திருக்கும் எண்ணங்களை வெளியிடுவான் கருதியே இக்கடிதம் வரையப்புகுந்தனன். நமது அணைவரையில் நாம் பந்தாடுங்கால், மல்லிகைப்பந்தினால் எனது கண்ணினைக்குத்தினை. பரி தன்மீது ஏறி நடாத்தினவனைக் கீழேதள்ளி யவனை யடக்கஞ் செய்யும்பொருட்டு ஓர் குழியுந்தோண்டுதல்போல், நீ யென்னிமையைப் பந்து கொண்டு கலக்கினதுமன்றி (அரவத்தைத் தேள் தீண்டவி நெறியுண்டவாறு) உன் கண்கலங்கிற்று. நீ கோபங் கொண்டாய், காரணமென்னோ? இறைவனுக்கே வெளிச்சம். இரண்டாநாளிரவு, உனதாடையையும் என் கூந்தலையும் யாரோ முடிந்ததற்காக என்மேற் கோபித்தனை. நான்காநாள் எங்கெங்கேயோ திரிந்து, கடைசியாய் என்மேல் பழிபோட்டனை குற்றமற்றவென்னை ஓர் பொய்க்கடிதத்தினால் குற்றமுற்றவளாக்கினை. மானுடர்வகுப்பு ஆண், பெண் என விருவகையாய்ச் சமானமாய்க் கடவுள் பிரித்திருப்பது

போக, அதைமறுத்து ஆணேமுதன்மையென்றும், பெண்ணையேதாகிலுமியற்றலாமென்று மெண்ணுஞ் சில அவிவேகிகள் குழுவில்நீயுமொன்றாயினை. அந்தோ! என்தகப்பனார் ஓராயிரம் ரூபாயை யுனக்கோ வீந்தார்! ரூபாயை வாங்கிவைத்துக்கொண்டதுமல்லாமல், நல்ல தழைகளையு மிலைகளையு மொழித்துக் கைப்பென்பதே வடிவம்போன்ற வேப்பிலையை விழுங்கும் வளர்ந்ததோர் மிருகம்போன்று, படிப்பு, அழகு, குணம், முதலியவற்றாலுயர்ந்த வென்னைநீக்கி, புனர்விவாகம் புனையவன்றோ எண்ணினை? நன்று! யானியம்புவதைக் கேள். நீ யென்னுடன் கூடிவாழ விருப்பங்கொண்டிருந்தனையேல் நான் சொல்லியபடி நடத்தல்வேண்டும். இல்லையேல் நீ வேறாய்ப்போகலாம். நீ யென்னைவிட்டுப்பிரிய அவாக்கொண்டதுண்டே லவ்வாறே செய்யலாம். நீ நீங்குவதால் எனக்குத் துக்கமுண்டாமென் றெண்ணவேண்டாம். என் காலம் யான் சுகமேகழிப்பேன். அறியவும்.

இங்ஙனம் தங்கள் மாமனார் இராஜகோபாலையர் குமாரி,

மீனாக்ஷி.

இனிமேலெனக்குத் தெரிந்துபோயிற்று, ஆ என்பவன் இராமஸ்வாமியா யிருத்தல்வேண்டும். ஆகவே ஏ என்பவன் ஐயாஸ்வாமியாகவேண்டும்.

ஐயாஸ்வாமி கடிதத்தை வாசித்தான், கால்மணிநேரம் ஒன்றுந் தோன்றாமல் திகைத்தான்.

இரா—(புன்சிரிப்புடன்) கம்பராமாயணம், திருக்குறள் வாசித்ததன் பயன் பார்த்தனையா? கையெழுத்து நன்றாயில்லாவிட்டால், 'இது மீனாக்ஷி யெழுத்தல்ல' என்று சொல்லிவிடுவன் ஐயாசாமி. கையெழுத்தோ, அதிஸ்பஷ்டமாய் விளங்கிற்று.

இரா—கல்வியின் பிரயோஜனம் பார்த்தாயா? பெண்கல்வி நல்லது என்றனையே இப்பொழு தென்சொல்வாய்? இலக்கணவிலக்கியப் பிழைகளிருப்பின், 'இது எழுதினது மீனாக்ஷியன்று' என்பன் ஐயாஸ்வாமி, அப்படியுமில்லை.

இரா—இப்பொழுதென்னசொல்வாய்? யான் நீங்குவதோ? கூடி வாழ்வதோ? எதுசுகம்?

ஐயா—இக்கடிதத்தை யவள்கொண்டுவந்து கொடுத்தாளா? வேறே யாராகிலும் கொண்டுவந்தார்களா?

இரா—ஐயோஸ்வாமி, அவளை கடிதங் கொண்டுவருவதுநான் இன்னும் பார்க்கில. ஆமாம். அதுசெய்பவளில்லையே. நல்லவள் தானவள்.

ஐயா—நான் கேட்டதற்குப் பதில்சொல். இந்தக்கடிதத்தை யுன்னிடத்தில் யார் கொண்டுவந்து கொடுத்தார்?

இரா—நான் வாசலில் ஒரு புஸ்தகத்தை வைத்து வாசித்துக்கொண்டிருந்தேன். தூக்கம் வந்தபடியால் மார்பிற் புத்தகத்தை வைத்துறங்கினேன். கண்விழித்துப் பார்த்தேன். புத்தகம் பக்கத்திலிருந்தது. பிரித்துப் பார்த்தேன். அதிலிருந்தது இக்கடிதம்.

ஐயா—இதற்குமுன் ரஜக்ஷி கையெழுத்தை நீ பார்த்திருக்கின்றாயா?

இரா—நான் பார்த்ததில்லை.

ஐயா—ஆகையால் அவள் இக்கடிதத்தை யெழுதவில்லை.

இரா—உன்னைப்போல் எல்லாரும் தர்க்கிக்க வாரம்பித்தால் இப்பூமியில் குற்றங்களெல்லாம் அதிகரிக்கும். நேரே குற்றத்தைப் பார்த்தவர் வெகு சிலர்தான் இருப்பார்கள். அதற்காக வேறு சாக்ஷிகளைக்கொண்டு தண்டிக்காமல் சும்மா விட்டுவிடலாமா?

ஐயா—நீ சொல்வதெல்லாஞ் சரிதான். அவளிந்தக் கடிதத்தை யெழுதப்பட்டவளல்ல.

இரா—நீ யவளோடு மிகவும் பழகியிருக்கிறாயோ?

ஐயா—இல்லை.

இரா—ஆகையினால் நீ சொல்வதை நம்ப சிறிதேனு நியாயமில்லை. எப்பொழுது நேரே கொண்டுவராத வரையில், கடிதமெழுதினவரை நிச்சயித்தல் கூடாதோ, அப்ப

திரியே, நேரே பழகாதவரையில் ஒருவருடைய குணாதி சயத்தைப்பற்றிச் சொல்லுதல் தகாது.

ஐயா—எனக்கு 7, 8-வயது முதற்கொண்டே அந்தப் பெண்ணைப்பற்றிக் கேள்வியுண்டு. மிகவும் நல்லவளென்றும் சாதுவென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள்.

இரா—உன்னிடத்தில் சொன்னது யார்?

ஐயா—மீனாக்ஷியின் தமையன் சேஷையர்.

இரா—போதும், தமையன் தங்கையைப்பற்றிப் புகழ்வதை நம்பலாமா?

ஐயா—மேலும் நானே யந்தப் பெண்ணை யடிக்கடிப் பார்த்திருக்கிறேன். நல்ல புத்திசாலி.

இரா—அதை யாரிப்பொழுது இல்லையென்றார்கள்.

ஐயா—நீ என்னசொன்னபோதிலும் எனக்குத் தோன்றுகிறது அவள் எழுதியிருக்கமாட்டாள் என்று.

இரா—சரி, நீ யவ்வாறே நினைத்துக்கொண்டிரு.

ஐயா—ஒன்று செய்வேன். நேராகவேபோய் அவளைக் கேட்டால்—

இரா—(புன்சிரிப்புடன்) அதுதான் சரி.

ஐயா—இல்லை நீயுமவளு மிருவரையும் நேரே பேசின தில்லையே. நேராகவேபேசி யொருவர் மனத்திலிருப்பதை மற்றவரிடத்தில் சொல்லி சண்டையைத் தீருங்களேன்.

இரா—அப்படியாகிலுமென்ன வக்கரையோ? இப்பொழுது நான் சொல்லியபடி வருகிறவருஷம் மறுகலியாணஞ் செய்துகொண்டால், நான் பி. எல். பாஸ் பண்ணுவதற்கும் சாந்தியாவதற்கும் சரியாயிருக்கும்.

ஐயா—என்ன, எப்பொழுதும் மறுகலியாணத்திலே யே முனைந்திருக்கிறாயே?

இரா—நிச்சயமாய் நான் செய்துகொள்ளத்தான் போகிறேன்.

ஐயா—சரி எப்படியும் நீ வேறே கலியாணந்தான் செய்துகொள்ளப் போகிறாயே? இந்தவருஷம் சாந்திமுகூர்த்

தம் வைத்துக்கொள். நேரே பேசு, என்னசொல்கிறாள் பார்ப்போம்.

இரா—அப்படிக் கடிதமெழுதினவளோடா?

ஐயா—நீயவளை நேரேகண்டு உன்மனத்திலுள்ளதைக் கேள். அவ்வாறு தைரியமாய்க் கடிதமெழுதினவள் பொய் சொல்லமாட்டாள். இன்னுமென்ன வென்னசெய்கிறாள் பார்ப்போமே.

இரா—அதற்கு சாந்திமுகூர்த்தம் வைத்துக்கொள்வானேன்?

ஐயா—மற்றெந்த விதத்திலும் நேரே பேசமுடியாது, பேசினாலும் அவகாசமிருக்காது. பிறர்க்குப் பயப்படும்படியாயிருக்கும். அதுதான் நல்லசமயம்.

இரா—சாந்திமுகூர்த்தமென்று வைத்தால் அவள் கடிதத்திற்குச் சம்மதித்தவாறல்லவோ ஆகும்.

ஐயா—ஆனால் முழுகிப்போய்விட்டதோ? இரண்டாங் கலியாணந்தானென்று நிச்சயமாயிருக்கிறது, இதை முயற்சிசெய்யேன், அவள் மனத்தை நன்றாய்ச்சோதிக்க இடந்தரும்.

இரா—சரி. அவளுடன் பேசுவதற்காகச் சாந்திமுகூர்த்தஞ் செய்யவேண்டும்!

ஐயா—அப்படியே யிருக்கட்டுமே.

இரா—இருக்கட்டுமாவது? அதற்காகத்தான்.

ஐயா—சரி. சரி.

இராமஸ்வாமி, மீனாக்ஷியுடன் பேசி அவள் மனத்தை யாராய்வதற்காக சாந்திமுகூர்த்தஞ் செய்வதென்றொருவாறு தீர்மானித்தான். அம்முகூர்த்தத்தைக்கூடிய சீக்கிரத்திலேயே நடத்தவேண்டுமென்ற ஓரவாவும் மனத்திலுண்யிற்று. 'அவள் மிகவும் படித்தவளென்கிறார்களே அதை நாமே யாராய்வோம்' என்ற ஓர் வேடிக்கையெண்ணமும், இந்தக் கடிதமெழுதினதின் காரணம் வினவவேண்டுமென்ற ஓர் ஆசையும், முன் பேரில்லாக் கடிதத்தி னுண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஓர்விருப்பமும், ஒருங்குகூடி

யிவனை அடியில் வருமாறு தன் தகப்பனருக்கெழுதும்படிச் செய்தன. ஆங்கிலேயத்திலிருந்ததைத் தமிழில் மொழி பெயர்ப்பாம்.

சென்னை,

5—3—02

கனம்பொருந்திய பிதாவே,

தாங்களெழுதிய கடிதம் பார்த்தேன். எனக்குச் சந்தோஷம், துக்கம் ஒன்றுமில்லை. என்றால் இப்பொழுது அங்கேவரமுடியாது. தாங்களேயறிவீர்கள். எனது சாந்திமுகூர்த்தத்தைப்பற்றி என்னைக் கேட்கவேண்டாம். தங்களுக்கிஷ்டமானபொழுது வைத்துகொள்ளலாம். எனக்கு வருகிறமாதத்தோடு கலாசாலை சாத்துகிறார்கள். அம்மாளை யும் அக்காளையும் விசாரித்ததாகச் சொல்லவும். தாங்கள் சவுக்கியமா யிருக்கிறீர்களென்று (எண்ணிக்கொண்டு) நானும் சவுக்கியமாக இருக்கிறேன்.

தங்களன்புள்ள இராமசாமி,

இந்தக் கடிதமெழுதின யிரண்டுநாளுக்கெல்லாம் இவ னுக்கொரு கடிதம் வந்தது. அது வருமாறு.

தஞ்சாவூர்,
7—3—02.

என்னுடைய அருமையுள்ளகுமாரனே.

நீ யெழுதிய கடிதம் வந்துசேர்ந்தது. நீ சிலபேரோடு சாந்திமுகூர்த்தம் செய்துகொள்ளமாட்டேனென்று சொன்னதாகக் கேள்விப் பட்டதின்பேரில் அவ்வாறு எழுதினேன். வருகிற வருஷம் நீ எப். எல். வாசிக்கவேண்டியதா கையாலும், அதற்கடுத்த வருஷம் பீ. எல். வாசிக்கவேண்டி யிருப்பதாலும் இந்த வருஷம் மேமீ முகூர்த்தம் வைத்திருக்கிறது. உன் மாமனருக்கு மெழுதியிருக்கிறேன். நான் சொல்வதற்குத் தடையொன்றுஞ் சொல்லமாட்டாயென்று நம்புகிறேன்.

உன் அன்புள்ள கோபாலஸ்வாமி.

* * * *

சாந்திமுகூர்த்தத்திற்கு ரூ 1000க்குச் சீர்செய்வதாக இராமகோபாலையர் தீர்மானித்தார். அதன் கணக்கு வருமாறு:—

மருமகப்பிள்ளைக்குக் காதில் கடுக்கன்	ரூ	200	0	0
பெண்ணுக்குக் காசிமாலை	....	400	0	0
கண்ணாடி பீரோ (உயர்ந்த தேக்குமரத்தில்)	....	50	0	0
கட்டில் (பார்த்தபிறகு தெரியும் அதனழகு)	....	75	0	0
காசிபட்டு (பிள்ளைக்கு)	....	60	0	0
உயர்ந்த பட்டுப்புடவை (பெண்ணுக்கு)	....	80	0	0
பித்தளைப் பாத்திரங்கள் வகையரா	....	25	0	0
மெத்தை தலையணை வகையரா	....	20	0	0
தங்கமுலாம் கொடுத்த பென்சில், பேனா, சிறிய நோட்டு புத்தகம், இங்கிபெட்டி வகையரா	....	90	0	0
ரூ மொத்தம்	....	1000	0	0

இந்த சாமான்களையெல்லாம் சேகரித்துக்கொண்டு, இராமகோபாலையர் அவருடைய தம்பி, தம்பி சம்சாரம் பிள்ளை, பிள்ளை சம்சாரம், அவருடைய சம்சாரம், இன்னும் தனக்குத் தெரிந்த இரண்டு மூன்று வக்கீல்கள், அந்த ஊர் முனிசீபு, இவர்களுடன் முகூர்த்தத்திற்கு இரண்டு நாள் முன்னதாகத் தஞ்சாவூர்போய்ச் சேர்ந்தார். நாராயணஸ்வாமியையரைப் பலதடவைகளிற் கூப்பிட்டும் வாராதபடியால் வழக்கம்போல வீட்டுச்சாவியை யவரிடத்தில் கொடுத்தார்.

தஞ்சாவூர் போனதும், முன்போலன்றித் தங்களுக்காக ஏற்கனவே தயார்செய்துவைத்த ஜாகையிலிறங்கினார்கள். ஒரு சேவகன் மூட்டைகளேற்றிக்கொண்டுவந்த வண்டிக்காரனுக்குக் கூலிகொடுத்தான், மற்றொருவன், இவர்கள் எங்கேயுட்கார்வார்களெனக் காத்துக்கொண்டிருந்து விசிறினான்; இன்னொருவன் 'என்னவேண்டும்;' என்று இவர்கள் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தான்.

இவர்களுக்கு விடப்பட்ட ஜாகையோ பெரிய மெத்தைவீடு. இவ்வீடு முழுவதும் வெளிச்சம். எந்த மூலையில்போனாலும் விளக்குப்போட்டிருந்தது.

இவர்களை யழைத்துப்போக கோபாலஸ்வாமியையரே வந்திருந்தார் எல்லோரும் போஜனம் முடிந்தபிறகு, படுக்கை போடுவதற்கு 20-சேவகர்கள் 20-மெத்தைகளுடன் வந்து சேர்ந்தார்கள். மெத்தைக்குள் இவ்விரண்டு தலையணைகளிருந்தன.

மறுநாள் சாந்திமுகூர்த்தம்.

அன்றையதினம் நடந்த முகூர்த்தத்தைப்பற்றி யின்னுஞ் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சாவூர் முழுவதும். டெபுடிகலெக்டர் இருந்தவீதி 40-அடி அகலம் இருக்கும். அந்தத் தெருவு முழுவதும், $\frac{1}{2}$-மைல் நீளத்திற்கு பலவிதமான குதிரைவண்டிகளும், மாட்டுவண்டிகளும், நிறைந்திருந்தன. ஒரு மனுஷியன் புகுந்துபோனால், இவ்விடத்தில் மாடுமுட்டும், சற்று ஒதுங்கினால் குதிரை கடிக்கும்.

இவர் வீட்டிற்கெதிரில் 40-கெஜம் நீளத்திற்குப் பந்தல் போட்டிருந்தது. பந்தல் முழுவதும் துணி கட்டியிருந்தது. சித்திர விசித்திரமான பொம்மைகளும், அனேகவிதமான சித்திரங்களும் வரையப்பட்டிருந்தன. அவற்றை ஒருவன் நிமிர்ந்து பார்ப்பனேல் அவன் கழுத்துவலிக்குமே யொழிய அந்த விசித்திரங்களைப் பார்த்துமாளாது.

அந்தப்பந்தலில் மொத்தம் 700-பேர் கூடியிருக்கலாம. எல்லாரும் உத்தியோகஸ்தர்கள், எல்லாரும் இங்கிலீஷ் பாஷை பயின்றவர்கள். அனேகமாய் எல்லாரும் தலைக்குடையும் சொக்காயுந் தரித்தவர்கள்.

அன்றைபதினம் எல்லா வருணத்தார்க்கும் விருந்து. ஒருவீட்டில் முதலிமார்களுக்கும், ஒருவீட்டில் செட்டிமார்களுக்கும், ஒருவீட்டில் வைஷ்ணவர்களுக்கும், ஒருவீட்டில் ஸ்மார்த்தர்களுக்குமாக அங்கு வந்தவர்களெல்லார்க்கும் கோபாலஸ்வாமியையர் அன்னம் அளித்தார். 12-மணி

க்கு ஒரு வீணைவாசிப்போன் வந்தான். 1-மணிக்கு விகடகவி விகடஞ்செய்ய வாரம்பித்தான். 2-மணிக்கு ஒருபாடகன் வந்தான். 3-மணிக்கு ஒருபாகவதர்வந்தார். இவர்கள் ஒவ்வொருவருந் தனித்தனியே தங்களுக்குத் தெரிந்ததெல்லாம் காட்டினார்கள். 30-ஆட்கள் விசிறிகொண்டு விசிறினார்கள். மணி மூன்றடித்ததுதான் தாமதம், வந்துவிட்டார்கள் வரிசைவரிசையாய் ஆட்கள் ஒவ்வொரு பீங்கான்தட்டைத் தூக்கிக்கொண்டு ஒவ்வொருதட்டிலும் இரண்டு ரஸ்தாளிப்பழமும், இரண்டு குடகுக் கமலாப்பழமும், இரண்டுஆப்பிள் பழமும் சர்க்கரையும், பேனகந்தியும், ஒரு சேர்பாலும் வைத்திருந்தன. ஒவ்வொருவரெதிரிலும் ஒவ்வொரு தட்டை வைத்தார்கள். எல்லாரும் சாப்பிட்டாவதற்கு 3½-மணியாயிற்று. அதற்குமேல் முன்சொன்ன பாகவதர் கதையையாரம்பித்தார். தஞ்சாவூரில் அந்தக்கதைபோல இதுவரையும் பின்னும் நடக்கவில்லையாம், மாலை 5½-மணியோடு கதைமுடிந்தது. எல்லாரும் தந்தம் இல்லஞ்சென்றனர். கோபாலஸ்வாமி அய்யர் பூரிதக்ஷிணைகொடுக்க வாரம்பித்தார். அதற்குமுந்தியே எல்லாரையும் ஒருகோவிலில் அடைத்திருந்தார்கள். அப்படி அடைபட்டவர்கள் சுமார் 1000-பேரிருக்கும். அவர்களுக்கெல்லாம் தெரிந்தவர்களுக்கு ரூபாய் ஒன்றும் தெரியாதவர்களுக்கு ரூபாய் அரையுமாகக் கொடுத்தார்.

எல்லாம்கொடுத்து முடிவதற்கு மணி 7-ஆயிற்று. 8-மணிக்குப் படுக்கையறைக்குள் போவதற்கு நல்லவேளை பார்த்திருந்தார்கள். அவ்வாறே அதற்குள் ஆசீர்வாதம் முடித்து, பாலன்னம் பருகச்செய்து, இரண்டாவது மாடியில், நாலாபக்கமும் ஒன்றுமில்லாமல் 3 ஜன்னல்களும், ஒருகதவுங் கூடிய கோரறையில் இராமஸ்வாமியையும் மீனாக்ஷியையும் கொண்டுபோய்விட்டார்கள். இருவரையுமுள்ளேவிட்டு, கதவைச் சாத்திப்பூட்டிக்கொண்டு எல்லோரும் கீழேயிறங்கினார்கள். எல்லோரும் சாப்பிட்டபிறகு ஓர் தாசி இரவு 10-மணிவரையிலும் கீர்த்தனம் பண்ணினாள். பிறகு எல்லாரும் துயின்றனர்.

6-வது அத்தியாயம்.

தம்பதிப்பிரிவு.

தம்பதிகளுள்ளே பிரவேசித்ததும், கதவையிழுத்து சாத்திப்பூட்டிக்கொண்டு வெளியேபோவது வழக்கமாயிருக்க, யாம்மாத்திரம் உள்ளே புகுந்து இருவருமென்ன செய்கிறார்களென்று பார்ப்போம்,

படுக்கையறை பெரிதல்ல. 10-அடி நீளம் 10-அடி அகலமும் கிழக்குமுகமாய் வாசற்படியுமுள்ளது. மற்றையமூன்று திக்குகளிலும் மூன்று ஜன்னல். தெற்கு ஜன்னல் ஓரமாய் ஓர் கட்டில் போட்டிருக்கின்றது. அந்தக் கட்டில் பலகையினாற் செய்யப்பட்டதோ அல்லது சட்டங்களினால் செய்யப்பட்டதோ. எம்மாற்சொல்லமுடியாது. ஏனெனில் கட்டிலின்மேல் ஒரேவெளுப்பால் இருக்கிறது மெத்தையையும் தலைபணைகளையும் ஒன்றற்கொன்று தோல்வியடையாமல் வெளுத்திருக்கின்றன. கட்டிலின்மேலே ஒரு கூடாரம் போல் ஹஸ்மானகிரியொன்று போடப்பட்டிருக்கிறது. என்ன வேடிக்கை? என்ன வேலைசெய்திருக்கிறார்கள்? வாசற்பந்தல் விநோதத்தைவிட இதன் விநோதமே மிகப்பெரிது. ஆனால் வாசலில் அண்ணாந்துபார்த்து கஷ்டப்படவேண்டும். இங்கேயோ கட்டிலில் படுத்துக்கொண்டுவிடலாம். படுத்துக்கொண்டால் ஒவ்வொரு சித்திரத்தையும், ஒவ்வொரு ரஸகுண்டையும் பார்த்துக்கொண்டேயிருக்கலாம், ஆனால் தூக்கம் வந்துவிடும். என்னகாற்று? அடடா! குளிர்ந்தகாற்று என்ன சுகமாய்வீசுகிறது? அதிகமில்லாமலும் குறைவில்லாமலும் சாதாரண தேகத்திற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே வீசுகின்றது என்ன வாச்சரியம்? கடற்கரையில் ஒரு இராமுழுதும் தூங்கவேண்டுமென்றாலுங்கஷ்டம். ஓரறையில் கதவுகளையிழுத்து சாத்திக்கொண்டு அதேகாலம் தூங்கவேண்டுமென்றாலுங்கஷ்டம். ஆனால் இவ்வறையிற் சிறிது படுத்துக்கொண்டாலும் போதும், கும்பகரணனாய்விடலாம்.

கட்டிலுக்குப் பக்கத்தில் ஓர் மேசைபோட்டிருக்கின்றது அம்மேசை என்ன கறுப்பாயிருக்கின்றது! பாருங்கள். காக்கையை யொப்பிடலாமா? சீச்சீ! வேண்டுமென்றால் காகத்தைப் பிடித்து அம்மேசையின்பக்கத்தில் வையுங்கள். காகமென்ன வெள்ளையாயிருக்கிறது! இவ்வளவு கறுப்பு இம்மேசைக் கெங்கிருந்துவந்தது? கிட்டப்போய்ப்பார்ப்போமா? ஓகோ! இதோபார்த்தீர்களா? மேசைத் துணி போட்டிருக்கிறார்கள், கட்டில் வெண்மைக்கும் இதன் கறுமைக்கும் சமீபத்தில் போட்டிருப்பது நியாயந்தானே.

அம்மேசையின்மேல் என்னென்ன வைத்திருக்கின்றன பாருங்கள். வெள்ளிச்செம்பு ஒன்று. இரண்டு மூன்று சேர் பாலிருக்கும். நாலைந்து சேர் பிடிக்கும். அதுநிறைய பால்வைத்திருக்கின்றது. அவ்வளவுபாலையும் யாரால் குடிக்கமுடியும்? அதிகமாய்ச் சுடுகின்றதா? பார்ப்போம். இல்லை, சரியாயிருக்கின்றது. சிறிது குடிப்போம். அடடா! இதுவரையும் இதையொத்த பாலை யான் குடித்ததில்லை. நீங்களும் குடித்திருக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். அது என்ன தித்திப்படா! அது! இவ்வளவு தித்திப்பாய் இவர்களுக்குப் பாலெங்கே கிடைத்தது? அதற்கென்ன நம்முடைய வகத்திலேயும் சர்க்கரை நிறையப்போட்டால் தித்திக்கிறது. ஆனால்மிகவும் தடிப்பாயிருக்கிறதே. இவ்வளவு தடிப்பாய்க்கறக்கிறமாடு இவர்களுக்கெங்கிருந்தது? உள்ளே போய் விசாலாக்ஷியைக் கேட்போம். சரிதான். இருபதுசேர்பாலைவாங்கி ஐந்துசேராகும்படி காய்ச்சினாளாம். அவர்கள் பணக்காரர்கள், நாமென்ன ஏழைகள்தானே. நம்மால்முடியாது அவ்வாறுகாய்ச்ச.

அம்மேசையின்மேல் ஒரு வெள்ளித்தட்டு வைத்திருக்கின்றது என்ன கோடு கோடாய்ப் போட்டிருக்கிறதே? சிறிதுசிறிதாய் எவ்வளவு வெற்றிலைகள்! இவ்வளவு சிறிதாய் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? யாம் பார்த்ததில்லை. தூளாயும் பொடியாயும் பக்கத்திலிருக்கிறதே. இதென்ன? சிறிதுவாயில் போட்டுக்கொள்வோமா? பேஷ்! பாக்குப்

பொடி, ஐயா இது! நம்முடைய அகத்தில் இப்படி இருக்கிறது? வெறும்பாக்கையுங்கூட மெல்வதற்கு அவகாசப்படாமல் பாக்கு வெட்டியை எதிரில்கொண்டுவந்து வைக்கிறார்களே! அதற்கு மிதற்கு மென்னவேற்றுமை பார்த்தீர்களா? உள்ளேபோய் இவ்வளவு நன்றாயும் வாசனையாயும் இருப்பதற்கு என்னசெய்திருக்கிறார்கள் கேட்போம். சரிதான். வாசனையாயிருப்பதற்குக் கேட்பானேன்? கொட்டைப்பாக்கு, நாரப்பாக்கு, களிப்பாக்கு, சாயப்பாக்கு, இலவங்கம், ஜாதிக்காய், ஜாபத்திரி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், பச்சைகற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி, இவ்வளவுஞ்சேர்த்திருக்கின்றதாம். கூட கொப்பரைத்தேங்காயும் நெய்யும் சேர்ந்திருக்கின்றது இவ்வளவுஞ் சேர்க்க நமக்குசக்தியில்லை. ஒருகால் இருப்பினும் விட்டவர்கள் சம்மதியார்கள். அந்தகட்டில், அந்த உலோகத்தினால் செய்யப்பட்டதாய் ஒரு சிமிழிருக்கிறதே திறந்துபார்ப்போம். எதையும் நாம் திறப்போம். ஒருவருமொன்றுஞ் சொல்லார். ஓஹோ! சரிதான், அதற்குளிருப்பது மூன்றுவது. என்ன வழவழவென்றிருக்கின்றது பார்த்தீர்களா?

வெள்ளிச்செம்பும் வெள்ளித்தட்டுந்தவிர இன்னும் அம்மேஜையில் ஒரு சிறிய பாத்திரம் இருக்கின்றது பார்த்தீர்களா? அதுதான் பாலைக்குடிப்பதற் குபயோகப்படும் பாத்திரம். இது இல்லாவிட்டால் நாம் குடிப்பதுபோல் செம்போடு குடிக்கும்படியாயிருக்கும்.

இன்னுமிந்த மேஜையில் இன்னொரு தட்டிருக்கின்றது. அதில் பார்த்தீர்களா? ஏலக்காய் இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், ஜாபத்திரி இவ்வளவும் சிறுசிறு குவியல்களாயிருக்கின்றன. அந்தகட்டில் இன்னும் இரண்டு குவியல்களிருக்கின்றன. ஒன்று செகப்பாயும் ஒன்று வெள்ளையாயுமிருக்கிறது. உருவத்தில் செகப்புக்குவியல் இலவங்கத்தை யொத்திருக்கின்றது. மற்றொன்று வால்மிளகை யொத்திருக்கின்றது. என்னவோ தெரியவில்லையே? வழக்கம்போல் உள்ளேபோய் கேட்போம். ஐயா! ஒன்றுமில்லை, செகப்புகுவியல்

இலைவங்கத்தின்பேரில் தங்கமுலாம்பூசி இருக்கிறார்களாம். காய்களில் வெள்ளிமுலாம் பூசியிருக்கிறார்களாம். இரண் டையும் வாயிற்போட்டுக்கொள்வோம். சாதாரணமாய்த்தா னிருக்கிறது. சிறிது கசக்கிப்பார்ப்போம். மிகவும் மெலிதாய்த்தான் பூசியிருக்கிறார்கள். இதுவுமொரு வித்தை தான். பாக்குப்பொடியில் போட்டது போதாதென்று தனி யாயும் வைத்திருக்கிறார்கள்!

இன்னுமந்த மேஜையிலொன்றுமில்லை. சிறிய மேஜை தானே!

கட்டிலின் மற்றொரு பக்கத்திலும் இதைப்போன்ற மேஜையொன்று போட்டிருக்கின்றது. அதன்பேரில் வெள் ளிக்கூஜா வொன்றிருக்கிறது. கூஜாவைத் திறப்போம். நல்ல தீர்த்தம் போலிருக்கிறது. சாப்பிடுவோம். என்ன தண்மை யாயிருக்கிறது! என்ன ருசி? என்ன வாசனை? சாதாரண தீர்த்தத்திற்குக் கூடவா இவ்வளவு சொக்கை!

இன்னுமந்த மேஜையின்பேரில் இரண்டு வெள்ளித் தட்டுகள் இருக்கின்றன. அந்த வீட்டிலெல்லாம் வெள்ளி தானோ? இதென்ன புதுமை? பணமிருந்தால் எதுவுஞ் செய்யலாம். ஒரு தட்டின்பேரில் சர்க்கரையோ? என்ன? இவ்வளவு வெளுப்பாயிருக்கின்றதே. சரிதான். முதல்தர சர்க்கரை, அதிக ருசியாயிருக்காது.

இன்னொரு தட்டிலென்ன? படிகாரமோ? நன்றாய்ச் சொன்னீர்கள்! படுக்கை யறையில் படிகாரந்தான் வைப் பார்களோ? படிகாரந்தான். நீங்கள் வாயில்போடவேண் டாம். நான்தின்கிறேன்.

கட்டில், இரண்டு மேஜைதவிர, அந்த அறையில் இரண்டு நாற்காலிகளிருக்கின்றன. நான் ஒன்றில் சாய்ந்து கொள்ளுகிறேன். இதென்ன? தாழ்ந்துபோயிற்றே. ஆம். அது ரப்பரினால் செய்யப்பட்டது. அப்படித்தான் தாழ்ந்துபோகும். நம்மகத்தில் போட்டுக்கொள்வோமா? அதன்விலை ௫௦-ரூபாயிருக்கும். இன்னுமொன்று மிதைப் போற்றோ? கேட்பானேன்

வடமேற்கு மூலையில் ஒருமேஜையிருக்கின்றது பார்த்தீர்களா? அதுவும் கறுமையாய்த் தானிருக்கின்றது. அதன்மேலும் மேஜைத்துணி போட்டிருக்கின்றார்களோ? இல்லை. இல்லை. அம்மரமே கறுப்பு.

அதன்மேலென்ன கண்ணாடியா? ஆம் இஃதென்ன? கண்ணாடியைத் திருப்பலாம்போலிருக்கிறதே? ஆமாம். என்னைப்போல் குள்ளமானவர்களுக்கும் உயர்ந்தவர்களுக்கும் அங்கிருந்தபடியே உபயோகமாகும்படி அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றது அந்தமேஜையில் ஒருகிண்ணத்தில் சந்தனமும், சிறியகரண்டியொன்று மிருக்கின்றது பார்த்தீர்களா? சந்தனம் பூசிக்கொள்வோமா? எப்படியிருக்கிறதென்று பார்ப்போம்? அடடா! அலம்புலகற்கு கல்லைப்போட்டுத் தேய்க்கவேண்டியதுதான். சிலசந்தனம் பூசுவதற்குமுன்னமே திரிதிரியாய்க் கிளம்பிவிடும். அவ்வாறிருக்குமோ என நினைத்தேன். இது மகா ஸன்னமாயிருக்கின்றதே.

பக்கத்திலென்ன பனிநீர்ச்செம்போ? தெளிக்கட்டுமா? குளிர்கிறதோ? சரிதான். வாசனைபார்த்தீர்களா? சந்தனத்தின் வாசனையதிகமா? பனிநீரின்மணம் மேலா? பாக்கின் மணமுயர்ந்ததா? தீர்த்தத்தின் வாசனையதிகமா? அல்லது ஊதுவர்த்திதானோ? இவைகளைவிட அதிகமாய்க்கமழ்கின்றதே? யோசித்துச் சொல்கிறேன் புஷ்பவாசனை வீசுகிறது, எங்கிருந்து வந்தது? இந்தக்கூடையில் புஷ்பமிருக்கின்றது. ஐயா. எந்தக்கூடையில்? ஓஹோ! கட்டிலின் கீழ் சிறுசிறு பிரப்புக்கூடைகள் இருக்கின்றன. ஐயா! அடடா! இதுவேறு? ஒவ்வொருகூடையிலு மென்னவென்ன விருக்கின்றது பார்ப்போம். இந்தக்கூடையில் பேயன் வாழைப்பழம். இதில் ரஸ்தாளி. இதில்பொந்தன். இதில்பச்சைவாழை. இதில் செவ்வாழைப்பழம். இதில் மலைப்பழம். என்ன ஐயா? வெறுமனே சொல்லிக்கொண்டேபோகிறீர்? இதோ இருக்கின்றது ஐயா என்றால், ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சீப்புவைத்திருக்கின்றது.

அவர்கள் அவ்வளவும் தின்னமாட்டார்கள் நாம் தின்போம் ஒவ்வொன்றில் இவ்விரண்டு. கூடைகளில் இன்னும்பார்ப்போம். இதுபலாப்பழம். இதுகிச்சிலிப்பழம். இது அன்னாசிப்பழம். இதுமாம்பழம். இது கொடிமுந்திரிப் பழம் இது சீமை இலந்தம்பழம், இவ்வளவுதான் பழ வகைகள். இன்னுங் கூடைகளிருக்கின்றனவே, இது மல்லிகைப்புஷ்பம் இது முல்லை. இது சம்பங்கி இதுரோஜா. இவ்வளவுதான் ஐயா கூடைகள் இரண்டுபெருக்காகவா இவ்வளவும்?

மூன்றாந்தொன்னையிலும் என்ன என்னவோ வைத்திருக்கின்றனவே, இந்த தொன்னையில் ஒரு வெண்கலத்தாம்பாளத்தில் லட்டு, ஜிலேபி, பேணி, அல்வா வைத்திருக்கின்றன. ஐயா நம்மால் தின்னமுடியாது பாலில் பிழிந்து குடித்தது இன்னுமெனக்குத் திகதிப்பு மாறவில்லை இந்த தொன்னையில் என்ன ஐயா இந்தத்தட்டு? என்ன ஐயா புதிதாயிருக்கின்றதே? ஒருபக்கங்கறுப்பும் ஒருபக்கம் வெள்ளையுமாயிருக்கின்றதே! இதுதெரியாதா? இது ஏனமல் தட்டு, ஐயா! ஒகோ! இதில் சீடை, முறுக்கு, தேங்குழல், பகோடா, வடை, ஓமப்பொடி வைத்திருக்கின்றன. ஒருதட்டு இவ்வளவுங்கொள்ளுமோ! இரண்டு தட்டு, ஐயா! ஒன்று நீர் சொன்னது, மற்றொன்று ஈயம் ஈயமா? என்ன ஐயா? ஈயத்திலா பக்ஷணங்களைவைப்பார்கள்? நீர் வேண்டுமென்றால் வந்துபாருமே, இதுவா? நன்றாய்ச் சொன்னீர். அலுமினியம் ஐயா இது. ஓகோ! சரிதான்.

மற்றொருதொன்னையில் இருப்பதைப்பார்க்க கட்டிலைத் தாண்டிப் போகவேண்டும். தொன்னையில் என்ன ஐயா பச்சை, சிகப்பு, நீலம் எல்லாவர்ணங்களும் இருக்கின்றனவே. இரு ஐயா, என்ன இவைகளெல்லாம்! சமீபத்தில் போய்ப் பார்ப்போம் சரிதான் கண்ணாடிசீசாவில் அந்த அந்த வர்ணத் தண்ணீர்களைவிட்டு, பின்னாலே ஒரு வெளிச்சத்தை வைத்துவிட்டால் இப்படித்தான் பிரகாசிக்கும். பட்டணத்தில் சில கடைகளிற்கூட பார்த்திருப்பீர்களே? சரிதான் அழகாய்த்தானையா இருக்கிறது!

இரண்டுகொம்பாவிகளின் மத்தியில் ஒருபெட்டி வைத்திருக்கின்றதே என்ன அழகாய் இருக்கின்றது! சித்திரங்களெழுதியிருக்கின்றன ஐயா! மரமா? தகரமா? இரும்பா? எஃகு ஐயா! இது எஃகு. விலையென்ன ஐயா இருக்கும்? ஒன்பதுரூபாய்இருக்கும் சாதாரணமாயிருந்தால். பூட்டிருப்பதனால் பன்னிரண்டுரூபா யிருக்கும். என்னும் பூட்டியிருக்கின்றதையா! பூட்டு என்ன வெளிப்படவில்லையே? இல்லை ஐயா! அது அப்படித்தான் மறைப்பாயிருக்கும், சாவியதிலேயே செருகியிருக்கின்றது. திறப்போமே. இதென்ன? சிறு சிறு சீசாவாய் வைத்து இருக்கின்றனவே! என்ன சித்தாயிருக்கின்றது? ஒவ்வொன்றுக்கும் தமர்போட்டிருக்கின்றனவையா? திறப்போம். அடடா! என்னமணம் பார்த்தீர்களா? இதென்னவையா இது? அத்தர். மீதி சீசாக்களில்? எனக்குப் பெயர்தெரியாது, எல்லாம் மிக்கவாசனையாயிருக்கின்றதையா! பெட்டிமுழுவது மிவ்வளவுதானோ? என்ன ஐயா! பெட்டி வுயரமாயிருக்கின்றது. இந்த அறையோ மிகவும் சிறிதாயிருக்கின்றதே! இதோ ஒரு தட்டுப்போலேயிருக்கிறது. இதை யெடுங்கள் ஐயா! ஐயா! ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்! சொப்புகள் ஐயா! அழகாய் வைத்திருக்கின்றன, எல்லாம் வெள்ளிபோலேயே மின்றிருக்கின்றன. வெள்ளியாற்செய்தது. சொப்புகள் கூடவா வெள்ளி? இரண்டொன்றை யெடுங்கள் பார்த்துச் சொல்லுகிறேன். இது ஜர்மன் சில்வர். வீட்டுக்குவேண்டிய வஸ்துக்களெல்லாமிருக்கின்றன. நாம் ௬-அடி உயரமின்றி, ௬-அங்குல உயரமாயிருப்பின், இப்பாத்திரங்களில் சமையல் செய்யலாம். இவை என்னகாரணத்திற்காக இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன? இரண்டு குழந்தைகளும் விளையாடப்போகின்றனவோ! சரிதான்.

வேறே யேதாவது தட்டிருக்கின்றதோ பார்ப்போம். இதோ! அடியிலொன்றிருக்கின்றதையா? இங்கே வாருங்களேன். இதென்ன பச்சை குதிரை: ஐயா! சதுரங்கக் காய்களையா, காய்கள் கூட வாசனை யடிக்கின்றனவே. சந்தன மரத்திலிருந்து செய்தவை. பாதி கருங்காலி மரத்திலிரு

து செய்தனை, ஆமாம். கறுப்பாயிருக்கின்றன. இந்த ஆட்டமெனக்கு அடத்தெரியுமா? வெகு நன்றாயிருக்கும்.

இன்னுமேதாவது தட்டுகளிருக்கின்றனவா? கீழே பொன்னையா! இது சொக்கடான். பட்டுத்துணிபோலிருக்கின்றதே. வெல்வெட் ஐயா! மஞ்சள், கறுப்பு, செப்பு, பச்சை, நான்குவித வர்ணங்களிருக்கின்றன.

இன்னுமேதாவது? இல்லை இனிமேலொன்றுமில்லை. நான்கு தட்டுகளுடன்கூடிய பெட்டி ஒன்பது ரூபாய்தானா இருக்கும்? நாற்பது ஐம்பது ரூபாயிருக்கலாம்.

இவ்வளவுதானையா கீழேயிருப்பது! மேலே பாருங்கள். அடடா! வெகு விந்தையாயிருக்கிறது. இந்தச் சுவற்றைப்பாருங்கள்! வரிசையாய்ப் படம் மாட்டியிருக்கின்றது. இந்தச் சுவற்றைப்பாருங்கள்! இது! இது! அடடா! நான்கு சுவற்றிலும்! பேஷ்! எத்தனை படங்கள்! வரிசையாயிருக்கின்றனவே! என்ன என்ன? ஐயா! நான் சொல்கிறேன்.

தென்சுவற்றில் ஸ்திரீயை புருஷன் புடவையைப்பற்றி இழுப்பதாகவும். ஸ்திரீ சிரித்துக்கொண்டே மறுப்பதாகவும் காண்பித்திருக்கிறது. இரவிவர்மாவினால் செய்யப்பட்டது.

2—நிர்வாணமாய் ஒரு ஸ்திரீ தாமரை புஷ்பம் பறிப்பதாக இருப்பது (அதே மனிதனாலியற்றப்பட்டது).

3—சகுந்தலையும் அவள் தாயாரும். (இரவிவர்மா)

4—அடையாபரண சகிதமாய் அதிரூபலாவண்யத்துடன் ஒருஸ்திரீ வடிவெடுத்தாப்பின்னிக் கொண்டு, புன்சிரிப்போடுநிற்கிறாள். பார்த்துக் கொண்டேயிருக்கலாம் எப்பொழுதும். (ர-வ)

5—சீதையும் மாயாராவணனும், வெகுவிந்தை (இரவிவர்மா)

6—சகுந்தலை நனனம் குழந்தை எவ்வளவு அழகாயிருக்கின்றது. (ர-வ)

வடசுவற்றில் ஸ்வாமிபடங்கள்.

1—கிருஷ்ணன். 2-இராமர்பட்டாபிஷேகம். 3-கஜலக்ஷ்மி. 4-சரஸ்வதி. 5-பார்வதிபரமேசுவரர். 6-ருக்மணியும் சத்தியபாமையும். எல்லாம் பூஜபடங்கள்.

கீழ்சுவற்றில் நம்மை ஆண்டுவருமன்னரின் குடும்பப் போட்டோ எடுக்கப்பட்டது.

மேல்சுவற்றில் இராமஸ்வாமியின்படம் 1. கோபாலஸ்வாமி அய்யர்படம் 2. கல்யாணியின்படம் 3 வீராசாமியின்படம். 4 பார்வதியின்படம். 5. இராமஸ்வாமியும் கோபாலஸ்வாமி அய்யரும் சாஸ்திரீகமாய் இருக்கும் படம் 6. இராமஸ்வாமி வகுப்பின் படம் 7. கோபாலஸ்வாமியையர், விசாலாக்ஷியம்மாள் கல்யாணி இராமஸ்வாமி ஆகிய நால்வருமொன்றுசேர்ந்து எடுத்த படம் 8 ஆகிய இவ்வெட்டுப்படங்களும் மாட்டப்பட்டிருக்கின்றன. உள்ளின்மேல் பலகைகள் தைத்திருக்கவேண்டும். இப்பொழுது துணி தைத்திருக்கின்றது. நல்லவேலை. இதிலொன்றும் சித்திரத்தைக் காணோம். நடுவில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கொன்று தொங்குகின்றது. என்ன பிரகாசம்! சுற்றிலுங் கண்ணாடியினால் சிறுசிறு துண்டங்களாகத் தொங்குகின்றனவே! இவையென்ன. இவை ஏழுவர்ணங்களைக் காண்பிக்கின்றனவே. சரிதான். அவைகளை நான் முன்னமேயே பார்த்திருக்கிறேன். அந்த அறையில் இன்னுமேதாவது உண்டா? ஐயா! இதென்ன ஐயா இது? நாற்காலிபெட்டி எல்லாம் விலையுயர்ந்த மரத்தினால் செய்யப்பட்டிருக்கும்பொழுது இது மாத்திரம் இந்த மரத்தினால் செய்திருக்கிறார்களோ திறப்போம். வைக்கோல் இருக்கின்றதே. இதென்ன ஐயா? புட்டிகளிருக்கின்றன, இது சோடாவாட்டர். இது லெமனேட், இது ஜிஞ்சரேல், இது ஆரஞ்சேல், இது சம்ளர்கப். ஐயா குடியர்கள்! குடியர்கள்! நாராயண நாராயண! நாங்கள் போகிறோம்:................

இப்படிப்பட்ட அறையினுள் தம்பதிகளிருவருந் தனியாயிருந்தவுடனே இராமஸ்வாமி கட்டிலில் போயுட்கார்

தான். மீனாக்ஷியோ வடகிழக்கு மூலையில் தலையைக்குனிந்து கொண்டு நின்றாள். அங்கிருந்த கடியாரம் ஒன்று டக், டக் என்று கொண்டிருந்தது. அந்த சப்தம் தவிர, மீனாக்ஷி மூச்சு இராமஸ்வாமியின் ஸ்வாசம் தவிர வேறே யொருவித சப்தமும் அவ்வறையி லில்லை. இராமஸ்வாமியோ மீனாக்ஷியைப் பார்ப்பான், மீனாக்ஷியோ பூமியைப்பார்ப்பாள். முன்னவனுக்குச் சிறிது சந்தோஷமுண்டாயிற்று, பின்னவளுக் கொன்றுமில்லை. மீனாக்ஷியோ கடைக்கண்ணால் இராமஸ்வாமியைச் சிற்சில சமயங்களில் பார்ப்பாள். அந்தசமயத்தில் இராமஸ்வாமியோ கீழேகுனிந்து விடுவான். எந்த சமயத்திலும் யாராகிலுமொருவர் பூமியைப்பார்த்துக்கொண்டே யிருப்பர்.

இவ்வாறு இராமஸ்வாமி கட்டிலிலும் மீனாக்ஷி மூலையிலுமாக அரைமணிநேரம் இருந்தார்கள். ஒவ்வொருவரும் மற்றவர் பேசினால் சந்தோஷமடைவர். யாராகிலும் முதலிற் பேசினாற் போதும். பாக்கியிருப்பவர் தானே பேசிவிடுவர். யார் முதலில் பேசுவது?

இந்துதேசத்துப் பெண்களுக்கு முதன்முதல் கணவனைப் பார்ப்பதென்றா லாசையென முன்னமேயே கூறினோம். இந்தேசத்துப் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தங்கள் நாயகி நாயகர்களோடு முதன்முதல் பேசுவதென்றால் பார்ப்பதினும் மிக்க ஆசை. இவ்வாசையோ இத்தேசத்திற்கேயுரியது. ஐரோப்பியர்களோ கலியாணம் பண்ணிக்கொள்ள ஐந்தாறு மாதத்திற்கு முந்தியே சகல சுதந்திரங்களுடனும் பேசி யொருவர்மனத்தை யொருவர் அறிந்துகொள்ளுகிறார்கள். இத்தேசத்தி லிஃதில்லாதபடியால் தங்களுடன் கூடிவாழ்பவர்களோடு முதலில் பேச அவா உண்டாகின்றது.

கல்யாணத்திலுண்டாகிற ஒவ்வொரு ஆசையும் பூர்த்தியடைந்தால் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. தம்பதிகளில் ஒருவரோடு மற்றவர் பேசவிரும்புகிற ஆசையைப் பூர்த்திசெய்வதனாலுண்டாகும் சந்தோஷத்தை யெப்

மல் சொல்லமுடியாது. இராப்பகல் முழுவதும் கஷ்டப்பட்டுப் படித்து பரீக்ஷைக்குப்போய் தேறியதனாலுண்டாகும் சந்தோஷம் அதனிலுங் குறைந்ததுதான். இருபதுரூபாய் பந்தயம் வைத்து ஓட்டம் சொக்கட்டான் ஆடி அதில் ஜயிப்பதிலுண்டாகுங் களிப்பு இதற்குப் பாதிகூட இல்லை. தான்விரும்பியதைப் பெற்றுக்கொள்வதற்காகப் புரண்டு புரண்டு அழுது கடைசியாக அதைப்பெற்றுக்கொண்டவுடன் குழந்தைகளுக்குண்டாகும் மனக்கிளர்ச்சியும் இதைவிடத் தாழ்ந்ததுதான். அதற்குச் சமானமாக அதையே சொல்லவேண்டும்.

இப்படிப்பட்ட சந்தோஷத்தை யனுபவிக்க இராமஸ்வாமி, மீனாக்ஷியாகிய இருவரும் முயன்றனர். ஒருவராலும் முடியவில்லை. கட்டிலில் இராமஸ்வாமியும் வடகிழக்கு மூலையில் மீனாக்ஷியுமாக இருந்தார்கள். கடைசியில் மணி 9-அடித்தது. இருவருக்கும் தூக்கம்வர ஆரம்பித்துவிட்டது. இராமஸ்வாமி தன்னிடத்திலிருந்த மனோதைரியத்தை மெல்லா மொருங்கு சேர்த்து கட்டிலினின்றும் புறப்பட்டு மீனாக்ஷிக்குச் சமீபத்திலிருக்கும் நாற்காலியில் போயுட்கார்ந்தான்.

உட்கார்ந்ததுதான் தாமதம். மீனாக்ஷி தென்மேற்கு மூலைக்கோடிவிட்டாள். அப்படியவளோடினது நாணத்தினாலோ, அல்லது எப்பொழுதுஞ் சிரிப் பெச்பதையே யறியாதவனோடு நமக்கென்னபேச்சு என்ற வெண்ணத்தினாலோ, அல்லது இம்மூலையைவிட அம்மூலையே நன்று என்று நினைப்பினாலோ யாமறியோம்.

இதற்கென்செய்வது? மீனாக்ஷியுடன் பேசுவதாகிய கட்டடத்திற்கு அஸ்திவாரமாகச் சமீபத்தில் போயுட்கார்ந்தான் இப்பொழுது அவள் வேறிடத்திற்குப் போய்விட்டனளே! நல்லது. நாமே முதலில் பேசுவோம் என்று "அங்கேயேன் நீ போனாய்" என்று பேசினான் இராமஸ்வாமி. திரும்பிப்பார்த்தான் யாராவது இருக்கிறார்களோவென்று. நல்லவேளை ஒருவருமில்லை. சிச்சீ! கதவ

பூட்டப்பட்டிருக்கும்பொழுது இங்கேயார்வருவார்கள் என நினைத்தான். இச்சிறுவாக்கியம் இவன்வாயினின்று வெளியில் வந்ததும் ஹிருதயம் படபடவென்றடித்தது. கைகால்கள் பலஹீனமாய்ப் போயின. உட்கார்ந்திருக்க முடியவில்லை. நாற்காலியில் அப்படியே சாய்ந்தான். ஐந்து நிமிஷம்வரையிலும் பதிலுக் கெதிர்பார்த்தான். 'காது கேட்டிருக்காதோ? ஏறக்கத்தாழக்கூறினேனும். யோசித்துக் கொண்டிருக்கிறாளோ பதில்சொல்ல? இந்தக்கேள்விக்குப் பதில்சொல்ல இவ்வளவு யோசனையென்ன? நல்லது வேறே பக்கமிருக்குமிடத்தை நோக்கிப்போவோம்' என்றுயோசித்து எழுந்தான். கால்நடுக்கிற்று. தீர்த்தம் சாப்பிட்டான். இப்பொழுது சிறிது பலமாயிருப்பதுபோல் தோன்றிற்று. அவனுக்குள்ள பனிவெழுச்சியோடு புதிதாய்வந்த சிறிது பலத்தின் துணையுங்கொண்டே மீனாக்ஷியிருக்குமிடம் நோக்கிச்சென்று கையைப்பிடித்துக்கொண்டான்.

கலியாணம் நடக்கும்பொழுது இவள்கையைப் பிடித்திருக்கிறான். ஒவ்வொருதரமும் கனத்த இப்பொழுது அவளுக்குச் சந்தோஷம் உண்டாகவில்லை. அப்படி யுண்டானகளிப்பும் மிகவும் சொற்பம். ஏனெனில் அப்பொழுது ஒருவர் சொல்லி கையைப்பிடித்துக்கொண்டான். இப்பொழுதோ ஒருவருமில்லாமல் தானாகவேசென்று கையைப்பிடித்திருக்கிறான்.

அவ்வாறு அவன் பிடித்த கை அவனுக்கு எவ்வளவு மிருதுவாயிருந்தது! பட்டுத்துணியைச் சொல்லலாமோ? சீ! இதற்குச்சிறிது கூட சமானமாகாது. இவன் எப்பொழுதும் பந்தாக்கருவியையும் புஸ்தகத்தையும் பிடித்திருக்கிறான். இவன்பிடித்த இதரபதார்த்தங்களோ மேற்கூறியவைகளினும் முரடாயிருப்பவை. இப்பொழுது பிடித்திருக்கிறவஸ்துவோ அதற்குவமையாக அதையே சொல்ல வேண்டும்.

'என்னகை? என்னமிருதுவாயிருக்கின்றது? என்ன அழகு? என்னசெகப்பு? நம்முடையதையும் செகப்பாய்த்தா

ணிருக்கிறது இவ்வளவு நன்றாயிருக்கவில்லையே. இந்தக்கைக்கு ஆபரணங்கள் கூடவேண்டுமா? வளையலின் கறுப்பு கையின் செவப்பை யதிகப்படுத்துகின்றதே! இந்தக்கையைப்பிடிப்பதிலா இவ்வளவு சந்தோஷத்தை ஈசுவரன்வைக்கவேண்டும்? நம்முடைய தோழர்களெத்தனைபெயர் கையைப் பிடித்திருக்கிறோம். இதுபோலிருந்ததா? என்று இவன் தன் எதிரிலிருக்கும் கையைப் பற்றி யோசித்துக் கொண்டே நின்றுகொண்டிருக்கும்போது மீனாக்ஷிதன் முகத்தை யிவன்பக்கம் திருப்பினாள்.

திருப்பினதும் இருவர்முகமுஞ் சந்தித்தன. பௌர்ணமிக்குமுந்தியதினம் சூரியன் மேற்கிலும் சந்திரன் கிழக்கிலும் இருந்து சந்திப்பதுபோல இவ்விரண்டும் ஒன்றையொன்றுபார்த்தன. உதிக்கும்பொழுது கம்பீரமாய் விளங்கும் சூரியனைக்கண்டு குவிந்ததாமரை மலர்வதுபோல் ஏற்கனவே புன்னகைகொண்டிருந்த இராமஸ்வாமியின் முகத்தைக்கண்டு, விசனமுற்றாற்போலிருந்த மீனாக்ஷியின் முகம் மலர்ந்தது. கலியாணமானதுமுதல், முதன்முதல் தன்னாயகன் முகம் மலர்ந்திருப்பதை மீனாக்ஷி கண்டாள்.

மீனாக்ஷியின் முகத்தையும் அவள் புன்சிரிப்பையும் இராமஸ்வாமிகண்டதும், அவளணிந்திருக்கும் நகையினாலுண்டாகும் அருவருப்பையும் மறந்தான். முதன்முதல் அவளைக்கண்டபொழுது, அவள் நகைகளினால் தனக்குண்டாகிய வெறுப்பையும் மறந்தான். நலங்கிடும்பொழுது உண்டான மனஸ்தாபத்தையும் மறந்தான். ஊசலாடும்பொழுது இவள்பாடினதினாலுண்டாகிய வருத்தத்தையும் மறந்தான். சிறுகுட்டிகள் துணியை முடிந்ததினாலுண்டாகிய தீயெண்ணத்தையும் மறந்தான். பேரில்லாக் கடிதத்தின் உண்மையையும் மறந்தான். மீனாக்ஷி அவள் சிறியதகப்பனாரெதிரில் பேசினதையும் மறந்தான். தீபாவளிக்குச் சென்றபொழுது தனக்குவந்த கடிதத்தையும் மறந்தான். தன் தோழன் ஐயாசாமியினிடம் சாந்திமுகூர்த்தம் இன்னகாரியத்திற்காகப் பண்ணிக்கொள்ளுகிறதென்று சொன்னதை

அமர்ந்தான். அவனுக்கு இப்பொழுது எதிரில் தோன்றின முகமே எல்லையற்ற இன்பத்தையளித்தது.

இவ்வின்பத்தையும் அதிக நாழியனுபவிக்க அவனுக்கு அதிர்ஷ்டமில்லை. பங்கஜி தன் முகத்தை யிவன் பக்கல் திருப்பினதும், அதையவ்வாறு வைத்துக்கொண்டிருந்ததும் இரண்டு விநாடிப்போதுதான் இருக்கும். உடனே முகத்தைக் கீழேகுனித்துக் கொண்டாள்.

இராமஸ்வாமிக்குப் பொறுக்கவில்லை. சந்தோஷமாய் ஒன்றையனுபவிக்கும் பொழுது, அது எக்காரணத்தினலாவது கெட்டுப்போனல், அந்தக்காரணத்தின்மேல் நமக்கு உண்டாகிற கோபத்துக்கு அளவில்லை. உதாரணமாக ஒருமாம்பழம் அதிமதுரமாய்ப் புசிக்கையில் ஒருவரதைப் பிடுங்கிவிட்டால், எவ்வளவு கோபமுண்டாகும்? அதுபோல் இப்பொழுது, இராமஸ்வாமிக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது பங்கஜியின் முகம். அந்தசந்தோஷத்தைக் கெடுத்ததும் அதுவே! அதற்கென்ன செய்யலாம்? யோசித்தான் இராமஸ்வாமி. கையைவிட்டான். முகத்தைப்பிடித்தான். தன்பக்கல் திருப்பினன். அதுவரையும் அடைந்திராத களிப்பை யடைந்தான்.

முகம் தன்பக்கம் திரும்பினதேயொழிய, கண்கள் இன்னும் கீழே பார்த்தன. முகம்முழுவதும் ஒருவிதமான புன்சிரிப்பும் வெட்கமும் பரவியிருந்தன. அப்படிப்பட்ட முகத்தைப்பார்த்தவர்களுக்கு யான் இன்னமாயிருந்ததென்று சொல்லவேண்டுவதில்லை. அவர்களே யறிவார்கள். அதைப் பாராதவர்களுக்கு யான் சொல்வதுபயனில்லை. அவர்கள் யானென்ன சொல்லியும் நன்றாயறியமாட்டார்கள். இவ்விதமா யென்றல் சொல்லவேண்டாத முகத்தைப் பார்த்துக்கொண்டு சுமார் கால்மணிநேரம் நின்றான். இராமஸ்வாமி கண்கள் சற்று மேலேபார்க்கும், சற்று பூமியைப்பார்க்கும். மேலேப்பார்ப்பது, வெகுசிறுநேரம். பூமியைத்தான் முக்கியமாய்ப் பார்க்கும்.

'என்னைக்கண்டால் வெட்கமாயிருக்கிறதோ?' என்று மறுபடியும் வாய்திறந்து வினவினான் "ஆம்" என்று சொன்னதுதான் தாமதம் மீனாக்ஷி, இராமஸ்வாமிக்குண்டான ஆனந்தத்திற்கு மட்டு உண்டோ? தன்னுடல் முழுவதையும் மறந்தான். ஆனந்தக்கடலிலாழ்ந்தான். இவ்வுலகத்தைவிட்டான் உடலைமாத்திரம் அவ்வறையில்வைத்தான். மனத்தை மீனாக்ஷியின் முகத்தினுட் புகுத்தினான். கன்னங்களில் வைத்திருந்தகையை அவற்றினின்றும் நீக்கினான். மார்புறப் புல்லினான். ஸ்வாசம்விடுவது கஷ்டமாகும் படித்தழுவினான். கன்னத்தில் முத்தமிட்டான். (பல்லை நெறுநெறெனக்கடித்தான்) மறுபடியும் புல்லினான். மற்றக்கன்னத்தில் முத்தமிட்டான். புல்லாக்கினைத்தொட்டான். முகவேர்வையைத் தன் அங்கவஸ்திரத்தால் துடைத்தான் நெற்றியில்முத்தமிட்டான். ஈரொழுக்கே நார்மொழி செய்வதைப் பார்த்தீர்களா? விந்தை! தனநகப்பனார் குழந்தைகளை முத்தமிடுங்கால், முத்தத்தில் என்ன அவ்வளவு சந்தோஷம் எனநினைப்பான். அவ்வெண்ணம் இப்பொழுது எங்கேபோயிற்றோ? ஆங்கிலேய கதைகளில் நேசித்த இருவர்களும் கட்டிக் கொண்டதாய் படிக்குங்கால் சிரிப்பான். அச்சிரிப்பு இப்பொழுது எங்கேகிற்றோ? காமத்திற் பீடிக்கப்பட்டவர்கள், தங்கள் காமத்துக்குக் காரணமாய் பொருளையடைந்தக்கால், அநேகவிதமாய் அர்த்தமில்லாத காரியங்களைச் செய்ததாக வாசிக்கும்பொழுதாவது கேட்கும்பொழுதாவது அவர்கள் மிருகங்களோ? தன்னைவிட்டும் மீறுமோ தன்னறிவு' என்பன். இப்பொழுது புல்லாக்கினைத் தொட்டதும் பற்களைக்கடித்ததும் எக்காரணங்கொண்டோ? இவன் புத்தி யிருந்தவாறென்னே?

'பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத்திண்டாட்டம்' என்ற பழமொழியை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே. அது அன்றிரவு அக்காலத்து மீனாக்ஷிக்கே பொருந்திற்று. இவன் அவளை ஆலிங்கனம் செய்யும்தோறும் அவளுக்குப் பெருமூச்சுவாங்கிற்று. அவளை முத்தமிடும் பொழுதெல்லாம் குறு குறு வென்றது. இவனை அங்கவஸ்திரத்தால்

துடைக்கும்பொழுது மூக்கில்பட்டு, அவனுக்கு வலியை யுண்டாக்கியது.

அவ்வலியும் ஒருகாரியத்திற்கு நல்லதாகவேயிருந்தது. அது மீனாக்ஷியை மறுபடியும்பேசும்படிச்செய்து அளவற்ற களிப்பையடையும்படிச்செய்தது இராமஸ்வாமியை. வலியையுண்டாக்கியதும், மீனாக் 'நீங்கள் அங்கவஸ்திரத்தாற் றுடைத்தது என் புல்லாக்கினையிழுத்தது இன்னும் வலிக்கிறது என்றாள்.

மீனாக் சொல்லும் ஒவ்வொருவார்த்தையும் இராமஸ்வாமிக்கு நம்மால் நினைக்கமுடியாத ஆனந்தத்தையுண்டாக்கியது. இவ்வாறு இராமஸ்வாமிக்குண்டான களிப்பை 'நினைக்கமுடியாத ஆநந்தம்' என்றும், 'அதுவரையும் அடைந்திராத களிப்பு' என்றும், இவ்வாறு அந்தபலவீன வார்த்தைகளால் கூறுதல்பொருந்தாது ஆகையால் அவனடைந்த சந்தோஷத்தை அதிகமாய் விவரியாது படிப்பவர்களை யெண்ணும்படியாய் விட்டுவிடுவோம்.

மீனாக்ஷி 'ஆம்' என்றது பால்குடிப்பது போலிருந்தது. திரும்பவும் சொன்ன நீண்டபதில் பாலில் கற்கண்டு போட்டதுபோலிருந்தது இவ்வாறு கற்கண்டுடன் கூடிய இனிப்பாகியபாலை சதாகாலமும் உண்பான்கருதி பின்வருமாறு பதிலுரைத்தான்.

'இதற்காகத்தான் நகை போட்டுக்கொள்ளக்கூடாது.'

'ஏன்! நீங்கள் துடைக்காமலிருந்தால்—

'நீ புல்லாக்கு போட்டுக்கொள்ளாமலிருந்தால்'—

'அழகு குறையும்'

'குறையவே குறையாது'

'வேண்டுமென்றால் பாருங்கள். நான்புல்லாக்கினைக் கழற்றி விடுகிறேன். என்முகவழகு குறைந்திருக்கிறதா இல்லையா பாருங்கள்.

எனமொழிந்து தன்புல்லாக்கினைக் கழற்றினாள். உற்றுப்பார்த்தான் இராமஸ்வாமி. கட்டிக்கொண்டான் திரும்பவும்.

'நீ சொல்வது எங்காகிலும் பொய்யாமோ? உண்மையாகவே அழகுசிறிது குறைந்திருக்கின்றது' என்றான்.

மறுபடியும் புல்லாக்கினை யிட்டுக்கொண்டாள்.

'இந்த நகையணிவதால் முகத்திற்கே பொருவிதத் தேஜஸ் உண்டாகின்றது' என்றான் ராமஸ்வாமி.

பதிலில்லை நல்ல தூக்கத்திலாழ்ந்து கிடக்குமொருவனை அவனிலும் பதவியில் உயர்ந்தவனொருவனெழுப்பினால் எவ்வளவு துக்கம் உண்டாகுமோ, வெளியிற்சொல்லக்கூடாத எவ்வளவு விசனம் உண்டாகுமோ, அவ்வளவையும் அடைந்தான் ராமஸ்வாமி. மீனாக்ஷியினிடத்திலிருந்து பதிலில்லாததினால் அவளு மௌனமுறையாமல் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு கட்டிலில் போயுட்கார்ந்தான். அவளையு முட்காரச்சொன்னான். அதற்கவள்

'நீங்களுட்கார்ந்திருக்கும் பொழுது நானு முட்காருவதோ?' எனப்புன்சிரிப்புடன் மொழிந்தனள்.

'கணவன் பாரியை ஆகிய இருவருஞ்சமானமே. மேலும் ஸ்திரீக்கு அதிகஉயர்வுகொடுக்கவேண்டும். பின் புருஷன் வந்தபொழுதெல்லாம் ஸ்திரீயெழுந்திருப்பது எக்காரணங்கொண்டென்றால், தாங்கள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு அன்னியோன்னியமாயிருந்தாலும் பிறர்க்குத்தெரியக்கூடாதென்று எண்ணந்தான். ஆகையால் இருவருந்தனியாயிருக்கும் பொழுது எவ்விதமேனுமிருக்கலாம், எனக் கூறினான். இவனது தத்கால அபிப்பிராயத்திற்கும் முன்னிவன் கொண்டிருந்த முன்னவேற்றுமையை யானியம்பாமலே நீவிர் அறிந்துகொள்ளலாம்.

மீனாக்ஷிகட்டிலின் மேலுட்கார்ந்ததும், ஒருவரை யொருவர்பார்த்து சிரித்துக்கொண்டு சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தனர் 'என்னைப்பார்த்து என்சிரிக்கிறாய்? என்னைப்பார்த்து என்சிரிக்கிறீர்கள்?' என்றுகேட்டுக்கொண்டனர்.

'என்னென்னமோ படித்திருக்கிறாயாம். இத்தனை நகைகள் மாத்திரம் போட்டிருக்கின்றாயே?'

‘ யான்படித்த புத்தகம் ஒன்றிலேயும் நகையைப்பற்றி தூஷிக்கவில்லையே.’

‘ புஸ்தகத்தில் சொல்லியிருந்தாற்றானா? புஸ்தகம் வாசித்ததனாலுண்டாய அறிவை வைத்துக்கொண்டு யோசனைசெய்யலாகாதா?’

‘ யோசனை செய்துதான் அணிந்துகொண்டேன்.’

‘ காதிலெத்தனை துவாரம்!’

‘ நம்முடைய தேகத்திலுள்ள துவாரங்களை விடவா?’

[illegible] தேகத்திலுள்ள துவாரங்கள் ஏதேனுமோர் காரியத்தை யுத்தேசித்து ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன

‘ இவைகளும் ஒரு காரியத்தைக் குறித்துத்தான்—’

‘ என்ன காரியம்?’

‘ தேகத்திலுள்ள துவாரங்கள் என்னத்திற்காக—’

‘ மூக்கு ஸ்வாசம்விட; கண்பார்க்க—’

‘ யான் இத்துவாரங்களைப் பற்றிக்கேட்கவில்லை. உடம்பு முழுவதும் அனேகதுவாரங்க ளிருக்கின்றனவே—’

‘ அவை வியர்வை வெளிப்பட’

‘ இவை நகையணிந்து கொள்ள’

‘ நகையணிந்து கொள்வதுதான் தப்பு என்கிறேனே.’

‘ நான்றான் சரியென்கிறேனே.’

‘ இதையப்புறம் தீர்மானிப்போம். நீ சொல்கிறபடி நகையணிந்து கொள்வதே சரியாயிருந்தாலும், காதில் இத்தனை பொத்தல்களைச் செய்யாமல் ஓரேகாது குத்திக் கொண்டு ஒரே நகையாய் விலையுயர்ந்ததா யணிந்தாலாகாதா?’

‘ தேகத்தில் ஒரு சதுர அங்குலத்திற்கு ஆயிரக் கணக்காய்த் துவாரங்களில்லாமல், தேகமுழுவதும் புறப்படும் வியர்வையை ஒரேயிடத்திற்குக் கொண்டுவந்து, ஒரே துவாரமாய்ப் பெரிதாய் ஒன்று வைத்தாலாகாதா?’

‘ இதனைப்பற்றி யாக்கியோனைக் கேட்டல்வேண்டும். அவர் இஷ்டமிது.’

‘ அம்மாதிரியே என்னிஷ்டம் இது ’

‘ நீயுங் கடவுளு மொன்று ? ’

‘ சிற்சில விஷயங்களில் அவரும் இஷ்டப்படி நடத்தலாம். நானு மென்னிஷ்டப்படி நடத்தலாம். அவருக்கு இஷ்டமிருந்தால் பூலோகமுழுவதையும் ஹதமாக்கலாம் ; எனக்கிஷ்டமிருந்தால், நானணிந்துகொண்டிருக்கும் புடவைகளையாவது நகைகளையாவது ஹதமாக்கலாம். அவரிஷ்டப்பட்டு தேகத்தில் கோடிக்கணக்காய் துவாரங்களேற்படுத்தினால், யானிஷ்டப்பட்டு காதில் சில துவாரங்களேற்படுத்துகிறேன்.’

இராமஸ்வாமியோ இதுவரையும் பலரிடத்திலும் பேசியிருக்கிறான். எதிலும் தான் பின்னிடைந்ததில்லை. ‘உன்னோடு பேசமுடியாது’ என்று எதிரிகளைச் சொல்லும்படியாய்ச் செய்வான். ‘வக்கீல்வேலையில் நன்றாய்ப்பேசுவன்’ என்று எல்லாரும் சொல்வது வழக்கம். அப்படிப்பட்டவன் தோற்கும்படியான சமயத்தை யடைந்துவிட்டான். மீனாக்ஷியின் ரூபலாவண்யத்தைப் பார்த்துக்கொண்டேயிருப்பின் தோற்றேயிருப்பன். ஏதோ நல்லகாலத்தினால் அதைப்பற்றி யதிகமாய்க் கவனிக்கவில்லை. ஆகவே, இராமஸ்வாமி, மீனாக்ஷி சொன்னதற்கு, ‘சரிதான், நான் கேட்டகேள்விக்கு சரியாய் நேரே பதில்சொல்லாமல் வேறுவிஷயத்தைக் கொண்டு வந்து விட்டனையே ! இஃதென்ன நியாயம் ? உம்முடைய மதத்தில் எனிப்பிழை யிருக்கிறதென்றால் உம்மதத்திலே னப்பிழை யிருக்கிறதென்பார்போலன்றோ நீ வாதிக்கிறாய் ? நன்று’ எனமொழிந்தான். மீனாக்ஷியும் சுலபமாய் விடப்பட்டவளா ? ‘நான் அதற்காகச் சொல்லவில்லை. எப்பொழுது நீங்கள் ஸ்வாமிசெய்தது பிழையென்கிறீர்களோ, அப்பொழுது மனுஷியரும் பிழைசெய்யக் கேட்பானேன் ? எப்பொழுது ஸ்வாமி பிரயோஜனமில்லாமல் காரியங்களைச் செய்கின்றனரோ, அப்பொழுது மனுஷியர்களும் செய்யலாமே ?’

‘ ஸ்வாமிசெய்ததின் பயன் யாமறியாவிட்டால் பிழையென்று விடலாமா? தேகத்தில் உள்ள அநேகதுவாரங்களை

விட ஒரே ஞாபகமாய் வைத்தால் நன்றாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகின்றது. அவ்வாறு வைத்தால் மிகக் கஷ்டமாயிருக்கும். ஒருவேளை வைத்தல்லவோ பார்க்கவேண்டும். அவ்வாறு பயன் தெரியாவிஷயங்களைப் பிழையென லேபிறை, யாம் மறுவிஷிய காரியங்களைப்பற்றி யோசிக்கத் தொடங்கலாமே. பெரிய ஸ்வாமியின் செயல்களைப்பற்றி யொன்றும் சொல்லக்கூடாது.'

என்னசெய்வள் மீனாக்ஷி! இவள் தோற்கும்படியான காலம் வந்துவிட்டது இப்பொழுது. ஒன்றுந் தோன்றாமல் விழித்தாள். அறைமுழுதுஞ் சுற்றிப்பார்த்தாள்.

'தோற்றதில் வெட்கமில்லை. என்னிடத்தில் நீ தோற்பதும் உன்னிடத்தில் நான் தோற்பதும் சகஜந்தான்; ஒத்துக்கொள்' என்று மறுபடியும் கட்டி முத்தமிட்டான்.

இவன் இவ்வாறு கட்டிக்கொண்டு பலகாலும் முத்தமிடுவதினால் வெட்கங்கொண்டோ என்னமோ, மீனாக்ஷி கட்டிலின்மேலேறினாள், ஏறி கடிகாரத்தின் சமீபத்தில் சென்றாள்.

இவள் கட்டிலின்மேலேறினதும், இரவிவர்மா படங்களில் முதற்படம்போல் செய்தான் இராமஸ்வாமி. அப்படத்திற்கும் இப்பொழுது நடந்ததற்கும் வேற்றுமை யென்னவென்றால், அப்படத்திலிருக்கும் முகம்மாறி யிருந்ததும் தவிர, அங்கிருந்த மறுதளிப்பு இவ்விடத்திலில்லை.

அவன் கட்டிலின்மேலேறினதற்குக் காரணம் பிடித்துக்கொள்ள எனவெண்ணி யிருந்தான். அவ்வாறில்லாமல் நிற்கவே, படங்களைப் பார்ப்பதாக நினைத்தான். அவளும் தெற்கு முகமாகவே படங்களை நோக்கி நின்றுகொண்டிருந்தாள். அவள் அம்மார்க்கமாய் முகத்தை வைத்துக்கொண்டு என்னசெய்கிறாளென்று இராமஸ்வாமி பாராமல், இவனுக்குண்டாகிய ஆத்திரத்தினால் துரியோதனன் திரௌபதியைச் செய்தவாறு செய்ய ஆரம்பித்தான்.

அவன் எண்ணம் இவன் இஷ்டமாக இருந்தது அக்காரியஞ் செய்து பாதிமுடிந்தது. இரவிவர்மா படங்களில் இரண்

டாவது படம்போல் ஆவதற்கு இன்னும் இரண்டு நிமிஷம் தான் வேண்டும். அதற்குள் மீனாக்ஷி, ஒரு கையால் இராமஸ்வாமியைத் தடுத்து மற்றொரு கையால் 'சற்று இருங்கள்' என்று இராமஸ்வாமியைப்பார்த்துக் கூறினாள். அவளது மறுதளித்த கையை இராமஸ்வாமி கண்டதும், அந்தக் கையிலிருந்த ஒரு கடிதம் இவன் கண்ணுக்குப் புலப்பட்டது.

இராமஸ்வாமி ஒரு கடிதத்தை மீனாக்ஷியினிடத்தில் கண்டதும், 'இஃதென்ன கடிதம்? புதிதாயிருக்கின்றது, மெயிலிலிருந்து வந்ததோ?' எனச் சந்தேகங்கொண்டு தானும் கட்டிலின்மேலேறினான். ஏறினதும் அவளருகிற் சென்று அவள் கையிலிருந்த கடிதத்தைத் தானும்பார்த்தான். இவன்பார்க்க ஆரம்பிக்கும் முன்பே அவள் கடிதத்தை மறைத்துக்கொண்டாள். இவன் மறுபடியும் அதைப்பார்க்க ஆசைப்படாமல் தான் பாதியில்விட்ட வேலையைச்செய்ய வாரம்பித்தான். அவள் அதற்குச் சம்மதப்படாமல் ஒரு கையால் தன்னுடையைப் பிடித்துக்கொண்டு மறுகையில், கடிதத்தைப்பிடித்து வாசிக்க ஆரம்பித்தாள்.

'கடிதத்தை வாசித்துக்கொண்டிரு. நான் என் வேலையைச் செய்துகொண்டிருக்கிறேன்' என்றான் இராமஸ்வாமி. பதிலொன்றுமில்லை. முகத்தைப்பார்த்தான். ஏதோ விசனமடைந்தவள்போல் காணப்பட்டாள்.

'அஃதென்ன கடிதம்?' பதிலில்லை.

'பேசாமற்போனால் போகிறாள்' என நினைத்து, திரும்பவும் தன் வேலையை யாரம்பிக்கப்பார்த்தான். வஸ்திரத்தின்மேலிருந்தகை முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகவே இறுகிற்று. என்னசெய்வான் இராமஸ்வாமி.

'பலாத்காரம் செய்யலாமா? நம்முடையபேரில் இவளுக்குக் கோபம்பிறப்பதற்குக் காரணமென்ன? அந்தக் கடிதத்தில் நம்மைப்பற்றி யென்னவிருக்கும்? அந்தக் கடிதமே யேது? எங்கிருந்துவந்தது? நாம் ஒரு கடிதமும்

இங்கே கொண்டுவந்து வைக்கவில்லை. அவனே தான் கொண்டுவந்திருக்கவேண்டும். அப்படியிருந்தால் அதை யவன் முன்னமே பார்த்திருப்பனே! பார்த்ததைத் திரும்பிப் பார்த்ததனால் விசனமுண்டாகுமோ? இக்கடிதம் இதுவரை யும் இவன் பாராததாய்த்தா னிருத்தல்வேண்டும்' எனக் கட்டிலிலேயே சிறிது தூரத்திற்கப்பால் நின்றுகொண்டு யோசனைசெய்தான். கடைசியாய் மறுபடியும் தன் பாதி வேலையைப் பூர்த்திசெய்ய எண்ணி சிறிது பலமாகவே யிழுத்தான்.

'நீங்களினிமேலென்னைத் தொடவேண்டாம்' என் றாள் மீனாக்ஷி.

மீனா பேசும் ஒவ்வொரு வார்த்தையும் இராமஸ்வா மிக்கு ஆனந்தத்தை யுண்டுபண்ணினதாகக் கூறியுளோம். அம்மாதிரியே இப்பேச்சும். பேச்சு என்கிறதில்மட்டும் சந் தோஷத்தை யுண்டாக்கியது. மீனா பேசினாளென்பதில் அதிக சந்தோஷமடைந்தவன், அப்பேச்சின் தாற்பரியம் தன் மனத்தில்பட மிக்க விசனமடைந்தான். 'நீங்கள் இனி மேல் என்னைத்தொட' இதுவரையும் அவனடைந்த களி ப்பிற்கு அளவேயில்லை. 'வேண்டாம்' கடவுளிவ்வார்த் தையை யெக்காரணங்கொண்டு சிருஷ்டித்தனரோ? இவ் வார்த்தையே யில்லாமற்போனால் தமிழ்ப் பாஷையைப்பேச முடியாதோ? வார்த்தையைத்தா னுண்டுபண்ணினார். அத ற்கு அர்த்தம் இதைத்தான் வைக்கவேண்டுமோ? அர்த் தம்தானிருக்கட்டும் தமிழ்ப்பாஷையில் செய்யுளின் கண் மட்டும் உபயோகப்படுத்தப்படும். அநேக வார்த்தைகளைப் போல் இதுவுமிருந்தால் ஆகாதா! உலகநடையிற்கூட உப யோகப்படுத்துவதாய்த்தானிருக்கட்டும்; அது இவள் வாயில் வரவேண்டுமோ? அப்படித்தானிவள்வாயில் வரட் டும். அது இந்த சமயத்தில்தான் வரவேண்டுமோ? அட டா! இதற்கென்ன செய்கின்றது? வேண்டாமென்று விட் டனளே. தொடக்கூட வேண்டாமாம். அவ்வளவு பாவம் செய்தோமா நாம்! எல்லா மிறைவன்செயல். என்னையாரு மீசன்செயல். நல்லது! காரணத்தையாகிலும் கேட்போம்

எனத் தீர்மானித்துக்கொண்டு 'ஏனப்படிச் சொல்கிறாய்?' என்றான்.

கோபங்கூடிய வருத்தத்துடன் முகத்தை யசைத்துக் கொண்டு ஏதோ பதிலியம்பமுயன்று முடியாதவள்போல் இருந்துவிட்டாள். வாயினால் மாத்திரம் ஒரு காரியமுஞ் செய்யவில்லையேயொழிய காலினால்வேண்டிய காரியஞ் செய்தனள். கட்டிலின்மேல் நின்றுகொண்டிருந்தவள் கீழே யிறங்கினாள். இறங்கினவள் வாசற்படியை நோக்கிச் சென்றாள். சென்றவள் கதவுதிறக்கிறதா எனப்பார்த்தாள்.

'கதவை யந்தப்பக்கத்தில் பூட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். உனக்கென்ன செய்யவேண்டும், சொல் திறக்கச் சொல்கிறேன்' என்றான் இராமஸ்வாமி.

மீனாக்ஷி சற்றுநேரம் ஒன்றுந்தோன்றாமல் திகைத்து வாசற்படிக் கருகாமையிலுள்ள நாற்காலிகளி லொன்றில் போயுட்கார்ந்தாள். கடிதத்தைப்பார்ப்பள் நாற்காலியில் சாய்வள். திரும்பவும் கடிதத்தைப்பார்ப்பள். பூமியைப்பார்ப்பள். இதையெல்லாம் உற்று நோக்கின இராமஸ்வாமி 'இந்தக்கடிதத்தில் ஏதோ துக்கமான விஷய மிருக்கவேண்டும். நாம்கேட்டு நம்மாலான முயற்சிசெய்வோம்' என்றெண்ணி, 'உனக்கிவ்வளவு துக்கம் கொடுக்கிற கடிதத்தை யென்னிடத்தில் காட்டக்கூடாதா?' என்றான். 'தாங்களினிமேல் என்னிடத்திற் பேசவேண்டாம்' என்று மறுமொழி யுண்டாயிற்று இராமஸ்வாமியின் கேள்விக்கு. 'ஐயோ! முன்னையாகிலும் தொடவேண்டாம் என்றாள். இப்பொழுது பேசக்கூடவேண்டாமாம் நல்லது, இதற்கெல்லாங் காரணம் அந்தக்கடிதமாய்த்தா னிருக்கவேண்டும். அதைப் பார்ப்போம்' என்று யோசனைசெய்து கடிதத்தைப் பிடுங்க முயன்றான்.

மீனாக்ஷியோ, கையிலுள்ள கடிதத்தை மடியில் சொருகிக்கொண்டாள். 'யாதொரு காரணமுமில்லாமல் வருத்தப் படுகின்றனையே! காரணத்தைச் சொன்னாலல்லவோ தக்க பரிகாரம் செய்யலாம்' என்றான் இராமஸ்வாமி. 'காரணமுங்

தங்களுக்கே தெரியும், அதற்குப்பரிகாரமு மொன்று மில்லை என்றாள் மீனாக்ஷி.

இரா—காரணமெனக்குத் தெரிந்தால் உன்னைக்கேட்பேனேன்?

மீ—வீண்தான்.

இரா—உண்மையாய் எனக்குத்தெரியாது, தெரிந்தால் உன்னை வருத்தப்படுத்தும்படியாய்ச் செய்வேனோ?

மீ—என்னை வருத்தப்படுத்த தங்களுக் கிஷ்டமில்லையேல் என்னோடு பேசாதிருக்கலாம்.

இரா—காரணமேற்பினால் பேசாதிருப்பேன்.

மீ—காரணமென்ன? என் துரதிர்ஷ்டந்தான்.

என்று சொல்லும்பொழுது இரண்டு சொட்டு கண்ணீர் கீழே விழுந்தது. இராமஸ்வாமி இதுவரையும் அடைந்திராத துக்கத்தையடைந்தான். சமீபத்திற்சென்று கையால் கண்களைத் துடைப்பதற்காக கையை மீனாக்ஷியின் சமீபத்தில் கொண்டுபோனான், கையை விலக்கிவிட்டாள்.

'காரணமில்லாத கோபத்திற்கு நானென்ன செய்யலாம்' என்று மிகுந்த விசனத்துட னியம்பினான் இராமஸ்வாமி.

மீ—தங்களை நானொன்றுஞ் செய்யச்சொல்லவில்லையே. நீங்கள் பேசாமலிருந்தா லதுவேபோதும்.

'எந்தவழியில் போனாலும் உடன்படவில்லையே. என்ன செய்யலாம் என்று மிக்க வருத்தத்துடன் மேல்செய்வது ஒன்றுந்தோன்றாதவனாய் கட்டிலின்மேற்படுத்து முகத்தை மூடிக்கொண்டான். மூடி ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் எழுந்திருந்து அவள் அருகிற்சென்றான். சென்று காரணத்தைத் தயவுசெய்து சொல்லவேண்டும். கடிதம் காரணமாயிருப்பின் அதனைக் காண்பிக்கவேண்டும். இவ்வளவு தயவு நீ செய்தால் போதுமானது' என்று தன் பாரியையை நோக்கிக் கூறினான்.

'இந்த வேஷமெல்லா மென்னிடத்திற் காண்பிக்க வேண்டாம். இதனுண்மையெல்லா மெனக்குத் தெரியும்.

தாங்கள் கடிதத்தை ஒளித்துவிட்டதாக வெண்ணியிருக்கின்றீர்கள்போலும். அதுமாதிரி ஒளித்தாலல்லவோ பயன். ஏதோ கஷ்டகாலம்! ஒளிக்காமல் விட்டீர்கள். கடிகாரத்திற்குள்தான் வைத்தீர்களோ? அதையாவது நன்றாய் வைத்தால் பரவாயில்லை. எதற்கும் சாமர்த்தியம் வேண்டாமோ?—' என்று மீனாக்ஷி சொல்லிக்கொண்டே போகிறாள். இராமஸ்வாமிக்கொன்றும் புரியவில்லை.

'நாம் போடுவதெல்லாம் வேஷமாம் உண்மையவளறிவாளாம். கடிதத்தை யொளித்துவிட வெண்ணினேமாம். அவ்வொளிக்குஞ் செய்கையில் ஏமாந்தோமாம். சமர்த்தாய்க் கண்டுபிடித்துவிட்டனளாம்' என்று தனக்குள்ளேயே யோசித்துக்கொண்டு 'நீ சொல்வதெல்லாம் சரியாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் நீ குறிக்கும் கடிதத்தை நான் கண்டதேயில்லை' என்று வருத்தங்கூடிய புன்சிரிப்புடன் மொழிந்தனன் இராமஸ்வாமி. இவன் புன்சிரிப்பு மீனாக்ஷியின் கோபத்தையும் துக்கத்தையும் அதிகப்படுத்தியது. 'நீங்களிந்தக் கடிதத்தை கனாவிலேயும் கண்டிருக்கமாட்டீர்கள். ஐயோ! பாவம்! இனிமேல் வக்கீலாய்ப் போகப்போகிறோம் என்ற வெண்ணத்தால் இப்பொழுதே பொய்பேசக்கற்றுக்கொள்கிறீரோ? உங்களுக்குவந்த கடிதத்தை, நீங்கள் பிரித்த கடிதத்தை, வாசித்ததாக உங்கள் கையொப்பமிட்டிருக்கிற கடிதத்தை நீங்கள் ஒளித்துவைக்க முயன்று தவறிப்போன கடிதத்தை, உங்கள் படுக்கையறையிலுள்ள கடிதத்தை, தங்கள் கடிகாரத்தில் நீட்டிக்கொண்டிருந்த கடிதத்தை, நீங்கள் அறியமாட்டீர்கள்! நன்று! நன்று! நீங்கள் சொல்வது நம்பத்தக்கது!' என்று அலக்ஷியம் கூடிய கோபத்துடன் மொழிந்தனள் மீனாக்ஷி.

தன்னை மெய்பேசுவதற்காக, எல்லாரும் மெச்சுவது வழக்கமேயொழிய, பொய்பேசினதாக தன்னைச் சொன்னவரொருவரையும் அறியான் இராமஸ்வாமி.

ஒவ்வொருவரையும் பற்றின சில வருத்தத்தைத் தரத்தகுந்த உண்மைகள், அவரவரில்லாவிடத்துரைப்ப

ந்தேயின்மை. உதாரணமாக ஒருவனுக்குப் பல் சிறிது நீண்டிருக்குமெனவைத்துக்கொள்வோம். நானாவது நீயாவது அவனிடத்திற்போய் 'உன் பல் ஏன் நீண்டிருக்கிற' தென்றால், அடிக்கவந்துவிடுவன். அல்லது ஏதோ அவனுக்குள்ளாகிய பெரிய அவமானத்தை வெளியிட்டாற்போலெண்ணங்கொண்டு மகா உக்கிரமான கோபத்தையடைந்துவிடுவன். அதேவிஷயத்தை யவனில்லாள் அன்றிரவு எடுத்துரைக்க நம்முடைய விஷயத்திலுண்டான அடிக்குப்பதிலாக ஒரு முத்தமும், கோபத்திற்குப் பதிலாக ஒருசிரிப்பும் உண்விடும்.

உண்மை விஷயங்களில் மட்டும் இவ்வாறென்றில்லை, வேறு எவ்விஷயங்களிலும் பிறரிடத்தில் உண்டாகும் கோபம் அவனிடத்தில் அன்றிரவு உண்டாவதில்லை. இதற்குத் திருட்டாந்தம் நம்முடைய இராமஸ்வாமிதான். இவனை வேறு எவனாகிலும் பொய் பேசுகிறவனென்று விட்டால், அவனை சிட்சிக்கக்கூடிய வழிகளையெல்லாம் தேடியிருப்பன். இப்பொழுதோ மீனா சொன்னதற்குப் பதிலாக 'நான் நிச்சயம் என்பதன் அர்த்தத்தை முழுதும் அறிந்திருப்பேனேல், அந்தக்கடிதத்தை நான்பார்த்தவனல்ல, உனக்கு இவ்விஷயத்தை மெய்ப்படுத்தும்பொருட்டு விரும்பியவற்றைச் செய்யத் தயாராயிருக்கிறேன்' என நயமாய் மொழிந்தனன்.

அதற்கு மீனாக்ஷி 'இனிமேல் நீங்கள் என்னை இம்மாதிரியான மிருதுவசனங்களால் ஏமாற்றமுடியாது. கடிதத்தை வாசித்தபின் எல்லாம் அறிந்துகொண்டேன். தங்களுடைய வஞ்சனையினல்லவெனக்கு நன்றாய்த் தெரிந்தது!' என்று முன்னிருந்த விதமாகவே முகத்தைவைத்துக்கொண்டு கூறினள். மீனாக்ஷியின் வார்த்தையும் பேசும்விதமும் பேச்சின் அர்த்தமும் வரவர கொடூரமாய்ப் போவதையறிந்தும் இராமஸ்வாமி 'நீ சொல்வதெல்லா முண்மையாயிருக்கலாம். அந்தக்கடிதத்தை நானும் வாசித்தபிறகு நீ என்ன சொன்னாலும் சமாதானஞ்சொல்வேன். யான் கண்டாலும்

கண்டறியாத கடிதத்தைப்பற்றி யதிகமாய்ச்சொல்லி யாது பயன்?' என்றான்.

'சரிதான். இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. நீங்கள் கடிதத்தைக் கேட்கிறவிஷயம் நானறிந்துகொண்டேன்' என்று அதிகப்பட்ட கோபத்துடன் அறைந்தனள்.

'என்னவிஷயத்தை நீ அறிந்துகொண்டாய்?' என்று இராமஸ்வாமி கேட்டதற்கு 'அந்தகடிதத்தைக் கிழித்துவிடும்படியாய் எழுதியிருக்கிறது. நீங்கள் முன்னாடி மறந்துபோய், இப்பொழுது என்னிடமிருந்து வாங்கிக் கிழிக்கலாம் என்று பார்க்கிறீர்கள். நானிறந்தாலு மிறப்பனே யல்லது, கடிதத்தைத் தங்களிடத்தில் கொடேன்' என்றாள் மீனாக்ஷி.

இவ்வாறு இராமஸ்வாமிகேட்கும் வஞ்சனையற்ற ஒவ்வொரு கேள்வியினுள்ளும் மீனாக்ஷி வஞ்சனையை யேற்றிக் கூறவே, இராமஸ்வாமியின் பொறுமையும் மீறிவிடும் போலிருந்தது. இராமஸ்வாமி, ஓர் அன்னியனோடு பேசியிருப்பின் 'நீ போடுவதெல்லாம் வேஷம்' என்ற அளவிலேயே கோபித்திருப்பான். சிறிது பழகினவனோடு பேசியிருப்பின் 'நீ பொய்பேசுகிறாய்' என்ற அளவிலேயே, பொறுமையை மீறியிருப்பன். அதிகமாய் நேசித்த ஒருவனோடு பேசியிருப்பின் 'நீ வஞ்சனைக்காரன்' என்ற அளவிலேயே, கோபங்கொண்டிருப்பன். இப்பொழுது உடன் பேசுகிறவள் பாரியையாதலால், கோபம் பிறப்பதற்கு இன்னும் ஒரு படியதிகமாய்ப் போகவேண்டியிருந்தது.

ஆகவே, கோபமற்ற முகத்துடன், சாவதானமாக, ஊகித்துப்பார்த்தால் கெஞ்சுகிறதுபோன்ற குரலுடன் 'நான் கடிதத்தைப் பார்க்கவேயில்லை யென்றால் நம்பமாட்டேன் என்கிறாய். நீ சொல்லுகிறபடியே என் எண்ணமாயிருந்தாலும் கடிதத்தை நீயே வாசி. அப்படியாகிலும் கேட்போம்' என்று வெகுவிநயமாய்க் கனிந்தனன்.

இவ்வளவு சாத்விகமான கேள்விக்கும் மீனாக்ஷி மனந்தளராமல் 'இப்பொழுதும் தங்களுடைய வெண்ணம்

எனக்குத் தெரிந்தது. என்கையிலிருந்தால் சுலபமாய்ப் பிடுங்கலாம் என்கிற எண்ணந்தானே, நான் இவ்வுபாயஞ் சுருக்கெல்லாம் அகப்படப்பட்டவளல்ல. இக்கடிதத்தைப் பார்க்கவேயில்லை யென்கிற நீங்கள். என்னை மணம்புரியவேயில்லை என்றாலும் என்பீர்கள். சற்று முன்னால் என்னை யணைத்து முத்தமிடவேயில்லை யென்கினும் பொருந்தும். இன்றிரவு இவ்வறையில் வரவேயில்லை என்றுஞ் சொல்லலாம்' என்று வழக்கமான அலக்ஷியத்துடன் மொழிந்தனள்.

இப்பொழுதும் இராமஸ்வாமியின் மனம் மாறிற்றோ? அல்லது முகந்தான் வேறுபட்டதோ? அல்லது தொனியிற்றான் பேதமுண்டோ? ஒன்றுமில்லை. மறுபடியும், இராமஸ்வாமி 'கடிதத்தைப் பிடுங்குவதென்றால் இப்பொழுதே செய்யமுடியாதோ? என்னை எதிர்க்கும்படியான அவ்வளவு பலம்பெற்றவளோ நீ? நியாயமாய் நான் வாசிப்பதற்காக உன் கடிதத்தை வேண்டுகிறேன். அப்படியாவது உன்கடிதத்தைப் பார்ப்பதென்கொண்டேனால், ஏதோ அதினால் நீ விசனப்பட்டனையே அவ்விசனத்தைமாற்றுவோம் என்றுதான் நான் இவ்வளவுதூரஞ் சொல்வதும். நம்பாதிருப்பதும் சிறிதேனும் நன்றாயில்லை. ஆகையால் இனிமேலாவது கடிதத்தைக்காட்டு' என்றான்.

'நீங்கள் கடிதத்தைப் பார்த்ததில்லை, பார்த்ததில்லை, யென்பதெல்லாம் வீண். இதைத் தாங்கள் பார்த்ததற்குத் தங்கள் கையெழுத்து அடையாளம் தாங்களே போட்டிருக்கிறீர்கள். நீங்கள் என் தகப்பனாருக்கெழுதிய கடிதங்களில் என்ன அடையாளம் போட்டிருக்கிறீர்களோ, அதே அடையாளந்தான் இக்கடிதத்திலும் போட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் இதைப்பார்த்துத்தா னிருக்கவேண்டும். நீங்கள் பார்த்துவிட்டுப் பார்க்கவில்லை யென்கிற பொய்வார்த்தையை சிறிதுநாழி மெய்யாகக்கொண்டு கடிதத்தை வாசிக்கிறேன். தாங்கள் அம்மூலையில் இருக்கவேண்டும். நான் இம்மூலையிலிருந்து வாசிக்கிறேன். அப்

படியிருப்பதோடுங்கூட, கடிதத்தைக் கிழிக்கவில்லை என்று சத்தியஞ்செய்து கொடுக்கவேண்டும்.'

இராமஸ்வாமிக்குக் கடிதத்தை யறிவதிலுள்ள தாபிருந்த அவாவினால், என்னவேண்டும் என்றாலும் செய்திருப்பன். மீனாக்ஷி சொற்படி சத்தியமுஞ்செய்து மூலையிலும் உட்கார்ந்து, அவளையொன்று கேட்டுக்கொண்டான், 'நீ சொல்கிறவிதமெல்லாம் செய்கிறேன். நீ மாத்திரம் கடிதத்திலுள்ளதை யுள்ளபடி வாசிக்கவேண்டும்.'

'உங்களைப்போல நான் பொய்சொல்வதும் வழக்கமில்லை. அப்படி நான் தவறி வாசித்தாலும் தவறுதலை நீங்களே யறிவீர்கள். உங்களுக்குத்தான் கடிதத்திலுள்ளது தெரியுமே!'

ஒரு மனுஷ்யன் எவ்வளவுதான் பொறுப்பான்? அடிக்கடி தன்னைப் பொய்யனாக்கியதோடுங்கூட. சத்தியத்திற்கு அரிச்சந்திரனையும், பொறுமைக்குப் பூமிதேவியையும், உதாரணமாய்ச் சொல்லல்போல் பொய்க்குத் தன்னை யுதாரணமாக்கிய பின்னரும் மனம்மாறாதிருப்பது சாத்தியமோ? 'உங்களைப்போல நான் பொய்சொல்வது' என்ற வார்த்தைகள் மீனாக்ஷியின் வாயினின்றும் வந்ததும். அன்றிரவு முதன் முதல் இராமஸ்வாமியின் மனம் வருத்தத்தை யடைந்தது. கோபமுஞ்சிறிது கலந்திருக்கலாம். ஆயினும் அச்சமயத்தில் அவனொன்றும் காண்பித்துக்கொள்ளவில்லை.

நல்லது! நம்முடைய மீனாக்ஷிதான் தன் கணவனை நோக்கி யிவ்வளவு அதிகமாய்ப் பேசியது தகுதியோ? மிகவும் படித்தவளென்றோம், பூமிதேவியின் மிக்க பொறுமையுடையவள் என்றோம். இவ்வாறு மரியாதைக்குறைவாய்ப் பேசுவது அழகா?

அவ்வளவு கல்வியிற்றேர்ந்தவள், பொறுமையில் மிக்கவள், இங்ஙனம் புகல்வதற்கு நல்ல காரணம் இருத்தல் வேண்டும். ஆகையால் அவசரப்பட்டு ஒருவர்மேலும் குற்றங் கண்டுபிடிக்காமல், எதையும் நிரவிசாரிப்போம்.

மீனாக்ஷி மேற்கூறியவாறு கூறியதற்கு அவளுடையகன் ஒருபதிலு முரைக்கவில்லை. மீனாக்ஷியும், இராமஸ்வாமி கட்டிலி லுட்கார்ந்திருந்த மூலைக்கெதிர்மூலையாகிய வட கிழக்கு மூலையி னின்றுகொண்டு கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள். ஒருவாக்கியம் படிப்பள். இராமஸ்வாமி யைப்பார்ப்பள். பிடுங்கவருகிறாரோவென்று இவ்வாறு அக் கடிதத்தை வாசித்து முடிக்க அரைமணிநேரம் பிடித்தது. அதனை அடியில் வரைவோம்:—

கும்பகோணம்,
10—7—1902.

என தருமை நண்பனுக் கநேக நமஸ்காரம்.

இவ்விடத்தில் உன்றோழன் பாரியாளுட்பட எல்லாரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமாதிசயங்களுக்கு எழுதி யனுப்பக் கோருகிறேன்.

என்னைப்போயான் மறந்துவிட்டேன். யாருக்கோ கடிதம் எழுதுவான்போல் அபிப்பிராயம் போடுகிறேனே யல்லது சிநேகிதனுக் கெழுதுவதில் இவ்வாறு முகவுரை யென்னென் பதைச் சிறிதேனும் யோசித்தேனில்லை. ஆயினும் அவ்வா றெழுதினதில் யாதொரு பிசகுமில்லை யென நம்புகிறேன்.

இரண்டு மூன்று மாதகாலமாய் உன்னிடத்திலிருந்து யாதொருகடிதமும் கிடைக்காததினால், உன் மனப்புத்தகத் தினின்றும் என்பெயரை யழித்துவிட்டனையோ என்றெண் ணும்படியாயிருந்தது. உன்மனம் எவ்வாறிருந்தபோதிலும், என்மனத்தில் உள்ள என்நண்பர்களுள் முதன்மையான பெயர் இராமஸ்வாமி யென்பதுதான்.

அவ்விடத்திலிருந்து கடிதம் வரவில்லையேயென்று எதோ ஒன்றிரண்டு கடிதங்கள் நானெழுதியும் பார்த் தேன், எதற்கும் அவ்விடத்திலிருந்து போதுமான (அனுக் கிரகம்) இல்லை.

உன்னைக் கடைசியாக சந்தித்தது எப்பொழுது? பள்ளிக்கூடம் சாத்தினபிறகு பட்டணத்திலிருந்து (வேக

மான வெளியில்) கும்பகோணம் வரையில் சேர்ந்துவந்து, அந்த ஸ்டேஷனில் நீ கீழிறங்கினையன்றோ? அப்பொழுது நீ சொன்னவார்த்தை ஞாபகமிருக்கின்றதோ? வாரத்திற் கிருமுறை கடிதம் எழுதுகிறேன் என்றனையே! இருமாதத் திற்கு ஒருமுறை வருவதும் அபூர்வமாய்விட்டதே!

உன்னையாவது உன் கடிதத்தையாவது பார்ப்பதற்கு மிகுந்த ஆவல்கொண்டயான் இன்று வந்த உன்கடிதத்தைக் கண்டு (தாய்வரவுநோக்கிய கன்றின்றன்மையை) யடைந்தேன். 'புலிவர வுயிர்வரு முலவைபோ' லாயினன். கடலிடை யாழ்கின்றொரு மரக்கலம் பெற்றென மயக்க நீங்கினேன்.

இவ்வாறு யானடைந்த களிப்பிற்கு வேறுகாரணமும் உண்டு. உயிர்க்குயிராகியும், எனக்குவந்த இன்பதுன்பங்களைத் தனக்கு வந்ததாகவும், விவரந் தெரிந்தது முதற்கொண்டு சிநேகிதத்திற்குக் காரணமாகியும் இருக்கிற என் பிராணசிநேகைக்கு சாந்திமுகூர்த்தம் என்றால் எனக்கு வரும் ஆநந்தத்திற்கு அளவுமுண்டோ?

உன்சாந்தி முகூர்த்தத்தைக் குறிக்கிறபாகம் வரையில் வாசித்துக் களிப்படைந்தயான், மேலெழுதிய வற்றைப்படிக்கத் தீராத்துயரத்திலாழ்ந்தேன். என் செய்வலாம்? ஐரோப்பாவோ இது? ஸ்திரீபுருஷர் தம்மிஷ்டப் பிரகாரம் பார்த்துக் கலியாணம் செய்துகொள்ளத் தக்ககாலம் எப்பொழுது வருமோ? பாழும் இந்தியாவிற்கு விடியற் காலம்வருமோ எப்பொழுதாகிலும்? இதரதேசத்தவர்க் குப் பிறர் சத்துருக்களாயிருப்பதுமன்றி, அந்தோ! நம்மவர்களுக்கு மாதாபிதாக்களே பெரியசத்துருக்களாய் விட்டனரே! பெற்றோர்களை யாது செய்தாற்றானென்ன? சிறுவர்கள் வாழ்நாள்முழுவதும் ஒரு பெருந்துன்ப சாகரத் தாழச்செய்துவிடுகின்றனரே! அவர்களை நீ சொல்கிற பிரகாரம் (நிவர்த்திக்கை) செய்தாற்றானென்ன?

ஐயோ! படிக்காத பிதாக்கள் தாலிப்படியென்றால் படித்தவர்களுமிப்படியாய் விட்டனரே! உன் தகப்பனும்

எவ்வளவு படித்திருக்கின்றார்? எத்தனை நியாய ஸ்தலங்களில் விசாரித்து கேஸ்களைத் தீர்மானித்திருக்கின்றார்? அவர்க்கும் புத்திகெட்டு விட்டதே! நீ சொல்கிறபடி, நேரே போய்ப் பார்த்திருந்தால் அந்தப்பெண்ணைக் கலியாணஞ்செய்து கொண்டிருக்கமாட்டாய். உண்மைதான். ஆனால் உனக்கும் பிதா சத்துருவாய் விட்டனரே!

கலியாணத்திற்கு முந்திய நாளெழுதினேனே. என் வார்த்தையைக் கேட்டனையா? அவளைத் தெரியாதாவெனக்கு? இல்லை. ட-ா-ா-ஸீ, சேஷையர் வீட்டு [illegible] திருக்கவில்லையா? அதென்ன மூர்க்கத்தனம். அதென்ன வம்புப்பேச்சு? அதை யிப்பொழுது சொல்லிப் பயன்? நீயே பழக்கத்தில் அறிந்கொள்வாய்.

அப்பொழுது நான் செல்லியவற்றைக்கேளாமல், இப்பொழுது என்னிடத்தில் வந்து புத்திசொல்லும்படி கேட்கிறாய். என்னிடத்தில்வந்து குறைகளைச் சொல்லிக் கொள்கிறாய். நானென்ன [illegible]? ஆயினும் என்னால் முடிந்த விஷயங்களில் என்னாலான உதவி புரிகின்றேன். அவளைவிட்டு வேறுகலியாணம் பண்ணிக்கொள்வதாக எழுதியிருந்தாய். உண்மையாக அதுதான் நல்லது. பெற்றோர்கள் செய்வதை நாம் மறுப்பதில்லையென்று கண்டு கொண்டல்லவோ அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். பத்துப்பேர் அவர்கள் செய்கையை மீறி வேறு கலியாணஞ்செய்து கொள்ள ஆரம்பித்தால், அப்புறம் அவர்கள் எல்லாவற்றையும் நம்மிடத்திலேயே விட்டுவிடுவார்கள். அவர்களை யடக்க அதுதான்வழி.

நீயவ்வாறு புனர்விவாகஞ் செய்துகொள்வது, உன் பந்துக்களொருவர்க்கும் தெரியக்கூடாது. (உன்னுடைய தற்கால) பாரியாளுக்கும், அல்லது உன் வார்த்தையை யுபயோகிக்க [illegible] தான் [illegible] கடிய [illegible] னுக்குந் தெரியவே கூடாது. பக்கத்து [illegible] யிலேயே அவளுடன் சண்டை போட்டதாய் எழுதியிருந்தாய். அது மிகவும் பிழை. அந்நியா [illegible] நம் மிகவும் சாந்தமாயும் நல்லதனமாயும்,

சிநேகிதமாயும் இரு. எப்பொழுதுமே, அவளுடன் கோபிக்கவேண்டாம். அவளை யதிக வருத்தத்திற்குள்ளாக்க உனக்கிஷ்டமிருப்பதா யெழுதியிருந்தாய். அன்றையதினமே விரோதித்துவிட்டால் அதிக வருத்தமுண்டாகாது. முன் சிநேகமாயிருப்பதுபோல் காட்டி, பின்னே திடீரென்று விவாகஞ் செய்துகொள்வாயானால், உன் மனோரதம் நிறைவேறும்.

அவளைப்பற்றி யேதோ ஒருசமாசாரம் கேள்விப்பட்டதாகவும், அதனுண்மையை யாராயும்படிக்கும் எழுதியிருந்தாய். இவ்வளவு அந்தரங்கமான விஷயத்தை யென்னிடத்தில் சொன்னையே! ஆ! ஆ! நீயல்லவோ உண்மையான தோழன். மனத்திலொன்றும் வாயிலொன்றுமாகப் புகல்கின்றவர்களுக்கும், மனத்தி நிகழ்ந்ததை யெல்லாம் வெளியிடுகின்ற உனக்கும் எவ்வளவு வேற்றுமை! என்னை யந்நியோந்நியமாக பாவித்ததுபோல் நானும் நினைக்கக் கடமைப்பட்டவனன்றோ? சாந்துணையும் உன்னை மறவேன்.

இது நிற்க, அவ்விஷயத்தைப்பற்றி குறித்தவர்களைக் கேட்டேன். அவர்கள் முதலில் ஒன்றுஞ்சொல்லமாட்டோமென்றுவிட்டார்கள். சொல்வார்களா பின்னர்? நானும் விடப்பட்டவனா? மென்மேலும் வற்புறுத்தி நயமாய்க் கேட்கவே மெய்யை மொழிந்துவிட்டனர். கேள்விப்பட்ட விஷயம் உண்மைதானாம். அன்றிரவு யேயார்.

யெழுதிய மறுவிஷயம் உனக்கெவ்வாறு தெரிந்தது? நானறிந்ததைப்பற்றியே மிகவும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். உனக்கும் தெரிந்துவிட்டதா? நன்று, நன்று. இதைப்பற்றி வேறொருவரையுங் கேட்கவேண்டாம். எனக்கே நிச்சயமாய்த்தெரியும். நானே யுனக்கெழுதலாமென்றிருந்தேன். (என்னிடத்திலுள்ளவிதம் உன்னிடத்தில் நானிருக்க முடியவில்லை) என்னசெய்யலாம்? இனிமேல் முயல்கிறேன் அவ்வாறிருப்பதற்கு.

மேற்சொன்ன இரண்டாவது விஷயம் சேஷையர் கிரகத்தில் சென்ற மே மாசத்தில் நடந்தது. போர்வழி கறுப்பு

திறமுள்ள (நா—மி. இப்பெயரை நீ யறிந்துகொள்வாய். அறியாவிடில் நேரே சொல்லுகிறேன்; கடிதத்திலெழுதுவது பிழை.

இவ்வளவு கெட்ட நடவடிக்கையுள்ளவனோ உனக்கு பாரியாள்! இவ்வளவு துர்நடத்தை யுள்ளவனையோ என் நண்பன் மணம் புரிந்தனன்! தெய்வங்காள்! கண்ணில்லையோ உமக்கும்!

என தருமை நண்ப! ஆனகாரியம் ஆய்விட்டது. இவ் விஷயங்களை யதிகமாய் வெளியிட்டால் நமக்குத்தான் வெட்கக்கேடு. ஆகையின் வாளாவிரு. அன்றிரவு யானியம்பிய படிநட, பிறகு நீ யியம்பியபடியே செய்யலாம்.

அதிகமாய்க் கடிதத்தை வளர்த்துவதில் யாதுபயன்? நேரே பேசிக்கொள்ளவேண்டிய விஷயங்களை கடிதமூலமாய்ப் பேசுவது பெரும்பிழை. ஆகையினிதோடு நிறுத்துகிறேன்.

இக்கடிதத்தைப் பார்த்தவுடன் கிழித்தெறிவதே உத்தமம். யாவர் கண்ணுக்குந் தென்படாமல் மறைப்பது மத்திமம். நீ வைக்கிற கடிதங்களுடன் வைப்பது அதமம். வெளியில் வைத்துவிட்டால் என்சொல்வேன்?

யானும் கையெழுத்துப் போடவோ? இரவியைப் பார்ப்பதற்கேன் விளக்குதவி?

யாரிடமகப்பட்டாலும் என்னில்லார்வசம் அகப்படாவண்ணம் இக்கடிதத்தைப் பாதுகாக்கவும்.

நானும் கடிதத்தை முடிக்கலாம் என்று பார்க்கிறேன் முடியவில்லை. நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்.

வந்தனம்.

இக்கடிதத்தை வாசித்து முடித்தாள் மீனாக்ஷி. மடித்து முன்போலவே மடியிற் செருகிக்கொண்டாள். தாரை தாரையாய்க் கண்ணீர் சொரிந்தனள். "எனக்காகப் பெற்றோர்களே இவ்வழிப்பிள்ளையல்லவோ செய்ய வெண்ணினீர்கள்.

என்னை சூர்ப்பநகைக்கல்லவோ ஒப்பிட்டீர்கள். என்னை யதி கவருத்தத்திற்கல்லவோ உள்ளாக்க நினைத்தீர்கள். என்பே ரில் அன்றோ சந்தேகப்பட்டீர்கள். அவரவர்களுக்குள்ள குணத்தைப் பிறர்மேலேற்றலாமோ? உங்களுக்கு வேறு கலியாணம் செய்துகொள்ள இஷ்டமிருந்தால், சுகமே செய்துகொள்கிறதுதானே. என் குணத்தையும் என் நடவடிக்கையையும் கெடுப்பானேன். தாங்கள் பட்டணத்தில் நடப்பதுபோல் என்னையும் கும்பகோணத்தினடப்பதாய் நினைத்துவிட்டீர்களோ? நல்லது. நானிந்த ஐந்தாறு மாத காலமாய்க் கும்பகோணந்தான் சென்றேனோ? சினேகித னென்றிருந்தால் தோன்றியவற்றையெல்லாம் செப்பலாமோ?' என்று அழுதுகொண்டேகூறி முடித்து, நாற்காலி யில் சாய்ந்துகொண்டு முகத்தைத் துணியால்மூடிக்கொண்டு விம்மிவிம்மி கதறிக்கொண்டேயிருந்தனள். மணியோ 12-ஆயிற்று 9-மணிக்குமேல் கண்விழித்தறியாள். ஆகையால் அழுதபடியே ஆழ்ந்த துயிலில் அமர்ந்தனள்.

இராமஸ்வாமியோ மீனாக்ஷி கடிதம்வாசிக்கும்பொழுதெல்லாம் அவளையே நோக்கி யுற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். தானாகவேயதாவது சேர்த்துப்படிக்கிறாளோ என்ற சந்தேகம் இவன்மனதிலிருந்தது. அதற்கேற்றபடியே, ஒவ்வொருவாக்கியமானதும், நிறுத்திநிறுத்திப் படிக்கவே, சந்தேகம் சிறிது நிச்சயமாயிற்று. ஆயினும் நிறுத்தியபோதெல்லாம் தன்னையேபார்த்ததால், அக்காலத்தில் மறுவாக்கியத்தை யேற்படுத்த அவகாசமிருந்ததாக வேற்படவில்லை. ஆதலால் கடிதம் உண்மையாயிருந்தாலும் இருக்கலாம் என்ற வெண்ணம் உண்டாயிற்று.

அதற்குமே லெண்ணமாக 'கடிதத்தை யாரெழுதியிருக்கவேண்டும்?' என்பதைப்பற்றி யோசித்தான். 'இரண்டு மாதமாய்க் கடிதம்போடாதவன் யார்? ஐயாசாமிக்கோ நாளைக் கொன்றுவீதம் போட்டுக்கொண் டிருக்கிறோமே; கும்பகோணத்தில் நமக்கு வேறுசினேகிதர் யாரிருக்கிறார்? பட்டணத்திலிருந்து இரண்டுபேரும் சேர்ந்துவந்தோமாம்;

ன் முகூர்த்தகடிதம் அனுப்பினேனும். கும்பகோணத்தில் யிருக்கனுப்பினேனும்?' என்று கடிதத்தின் இப்பாகம்வரையில் கேட்டு எழுதினவன் தெரியாமல் விழித்தான்.

மேலெழுதியவற்றைப் படிக்க இவன் ஒருகடிதத்திலும் முகூர்த்தசமாசாரத்திற்கு மேலொன்று மெழுதவில்லை. அப்படி யெழுதியதெல்லாம் ஐயாசாமி கடிதத்தில், அதிலும் கலியாணத்தைப்பற்றி யொன்றும் குறைசொல்லவில்லை.

'மறுகலியாண சமாசாரம் ஐயாசாமிக்கு மாத்திரந்தான் தெரியும். அவனே இப்படி கடிதம் எழுதமாட்டான்: நல்லது! யாரோ துட்டர்கள் இவ்வாறு செய்திருக்கின்றனர்.

அடடா! கம்பராமாயணம்? சூர்ப்பநகைக்கு இவளை ஒப்பிட்டோமாமே! கனவிலும் நினைக்கவில்லையே நாம்! யாரோ கம்பராமாயணம்படித்தவர் எழுதியிருக்கவேண்டும்.

இவளைப்பற்றிய விஷயமா? ஆ! ஆ! முதல்விஷயம் நாம் உத்தேசித்தவிஷயமாயிருந்தால் கலியாணத்தில் பேரில்லாக் கடிதத்தைக் கண்டதுமுதல், நமக்கு சந்தேகந்தான். அவ்விஷயமும் உண்மைதானும், நானே பார்ப்பதாய்த்தானிருந்தேன். பார்க்குஞ் சமயத்தில் முடியவில்லை. சந்தேகம் சந்தேகமாய்த்தானிருக்கிறது. எனக்குத் தோன்றின விஷயமே இது எழுதினவனுக்கும் தோன்றியிருக்கின்றதே.

மறுவிஷயமா? இதென்ன? சிவ! சிவா! அந்த எண்ணமே நமக்கு இல்லையே! ஈசுவரா! நீர்தான் சாக்ஷியாயிருக்கவேண்டும்' என்று ஆலோசித்து கடிதத்தினடியில் ஏதேனுமொரு பெயரிருக்குமென்று ஆவலுடன் எதிர்பார்த்தான்.

யானுங் கையெழுத்துப்போடவோ? இதென்ன? அவ்வளவு பழகினவனே? இல்லாள் வசம்மாத்திரம் காண்பிக்கக்கூடாது! நன்று! நன்று! இல்லாள் மாத்திரந்தான் இதைப் பார்த்தாள்.

இதற்கென்ன செய்யலாம்? கடிதத்தையோ வேண்டுமென்று யாரோ எழுதியிருக்கிறார். அதையும் அவள் பார்த்துவிட்டாள். நல்லது யாரெழுதியிருப்பார்? நல்ல படித்தவராய்த்தா னிருக்கவேண்டும். இலக்கண விலக்கியப் பிழைகள் சிறிதேனுங் காணோம். கடிதம் எழுதி இவ்வறையில் கொண்டுவந்து வைத்திருக்கின்றார்கள். யாமோ இவ்வறையை இன்றுமுழுதும் பூட்டியே வைத்தோம். இவளே யெழுதியிருப்பளோ ஒருவேளை? இருப்பினுமிருக்கும். ஆம்! ஆம்! 'குற்றமுள்ளநெஞ்சு குறுகுறு என்னும்,' என்னும் பழமொழிக்கேற்ப, தன்னிடத்துள்ள குற்றத்தைத் தானே யறிந்துகொண்டு, அது எங்கே வெளிப்படுமோ என்று எழுதியிருந்தாலும் இருக்கலாம். ஆஹா! இவள்தான் இவ்விதம் எழுதுவள். கம்பராமாயணத்திலிருந்தெடுத்துரைக்கவல்லவள் இவளே. எவ்விதத்தினாலாவது நம்மிடத்தில் மனஸ்தாபம் உண்டுபண்ண எண்ணம் இருப்பது நியாயந்தானே. ஆ! ஆ! இவளிடத்தில் கடிதம் அகப்பட்டது எச்சமயம்? ஏன்? அக்கடிதம் முன்னாலேயே அகப்படக்கூடாதோ? அது பிந்தித்தான் அகப்பட்டால் ஆகாதோ? நாம் (அக்காரியஞ்செய்ய) வாரம்பிக்கும் பொழுதன்றோ, கடிதத்தைக் கொண்டுவந்து காண்பித்தாள். நன்று! நன்று! இவ்வளவு இராக்கத குணங்களெல்லாம் பெற்றவளோ இவள்? தானே கடிதம் எழுதி, தானேயடியில்வைத்து தன்குற்றம் வெளிப்படுஞ் சமயத்தில்——; அடடா! என்ன சாமர்த்தியம்! வெகு நன்று! பேர் ஊர் அற்றகடிதமும் உண்மைபோலும். 'அவளழகென்று உனக்கெண்ணம். எல்லாம் வெளியழகுதான். அவள் கிட்ட நெருங்காதே.' இதல்லவோ அதன்வாக்கியம். உண்மையையேவைத்து எழுதிவிட்டனனே! என்னமுயற்சி செய்தாலும் உண்மையை மறைக்கமுடியுமா? அது தானாகவே வெளிக்குவந்துவிட்டது! நல்லவள்தான்! என்ன சாதுரியமாய் எழுதியிருக்கிறாள். அவள் உண்மையைக்கொண்டே நம்முடன் பகைப்பதற்குக் காரணந்தேடிக் கொண்டனளே! அந்தக்கடிதத்தை நாமேபார்ப்போம்! இதுதான் தகுந்த

வேளை. நல்ல தூக்கம்!' என்று கட்டிலிலிருந்தபடியே யிவ்வளவு எண்ணமிட்டுக்கொண்டு, பிறகு கீழேயிறங்கி, அடிமேலடியெடுத்துவைத்து, அவளருகிற் சென்றான். கடிதம் வைத்த இடத்தினருகில் தன்கையைக்கொண்டுபோய் புடவையை நீக்கியிழுத்தான் கடிதத்தை. கடிதமும் வந்தது, மீனாக்ஷியும் விழித்துக்கொண்டாள். உடனே யெழுந்தாள். இராமஸ்வாமியை நோக்கி யோடினாள். 'கடிதத்தைக் கொடுத்துவிடுகிறீர்களா? இல்லையா?' என்று மகா கோபத்துடன் கேட்டனள்.

இராமஸ்வாமியோ கடிதத்தைப் பிடுங்கினதும், கட்டிலில் உட்காருவதற்குச்சென்று, இவள் தன்னருகில் வருவதைக்கண்டு, கடிதத்தை யிரண்டு கைகளாலும் பின்னால் வைத்துக்கொண்டான். இன்னுமதை யவன் பார்த்தவனல்ல.

'கடிதத்தைக் கொடுங்கள்' என்றாள் மறுபடியும்.

'பார்த்துவிட்டுக் கொடுக்கிறேன்' என்றான் இராமஸ்வாமி.

'நீங்கள் பார்க்கவேண்டிய அவசியமில்லை' என்றாள் மீனாக்ஷி.

மீனாக்ஷியின் கோபம் வரவர அதிகரித்துக்கொண்டே யிருந்தது. இராமஸ்வாமிக்கும் புதிதாய்க் கோபம் உண்டானதாய்க் கூறினோமே! அதுவும் அதிகப்பட்டுக்கொண்டே யிருந்தது.

'உன்னிடத்தில் கொடுக்கவேண்டிய அவசியமில்லை' என்றான் இராமஸ்வாமியும் சிறிது கோபத்துடன்.

'திருட்டுத்தனஞ்செய்ய வாரம்பித்துவிட்டால் அப்புறம் யானென்னசெய்வேன்' என்றாள் மீனாக்ஷி. அதிக கோபத்துடன் 'வார்த்தையை யோசித்துப்பேசு' என்றான் இராமஸ்வாமி.

மீனாக்ஷியினிடம் முழுவதும் கோபம் உண்டாவதற்கு இன்னும் ஒருபடி வேண்டியிருந்ததாகக் கூறினோம். 'திருட்

டுத்தனம் செய்கிறவன்' என்று சொல்லவே, அந்தப்படி தாண்டி, உண்மையாகவே கோபம் பிறந்துவிட்டது.

மீனாக்ஷி இராமஸ்வாமி சொன்னதற்குப் பதிலாக 'நீங்கள் காரியங்களை யோசித்துச்செய்யுங்கள். நானும் யோசித்துப்பேசுகிறேன்' என்றாள். இவள் இவ்வாறு சொல்லும் பொழுது இராமஸ்வாமி கடிதத்தினுள்ளே முதன் முதல் பார்த்தனன். அந்தக் கையெழுத்து தானெங்கேயோ இதற்குமுந்தி பார்த்ததாயிருந்தது. யோசித்தான் சற்றுநேரம். ஆ! ஆ! தீபாவளிக்குத்தான் திருப்பாப்புலியூர் சென்றபொழுது அங்கே மீனாக்ஷி தனக்கெழுதிய கடிதத்தின் கையெழுத்தும். இப்பொழுது இக்கடிதத்தின் கையெழுத்தும் ஒன்றாகவே யிருந்தது. இவனெண்ணியதெல்லாம் உண்மையே! கடிதத்தை மீனாக்ஷிதான் எழுதியிருக்கின்றாள். தீபாவளிக்கு இராமஸ்வாமிக்கு வந்தகடிதம் மீனாக்ஷியெழுதியிருந்தால், இதுவும் அவள்தானெழுதியது முன்னதைப் பற்றி இராமஸ்வாமிக்குச் சந்தேகமேகிடையாது. ஆகவே யிப்பொழுதும் இக்கடிதத்தை மீனாக்ஷியெழுதினதாகவே யுறுதிப்படுத்திக்கொண்டான்.

'என்னதைரியமாய்க் கடிதம் எழுதியிருக்கிறாள். இல்லாவிட்டால் காட்டேன் என்பளா? ஆ! ஆ! படித்தசாமர்த்தியத்தை இப்படியெல்லாம் கழிக்கிறாள்! பொய்க்கடிதம் எழுதுவதிலும், பொய்ப்பழி சாற்றுவதிலும், அந்தோ! நல்லறிவை வீணே செலவிடுகின்றனள்.' என்று யோசித்துக்கொண்டே யிருக்கையில், கைக்கடிதத்தை மீனாக்ஷி வந்து பிடுங்கினள்.

ஆ! இராக்ஷஸீ! போ அப்புறம்! என்று சிறிது பலமாகவே இராமஸ்வாமி, மீனாக்ஷியை பிடித்துத் தள்ளினான். அவ்வாறுதள்ளப்பட்டவள் நாற்காலியில் தாக்குண்டதனால் சிறிது வலியுண்டாகவே அழத்தொடங்கினாள்

'இவ்வளவு கஷ்டப்படவோ உங்களுக்கு நான் வாழ்க்கைப்பட்டேன்?' என அழுதகுறலுடனே நாற்காலியின் சமீபத்தில் நின்றுகொண்டு கூறினள்.

'போதும்! மூடுவாயை! பொய்யாய்க் கடிதமெழுதியதுமன்றி பழியையும் என்மேற் போடப்பார்த்தனை! அழுகையும் வேண்டுமோ வுனக்கு?'

'யாரெழுதியது கடிதம்? வஞ்சனைக்காரருக்கு வஞ்சனைப்புத்தி தோன்றுகின்றதோ?'

அழுகையினாலும் வருத்தத்தினாலும் மனைவியின்குரல் கீழ்செல்லச்செல்ல, கோபத்தினாலும் தீயெண்ணத்தினாலும் இராமஸ்வாமியின் தொனி யதிகப்பட்டுக்கொண்டே யிருந்தது.

'யாரெழுதியது கடிதம் என்கிறாய் சிறிதேனும் பயமின்றி. நீயெழுதியதுதான். உன் கையெழுத்து நானறியேனென நினைக்கவேண்டாம். தீபாவளியின் பொழுது நீயெழுதிய கடிதந்தால், அறியவில்லையோ யான் உன் கையெழுத்தை!'

'பொய்பேச வாரம்பித்துவிட்டால், அதற்கோரெல்லை கிடையாதோ? தீபாவளியின்பொழுது நானெங்கே கடிதம் எழுதினேன்?'

'ஆஹா! ஆஹா! இப்பொழுதுதான் நீ கூறுவது முழுவதுமுண்மை! தீபாவளியின் பொழுது எனக்குக் கடிதம் எழுதவில்லையா? எழுதி யான் தூங்குசமயம் பார்த்து என் புத்தகத்துள் வைத்துவிடவில்லையா? விழிக்கிறாய்! ஆடு திருடின கள்ளன்போல்!'

'நானொரு கடிதத்தையுமறியேன்! தீபாவளியின் பொழுது உங்களுக்கல்ல, வேறு எவர்க்கும் யான் கடிதம் எழுதவேயில்லை. நீங்கள் வேறெந்தக் குற்றஞ்செய்தாலும் பொய்யென்பதை விட்டுவிடுங்கள். "இறந்தாலும் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்" என்பதை நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்களே.'

'ஆம்! நீயும் கேள்விப்பட்டிருப்பாயன்றோ?'

'வீணே நீங்களும் நானும் "நீ பொய்யன் நீ பொய்யன்" எனச் சிறுவர் பேசுவதுபோல் பேசுவதில் காரிய

மில்லை, உண்மையென்பதே யில்லாமற் போய்விடும். பெருந் தன்மையைப்பற்றிய உண்மையைச் சிறுமையாக்கியதாகும். எப்பொழுதும் புருடர்களுக்கு வழக்கந்தான் தங்கள் ஸ்திரீகள் எவ்வளவு அழகாயிருப்பினும், அவர்களைவிட்டு வேறிடஞ்செல்வ தியற்கைதான்.

“திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்——நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னுந்,
தீயவி லங்கிற் சிலர்.”

ஆகையால் உலகவியற்கையின்படியே தாங்களும் நடந்தாலும் என்மேல் வீண்பழிபோடாமல், என் பெயரைக் கெடுக்காமல், நான் பொய்பேசினேனென்று கூறாமல், இருந்தால் நலமாயிருக்கும். தங்கள் சுபாவம் எனக்கு அன்றைய தினமே தெரிந்துவிட்டது. கலியாணத்தில் தங்களுக்கு வந்ததாகத் தாங்கள் கூறிய கடிதத்தினுண்மை யெனக்கன்றையதினமே தெரிந்துவிட்டது. அக்கடிதம் நீங்களேற் படுத்திக் கொண்டதென்பதை யானறியேனோ?’

‘நீ சொல்லியதுபோதும், உன்குணத்தை நீ பிறர்மேலேற்றுகின்றாய்! நன்று! நன்று!

‘ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்——வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம்.”

உன்வாயினாலேயே நீயுன்னைக் கற்பின் மகளிரெனச் சொல்லிவிட்டாய்! ஆகையால் நீ யெக்குணமு முடையாளாகலாம்!’

முறையுங்குடிமையும் பான்மையுநோக்கார்
நிறையுநெடுநாணும் பேணார்——’

என்று சொல்லிக்கொண்டே யிருக்கையில், மீனா—ள் கதவைத்தட்டினாள் தன்னொருகாலால்.

'அரைநாழி யினிமே லுன்னுடன் கூட இரேன். யொருவழிப்பட்ட மனத்தையுடையவனோ? அல்லது நான் தான் கற்புள்ள ஸ்திரீயா? என்பதை ஸ்தாபித்துக்கொண்டு மறுபேச்சுப் பேசுவோம்! அநியாயமா யென்மேற் பழி போடுகிறாய்! பிறர் மனையின்கட் செல்வார்கட்கு மானம் மெய்ம்மை முதலியவையுமுண்டோ?

"கொலையஞ்சார் பொய்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்வார்
காமங் கதுவப் பட்டார்."

என்பதற்கிணங்க நடக்கின்றீர் என்றாள்.

'நீ சொல்லியதே வார்த்தையாயிருக்கட்டும். இனி மேல் ஒருபேச்சும் பேசவேண்டாம். நீ சொல்லிய சங்கதி களை ஸ்தாபித்துக்கொண்டு பிறகு பேசுவோம்.—யாரங்கே வெளியில்? கதவைத்திற' என்று கதவை யுரக்க உதைத் தான்.

மணி 1-அடிக்கிற சமயம். 1-அடிக்கும் வரையிலும் இரண்டுபேரும் பேசாமல், பெண் பூமியையும், ஆண் பெண் ணையும் நோக்கிக்கொண்டு நின்றனர்.

'என் கடிதத்தையாகிலுங் கொடுங்கள்.' என்றாள் மீனாக்ஷி.

'உன் கடிதம்! நீயே யொத்துக்கொண்டாய்! உன்னை யறியாமல் உன்வாயிலுமுண்மை வந்துவிடுகிறது.'

'எப்படியாவதிருக்கட்டும். கடிதத்தைக் கொடுங்கள்.'

'கடிதத்தை யுன்னிடத்திற் கொடேன்!'

'கொடாவிட்டால், இவ்வாறுதான் பிடுங்குவேன்' என்று ஒரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து இராமஸ்வாமியின் கையி லுள்ள கடிதத்தைப் பிடித்திழுத்தாள். அது இரண்டாய்க் கிழிந்து, பாதி யிவள்கையிலும் பாதி யவன்கையிலும் ஆக நின்றது.

'என் கையிலிருந்ததைப் பிடுங்க வருகிறாயா?' என் றான் இராமஸ்வாமி சென்றான் அவளருகில். பிடித்தான் கூந்

நிலை, சாய்த்தான் சென்னியை, உயர்த்தினான் தன் கையை. போட்டான் அவள் கன்னத்தில். அறைந்தான் கதவை.

மீனாக்ஷியோ தனக்கு விவரந்தெரிந்தது முதற்கொண்டு ஒருவர் கையிலும் அடிபட்டவளல்ல. புதிதாயிப் பொழுது உரக்க அடிபடவே, அவளையுமறியாமல், 'ஐயோ' என்ற அரவம், அவள் வாயையுந்தப்பி வெளிவந்துவிட்டது.

இராமஸ்வாமி இரண்டுதரம் கதவை யிடித்ததற்கும் மீனாக்ஷி ஐயோ என்றதற்கும் பதிலாக, 'இதோ வந்தேன்' என்றது ஒருகுரல். 'அப்பா ராமு! என்னடா அப்பா உனக்கு?' என்றது மற்றொருகுரல். 'சாவியெங்கே? என்றது மூன்றுவதுகுரல் ஒன்று. 'விளக்கு, விளக்கு' என்று சொல்லிக்கொண்டே கதவைத்திறந்தது முதல்குரல்.

கதவைத்திறந்ததும் கதவினெதிரிலுள்ள படிகளின் மேல் அவ்வறையின் மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சம் வீசிற்று. அதன் உதவியினால் மீனாக்ஷி கீழேயிறங்க வாரம்பித்தனள். முதல்குரல் நாகஸ்வாமியையருடையது. மீனாக்ஷி யிறங்குவதற்காக வந்ததும் தான் சற்றே விலகி நின்றார். இறங்கிய படியில் பாதிதூரம் சென்றதும், இரண்டாவது குரலின் சொந்தக்காரராகிய கிழவரைக்கண்டாள். 'என்னடீயம்மா சமாசாரம்? எங்கேயம்மா போகிறாய்? அம்மா ஜாக்கிரதையாய்ப்போ பையனுக்கென்ன? என்னமோ தெரியவில்லையே!' என்று சற்று ஒதுங்கி நின்றனர். அவரையுங் கடந்து கீழே சென்றதும் மூன்றுவது குரலுடையவராகிய தன் மாமனாரைக்கண்டாள். அவரையுங்கடந்து சென்று வாசலில் கதவைத்திறக்கும்பொட்டு சென்றாள். அது திறந்தேயிருந்தது. அதன்மூலமாய்த் தன் பெற்றோர்கள் இறங்கியிருக்கு மகம்போய்ச் சேர்ந்தனள்.

7-வது அத்தியாயம்.

அக்கினிக்கிரை.

மீனாக்ஷி தன் பெற்றோர்கள் தங்கி யிருக்கும் வீடுசென்றதும் அவ்வீட்டின் கதவு திறந்திருக்கக் கண்டனள். திண்ணையில் படுத்திருப்போரைப்பற்றிச் சற்றும் கவனியாமல் உள்ளே சென்றனள். தன் தாயாரைப்பார்த்தனள். காணோம். தன் மன்னியைத்தேடினள். அவளையுங்காணோம். தன் சிற்றன்னையாகிய பிரஹன்னாயகியம்மாள் மட்டும் ஒருபாயில் படுத்திருந்தாள். அவளருகிற்சென்று படுத்துக்கொண்டு முகத்தைப் புடவையால் இழுத்து மூடிக்கொண்டு விம்மி விம்மி யழுதாள். இந்த சப்தத்தைக்கேட்டு பிரஹன்னாயகியம்மாள் விழித்துக்கொண்டு 'யயயயயயயாருடியங்கே' என்றாள். பதிலொன்றுமில்லை. 'மீமீமீமீனாக்ஷி! என்று புடவையைத் திறந்து பார்த்து கூப்பிட்டு 'ஆஆஆ அதென்னடியது? ஈஈஈஈஈ இவ்வளவு சுருக்காவந்தாட்டே? என என என்னம்மா! எஎஎஎ என்ன?' என்றாள்.

இந்தம்மாள் பேச்சில் யாராகிலும் தூங்குவார்களா?

வாசற்றிண்ணையில் படுத்திருந்த இராமஸ்வாமி அய்யர் எழுந்துவந்தார் 'என்னடியங்கே? என்ன?' என்று கேட்டதற்கு பதிலாக 'ஆஆஆஆ அதென்னடியோ? அழுகிறள் மீமீமீமீ மீனாக்ஷி' என்றாள். யார்? மீனாக்ஷியா? என்று படுக்கையின் சமீபத்தில் வந்து 'மீனாக்ஷி! மீனாக்ஷி! மீனாக்ஷி! அம்மா! மீனாக்ஷி!' என்று கூப்பிட்டார். இவர் கூப்பிடக் கூப்பிட அழுகைக்குரல் அதிகமாயிற்றேயொழிய, நிற்கவுமில்லை, பதிலுமில்லை. பிறகு இராமஸ்வாமி அய்யர் அவள் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு 'என்ன அம்மா! என்னிடத்தில் சொல்லேன். யாரென்னசெய்தார்கள்?' என்று தாழ்ந்தகுரலுடன் கேட்டுக்கொண்டு இருகன்னங்களிலும் தடவிக்கொடுத்தார். ஒருகன்னத்தில் தடவும்பொழுது சதை கரிமுரடாயிருந்தது. 'அடீ! விளக்குகொண்டுவாடீ!' என்று தன்னகமுடையாளை யேவினர். 'மீனாக்ஷி! மீனாக்ஷி!' என்று திரும்பவும் கூப்பிட்டார், 'ஏன்' என்றாள் மிருந்த

தாழ்ந்தகுரலுடன், அழுகையையும் சேர்த்து, அப்படிப்பட்ட குரலைக் கேட்டவர்கள் அதனால் தங்கள் மனதிலுளதாகும் வருத்தத்தை யறிவார்கள் அவ்விதமே இராமஸ்வாமி அய்யருக்கும் மிகுந்த வருத்தமுண்டாயிற்று அவரையும் அறியாமல் அவர் கண்ணினின்றும் இரண்டு சொட்டு கண்ணீர் கீழேவிழுந்தது இதற்குள் பிரஹன்னாயகியம்மாளும் விளக்கு கொண்டுவந்தாள்.

வெளிச்சத்தில் கன்னத்தைப்பார்த்தார் இராமஸ்வாமி அய்யர். நான்கு விரல்கள் அடையாளமும் நன்றாய்ப் பதிந்திருந்தது சீ என்றெழுந்தார். 'அண்ணா! எனக் கூப்பிட்டார். 'அண்ணா! என்ன தூக்கம் இந்த சமயத்தில்?' என்று முன்னிலும் உரக்கக்கூவினார். 'என்ன? இராமஸ்வாமி! என்ன சமாச்சாரம்? என்று தூக்கத்தினின்றும் எழுப்பப்பட்டவன் எவ்வளவு வருத்தமடைவனோ அவ்வளவு வருத்தத்துடனும் வெளியில் வந்தார் 'ஐயையோ நம்முடைய மீனாக்ஷியைக் கொன்றுவிட்டான், அண்ணா! அந்தப்பாவி! இதோவந்து—' என்றுகூறி முடிப்பதற்குள் 'எங்கே!' என்று சொல்லி ஓடோடியும் மீனாக்ஷியின் சமீபத்தில் வந்தார். கன்னத்தைக் காண்பித்தார் இராமஸ்வாமி ஐயர். தடவிப்பார்த்தார் இராஜகோபாலையர். சொல்லமுடியாத துக்கம் ஒருபக்கத்தில். கன்னத்தைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபம் ஒருபக்கத்தில். மருமகப்பிள்ளையின்மேல் தீராக்கோபம் ஒருபக்கத்தில். 10-நிமிஷம் வரையில் ஒன்றும் பேசாமல் மீனாக்ஷியைத் தன்மடியில் போட்டுக்கொண்டு கன்னத்தைத் தடவுவர் சற்றுநேரம், முத்தமிடுவர் சற்றுநேரம், கையால் அணைத்துக்கொள்வர் சற்றுநேரம் (கண்ணினின்றும் நீர் சொரிவர் சற்றுநேரம்) 'இவளிங்கேவந்து எத்தனை நாழியாயிற்று?' என்றார். 'இப்பொழுதுதான்; கால்மணிநேரமிருக்கும்' என்று மறுமொழி கூறினார் இராமஸ்வாமி அய்யர்.

இவர்கள் இவ்வாறுபேசிக்கொண்டிருக்கையில் காமாக்ஷியம்மாள் அவ்விடத்திற்குவந்தாள். 'அப்பப்பா! அரைமணி

நேரமாகிறம் தூங்க—' என்று சொல்லி முடிப்பதற்குள் இராஜகோபாலையர் 'உன் தூக்கமுமாயிற்று, நீயுமாயிற்று, என்பெண்ணை வந்துபார்' என்றார். 'என்ன? எந்தப் பெண்?—' எனவே, 'மீனாக்ஷியின் கன்னத்தைப்பார் கிட்ட வந்து' என்றார். அருகிற்சென்றாள். கன்னத்தைத் தடவினாள். அடடா! இப்படிச்செய்தது ஆரடா! ஐயையோ! எனக்கு ஒரே பெண்ணாயிற்றே! என்னம்மாடீ! மீனாக்ஷி! யாரடியம்மா இப்படியுன்னை யடித்தார்கள்? ஸ்வாமீ என் குழந்தையைக் காப்பாற்றவேண்டும்' என்று மீனாக்ஷியை கட்டி முத்தமிட்டு அழுதாள். இராஜகோபாலையர். 'அவர்கள் வீட்டுக்குப் போவோம்வா இராமஸ்வாமி' என்று தன் தம்பியை யழைத்துக்கொண்டு டெபுடி-கலெக்டர் வீடு சென்றார். வாசலில் ஒரு கோச்சு நின்றுகொண்டிருந்தது. அக்கோச்சிற்குள் ஒருவரையுங்காணோம். உள்ளே சென்றார்கள். ஒருவரையுங்காணோம். 'வீட்டிலுள்ளவர்களெல்லாம் எங்கே போய்விட்டார்கள்?' என நினைத்துக்கொண்டு மேல்மாடியின்மேற் சென்றார்கள்.

அவ்வறை சிறியதென்று எல்லார்க்கும் முந்தி தெரிந்திருக்கலாம் அச்சிறிய இடத்திற்குள் சுமார் முப்பது பேர் கூடி இருக்கலாம். கும்பல் கூடியிருந்தவர். சகோதரரிருவரும் அக்கும்பலுக்கு வெளியில் போய் நின்றுகொண்டு, என்ன நடக்கிறதென்று பார்த்தார்கள். 'கற்பூரம் கொண்டுவா, கற்பூரம், கற்பூரம்,' என்றது ஒருகுரல் அக்கும்பலுக்குள்.

'அட! தீர்த்தம், தீர்த்தம், என்று எத்தனைதாஞ் சொல்வேன்' என்றது இரண்டாவது குரலொன்று.

'அதோ! இருக்கிறது உங்கள் பக்கத்தில்' என்றது 3-வது குரல்;

'ஸ்வாசம்வருகிறதா?' என்றது 4-வது குரல்.

'நாடிபிடித்துப்பார்ப்பவர் ஒருவரும் இல்லையா இங்கே' என்றது இன்னுமொருகுரல்.

'வைத்தியனைக் கூப்பிடப்போயிருக்கிறான்' என்றது மற்றொருகுரல்.

'வண்டிவந்திருக்கிறது. டாக்டரைக் கூப்பிடப்போகலாம்' என்றது பின்னுமொருகுரல்.

'இந்தப்பால் நீலமாயிருக்கிறதடீ!' என்றது வேறொருகுரல்.

'ஐயோ! என்னவிஷம் போட்டாளோ, தெரியவில்லையே! பாவி!' என்றது 9-வது குரல்.

'ஐயோ! அந்த மங்கிலிப்பெண்டு இடு! மங்கிலிப் பெண்டு இடு! என்று நான் அப்பொழுதே சொன்னேனடீ! ஐயோநான் ஆயிரந்தரம் முட்டிக்கிண்டேனே!' என்றது 10-வது குரல்.

'அப்பா! ராமு! அடேராமு! அடே! ஐயோ! பேசமாட்டேன் என்கிறானே என்குழந்தை! அடே! ஒரு வார்த்தை பேசடா! என்னப்பா! அடே! உன்வாயைத் திறந்து ஒரு வார்த்தைசொல்லடா! அடா! உன் பெண்டாட்டியே உனக்குச் சத்துருவாய்ப் போய்விட்டனளே! ஐயோ! ராமு!' என்றது 11-வது குரலொன்று.

இவ்விதம் பலவிதமான குரல்களையும் வெளியில் இருந்தபடியே கேட்டுவிட்டு, சங்கதி யாதொன்றுந் தெரியாதிருந்தல் உள்ளே செல்வோமென்று, கும்பலைவிலக்கிக்கொண்டு கட்டிலின் அருகேசென்று அங்கே நின்றுகொண்டிருக்கும் தங்கள் சம்பந்தியைப்பார்த்து, 'என்ன சமாசாரம்! ஏனிவ்வளவு கூச்சல்' என்றார்கள். இவர்கள் வாயைத்திறந்தது தான் தாமதம்.

'ஐயா! உங்கள் பெண் செய்கையைப் பார்த்தீர்களா?' என்றார் டெபுடி கலெக்டர்.

'பெண் என்ன ஐயா செய்யும்? சொல்லிக்கொடுத்தபடி செய்தது' என்றார் நாகஸ்வாமி அய்யர்.

'அடே! என்னவிஷம் போடச்சொன்னாய்? என்று இப்பொழுதாகிலும் சொல்லச்சொல்லும் ஐயா! புண்ணியம் உண்டு' என்றார் வீராஸ்வாமி ஐயர்.

'ஐயா! என் குழந்தைக்கு அவன்றானையா ஒரேபிள்ளை. அவனையுங் கொன்றுவிட்டாளே உங்கள் பெண்' என்றாள் டெபுடிகலெக்டர் தாயார்.

'உங்கள் பிள்ளையை யிவ்வாறு செய்தால் உங்களுக்கெப்படி யிருக்காது?' என்றாள் அத்தான் தாயார்.

'தகப்பனார் வக்கீல்வேலை செய்கிறாரென்ற வாணவமன்றோ அவளுக்கு?' என்றார் அத்தான்.

'ஐயா! என் பேரனைக் கொன்றுவிட்டாளையா உங்கள் பெண்! ஒருபேச்சு பேசமாட்டேனென்கிறானே! அப்பா ராமு! அடே! ராமுஉ!' என்றார் கிழவர்.

இரு சகோதரர்களுக்கும் ஒன்றுந் தோன்றவில்லை. பேசாமல் நின்றனர். இதற்குள் தடதடவென்ற சப்தம் ஒன்று கேட்டது. 'வழி வழி,' என்று ஒரு சப்தமும் வந்தது. கூட்டம் சற்றே விலகிற்று. ஒருவர் உள் சொக்காயுடன், வெகு விரைவாய் வந்தார். படுக்கையின் சமீபத்தில்சென்று இராமஸ்வாமியின் கையைப் பிடித்துப்பார்த்து 'என்ன? ஒன்றுமில்லை. நீங்கள் செய்வதுதான் பெரிய அவசரமாயிருக்கிறது. என்ன கூச்சல்? உள் எவ்வளவு சிறிது? அதற்குள் எத்தனை பெயர்? இந்த உள்ளில் இரண்டு பெயர்கள்தானிருக்கலாம். இதில் பதினைந்து இரண்டு பேர்களிருக்கிறார்கள். சிறிதாயிருக்கும் வியாதியைக்கூட பெரிதாயல்லவோ செய்துவிடும் ஒருவர் ஒருமணி நேரத்திற்கு இவ்வளவுகன அங்குலவாயுவை அசுத்தமாக்குவார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? எனக்குத் தெரியும். நல்லது! ஒருவனுக்குவேண்டிய பிராணவாயுதான் இவ்வாறென்பதை யறிவீர்களா? ஒன்றுமில்லை. வெறுமனே கும்பல்கூடத் தெரியும். நீங்கள்செய்கிற இரைச்சலிலேயே பிராணம் போய்விடும்போ லிருக்கிறதே நான்

சொல்கிறது இப்பொழுது தெரியாது பிராணம்போவதற்கு ஒரு நாழி முந்தியே வயிற்றிலேயும் மார்பிலேயும் அடித்துக்கொண்டு அழுவீர்களே! அப்பொழுது தெரியும் இவ்வளவுதூரம் சொல்கிறேன். யாராகிலும் கீழேயிறங்குகிறார்களா? பாருங்கள் நீங்களே சொல்லுங்கள் ஸார் (டெபுடிகலெக்டரை நோக்கி) இதென்னகும்பல் ஷோர்லி, திஸ் ரூம் வில்பி பில்ட் வித் கார்பாணிக் ஆஸிட்காஸ். இட் இஸ் ஆல்ரெடி ஸோ. போங்கள். இங்கேயென்ன? நாடகமா? கூத்தா? சாந்தியுள்ளே யுங்களுக்கென்னவேலை? என்று சமாரியாய்ப் பொழிவதைப் பார்க்கமனம்பொறாத அத்தான் 'உங்களுக்குத்தான் என்னவேலை? இறங்கும் கீழே' என்றார்.

'எனக்கா? நான் கூப்பிட்டதனாலே வந்தேன், வேண்டுமென்றால் இப்பொழுதேபோய் விடுகிறேன்' என்று சற்று தூரம் சென்றவரை கோபாலஸ்வாமியையர் 'இதுதானா கோபித்துக்கொள்ளுகிறவேளை, என் துக்கத்தைப் பார்க்கமாட்டேன் என்கிறீர்களே' என்றார். ட்ரஸ்ஸரும் திரும்பி வந்து கட்டிலின் சமீபத்தில் நின்றுகொண்டு 'ஹீ ஸீமஸ் டு பி எ ருட்மான்' என்றார். டெபுடிகலெக்டரும் 'எஸ் எஸ்!' என்றுவிட்டு 'பையன் என்னமாயிருக்கிறான்?' என்றார். 'என்னமாயிருக்கிறான்? இப்பொழுது ஒன்றுமில்லை.' என்கிறார் ட்ரஸ்டர் 'அபாயம் ஒன்றும்வராதே?' என்று வீராசாமி அய்யர் கேட்டதற்கு 'இப்பொழுது என்ன சொல்லக்கூடும். வியாதியஸ்தர்களுக்கு அபாயம் ஒருநொடியில்வரும் அந்தத்தெருவில் ஒருவனுக்கு ஜ்வரம் அடித்தது. நாள் மூன்றுபோய் வயித்தியம் பார்த்தேன் 4.நாள் மருந்து கொடுத்தேன். ஜ்வரமும் இறங்கிக்கொண்டேவந்தது ஒரு நாள் பாருங்கள் சாயங்காலம், கைபார்த்தேன். பயம் ஒன்றுமில்லை. மிகவும் சரியாயிருந்தது. இன்னும் இரண்டு நாளில் தலைக்குஜலம் விடலாமென்று சொல்லிவிட்டு வழக்கமான மருந்தையே கொடுக்கும்படியாயும் சொல்லிவிட்டு நான் இன்னும் இரண்டு மூன்று வீடுபோய் விட்டு, என் வீட்டிற்குப்போனேன். எனக்கு முன்னே அங்கே ஒரு

ஆள் உட்கார்ந்திருக்கிறான். என்னவென்றால் நான்பார்த்து விட்டு வந்தவனுக்கு அதிகமாய்ப் போய்விட்டதாகவும் என்னையுடனே அழைத்துவரச் சொன்னதாகவும் சொன்னான். போய்பார்க்கிறேன் என்ன வித்தியாசம் முன்னிருந்ததற்கும் இப்பொழுது இருந்ததற்கும்? அடடா! நாடி வெகு மெதுவாய் ஓடிற்று. பார்த்தேன். மிகவும் பயமாய்ப் போய்விட்டது. என்னாலான நல்ல மருந்துகளையெல்லாம் கொடுத்துப்பார்த்தேன். சரியாய் 8-மணிக்குப் பிராணன் போய்விட்டது. ஆம், பிராணன் போய்விட்டதையாவென்றால். என்னத்திற்காக சொல்கிறேன். மனுஷ்யனுடைய ஆயுசு நீர்க்குமிழி. லைவ் இஸ் பட் அன் எம்டி ட்ரீம் என்று சொல்லிக்கொண்டே போகிறவரை நிறுத்தி, 'இது என்ன வியாதி?' என்றார் பெரிய இராமஸ்வாமி அய்யர். 'என்ன வியாதியென்று கேட்டு விட்டீர்களே! சொல்கிறவனுக்கல்லவோ அந்தக்கஷ்டம். வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று கேட்டு விட்டீர்கள். நல்லது. சொல்கிறேன் கேளுங்கள்' என்று இராமஸ்வாமியின் இருதயத்தில் ஸ்டெதஸ்கோப் என்னும் கருவியை வைத்துப்பார்த்து 'ஆஹா! பேஷ்! பையன் வெகு நடுக்குக்காரன். ஸிம்பிள் எக்ஸாஷன். ஐ வில் டெல் யு வாட். ஸம் மென் ஆர் வெரி வீக். சிலபேர் மிகவும் பலஹீனர்கள். சிலர் ஸ்திரிசம்பந்தத்தால் சிலர் மூர்ச்சையாய்விடுகிறார்கள். அந்த வியாதியில் சேர்ந்தது' என்றுசொல்லி வாய் மூடி முன்னர் அநந்தான் 'நாங்கள் எல்லாம் சம்பந்தஞ் செய்யவில்லை. எங்களுக்கெல்லாம் குழந்தை பிறக்கவில்லை. இன்றைய தினம்தான் புதிது அடே போடா, கன்றுகுட்டி களம்பறித்தால் வைக்கோலுமாகாது செத்தையுமாகாது' என்று சொல்லிவிட்டு கீழே இறங்கிச் சென்றார். ட்ரஸ்லர் 'காட் ரிட் அவ் ஒன் நியூஸன்ஸ். ஹா! ஹா!' என்று சிரிக்கும்பொழுது 'இந்த வியாதிக்கிப்பொழுது என்ன செய்யலாம்?' என்றார் கிழவர். 'முதல் முதல் பால் கொடுக்கவேண்டும். அவரோடு ஒருவரும் பேசக்கூடாது. இந்த அறையில் ஒருவரும் இருக்கக்கூடாது. சுமார் 4, 5-

மணி நேரம் தூங்கவேண்டும். ஒருவர் மாத்திரம் இங்கே விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்து, அவர் ஏதாவது வேண்டுமென்றால் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். அவரோடு பேசவேகூடாது. ஜன்னல் கதவுகளை நன்றாய்த் திறந்துவைக்கவேண்டும். ஊதுவர்த்திகளை நிறைய கொளுத்தி வைக்கவேண்டும். இவ்விதம் இப்பொழுது இருக்கட்டும். நான் காலையில்வந்து பார்த்துச் சொல்கிறேன்' என்றுவிட்டுப் போகும்பொழுது டெபுடிகலெக்டர் ஏதோ அவருடன் தனியாய்க் காதில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவரும் 'எஸ், எஸ்,' என்றுவிட்டு, வெள்ளிச்செம்பில் வைத்திருந்தபாலை யப்படியே யெடுத்துக்கொண்டு 'கூட் நைட் டூ ஆல். போய்வருகிறேன், அம்மா பயப்படாதேயுங்கள்! பயப்படாதேயுங்கள்!' என்று போனார். போய்க்கொண்டே இருக்கட்டும்.

இராமஸ்வாமியைப்பற்றி சற்றே விசாரிப்போம். அவனுடைய உண்மையான வியாதி ட்ராஸ்லைர் சொன்னதுமன்று. பெண்டுகள் பேசிக்கொண்டதுமன்று. மீனாக்ஷியை யடித்ததும், நாகஸ்வாமி அய்யர் கதவுதிறந்து 'என்ன சமாசாரம்?' என்று இவனைக் கேட்டார். உடனே கிழவரும் 'என்னடா? என் அப்பா! இராமு! என்ன?' என்று வந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் கோபாலஸ்வாமி அய்யரும் 'இராமஸ்வாமி' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தார். இராமஸ்வாமிக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. அவர்களுக்கென்னபதில் சொல்கிறது? ஒன்றுந் தெரியாமல் மளமளவென்று கட்டிலின்மேலேறி முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு பேசாமல் படுத்துக்கொண்டான். யார் என்ன கூப்பிட்டாலும் பதில் சொல்லவில்லை. அதற்குமேல்தான் அவ்வளவு கூச்சலும், இரைச்சலும், கூட்டமும், வியாதியின்னதென்று கண்டுபிடித்ததும், எல்லாம் உண்டாயின.

கடிதம் யாரெழுதினது? எமக்குத் தெரிந்தவரையிலும் மீனாக்ஷி யெழுதவில்லை. இராமஸ்வாமியும் எழுத

வில்லை. மீனாக்ஷியோ இராமஸ்வாமியின் தோழன் எழுதின தாகச் சொல்கிறாள். இராமஸ்வாமியோ மீனாக்ஷி எழுதின தாகச் சொல்கிறான். எனக்கொன்றுந் தோன்றவில்லை. போகப்போகப் பார்ப்போம்.

டாக்டர் சொற்படி, இராமஸ்வாமியின் தாயாரை பள்ளறையில் வைத்துவிட்டு, எல்லோரும் கீழே யிறங்கி னார்கள். பெண்டுகளெல்லாம் கூடத்திலுட்கார்ந்தார்கள். புருஷர்கள் வாசற்றிண்ணைக்குச் சென்றார்கள். இராஜ கோபாலையர் தன் தம்பியைப்பார்த்து

'நம்முடைய பெண்ணைப்பற்றி விசாரிப்போமென்று வந்தோமே! இங்கே பார்த்தாயா?' என்றார்.

'காலம் அன்றோ! காலம் கலிகாலம்' என்றார் பெரிய இராமஸ்வாமி அய்யர்.

அநந்தா—உங்கள் பெண்ணுக்கென்ன ஐயா! உங் கள் பெண்ணுக்கென்ன?

பெ. இரா—வந்து பாருங்கள் நன்னாக்கு. ௨-விஷயமும் அப்படியே பட்டிருக்கிறது.

இரா—அதையெல்லாம் இங்கே யேன் சொல்லுகிறாய்! இராமஸ்வாமி! போவோம் வா. சொல்கிற இடத்தில் சொல்வோம். கேட்கிற இடத்தில் கேட்போம்.

சே—அப்படியே செய்யுங்கள். எனக்கும் சொல்லிக் கொள்கிற இடம் உண்டு.

பெ. இரா—நாராயணஸ்வாமி அய்யர் அப்பொழுதே சொன்னார் பட்டிமேய்கிற மாடென்று.

என்று சொல்லிக்கொண்டே சகோதரரிருவரும் தாங்களிறங்கியிருக்கும் வீடு சென்றார்கள்.

மறுபடியும் இராமஸ்வாமியினிடம் போவோம். 1-மணிக்கு மூடிப்படுத்தவன் சுமார் 2½-மணியிருக்கும் எழுந்தான். கண் விழித்துப்பார்த்தான். ஒருவரையும் காணோம். எழுந்து உட்கார்ந்தான். கதவின் சமீபத்தில் சென்றான். [illegible]

றைத் தேடுபவன்போல் கீழேபார்த்தான். கிழித்தபாதி கடிதத்தையெடுத்து கட்டிலுக்கு திரும்பும்பொழுது தன் தாயார்கட்டிலின் அருகாமையில் படுத்திருப்பதை முதன் முதல் கண்டான். இவன் வெகுநாழி கண்விழித்திருந்தவனாகையால் மூடிப்படுத்ததுதான் தெரியும் (நன்றாய்த்தூங்கிவிட்டான்). ஆகையால் ட்ரஸ்ஸர் கடைசியில் சொல்லிப்போன வார்த்தைகள் இவன்காதில் விழவில்லை. தாயாரை முதன்முதல் கண்டதும் அவள்மேலே விழுந்து விம்மிவிம்மி அழுதான். இந்த அழுகைக்குரலினால் அவன்றாயாரும் விழித்துக்கொண்டாள். 'இராமஸ்வாமி!' என்றாள், அழுத குரலுடனே. 'ஏன்' என்றான். அவ்வளவுதானிருவரும் பேசினார்கள். தாயார் மல்லாக்காகவும் பிள்ளையவள் மடியின் பேரிலும் ஆக ஒருவரோடு ஒருவர் யாதொன்றும் பேசாமல் விம்மி விம்மி யழுதார்கள்.

தாயாரைக்கண்டவுடன் மனமிளகாதவனு முலகிலுண்டோ? அவளைப்பார்த்தவுடன் தான்பட்ட கஷ்டங்களெல்லாம் ஞாபகத்துக்கு வாராதவனு முண்டோ? கஷ்டங்கள் ஞாபகத்துக்குவரவே, உள்ளடங்கியிருந்த துக்கம் வெளிவருத லியல்பன்றோ? வெளிவந்த துக்கத்தோடு அழுகையும் வரவேண்டிய இயல்புதானே! ஆகையால் இராமஸ்வாமி யழுதான்.

மகனெவ்வளவு முரடனாயும் மூர்க்கனாயு மிருந்தபோதிலும் அவனழுவதைக் கண்டால் தானும் அழாத தாயாரை யான் பார்த்ததில்லை. குழந்தைகளைப்பற்றி யாம் சொல்லவில்லை. பதினாறு பதினேழு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளைப்பற்றிக் கூறுகின்றோம். அப்பிள்ளைகள் முரடர்களாயும் மூடர்களாயும் இருந்து தாயாரின் எதிரில் வந்தழுதால் இவளும் அழுவது நிச்சயம். அப்பிள்ளைகள் சாதுக்களாயும் புத்திசாலிகளாயும் இருந்தால் தாயார் அழுவதற்குக் கேட்பானேன்? ஆகவே தாயாரும் அழுதனள்.

இவ்விதம் கால்மணிநேரம் சென்றபிறகு தாயார் எழுந்து உட்கார்ந்து, இராமஸ்வாமியைப்பார்த்து, 'இராம

ஸ்வாமி! அழாதே. பெரியவனாயிருக்கின்றாய். அழுவது நன்றாயில்லை, எழுந்திரு' என்று மிகுந்த தாழ்ந்தகுரலுடன் கூறினாள். இராமஸ்வாமி கண்ணைத் தாயார் புடவையினால் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். அவன் முகத்தைப்பார்த்ததும் அவன்றாயார் 'உனக்கு இவ்வளவு துக்கம் இவ்வளவு வாலிபத்தில் வந்ததே' என்று சொல்லிக் கட்டி முத்தமிட்டுக்கொண்டு அழுதாள்.

இரா—இல்லாவிட்டால் சந்தோஷத்திற்கா எனக்குக் கலியாணம் பண்ணினீர்கள்.

இவன்தான் அந்த அம்பாளுக்கு ஒரேபிள்ளை. இந்த வார்த்தையை அவள் கேட்டதும் கட்டிக்கொண்டு 5-நிமிஷம் ஒன்றுந்தோன்றாமல் இருந்தாள்.

தாயார்—உன்னைக் கெடுப்பதற்கு நாங்கள் எண்ணுவோமா? உன்னைக்கெடுத்தால் அது எங்களைக் கெடுத்தது போலன்று? என்னப்பா! நீ யிந்த வார்த்தையைச் சொல்லலாமாடா?

இரா—எனக்கு இந்த மாதத்திற்குள் வேறு கலியாணம் பண்ணிவைக்கவேண்டும்.

தா—நீ இஷ்டப்பட்டதைச் செய்கிறேன். இன்றைய தினம் இராத்திரி இன்ன நடந்ததென்று சொல்லேன். எனக்குத் தெரியக்கூடாதா?

இராமஸ்வாமி அழுதுகொண்டு மறுபடியும் தாயார் மடியில் படுத்துக்கொண்டான்.

தாயா—என்னிடத்தில் சொல்லக்கூடாதா? நான் உனக்குத் தாயாரன்று?

இவ்வளவுபோதும். இராமஸ்வாமி உண்மையைச் சொல்லவாரம்பித்து விட்டான் தாயினிடத்தில் உண்மையை ஒளிப்பவர்களுமுண்டோ?

அறையில்வந்து ஒரு மணிநேரம் வரையில் நடந்ததையெல்லாம் விளம்பினான். பிறகு நடந்ததில் தான் வஸ்திரக்

தைப் பிடித்திழுத்தது ங்கலாக யாயும் மொழிந்தனன். பிறகு ‘இப்படியெல்லாம் பொய்க்கடிதம் எழுதுகிறவளும், பொய் பேசுகிறவளும், கணவனிடத்தில் மரியாதையற்றவளும், அவமரியாதையாய்க் கடிதம் எழுதுகிறவளையுமா எனக்குக் கலியாணம் பண்ணிவைத்தீர்கள். இன்னும் ஒரு மாதத்திற்குள் வேறு கலியாணம் செய்துவைக்காவிட்டால் உன்பிள்ளை யுனக்குச் சொந்தமல்ல’ என்றான்.

தாயா—என்ன இராமஸ்வாமி! பீ. எல். வாசிக்கிறாய். நீயும் இப்படிப் பேசுகிறாய். நீர ஆலோசிக்காமல் ஒரு விஷயத்தையும் செய்யக்கூடாது. அக்கடிதம் யாரெழுதினது?

இரா—அவள் தான்.

தா—அவள் அல்ல.

இரா—ஐயோ! அம்மா! அவள் கையெழுத்து எனக்குத் தெரியும். தீபாவளியின்போது எனக்கொரு கடிதம் எழுதினள். அந்தக் கடிதத்தை யுன்னிடத்தில் காண்பிக்கவில்லை. அதென்ன கர்வம் தெரியுமா? அந்தக் கடிதத்தினெழுத்துப்போலவே யிருக்கிறது இதுவும்.

தாயா—அதென்னவோ இராமஸ்வாமி! இந்தக் கடிதத்தை யவள் எழுதியிருக்கவே முடியாது. அவள் உன்னேறுழன் எழுதினதாக நினைத்து உன்மேல் கோபங்கொண்டாள். நீயோ எழுதவில்லை. ஆதலால் யாரோ நடுவில் இருந்துகொண்டு விஷமம் செய்கிறார்கள்.

இரா—உனக்கொன்றுந் தெரியாதம்மா. அவள் சுபாவம் எனக்குத் தெரியும். அவள் மிகவும் பொல்லாதவள். அவளோடு நானிருக்கவேமாட்டேன். கூடிய சீக்கிரத்தில் எனக்கு வேறு கலியாணம் செய்துவைக்கவேண்டும்.

தாயார்—அதெல்லாஞ் சரிதான். கடிதம் எழுதினவரின்னாரென்று புலப்படவில்லையே.

இரா—உனக்குத் தெரியவே தெரியாது. நீ யிப்படி யேதாவது சொல்லி என்பேச்சை மாற்றலாம் என்று பார்க்

கிறாய். நான் சொல்லியது ஞாபகமிருக்கட்டும். வேறு கலியாணம் இல்லையேல் உன் பிள்ளையுமில்லை.

தா—நான் என்னடா செய்வேன்? நன்றாயிருக்கிறது. உன் அப்பாவினிடத்தில் சொல்கிறேன். அவரிஷ்டப்படி செய்யட்டும். என்னமாயிருந்தபோதிலும் நீ செய்தது பிசகு. அந்தப் பெண்ணை யேனடா அடித்தாய்? பாவம்!

இரா—அது ஏனம்மா கடிதத்தைப் பிடுங்கிற்று?

தா—நீ யேனடா அவளிடத்திலிருந்து திருட்டுத்தனமா யெடுத்தாய்?

இ—அவளேனம்மா காட்டமாட்டேனென்றாள்?

தா—சீ போ அசடே! நீ செய்தது மிகவும் பிழை. நல்லது அப்படித்தான் அடித்தாயே, நீ ஏன் கட்டிலின்மேலேறிப் படுத்துக்கொண்டாய்? அது எவ்வளவு சந்தேகத்துக்கிடங்கொடுத்து எல்லாருமாய்ச் சேர்ந்து பாலில் விஷம் வைத்துவிட்டது அந்தப்பெண் என்றார்கள். இனிமேல் அவள் தகப்பனார் தன் பெண்ணை யடித்ததற்காகப் பிராது செய்தாலும் செய்வர்.

இரா—சும்மா செய்யட்டும். இதற்கெல்லாம் யான் பயந்திருக்கிறேனோ என்ன?

தா—நான் சொல்கிறதைக்கேள். உன் அப்பாவினிடத்தில் போவோம். நடந்த சங்கதிகளைச் சொல்வோம். அவரையுன் மாமனாரிடத்தில் போகச்சொல்கிறேன்.

இரா—வேண்டாம்.

தா—முழுவதும் கேட்டுவிட்டு அப்புறம் பதில் சொல்லடா. நீயும் உன்மாமனாரிடத்தில்போ. (மாட்டேன்.) முழுக்கக்கேட்டால் சொல்கிறேன். நான் உன்தாயார். உனக்குக் கெடுதியை நினைக்கமாட்டேன், நான் சொல்வது நன்மையாகவேமுடியும். வீண்மனஸ்தாபம் வேண்டாம். அவர்களுக்கு ஒரேபெண். அதைக் கெடுக்கவேண்டாம். நீயும் மாமனாரிடத்தில்போ. (மாட்டேன்.) நீயும் மாமனாரி

டத்தில்போய், நான் செய்ததுதப்பு என்று மன்னிப்பு கேட்டுக்கொள்ளு. (மாட்டேன்.) அடே! நான் சொல்கிறதைக்கேளடா! வேண்டாமடா! வீணாக ஒருபெண்ணைக் கெடுக்கிறதிலென்னடா லாபம்?

இரா—வீணாக ஒரு பிள்ளையைக் கெடுப்பதில் என்ன லாபம்?

தா—உன்னை நாங்கள் கெடுக்கவில்லையடா! உன்னுடைய நன்மையையே தேடுகிறோம். அந்தப்பெண் மிகவும் நல்லவளடா! நான் அநேக பேர்களைக்கேட்டேன். எல்லாரும் அவளுடைய நல்லதனத்தைக் குறித்தே பேசி யிருக்கிறார்கள்.

இரா—போ! அம்மா! எனக்கு வேறுகலியாணம் பண்ணிவைக்கவேண்டும். இதற்காக நீ வேண்டாமென்று என்னென்னமோ சொல்கிறாய். நீயாக எதாவது சொல்லிக்கொண்டேயிரு, நான்கேட்டாலல்லவோ?

என்று அவள்மடியில் படுத்துக்கொண்டான்.

தா—அடே! சிறுபிள்ளைத்தனமாய்ச் சொல்கிறாய். உனக்கே தெரியும் கலியாணம் செய்துகொண்ட வப்புறம் ஒருத்தி வயிறெரிய மற்றொருத்தியை வதுவைபுரியின் அந்தக் குடித்தனம் அப்பொழுதே கெட்டுவிடும். பின்னால் வருகிறவளும் சரியாயிருக்கமாட்டாள் தன்னைவிட்டு வேறுகலியாணம் பண்ணிக்கொள்வரோ என்னவோ என்ற விசனம் அவள் மனதிலுமிருக்குமாகையால், உன்னிடத்தில் சந்தேகத்தோடேயே யிருப்பள். நீயும் முன்னவளை விட்டுவிட்டோமே யென்று மிக்க விசனப்படுவாய். இக்கரைக்கு அக்கரை பச்சைதான், அக்கரைக்குப்போய்விட்டால் அப்பொழுது முன்னிருந்தகரை அக்கரையாய்விடும். யோசித்துப் பார்த்தால் அவரவர்களுக்கு இப்பொழுது இருக்கிற நிலையும் ஸ்திதியுமே மிகவும் நல்லது. அதைவிட்டு வேறுநிலையையடைய விரும்புவது மிகவும் பிழை. நல்லது. வேறு ஒருத்தியைக் கலியாணம் பண்ணிக்கொண்டதாகவே வைத்துக்கொள்வோம். அவள் இவளைவிட நல்லவளா யிருப்ப

ளென என்ன நிச்சயம்? கடிதத்தைப்பற்றின விஷயம் சூழ்றமேயன்று. இந்தக்கடிதம் அவள் எழுதியிருக்கமாட்டாள் என்பது நிச்சயம். பெண்கள் அவ்வளவு தைரியமாய் எழுதமாட்டார்கள். பெண்களின் சுபாவம் எனக்குத்தெரியாதா? அவர்களுக்கு மனோதைரியம் அவ்வளவு இல்லை. அதற்காக அவள்மேல் கோபித்துக்கொள்வது சரியல்ல. ஆகையால் நான்சொல்கிறதைக் கேள்—

இராமஸ்வாமி யவள்சொல்வதைக் கேட்கிறதில்லையெனப் படுத்துக்கொண்டானேயொழிய அவள் சொல்வதையெல்லாம் நன்றாய்க் கேட்டுக்கொண்டேயிருந்தான். 'அதற்காக அவள்மேல் கோபித்துக்கொள்வது சரியல்ல' என்று தன்தாயார் சொன்னவுடன், அவன் 'அதற்காக மாத்திரமல்ல அம்மா! அவள்-அவள்-அவளோடே-அவள்-போ-அம்மா! எனக்கு வேண்டாம்போயேன்' என்று சொல்லிமுகத்தை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டான். இவன் அவள், அவள் என்று 4-5-தரஞ்சொன்னதும் இவன் தாயாருக்கு, உண்டான அதிசயத்திற்கு அளவில்லை. ஏதோ அவளைப்பற்றிக் குற்றமென்னவோ சொல்லப் போகிறான் என்றெண்ணியிருந்தவள், ஒன்றுஞ்சொல்லாமற்போகவே அவனைநோக்கி 'அவளைப்பற்றி யென்ன குற்றம்? அவளுக்கென்ன குற்றம்? அவள்பெண் அல்லவா? என்ன, அவள்பெண் அல்ல என்றுபதில் சொல்லி கீழே படுத்துக்கொண்டான்.

'பெண்டு அல்ல என்றால் நபும்ஸகமா?' என்று சிறிது கோபத்தோடேயே கேட்டதற்கு 'ஆமாம்!' என்றான்.

'என்னோடு விளையாடாதே.'

'விளையாடவில்லையம்மா நான்.'

'உண்மையாய்?'

'உண்மையாய்.'

'அடா! பொய் சொல்லாதே யென்னிடத்தில். தாயாரிடத்தில் பொய்சொல்லக்கூடாது.'

'பொய் இல்லையம்மா! உண்மைதான்!'

'சீ போ! உண்மையென்றால் யாரடா நம்புவார்கள்? முகத்தைப்பார்த்தால் தெரியாதாடா? என்னிடத்தில் வந்து வேடிக்கை பண்ணுதேடா! வீணாய் ஒருபெண் பெயரைக் கெடுக்காதே. அவள் தாயாரும் அவளை பத்துமாதம் சுமந்து பெற்றிருப்பள் என்று எண்ணிக்கொள். வீணாய் விளையாடாதே. நீ பார்த்தாயா? கடிதத்தை நம்பாதே.'

'நானே பார்த்தேன்.' மீனாக்ஷியை யெவ்விதத்திலாகிலும் விடவேண்டுமென்கிற அவாவினால், இராமஸ்வாமி யொருபொய் சொன்னானிச்சமயத்தில்.

'நீ சொல்வது பொய்யாயிருந்ததோ வீண் மனஸ்தாபம் உண்டாகும், இரண்டுபேருக்கும்' என்றாள் தாயார்.

'சரி' என்று சிறிது புன்சிரிப்போடு கூடிய குரலுடன் கூறினான் இராமஸ்வாமி.

உடனே புறப்பட்டாள் அவள் தாயார். டெபுடிகலெக்டரிடம் சென்று நடந்ததையெல்லாம் சொன்னாள். 'சரி நாம் செய்த செலவெல்லாம் வீணாய்விட்டது. வேறு கலியாணம் செய்துவிடுவோம்' என்று சிறிது வருத்தத்துடன் கூறிவிட்டு 'இப்படியென்றால் அவரிடம் சண்டைபோடுவானேன். உண்மையைச் சொல்லிவிடலாமே' என்று சம்பந்தி யிறங்கியிருக்கும் ஜாகைக்குச் சென்றார். அங்கே வாசலில் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். 'உள்ளேயவர்களிருக்கிறார்களா?' என்ன, 'இல்லை, எல்லாரும் இரயிலுக்குப் போய்விட்டார்கள்.' என்றான்! அந்த வார்த்தை காதில் பட்டதும் தம்வீட்டிற்குத் திரும்பினார் கோபாலஸ்வாமி அய்யர்.

மீனாக்ஷியைப்பற்றி விசாரிப்போம். சற்றேனும் இவள் அன்றிரவு செய்த காரியங்களில் பல இவளைப்பற்றித் தொடக்கத்தில் வாசித்ததற்கு ஒற்றுமையுடையனவாயிரா. ஆரம்பம் முதற்கொண்டே யிவளுக்கு விசனமே யுண்டாயின. இருவர் முகமும் முதன்முதல் சந்தித்தபொழுதே

இவர்களுக்குப்பிறகு உண்டாகப்போகிறதாகிய மனஸ்தாப
மாகிற பயிருக்கு விதைவிதைத்தாய்விட்டது. அதுமுதற்
கொண்டே, ஒருவர்பேரிலும் குற்றமில்லாமல் தெய்வச்
செயலாய் இருவர்க்கும் மனஸ்தாபத்தைத் தரத்தகுந்த
விஷயங்கள் உண்டாய்க்கொண்டே யிருந்தன அவைகள்
ஒன்றின்மேலொன்றாய் அடுக்காய் வந்தன. கலியாணத்
திற்குமுந்தி இராமஸ்வாமிக்குவந்த பொய்த்தந்தியினால் அவ
ளுக்கு இராஜகோபாலையர் நன்னடக்கையின்பேரில் சிறிது
சந்தேகமுண்டாயிற்று. சம்பந்திகள் சரியான காலத்தில்
வாராததினால் மீனாக்ஷிக்கு மனத்தில் அருவருப்பாகவே யிரு
ந்தது. மீனாக்ஷி நகை போட்டுக்கொண் டிருப்பதைப்
பார்க்கவே இராமஸ்வாமிக்கு வருத்த முண்டாயிற்று.
இவன் முகம் வருத்தமாயிருந்ததைப் பார்க்கவே, அவ
ளுக்குவருத்தம். பந்தை இராமஸ்வாமியிவள்பேரில் எறிய
வே, யிவளுக்குருத்தம். இவள் வருத்தப்பட்டுக் கொண்
டதைப்பார்த்து அவனுக்கு வருத்தம். கலியாணத்தின்
போது இராமஸ்வாமிக்கு வந்த பொய்க்கடிதத்தினால் அவ
ளுக்கு மிகவும் வருத்தம். அதேகடிதம் இராமஸ்வாமியே
யுண்டாக்கியதென்று மீனாக்ஷிக்கு எண்ணமிருந்ததால் அவ
ளுக்கு வருத்தம். கேஸ் நடந்தபொழுதும் தீபாவளிக்குச்
சென்றபொழுதும், அவன் உரக்கப்பேசியதாலும், தன்
புத்தகத்தில் கடிதத்தையவள் கொண்டுவந்துவைத்ததாக
இவன் எண்ணியதாலும் இவனுக்குவருத்தம் உண்டாயிற்று.
இவ்விரண்டு சமயங்களிலும் இராமஸ்வாமியின் வருத்தப்
பட்டமுகத்தை மீனாக்ஷிபார்க்கவே, அவனிடத்தில் சிரிப்
பேயுண்டாகாதென்று மீனாக்ஷி நிச்சயப்படுத்திக் கொண்
டாள். ஆகவே, இவர்கள் புருஷனும் மனைவியுமாவதற்கு
முந்தியே, இருவர்க்கும் சண்டையுண்டாவதற்கு வேண்டிய
காரணங்களெல்லாம் இருந்தன. குப்பை, செத்தை, ஓலை,
சுள்ளி, விறகு, எல்லாம்தயாராயிருந்தன. வேண்டியிருந்தது
சிறிய தீக்குச்சி யொன்றுதான். உள்ளே சென்றதும் இவர்
களுக்கு இதுவரைக்கும் உண்டாயிருந்த சண்டையை
யடியோடு அழிப்பதுபோல் சிறிதுநேரம் சந்தோஷமாகவே

யிருந்தார்கள். அடுக்கிவைத்திருந்த குப்பை முதலியவற்றின் மேல் நெருப்பே பிடிக்காதவண்ணம் மண்ணெண்ணெயை நிறையவிட்டது போலிருந்தது. கடிதம் ஆகிற ஒரு நெருப்புப்பொறி தற்செயலாய் எங்கிருந்தோவந்து விழவே, எல்லாம் குபீரெனப் பிடித்துக்கொண்டது. எல்லாம் எரிந்துபோனபிறகல்லவோ அணையும்.

அடித்ததினால் அழுதுகொண்டே வீடுபோய்ச் சேர்ந்ததும் பிராணநாயகியம்மாள் முன்சொன்னவிதம் கேட்கவே இவளுக்கு அழுகையோடு வெட்கமுங் கூடிற்று. தன் சுற்றத்தாரைக்கண்டதும் துக்கமும் வெட்கமும் பின்னும் அதிகமாயிற்று. கன்னம் வீங்கியிருப்பதன் காரணம் ஒருவரிடத்திலும் சொல்லவில்லை. ஆனபோதிலும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஏனெனில் வேறு எவர்தாம் அன்றிரவு அவளை யடிப்பார்? கன்னம் வீங்கியதற்குக் காரணம் எல்லார்க்கும் தெரிந்தபோதிலும், அக்காரணத்திற்குக் காரணம் ஒருவர்க்கும் விளங்கவில்லை.

திடீரென அடிப்பானேன்? என்று தங்களுக்குள்ளே தோன்றிய கேள்விக்கு மறுமொழியை விரும்பினவர்களாய் மீனாக்ஷியைப் பலகாற்கேட்டும், அவள் பதிலொன்றும் சொல்லாததினால், தங்கள் மனதிற்குள்ளேயே, ஒருவிதமான சமாதானம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அச்சமாதானம் 'அவன் சொற்கேளாமைதான்' என்பதாம்

இராஜகோபாலையரும் ஸ்ரீராமஸ்வாமி விஷயங்களைச் சொல்லவே இங்கேயிருப்பவர்களுக்குக் கோபம் அதிகரித்து எல்லாரும் சம்பந்திகளிடம் சொல்லிக்கொள்ளாமலே புறப்படுவதெனத் தீர்மானித்து தங்கள் சாமான் எல்லாவற்றையும் ஒரு சத்தவண்டியில் போட்டுக்கொண்டு நான்கு வண்டிகளில் தாங்கள் புறப்பட்டு இருப்புப்பாதை நிலைக்கு வந்து டிக்கெட்டுகள்வாங்கி ஊர் புறப்பட்டார்கள்.

* * * *

"என்னபாவம் செய்தேன்? ஈசுவரா! இந்தக் கஷ்டத்திற்குள்ளாக்கிவிட்டீரே! ஐயா! வெளியே கிளம்புவதற்

தும் வெட்கமாயிருக்கிறதே! எங்கேயாவதுபோனல், என்னைக்கண்டு சிரிக்கிறார்கள் சிலர், என்னைக் கைசுட்டி காட்டுகிறார்கள் சிலர். சிரித்துக்கொண்டே 'க்ஷேமமா?' என்கிறார் சிலர். இன்னுஞ்சிலர் சிரித்துக்கொண்டே 'கன்னம் எப்படி யிருக்கிறது?' என்கிறார். பின்னுஞ் சிலர் 'அகமுடையான் கன்னத்தில் ஏனம்மா அடித்தான்?' என்கிறார்கள். ஐயோ! ஸ்வாமி! பூலோகத்தில் சிரிப்பென்பதையே யேனுண்டுபண்ணினீரோ? யான் அவமானப்பட்டது போதாது. இன்னும் படவேண்டும் என்ற யெண்ணத்தினாலோ இச்செய்கையை சிருஷ்டித்தீர்! அவர்கள் சிரிப்பெல்லாம் பரமசிவன் முப்புரமெரித்தபொழுது உண்டாக்கிய சிரிப்புபோலிருக்கிறதே! அதைப்போல் என்னையாவது எரித்ததா? அதுவுமில்லையே அவர்கள் சிரிக்கசிரிக்க எனக்குத் துக்கம் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறதே! சிறிதுகூட இரக்கமில்லையே அவர்களுக்கு நேற்றுதான் ஒருவன், ஐயோ அவளெதிரில் நான் ஏன்போனேன் என்பேரில் பிசகு இருக்கிறபொழுது, பிறரைச்சொல்லி யாதுபயன்—பாவி, அவள் என்ன கேள்விகேட்டாள். 'அவன்சொல்லுகிறபடி கேட்டிருந்தால்,' என்றாள் புன்சிரிப்புடன். பாடலீசுவரா! ஜனங்கள் வாயையாகிலும் மூடவேண்டும் என்னுயிரையாகிலும் கவர்தல்வேண்டும். முன்னது செய்வது கஷ்டம். ஆகவே பின்னதையாகிலும் செய்யுங்கள். யான் செய்தது பிழையா? ஐயோ! அந்தக்கடிதம் என் கண்ணுக்குப் புலப்படாமலே யிருக்கக்கூடாதா? சீ! கடிதம் பார்த்தபோதிலும் நான் அவ்வாறு நடந்தது பிழை. எப்படியிருந்தபோதிலும் கணவர் அவர்செய்த பிசகுகளைப்பற்றி நாம் கேட்டது பிழை. முன்னாலேயே தோன்றிற்றா? ஐயோ! கணவராயினென்ன? நினைத்ததையெல்லாம் சிநேகிதனுக்கு எழுதலாமா? சூர்ப்பநகையும் நாமும் ஒன்றாம். நம் தமையன் வீட்டில் சேரம்போனேமாம்! இதெல்லாம் என்ன வார்த்தை? என்ன சிநேகிதன்? கடிதமே யொருவேளை வேறு யாராகிலும் எழுதினதோ? ஐயோ! தெய்வமே! எல்லா விஷயங்களையுங்கலந்து பேசுவதற்கு நமக்கொருவருமில்

லையே. யாரோடு சொல்வோமென்றாலும் வெட்கமாயிருக்கிறதே! ஈசுவரா! இப்படியா யென்னைக் கொண்டுவந்துவிட்டனை. சிறிதேனு மிரக்கமில்லையா என்பேரில்? புண்ணியம் சிறிதாகிலும் செய்திருந்தாலல்லவோ என்பேரில் இரங்குவர்' என்று தாரைதாரையாய்க் கண்ணீர்விட்டு தன் பிறந்த அகத்தில் வாசற்புறமாயுள்ள ஜன்னலின் அருகாமையில் உள்ளே யொரு நாற்காலியில் வாசற்புறமாய் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து, விம்மிவிம்மி யழுதாள் மீனாக்ஷி முன் சமாசாரங்களெல்லாம் நடந்த ஒருமாதத்திற்கப்புறம்.

அப்பொழுது இராத்திரி 11-மணி இருக்கும். சந்திரஉதயமாகி, ஜன்னல் வழியாய் மீனாக்ஷியின் முகத்திற்கருகில் பிரகாசித்தான். முன் மீனாக்ஷியின் கணவனும் அவளும் சேர்ந்திருந்த சமயத்தில் அவர்களிருக்கும் அறையில் பாதிவரையில் சென்றவன் இப்பொழுது தனியாயிருக்கும் மீனாக்ஷியினிடம் நெருங்கக்கூட பயப்படுகின்றான். உண்மை! உண்மை!

—'வண்டாய்
திரிதருங்காலத்துத் தீதிலரோ வென்பார்
ஒருவரு மிவ்வுலகத்தில்.'

இவ்வுலகத்தில்தானில்லை. அவ்வுலகத்திலு மில்லையா?

மீனாக்ஷியின் பெற்றோர்கள் படுத்துறங்கி விட்டார்கள்.

தங்களாலானவரையிலும் மீனாக்ஷியைத் தேற்றிக்கொண்டே யிருப்பார்கள். அவர்களுக்கெதிரில் சிறிது சந்தோஷத்துடனேயே யிருப்பள் மீனாக்ஷி. 'அகமுடையானிடத்தில் போகிறாயா?' என்பார்கள். முகத்தை மூடிக்கொள்வள். 'பயப்படாதே! வேறு கலியாணம் செய்துவைக்கிறோம்' என்பர் சிலவேளை. அழுவள் விம்மிவிம்மி. 'உன் மனதில் இருக்கிறதை வெளியே சொல்லம்மா! என்னவேண்டுமென்றாலும் செய்கிறோம்' என்பார். பதிலே யிருக்காது. முகம்மாத்திரம் வாடியிருக்குமே யொழிய வாய்திறந்து ஒன்றுமியம்பாள். இவள் பெற்றோர்கள் தங்களுக்

கடிக்கடி யுண்டாகும் துக்கங்களை யடக்கிக்கொண்டு மீனு ஷிக்கு ஆறுதல் செய்வார்கள். இவள் தாயார் அன்றிரவு படுக்கப்போகும்பொழுது, தன் பெண்ணைப்பார்த்து 'வா! இங்கேவந்து படுத்துக்கொள்ளு' என்று கண்ணீர் சொரிந்தாள். மீனுக்ஷிக்கும் தன்னை யறியாமலே யழுகைவந்துவிட்டது. சிறிதுபோது தலையணையைக் கட்டிக்கொண்டு படுத்திருந்தாள். தூக்கம் வரவில்லை. எழுந்து முன் சொன்னவாறு உள்ளேபோ யுட்கார்ந்தாள்.

இவள் தோழி சாவித்திரிக்குக் கலியாணம் ஆகி இப்பொழுதுதான் இரண்டு வாரமாயிற்று. எதிர் ஜாமீன் 500-ரூபாயுங் கொடுத்து மருமகப்பிள்ளைக்கு 500-ரூபாய் பெறுமான நகைகளும் போட்டான். கலியாணச்செலவு 500-ரூபாயாயிற்று. மருமகப்பிள்ளை பீ. ஏ. பரீக்ஷயில் தேறி, பீ. எல். க்கு வாசித்துக்கொண்டிருந்தான். அவன் தகப்பனுர் பெரிய பூஸ்திதியுடையவர். கலியாணமான பிறகு ஏதோ ஒரு காரியத்திற்காக நாராயணஸ்வாமி அய்யர் அன்று பகல் வண்டியில்தான் புறப்பட்டுப்போனுர். மீனுக்ஷி முன் சொன்னவாறு அழுதுகொண்டு தன்னகத்திலுட்கார்ந்திருக்கையில் அவள் தோழி சாவித்திரி பக்கத்திலுட்கார்ந்துகொண்டு பாடிக்கொண்டிருந்தாள்.

'நீகூட ஏனம்மா விழித்திருக்கிருய்? நாழியாயிற்றே! தூங்கக்கூடாதா? உனக்கென்ன? புண்ணியம் பண்ணினவள் நீ. உன் கலியாணத்தில், ஒரு இடையூறு உண்டா? ஒரு மனஸ்தாபம் உண்டா? என்ன சாவதானமாய் என்ன அழகாய் ஆயிற்று கலியாணம்! பாக்கியசாலி. நம்மைப்போலவா?' என்று திரும்பவும் புலம்பி யழுதுகொண்டு இருக்கையில், சாவித்திரி,

ஷண்முகனைக் காணுமலே மனம்வாடுது
மையலுங்கைதயமேல தாளாமலே

என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள். இதைக் கேட்டவுடன் மீனுக்ஷி 'ஐயோ! இன்றையதினம் உயிருள்ளதும்

உயிரில்லதுமாகிய வெல்லாம் நம்மை வருத்தப்படுத்துகின்றனவே? தாயாரோ அவ்விதஞ் சொன்னாள். சந்திரனோ இவ்விதம் பிரகாசிக்கின்றான், காலமோ சாவதானமாயிருக்கின்றது. காற்றோ மெதுவாய் வீசுகின்றது. தோழியோ இவ்விதம் பாடுகின்றாள். ஐயோ! என்னம்மா! உன் மனம் வாடுகின்றதோ என்னவோ? என் மனம் வாடுகின்றது. என்ன செய்வேன் இப்பொழுது? எப்படியாகிலும் சேரத்தான் வேண்டும். கடிதம் எழுதுவோமா? சீசீசீ! அவ்வளவு அல்பமா! நாம்? உயிரை வேண்டுமென்றால் விடுவோமே யொழிய விரோதியிடத்து வணங்கோம்' என்று யோசிக்கையில் தோழி பாடிய,

அங்கமுருகுது அன்பனைக்காணாமல்
கங்கணங்கழலுது கண்மணியே.

என்பதுங் காதில் விழுந்தது.

'அடடா! நாம் இவ்வாறு வருத்தப்படப்போகின்றோம் என்று நமக்காக முன்னொருவர் இப்படி பாடியிருக்கின்றார்போலும். ஆகா! நமக்கே பொருந்துகின்றதே அப்பாட்டுகள் எல்லாம்! பூலோகத்தில் ஒரே செய்கை சிலர்க்குத் துன்பத்தையும் சிலர்க்கு இன்பத்தையும் கொடுக்கின்றதே. அப்பாட்டு சாவித்திரிக்கு மவ்வளவு துன்பத்தைக் கொடுக்குமேல் அவ்விதம் பாடுவளா? என்னங்கமுருகித்தான் கண்ணீர் ஆறாய்ப் பாய்கின்றதே! இப்பொழுது என்ன கண்ணீர் நினைத்தவுடனே வருகிறதே! ஈசுவரா, ஈசுவரா, ஈசுவரா என்பதில் என்ன பயன்? ஈசுவரிருந்தால் நம்மை யிப்படி செய்வாரா? இல்லை, இல்லை, நம்மால் முடியாது. எவ்விதத்தாலாகிலும் ஒன்றாய்ப் போகவேண்டும். ஒரு கடிதம் எழுதுவோம். வெட்கமென்ன? யாரிடத்தில் வெட்கம்? நம்முடைய அகமுடையானிடத்தில் நமக்கென்ன வெட்கம்?' என்றுவிட்டு விளக்கேற்றி காகிதம் இங்கிபெட்டி யெல்லாங் கொண்டுவந்து எழுதத் தொடங்கினாள்.

திருப்பாப்புலியூர்.

"சீச்சீ! நாமா முன்னே யெழுதுவது. அவர்தா மெழுதட்டுமே! நமக்குள்ள கஷ்டம் அவருக்கு மிருக்குமே. இருந்தபோதிலும் எழுதித்தான் பார்ப்போம்."

"என்னவென்று விளிக்கலாம்?" 'அருமைநாயக! அருமையாயிருந்தாரோ அவர். 'கணவ' மிகவும் கோபம்போல் காட்டுகின்றது. இன்னும் அதிக அன்புடைய வார்த்தையாய் வேண்டும். 'அநாதைரக்ஷக.' இதுதான்சரி. நாமோ அநாதையாயிருக்கிறோம். நம்மை ரக்ஷிப்பது அவர்கடமை."

அநாதை ரக்ஷக,

பூலோகத்தில் மனுஷியர்களாய்ப் பிறந்து செய்யும் தருமங்களில், அநாதைகளையும், கஷ்டப்படுபவர்களாயிருக்கிறவர்களையும் பாதுகாக்கவேண்டியது முதற்றருமம். அப்படி யிருக்கவும் என்னை உபேக்ஷிப்பது தருமமா? நான் எவ்வளவு குற்றங்கள் செய்திருந்தபோதிலும், 'சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே' என்பதற்கிணங்க மன்னித்தருளவேண்டும்.

"அப்புறம்என்னஎழுதலாம்? தூக்கம் மிக அதிகமாய் வருகின்றது. தூங்குவோம். நாளையதினம்பாக்கியை யெழுதுவோம்" என்றுவிளக்கையணைத்துவிட்டுப் படுத்துறங்கினாள்.

இராத்திரிவெகுநேரம் விழித்திருந்தவளாகையால், காலையில் 8-மணிவரைக்கும்படுத்துறங்கிவிட்டாள். இவள்பெற்றோர்கள் இவள் எத்தனைநாழி தூங்கினாலும் எழுப்புகிறதில்லை, தூக்கமே கவலைக்கெல்லாம் ஆறுதல்என்று பேசாமலிருந்துவிடுகிறது. இவள் அன்றையதினம் காலையிலெழுந்து உள்ளேசென்றதும் தன்பெற்றோர்களிருவரும் ஏதோபேசிக்கொண்டிருக்கக் கேட்டனள். அவர்களெதிராய்ச் சென்றதும், இருவர்முகமும் கோபமாயும் வருத்தமாயும் இருப்பதைக் கண்டாள். பேசாமல் நின்றுகொண்டு அவர்கள்பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தனள்.

இரா—இல்லை. அவர்களுடைய போக்கிரித்தனத்தைப் பாரென்றால்.

கா—ஒருவரைச் சொல்லியென்ன பிரயோஜனம்? நம்முடையஅதிர்ஷ்டம் அவ்வளவுதான்.

இரா—இருக்கட்டும். இருக்கட்டும். வைக்கிறவழியில் வைக்கிறேன்

என்று விட்டு மிக அவசரமாய் எழுந்துபோனார்.

மீனாக்ஷி இதையெல்லாம்பார்த்து இராஜகோபாலையர் கையிலுள்ள கடிதமே இதற்கெல்லாங் காரணமென்று நினைத்து, 'அதைக்காட்டு அப்பா பார்ப்போம்' என்றாள். இராஜகோபாலையர் வெளியில்போகிற வேகத்தில் கடிதத்தை யெறிந்துவிட்டுப்போனார், அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது.

தஞ்சாவூர்.

ஐயா, ஜூன் ' 02.

தங்கள்குமாரி சௌ. மீனாக்ஷி நபும்ஸகமென்றும், ஆனபடியால் ஒருவனுக்குப் பாரியாளாயிருக்க யோக்கியதையற்றவளென்றும் எமக்குத் தெரியவருகிறபடியால், இக்கடிதங் கண்ட ஒருவாரத்திற்குள் நாங்கள் எண்ணியிருப்பது பிசகு என்று தக்க சாக்ஷிகளைக்கொண்டு ஸ்தாபிக்காவிட்டால் என்குமாரனுக்கு வேறு கலியாணம் ஆவதுமன்றி மோசக் குற்றத்திற்காக தங்கள்பேரில் நடவடிக்கை நடத்தப்படுமென்று இதனால் கண்டிப்பாயறியவும்.

கோபாலஸ்வாமி அய்யர்.

டெபுடி கலெக்ட்டர்.

மீனாக்ஷி கடிதத்தை வாசித்து முடித்ததுதான் தாமதம். காலோசைகேட்டது. திரும்பிப்பார்த்தாள். ஒருசிறிய துணிமுட்டையுடன் மாது ஸ்ரீ லக்ஷ்மி அம்மாள் வருவதைக் கண்டாள். அப்பொழுதுதான் ஊரிலிருந்துவந்துகொண்டிருக்கிறாள். அவளைக் கண்டவுடன் மீனாக்ஷி

பொறுக்கிப்போய்விட்டனள். காமாக்ஷியம்மாள் 'வாருங்கள்' என்று மரியாதையாய்ச் சொன்னாள். சொன்னது தான் தாமதம், ஆரம்பித்துவிட்டாள் லக்ஷ்மி அம்மாள். 'எனக்கென்ன உபசாரம் வேண்டியிருக்கிறது. நான் பாட்டிற்குவருகிறேன், நான் பாட்டிற்குப் போகிறேன். பூனைக்குமெலிக்கும் உபசாரமென்ன? அது கிடக்கின்றது. தாயார்! மீனாக்ஷியை யவளகமுடையான் அடித்து விட்டாளாம். நன்றாயிருக்கிறது. தொட்சியுள்ளே கொண்டு போய்விட்ட பெண்ணையடிக்கிறது முண்டே? அதிசயந் தான். டெபுடிகலெக்டர் பிள்ளையென்றால் அவன்மட்டும். இங்கேயென்ன? நானாயிருந்தால் வந்த சனிகைக்குக் கன்னத் தைக் கிழித்துக்கொடுப்பேன். இராஜ்யத்திலே பெண் டாட்டியையாமுடையான் அடிப்பான், ஆனாலும் இப்படியா? சரிதான். அடித்ததுதான் அடித்தானே! இவளாவது வாயைமூடிக் கொண்டிருக்கக்கூடாதா? அடிபே? ஒரு பொன்னுக்கு வெட்கமாயிருக்காதோ அகமுடையானை டித்தானென்று சொல்ல. எல்லாந்தான்! காலம்! காலமடி! கார்த்திபிள்ளைப்பெற்றேன் சேர்த்தியென்றுவிட்டு இருக்கிறது. எங்கேபடித்தான்? தொட்சியுள்ளேயா? ஆங்! எதுவேயேது வீது? அதிர்ஷ்டம். ஐயோ! இரண்டாயிரம் ரூபாயைச் செலவழித்துக் கலியாணம்பண்ணினீர்களே! தொட்சிக்கென்ன? 1000 ரூபாய் இருக்குமா செலவு? ஐயோ! எல்லாம்வீணாய்ப் போயிற்றே! எனக்கு சமாசாரமே தெரியாது. தொட்சிகடக்கிறதென்று தெரிந்தாலல்லவோ இதுதெரியப் போகிறது. எனக்குச் சொல்கிறீர்களா? போகிறீர்களா? எனக்கென்சொல்லவேண்டும்? இருக்கிறபடியிருந்தால், எல்லாருமுறவு கொண்டாடுவார்கள். இப்பொழுது என்ன? நான்வந்தாலும் ஒன்றுதான் வராவிட்டாலும் ஒன்றுதான். மங்கையர்க்கரசி போனால் மடப்பள்ளிக்காரியில்லையா? நீங்களெப்படியிருந்தாலும் எனக்கு உறவுவிட்டுப்போகாது. இங்கேயிருந்து வருகிறவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருப்பேன். முந்தாநேற்றையதினம் இங்கேயிருந்து குப்பிவந்திருந்தாள். குப்பியெங்கேதா' நம்முடைய குப்பியடீ! குப்பம்

மாள். இப்பொழுது தான்தெரியும். அவரவர்களுக்கு அந்தந்தப் பெயரைச் சொன்னால் அல்லவோ தெரியும். சுப்பிக்கு நாத்தனாருடைய மாட்டுப்பெண்ணுக்குப் பிறந்த அகம் எங்களூர். எங்களூர்! எனக்கு ஊர் ஒன்றுதான்—'

என்னம்மா! நீயில்லையென்று விட்டுவெகுகாலம் விசனப்பட்டுக்கொண்டிருந்தோம். வந்துவிட்டாயே? நல்லது தான். அம்மாள்பேச ஆரம்பித்துவிட்டால் முடிப்பது எக்காலம்?

இராஜகோபாலையர் அங்குவருவதைக்கண்டு என் அம்மாள் பேச்சை நிறுத்தினாள்.

அன்றையதினம் இரண்டு மணி இருக்கும். இராஜகோபாலையர் கோர்ட்டிற்குச்சென்றார். மீனாக்ஷி படுத்துறங்குகின்றாள். லக்ஷ்மியும் காமாக்ஷியம்மாளும் பாகீரதியும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். இராஜகோபாலையர் அகத்துக்குப்பக்கத்தில் 7-8-பேர்கள் புருஷர்கள் உட்கார்ந்துகொண்டு வேடிக்கையாய்க் கடிதம் ஆடுகின்றனர்.

'ஆஹாஹா! அதுதானையா பிசகு! கற்றுக்குட்டிகளை வைத்துக்கொண்டு கடிதம். ஆடினால்—'

'யாரையா கற்றுக்குட்டி? அவனிடத்தில் ஜாக்கி, இஸ்பேட்ரே, தழை இவ்வளவு வைத்துக்கொண்டிருக்கிறான், யாரையா என்ன செய்யலாம்?'

'நீர் பத்தாம் நெம்பரைக் கிழித்திருந்தாலென்னவையா?

'தெரியாதவர்! தெரியாதவர்! கலையும். கலையும்.'

'தெரியாதவர்! நன்றாய்த் தெரியாமல் போயிற்று. அகமுடையாளோடு படுத்துக்கொள்ளத் தெரியவில்லை?'

'என்ன ஐயா? மகாகோபம் கோபித்துக் கொள்ளுகிறீர், நீர்தான் ஆடுமையா! நான்—

டப், டப், டுப், டப், டம், டிம்.

'என்ன சப்தம் இது? என்ன சப்தம்?'

ஐயையோ! ஐயையோ! வீடுபோயிற்றே! ஐயையோ!

'நெருப்பு! நெருப்பு! அடடடடடா! ஐயோ! நெருப்பு! நெருப்பு! ஓடிவாங்கள்! ஓடிவாருங்கள்.'

கடிதம் ஆடினவர்களெல்லாம் எழுந்து ஓடினார்கள்.

இராஜகோபாலையர் வீட்டின் கீழ்பாகம் நெருப்புபற்றிப் பெரிந்துகொண்டிருந்தது.

இவர்கள் ஓடி 10 நிமிஷத்திற்கெல்லாம் சுமார் 500 ஜனம் இருக்கும். கும்பல்கூடிவிட்டார்கள். பக்கத்தில் குளம். குடம்குடமாய் ஜலத்தைக்கொண்டு கொட்டுகிறார்கள் சிலர். அங்குமிங்குமாய் ஓடுகிறார்கள் சிலர். ஒன்றுந்தெரியாமல் விழிக்கிறார்கள் சிலர். வீட்டிலுள்ள சாமான்களைக் கோயில்கொண்டுபோய்ச் சேர்க்கிறார்சிலர். தங்கள்வீட்டிற்கும் நெருப்புவரப்போகிறதேயென்று ஓட்டிலெல்லாம் ஜலத்தைவாரியிறைத்தார் சிலர். ஈரமுள்ளவீட்டிலும் வருமோவென்று சாமான்களையெல்லாம் கொண்டுபோய் அப்புறப்படுத்தினார்சிலர்.

'ஐயையோ! மீனாக்ஷி அந்தஅறையில் படுத்துக்கொண்டிருந்தாளே! ஐயோ! மீனாக்ஷி! என் அம்மா, மீனாக்ஷி!'

'என் அம்மா! இதோ இருக்கிறேன்' என்று கண்ணீர் சொரிந்துகொண்டு மொழிந்தனள் மீனாக்ஷி.

'பாவம் இந்தவீட்டை யாரோபார்வைபார்த்து விட்டார்கள்.'

'ஏனிந்தநெருப்பு?' 'போய்ஜலம் எடுத்துக்கொட்டேன் சும்மாபேசிக்கொண்டே யிருக்கிறாயே!' 'நீதான்கொட்டேன். அதிகாரஞ்செய்கிறாயே!' 'வாயைமூடு அப்பேன்!' 'போதும். சண்டைவேண்டாம் இந்தசமயத்தில்' 'நெருப்பு சிறிது சிறிதாய்க் குறைகின்றதையா!' 'போயிற்று போயிற்று. இராஜகோபாலையர் அந்தஸ்தெல்லாம்' 'என்ன என்ன?' 'பத்திரத்தையெல்லாம் ஒரு பெட்டிக்குள்ளே வைத்திருந்தாராம். அந்தப்பெட்டி யந்த உள்ளே யிருக்கிறதாம்.' 'எடுத்திருப்பார்கள் அதை' 'நான்தான் சொல்லுகிறேனே! இல்லை.' 'அடுப்பு மூட்டினார்களா? இப்பொழுது இந்த

நெருப்புக்குக் காரணம்?' 'ஆபீஸ் ரூமில்தானேயா அப்பு மூட்டினார்கள்!' 'சூடு! சூடு! இந்த சூரியன் பண்ணுகிறது இக்கினியம்!' 'என்ன? ஆசாரம் இல்லை, ஒழுங்கு இல்லை. கண்ட தண்ணீரை வாங்கிக் குடிக்கிறது! மனுஷ்யனுக்கு பயமும் வேண்டாமா?' 'அதோ வருகிறார் இராஜகோபாலையர்!' 'ஹைகோர்ட் ஜட்ஜ்தான் வரட்டுமே, அக்கினி பகவான் பயப்படுவானா?' 'இந்த அம்மாள் யார்? இப்படி யடித்துக்கொள்கிறாளே?' 'அவள் தலையைப் பாரேன்!' 'ஹா' ஹா!' 'ஓ! அம்மா! மண்ணெண்ணெய்ப் பெட்டியே! அதுபோய்ப் போகிறது?' 'இதோ! இதோ! அந்தம்மாள் மார்வைப்பாரேன்' 'அடே! அப்பாடா! என்னவந்து இடிக்கும்போலிருக்கிறதே!' 'அந்த அம்மாள் ஆடினாள் அதுவுமல்லவோ கூட ஆடுகிறது.' 'இந்த அம்மாளா? குறிஞ்சிப்பாடி. இந்த அம்மாள் பேர்கூட எனக்குத்தெரியும். இச்சிமி அம்மாள்' 'அவள் சொல்லுகிறதைக் கிட்டப்போய்க் கேட்போம்.'

'கிச்சுவெல்லாம் நாசமாய்ப்போக. உங்களை வாரிக் கொண்டுபோக. உங்களுக்கொரு பேதிவாராதா? என்னுமா வீட்டைக்கெடுத்து விட்டீர்களே! உங்கள் வீட்டிலே நெருப்புவைத்துக் கொள்ளக்கூடாதா? அதோ ஒரு கொட்டகை இருக்கிறதே! இதோ ஒரு கொட்டகை இருக்கிறதே! இங்கேயெல்லாம் போடக்கூடாதா? என் வீடுதானா அகப்பட்டது? பிடாரியம்மா! நீயே கேட்கவேண்டும். நெருப்புவைத்தவர்கள் இப்படியே போகவேண்டும். ஐயையோ! ஐயையோ! வீடுபோயிற்றே! அவன் டெபுடிகலெக்டர்வேலை அப்படியேபோக! அவன் பி. ஏ. பேரன் இப்படியேபோக! என்பெண்ணை யெல்லாருமாய்க் கட்டிக்கெடுத்துவிட்டார்களே! என்பெண்ணைக் கெடுத்ததுபோதாது என்று வீட்டிற்கும் வந்து விட்டார்களே! பாடலீசுவரா! கண்ணில்லையா? பிரஹன்நாயகியம்மா! பார்க்கக்கூடாதா இதை? எல்லாருக்குமா கண்ணில்லை? அப்பாடா! அப்பாடா! அப்பாடா! ஐயையோ! ஐயையோ! இன்னும் எரிகிறதே! ஐயோ! மாமா! வீடுபோயிற்றே! உங்களுக்கு கோர்ட்டுக்கும் போகவேண்டுமா? யாரோ நெருப்புவைத்து விட்

டார்களே! பாவி! சண்டாளா! இப்படியா என் குடியைக் கெடுப்பாய்! கெட்ட காலிலே கெடும் பட்டகுடியே படும் என்றிருக்கிறதே! ஐயையோ! அந்த உள்ளேதானே பெண் பார் புடைவையைக்கொண்டு போய்வைத்தேன். அட்டே! இந்த உள்ளேவைக்கக் கூடாதா? எனக்குப் புடைவை யினி மேல் யார்வாங்கிக்கொடுப்பார்? ஐயையோ! அந்தப்புடைவையை யிந்த உள்ளேகொண்டு போய்வைத்தேனே? புடைவைபோயிற்றே! போயிற்றே! போயிற்றே! அவனைக் கட்டையிலேவைக்க, அவனையும் அவனகமுடையாளையும் சேர்த்து விரியன்புடுங்க! அவன் வாங்கிக்கொடுக்கிறபோதே என்ன எண்ணத்தோடே வாங்கிக்கொடுத்தானோ? ஐயோ! நானதை ஆறுவருஷம் பத்திரமாய் வைத்துக்கொண்டிருந்தேனே!—' என்று லக்ஷ்மி அம்மாள் பிரலாபித்துக் கொண்டிருந்தாள்.

மாது ஸ்ரீலக்ஷ்மி அம்மாள் இவ்வாறு புலம்புவதையும், நெருப்பு திகுதிகு என்று சப்தம்செய்துகொண்டு எரிவதையும், ஜனங்கள் ஒரே கூட்டமாய் நின்றுகொண்டிருப்பதையும், குடம்குடமாய் ஜலத்தைக்கொண்டுவந்து கொட்டுவதையும் இராஜகோபாலையர் வண்டியைவிட்டு கீழேயிறங்காமல் வண்டியிலேயே யிருப்பதையும், மீனாக்ஷி கண்ணினின்றும் தாரைதாரையாய் நீர் சொரிய வாயினாலொன்று மியம்பாமல், பட்டணங்களில் காணப்படும் குழாய்களில் ஒன்றைப்போல அசைவற்றுநிற்பதையும். கண்ணால்கண்டவர்கள் எக்காலும் மறவார்கள். காதினாற் கேட்ட யானே மறவாமல் நன்றாய் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன் என்றால், காதிலும் பலமுள்ள கண்ணை யுபயோகித்தவர்களின் நிலையைக் கேட்பானேன்.

அடடா! கலியாணத்துக்கு முந்தி பலவிடங்களிலும் வரனுக்காக அலைந்து, கடைசியாக ஒருவரன் நல்லதென்று தோன்றியதை நிச்சயம்பண்ணி,' கலியாணம் நடக்கும்பொழுது பொய்த்தந்திகளாலும் நகைத்திருட்டினாலும் ஆள் காணாமற்போனதினாலும் மனம் நொந்து கிருகப்பிரவேசத்திலும் சம்பந்தி பட்ட துயரால் மனங்கலங்க

சாந்திமுகூர்த்தத்திற்கு ஆயிரக்கணக்காய்ப் பணத்தைச் செலவழித்தும், சுகத்தை சற்றுநேரமாகிலும் அனுபவித்துப் பார்க்கக் கொடுத்துவைக்காமல், பெண்கள் சுகம் கெட்டதே யென்று நினைத்திருக்குங்கால், தன்பெண், அலியென்ற தோர்குற்றஞ் சாட்டப்பட்டதனால் மனம் நலிந்து, நெட்டுயிர்ப்போ டுற்றபிணம்போல் இன்னசெய்வதென்று தோன்றாமல் திகைத்து, ஐம்புலனும் உள்ளடங்கியிருந்த ம-ள-ள-ஸ்ரீ இராஜகோபாலையர் வீட்டிலா தீ பிடிக்கவேண்டும்? ஆஹா! நம்மாலென்னவிருக்கிறது. 'ஏதே தெய்விடத் தெக்காலத்தெய்துமஃதெய்தும்.'

8-வது அத்தியாயம்.

புனர்விவாகம்.

'ஆமாம். நெருப்பு என்னமாய்ப்பிடித்தது திடீரென்று?' என்று வினவினர் நாராயணஸ்வாமி அய்யர், தீப்பிடித்ததற்கு மறுநாள் காலையில், இராஜகோபாலையர் கிருகத்தில் உட்கார்ந்துகொண்டு; அதற்கு முதனாள் இராவுதான் அவர் ஊரிலிருந்து வந்தனர்.

'அதுதானையா தெரியவில்லை. மீனாக்ஷி அந்த உள்ளே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். அதற்குமுன் அங்கு உட்கார்ந்து யாரோடேயோ பேசிக்கொண்டிருந்தாளாம். திடீரென ஒருவன் ஓடிவந்து 'அம்மா! அம்மா! வீடுபுகைகின்றதே! என்ன?' என்றானாம். எல்லோரும் ஓடிவந்து வெளியில்நின்றுகொண்டுபார்ப்பதற்குள் திகுதிகுவென வெரிந்ததாம். மீனாக்ஷிக்குசூடுபட்டு, அவள் விழித்துக்கொண்டு, ஐயையோ, ஐயையோ வென்று ஓடிவந்து விட்டாளாம். அவளைக்காணோம் என்று அவள் தாயார் அடித்து மோதிக்கொண்டு அழுதாளாம். அப்புறம் இதோ இருக்கிறேன் என்று சொன்னாளாம். எனக்கு இதெல்லாம் போனதைப் பற்றி விசனமில்லை. அவள் பிழைத்தாளே! அதுவே போதும்' என்றார் இராஜகோபாலையர்.

'அவனுக்குக் காயமொன்றுமில்லையே?'

'காலில் ஏதோ நீச்சுட்டதனாற் சிறிது புண்ணாயிருக்கின்றது. மற்றப்படி யொன்றுமில்லை.'

'நல்லவேளை. தலைக்குவந்த கேடு தலைப்பாகையோடு முடிந்தாற்போல் உயிருக்குவந்த அபாயம், காலோடு முடிந்ததே நல்லதுதான். மற்றப்படி யொருவர்க்கும் ஒன்று மில்லையே.'

'ஒன்றுமில்லை.'

'புஸ்தகத்தில் நஷ்டம் என்ன 50-ரூபாயிருக்குமா?'

'ஐம்பதா? நல்ல ஐம்பது. சட்ட புத்தகம்போனதே ஆயிரம் ரூபாயிருக்கும்.'

'ஆயிரமா? ஆயிரமா? அடடா! ஆயிரம் ரூபாய் என்றால் சுலபமாயிருக்கிறதா? ஐயோ! என்ன கன்னெஞ்சனாயிருக்கவேண்டும் இதற்கு நெருப்புவைத்தவன். அது என்ன மனுஷியன்வைத்ததா?'

'அதுதானே தெரியவில்லை. மனுஷியர்கள் வைப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. என்னமோதெரியவில்லை. நமக்கே போராதகால மிப்பொழுது. இனிதானிப்படியாயிற்றே! சம்பந்தியெழுதின காகிதத்தைப் பார்த்தீர்களா?'

'இல்லையே. எப்பொழுது வந்தது?'

'அது என் சொல்கிறீர்? எல்லாருமாய்ச்சேர்ந்து நம்மை வருத்தப்படுத்துகிறது சிறிதாயில்லை.' கொஞ்ச நஞ்சமல்ல என்றுவிட்டுக் கடிதத்தைக்கொண்டுவந்து காண்பித்தனர்.

நாராயணஸ்வாமி அய்யர் புன்சிரிப்புடன் 'நன்றாய்த்தானிருக்கிறது. என்னமாய் ஸ்தாபிக்கிறதோ?'

'அதுதானொன்றுந் தெரியவில்லை. என்னசெய்யலாம்? சொல்லுங்கள் பார்ப்போம்.'

'சொல்லுகிறதென்னத்தை, பேசாமலிருங்கள், செய்கிறதைச் செய்யட்டும்.'

'இன்னும் ஒருவாரம் காலம் வைத்திருக்கிறார்கள்.'

'அப்புறம் என்ன செய்வார்கள் பார்ப்போம்.'

'எல்லாம் வேடிக்கையாயிருக்கிறது. இந்த இரண்டு வருஷகாலமாய் நமக்குவருந் துன்பங்கள் இவ்வளவு அவ்வளவு என்றில்லை' என்று வருத்தத்துடன் சிரித்துக்கொண்டு இரண்டுபேர்களும் தத்தம்கிருகங்களுக்குச் சென்றனர்.

நெருப்புப்பிடித்த அன்றைய தினத்திற்கு எட்டாவது நாள் சாயங்காலம் மீனாக்ஷி தன் அறையில் படுத்திருந்தாள். அவள் தோழி சாவித்திரி கால்பிடித்துக்கொண்டிருந்தாள்.

'அப்பாடா! அப்பாடா! அங்கே பிடிக்காதே! அங்கே பிடிக்காதே! வலிக்கிறது' என்றாள் மீனாக்ஷி.

'இன்னுமா வலிக்கிறது? ஒருவாரமாயிற்றே!' என்றாள் சாவித்திரி.

மீனா—நன்றாய்ச் சுட்டுவிட்டது. இன்னும் முழுவதும் ஆறவில்லை.

சாவி—என்ன கஷ்டம்? இரண்டு வருஷமாய் எல்லாக் கஷ்டங்களு முனக்கே வருகின்றன அம்மா!

மீனா—நாம் செய்த பூஜையின் பலன்.

சாவி—உன்னுடைய நகையெல்லாம் தீயிலெரிந்து விட்டதோ?

மீனா—'நகை! எனக்கு நகை ஒன்றுதான் வேண்டும்' என்று கண்ணீர் சொரிந்தனள்.

சாவி—(கண்ணீர் சொரிந்துகொண்டு) உன்னுடைய நிலைமையை நினைத்தால் எனக்கு இன்னசெய்வதென்று தோன்றவில்லை. என்னத்திற்காக அடித்தான்? அவர்பேரில் பிசகா? உன்பேரில் பிசகா?

மீனா—ஒருவர்பேரிலும் பிசகில்லை.

சாவி—என்னிடத்தில் சொல்லமாட்டேன் என்கிறாயே? தனக்குள்ள குறைகளை யொருவர் சுவரோடாகிலும்

சொல்லிக்கொண்டாற்றுன் ஆறும் என்பார்கள். சுவரி லும் மேலாகிய என்னிடத்தில் சொல்லக்கூடாதா?

மீ—சொல்லிக்கொள்வதற்கு ஏதாவது இருந்தாலல்லவோ?

சா—அவன் ஏன் உன்னை யடித்தான்?

மீ—அவனுக்கு அடிக்கவேண்டும்போலிருந்தது; அடித்தான்.

சா—எனக்கு அடிக்கவேண்டும் போலிருக்கிறது என்றால் அடி பட்டுக்கொள்வாயோ?

மீ—அதுவும் பட்டுக்கொள்ளவேண்டிய காலமிருந்தால் பட்டுக்கொள்ளத்தான் வேண்டும்.

சா—காலம்! காலம் காலம் என்பது மொன்றுண்டோ? ஊக்கமின்மையே குடிகொண்டிருக்கும் சோம்பேறிகள் வார்த்தையன்றோவது? ஒன்றைச் செய்யவில்லையென்றால், காலம் வரவில்லையெனப் பகர்வது அவர்கள் சுபாவமன்றோ? ஏனடி அவனடித்தான்?

மீ—உன்னையேன் உன்னுடைய அகமுடையான் அடிக்கவில்லை.

சா—நல்லகேள்வி! அகமுடையார் எல்லோரும் தத்தம் ஸ்திரீகளை யடித்துக்கொண்டே யிருப்பர்போலும்!

மீ—கணவர் எல்லாரும் தத்தம் ஸ்திரீகளை யடிக்காமலே யிருப்பர்போலும்,

சா—ஆகிலு மிப்படியா? அந்த இரவிலேயே அடித்ததற்கு ஏதோ ஒரு சிறந்தகாரணமிருத்தல்வேண்டும், என்னிடத்தில் சொல்லமாட்டேன் என்கிறாய்.

மீ—சொல்லுகிறேன் அதோ அந்தக்கடிதத்தை வாங்கிக்கொண்டுவா!

என்றவுடன் ஜன்னல்முகமாய்த் திரும்பிப்பார்க்க, தபால்காரன் இரண்டுமூன்றுகடிதங்கள் வைத்திருந்தான். அவைகளை வாங்கிக்கொண்டு வந்தனள் சாவித்திரி. ஒருகடிதம் மஞ்சளாயிருப்பதைக்கண்டு,

சா—இதென்ன கலியாணகடிதம், மஞ்சள் தடவியிருக்கிறதே! என்றவுடன் மீனாக்ஷி யதைப்பிரித்துப்பார்த்தனள்: அதில் கீழ்வருமாறு எழுதியிருந்தது:

ஸ்ரீ பரப்ரம்மணே நம:

விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை.

ஐயா,

நிகழும் ௵ ஆனிமீ ௳ க்குச் சரியான 1902-௵ ஜூன்மீ ௳ ஞாயிற்றுக்கிழமை லக்கினம் காலை 7-மணி முதல் 8½-மணிக்குள்ளாக எனது குமாரன் சி. இராமஸ்வாமிக்கு இவ்வூரிலிருக்கும் ஆமக்குடி மிட்டா ம-௱-௱-ஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள் குமாரத்தி சௌபாக்கியவதி ஞானம்பாளைப் பாணிக்கிரஹணஞ் செய்துகொடுப்பதாய்ப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் இச்சுபமுகூர்த்தத்திற்கு குடும்பசமேதராய் வந்திருந்து நடப்பிக்கக்கோருகிறேன்.

முகூர்த்தம் தஞ்சாவூரில் ஷையார் தம்பியும் தஞ்சாவூர் சப்மாஜிஸ்திரேட்டு மாகிய அகிலாண்டகோடி சாஸ்திரிகள் அகத்தில் நடக்கின்றது.

தஞ்சாவூர், 1902௵ ஜூன்மீ ௳

இங்ஙனம்:
தங்களிஷ்டன்,
கோபாலஸ்வாமி அய்யர், டேபுடி கலெக்டர்.

இக்கடிதத்தை வாசித்துப்பார்த்தாள் மீனாக்ஷி. மேனேக்கிய முகம் கீழ்நோக்கியது தேகத்திற்குப் பக்கத்திலிருந்த கைகள் முகத்தின்கீழ் சென்றன.

'என்னகடிதம் அம்மா இது?' என்ற சாவித்திரிக்குப் பதிலொன்றுமில்லை. பக்கத்திலிருந்த கடிதத்தைத் தானாகவேயெடுத்து வாசித்தாள். சாவித்திரி பிறகுஅக்கடிதத்தைக் காமாக்ஷியம்மாளிடம் கொண்டுபோய்க் கொடுத்தனள். அதைப்படித்துப்பார்த்தவுடன் அவளுக்கு ஒன்றுந்தோன்றவில்லை. தனக்கிருக்கு மொருபெண்ணை சாந்தி யுள்ளிலடித்ததுமன்றி நபும்ஸகமெனப் பழியுஞ்சாட்டி முழுவதுந் தன்

ளிவிட்டு வேறுகல்யாணமும் செய்துகொண்டனனன்றோ? ஹாஹா! கதைபோலிருக்கின்றதே யிது. ஒருவர் ஒருகதை எழுதி யந்தக்கதையில் இதைப்போல் அகமுடையான் தன் பெண்டாட்டியைப் படுக்கையறையி லடித்ததாகவும் பிறகு நபும்ஸகமென்றதாகவும், பிறகு வேறுகலியாணம் பண்ணிக் கொண்டதாகவும் எழுதினால் வாசிப்பவர்களுக்கு வேடிக்கையாக விருக்கும், யாருக்கும் ஒருகஷ்டமுமிருக்காது. கதையை யெழுதுகிறவனும் பொய்சொல்லுகிறான், அப்படி யுண்மையாய் ஒருவருமில்லாததினால் ஒருவர்க்கும் கஷ்டமில்லை. எல்லோர்க்கும் இன்பமாகவே முடியும். அப்படிக்கில்லாமல் பூலோகத்தில் இந்த விஷயம் உண்மையாய் நடப்பதாயிருந்தால், அவர்களுக் கெவ்வளவு துக்கமுண்டாகாது? இதெல்லாம் சொல்லித் தெரியாது. அவரவர்களே யறிந்து கொள்ளவேண்டியது.

இராஜகோபாலையர் சாயங்காலம் கோர்ட்டிலிருந்து வந்தவுடன் அந்தக் கடிதத்தைக் காண்பித்தாள் காமாக்ஷியம்மாள். இராஜகோபாலையர் பிள்ளைக்குக்கூட அவ்வளவு செலவழித்ததில்லை. சேஷையர் படிப்பு விஷயத்திற்காக அவர் செலவு செய்தது ஆயிரம் ரூபாயிருக்கும்; மீனாக்ஷிக்காகவோ அதுவரையிலும் செலவு 7000-ரூபாயிருக்கும். 1000-ரூபாய் செலவழிதத பிள்ளையோ சுகமாகத் தன் பெண்டாட்டியுடன் காலங்கழிக்கிறான். 7000-ரூபாய் செலவழித்த பெண்ணோ தன் சுகத்தையுமிழந்து, நாயகனையுமிழந்து, இழப்பதற்கு மேலாகிய வேறொருத்தியைக் கலியாணஞ் செய்துகொள்ளவும் பார்த்து, தன் பெயரையுமிழந்து, மானத்தையுமிழந்து, சிரிப்பையுமிழந்து, புக்ககத்தையுமிழந்து, ஐயோ!—' வாசிப்பவரே! உமக்குப் பெண் இருக்கின்றதா? இருந்தால் உமக்குப் பெண்ணினருமையைப்பற்றி யானொன்றுஞ் சொல்லவேண்டாம். நீரே யறிவீர். இராஜகோபாலையர்பட்ட துயரத்தை. உமக்கும் பெண் இல்லையேயல் யானென்சொல்லியும் யாது பயன்? ஏதோ யாதொரு அர்த்தமுமில்லாமல் வெறுமனே சொல்லிக்கொண்டே போகிறானேயென்று என்னை இகழ்

ஸீர். ஆகையால் இருவழியும் பாவிப்புதலில் பய னின்மைபற்றி வாளாவிருவேன்.

மீனாளின் துக்கத்தைப்பற்றி யாதுசொல்வேன்? பழமன்னிகையின் மனத்தை யறிந்தவனுக்கு கொடியன்னி கையின் மனம் தன்னைப்பார்க்க இருமடங்கு என்றால் அறிந்துகொள்வான் எளிதாக. தன்னைத யறியாத வொரு வனுக்குப் பின்னைதத் தொன்றிவர்து சாமர்த்தியமன்றி யாதுமறியாள். ஆகவே, இராஜகோபாலயர் துக்கம் உமக் குத் தெரிந்திருந்ததேனா, அதைப்பார்க்கிலும் மீனாக்ஷியினது பதின்மடங்கென்பேன். (அன்றேல் சீனிநீர் பறுபனிப்பீராக என வாசிர்வதித்துச் சமாளிருப்பேன்).

இது நிற்க. அன்றையதினம் மாலை சுமார் 6-மணிக்கு இராஜகோபாலயர் தன் வேலைக்காரன் பெரியனைக் கூப் பிட்டு, 'வண்டியைக் கட்டிக்கொண்டுபோய் இந்தக் கடிதத் தைக்கொடுத்து, விருதாவை வீடு தெரியுமா, அவர் வீட் டிற்குச்சென்று, அவரை யழைத்துவா' என்றனர்.

வண்டிக்காரன் சென்று ஒன்றரைமணி நேரத்திற் கெல்லாம் விருதாவர்து சேர்ந்தனர். அந்தவர்க்கும் ம-ா-ா-ஸ்ரீ இராஜகோபாலயருக்கும் ஒரு சம்பாஷணை ஆங்கிலத்தில் நடந்தது. அதைத் தமிழில் மொழிபெயர்ப் பாம்.

இராஜ—என்னுடைய பெண்பிள்ளைகளுக்குத், தெரி யுமே!

விரு—ஆம்! ஆம்! மூன்றும் ஒருவருக்கேயோ என்னவோ கலியாணம் நடந்ததே!

இரா—ஆம்! நீங்கள்கூட வந்திருந்தீர்களே. என்னு டைய சம்பந்தியைத் தெரியுமே.

விரு—எனக்கு முக்கிய ஸ்நேகிதராயிற்றே அவர். அவரைத் தெரியாதிருக்குமா?

இரா—சாந்தி முகூர்த்தத்திற்குச் சென்றபொழுது நடந்த சமாசாரங்களெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்களே!

விரு—ஆமாம்! மிக்க விசனமாயிருக்கிறது.

இரா—அதற்கு ஒரு பாகத்திற்கப்புறம் அவர்கள் இக்கடித மெழுதினார்கள்.

என்று முதல் வந்த கடிதத்தைக் கொடுத்தனர்.

விரு—அதை வாசித்துப்பார்த்து 'சரிதான்' என்றார்.

இரா—இன்றைய தினம் சாயங்காலம் இந்த கடிதம் வந்தது.

விரு—(அதையும் வாசித்துப்பார்த்து) (புன்சிரிப்புடன்) சரிதான்.

இரா—இதற்கென்ன செய்யலாம்?

விரு—கலியாணம் எப்படியோ ஆகித்தான் விடும்போலிருக்கிறது.

இரா—அதைத் தடுக்கவேண்டுமே!

விரு—இந்த சட்டத்தில் அதற்கொன்றுமில்லை. ஏதேனும் இருக்கின்றதோ?

இரா—ஒன்றுமில்லை போலுந் தோன்றுகின்றது.

விரு—மான நஷ்டத்திற்காக ஸிவிலில் வியாஜ்ஜியம் செய்யலாம்.

இரா—பையனைக் கெடுத்ததற்காக மாஜிஸ்திரேட்டினிடம் போகலாம். பெண்ணையடித்ததற்காகவும் அவ்விடம் போகலாம்.

விரு—பெண்ணைக்கொண்டு ஜீவனாம்ச வழக்குச் செய்யலாம்.

இரா—அதெல்லாமிருக்கட்டும் இவனை விட்டால் இங்கே சாப்பாட்டிற்கு வழியில்லையோ?

விரு—அதற்காகவா? சொன்னேன் செய்யலாம் என்று.

இரா—எல்லாவற்றையும்விட முதலில் பையனைக் கெடுத்ததற்காக வியாஜ்ஜியஞ் செய்வோம். இது சரியாகி விட்டால் பிறகு ஸிவிலில் போகலாம்.

விரு—வியாஜ்ஜியத்திற்குப் போவானேன்? ஏதோ சமாதானமாய் விடலாமே? அப்புறம் உங்கள் பெண் ஸ்திதியை கவனியுங்கள்.

இரா—நீங்கள் சொல்வது சரிதான். ஆனாலும் சமாதானமாய்ப் போகக்கூடிய எல்லை கடந்துவிட்டது.

விரூ—சரி! நீங்கள் சொல்கிறபடியே வழக்குசெய்தால் பெண் அலியென்றதனாற் பெயரைக்கெடுத்துவிட்டதாகக் கூறவேண்டும் அவர்கள். பெண்ணை சாக்ஷியாகப் போட்டால்—

இரா—வரமாட்டாளென்று விடுகிறது. இரண்டு கக்ஷிகளைவைத்து விசாரிக்கட்டுமே.

விரூ—அவர்கள் வெளியே புறப்படுகிறதேயில்லையோ?

இரா—ஆம்! அது ஒருவிஷயம் இருக்கின்றதே! அவளையே வாதியாகவைத்தால்.

விரூ—அவர்கள் வாதியையே சாக்ஷியாகப்போட்டால்.

இரா—அப்புறம் பார்த்துக்கொள்வோம். அவர்கள் அநேகமாய்ப் போடமாட்டார்கள்.

விரூ—சரி. ஒருநோட்டீஸ் செய்வோம்?

இரா—என்னத்திற்கு! முதலிலேயே வியாஜ்ஜியம் ஆரம்பித்துவிட்டால் சரிதான்.

விரூ—சரி, நாளைதினம் கோர்ட்டில் பார்ப்போம். இன்னும் ஒருவிஷயம், அவளை வாதியாகப்போட்டால் அவளும் கோர்ட்டுக்கு வரத்தானே வேண்டும்

இரா—ஆமாம், சரி. என்ன தேவை நடக்கிறதோ அப்புறம் பார்த்துக்கொள்வோம்.

விரூ—நீங்களே வாதியாயிருப்பதானால் சரி. அதற்குமேல் நம்மாலானதைப் பார்ப்போம். இதற்கு சாக்ஷி.

இரா—மருத்துவச்சி பொருந்தியிருக்கிறாள், என்றிருக்கிறேன். மருமகப்பிள்ளையையே ஒரு சாக்ஷியாகப் போடுவோம்.

விரூ—சரி. நாளைதினம் கோர்ட்டிலெழுதுவோம். போய்வருகிறேன்.

இரா—ஆஹா!

என்றுவிட்டு உள்ளேயெழுந்து சென்று காமாக்ஷியம்மாளிடம் தான் பிரியாதுசெய்யத் தீர்மானிப்பதாய்ச் சொன்னார்.

'நன்றாயிருக்கிறது. வெட்கக்கேடுதான். நம்முடைய குடும்பவிஷயம் வெளிக்குந்தெரிந்து கோர்ட்டிற்குந் தெரிந்து சிரிப்பாய்ச் சிரிக்கவும்வேண்டும்' என்று விசனத்துடன் கூறினாள்.

'அப்படியில்லை. நாம்தாழ்ந்து கொடுத்துக்கொண்டே போனால் அவர்கள் இன்னும் மாஜிஸ்திரேட்டினிடமும் பிரியாது செய்வார்கள். ஆகையால் நாமே முதலில் ஆரம்பிக்கவேண்டும்!'

'என்னமாயிருந்தாலும் கோர்ட்டிற்கு இந்தவிஷயம் எல்லாம் போகக்கூடாது. நமக்கே அவமானமாயில்லையோ? அவர்கள் கலியாணம் பண்ணிக்கொள்கிறதை நிறுத்தப்போகிறதில்லை. நம்முடைய மீனாக்ஷியினின்றும் போன சுகம் போனதுதான்.'

'சுகம் போகட்டும். பெயரொன்று கெட்டபெயர் ஏற்பட்டுவிட்டதே! நம்முடையபெண்—அடடா! என்ன கஷ்டம்—எவ்வளவு கஷ்டப்பட்டோம்—பெண்ணைப்பெண்ணென்று வைத்திருந்தோம்?—ஆஹா! ஈசுவரா! நகை போனதும்—நாணயம்கெட்டதும்—சாந்தியானதும்—அடிபட்டதும்—அப்பாடா—' என்றுவிட்டு ஒன்றுஞ்சொல்லாமல் கீழேபடுத்துக்கொண்டார்.

'அடிதங்கம்! கல்யாணத்துக்கு சொல்லிவெச்சாப்பிலே யொத்தரும்வல்லே" என்றாள் அழகம்மாள், தஞ்சாவூரில் டெபுடிகலெக்டர் அகத்தில் முன்சமாசாரங்களெல்லாம் நடந்து 15-நாளைக்கப்புறம்.

'ரெண்டாம் கலியாணம் பண்ணிக்கிறதுன்னு யார்தாம் வருவா?' என்றாள் செல்லம்மாள்.

'என்னமோ? எல்லாம் விசாலாக்ஷியம்மாள் பண்ண ஏற்பாடு' என்றாள் தாயம்மாள்.

'பெண்டாட்டி யாத்தானே பெரியனுக்கான்' என்றாள் குட்டியம்மாள்.

'நல்லது கல்யாணந்தான் பண்ணாளே! அத்தனைகிட்ட இது என்ன ஒசத்தி' என்றாள் செல்லம்மாள்.

'ஊருக்கும் விரோதமா, ஒரு பெண்ணையும்கொடுத்துக் கிண்டு, என்னகலியாணம் வேண்டியிருக்கு?' என்றாள் அழகம்மாள்.

'அந்த பொண்ணு அலியாதே!' என்றாள் தாயம்மாள்.

அழகம்—முகத்திலே களையாகத்தான் இருக்கு. அதென்னமோ, அப்புறம் நெக்குத் தெரியாது.

செல்லம்—கலியாணம் பண்ணிகிண்டு சுகமாயிருக்கட்டும், அதுதான் நமக்கு வேண்டியது.

தாயம்—ஏண்டி! அத்தே! பிராது பண்ணியிருக்காங்களாமே சம்பந்தி.

அழகம்—நெக்கென்னதெரியும். செல்லத்தைக் கேட்டாத் தெரியும்.

செல்லம்—என்னாருக்கு. எங்கிட்டதானே எல்லாம் சொன்னாள்.

அழகம்—என்னமோ தெரியுமாக்கட்டுக்கேட்டேன்,

செல்லம்—என்னமோ முந்தநேத்திக்கிச் சொல்லிக் கிண்டிருந்தா. பிராதுபண்ணி யிருக்காளாட்டு.

அழகம்—என்னாத்திக்குப் பிராது.

செல்லம்—கோபாலன்வந்து சம்பந்தியை அவமானப் படுத்திப்பிட்டானாம். அதுக்காக பிராது செஞ்சிருக்கானாம்.

தாயம்—நம்ம கோபாலங்கூட என்னமோ பிராது செய்யப்போறானாம்.

அழகம்—என்னவேலே. வெறுமனே பிராதுசெய்யாட்டும்.

தாயம்—இப்போ வந்திருக்கிற பொண்ணுக்கேதவலே.

செல்லம்—பொன்னுநேசப்பாயிருக்கு வன்னா! அவ அப்பா கறுப்பு, அம்மா கறுப்பு அவமாத்திரம் சேப்பாயிருக்காளே அதென்ன?

அழகம்—அதுக்கென்ன? அதைப்போல ஆயிரம்பேப ரிருக்கா இப்போ. கம்ப கப்பராயன் கறுப்பு, அவம் பெண்டாட்டி சேஷி கறுப்பு, புள்ளையப்பார் செக்கச்செவேளாட்டு.

தாயம்—அது மாத்திரமா? புண்டரீகம் சேப்பு. அவ அம்படையான் கம்பி சேப்பு. பிள்ளையப்பாரு காக்காக் குஞ்சுபோல.

செல்லம்—இதுக்கெல்லாம் என்ன காரணம்?

அழகம்—என்ன காரணம்? பூர்வ ஜன்மாந்தரப்பலன் என்று இவர்களைப் பேசிக்கொண்டிருக்கவிட்டு நாம் முன் சொன்ன படுக்கை மறைக்குப் போவோம். அங்கே முன்னிருந்த சாமான்கள் இப்பொழுதொன்றுமில்லை. ஒத்தை ஒரு தகரப்பெட்டியில் சில புஸ்தகங்களைவைத்து அடக்கஞ் செய்துகொண்டிருந்தான் இராமஸ்வாமி.

'இந்தப் புஸ்தகம் வேண்டாம். இரண்டு மாதத்தில் இதிலென்ன வாசிக்கப்போகிறோம். இது வேண்டாம். இது இல்லாமலிட்டால் அவன் கோபித்துக்கொள்வான். மீதிப் புத்தகங்களெல்லாம் இங்கேயேயிருக்கட்டும். பெட்டியில் இடமில்லையே! இரயிலில் இடம் அகப்படுமோ?' என்று தன் தோழன் ஜோசாமியை நோக்கிக்கூறினான் இராமஸ்வாமி. 'இடத்திற்கென்ன குறைச்சல்? வேண்டிய இடம் சம்பாதித்துக்கொள்கிறேன். மூட்டைகள் கூடக் கொண்டும் அப்படி யதிகமில்லை. உன்பெட்டி யொன்று, படுக்கையொன்று. என் பெட்டி, படுக்கை, கூஜா, ஜாகவிளக்கு இவ்வளவுதானே?' என்றான் ஜோசாமி.

'இவ்வளவுதான் இப்பொழுது பட்டணம்போனால் இனி மேல் தீபாவளிக்குத்தானே?'

ஜோ—ஆமாம். உன்பாடு சவுக்கியம். போனவருஷத் திற்கு முந்திய வருஷம் ஒரு தீபாவளி. இந்த வருஷம் ஒரு தீபாவளி.

இரா—இனிமேல் அந்தப் பெண்ணைப்பற்றி பேசவேண்டாம். என் முதற் கலியாணத்தைப்பற்றிய விஷயங்களையெல்லாம் மறக்கவேண்டுமென்று பார்க்கிறேன், என் பெண்டாட்டியையும், என் இப்பொழுதுள்ள வேட்டகத்தையுமே ஞாபகம் வைத்துக்கொள்ளப் போகிறேன்.'

என்று இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது 'சாமி!' என்று யாரோ ஒருவர் கீழே கதவைத்தட்டினார், கீழேயிருந்தவர் கதவைத்திறந்தவுடன் 'சம்மன், சாக்ஷி சம்மன். இராமஸ்வாமி ஐயர் இருக்கிறாரா?' என்று கோர்ட்டு சேவகனொருவன் விசாரித்தான்.

'உயர இருக்கிறார்' என்றது தாயம்மாளின் குரல்.

'இப்படியேறிவா?' என்றான் ஐயாசாமி.

உடனே சேவகன் ஏறிவந்தான்.

'என்னது?'

'திருப்பாப்புலியூரிலே ஏதோ ஒரு மாஜிஸ்திரேட்டு கேஸில் தங்களை சாக்ஷியாகப் போட்டிருக்கின்றார்கள்' என்றான் சேவகன்.

இதென்ன கூத்து! அட கஷ்டகாலமே! வருகிற புதன்கிழமை யாக்கிபோயிற்றே, இதற்கென்ன செய்யலாம்?' என்று இராமஸ்வாமி யோசிக்கும்பொழுது, ஐயாசாமி 'அந்தச் சம்மனுக்குக் கையெழுத்துப்போட்டு சேவகனைப் போகச் சொல்லு, வீணாய் அவன் என்னத்திற்குக் காத்திருக்கின்றான்' என்றவுடன் சம்மனில் கையெழுத்துப்போட்டு சேவகனை யனுப்பினான் இராமஸ்வாமி.

இரா—இதற்கென்ன செய்கிறது! நான் பட்டணம் இப்பொழுது வரமுடியாது. நீ போ.

ஐயா—நீ ஏன் கேட்கிறாய்? திருப்பாப்புலியூர் போய் திருப்பாப்புலியூருக்கு இங்கிருந்து பட்டணம் போவதும் பட்டணம்போய் அங்கிருந்து திருப்பாப்புலியூர் வருவதும் ஒன்றுதான். ஆகையால் பரப்பமே.

இரா—என்ன விஷயத்திற்காக சாக்ஷியாகப் போட்டனர்? நான் என்ன அவர்களுக்கு அநுகூலமாய்ச் சொல்லப்போகிறேன்.

ஐயா—(புன்சிரிப்புடன்) உன்னைக் கேட்பார்கள் நேரிடப் பார்த்தாயா வென்று

இரா—கேட்டால் நான் பார்க்கவில்லையென்று விடுவேன். மொத்தம் இரண்டு, நான் சந்தேகப்படுவதற்குள்ள காரணம் ஒன்று, ஆகிய மூன்றுமே போதுமே.

ஐயா—அவர்களில் அநேகர்வந்து இல்லையென்பார்களே?

இரா—சாக்ஷி விக்கியாசப்பட்டால், அவனையே நேரிலழைத்துக் கேட்கட்டுமே! அதுதான் சரி. நம்முடைய பேரில் குற்றப்பத்திரிகை வாசித்தபிறகு அவளை சாக்ஷியாக் கொடுவோம். வரட்டுமே கோர்ட்டுக்கு!

ஐயா—செய். நீ செய்த எவ்வளவோ புத்தியீன காரியங்களில் இதுவுமொன்றாகும். நீ சந்தேகமாய்ச் சொன்னாயோ, உன் வழக்கு தோற்றுவிடும், உன் தகப்பனுக்கு அபராதம் விழும்.

இரா—நான் நிச்சயமாய்ச்சொல்லி, நான் சொல்வது பிழையென்று ஏற்பட்டால்.

ஐயா—அதற்கு சண்டைக்கு முந்தியே நிச்சயமாய் ஏற்படுத்திக்கொள்ளுகிறதுதானே! நீயானாலும் அவசரக்காரன். ஆகவே புத்திமட்டு.

இரா—அபராதம் விழுந்தால் விழுகிறது, நான் பொய் சொல்லி பகப்பட்டுக்கொள்ளமாட்டேன்.

ஐயா—அப்பொழுது ஏன் உன் தாயாரினிடத்தில் பொய்சொன்னாய்?

இரா—இரண்டாவது கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறதற்காக. உரக்கச் சொல்லாதே! அவள் காதில் படும்.

ஐயா—அப்படியென்றால் காதில் படாதென்ற எண்ணமோ? கேஸ் முடிந்தவுடன் எப்படியும் தெரியத்தான் போகிறது.

இரா—தெரிந்தவுடன் சண்டைதான். எப்படி யாரம்பித்து எப்படி முடிகின்றது பார்த்தாயா? தாயாருக்கும் பின்னைக்கும் மனஸ்தாபமாய் முடியும். ஒன்றில் சுகமிருந்தால் மற்றொன்றில் கஷ்டம். அல்லது இன்றையதினம் இராத்திரி அப்பா கேட்பரே, என்னசாக்ஷி சொல்வாயென்று. அதற்கென்னபதில் சொல்லலாம்.

ஸீயா—உண்மையைச் சொல்லிவிடுகிறது?

இரா—அம்மாவிற்கும் எனக்கும் சண்டை யுண்டாகி விடுமே!

ஸீயா—அது எப்பொழுதாகிலும் உண்டாகத்தானே வேண்டும்.

இரா—என்ன கஷ்டம்! இரண்டாவது கலியாணம் பண்ணியும் என்னுடைய கஷ்டம் என்னை விடவில்லையே! முதற் கலியாணத்தோடு இருந்தால் பெண்டாட்டியோடு மாத்திரம் மனஸ்தாபம். இப்பொழுது கலியாணமாகிவிட்டபடியால் தாயாரோடு மனஸ்தாபம். தகப்பனாரோடும் மனஸ்தாபம் உண்டாகும்போலிருக்கிறது. இன்றையதினம் சாயங்காலம் அப்பா வந்தவுடன் கேட்பாரே? அவருக்கு என்ன சொல்கிறது? என்னை ஏன் சாக்ஷியாகப்போட்டனர்; அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லிவிடுகிறேன். இருக்கட்டும் நிச்சயமாய்ச் சொல்கிறேன். என்று தன் மனத்தை யொருவழிப் படுத்திக்கொண்டு அன்றிரவு தன் தகப்பனார் 'உன்னை சாக்ஷியாகப் போட்டிருக்கிறாரே? நீ யென்னசொல்லப்போகிறாய்?' என்றதற்கு 'நான் பார்த்ததைக் கண்டித்துச் சொல்லிவிடுவேன்' என்றான். அன்றிரவே தொழிலாளிருவரும் பட்டணம் போயினர். புதன்கிழமை விசாரணையானபடியால், செவ்வாய்க்கிழமை சாயங்காலம் வண்டியில் பட்டணம்விட்டுப் புறப்பட்டு திருப்பாப்புலியூர் வந்தான் இராமஸ்வாமி. இவன் வந்த இரண்டுமணி நேரத்திற்கெல்லாம் டெபுடிகலெக்டரும் தஞ்சாவூரிலிருந்து வந்தனர். புதுப்பாளையத்தில் இவர்களுக்குத் தெரிந்த ஒரு வீட்டில் இறங்கினார்கள். இரா

சுவாமி வரும்பொழுதே பட்டணத்திலிருந்து 'மக்நார்டன்' என்னும் பேர் பெற்ற ஆங்கிலேயத்துரை யொருவனை யழைத்துவந்தான் தன்பக்கம் வாதிக்கும்பொருட்டு.

விசாரணைக்கு முதனாள் இராத்திரி மீனாக்ஷிக்குத் தூக்கமென்பதே கிடையாது. இருதலைக் கொள்ளிக்குள்ளகப்பட்ட எறும்பு என்பதை யறிவீர்கள். அந்தப்பக்கம் போனால் நெருப்பு. இந்தப்பக்கந் திரும்பிவந்தாலும் நெருப்பு. கீழேவிழுந்தால் உயிர்போய்விடும் அதேமாதிரியாக புக்ககமோ விரோதம். பிறந்தகத்திலோ துன்பம் இந்தவழக்குச் செய்வதில் சிறிதேனும் அவளுக்கிஷ்டமேயில்லை. அவர்கள் கெட்டவர்களென்றாலென்ன? நல்ல ஸ்திரீயென்றாலென்ன? போனது மெப்படியும் போய்விட்டது, வழக்கிலே யென்ன லாபம்? ஜெயித்தது என்றே வைத்துக்கொள்வோம், அதனுக்கு ஏதோ அபராதம் போடப்போகிறார்கள். தனக்கு சுகமேதாவதுண்டா? தோற்றுப்போய்விட்டதோ அதைவிட அவமானம் ஒன்றுமில்லை, வீட்டைவிட்டு வெளியில் எக்காலத்தும் புறப்படக்கூடாது. கலியாண மஹோத்சவங்களில் வெளியிலும் புறப்படப்படாது. யார்முகத்திலும் விழிக்கக்கூடாது சாப்பிடுவதும் தன்னறையில்வந்து உட்காருவதும் புஸ்தகத்தை வாசிப்பதும் தூங்குவதும் இவ்வளவுதான் வேலை. இந்தவேலையும் அறைக்குள்ளே இருந்துகொண்டே செய்யவேண்டும். தாயார் தகப்பனார் ஊர் போனால் தான்மாத்திரம் வீட்டிலேயே இருக்கவேண்டும். தவறி வெளியில்போய்விட்டால், எங்குபோனாலும் முதற்பேச்சு இவளைப்பற்றித்தான்.

இவளுடைய நிலைமையைவிட பால்யத்தில் விதவையானவர்களின் நிலைமை பதின்மடங்கு சுகம். இருவருக்கும், மறுகலியாணம் என்பது கிடையாது. விதவையோ வெளியில் புறப்பட்டால் 'பாவம் இவளகமுடையான் இவ்வளவு இளம்பிராயத்தில் இவளைவிட்டுவிட்டுப் போனான்' என்று பார்த்தவர்கள் இரக்கப்படுவார்கள். இவள் புறப்பட்டாலோ 'நல்ல இடத்தில் கொடுத்திருந்தது இவளை. அகமுடையானுடன் சண்டைபோட்டுக்கொண்டு இதோ

ராக், பிறந்தகத்தில் வந்திருக்கிறாள்' என்று எல்லாரும் இவளை இகழ்வார்கள். விதவையோ கலியாணத்திற்கும் உற்சவங்களுக்குஞ் சென்றால் தன்னைப்போன்ற விதவைகளோடு சேர்ந்து வேடிக்கைபார்க்கலாம். இவள் யாருடன் சேர்வது? இவளைப்போல் இரண்டுமற்ற மனுஷியாள் யாரிருக்கின்றனர். கைம்பெண்சாதியோ ஆதரவுடையாளில்லாத துன்பத்தைப் பெற்றிருந்தாலும், எல்லாருடனும் பேசவும் கோவிலுக்கு கச்சேரிக்கையாப்போகவும், ஆறு குளங்களுக்குஞ் செல்லவும், சென்றவிடங்களில் தன்னிஷ்டப்படிக்கு சம்பாஷிக்கவுமான இவ்வித சுகங்களைப் பெற்றிருக்கிறாள். இவளுக்கு முன்சுகமுமில்லை. பின்சுகமுமில்லை

ஆகையால், இவளுயிரோடிருப்பது நல்லதா? சாவது நல்லதா? உயிரோடிருப்பதனால் முன் கஷ்டங்களெல்லாம் தான் படுவதுந்தவிர தன்னை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் கஷ்டம். இவளைப் பார்த்தபொழுதெல்லாம் இவளுடைய ஞாபகங்கள் வருவதினால் துக்கமுண்டாகும். இவள்பொருட்டு அவர்களும் விசனமடைந்து காலாவத்தியில் மெலிவார்கள். எங்கேயாகிலும் ஊர்போகவேண்டியிருந்தால் இவளைவிட்டுப் போகவேண்டுமே என்று தயங்குவார்கள். இறப்பதினால் வருவதுமுழுவதும் இவளுக்கும் இவளுடன் சேர்ந்தவர்களுக்கும் துன்பம் போவதினால் விதேசபுத்திரனைக்கு இவள் சுற்றத்தவர்கள் மிகவும் விசனப்படுவர். அப்புறம் சாதாரணமாய்விடும். தனக்கும் உயிர் போவதாகிய ஒரு நிமிஷம் பிராணகஷ்டத்தைத் தவிர அப்புறம் ஒருவித கஷ்டமுமில்லை, எல்லாம் சுகமே

செத்தபிறகு சுகம்! கைம்பெண்பிறந்தவர்க்கெல்லாம் கஷ்டமனுபவித்தவர்களோ? கஷ்டம்? துன்பம்? இங்கேயிருக்கிற கஷ்டத்தைவிடவா? வண்டியின் சக்கரம் பூமியில் படும்பாகத்தில் இருக்கும் ஒரு சேற்றையல்ல, மேய்பக்கம் சேர்ந்தாலும் மேலெழும் விதம்போல் கஷ்டங்களைப் பூர்த்தியாயனுபவித்து மொருவனுக்கு அப்புறம்வருவது சுகமே தவிர கஷ்டமேயில்லை. செத்தபிறகு கஷ்டம்வருவதாயிருந்தபோதிலும் அக்கஷ்டம் பூலோகத்தில் பிறந்ததும் இப்

பொழுது பிறக்கிறதும் இனிமேல் பிறக்கப்போகிறதுமாகிய எண்ணப்பிராணிகளும் அநுபவிக்கப்போகிறதாகிய கஷ்டத்தினாலாகிய அக்கஷ்டத்திற்கு ஒருவரும் பாத்திரப்படவேண்டாம்.

இவ்வளவு எண்ணங்களும் மீறுகிறதற்கு அந்நிரவு உண்டாயின. கடைசியாக அவள் நிர்மாணித்தது வண்ணெரிணையில் சாவோடிருந்தேன் பார்க்கிறது. வண்டியுடைய பக்கம் தெருவாசில் அப்புறம் போகிறது, தோல்வியேன், எதிரிருக்கும் குளத்தில் விழுந்து இறக்கிறது' என்பது தான்.

மனுஷர்களுக்குப் பிறந்து அநுபவிக்கும் பல கஷ்டங்களுள் இதுபோன்ற கேள்வியைப்பற்றி விசாரிப்பது நன்று! விசாரிப்பவர்களுக்கும் விசாரிக்கப்படுபவர்களுக்கும் கஷ்டம். பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் வேடிக்கை. அதைப் பற்றிச் சொல்பவர்களுக்கு வெட்கம். ஆகவே எனக் கிப்பொழுது வெட்கமாயிருக்கின்றது.

நல்விசாரணை! இதுபோல் கேள்வி யெங்கேயாகிலும் கேள்விப்பட்டதுண்டா? படித்ததாகிலுமுண்டா? பார்த்ததாகிலுமுண்டா? கதைகளிலாவது வாசித்ததுண்டா? நானொருவரும் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை, படித்ததுமில்லை, கதையில் வாசித்ததுமில்லை.

பெண் அழியாமல் அதை மறைத்துக் கலியாணஞ்செய்தார்களாம். அதை மணமுடையான் பார்த்துவிட்டானும் பார்த்து வெளியில்சொன்னதும் சொன்னதன்பேரில் பெண்ணின் தகப்பனுக்கு எழுதினார்களாம். எழுதினதின்பேரில் கேளாம், இதென்ன வேடிக்கையா விது?

எனக்கு விசாரணையைப்பற்றிச் சொல்ல வெட்கமா யிருக்கின்றது. நானெழுதுவது கதையாகவிருந்தால், இவ் விசாரணையை விட்டிடாதிருப்பேன். உண்மையைக் கூறுவது எமது தொழிலாதலால் நடந்ததைக் கூறுவோம். ஆயினும் எவ்வளவு சுருக்கமுடியுமோ அவ்வளவு சுருக்கலாம் என்ப தொழிற்றன்னைக் 'குன்றக்கூறல்' என்பது எமது குற்ற மாகுமேயொழிய 'மிகைபடக்கூறல்' என்பதேயுண்டாகாது.

விசாரணை யன்றையதினம் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டிலுள்ள கும்பலுக்கு அளவில்லை. பாதிப்பேருக்கு விசாரணை நடப்பது முழுவதுந் தெரிந்தது, சிலபேருக்குக் காதில் கேட்டது, இன்னுஞ் சிலருக்கு இரண்டு மில்லாதபடியால் தாங்களே யொருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தனர். இதையெல்லாம் நீக்கும் பொருட்டு மாஜிஸ்திரேட்டார் சொக்காய் தலைக்குட்டை யிரண்டுமில்லாதவர்களை வெளியில் துரத்திவிடென உத்தரவளித்தனர். அப்படிச் செய்தும் கோர்ட்டு முழுவதும் தலைக்குட்டை மயமாகவே யிருந்தது.

விசாரணைக்கு முந்தி மக்நார்டன் எழுந்திருந்தார்.

'இந்தக்கேஸில் இவர்கள் கூறுவது உண்மையாயிருந்த போதிலும், எல்லாம் இவரது பெண்ணைப்பற்றியே யாகையால், பெண் வாதியாயாவது இருக்கவேண்டும், அல்லது சாக்ஷியாகவாவது வரவேண்டும். இரண்டுமில்லாதது மிக்க வாச்சரியமே!'

வியூ—எமது சிநேகிதர் இதைப்பற்றிக்கூறுவது பிழை. எம் பக்கம் சாக்ஷிசொல்பவர் இவரென்று தீர்மானிக்கக்கூடியது யாமேயொழிய இவர்கள் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை.

மக்—யாம் கூறவந்தது என்னெனில் எப்பொழுது இவர்கள் பெண்ணை வாதியாகவாவது சாக்ஷியாகவாவது போடவில்லையோ, அப்பொழுதே பெண் இன்ன ஸ்திதியுள்ளவள் என்பது யாம் கூறாமலே கோர்ட்டார் அறிந்துகொள்ளலாம்.

வியூ—விசாரணை யாரம்பிக்கு முன்னமேயே கோர்ட்டாரவர்களுடைய அபிப்பிராயத்தை ஒருவழிப்படுத்துவது எவ்விதத்தேனும் நியாயமன்று.

மக்—கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தை யொருவழிப்படுத்த யாம் வரவில்லை. பெண்ணைப்பற்றிய கேஸில் பெண் சம்பந்தப்படாதது எமக்கு விந்தையாகத் தோன்றியபடியால் அதற்குக் காரணங்கேட்டோம்.

வியூ—அதற்குக் காரணம் இப்பொழுது கேட்டதும் பிழை, நாமும் சொல்லோம்.

மக்—நீர் சொல்வீரா மாட்டீரா வென்பது இப்பொழுது கேள்வியன்று; காரணமின்னதென்பது.

மாஜிஸ்—இதற்குக் காரணம் கேட்கக்கூடாது.

பிறகு விபூ கேள்வி யாரம்பித்தார்.

“இந்தக்கேஸில் நான் வாதிபக்கம் வக்கீலாய் வந்திருக்கவே மாட்டேன். பிரதிவாதியோ டெபுடிகலெக்டர், டெபுடிகலெக்டரிலும் முதல்தர டெபுடிகலெக்டர்; அதினும் என்னோடு வாசித்தவர், எனக்கு பால்ய சிநேகிதர், இப்படிப் பட்டவரோடு விரோதிப்பதில்யாதுபயன்? அன்னையுமல்லாமல் பெரிய உத்தியோகஸ்தராயிருந்தபோதிலும் என்னிடத்து மிக்க சிநேகமுடையவரா யிருந்தபோதிலும் அவர் செய்த பிழையோ பெரும்பிழை. என்னவையா? சாயுமீர்களா நீங்கள்? கிரட்சியென்பது ஒரு மனுஷனுக்கும் ஸ்திரீக்கும் தத்தம் வாழ்நாட்களிலெல்லாம் மிக்க மகா சந்தோஷமானதன்றோ? அந்த உன்னே ஒருபெண்ணை பதினொன்று வயதுள்ள ஒரு பெண்ணை, தன்னிடத்தில் விடப்பட்ட வொருபெண்ணை, அன்றிரவு முழுதும் சுகமனுபவிக்கவும் என்றெண்ணியிருந்த வொருபெண்ணை, அதுவரையிலும் மிகவும் பக்ஷமாக நடத்தப்பட்ட வொருபெண்ணை, என்னசெய்கிறான் அவர் குமாரன்?—”

இவர்சொல்வதை மக்கார்டன் துரை தடுத்து ‘இப்பொழுது குற்றவாளியா இல்லையாவென்பது டெபுடிகலெக்டரையேயொழிய, அவரது குமாரனையன்று. ஆகையின் அவரது குமாரனைப்பற்றி யாதுமின்று கூறக்கூடாது’ என்றார்.

விபூ—ஒருகேஸ் என்றிருந்தால் அதற்குசம்பந்தப் பட்டவற்றை யெல்லாமெடுத்துக் கூறவேண்டியேயொழிய—

மக்—அந்தக்கேஸுக்குச் சம்பந்தப்பட்டதைப் பற்றி மாத்திரந்தான் கூறலாம். அவன்பிள்ளை துட்டன், பேரன் துட்டன், இதையெல்லாம் இவரை யார் கேட்டார்கள்? பிள்ளையும் பேரனும் துட்டனாயிருந்தால் அப்பனிதனும் துட்டனாய் விடுவானோ?

லிபூ—அப்பெண்ணின் பரிதாபப்படத்தக்க நிலைமையை யெடுத்துக்கூறினன்.

மக்—அதுவும் சரி. பெண்மெலிந்து போயிருந்தால், அதற்கு டெபுடிகலெக்டர் என்னசெய்வார்? பெண்ணை யவர்பிள்ளை யடித்தால் அவர் என்னசெய்வார்? நன்று, நன்று.

லிபூ—பேசும்பொழுது தடுப்பதை யிதுவரையிலும் நான் கண்டதில்லை

மக் இதைப்போல் பேசுவதை நானுங் கண்டதில்லை.

மாத்—லிபூசொல்வதைச் சொல்லட்டும்.

லிபூ வாரம்பித்தார்.

‘பெண்ணை வேண்டுமென்றால் வந்துபாருங்கள். இதே நிலையில் ஒருமாதம் இன்னுமிருந்தால் கஷ்டம். அன்னம் சிறிதேனும் இறங்குகிறதில்லை. எப்பொழுதும் அழுதுகொண்டே யிருக்கிறாள். ஏதாவது பேசுவோமென்றாலும் பேசுகிறதில்லை புஸ்தகத்தை யெடுத்துப் படிக்கிறதுமில்லை. படுக்கையிற் படுத்துறங்குகிறதுமில்லை. இலையிலுட்கார்ந்து உண்கிறதுமில்லை. தரையிலுட்கார்ந்து பேசுகிறதுமில்லை. அம்மானை யெடுத்து ஆடுகிறதுமில்லை. சதாகாலமும் துக்கித்துக்கொண்டே யிருக்கிறாள்.

‘இவ்வளவும் யாரால்? டெபுடிகலெக்டர் பிள்ளையாலா? சிறிதேனுமில்லை. அகமுடையான் அடித்துப் பெண்டாட்டி இளைக்கிறதாயிருந்தால் எத்தனையோ பேர் இளைத்துப் போயிருப்பார்கள். அப்படியடித்த அவனும் யார் சொல்லி யடித்தான் என்று நினைக்கிறீர்கள்? பூலோகத்தில் பேசப்படும் பாஷைகளெல்லாவற்றிலும் எழுதப்பட்டிருக்கும் எல்லாப் புத்தகங்களிலும் எங்கேயாகிலும் திரட்சியுள்ள கணவன் கண்மணியை யடித்ததாக வாசித்ததுண்டா? வாசித்ததுண்டா? என்கிற கேள்வியும் பட்டிருக்கமாட்டீர்கள், பார்த்துமிருக்கமாட்டீர்கள் என்பது நிச்சயம்.

‘ஆகவே, எங்குமில்லாததுமான மனைவியை யடிப்பதாகிய காரியத்தை இவன் சுயேற்சையாய்ச் செய்வனோ? எல்லாருக்குமுள்ள ஆசை யிவனுக்குமில்லையோ? எல்லாருக்கு

மேலாகப் படித்தவனன்றோ இவன்? அழகுள்ளவன், படித்தவன், சாது, பெரிய வம்சத்தில் பிறந்தவன், பக்ஷமுள்ளவன், ஏனிக்காரியத்தைச் செய்தான்? பதிலும் வேண்டுமோ? உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கவில்லையா? தகப்பனார் தூண்டுதலில்லாமல் செய்வாரா அவன்?

'என்னத்திற்காகத் தகப்பனார் அவ்விதஞ் செய்யவேண்டும்?

'சிலமனுஷ்யர்களுக்கு இன்னாருஞ் சிலர்பேரில் காரணமில்லாமலே விரோதமுண்டாகின்றது. 'எனக்கு அவனைக் கண்டால் பிடிக்கிறதில்லை' என்கிறோம். ஏன்? நமக்கே காரணந்தெரியாது. அப்படிப்பட்டவரைச் சேர்ந்தவர் கோபாலஸ்வாமி ஐயர். ஏதோ காரணத்தினால் கலியாண ஆரம்பம் முதற்கொண்டே இராஜகோபாலையர் பேரில் ஒருவிதமான அருவருப்பு உண்டாயிற்று அவருக்கு, சரியான காலத்தில் கலியாணத்திற்கு வரவில்லை, ஏனென்றால் ஏதோ சில தந்திகளைக் கொண்டுவந்து காண்பித்தனர், யாரடித்தனரோ? ஈசுவரனுக்கே வெளிச்சம். பாதிகலியாணத்தில் பிள்ளையைக் கொண்டுபோய் ஒளித்துவைத்துக்கொண்டு 'காணோம்' என்றனர். கிருகப்பிரவேசத்திற்கு ஒன்றுந் தயார்செய்யாமல் பழியை யார்மேலேயோ போட்டனர். கடைசியாக சாந்திமுகூர்த்தத்திற்கும் பிள்ளையினிடத்தில் சொல்லி படிக்கச் செய்தனர்.

'சிலபேர்களுக்கு விஷமஞ் செய்வதென்றால் மிக்க ஆசை. தங்களுக்கு ஒரு லாபமுமின்றியே வேண்டிய விஷமமெல்லாஞ் செய்வார்கள். ஒதெல்லோ நாடகத்தில் டெஸ்டிமோனாவுக்கும் ஒதெல்லோவுக்கும் மனஸ்தாபத்தை யுண்டாக்கியதில் இயாகோவுக்கென்ன லாபம்? ஹீரோவுக்கும் க்ளாடியோவுக்கும் விரோதம் உண்டுபண்ணியதில் ஜான் பிரபுவுக்கென்ன லாபம்? இராமஸ்வாமிக்கும் மீனாக்ஷிக்கும் விரோதம் உண்டுபண்ணுவதில் கோபாலஸ்வாமி ஐயருக்கென்ன லாபம்? இராஜ்ஜியத்தைக் கைக்கொண்டு பிரஜைகளைத் துன்பப்படுத்தியதும் போதாமல், டாமேன் என்ன செய்தான்? சொற்ற உபத்திரவம் பொறுக்கமாட்டாமல்

ஜெயிலிலுள்ளவர்களை யெல்லாம் வெட்டிவிடச்சொன்னான். கலியாணத்திற்கும் சரியாய்வராமல் பிள்ளையையொளித்து, கிருகப்பிரவேசமும் சரியாய்ச் செய்யாமல் பிள்ளை மூலியமாய்ப் பெண்ணையடித்து, ஆகிய இவ்வளவு துன்பங்களும் போதாமல், டெபுடிகலெக்டர் என்னசெய்தார்? வேறுகலியாணம் பண்ண ஆசைகொண்டு பெண் அலி என்றார்.

'பெண் அலியாம்! வெளியில் கிளம்புவதற்கும் வெட்கமாயிருக்கின்றது இராஜகோபாலையருக்கு. இவ்வளவு அவதூறினால் அவருக்கு உண்டாகிய அவமானம் நீங்கள் டெபுடிகலெக்டருக்குப் போடப்போகிற சொல்பரூபாய் அபராதத்தினாலாவது வேறு எவ்வித சிக்ஷையினாலாவது நீங்காது. இதைப்போல் இனிமேல் ஒருவரும் செய்யாதபடி அவ்வளவு அதிகமாய் சிக்ஷிக்கவேண்டும்.

'பிரதிவாதி பெரிய உத்தியோகஸ்தரென்று கிலேசப்படவேண்டாம். அவருடைய பெரிய உத்தியோகமே, அவரை யின்னுமதிகமாய் சிக்ஷிப்பதற்குக் காரணமாதல் வேண்டும்.

'இப்பொழுது வரும் சாக்ஷிகளினால் அவர் குற்றவாளியென்று தெரிந்தால் கோர்ட்டாரவர்கள் அவரைத்தகுந்தபடி சிக்ஷிக்கவேண்டும்.'

இதற்குமேல் வாதி விசாரணை யாரம்பித்தது.

இராஜகோபாலையர். அவர் சொன்னதாவது! 'நான் திருப்பாப்புலியூரில் வக்கீல். 20-வருஷமாய் வக்கீல்வேலையிலிருந்து வருகிறேன். எனக்கு இரண்டுபேர் குழந்தைகள். பிள்ளை—1. பெண்—1. பெண்பிறந்தவுடன், அறையிலிருந்தவர்களெல்லாரும் பெண் பிறந்தது என்றார்கள். 10-வது நாளைக் கப்புறம் நானே நேரில் பார்த்தேன். பெண்தான் நிச்சயமாய்ச்சொல்வேன். நபும்ஸகமல்ல, மருத்துவச்சியும் பெண்தான் என்றாள், பெண்ணுக்கு 12 வயதில் கலியாணஞ்செய்தேன். ஒருவருஷம் வரனுக்கலைந்தேன். கடைசியாய் டெபுடிகலெக்டர் குமாரனுக்குக் கொடுத்தேன். பையன் நல்லவன், பையன் பெண்ணையடித்திருப்பன் என்று

எனக்குத் தோன்றவில்லை. பையன் அடித்தபிறகு மயக்கமாய்ப் படுத்துக்கொண்டான். கோபாலஸ்வாமி அய்யர் 'பெண் பையனுக்கு விஷம் வைத்துக் கொன்றுவிட்டாள்' என்றார்.'

மக்—அந்த விஷயம் இப்பொழுது கேட்கக்கூடாது, அதற்கும் இந்தக்கேஸுக்கும் சம்பந்தமில்லை, இந்தக்கேஸைப்பற்றி மாத்திரம் தான் கேட்கவேண்டும்.

வியூ—இந்தப்பெண்ணைப்பற்றியெல்லாம் கேட்பேன்,

மக்—நான் ஒவ்வேன்.

மாஜி—இந்த கேஸுக்குச் சம்பந்தப்பட்டவைகளை மாத்திரந்தான் கேட்கலாம்,

பிறகு கேட்டதின்பேரில் இராஜகோபாலையர் ஆரம்பித்தார். 'இந்தக்கடிதம் எனக்கு நேரே கிடைக்கவில்லை. சேவகன் மூலமாகக் கிடைத்தது, நான்வாசித்தபொழுது என் பக்கத்தில் 10, 15, பேர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு நான் சொல்லவில்லை. மறுவிவாஹக் கடிதங்கண்டதும், எல்லாரும் என்னைவந்து 'ஏன் அவன் மறுவிவாஹம் செய்துகொள்ளுகிறான்?' என்றனர். அதற்குமேலிக்கடிதத்தைக் கொண்டுவந்து காட்டினேன். இந்த சமாசாரம் இப்பொழுது ஊர் முழுவதும் தெரிந்துவிட்டது,

மக்நார்டன் எழுந்திருந்து தாம் வாதியைப் பிறகு விசாரிப்பதாகக் கூறினார்.

பிறகு சாக்ஷி விசாரணை யாரம்பித்தது. முதல் சாக்ஷி யாரம்பித்தார். 'என் பெயர் இராமஸ்வாமி அய்யர், எனக்கு வயது 21 இருக்கும் நான் பட்டணம் லாகாலேஜில் வாசிக்கிறேன். எனக்கு இராஜகோபாலையரைத் தெரியும். அவர் பெண் மீனாக்ஷியையுந் தெரியும்.

வியூ—அவர்பெண் மீனாக்ஷியையுந் தெரியுமா?

இராம—தெரியும்.

வியூ—மீனாக்ஷியவர்பெண் என்பது தெரியும்?

இராம—அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

வியூ—ஆனால் நிச்சயமாய்த் தெரியாதோ?

இராம—அவர்பெண் என்று எனக்கென்னமாய்த் தெரியும்?

வியூ—அவருடைய பெண்ணோ வேறு எவருடைய பெண்ணோ என்பது உனக்குச் சந்தேகம்?

இராம—ஆம்.

வியூ—மற்றப்படி அவள் பெண் என்பதில் சந்தேகமில்லை?

இராம—பெண் அன்று என்பதில் சந்தேகமில்லை.

வியூ—என்ன ஐயா? இதுவரையிலும் மீனாக்ஷியைப் பற்றிப் பேசும்பொழுது. பெண், பெண் என்றீர். இப்பொழுது அன்று என்றீர்.

இராம—வழக்கத்தில் மீனாக்ஷியைப் பெண் என்கிறார்கள். ஆகையினால் நானும் பெண் என்றேன்!

வியூ—ஆனால் ஜனங்கள் சொல்கிறபடி சொல்வது உன் வழக்கம்?

இராம—சில விஷயங்களில்.

வியூ—உம்முடைய அபிப்பிராயத்தில் பெண் அல்லவென்று தோன்றுகிறது?

இராம—ஆம்.

வியூ—உம்மைத்தவிர வேறு எவரும் பெண் என்கிறார்கள்?

இராம—இல்லை. நானும் இன்னுஞ் சிலருந்தவிர.

வியூ—சிலர் என்பவர் யார்?

இராம—எனக்குப் பெயர் தெரியாது. எனக்கு இரண்டு கடிதங்கள் எழுதியவர்கள்.

வியூ—அவைகளைக் கொண்டுவந்திருக்கிறீரா?

இராம—இல்லை.

வியூ—கடிதங்களெழுதியவர் இன்னவரென்பது உமக்குத் தெரியாது?

இராம—முதற்கடிதம் எழுதியவர் இன்னவரென்பது தெரியாது.

வியூ—இரண்டாவது கடிதம்?

இராம—அவளே யெழுதியது.

வியூ—அவளே, 'அவள் பெண்ணல்ல' என்று எழுதிக் கொண்டாளோ?

இராம—ஆம்

வியூ—உம்மிடத்தில் வந்தவ்வாறு சொல்லவேண்டிய காரியம்?

இராம—என்னிடத்தில் சொல்லவில்லை. கடிதம் எழுதினாள்.

வியூ—கடிதத்தை எழுதி உம்மிடத்தில்கொடுத்தாளா?

இராம—என்னிடத்தில் கொடுக்கவில்லை. அந்த உள்ளே யொரு கடிகாரம் இருந்தது. அதற்குள்ளே வைத்தாள்.

வியூ—உம்மிடத்தில் கொடுப்பதற்கு வெட்கம்போலும்?

இராம—என்னவோ.

வியூ—கடிதத்தை கடிகாரத்தில் கொண்டுபோய் வைத்தாள்.

இராம—வைத்தாளோ என்னவோ எனக்குத் தெரியாது. கடிகாரத்தின் கிட்டப்போய் நின்றுகொண்டு கடிதத்தை யெடுத்தாள்.

வியூ—எங்கேயிருந்து?

இராம—அது எங்கிருந்தோ.

வியூ—கடிதம் அவள் எழுதினதுதானே!

இராம—ஆம்.

வியூ—அவளெழுதும்போது கிட்ட இருந்தீரா?

இராம—இல்லை, அவள் கையெழுத்து எனக்குத் தெரியும்.

வியூ—அந்த எழுத்தினால் கடிதம் அவளது என்கிறீர்?

இரா—ஆம்.

லியூ—அவளெழுத்து உமக்கு என்னமாய்த் தெரியும்!

இராம—தீபாவளியின்பொழுது எனக்கு எழுதின கடிதத்தினால்.

லியூ—அது அவளெழுதியதுதானா?

இராம—ஆம். அதில் அவள் கையெழுத்து போட்டிருந்தது.

மாஜி—இவ்வளவு கஷ்டம் என்னத்திற்காக? பெண்ணை யழைத்துக்கேட்டால் தெரிந்துபோகிறது.

லியூ—பெண் வரமாட்டாள்.

மக்—வந்தாலுமென்ன, தகப்பனார் பக்கந்தான் சொல்வாள்.

மாஜி—நேரே பரிசோதித்துவிட்டால்—

மக்—எமக்கு சம்மதிதான், தகுந்த வைத்தியர்களைக் கொண்டு பரிசோதித்தால்.

லியூ—எமக்கிஷ்டமில்லை. ஏனெனில் கோபாலஸ்வாமி அய்யர் கர்ப்பமென்றது இவர் வார்த்தையைக்கொண்டு. இவரோ கடிதத்தின் சாக்ஷியத்தைக்கொண்டு சொல்கிறார். கடிதங்களோ பெயரில்லாத கடிதங்கள்.

மக்—எமது சிநேகிதர் சொல்வது பிழை; அவரே நேரிடப் பார்த்திருக்கின்றார்.

லியூ—அவனையே கேட்போம். நீரே நேரில் பார்த்ததுண்டா?

இராம—இல்லை. ஆனால் நேரில் பார்த்த அவ்வளவு நிச்சயம் உண்டாயிற்று.

லியூ—அதையெல்லாம் உம்மைக் கேட்கவில்லை. நீர் நேரில் பார்க்கவில்லையே!

இராம—இல்லை

லியூ—பார்த்தீர்களா?

மக்—ஏதோ வேறு விஷயம் ஆரம்பித்தீரே? அதென்ன?

இராம—நேர்ல்பார்த்த அவ்வளவு நிச்சயம் எனக்கு உண்டாகும்படியாக ஒரு காரியம் நடந்தது.

மக்—என்ன?

இராம—எனக்குச் சொல்வதற்குப் வெட்கமாயிருக்கிறது.

மக்—கோர்ட்டாரவர்கள் சொல்கிறபடிக்கு பெண்ணை பரிசோதனை செய்துவிடட்டும்.

வியூ—இல்லை. அவரைக் கேட்போம். வெட்கப்படாதேயும், சொல்லும்.

இராம—நான் புடவையை அவிழ்த்தபொழுது அவள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

கோர்ட்டிலுள்ளவர் அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

வியூ—நீர் சொல்லுகிற பிரகாரம் பூலோகத்திலுள்ள பெண்கள் அனைவரும் ஸ்திரீகளல்ல,

மறுபடியுமெல்லோரும் சிரித்தனர்.

மாஜிஸ்—உம்முடைய கேஸ் பலஹீனமாயிருக்கின்றதே?

மக்—பாக்கி சாக்ஷிகளை விசாரித்தாகட்டும். அதற்கு மேல் எமக்கும் வேறு சாக்ஷிகள் இருக்கின்றனர்.

மாஜிஸ்—உமக்கு யார் சாக்ஷிகள்?

மக்—அந்தப்பெண்ணே முதல் சாக்ஷி.

வியூ—அந்தப்பெண் கோர்ட்டிற்கு வரமாட்டாள்.

மக்—வரமாட்டாள் என்று முண்டோ?

மாஜிஸ்—சாக்ஷியாகப்போட்டால் வரத்தானே வேண்டும்.

வியூ—கோர்ட்டாரவர்கள் அவ்விதம் செய்யாமலிருந்தால் மிக்க அனுகூலமாயிருக்கும்.

மாஜிஸ்—நான் செய்வதென்ன? அவர்கள் சாக்ஷியாகப் போட்டால்.

வியூ—கமிஷன்வைத்து விசாரித்துக்கொள்ளட்டும்.

மாஜிஸ்—அதற்குச் செலவு நீர்தான் கொடுக்கும்படியாய் வரும்.

இராஜ—கொடுக்கிறேன்.

மாஜிஸ்—பெண்ணையே பரிசோதித்துவிடலாமே!

மக்—எனக்கு அதுதான் உத்தமம்போல் தோன்றுகிறது.

வியூ—பெண் மிகவும் வெட்கப்பட்டவள்.

மக்—ஸ்திரீகளைக்கொண்டு பார்ப்பதற்கா?

வியூ—மிகுந்த வெட்கமும், மானமுமுடையவள்.

மாஜிஸ்—ஏன்? பெண்டுகள் பார்ப்பதென்றாலும் வேண்டாமென்கிறீர்?

விநூ—அவள் மிகுந்த சங்கோஜி.

மாஜிஸ்—அப்படியென்றால் அவள் சாக்ஷியாய்த்தான் வரவேண்டும்.

விநூ—ஆனால் விசாரிக்கட்டும்.

மாஜிஸ்—பரிசோதனை செய்யவேண்டும்.

விநூ—செய்யட்டும்.

மாஜிஸ்—செலவு நீர்தான் கொடுக்கவேண்டும்.

விநூ—சரி.

மாஜிஸ்—இவ்வூர் கோஷா ஆஸ்பத்திரி வைத்தியரா யிருக்கும் மிஸ் ஜேம்ஸ் பார்டிநாட் அம்மாளும் ஆஸ்பத்திரி மருத்துவஞ்செய்யும் மிஸ் அர்னல்ட் வில்லியம்ஸ் அம்மாளும் நாளையதினம் காலையில்போய் பரிசோதனைசெய்து எம்மிடத்து ரிப்போர்ட் அனுப்பிவித்தபிறகு நாளையதினம் 11-மணிக்கு இந்தக் கேஸ் மறுபடியும் ஆரம்பிக்கப்படும்.

என்றவுடன் கோர்ட்டிலுள்ளவர் எல்லோரும் ஏதோ சில வார்த்தைகள் பேசிக்கொண்டும், சிலர் முணுமுணுத்துக்கொண்டும், இன்னுஞ் சிலர் சிரித்துக்கொண்டும் தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தனர்.

மறுநாள் 11-மணிக்கு முதல் நாளைப்பார்க்கிலும் அதிக கூட்டமாகவே யிருந்தது. எல்லோரும் சொக்காயும் தலைகுட்டையும் போட்டுக்கொண்டு வந்தபடியால் ஒருவரை

யாகிலும் விலக்க முடியவில்லை. மாஜிஸ்திரேட்டார் வந்து சேர்ந்தார். மக்நார்டன், டெபுடிகலெக்டர், அவர் குமாரன் முதலியவரும் வந்து சேர்ந்தனர். இராஜகோபாலையர் வரவில்லை. அவர் வக்கீல் வியூவையும் காணோம்.

மாஜிஸ்—இராஜகோபாலையர் எங்கே? அவர் வக்கீல் வியூ எங்கே?

குமாஸ்தா—இருவரையுங் காணோம். இப்பொழுது வந்துவிடுவார்கள். அங்கிருந்த ஒரு வக்கீலெழுந்திருந்து 'அவருடைய பெண் இறந்துவிட்டதாகக் கேள்வி' என்றார். இந்த வார்த்தையைக் கேள்விப்பட்டதும் கோர்ட்டிலுள்ளவர் எல்லோரும் இறந்தவர்கள்போ லானார்கள்.

மற்றொரு வக்கீல் எழுந்திருந்து 'எங்கேயோ ஓடிவிட்டனளாம், இறக்கவில்லை' என்றார்.

இதற்குள் வியூவும் வந்துசேர்ந்தார். வந்ததும் எல்லோரும் அவர் முகத்தைப் பார்த்தனர். அவர் எழுந்திருந்து 'எமது கக்ஷிக்காரர் ம-ா-ா-ஸ்ரீ இராஜகோபாலையர் பெண் மீனாக்ஷி யிருக்கிறவிடம் தெரியாமல் எங்கேயோ போய்விட்டபடியால், இந்தக்கேஸை மேலே நடத்துவதில் எமக்கு அபிப்பிராயமில்லை' என்றார்.

மாஜிஸ்திரேட்டார் 'எங்கேபோனாள்? எப்பொழுது போனாள்?' என்று கேட்டதற்கு வியூ 'அந்த சமாசாரம் தெரியவில்லை, நான் இனிமேற்றான் போகப்போகிறேன்' என்றார்.

கோர்ட்டிலுள்ள யாவர்கண்களும் நீர்தளும்பின. ஓரே கூட்டமாக இருநூர்பேர்கூடிய கூட்டம் முழுவதும் விசனப்படுவதென்றால் அக்காரணம் எவ்வளவு முக்கியமாய் இருத்தல்வேண்டும். கோர்ட்டிலுள்ள சகலமான பேர்களும் எழுந்து திருப்பாப்புலியூர் இராஜகோபாலையர் கிரகத்திற்குச் சென்றார்கள். மாஜிஸ்திரேட்டும், வியூவும், மக்நார்டனும், கோபாலஸ்வாமி ஐயரும், மற்றுமவ்விடத்திலுள்ள பெரிய உத்தியோகஸ்தரும், வக்கீல்களும் இராஜகோபாலையர் அகத்திற்கே சென்றனர்.

ஆஹா! அன்றையதினம் இராமகோபாலையர் வீடு இருந்த நிலைமையை என்னென்று சொல்வேன்? அங்குவந்து நின்றுகொண்டிருந்த கோச்சுகளைப்பற்றிச் சொல்லவோ? தெரு முழுவதும் ஒருவரோடு ஒருவர் முட்டிக்கொண்டு நின்ற ஜனங்களைப்பற்றிச் சொல்லவோ? சமுத்திரத்தின் இரைச்சலைக் காட்டிலும் அதிகமாய் இருந்த அவர்கள் பேச்சுகளின் சத்தத்தைப்பற்றிச் சொல்லவோ? எல்லாருடைய முகமும் ஒரே மாதிரியாய் விசனப்பட்டிருந்ததைப் பற்றிச் சொல்லவோ? போலீஸ் சேவகர்கள் அங்குமிங்கும் கூட்டத்தினிடையில்போயும் வந்தும் இருந்ததைப்பற்றிச் சொல்லவோ? ஒருவர்பின்னொருவர் விழுந்துகொண்டு சாக்ஷாத் ஈசுவரதெரிசனம் செய்பவர்போல் அவரிடத்தை நோக்கிச் சென்றதைப்பற்றிச் சொல்லவோ? இராமகோபாலையர் வீட்டுத்திண்ணை நிறையவும், கூடம் நிறையவும் இருந்த உத்தியோகஸ்தர்களைப்பற்றிச் சொல்லவோ? பாழ்த்தநெற்றியும், குளிக்காத உடலும், வெளுக்காத வேஷ்டியும், வஸ்திரம் தரிக்காத மார்பும், வியர்த்த கணளும். கண்ணினின்று புறப்படும் நீர்த்துளிகளினால் ஈரமாய்க் கிடக்கும் கைத்துண்டும், பிழ்போக்கிய தலையும் ஆகிய இவைகளுடன் கூடிய ம-ா-ா-ஸ்ரீ இராமகோபாலையரைப் பற்றிச் சொல்லவோ? உள் முழுவதும் வைத்த சாமான்கள் வைத்தபடியே யிருந்ததைப்பற்றிச் சொல்லவோ? காமாக்ஷியம்மாள் ஒரு மூலையில் நின்றுகொண்டு, இன்னும் அனேக ஸ்திரீகள் புடைசூழ அழுததைப்பற்றிச் சொல்லவோ? ம-ா-ா-ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர் சமையல்செய்து வைத்துக்கொண்டு இராமகோபாலையரையும் நாராயணஸ்வாமி ஐயர் சம்சாரம் காமாக்ஷியம்மாளையும் அழைத்ததைப் பற்றிச் சொல்லவோ? யானெதைப்பற்றிச் சொல்லவல்லவன். என்னாலொன்றும் முடியாது. ஆகவே இவ்வத்தியாயத்தை முடிப்பேன்.

தை மாதம் பிறந்ததும் இராமஸ்வாமிக்கும் வழி பிறந்தது. அதாவது இராமஸ்வாமிக்கு இரண்டாவது சாந்தி முகூர்த்தம் நடந்தது. முதல் முகூர்த்தத்தைப்போல் அவ்வளவு செலவும் இல்லை. அவ்வளவு டம்பமும் இல்லை. அவ்வளவு அழகிய உள்ளும் இல்லை. அவ்வளவு சாமான்களும் இல்லை. அவ்வளவு அதிருப்தியுமில்லை. அவ்வளவு மனஸ்தாபமுமில்லை. அவ்வளவு கூச்சலுமில்லை. சாவதானமாகச் சாந்தி நடந்தது.

முகூர்த்தம் தஞ்சாவூரில் நடக்கவில்லை. ஆமக்குடியிலேயே ஒரு அகத்தில் நடந்தது. தஞ்சாவூரில் நடத்துவதற்கு கோபாலஸ்வாமி அய்யருக்கே வெட்கமாயிருந்ததாம். சாந்திமுகூர்த்தம் முடிந்ததும் இராமஸ்வாமி பட்டணம் படிப்பதற்குப் போவதாய் நேர்ந்தது. இராமஸ்வாமிக்கு ஞானம்பாளையழைத்துப்போவதில் இஷ்டம். ஆனால் அவன் தாயாருக்கு அப்படிச் செய்வதில் இஷ்டமில்லை.

பொதுவாய் மாமியார்களுக்குப் பிள்ளையையும் மருமகப்பெண்ணையும் சேர்த்து அனுப்புவதில் இஷ்டமிருக்கிறதில்லை. அதற்குக் காரணங்கள் பலவுள. முதலாவது, பிள்ளை பெண்டாட்டியைவிட்டு வேறு எங்கேயாவது போவனோ என்னும் பயம். இரண்டாவது, பிள்ளை வெளியில் போயிருக்கிற சமயத்தில், மருமகள் சோரம்போவளோ வென்னும் பயம். மூன்றாவது, இருவர் மாத்திரந் தனியாயிருப்பின் தங்களிஷ்டப்படி சதாகாலமுமிருந்து உடம்பைக் கெடுத்துக்கொள்வார்களோ வென்னும் பயம். நான்காவது மருமகள் பிள்ளையுடன் சதாகாலமும் இனிய மொழிகளைப்பேசி, பிள்ளைமனத்தைக் கெடுத்துவிடுவளோ வென்னும் பயம். ஐந்தாவது தாங்கள் மாமிகளிடத்தில் கஷ்டப்பட்டதுபோல் இவளும் கஷ்டப்படாமல் சுகமனுபவிப்பளோவென்னுந்துக்கம். ஆறாவது, வீட்டிற்கு வெளியானாலும் உடம்பு செவ்வையில்லாமற் போனாலும் உதவிசெய்வதற்கு மனுஷ்யர்களின்றித் தவிப்பார்களோவென்னும் வருத்தம்; ஏழாவது; தங்களுக்கு அதிகாரஞ்செய்வதற்கு ஒருவருமில்லையே யென்னுந்துக்கம். எட்டாவது, இதுவரை

யிலும் வழக்கமில்லாத காரியத்தை யிப்பொழுது செய்யலாமா வென்னும் வெட்கம்.

இவைபோன்ற காரணங்களினால் இராமஸ்வாமியின் தாயாருக்கு இரண்டுபேரையும் அனுப்புவதில் இஷ்டமில்லை, ஆயினும் இராமஸ்வாமி பிடிவாதத்தின்பேரில் விட்டுவிட்டாள். முன் பொய்சொன்ன குற்றம் ஒன்று, இப்பொழுது தான் சொல்லியதைக் கேட்காத குற்றம் ஒன்று, ஆகிய இவ்விரண்டும், அவளைப் பிள்ளையினிடத்தில் விரோதிக்கச் செய்தன.

இராமஸ்வாமியும், ஞானம்பாளும் பட்டணம் சென்றவுடன் 8-ரூபாய்க்கு ஒருவீடு வாடகைக்கு வாங்கினார்கள். மெத்தைமேல் ஒரு ஹாலும் உள்ளும் கீழே சமையலுள் ஒன்றும்.

பெண்டாட்டியைக் கூடவைத்திருந்தால் படிப்பு வராதென்பர் சிலர். ஆனால் இராமஸ்வாமியோ அப்படிப்பட்டவனல்ல. காலை மணி 7-க்கு காலேஜ் போய்விடுவான், திரும்பி வந்து ஸ்நானஞ்செய்து சாப்பிட்டதும் மணி 11-க்கு உள்ளேசெல்வான். கதவைத் தாழ்ப்பாளிட்டுவிடுவான். யார்வந்து இடித்தாலும் திறக்கான். 3-மணிக்குத்திறந்து, இரண்டாந்தரம் ஏதேனும் உண்டுவிட்டு வெளியில்சென்றுவிடுவான். மாலை 6½-மணிக்கு வந்து, 7½-மணிக்குத் திரும்பவும் உள்ளேசெல்வான். 9-மணிக்குக் கதவுதிறக்கும், ஞானம்பாள் உள்ளேபோவாள். ஆகவே ஒருநாளைக்கு சுமார் 6-மணிநேரம் கவனத்தையெல்லாம் செலுத்திப் படிப்பான்.

உள்ளேயிருக்கும்பொழுது ஞானம்பாள் வந்து இடித்தாலும் கதவைத்திறக்கவேமாட்டான், அப்படி யேதாவது பலாத்காரமாய் இடித்தாலோ, கதவைத்திறந்து உயிர் போகும்வரையில் அடிப்பான். அவன் ஏதாவது சொன்னால் ஞானம்பாள் சிரித்துவிடுவள். சொன்னதை யுடனே செய்ய மாட்டாள்.

ஒருநாள், கதவைத்திறந்து வெளியிற்சென்றதும் 'ஞானம்! ஞானம்!' என்று கூப்பிட்டுக்கொண்டேபோ

ஞன் சுமார் மணி 3-க்கு. ஞானத்தைக்காணோம், எங்கே போயிருக்க முடியுமென்று நினைத்து கீழேயிறங்கினான். வழக்கமாய் இவன்வரும்பொழுது அவள் ஹாலில் படுத்துறங்குவள். இப்பொழுது காணாமற்போனது அதிசயத்தை விளைவித்தது. இவன் பாதிதூரம் இறங்கினதும் அவள் ஏறி வந்தாள். 'எங்கேபோனாய், கூப்பிடக்கூப்பிட' என்றான். 'தோட்டத்திற்கு' என்றாள். அவள் சொன்ன மாதிரியால் இவனுக்கு ஏதோ சந்தேகங்கொடுத்தது. அப்பொழுது தான் அவன் அவ்வாறு கதவைச் சாத்திக்கொண்டு இருப்பது பிசகென்று தோன்றிற்று.

ஒருவாரம் கழித்ததும் $1\frac{1}{2}$-மணிக்குக் கதவைத் திறந்து வெளியில் வந்தான். ஞானம்பாள் ஹாலில் படுத்து உறங்கினாள். 'சீ! நாம் நினைத்தது எவ்வளவு பிழை' என்று மனத்தில் நினைத்துக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டான்.

மறுநாள் வேடிக்கையாய், திருவல்லிக்கேணிபோக எண்ணங்கொண்டு கதவைத் திறந்துபார்க்கவே ஞானத்தைக்காணோம். ஒன்றுஞ் சொல்லாமல் கீழே போனான். அங்கேயும் ஞானத்தைக் காணோம். 'ஞானம் எங்கே?' என்று பரிச்சாரகனைக் கேட்டான். 'எனக்குத் தெரியாது' என்றான்.

இவ்வாறு இவன் கேட்பதற்குள் ஞானம்பாளும் அகத்திற்குள் வந்தாள்.

'எங்கேபோயிருந்தாய்?'

'வெறுமனே வீட்டிற்குள் இருப்பதென்றால் பிடிக்கவில்லை. வெளியில் போனேன். நீங்கள்தான் உள்ளே போய் விடுகிறீர்கள். கதவை யிடிக்கக்கூடாது. நான் முத்துவீட்டிற்குச் சென்றேன். 'ஐயாசாமியின் தங்கையின் பெயர் முத்தம்மாள். சுருக்கமாக முத்து முத்து என்று கூப்பிடுவது வழக்கம்' என்றாள்.

இராமஸ்வாமி கீழேசென்று ஐயாஸ்வாமியின் தங்கையை விசாரித்தான். அவளும் அங்கு வந்திருந்ததாகச்

சொன்னார். ஆனபோதிலும், இராமஸ்வாமிக்கு மனத்தில் ஒருவிதமான சந்தேக மிருந்துகொண்டிருந்தது. இச்சந்தேகத்திற்குக் காரணம் இராமஸ்வாமியின் மனமே.

அநேகமாய் ஸ்திரீகள் சோரம்போகிறார்கள் என்று சொல்கிற புருஷர்கள் அவ்வாறே யிருப்பார்கள். இராமஸ்வாமியின் மனம் புதிதாய் எதைக்கண்டாலும் அதையாராய்ந்து பார்த்து அழகாய் இருந்தால் அதன்மேலில் ஆசைவைப்பான். ஆகையால் அழகிய ஸ்திரீயைக்கண்டாலும் மனம் வைத்திருப்பான். காணவில்லை.

மேலும் ஞானம்பாள் இவன் கேட்டபொழுதெல்லாம் சிரித்துக்கொண்டிருந்தாள். அது இவன் சந்தேகத்தை யதிகப்படுத்தியது.

இவ்வாறு சிலநாளிருக்கையில், ஒருநாள் சாயங்காலம் இவன் வாசலில் நின்றுகொண்டிருந்தபொழுது, தபால்காரன் ஒருகடிதம் கொண்டுவந்து கொடுத்தான்.

லா காலேஜில் வாசிக்கும் இராமஸ்வாமி ஐயர் பாரியாள் ஞானம்பாளுக்கு என்று மேல்விலாசமிருந்தது. வெகு சீக்கிரம் பிரித்துப்பார்த்தான்.

'நீ அவ்விடத்தில் சவுக்கியமாயிருக்கிறாயா? உன் அகமுடையான் என்றும் வைத்துக்கொண்டிருக்கிறானா? ஏதாவது உனக்குப் பணம் வேண்டுமென்றால் எழுதவும்.

: — உ

வந்தியபாடி போஸ்ட்'

என்று எழுதியிருந்தது.

போஸ்ட்டு முத்திரையைப் பார்த்தான். 'பரீக்ஷைக்காக வைத்த போஸ்ட் ஆபீஸ் என்றெழுதியிருந்தது. போஸ்டாபீசுக்குச்சென்று 'வந்தியபாடி யென்பது எங்கே யிருக்கிறது' என்றான்.' எங்களுக்குத் தெரியாது என்றார்கள்.

இவனுக்கு இரண்டு வருஷத்திற்குள் அநேக பொய்க் கடிதங்கள் வந்திருக்கின்றன வாகையாலும் இவன் அநேகவற்றைப் பார்த்துள்ளவன் ஆகையாலும் இக்கடிதத்தி லுள்

னையைப் பாராய்வான்கருதி ஞானம்பாளிடத்தில் சொல்லி அடியில் வருமாறு எழுதச் சொன்னான் :—

'நான் சவுக்கியமாயிருக்கிறேன். என் அகமுடையான் நன்றாய் வைத்துக்கொண்டிருக்கிறான். தாங்கள் இன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. 10-ரூபா பணம் அனுப்புவித்தால் சவுக்கியமாயிருக்கும்.

ஞானம்பாள்,'

என்றெழுதி, இந்தக் கடிதத்தை போஸ்ட் ஆபீசில் கொண்டுபோய் போட்டான். போட்ட மூன்றாவது தினம் 10-ரூபாய்க்கு மணியார்டர் வந்தது. அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது.

'நானின்னவனென்பது உனக்கு இப்பொழுது தெரிய வேண்டியதில்லை. மணியார்டரைப் பெற்றுக்கொள்ளவும், சவுக்கியத்தைப்பற்றி யடிக்கடி எழுதவும். க. ந.'

இதைப்பார்க்கவும் இராமஸ்வாமிக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. மணியார்டர் கொண்டுவந்த சேவகனைநோக்கி 'இந்த ரசீது எங்கேபோகும்?' என்றான். 'போஸ்ட்மாஸ்டரைக்கேட்டால் தெரியவரும்' என்று பதிலுரைத்தான்.

சாயங்காலம் போஸ்ட்டுமாஸ்டரிடம் சென்று விசாரித்ததில் 'மலையாளம் டெபுடிகலெக்டர், வந்தியபாடி போஸ்ட், க—ந' என்ற கடிதங்களைத் தன்னிடத்தில் அனுப்பிக்கும்படி யெழுதியிருந்ததாகச் சொன்னார்.

இதென்ன! மலையாளம் டெபுடிகலெக்டருக்கும் தன் அகமுடையாளுக்கும் என்னசம்பந்தம்! டெபுடிகலெக்டருக்கே கடிதம் எழுதுவோமென்று விட்டு எழுதினான், அதற்குபதில்வந்தது.

'கள்ளிக்கோட்டை.

தாங்களெழுதியகடிதம் வந்தது. தங்கள் பாரியாளை நான் அறியமாட்டேன். இதுபோன்றகடிதங்கள் யோசித்து எழுதவும்.

தங்கள்விதேயன்.
டெபுடிகலெக்டர்.

இதென்ன கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்று. நாமொருவெண்ணத்துடன் கேட்க அவர் ஒரு எண்ணங்கொண்டு எழுதியிருக்கிறாரே' என்று மிகுந்த விசனப்பட்டான்.

திரும்பவும் போஸ்ட்மாஸ்டரைக்கண்டு டெபுடி கலெக்டரிடம் இருந்துவந்த கடிதத்தை காட்டச்சொன்னான். 'இதையெல்லாம் நாங்கள் வெளியில் காட்டக்கூடாது' என்றார் அவர்.

இவன் மனம் தத்தளித்தது.

முன் தனக்குவந்த கடிதங்களெல்லாம் மீனாள் எழுதினதாகத் தீர்மானித்தான். இக்கடிதம்? இதுவும் அவள்தான் எழுதியிருப்பளோ? ஆஹா! திருப்பாப்புலியூரிலிருந்து மலையாளம் போய்விட்டனளோ? அவள் ஞானம்பாளுக்கு ஏன் கடிதம் அனுப்புகிறாள்? அவளுக்கு ஞானம்பாளிடத்தில் விரோதம் இருக்கவேண்டியதுபோக, அன்பு எங்கிருந்துவந்தது. ஒருவேளை ஞானம்பாளுக்கு மனத்திற்குள் உண்மை தெரிந்திருக்குமோ? இரண்டுதரம் எங்கேயோ வெளியில் போயிருந்தாள். கேட்டால் யோசித்துப் பதில் சொன்னாள்? இருக்கும். அவள் மொழிந்ததெல்லாம் உண்மையாய்த்தானேயிருந்தது. முத்துவைக்கேட்டோம். அவளும் ஆம் என்றாள்.

இவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. நவவித தானியங்களும் கலந்து நிறைந்திருந்த கூடையினின்றும் ஒவ்வொரு ராசியையும் பிரித்துவைப்பது எவ்வளவு கடினமோ அவ்வளவு கஷ்டமாயிருந்தது இவன் மனத்தை யொரு வழிப்படுத்துவது.

ஒருவேளை முன் கடிதங்கள் இப்பொழுதைய கடிதம் ஆகிய வெல்லாம் பொய்யாயிருக்குமோ? யாராவது ஒருவர் இவ்விதம் கலகப்படுத்துகின்றனரோ? அவ்விதம் இருந்தால் நான் மீனாக்ஷியின்பேரில் பிழைகூறியது எவ்வளவு பாவம்? நம்முடைய தாயார் கூறியபடி ஒரு பெண்ணையல்லவோ அநியாயமாய்க் கெடுத்துவிட்டோம்.

நாம் ஊகித்ததுதான் உண்மையாய்விட்டதே! பொய்யா யிருந்தால் அவன் ஏன் ஓடினான்? ஒருவேளை அவர்கள் வந்து பார்ப்பதற்கு அவமானங்கொண்டு ஓடிவிட்டானோ? அடடா! விசாரித்து செய்யாமற் போய்விட்டோமே!

அதுமுதற்கொண்டு அவன் மனம் ஒருவழிப்பட்டு நிற்கவில்லை. ஞானம்பாளுக்குப் பதிலாக மீனாக்ஷி யங்கு வந்திருக்கிறதாக வைத்துக்கொண்டு யோசனையெல்லாம் செய்வான். மீனாக்ஷி படித்தவளாம்? இவளுக்கொன்றுந் தெரியவில்லையே! மீனாக்ஷி ஸ்திரீயோ அலியோ? தனக்குத் தெரிந்த விஷயங்களைக்கொண்டு நன்றாய் யோசிப்பான். ஒரு சமயம் அலிதான் என்று நிச்சயிப்பான். மற்றொருவேளை ஸ்திரீயாய்த்தானிருத்தல் வேண்டும். இந்தக் கடிதம் பொய் யாயிருக்கிறபொழுது அது ஏன் இருக்கக்கூடாது? என்று சமுசயிப்பான்.

ஒருநாள் காலையில் வழக்கம்போல் யோசனைசெய்து அரைமணிநேரங் கழித்துத் தனக்குத் தானே சொல்ல வாரம்பித்தான் :—

'ஆஹா! இந்த எண்ணம் முன்னமேயே தோன்றாத தற்கென்னகாரணம்! என்ன முட்டாள்! அடடா! அந்தக் கடிதத்தைக்கொண்டே யதிலெழுதியிருப்பது பிழையெ ன்று சொல்லக்கூடாதா? ஒரு பெண்பேரில் அநியாயமா யன்றோ பழியைப் போட்டோம், அவளை அநியாயமாயன்றோ அடித்தோம். முதலில் அலியென்றும், பிறகு விபசாரம் போ னவளென்றும் எழுதியிருக்கிறதே! முன்னது உண்மையாயிரு ப்பின் பின்னது என்னமாய்முடியும். இதனாலேயே, அந்தக் கடிதம் பொய் என்று சொல்லக்கூடாதா? ஈசுவரா! என்ன பாவஞ் செய்துவிட்டோம். ஒரு குடும்பத்தின் சுகத்தை யநியாயமாயன்றோ கெடுத்துவிட்டோம். அவர்களுடையசந் தோஷத்திற்கு காமசத்துருவாய் ஏற்பட்டோம்! அடா! இவ்வளவு புத்தியிருக்காத ஒருமனுஷ்யனுக்கு? படித்து மென்னபிரயோஜனம்? படிப்பிற்குத் தகுந்த புத்தியிருந்தா லன்றோ?'

அன்றையதினம் முதற்கொண்டு ஞானம்பாள் ஏதாவது பிழைசெய்தால், ‘மீனாக்ஷியிருந்தால் இவ்விதம் செய்வாளா?’ என்று ஒவ்வொரு விஷயத்திற்கும் ஞானம்பாளையும் மீனாக்ஷியையும் ஒப்பிடுவான்.

ஒருநாள் பகல் 2-மணிக்கு ஞானம்பாளிடத்தில் சொல்லி காப்பி வைக்கச்சொன்னான். ஞானம்பாள் பரிசாரகனிடத்தில் சொன்னாள். மணி மூன்றிற்கு வெளியில் வந்து ‘காப்பியானால் கொண்டுவா!’ என்றான். ஞானம்பாள் போய்ப்பார்த்தாள். பரிசாரகன் அடுப்பு மூட்டிக்கொண்டிருந்தான். அவனை சிறிது கோபித்துக்கொண்டு தன் கணவனிடத்தில்வந்து ‘இன்னும் 5-நிமிஷம் பிடிக்கும்’ என்றாள். ‘நீ வைக்கவில்லையோ?’ என்று கேட்டான். ‘இல்லை’ என்றாள். ‘மீனாக்ஷியாயிருந்தால் இவ்விதம் செய்வளா?’ என்று இதுவரையும் மனத்திற்குள் சொல்லிக்கொள்கிறவன், வெளியில் ஞானம்பாளுக்குக் கேட்கும்படி வாய்ச்சொன்னான். அதற்கவள் ‘மீனாக்ஷியாயிருந்தால் அவ்விதம் செய்திருக்கமாட்டாள் என்பது உங்களுக்கென்னமாய்த் தெரியும்? அவளோடு அரைமணி நேரமாகிலும் பழகினீர்களா? ஒன்றுமில்லை. உங்களுக்கிப்படித்தான் யாரைக்கண்டாலும் ஆகிறதில்லை. அதற்கென்ன செய்கிறது?’ என்றாள்.

ஞானம்பாள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் இராமஸ்வாமியின் துக்கத்தை யதிகரித்தது. மீனாக்ஷியோடு கோபித்துக்கொண்டு இவளைக் கலியாணம் செய்துகொண்டதனாலல்லவோ இவளிப்படி சொல்கிறாள்.

மீனாக்ஷி அப்பொழுது இருக்கிற இடந்தெரிந்தால் தானகவேசென்று அழைத்துவந்து வைத்திருப்பன். இருக்கிற இடம் யாருக்குத்தெரியும்? அவளுடைய முகத்தைத் தன் மனத்தில் எழுதிப்பார்ப்பன். ஏதோ ஒருவிதமாய்த் தோன்றுமேயொழிய நன்றாய்த் தோன்றாது. இவன் மீனாக்ஷியை நன்றாய்ப் பார்த்திருந்தாலன்றோ?

ஞானம்பாளுக்குக் கடிதம் வாரத்திற்கு ஒருதரம் வரும். அதைப்பற்றி யென்னவென்னவோ விசாரணை

மெல்லாம்செய்து பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. இவன் மனம் ஒரே குழப்பமாகவிருந்தது.

இக்காரணங்களினால் இதுவரையிலும் எல்லா பரீக்ஷைகளிலும் முதல் வகுப்பில் தேறினவன், பி. எல். பரீக்ஷையில் மூன்றாவது வகுப்பில் தேறினான். ஐயாசாமியோ இரண்டாவது வகுப்பில் வழக்கம்போல் தேறினான். எல்லோரும் பெண்டாட்டியை மறைத்துப்போய் வைத்திருந்ததற்குப் பயன் பார்த்தீர்களா? என்று பரிகசிக்கத்தொடங்கினர்.

மறுவருஷம் ஹைகோர்ட்டில் வேலை கற்றுக்கொண்டிருக்கும்பொழுது தான் மாத்திரம் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். எங்கிருந்தாலென்ன? சுகமென்பது போய்விட்டது. சந்தோஷமும் கெட்டது.

ஹைகோர்ட்டில் கேஸ் நடக்கும்பொழுதெல்லாம் மீனாக்ஷியை நினைத்துக்கொள்வான். தானும் மீனாக்ஷியும் போட்ட சண்டையை நினைத்துக்கொள்வான். மீனாக்ஷியின் பரிதாபப்படத்தக்க நிலைமையை நினைப்பான். மனம் எப்பொழுதும் சஞ்சலப்பட்டுக்கொண்டேயிருக்கும். இக் குழப்பம் எப்பொழுது தீருமோ!

10-வது அத்தியாயம்.

நாயகி துயரங்கள்.

திருப்பாப்புலியூரில் இராமகோபாலையருக்கும் கோபாலஸ்வாமியையருக்கும் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடந்த விசாரணைதினம் எல்லோர்க்கும் ஞாபகமிருக்குமே. இரண்டு ஐரோப்பிய ஸ்திரீகளை மாஜிஸ்திரேட்டார் ஏற்பாடு செய்து மீனாக்ஷியைப் பரிசோதிக்கும்படி கட்டளையிட்டதும் அறிவீர்களே

அன்றையதினம் மாலை இராமகோபாலையர் கோர்ட்டிலிருந்து வந்ததும் சொக்காய், வேஷ்டி, தலைகுட்டை யெல்லாவற்றையும் கழற்றிவைத்துவிட்டு, உள்ளேசென்றார். அவர் அகமுடையாள் இவரை சந்தித்ததும் 'கேஸ் என்ன

வாயிற்று?' என்று கேட்டாள். இராஜகோபாலையர் 'நம்முடைய பக்கந்தான் ஜெயம். நாளையதினம் இந்த கோஷா ஆஸ்பத்திரியிலிருப்பவளும், மஞ்சகுப்பம் ஆஸ்பத்திரியில் மருத்துவஞ் செய்பவளும் மீனாக்ஷியைப் பார்க்கப்போகிறார்கள். பார்த்து அவள் ஸ்திரீதான் என்று சொல்லிவிட்டால் நம்முடைய பக்கம் தீர்ப்பாய்விடும்' என்று சிறிது உற்சாகத்தோடு மொழிந்தனர்.

'என்னத்தைப் பார்க்கப்போகிறார்கள். அடடா! இதென்ன வெட்கக்கேடு! நம்முடைய பெண்ணுக்குத் துன்பஞ் செய்பவர்கள் போதாதென்று நீங்களும் துக்கத்தைச் செய்ய வாரம்பித்துவிட்டீர்களா?' என்று கோபமும் துக்கமும் கலந்த தொனியுடன் மறுமொழி கூறினாள் காமாக்ஷியம்மாள்.

காமாக்ஷியம்மாளிடம் சந்தோஷத்தை யெதிர்பார்த்திருந்த இராஜகோபாலையர் அதற்கு நேர் விரோதமாகத் துக்கத்தைக் கண்டவுடன் 'நானென்னடீ செய்கிறது? நானும் வக்கீலும் எவ்வளவோதான் சொல்லிப்பார்த்தோம். மாஜிஸ்திரேட் கேட்கவில்லையே. இல்லாமற்போனால் மீனாக்ஷியை சாக்ஷியாகப்போடுகிறேன் என்றார்கள். போவளா! வருவளா கோர்ட்டிற்கு?' என்று சிறிது கோபத்துடனே பதிலுரைத்தார்.

'அந்தக் கேஸையே நான் ஆரம்பம் முதற்கொண்டு வேண்டாம் வேண்டாம் என்றேனே. தெய்வம்பாதி நாமப் பாதியல்லவோ துக்கத்தை யுண்டாக்கிக் கொள்கிறோம். யாரழுதார்கள் அந்தக்கேஸ் இல்லையென்று? இப்பொழுது யாரழுதார்கள்? ஏற்கனவே அவள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாள். போதாதென்று இதையும் கொண்டுவந்து வைத்தீர்கள்?'

'இதிலென்ன வருத்தம்? ஸ்திரீகள் தானே யவர்களும்?' 'நல்ல வெட்கக்கேடு நீங்கள் சொல்கிறது? அந்தக் கேஸ் வேண்டாமே' இப்பொழுதாகிலும் சொல்கிறேன்.

அதைவிட்டுவிடுங்களேன்! நம்முடைய பெண்ணுக்கு நாமே துக்கத்தை விளைவிக்கவேண்டுமா?'

'உன்னுடைய பெண்ணுக்கு உனக்கு இருக்கிற அக்கறைபோல் என்னுடைய பெண்ணுக்கு எனக்கும் இருக்கும். நீயொன்றுஞ் சொல்லவேண்டாம்?'

'நான் பெண்ணைப்பெற்றுப் பட்ட சுகம் இதுதானா? ஈசுவரா! இந்த சுகந்தானா எனக்கு வரவேண்டும். மருமகப்பிள்ளையும் பெண்ணும் சவுக்கியமாய்ச் சேர்ந்திருந்து பார்க்கக் கொடுத்துவைக்காமல், தகப்பனாரே பெண்ணுக்குச் சத்துருவாய்விட்டதைப் பார்க்கிறேனே! இதுவே போதும்' என்று கண்ணினின்றும் நீர்சொரிய அழுதனள்.

'என்னைப்பற்றி நீயொன்றுஞ் சொல்லவேண்டாம்!' என்று கோபத்துடன் மொழிந்தனர் இராஜகோபாலையர். இதுவரையிலும் தன் பெற்றோர்களுக்குள் நடக்கும் சம்பாஷணையை மௌனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த மீனாக்ஷி, முதன்முதல் வாயைத்திறந்து 'அப்பா!' என்றனள். சொன்னதுதான் தாமதம். 'நீ யொன்றும் சொல்லவேண்டாம். உன்னால்தான் இவ்வளவு துக்கமும், நஷ்டமும், கஷ்டமும், வெட்கக்கேடும் எல்லாம் உண்டாயிற்று. நீ பிறக்காமலே யிருந்துவிட்டால் ஒன்றுமில்லை. கலியாணம் ஆகிறதற்குமுன் ஜ்வரம் வந்ததே! அதிலிறந்து போய்விட்டால் எவ்வளவு சவுக்கியமாயிருந்திருக்கும்?' என்று மகா கோபத்துடன் கூறினர் இராஜகோபாலையர்.

மீனாக்ஷி பிறந்தது முதற்கொண்டு பதினைன்கு வருஷகாலமாய் இராஜகோபாலையர் ஒரு வார்த்தை கோபமாகச் சொல்லியறியார். இப்பொழுதும் அவர் தன் சுயஞானத்தோடு கூறியவர் அல்லர்.

ரப்பர் என்னும் வஸ்துவைப் பார்த்திருப்பீர்களே! அதை யிழுங்கள். நீளும். இன்னுஞ் சிறிது இழுங்கள், இன்னுஞ் சிறிது நீளும். இழுத்துக்கொண்டே போங்கள், சிறிது சிறிதாய் நீண்டுவந்து கடைசியாக டப் என்று அறுந்துவிடும். எவ்வளவுதூரம் நாம் இழுப்பதைப் பொ

அக்க முடியுமோ அதுவரையும் நீண்டுகொண்டேவந்து அதிகப்பட்டால் சொரூபமேமாறி யறுந்துவிடுகிறது. அம்மாதிரியே, மனுஷியனுடைய மனமும் துக்கம், கோபம் முதலியவற்றால் பீடிக்கப்பட்டால், எதுவரையில் பொறுக்க முடியுமோ அதுவரையிலும் பொறுத்து, அவ்வெல்லைக்கு மீறினால் தன்னுடைய பூர்வஞானத்தை மறந்துவிடும்.

ஆகவே இராஜகோபாலையர் அவ்வார்த்தை கூறியபொழுது தன் ஞானத்தோடிருந்தவரல்லர்.

அறுந்துபோன ரப்பர். திரும்பவும் சுருங்கிய ஸ்தானம் மீள்வதுபோல், வக்கீல் மனமும் பழைய நிலைமையாகிய சாந்தகுணத்தை யடைந்தது. மறு வார்த்தை யாதொன்றுங் கூறாமல். தோட்டத்திற்குச்சென்று. காலலம்பி, பழுதுபார்த்திருக்கும் தன்னறையில்போய் உட்கார்ந்தனர்.

காமாக்ஷியம்மாள் அழுதுகொண்டே தன்வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தனள். மீனாக்ஷியும் தன்னறைக்குள் சென்று வழக்கம்போல் நாற்காலியின்மீது உட்கார்ந்துவிட்டனள்.

அன்றிரவு மணி 11-அடித்தது. கோயிலில் இராப்பூஜைமுடிந்து கதவைப் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டார் குருக்கள். பகல்முழுவதும் வீட்டிற்குள்ளாவது, குடிசைக்குள்ளாவது கண்டுபிடிக்கப்படாமல், பதுங்கியிருந்த கள்வர் மெதுவாய் வெளிவந்து, தங்களாயுதங்களை வெளிநீட்டி, அவற்றிற்கு எளிதாய் இடம்விடக்கூடிய சுவர்கள் இன்னவையென்று தேடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களை யக்காரியஞ் செய்யவொட்டாமல் தடுப்பதற்கு ஏற்பாடுசெய்திருக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கையில் பெரியதொருதடியுடன், மனுஷியர்கள் போக்குவரவு செய்கிற வீதியில் முன்னும் பின்னுமாக நடந்து, மனுஷியர்களின் பேச்சுக்குரல் கேட்கின்ற வீட்டினெதிரில் நின்றுகொண்டு 'வவவவய்! திருடர்காள்! சாக்கிரதை!' என்று கூவிவிட்டு இரவில் தோட்டத்திற்குப் போவதற்குப் பயப்பட்டு வாசலில் வந்துட்காரும் சிலவேழைகளின் நாமதேயங்களை நன்றாய்த் தமது நோட்டுப்புத்தகங்களில் பதிந்துகொண்டு,

தாகந்துத் தெருத்திண்ணையில், கைவிளக்கையும் அணைத்துவிட்டு படுத்து உறங்குகின்றனர். மனுஷியர்கள்தானே யவர்களும்! திருடர்கள் செய்யும் செய்கைகளை சேவகர்கள்தான் பார்க்கவில்லையே, நாமாகிலும்பார்த்து, இவ்வுலகிலில்லாவிடினும் அவ்வுலகிலாயினும் சாக்ஷிசொல்வோமென்று, சந்திரனுதயமாகி வாயைமூடிக்கொண்டு பார்த்துக்கொண்டேயிருக்கிறான். 'வஸ்துக்களையெல்லாம் கடவுள் ஏதேனுமொரு உபயோகத்திற்காகப் படைத்திருக்கிறார்' என்பது உண்மையாகவிருந்தால், இம்மனுஷியனை எக்காரணங்கொண்டு படைத்தனர்: நம்மைக் கொல்வதாகிய ஒருபயோகத்தைத்தவிர வேறு இவன்செய்கிற பேருதவி யாதோவென்று பகல் முழுதும் மானிடர்களுக்குப் பயந்து தத்தம் புற்றுகளில் பதுங்கிக்கிடந்த நாகங்கள், அவற்றினின்றும் மிருதுவாகக்கிளம்பி இரைகளைத் தேடுகின்றன. அனேக மனுஷியர்கள் உறங்குகின்றனர். சிலர், வெகுசாக்கிரதையாக, தங்கள்ஸ்திரீகள் விழித்துவிடப்போகின்றனரேயெனப்பயந்து தலையணைகளை அவர்களுடன் சேர்த்தணைத்து, வெகு மெதுவான குரலுடன் கூப்பிட்டு, பதிலின்மையால் களிப்படைந்து, அடிமேலடி யெடுத்துவைத்து, வாசற்கதவைத்திறந்து, நன்றாய்ச் சாத்திக்கொண்டு தன் ஸ்திரீ விழித்து விடுவளேயென்ற பயமும், பொது ஸ்திரீ ஏனித்தனைநாழி யென்பளே யென்னும் பயமும், ஆகிய இரண்டும் தன் நெஞ்சத்தைப் புண்செய்யாநிற்க. தாசிகள் வீடுசெல்கின்றனர். மணவறைக்குள் புதிதாகச்சென்ற மணமகளும் இதுவரையும் பேசினால் வெளியிருப்பவர்களுக்குக் காதுகேட்குமேயெனப் பயந்து முதல்முதல் வெகு தாழ்ந்த குரலில் ஒருவரோடு ஒருவர் பேசி, முன் அணைத்துவிட்ட தீபத்தை மறுபடியும் ஏற்றி, இறப்பு என்பதனையே மறந்து துக்கமென்பது மொன்றுண்டோ எனக் கூறுவார்போல் மனுஷ்யனுக்குப் பிறந்தது முதற்கொண்டு இறக்கும் வரையிலும் விசனமும் துக்கமுமே யதிகரித்திருக்கின்றது என வீணே புகலும் மதியிலிகாள்! நீவிர் கூறுவது பொய்யென்பதற்குக் காட்டாக எம்மைவந்து நோக்குவீர் எனக் கூறு

வதுபோல் மகா சந்தோஷத்துடனிருக்கின்றனர். ஆஹா! தூக்கம் என்பதே யில்லாவிட்டால், எவ்வளவு நன்றாய்ப் படித்து இராஜதானி முதலில் தேறலாம்! அது இல்லாமையால் எவ்வளவு கஷ்டமாயிருக்கின்றது; இன்றையதினம் நம்மால் இவ்வளவுதான் முடியும் என்று மனத்தில் அதிருப்தியுடன் சில மாணாக்கர்கள் பாயில் படுத்துக்கொண்டு கண் வலியால் கண்ணை மாத்திரம் மூடிக்கொண்டு, மனத்தைத் தங்கள் பாடங்களின்மீது செலுத்தி நித்திரைவராமல் விழித்துக்கொண்டிருக்கின்றனர்.

இராஜகோபாலையர் அகத்தில் இராஜகோபாலையரும் காமாக்ஷியம்மாளும் படுத்துறங்கிவிட்டார்கள். மீனாக்ஷி மாத்திரம் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். பௌர்ணமி தினம் ஆதலின் நல்ல நிலவு வீசுகின்றது. அவளுடைய மேஜையின்மேல் ஓர் சிறு கடிதம் வைத்திருக்கின்றது. அதில் அடியில் வருமாறு எழுதியிருக்கின்றது:—

அப்பாவுக்கு நமஸ்காரம். தாங்கள் என்னால்பட்ட கஷ்டங்கள் இன்றோடு நிவர்த்தியாய்விடும். நான் பிறக்கவில்லையென்றே தாங்கள் நினைத்துக்கொள்ளவேண்டியது. நான் எவ்வளவுகுற்றங்கள் பண்ணியிருந்தபோதிலும் மன்னிக்கவும்.

மீனாக்ஷி.

11-மணி யடிக்கும்வரையிலும் ஜன்னல்முகமாய் நோக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தவள் மணியடித்ததும் 'இது தான் சமயம்' என்று வாயோடு சொல்லிக்கொண் டெழுந்திருந்தாள், எட்டிப்பார்த்தாள். வாசலில் ஒருவரும் இல்லை, மெதுவாய்நடந்தனள். தன்பிதா இருக்கும் அறைக்குள் சென்றனள், நன்றாய்ப்பார்த்தனள் பிதாவின் முகத்தை. தாரைதாரையாய் நீர்சொரிந்தனளே யொழிய ஒருசப்தம் செய்தவளல்லள். அவ்விடத்தைவிட்டு மாதாவிருக்கும் கூடத்திற்கு வந்தனள். அவளையும் நன்றாய்ப்பார்த்து, அவளுக் கருகாமையில் படுத்திருக்கும் கிருஷ்ணஸ்வாமியைப் பார்த்தனள். இவளுடைய புடைவை யெல்லாம் ஈரமாகி

விட்டது, இன்னும் வாயைத்திறந்து அழுதாளில்லை. கிருஷ்ணஸ்வாமியைக் கண்டதும், முகத்தில் முத்தமிட்டுக்கொண்டு, அவன் முகத்தையே நோக்கிச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்து ‘சீ! இவனைவிட்டுப் போகிறதா?’ என்று மறுபடியும் தன்னுள்ளே சென்று உட்கார்ந்தனள். ‘பிரயோஜனமில்லை. அற்பசுகத்திற் காசைப்பட்டுத் தன்னைத் தீராத்துயரத்திற் குள்ளாக்கிக்கொள்வது பிழை’ என்று மறுபடியும் எழுந்தனள். முன்போலவே சென்றாள். வாசற்கதவைத் திறந்தனள். தாழ்ப்பாளை யிழுத்து கதவைத் திறப்பதற்கு 15-நிமிஷம் ஆயிற்று. சிறிது இருப்பள். யாராகிலும் விழித்துவிடுவார்களோ எனப்பார்ப்பள். இவ்வாறு மெதுவாய்க் கதவைத்திறந்து வாசலில் சென்றனள்.

வாசலிலுள்ள வகுளமரத்தையும் கடந்து, குளத்தின் மேடையிற் சென்றாள். ஏறினாள்; ஏறி அப்பக்கத்திலிறங்கினாள். ஒவ்வொருபடியாய் இறங்கி, நீர் இருக்கிறதற்கு மேல்படியில்போய் உட்கார்ந்தனள். அதுவரையிலும் சிறிதேனும் சத்தஞ்செய்யாதவள், அங்கு உட்கார்ந்துகொண்டு விம்மிவிம்மி யழுதனள்.

‘எத்தனைதரம் இக்குளத்தில் ஸ்நானஞ்செய்திருக்கிறேன்! இதுதான் கடைசி தடவை. குளத்தில் விழுந்தால் பேயாய்ப் பிறப்பார்களாம். ஸ்வாமி நம்மை யவ்வாற செய்ய மாட்டார். பாடலீசுவரா! பிருஹன்னாயகியம்மா! எனக்கு இப்பிறவியில் இவ்வுபகாரமாகிலுஞ் செய்யவேண்டும். எவ்வளவு கஷ்டப்படுத்திவிட்டீர்கள்! இப்பொழுதாகிலும் நான் இறந்த பிரகு பிசாசாய்ப் பிறக்காமல், நல்ல பிறவியைக் கொடுக்கவேண்டும் இவ்வளவானுஞ் செய்யமாட்டீர்களா’

என்று இவ்வாறு தோத்திரித்து ‘எண்ணாதெல்லாமெண்ணிக் கல்லைக் காலிற்கட்டிக்கொண்டு என்னமாய் விழுகிறது? தொப்பென்று நடுக்குளத்தில் குதிப்போமா; அன்றேல் மெதுவாய் இறங்கியிறங்கிச் சொல்வோமா?’ என்று யோசித்துத் திடீரெனக் குதிப்பதாக மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு கீழே உட்கார்ந்தாள்.

ஒரு எழும்பு எழும்பிக் குதிக்கப்போகிறாள். ஐயோ பாவம்! ஈசுவரா! நீவிர் மானுடவுருவங்கொண்டு வேண்டாம் என்று சொல்லக்கூடாதா? ஐயையோ! ஒருவரையுங் காணோமே! எழும்புகின்றாள். இன்னும் ஒரு நிமிஷந்தான். யோசித்திருக்கிறாள் எதையோபற்றி. இன்னுமங்கு ஒருவரையுங்காணோமே.எது? போய்விடுவள். நானும் இதோ நிறுத்தவேண்டியதுதான். என்னவோ பேசுகிறாள். பேசிக்கொண்டே யெழுந்திருக்கிறாள். நல்லவேளை! வீடு செல்வளோ? எழும்புகின்றாள் குதிப்பதற்கு. 'நாராய——' என்றபோது 'எஎஎஎய்! பாரங்கே எஎஎ! குளத்திலலம்பக்கூடாது. திருக்குளம்! மகாபாவம்! போ வெளியே எஎஎஎ' என்றது ஒரு குரல்.

இது எவருடைய குரல்? குப்புசாமி சாஸ்திரிகளுடையது. குளத்திற்கு வெளியே ஒன்றிற்குப் போய்விட்டு குளத்தில் ஜலஸ்பரிசம் பண்ணவந்தவர், எதிர்த்த கரையில் யாரோ சௌசம்பண்ணிக்கொள்ளப் போகிறதாக எண்ணங்கொண்டு அவ்வாறு கூறினார்.

கூறினதுதான் தாமதம் காலையொருதரம் உதறினாள். வாழைநாரினால் கட்டியிருந்த கல் அப்புறம்போய் விழுந்தது. படிப்படியாய் எறினாள். குளத்தின் மேடைக்கு வந்தாள். இப்புறம் குதித்தாள். வீட்டிற்குளோடினாள். அறையினுட்புகுந்தாள். நாற்காலியில் உட்கார்ந்தாள்.

'நிச்சயம் நிச்சயம் நம்மைப் பரிசோதனைசெய்கிறார் கடவுள். இதென்ன! விழுகிற சமயத்தில் இப்படியுண்டோ? சீ! நாம் பிழைசெய்தோம் அவர் அந்தக் கரையில் இருந்து கொண்டு தானே கூறினார். நாம் விழுந்திருந்தால் அவர் வந்து எடுப்பதற்குள் பிராணன் போய்விடும்'என்று எண்ணமிட்டாள்.

'இப்பொழுதென்னசெய்யலாம்? மணியோ 12-ஆகிவிட்டது பொழுதுவிடிந்தாலோ அவர்கள்வந்து விடுவார்கள். சீ! என்ன காரியம்? என்றைக்கும் சொல்லாத தகப்பனார்—உண்மை—எவ்வளவு நஷ்டம் நம்மால் அவருக்கு. இவ்வீட்டில் இருக்கப்படாது.

'அதுதான் சரி. எங்கே? எங்கேயாகிலும்? அளவிறந்த உயிர்கள் நிறைந்திருக்கும் மா நிலத்தில், நம்மொருவர்க்குத்தானு இடமில்லை. போகிறது சமயம் நேர்ந்தக்கால் உயிர் சேதம். கையில்?—இருக்கட்டும். எதற்கும் சிறிது இருந்தால் நல்லதுதான்' என்றுவிட்டுப் பெட்டியைத் திறந்து நான்கு ரூபா யெடுத்துக்கொண்டாள்.

திரும்பவும் அறையினின்றும் வெளியிற்சென்றாள். இச்சமயம் தோட்டத்தின் வழியாய் வெளியிற்சென்றனள். அத்தோட்டம் முழுவதும் வாழைமரங்கள். இலைகளின் நிழல்களும் நிலவின் வெளிச்சமும் இடையிடையேசேர்ந்து கண்ணுக்கு மிக அழகாயிருந்தது. அவைகளினடுவில் இவள் போய்க்கொண்டிருக்கும்பொழுது சற்று தூரத்திற்கப்பால் ஒருருவம் தோன்றிற்று. முழுவதும் இருட்டாயிருந்தால் அது தோன்றியிருக்காது. முழுவதும் வெளிச்சமாயிருந்தால் நன்றாய்த் தெரிந்திருக்கும். இரண்டுமில்லாமையால் அவ்வுருவம் அங்கிருக்கிறதோ வென்னவோ என்று சந்தேகமாயிருந்தது. இவள் இதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கையில், சலசலவென்று சத்தமொன்று கேட்டது. பார்த்தாள், உருவத்தைக்காணும் கண்டது கனவோ நனவோவென வெண்ணமிட்டாள். 'யாரங்கே?' என்றாள். ஒரு பதிலையுங்காணும், கைகால் நடுங்கிற்று. 'பயமென்ன? துணிந்துவிட்டோம். கடைசியாக வரக்கூடியது சாவு. அதற்கே பயமில்லாமற்போனபொழுது, வேறு எதற்கும் பயப்படவேண்டியது அநாவசியம்' எனத் தனக்குள்ளேயே யோசித்துக்கொண்டு தோட்டத்துக் கதவைத்திறந்து அந்தப் பக்கத்திலிருக்கும் சந்திலே திரும்பி கருடநதி மார்க்கமாய்ச் சென்றாள்.

மீனுக்ஷி! என்னகாரியஞ் செய்கிறாய்? நீயோ ஒரு பெண்பிள்ளை. உன்னால் தனியாய் எவ்வளவு தூரம் செல்ல முடியும். இரவில் எழுந்து வாசலில் செல்வதென்றால், உன் தாயாரைக் கூப்பிட்டுக்கொண்டு செல்வை! இப்பொழுது என்ன தைரியத்தின்பேரில் நள்ளிரவில் வெளியில் செல்கின்றாய்!

அவ்வாறு மீனாக்ஷி போகும்பொழுது அவள் எண்ணமிட்டதையும் அவள்மனம் இருந்த நிலைமையையும் எடுத்து யாம் கூறமாட்டோம். நமக்கு அவ்வளவு வல்லமையில்லை. கருடாநிலையுங்கடந்து அதற்கு ஒன்றரைமைல் தூரத்திற் கப்பாலிருக்கும் தென் பெண்ணையாற்றையுங் கடந்து போய்க்கொண்டிருக்கையில் இவளையுந் தாங்காமல் இவளுக்குத் தூக்கம் வந்துவிட்டது. நல்வெளிச்சம். குளிர்ந்தகாற்று. 4-மைல் நடந்துவந்திருக்கிறாள். பாதிதூக்கத்துடன் சென்று கொண்டிருக்கையில், ஓர் வாய்க்காலில் ஒரு பக்கம் நீரும், ஒரு பக்கம் உலர்ந்த மணலுமிருப்பதைக்கண்டு, இதுதான் நமக்கு மெத்தை என்று படுத்துக்கொண்டு சிறிது நேரத்திற்கெல்லாம், நன்றாயுறங்கினாள்.

வெயிலின் சூடுபட்டோ, அல்லது போதுமானவளவு தூங்கியானதினாலோ, அல்லது கூச்சலினாலோ கண்விழித்துப் பார்த்தாள்.

'அண்ணே! அண்ணே! ஓய்யா! கண்முழிக்கிறது' என்றானொருவன்.

'ஏனம்மா! நீ யார்?' என்றான் மற்றவன்.

'எங்கியோ பாத்தாப்போலே யிருக்குதடா' என்றான் இன்னுமொருவன்.

'இந்த அமாவுக்கு ஊரு விழுப்புரமோடா?' என்றான் நான்காவது மனுஷ்ய னொருவன்.

'நீங்களெல்லாம் பறையர்களாயிருந்தால் சற்று ஒதுங்கிப் போங்கள்' என்றாள் மீனாக்ஷி.

'எங்களைப் பார்த்தா பறையர்போலே யிருக்கோ நோக்கு.'

'பாப்பாத்தி பச்சரிசி தின்னுகிட்டு கொழுப்பு.'

'தெரியாத்தனமா சொல்லியூட்டா என்னடா நீ?'

'வெயிலே யிருக்கியே? எழுந்திரு அம்மா!' என்று தொடச் சென்றான் ஒருவன்.

'ஏய்! அதிகமா ஒண்ணுஞ் செய்யாதேடா! என்ன பாவம் பண்ணியோதான் இப்படிப் பொறந்திருக்கமே! இன்

னும் அந்தப் பாவமும் பண்ணவேணுமா ? ' என்றான் மற்றவன்.

இதற்குள் மீனாக்ஷி தாருகவே யெழுந்திருந்தாள்.

' இங்கே பிராமணர்கள் வீடு இருக்கிறதா ? '

' நீ பாப்பான் வீட்டுக்கா போவணும் இங்கரே! சோக்கு நகையேது? மடியிலே பணம் இருக்கே அதேது? டாணாவுக்கு வா அம்மா ! டாணாவுக்கு வா !' என்றான் ஒருவன்.

' எய் ! அந்த அம்மாவைப் பாத்தா திருடிபோலே யிருக்கோடா ! சீ போ ! ' என்றான் மற்றொருவன்.

' வா போலீச் டேசனுக்கு போலீஇஇச் !' என்றவுடன். எல்லாரும் பலமாக சிரித்தார்கள்.

' எப் ! வயலிலே காரியம் அப்படியே இருக்கிறது ! அங்கே யென்னடா வம்புப்பேச்சு ! பாத்தா ! என்றது ஒரு பிராமணர் குரல்.

' எய் ! டேய் ! எசமாண்டா ! எய் ! பேசாதிருடா !' என்றான் ஒருவன்.

' நாம் போய்சொல்றேன் எசமாங்கிட்ட, நீங்க பேசாதிருங்க' என்று ஒருவன் ஓடினான்.

இவ்வாறு ஒருவன் சென்றவுடன் ஒருவன் மீனாக்ஷியைப்பார்த்து ' அம்மா ! என்னைப்பற்றி சொல்லவையோ எசமாங்கிட்டக்க' என்றான்.

' சீ ! அம்மா நல்ல அம்மா ஆச்சே ! ' என்றான் மற்றவன்.

' இந்த அம்மா அழகைப் பாத்துகிட்டேயிருந்தாலும் போதுமடா !' என்றான் இன்னுமொருவன்.

இவர்களிவ்விதம் பேசிக்கொண்டிருக்கையில் பிராமணரும் பிராமணரைக் கூப்பிடச்சென்ற சூத்திரனும் வந்தார்கள்.

பிராமணர் பருத்தவராய், உயரமுமின்றி, குள்ளமுமின்றி, சுமார் 10 சூத்திராளுடனே சேர்ந்து

ற்றி முழுதும் விபூதியணிந்து, எதிரில்வந்தார். அவரைப் பார்த்தவுடன் மீனாக்ஷி தலைகுனிந்து கொண்டாள்.

அவருக்கு வயது 40-இருக்கலாம். எப்படியானபோதிலும் இதுவரையிலும் அயல் புருஷர்களுடன் பேசாதவள் இப்பொழுது பேசுவதென்றால் வெட்கந்தானே.

'ராம, ராம, ராம, ராம' என்று மீனாக்ஷியைச் சிறிது நேரம் உற்று நோக்கிவிட்டு,

'ராம, ராம, எந்தவூரம்மா நீ? ராம, ராம' என்றார். பதிலில்லை.

'கேளேண்டா! குள்ளா! ராம, ராம, வெறுமனே நின்றுகொண்டிருக்கிறாயே? எந்த ஊர் என்று விட்டுக் கேளடா! ராம, ராம' என்றார்.

'காதுகேட்குதோ அம்மா சொல்லேன்!' என்றான் ஒருவன்.

'சீ! காமாட்டிப்பயலே! கொஞ்சங்கூட மரியாதையில்லை. ராம, ராம! நீ கேளடா சுப்பா! ராம, ராம, ராம.'

'அம்மா! எந்த ஊரம்மா நீங்க?'

பதிலில்லை.

'வெக்கப்படராங்க' என்றான் சுப்பன்,

'எங்களகத்திற்குவா அம்மா! ராம, ராம, நான் போகிறேன், பின்னாலேயே வா!' என்றுவிட்டு பிராமணர் முன்னாலே நடந்துபோனார். மீனாக்ஷியும் அவர் பின்னாலேயே நடந்து சென்றாள்.

சில வீடுகளைத்தாண்டி திண்ணை, குறடு, இரண்டும் பெரிதாயிருக்கிற ஒரு வீட்டிற்குணுழைந்தார். இவர் முன்னாலே செல்லும்பொழுதெல்லாம் பின்னாலே மீனாக்ஷி வருகிறாளோவென்று பார்த்துக்கொண்டேசென்றார்.

உள்ளே சென்றதும் மீனாக்ஷியைப்பார்த்து 'ராம, ராம, ராம, நீயிங்கேயே இரு அம்மா, நான் உள்ளேபோய் வருகிறேன். ராம, ராம' என்று மீனாக்ஷியை உள்ளே கூடத்தில் நிறுத்திவிட்டு, இவர் சமையலுள்ளே சென்றார்.

அப்பொழுது மீனாக்ஷி அவ்வீட்டின் நிலைமையைக் கண்ணால் பார்த்தாள். அவ்வீட்டிற்கு மூன்று தாழ்வாரம், ஒரு முற்றம்; பெரியதொரு வீட்டை இரண்டாய்ப் பிரித்தால் எவ்விதம் இருக்குமோ அவ்விதம் தோன்றிற்று. முற்றத்துச் சுவரில் முட்டைதட்டின அடையாளம் இருந்தது. ஒரு மூலையில் சாணியும் உமியும் வைத்திருந்ததைப் பார்த்தால் இன்னும் சற்றுநேரத்திற்கெல்லாம் சுவர் நிறைய முட்டைகளா யிருக்கும்போலிருந்தது. கூடத்தில் ஒரு பெரிய படம் அடித்திருந்தது: அதன்மேல் ஓர் புஷ்பமாலை போட்டிருந்தது. அம்மாலை கறுமை நிறமாயிருந்ததையும், ஒட்டடைப்புள்ளிகள் நிறைந்திருந்ததையும் உற்று நோக்கினால், சுமார் ஒருவருஷத்திற்குமுன் அம்மாலை போட்டிருக்கலாம், ஒரு கிழிந்த இலை ஒன்று போட்டிருந்தது. நடுக்கூடத்தில் அது நிறைய சாதம் இருந்ததைப்பார்த்தால் யாராவது சாப்பிடப்போகிறார்களோ எனத்தோன்றும். அச்சாதம் கண்டபடி யிறைந்திருந்ததையும் இலையைச்சுற்றிலும் பருக்கைகளிருந்ததையும் பார்த்தால் யாரோ சாப்பிட்ட மீதிபோலும் இருந்தது.

இவற்றை யெல்லாம் நன்றாய் உற்றுநோக்கிக்கூட விருக்கமாட்டாள் மீனாக்ஷி. அதற்குள் ஒரு அம்மாள் உள்ளேயிருந்து வந்தாள். அவள் கட்டியிருந்த புடைவையில் சுமார் இருநூறு இடத்தில் தைத்திருக்கலாம். அது தையல் புடைவையோ அல்லது துணிப்புடைவையோ என்று சந்தேகமாயிருந்தது. இடுப்பு முதற்கொண்டு முழங்கால்வரையிலும்கட்டியிருந்தாள் அப்புடைவையை. கையெல்லாம் சாணியினால் மூடப்பட்டிருந்தது, மார்பிலிருந்த இரவிக்கையில் இடுப்புப் புடைவையிலுள்ள தையல்களுக்குச் சரியாய்க் கிழியல்கள் இருந்தன. அந்த இரவிக்கை அங்கங்களைச் சிறிதேனும் மூடாமையால் யாதுபிரயோஜனமோ வென்று எண்ணும்படியாயிருந்தது. ஆனால் அந்தம்மாள் கையை அதில் அடிக்கடி துடைத்ததைப்பார்த்தால் கைதுடைப்பதற்காக தரித்துக்கொண்டிருந்தனளோ என்னவோ என்று நினைக்கும்படி யிருந்தது.

அந்தம்மாள் வந்ததும். வாடி அம்மா! வா! பையன் எங்கே? அதைக் கட்டையிலேவைக்க. அது எங்கேயாவது ஓடிப்போய்விடுகிறதே: இலையிலே இத்தனைசோற்றையும் வைத்துவிட்டு—அடாடா! ! மண்ணி அடேமண்ணி! எப்! என் அப்பா மண்ணீ!' என்று வாசலில் போய் மண்ணியைக்கூப்பிட வாரம்பித்துவிட்டாள்.

மீனாக்ஷி இது யெங்கேயாவது உண்டா? மண்ணியெனப் பெயரிடுதலுண்டோ? என்று திகைத்துத் துக்கத்தோடு ஆச்சரியத்தையுங் கலந்துநின்றனள்.

வாசலில் போனவள் திரும்பவும் உள்ளேவந்து 'சற்றேபோய் பாருங்களேன்! அது எங்கேயோ போயிற்றே! என்னதையோ யோசித்துக்கொண்டே யிருக்கிறீர்களே? சற்றே போய்பாருங்களேன்! என்று தன்னகமுடையானை நோக்கிக் கூறினள்.

அந்த பிராமணன் இவள் கூறியதையும் கவனிக்கவில்லை இவள் வாசலில் சென்றதையும் கவனிக்கவில்லை. கையில் மாத்திரம் ருத்திராக்ஷம் இருந்ததேயொழிய 'ராமராம' என்றுங் கூறவில்லை. தன் சர்வஞானத்தையும் மீனாக்ஷியென்னு மோருருவத்தின்மேல் செலுத்தி அவளையே நோக்கி நின்றான்.

'ஐயையோ! என் மண்ணியை யார் கொண்டுபோய் விட்டாளோ! பெற்றவர் கூட இவ்வாறு கவனியாமல் நிற்கிறீரே!' என்று கண்ணால் நீர்சொரிந்து அரற்ற ஆரம்பித்தபிறகு பிராமணன்,

'என்னடி யென்ன! வந்தவளை யொன்றும் மரியாதை செய்யவில்லை மண்ணிக்கு அடித்துக்கொள்கிறாய். வாசலில்போய் பார்த்துவருகிறேன். வந்தவளுக் கென்னவேண்டுமென்று கேள்.' என்று கோபித்துக்கொண்டார்போல் சொல்லிவிட்டு வாசலில் சென்றார்.

'மறந்துவிட்டேனடியப்பா! உட்காரு! எனக்கு ஒரே குழந்தை. சுவாமிகொடுத்தது ஒரே பிச்சை. அது சாப்பிட மாட்டேன் என்கிறது. உட்காரு அம்மா! எங்கேயிருந்து

வருகிறாய்? அது இன்னும் வரவில்லையே! அதைக் கட்டையிலேவைக்க அது இப்படிப்போய்விடுமோ? அடே மண்ணி இஇ எங்கேயிருந்து வந்ததாகச் சொன்னாய்? தனியாய் வந்தாயே? என்ன காரணம்? அடா! இப்படிபோகுமோ எங்கேயாகிலும்! ஏ! மண்ணீஇ இ!' என்று பேசிக்கொண்டே போனவளை மீனாக்ஷி தடுத்து, ஆச்சரியம் துக்கத்தினும் மேலிட்டதனால் தன் வாயைத்திறந்து 'மண்ணியென்பது என்ன பெயரென்றனள். 'மண்ணியா? அதை யின்னுங் காணேமே? என்ன கேட்டாய்? மண்ணியென்பதா? எங்களுக்குப் பதினைந்துவருஷ காலமாய்க் குழந்தையில்லை. அதற்குமேலே துளசிமடமொன்றுகட்டி அதைச்சுற்றி தினம் 100 பிரதக்ஷிணம் வருவேன். அவர் தினம் 200 சூரியநமஸ்காரம் பண்ணுவர். இப்படி யிரண்டு வருஷம் பண்ணி, சுவாமி இதைக் கொடுத்தார். ஐயோ! இலையில் ஈ மொய்க்கிறதே! சாதத்தைப்போட்டு உள்ளே போய்வருகிறதற்குள்ளேயா போய்விடும். என்ன கேட்டாய் அம்மா? மண்ணியா? இரண்டு வருஷத்திற் கப்புறம் கர்ப்பமானேன் பரமேசுரன் தயவினாலே. கர்ப்பமானேனா? அதோ வருகிறதடா! எங்கேயடா போய்விட்டாய்? என் அம்மா! என் கண்ணே!' என்பதற்குள் ஒரு ஐந்துவயதுள்ள சிறுபையன் ஒருவன் ஓடிவந்தான்.

இதற்குமேல் மீனாக்ஷிக்கும் அந்த அம்மணிக்கும் நடந்த சம்பாஷணையையும் கால் நிமிஷத்திற் கொருதரம் மண்ணியைப்பற்றி யேதாவது சொல்லிக்கொண்டே போனதையும் நாம் இங்கு எடுத்துக்கூறினால் வாசிப்பவர்களுக்கேயலுப்பா யிருக்கும். அந்த சம்பாஷணையில் முக்கியமாய் இரண்டு விஷயங்கள் நடந்தன மண்ணி யென்பதன் காரணமேற்பட்டதோடு மீனாக்ஷி தன் வரலாற்றையுங் கூறினாள்.

இக்குழந்தை மைலத்தில் பிறந்ததாம், ஆகவே சுப்பிரமணியன் என்று பெயராம். செல்வமாய் மணியா, மணியா எனக் கூப்பிடுவது வழக்கமாம். ஒரு வருஷமாய் மணியா என்பது நீளமாயிருப்பது கருதி மண்ணி யென்று கூப்பிடுகிறாளாம்.

மீனாக்ஷி தான்பிறந்த ஊர் சிதம்பரமெனறும், அங்கே ஒருவருஷமாய்த் தானிருந்ததாகவும், நடுவில் அகமுடையான் தன்னை விடும்படியாய் தன் பெற்றோர்களைக் கேட்டதற்கு ஏதோ நகை போடவில்லை யெனக்காரணம் வைத்துக் கொண்டு விடமுடியாதெனச் சொன்னதாகவும், இவள் தன் புக்ககமாகிய திருக்கோயிலூருக்குப் போய்க்கொண்டிருக்கிறதாகவும், தன் பெற்றவர்களுக்குத் தெரிந்தால் விடார்களாகையால் தெரியாமலே போகிறதாகவும் சொன்னாள். இதனுண்மையைப் படிப்பவர்கள் நன்று யறிவர்கள்.

அன்றையதினம் சாப்பாடு ஆவதற்கு சுமார் 2 மணியாயிற்று. பிராமணர் சாப்பிட்டு எங்கேயோ சென்றார். அம்மாள் சாப்பிட்டுவிட்டு மீனாக்ஷியைப்பார்த்து, இங்கே யிரு, நான் அந்த அகத்திற்குப் போய்வருகிறேன். மண்ணீ! இதோ இருக்கிறாயா? வாடா அப்பா! முச்சியகத்திற்குப் போவோம், வா! அடே! முன்னாலே யோடாதேடா! கீழே கீழே விழுந்து விடுவை! ஐயோ! இது சொன்னதைக் கேட்கமாட்டேன் என்கிறதே, என்றுவிட்டு வெளியில் சென்றாள்.

மீனாக்ஷி கூடத்தில் போட்டிருந்ததோர் தொட்டிலில் உட்கார்ந்தாள். உட்கார்ந்து என்னவென்ன யோசனை செய்தனளோ யாருக்குத் தெரியும். நாம் இனிமேல் ஓரேற்பாடு செய்திருக்கிறோம். மீனாக்ஷி மனத்தில் நிகழ்ந்ததை வெளியிடுகிறதில்லை. இதற்கு முதல் காரணம் நம்மால் முடியாதென்பதே. அப்படி யவள் வெகுநேரம் யோசனையி லாழ்ந்திருக்கவுமில்லை.

ராம, ராம, ராம! என்ற சப்தமுங்கேட்டது, மீனாக்ஷியும் எழுந்திருந்தாள். பிராமணரும் உள்ளே வந்தார். உள்ளே வந்தவர் மீனாக்ஷியை நோக்கி 'அவளிங்கேயில்லையோ?' என்று கேட்டுவிட்டு வாசலில் சென்றார். சென்றவர் கதவைத் தாழ்ப்பாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தார்.

ராம, ராம, ராமா! நீ இருக்கிறது எந்த ஊர் அம்மா! ஏன் என்னோடு பேசமாட்டேன் என்கிறாய்? நான் உன்

தகப்பனாருக்குச் சரியான வயதாய் இருப்பனே. எனக்கு உன்னைப்போலொரு பெண் இருக்க முடியாது? பேசமாட்டேன் என்கிறாயே? ராமா, ராமா, ராமா! பயமில்லை!' என்று தொட்டிலிலுட்கார்ந்தார்.

மீனாக்ஷியோ இவரைப் பார்க்காமல், ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு பாதிமுகத்தை மூடிக்கொண்டு நின்றாள்.

'ராம, ராம, ராமா! இங்கேவந்து உட்காரு அம்மா, என் பெண் ஒருத்தி இருந்தால் இங்குவந்து உட்காரமாட்டாளா? பின்னால் நீயேன் பயப்படுகிறாய்? ராம! ராம!' என்று தொட்டிலிலுட்கார்ந்து தான் கூறியதற்குப்பதில் வாயாலொன்றுமில்லாமல், கண்ணினின்றும் நீர் விழுந்ததைப்பார்த்து. 'ராம ராம, இந்தத் தொடையின்மீது உட்காரு அம்மா! என் பெண்ணாயிருந்தால் இங்கேவந்து உட்காரமாட்டாளா? என் அகமுடையாள் வெளியில் போயிருக்கிறாள். இன்னும் இரண்டுமணி நேரம் வரமாட்டாள், நீ யதற்காகப் பயப்படவேண்டாம். இங்கேவந்து உட்காரு, இந்தத் தொடையின்மீது உட்கார்வதற்குக்கொடுத்து வைக்கவேண்டாமா? சாக்ஷாத் ஜகதீசனாகிய நீலகண்டனுக் கொப்பாகியவரது தொடையன்றோ இது? சூரியோதய ஸ்நானமும், காலந்தவறாத நித்திய கர்மானுஷ்டானங்களும், தினமுந்தவறாத அக்கினி ஹோத்திரமும் விடாமற்செய்கின்ற பிராமணகுலோத்தமரது தொடையன்றோ இது? தஞ்சாவூர் ஞானமும், திருவிடை மருதூர்கனகமும், திருவாரூர் ஸ்வர்ணமும். கும்பகோணம் முத்தும், பட்டணம் பாலாவும், உட்காருவதற்கு எவ்வளவோ வருந்தியும். ஸ்ரீமந் நாராயணனிடத்திலுள்ள அன்பினால் எவர்க்குஞ் சிறிதேனும் முகங்கொடுக்காத சோமயாஜிதீக்ஷதருடைய தொடையன்றோவிது?' என்று இவர் தொடையைப்பற்றி வர்ணித்ததற்குப் பதிலாக மீனாக்ஷீ கதவை நோக்கிச் சென்றதைப்பார்த்து பிராமணரும் அவள் பின்சென்று 'என் அம்மணீ! நான் சொல்வதைக் கவனியாமல் செல்கின்றனையே! இது தர்மமா! என்று அவளைக் கையால் பிடிக்குந்தருவாயில், கூச்சலிட்டுக்கொண்டு கீழே விழுந்ததைக்கண்டு 'ஆ! மாமாலக்காரி? அப்

புறம் பார்த்துக்கொள்வோம்! ராமா, ராமா, ராமா, ராமா!' என்று விரைவாய் வாசலை நோக்கி நடந்தார்.

மீனாக்ஷியிட்ட கூச்சலைக்கேட்டோ, அல்லது வெளியிற்சென்ற வேலைமுடிந்ததினாலோ, அல்லது பிராமணரது துரதிர்ஷ்டத்தினாலோ, பிராமணரும் வாசற்கதவைத் திறந்தார். அவர் அகமுடையாளும் அங்கே வந்தாள்.

பிராமணர் அவளைக் கண்டதும் சிறிதேனும் அவளோடு பேசாமல், ராம, ராம ஸ்மரணையோடு வெளியிற் சென்றார். அகமுடையாள் உள்ளே வந்து மீனாக்ஷி கீழே விழுந்திருப்பதைக்கண்டு 'குடியேட்டுப் போச்சு! குடியேட்டுப் போச்சு? குடியேட்டுப் போச்சு! ஐயையோ! குடியேட்டுப்பேச்சே! அடே மண்ணீ! குடியேட்டுப்போச்சுடா! என்னைக் கல்யாணம் பண்ணினது முதற்கொண்டு உங்கள் அப்பா இப்படித்தானடா! அந்தத் தெருவு சூத்திரச்சி வள்ளியை வைத்துக்கொண்டு இரண்டு வருஷம் அழுதார். அவளோடு போய்ச் சண்டைபோட்டு அவளைத் துரத்தினேன், ஊரைவிட்டு இந்தத் தெருவு நரசுவைக் கட்டிக்கொண்டு குதித்தார் சிறிதுகாலம். இவளோடு சண்டைபோட்டுத் துரத்தினேன். அடே மண்ணீ! என்னுடைய ஆயுசு முழுக்க உன் அப்பா வைப்பாட்டிகளோடே சண்டை போடுவதற்கே சரியா யிருக்கிறதடா! அவர்களெல்லா மாகிலும் கீழ்ச்சாதி, அடடா! மண்ணீ! நல்ல குலம்! என்ன கேடுவருமோ! குடியேட்டுப் போயுடும், மண்ணீ! என்னடா செய்வேன்! அம்மா! சபிக்காதே! ஐயையோ! பதிவிரதையைக் கெடுத்தால் பத்துவருஷம் போஜனம் அகப்படாதே! மண்ணீ! ஒரே பிள்ளை யாயிற்றே நீ யெனக்கு—' என்று புலம்பிக்கொண்டே யிருந்தாள்.

மண்ணியை நோக்கிக் கூறினாளே யொழிய மண்ணி இதையெல்லாம் கவனித்தவ னல்லன். மீனாக்ஷி முதுகு மேற்புறமாய் விழுந்திருப்பதைக்கண்டு தன் தாயார் கண்ணை மூடிக்கொண்டு, 'அம்மா அச்சா' என்னும் விளையாட்

டைச் செய்வதுபோல் இவளும் செய்கிறாள் என்றெண்ணி, மீனாக்ஷியைக் கிளப்ப முயன்றான்.

மீனாக்ஷியும் அப்பொழுதுதான் கண்விழித்தாள், கண் விழித்து எழுந்திருந்தாள். எழுந்திருந்து சுவற்றின்மேல் சாய்ந்தாள். அகத்துக்காரி கேட்ட கேள்விகளுக்கு யாதொரு பதிலும் சொல்லவில்லை. சிறுபையன் புடைவையைப் பிடித்திழுத்ததையுங் கவனிக்கவில்லை. வீட்டுக்காரி விம்மி விம்மி யழுது சபிக்காதே, சபிக்காதே யென்று கெஞ்சினதையுங் கவனிக்கவில்லை. தாயார் அழுவதைக் கண்ட பையன்கூட அழுததையுங் கவனிக்கவில்லை, மண்ணி தாயார் கையைப்பிடித்து இழுத்து 'இங்கே வா' என்று சொன்னதையுங் கவனிக்கவில்லை, சுவற்றில் சாயிந்தபடியே ஒருமணிநேரம் கண்ணால் தாரைதாரையாய் நீர்பெருக விட்டுக்கொண்டு நின்றாள்.

அவள்மனத்தில் அன்றையதினம் முழுவதும் என்னவென்ன நிகழ்ந்ததோ அவை அவளையுண்டாக்கிய பிரம்மதேவனுக்கே தெரியும். கடைசியாய் அவள் தீர்மானித்தது என்னவெனில் அன்றையதினம் இரவில் அவ்விடம் விட்டுச்செல்வது என்பதுதான்.

பிராமணர் மாலை 5-மணிக்கு வீட்டிற்கு வந்தார். வந்தவுடன் ஆரம்பித்துவிட்டாள் அம்மணி. 'அங்கே போய் வியாதி சம்பாதித்துக்கொண்டு வந்தீரே அது போராதா? அடே மண்ணீ! தோட்டத்திலேபோய் விளையாடுகிறானே! இந்தத் தெருவிலே இவளிடத்தில்போய் சொரியும் சிரங்குமாய் வந்தீரே! இது போராதா? கிணற்றில் விழுந்துவிடப்போகிறதே! அந்தப்பிள்ளை மண்ணீ? மரியாதையாய் வீட்டிற்கழைத்து வந்தவளை இப்படித்தானா செய்யவேண்டும்! இதற்குத்தானா இவ்வளவு உபசாரம் பண்ணினீர்கள்? மண்ணீ' சப்தங்கேட்கிறதே! கிணற்றில் விழுந்துவிட்டானோ? இல்லை இதோ இருக்கிறான்! அதெல்லாம் நியாயமில்லை. நான் சொல்கிறதைக் கேளுங்கள், ஐயோ! இந்த ராமாராமாவை விடுங்களேன். என்ன ராமாவேண்டி

யிருக்கிறது. கையால் செய்கிறதெல்லாம் விஷமம், வாயால் என்ன ராமஸ்மரணை ! என்கண்மணி ! தோட்டத்திலே என்னடா செய்தாய் ? ஐயோ உன் அப்பா இப்படிக் கெட்டுப் போய்விட்டாரே ! என்னடா செய்யலாம் ! நான் சொல்கிறது இப்பொழுது சிரிப்பையுண்டாக்கும், அப்புறம் என்ன கஷ்டம் வருமோ ? மகாபாவம், ஆயிற்றே !—என்று அம்மணி யென்ன சொன்னபோதிலும் பிராமணர் சிரித்துக் கொண்டு 'ராம, ராம, ராம, ராம' என்று ஸ்மரணை செய்து கொண்டு தொட்டிலின் மீது உட்கார்ந்திருந்தார்.

அன்றையதினம் இரவு மணி ஒன்பது இருக்கும். நிலா புறப்பட்டு சற்று வெளிச்சமாகிவிட்டது. வீட்டிலுள்ளவர்கள் சாப்பிட்டாய்விட்டது. பிராமணர் வாசலில் தாம்பூலம் தரித்து உட்கார்ந்திருந்தார். அவர் அகமுடையாள் சப்தம்போடாமல் வாசற்கதவை மெதுவாய் மூடிக்கொண்டு உள்ளே சென்றாள்.

மீனாக்ஷி தோட்டத்து சமையற்கட்டு வாசற்படியில் உட்கார்ந்து அவள் வழக்கம்போல் ஏதோ யோசனைசெய்து கொண்டிருந்தாள். சமையலறைக்கதவு சாத்தியிருந்தது. அப்பொழுது போய்விடலாமா, எல்லாரும் தூங்கினபிறகு போகலாமா, தோட்டத்துவழியாய்ச் செல்லலாமா, வாசல் வழியாய்ச் செல்லலாமா, என்ற விஷயங்களை யோசித்துக் கொண்டிருக்கையில் காலோசை கேட்டது. மீனாக்ஷியின் மனம் திடுக்கிட்டது. சமையலறைக்கதவு மெதுவாய்த் திறந்தது. கிணற்றில் குதித்துவிடுவோம் பிராமணன் இங்கே வந்துவிட்டான்' என்று எழுந்திருந்தாள். பிராமணன் சம்சாரம் உள்ளே வந்தாள், மீனாக்ஷியின் துக்கம் பாதி குறைந்துவிட்டது.

உள்ளே அகத்துக்காரி வந்ததும், மீனாக்ஷியைப்பார்த்து 'மண்ணி தூங்குகிறான். அவர் வாசலில் உட்கார்ந்திருக்கிறார். இதுதான் நல்லசமயம். இங்கே யிருந்தால் உனக்கு அபாயம் நேரிடும். இந்த மூன்று ரூபாயை யெடுத்துக் கொள்ளு, வேண்டாம் என்காதே ! பேசாதே ! மண்ணி

விழித்துக்கொள்வான். வாங்கிக்கொள்ளு, இந்தத் தோட்டத்தின் வழியாய் காலடியோடு நடந்துபோ! நல்ல சாலையில் கொண்டுபோய்விடும், பாம்பு பயமில்லை, மண்ணி யமுகிறுப்போலிருக்கிறது, உன்மானம் வேண்டுமென்றால் போய்விடு' என்று மூன்று ரூபாயை அவள் மடியில் வைத்துவிட்டுப் போய்விட்டாள். மீனாக்ஷி யோசித்தாள் சற்றுநேரம். போவதற்காக யோசிக்கவில்லை, ரூபாயை யெடுத்துக்கொண்டு செல்வதா வேண்டாமா என்று சற்றுநேரம் யோசித்து, கடைசியில் ரூபாயையும் எடுத்துக்கொண்டு தோட்டத்தின் காலடிவழியாய் மெல்லநடந்துபோய் சாலையை யடைந்தாள்.

சாலையிற்போய் நின்றுகொண்டு இம்மார்க்கமாய்ச் செல்வதென்று தெரியாமல், திக்குகளும் தெரியாமல், சந்திரனுதயமாகிப் பிரகாசிக்கின்ற இடத்தைக் கிழக்கென்று வைத்துக்கொண்டு, திக்கு கணக்குப்பண்ணி தன்னூர் இருக்கும் திசையை யோசித்து அதற்கு எதிரேயுள்ள திக்கில் போவோமென்று காலை வைக்குமளவில் 'அங்கே யார்?' என்று தாழ்ந்த மிருதுவான குரலொன்று இவள் காதில் பட்டது.

அக்குரல் காதில்பட்டதும், பிராமணன் தான் திரும்பி வந்துவிட்டான் என்ற எண்ணத்தினால் இரண்டடி பின்சென்றாள். பிறகு குரல்வந்த இடத்தை நோக்கினபொழுது ஒரு ஸ்திரீயைக்கண்டாள். ஸ்திரீ ஜாதியைக்கண்டதும் இவள் பயம் நீங்கியது.

யாரங்கே யென்றதற்குப் பேசாமலிருந்ததைப் புதிதாய் வந்தவள் கண்டு 'பயப்படாதேயுங்கள். அம்மணீ! இறகெல்லாம் கிள்ளியதனால் பறப்பதற்கு சிறிதேனும் சக்தியற்று நட்டாற்றில்மிதந்து, உதவிபுரிவதற்கு யாருமில்லாமல், மரணத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் ஏ யாரை யென்செய்யும். பிறந்தகம் புக்ககமாகிய ஈரகத்திலும் தீராத்துயரமடைந்து சாவதற்குப்பதிலாக அலைந்து திரியும் ஏழையாகிய நான் தங்களை யென்னசெய்யப் போகிறேன்! பயப்படாதேயுங்கள்' என்று கூறியவுடன் மீனாக்ஷிக்

குத் தைரியம்வந்தது. 'பிறந்தகம், புக்ககம்! நான்தான் இரண்டிலும் கஷ்டப்பட்டேன், இவள்கூடவா, நல்லது!' என்று தன் மனத்தில் நினைத்துக்கொண்டு 'உங்கள் பெயரென்ன?' என்றாள். அதற்குப் புதிதாய் வந்தவள் 'என் பெயர் அதிர்ஷ்டமிலி யென்று சொல்லலாம். ஆயினும் என் சமாசாரம் முழுவதும் அறியாதவர்கள் வாலாம்பாள் என்று கூப்பிடுவார்கள். தங்கள் நாமதேயத்தை விசாரிக்கலாமா?' என்றாள்.

அதிர்ஷ்டமிலியாம்! நம்மைப்போலவே யிருக்கிறாளே என்று தன் மனத்திலெண்ணிக்கொண்டு 'என்பெயர் மீனுக்ஷி' யென்றாள், 'நீ யிருக்கிறதைப்பார்த்தால் ஏதோ என்னைப் போல் கஷ்டப்பட்டவளாய்க் காண்கிறாய்' என்று வாலாம்பாள் கூறியவுடன் மீனுக்ஷியின் கண்களில் நீர் ததும்பியது 'நீ யழுவதைப்பார்த்தால் எனக்கும் மிகவும் விசனமாயிருக்கிறது, நாம் இரண்டுபேரும் இப்படியே போவோம்' என்றாள்.

மீ—நான் கூடலூர் மார்க்கமாய் வரமாட்டேன், அதற்கு எதிர்ப்புறமாய்ப் போதல்வேண்டும்.

வா—அப்படியே, எனக்குமதுதா னிஷ்டம்.

என்றவுடன் இருவரும் புறப்பட்டு ஏதோ சில வார்த்தைகளைப் பேசிக்கொண்டு சென்றார்கள்.

புதிதாய் வந்த வாலாம்பாளுக்கு வயது 30-இருக்கலாம். பருமனாயிருந்தாள், செகப்புநிறம், உயரம் ஐந்தரை அடியிருக்கலாம். அவர்கள் வழிமுழுவதும் துக்கமான குரலோடு பேசிக்கொண்டு சென்றார்கள்.

வா—கூடலூர் மார்க்கமாய்ப் போகக்கூடாதென்றாயே, ஏன்?

மீ—கூடலூர் மார்க்கமாயல்ல, நான் சிதம்பரம் போகக்கூடாது. என் பிறந்தஊர் சிதம்பரம்.

என்றவுடன் வாலாம்பாள் சிரித்தாள்.

மீ—ஏன்ன சிரிக்கிறாயே?

வா—என் பிறந்த ஊரும் சிதம்பரந்தான். உன் ஊரும் சிதம்பரமா வென்று சிரித்தேன்.

மீ—அப்படியென்றால் சிதம்பரந்தானே உன் பிறந்தகம்?

வா—ஆமாம்.

என்றவுடன் மீனாக்ஷிக்குப்பயம் உண்டாயிற்று. வாலாம்பாள் மீனாக்ஷியை எந்தத் தெரு, யாரகம் என்று கேட்டால் என்ன சொல்வள் மீனாக்ஷி. யாராவது ஒரு பெயரைச் சொன்னால் வாலாம்பாள் கண்டுபிடித்து விடுவளோ என்று பயப்பட்டுக் கொண்டிருக்குங்கால் வாலாம்பாள் பேச வாரம்பித்தாள்.

வா—என் கதையை நான் சொல்லவாரம்பித்தால், ஒரு பெரிய புத்தகம் எழுதிவிடலாம். எனக்குக் கலியாணம் ஆனது முதற்கொண்டே துக்கம்.

மீனாக்ஷி—(மனத்திற்குள்) எனக்கும் அது முதற்கொண்டுதான் துக்கம்.

வா—கலியாணத்தின்போது பொய்த்தந்தியும் பொய்க் கடிதங்களும் எதேஷ்டம். என்ன அம்மா! பின் தங்குகிறாய். உடம்பு சரிப்படவில்லையா என்ன?

மீ—இல்லை. எதையோ நினைத்துக் கொண்டிருந்தேன்.

வா—என் புக்ககம் தஞ்சாவூர், என் மாமனார் டெபுடி கலெக்டர்.

மீ—(மனத்திற்குள்) என்னைப் பரிகாசம்செய்கிறாளோ? சீ! உண்மைதான் போலும், அழுகிறாள்.

வா—என் மாமனார் டெபுடி கலெக்டராயிருந்தா லென்ன? டிஸ்டிரிக்டு முனிசீபாயிருந்தா லென்ன? என் அகமுடையானுக்கு வேறு கலியாணம் பண்ணிவைத்து விட்டார்.

மீ—என் சங்கதி யெல்லாம் உனக்கு என்னமாய்த் தெரியும் என்று கேட்கலாமா என்று வாயெடுத்தாள். திரும்பவும் அது உசிதமல்லவென்று பேசாதிருந்துவிட்டாள்.

வா---ஒன்றா? எவ்வளவுகஷ்டம் எனக்கு? சாந்திமுகூர்த்தத்தின்போது என்பெயரில் இல்லாத பொய்யையெல்லாம் ஏற்படுத்தி யாரோ கடிதம் எழுதினார்கள். அதனால் என் அகமுடையானுக்கு வருத்தம்.

என்று வாலாம்பாள் விம்மியழுதாள். மீனாக்ஷியும் தன்னையறியாமல் துக்கம்வரவே தானுமழுதாள்.

வாலாம்பாள் அழுதுகொண்டே 'இதுமாத்திரமா? ஸ்வாமி யென்னை யெந்த விஷயத்தில் கஷ்டப்படுத்தலாமோ, அவைகளிலெல்லாம் கஷ்டப்படுத்திவிட்டார். வேறுகலியாணம் பண்ணினது போதாதென்று மான நஷ்டத்திற்குப் பிராதும் பண்ணினார்?' என்றவுடன் மீனாக்ஷிவாயினின்றும் அவளையறியாமலே எதற்காக மான நஷ்டம்?' என்னும் வார்த்தைவந்தது.

அதற்கு வாலாம்பாள் 'நான் நபும்ஸகமென்றும்—' என்றதற்குள் மீனாக்ஷி 'என் சமாசாரங்கள் உனக்கென்னமாய்த் தெரியும்?' என்றாள்.

வா—உன் சமாசாரங்கள் எனக் கென்னமாய்த் தெரியும்? நான் இப்பொழுது தானுன்னைப் பார்த்தேன், உனக்கும் இவ்வளவுகஷ்டங்கள் நேர்ந்ததா? என்னைப்போல் கஷ்டப்பட்டவர்கள் பூலோகத்தி லிரண்டுபேர் இருக்கிறார்களா?

என்று கண்ணால் தாரைதாரையாய் நீர்சொரிந்து அழுதாள்.

மீனாக்ஷி மிக்க வருத்தமடைந்தவளாகி 'கேஸ் என்னமாயிற்று?' என்றாள். 'கேஸ்முடிவதற்குள் நான் ஓடிவந்துவிட்டேன்' என்று வாலாம்பாள் சொல்வள் என்று மீனாக்ஷிக் கெண்ணம்.

ஆனால் வாலாம்பாள் 'கேஸ் எங்களுக்கு விரோதமாய் முடிந்தது. பிறந்தகத்தில் பிறகு 10-வருஷம் இருந்தேன். அது முதற்கொண்டு இவ்விதம் அலைந்து திரிகிறேன். என்னுயிரை மாய்த்துவிடலாமென்று அநேகதடவைகளி லெத்தனம் பண்ணினேன். உயிர்விடுவதனால் யாதுபயன்? இரு

ந்து இன்னும் இவ்வுலகத்தில் நடக்கும் வேடிக்கைகளையெல்லாம் பார்ப்போம்' என்று மொழிந்தனள்.

மீனாக்ஷிக்கு ஆச்சரியம் ஒருபக்கம், பரிதாபம் ஒருபக்கம், தீராத்துயரம் ஒருபக்கம், சந்தோஷம் ஒருபக்கம். தன்னைப்போலவே இவளும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனளே என்ற ஆச்சரியமும், அழகான ஸ்திரீகளுக்கு இப்படிக் கஷ்டம் வருகின்றதேயென்ற பரிதாபமும், தன் நிலைமையை யோசித்ததனால் துக்கமும், இராக் காலத்தில் கூட ஒருத்தி துணைக்குச் சேர்ந்தனளே யென்ற மனச்சந்தோஷமும் உண்டாயின.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு இரண்டுமைல் தூரம் சென்றார்கள். அதற்குள் இருவரும் மிக்க சிநேகிதர்களாகிவிட்டனர். வாலாம்பாள் மீனாக்ஷியைப்போல் அவ்வளவு படிக்காவிட்டாலும் சாதாரணமான ஸ்திரீகளுக்குச் சற்று அதிகமாகவே படித்திருந்தாள். ஸ்திரீகளைப் பற்றியும், அவர்களைப் புருஷர்கள் கஷ்டப்படுத்துவதைப் பற்றியும் வெகுநேரம் பேசினார்கள். பிறகு இரண்டுபேரும் இந்த இடத்திற்குப் போவதென்று பேசினார்கள். பிறகு சங்கீத ஞானத்தைப்பற்றி சற்றுநேரம் பேசினார்கள். இவ்வாறு இரண்டுமைல் இருவரும் சென்றவுடன் :

சாலைக்கருகாமையில் ஓர் மண்டபம் பாழடைந்து இருப்பதைக்கண்டு, வாலாம்பாள் ' இதில் பொழுதுவிடியும் வரையிலும் படுத்திருப்போம்' என்றாள்.

இதற்கு மீனாக்ஷி ' இங்கே யாராவது வந்து உதைத்தாலும் கேள்வி முறை யிருக்காதே. மனுஷ்ய சஞ்சாரமுள்ள இடத்தில் போவோம்' என்றாள். ' எங்கே யிருந்தாலென்ன? யாருதைத்தாலென்ன? இத்தேகம் எக்கேடுகெட்டாலென்ன? உயிர் எவ்வளவு சீக்கிரம் போகிறதோ, அவ்வளவும் நமக்கு சவுக்கியந்தான்' என்றாள்.

அதற்கு மீனாக்ஷி ' உயிர்போவதி லெனக்கும் இஷ்டந்தான். மானம்போய்விட்டால் என்னசெய்யலாம்? என்று கேட்டாள், ' மானம்போவதாயிருந்தால் உயிரை மாய்த்துக்

கொள்வேன். இதோ பார்த்தாயா என் கையில்? இதனால் ஒரேகுத்து கழுத்தில், பிராணம் உடனே போய்விடும்' என்று தன்னிடத்திருந்த கத்தியையெடுத்து மீனாக்ஷியிடத்தில் காண்பித்தாள்.

கத்தியைப் பார்த்ததும் மீனாக்ஷிக்கு சந்தேக முண்டாயிற்று. தன்னைக்குத்திக் கொன்றுவிடுவளோ என்று நினைத்தா ளாயினும் அச்சந்தேகத்திற்குச் சமாதானமாகக் 'கொன்றுவிட்டால்மிகவும் நல்லது என்று' எண்ணி வாலாம்பாளைப்பார்த்து 'சரி படுத்துக்கொள்வோம் இராக்காலத்தில் துணை யொருவரும் இன்றி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க்கிற சமயத்தில் உன்னை யனுப்பினரே ஜகதீசன், ஆஹா! ஈசுவரா! சற்றேனு மிரக்கமற்றவரென்று எண்ணியிருந்தேனே! உமக்கும் சற்று இரக்கம் இருக்கின்றதுபோலும்! என்று ஸ்வாமியைத் தியானம்செய்து இருவரும் மண்டபஞ் சென்று அங்கிருந்த குப்பைகளை வாலாம்பாள் தன்னிடத்திலிருந்த கந்தையினால் தட்ட, இரண்டுபேரும் வெவ்வேறாய்ப் படுத்துக்கொண்டனர். வாலாம்பாள் மீனாக்ஷியை நோக்கி 'பயமாயிருந்தால் கட்டிக்கொண்டு படுத்துக் கொள்கிறேன்' என்றாள். மீனாக்ஷி 'வேண்டாம். நிலா வெறிக்கிறது, பயமென்ன' என்று மறுமொழி கூறினாள். பிறகு இருவரும் பேசிக்கொண்டே வெகுநேரம் இருந்தனர்.

* * * *

அறையதினம் இரவு சுமார் 12-மணியிருக்கும். அவர்கள் படுத்திருந்த மண்டபத்திற்கு அரை மைல் தூரத்திற்கிப்பால் இரண்டுபேர் பேசிக்கொண்டு சாலையில் நடந்து வந்தார்கள். அவர்கள் அதிக வேகமாய்ப் போவதற்கு முடியாமலும் மெதுவாயில்லாமலும் இரண்டிற்கும் நடுத்தரமான நடையோடு சென்றனர். அவர்களில் ஒருவன் உயரமாயும் மற்றவன் குள்ளமாயும் இருந்தான். குள்ளமானவனைக் குள்ளனென்றும். உயரமானவனைத் தொழில்பற்றிக் கள்ளனென்றும் அழைப்போம்.

குள்—போடா! அவங்களை விட்டேட்டியேடா!

கள்—இத்தான் ! கலியாலம்டா அப்பா இது ! கலியாலம் ! நல்ல மாம்பயத்தை நாம் மாத்திரம் திங்கக்கூடாது. தோயனை யயைத்துக்கிட்டுப் போவம் இன்னாட்டு வந்தேன், நல்லது செய்யலாமா இந்தக் காலத்திலே !

கு—அதெல்லாம் சரிதாண்டா, அவங்களை விட்டேட்டியேடா !

க—அவங்களையும பிடிச்சுக்கிட்டு உன்னையும் அயைத்துக்கிட்டு எப்படி வாமுடியும் ? நீ தான் செல்ராயே !

கு—நீ யரையோ பாத்து அவங்க இங்கரே ! அயவு இங்கரே ! சோப்பு இங்கரே ! பெருத்த குலம் இங்கரே! தனியா வருவாங்களோ ? போடா போ, இளிச்சவாயா ? பூத்தியா குடிச்சுவிட்டு ஏமாந்து பூட்டே !

க—டேய் ! டேய் ! வெச்சையா, நடந்துபோவம், அவங்க இல்லாட்டிப்போனா எங்கள்ளத் தொழிலைவிட்டுடரேன்!

கு—சரிடா !

என்கவே இருவரும் விசையாய் நடக்க முயன்றனர். முயன்றனரேயொழிய முடியவில்லை.

கள்ளன் இங்கேயொரு யுக்தி பண்ணினன். சிறியவள் தான் அழகென்று தெரிந்து சரி சின்னவ நேக்கு பேரும், அப்பரம் என்றான்.

கு—அவங்க இப்ப ஆப்பிட்டாக்கே—

(ஐயையோ ! இங்கே யொருவரும் இல்லையா ! ஐயையோ !)

என்ற சப்தம் இவர்கள் காதில் விழுந்தவுடன் கள்ளனும் குள்ளனும் சப்தம் விழுந்த இடமாகிய மண்டபத்தை நோக்கி யோடினார்கள்.

இவர்கள் மண்டபத்துக்குப் பத்து கஜம் வரையும் சென்றிருப்பார்கள். இவர்கள் ஓடின ஓசையைக்கேட்டு வாலாம்பாள் மண்டபத்தினின்றுங் கீழே குதித்து ஓடினாள்.

கள்ளன் குள்ளனை நோக்கி ‘ உங்கூத்தியா அதோ போராடா ! ஓடோ ! ஓடோ !’ என்றான்.

குள்ளன் வாலாம்பாளை நோக்கி 'அடீ! என்னை ஏமாத்திக்கிட்டு ஓடரே? அடீ! நான் புருஷன். நீ ஸ்திரீசாதி, உன்னாலே முடியாதுடீ! அடீ! ஓடுரியா!' என்று சொல்லிக்கொண்டு வாலாம்பாளைத் துரத்திக்கொண்டோடினான்.

வாலாம்பாளோடின ஓட்டம் குள்ளன் திருடனாயிரா விட்டால் ஓடியிருக்கமாட்டான். வாலாம்பாள் இன்னும் நன்றாயோடி யிருப்பள். புடவை அவளைத் தடுத்தது. குள்ளனோ தனக்கு அகப்பட்ட ஸ்திரீ ஓடுகிறாளே என்ற கோபத்தினால், எவ்விதத்திலேனும் அவளைப் பிடித்துவிடவேண்டுமென்ற வெண்ணங்கொண்டு தன்பலம் முழுவதையுஞ் செலுத்தியோடினான். இவ்வாறு வாலாம்பாள் முன்னும் குள்ளன் பின்னுமாக ஒருமைல் ஓடியபிறகு, திடீரென வாலாம்பாள் நின்றுவிட்டாள். குள்ளனும் அவளருகிற்சென்று நின்றான். வாலாம்பாள் அவனை நோக்கி 'உனக்கு என்னிடத்திலிருக்கிற நகைகளில் பாதி கொடுத்துவிடுகிறேன். என்னைப்பிடித்து நீ செய்யப்போகிறதென்ன? உயர்ந்த நகையொன்றைக்கொடுக்கிறேன். வாங்கிக்கொண்டு என்னைவிட்டுவிடு' என்றாள். அதற்குக் குள்ளன், 'ஆ! முண்டே! ஆப்புட்டுக்கிட்டியா? ஒன்னக்கை யிங்கே யாருக்குடீ வேணும். ஒன்னகையை நீயே வச்சுக்கோ! நான் இன்னும் வேண்டிய நக்கை கொண்ணுந்தாரேன் போட்டுக்க! என்னைக் கட்டிக்கோ, அயவு மகளே!' என்று அவளைக் கட்டிக்கொள்ளப் போனான்.

அதற்கு வாலாம்பாள் 'சீ! முட்டாள், நான் ஸ்திரீயென்றெண்ணி யிருக்கிறாய் நீ! நானும் உன்னைப்போல் புருஷன். உன்னிலும் மேலான குலத்தில் பிறந்தவன். உன் பெயரும் நீயிருக்குமிடமும் அறிந்தவன் நான். உனக்கு நகை கொடுக்கமாட்டேன். இந்தப் புடைவையை யெடுத்துக்கொள். இல்லாவிடில் வா சண்டைக்கு!' என்று வாலாம்பாள் தன் புடவையை யவிழ்த்து விட்டு தன் உண்மையான புருஷசரீரத்தைக் காண்பித்து அங்குகிடந்ததொரு பெரிய தடியை யெடுத்துக்கொண்டாள்.

நான் இவ்வளவுதூரம் கஷ்டப்பட்டுத் துரத்திவந்த வாலாம்பாள் புருஷனாய்ப்போனதனால் குள்ளனுக்குண்டாகிய துக்கம் வாசிப்போர் ஆச்சரியத்தினும் உயர்ந்ததே. குள்ளன் தன்தோழன் கள்ளனை யோசித்துக்கொண்டு 'டேய்!' என்று ஆரம்பிப்பதற்குமுன், வாலாம்பான் 'ஏய் மரியாதையாய்ப்பேசு' என்றான் அதற்குக் குள்ளன் 'தாங்கதாம் புருசனாப்பூட்டிங்க. தங்கூட வந்தாளே யொத்தி, அவளும் ? புருசனா ?' என்று கேட்டான்.

அதற்கு வாலாம்பான் 'அவள் உயர்குலத்திற் பிறந்தவள், நான் அவளை யுத்தேசித்து தான் இந்தவேஷம் தரித்து வந்தேன், நீங்கள் இன்னும் சற்றுநேரம் கழித்துவந்தீர்களானால் நான்வந்தகாரியம் நிறைவேறியிருக்கும். இன்னுமொருதரம் பார்த்துக்கொள்வோம். இதோ இந்த ஒரு ரூபாயும் எடுத்துக்கொள்! புதுகேள்வி யொன்றுங் கேட்காதே! என்று ஒரு ரூபாயையும் எரிந்துவிட்டு இடுப்பில் குஸ்தி பழகுகிறவன் கட்டுகிற வேஷ்டிபோல் ஒன்றைத்தரித்துக்கொண்டு வேகமாய்ச் சென்றான்.

குள்ளன் சிறிய சுமைதாங்கிக் கம்பம்போன்று சற்று நேரம் ஒன்றும் பேசாமல் நின்றவிடத்திலேயே நின்றான். பிறகு கள்ளன் மீனாக்ஷியைப்பற்றிக் கொண்டு ஓடிவிடப்போகிறான் என்கிற வெண்ணத்தின்பேரில் மண்டபத்தை நோக்கி விரைவாய்ச் சென்றான். அங்கே மீனாக்ஷி யழுதுகொண்டு மண்டபத்தில் சாய்ந்துநிற்பதையும், அவளுக்கு மூன்றுகஜம் தூரத்திற்கப்பால் கள்ளன் நிற்பதையும் கண்டான், குள்ளன் கள்ளனருகிற் சென்றதும், அவன்முதுகில் பளீரென்றடித்து 'ஆங்! படவாப்பயலே! புருசயன் கிட்ட என்னைக் காட்டிவிட்டு, இங்கே இவளை நீ வச்சிக்கிட்டிருக்கயா ? ஏமாந்த சோணாசலம் இண்ணு நெனச்சிகிட்டியோ ?' என்றான். அடித்தவலி பொறுக்கமாட்டாமல் தன்பலம் எல்லாவற்றையுஞ் சேர்த்துக்கொண்டு கள்ளன் குள்ளன் கன்னத்தி லறைந்தான்.

குள்ளன் அடியற்ற மரம்போல் கீழேவிழுந்தான் கள்ளன் பழையசினேகிதத்தினால் குள்ளனைப் பார்த்துக்கொண்டே சிறிதுநேரம் நின்றான். கண்ணீர் தளும்பியது.

பிறகு கள்ளன் மீனாக்ஷியைநோக்கி 'இம்மே யாருதென்ன புரோசனம்? வேணுமோ வாணுமோ, நான் தான் நோக்கு புருசன். வீட்டுக்கு வா, வைக்க இருக்குது. நற்றைய கட்டில் போலே மெத்து இண்ணு ஒசரம்மா போடரேன். மோடும் பள்ளமுமா பலகையிலே படுத்து கிட்டு அவத்தைப் படராங்களே, வைக்க மத்தைக்கி சமானமாகுமா அதெல்லாம்? அவந்திப்பட்டி கலுக்டராய் இருந்தாலுஞ்சரி, ஐகோட் வக்கிலா யிருந்தாலுஞ்சரி, ஜில்லா கலுக்டர் வள்ளைக்காரனா யிருந்தாலுஞ்சரி, இந்தக் கரா முனிசீபு 'சுப்பாரெட்டியே யாயிருந்தாலுஞ்சரி, அவங்க வீட்டு நகையெல்லாம் நம்ப வீட்டு நகைதான், தெனம் ரெண்டணா இடியாப்பம், முருக்கு, சுண்டல், எங்கிருந்தாலும் வாங்கித்தாரேன். இம்மாத்தந்தானா இங்கிரியோ? இந்தத் தோட்டக்காரன் நம்பளுக்கு வேண்டியவன். எல்லாப் புசுப்பமுங் கொடுப்பான்" என்று சொல்லிக்கொண்டே ஒன்றின்பின்னா லொன்றாய் மூன்று கற்களை யெரிந்தான். குள்ளன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தானே சொழிய இறக்கவில்லை. மூர்ச்சை தெளிந்தவுடன் சத்தப்படாமலெழுந்திருந்து நல்ல கற்களாய் மூன்றறைப் பொருக்கிக்கொண்டு முன்சொன்னவாறு விட்டெரிந்தான்.

முதற்கல் பின்றலையிற்பட்டு புத்தியைக் கலக்கியது, இரண்டாங்கல் முதுகில் எலும்பிற்குச் சற்று இப்பால்பட்டு கீழே விழச்செய்தது, மூன்றாங்கல் ஹிருதயத்திற்கு சிறிது கீழேபட்டு காயத்தை யுண்டாக்கியதனால், சிறிது சிறிதாய் இரத்தம் கீழே சிந்திக்கொண்டிருந்தது.

கள்ளனிவ்வாறு மூன்று கற்களினால் கீழே விழுந்ததும் குள்ளன், தன்றோழன் மார்பில் கைவைத்துப்பார்த்து 'ஆள் பூட்டான். ஐயோ! சின்னவயசு மொதக்கொண்டு தோயங்களாச்சே! நம்பரெண்டுபேரும் இம்மே எப்படா சேரப்

போவோம்? அடீ நோக்காகத்தாண்டி' என்றுகிட்டப்போனன.

'ஏய்! அங்கே யென்ன கூச்சல்' என்ற சப்தங்கேட்டது. குள்ளன் ஏதோ உளறிக்கொண்டு ஓட்டம்பிடித்தான். இராத்திரியில் சாலையில் திருடர்களின்றிச் சமாதானமாயிருக்கும்படிச் செய்வதற்கேற்பட்ட சேவகனொருவன் வந்தான். குள்ளனேடுவதையும், கள்ளன் இறந்துகிடப்பதையும் மீனுக்ஷி மண்டபத்தில் சாய்ந்துகொண்டு நிற்பதையும் பார்த்து, சேவகன் 'இது யாரிப்படிச்செய்தது?' என்று மீனுக்ஷியைக் கேட்டான்.

ஒன்றின் பின்னொன்ருய் ஒருமணி நேரத்திற்குள் இவ்வளவு சங்கதிகள் நேர்ந்ததனுல் பிரமித்து நின்றவளாதலின் சேவகன் கேள்விக்குப் பதிலொன்றுஞ் சொல்லவில்லை.

'கொலையன்ருே நடந்திருக்கிறது? யார் இப்படிச் செய்தார்கள்?' என்று மறுபடியுங் கேட்டான் போலீஸ் சேவகன். கொலையென்றவுடன் மீனுக்ஷி தூக்கத்தினின்றும் விழித்தவள்போன்று 'இப்பொழுது ஓடினவன் கல்லெறிந்தான்' என்ருள்.

சேவ—கல்லெறியவேண்டிய காரணம்?

மீனுக்ஷி நடந்த விஷயங்களைச் சொல்வதற்கு வெட்கப்பட்டாள். ஆயினும் கேட்பவன் தாழ்ந்த சாதியாதலினுலும் நியாயத்தை வெளியிடவேண்டுமாதலினுலும், இப்பொழுதியம்பாவிடினும் கோர்ட்டிற்குச் சென்றபோது கூறவேண்டும் ஆதலினுலும், அவனை நோக்கி

'என்னைப்பற்றி இவர்கள் இரண்டுபேருக்கும் சண்டை நடந்தது. அதின்முடிவு இவ்விதம் ஆயிற்று?' என்ருள்.

சே—நீ யார்?

மீ—அது இப்பொழுது நான் சொல்லமாட்டேன்.

சே—இவர்களா உன்னைப்பற்றி சண்டைபோட்டனர்?

ஆஹா! அழகு பொருந்திய உன் தேகத்தை ஸ்பரிசம் செய்வதற்கு இவர்களா யோக்கியர்? பொன்போன்ற திருமேனியைத்தொடப் பொன்போன்ற வேறு சரீரம் வேண்

டாமா? என்னைப்போன்ற புண்ணியசாலிகளுக்கென் றேற்பட்ட உடலைக் கேவலம் திருடர்கள் ஸ்பரிசம்செய்ய ஆரம்பித்ததனால் இக்கதி யடைந்தனர். இங்கே யிருப்போமா? இல்லாவிட்டால் என் அகத்திற்கு வருகின்றாயா?

மீ—நீ பேசுவதைப்பார்த்தால் திருடர்கள்வந்த எண்ணத்தோடு நீயும் வந்தாப்போலிருக்கின்றது. ஆகையால் என்னைத் தனியேவிட்டுப் போய்விட்டால் மிகுந்த நலமாயிருக்கும், நீ போகாவிட்டாலும் நான் போகிறேன்

என்றுசொல்லி ஒரு அடியெடுத்து வைத்தாள்.

சே—இவ்வளவு சீக்கிரமா? சற்றேநின்று நான் சொல்வதைக்கேள். திருடர்களோடு சேர்ந்திருப்பதும் என்னோடு சேர்ந்திருப்பதும் ஒன்றென்றல்லவோ நினைத்தனை! வெகு நன்று! பூலோகத்தில் எல்லா காரியங்களும் எல்லா பிராணிகளும் ஒழுங்காய், கிரமமாய், வரிசையாய், நீதியாயிருத்தல் வேண்டும் என்று உத்திரவு செய்திருக்கும் கடவுளுக்கு விரோதமாய் நடக்கும் கள்வர்களும் அவ்வுத்திரவைத் தலைமேற்கொண்டு வெகு நியாயமாய் நடக்கும் நாங்களும் ஒன்றென்றல்லவோ கூறினை! வெகு நன்று! யாவராலும் சபிக்கப்பட்டு சதாகாலமும் கண்டு பிடிக்கப்படுவோமோ என்னும் பயத்தினால் பீடிக்கப்பட்டு வருந்தும் திருடர்களும் பயமென்பதே சிறிதேனுமின்றி எங்கேனும் வாழ்த்துபவர்களேயொழிய சபிப்பவரெவருமின்றி, சந்தோஷமாய் வாழ்ந்திருக்கும் நாங்களுமொன்றென்றல்றவோ கூறினாய்! வெகு நன்று! ஒரு மாதமோ இரண்டு மாதமோ தேகத்தின்மேல் நீரே படாமல் சுமார் ½-அங்குல கனத்திற்குத் தேகமுழுவதும் அழுக்கினால் மூடப்பட்டு கற்களினாலும் முட்களினாலும் காயப்பட்டுப் பார்ப்பதற்கு கோரமாய் விளங்கும் திருடர்களும், சதாகாலமும் வெள்ளைவெளேலென்று கண்ணைப் பார்க்கும் ட்ரீல் உடுப்பினால் மூடப்பட்டு தலைக்கு செகப்புத் தலைகுட்டை தரித்து, தினந்தோறும் பியர்ஸ், ரோஸ், கூடி கூரா, கார்பாலிக் என்னும் பலவித சோப்பினால் உடம்பை சுத்திசெய்து தங்கம்போல் பிரகாசிக்கும் நாங்களும் ஒன்றென்றல்லவோ எண்ணினை! வெகு நன்று. குடியிருக்க வீடும் குடிக்கப் பாத்திரமும்—

மீ—நீ சொல்வதெல்லாம் காதுக்கு ஆநந்தமாய்த்தா னிருக்கின்றது. நீ சொல்லும் விதத்தைப்பார்த்தால் படித் தவன்போலிருக்கின்றது. ஐயோ! உன் படிப்பையெல்லாம் இப்படியா வீணாக்கவேண்டும்? உன் உடுப்பைப்பார்த்தால் அக்கிரமங்களை கிரமமாக்குபவன்போலிருக்கின்றது. ஐயோ நீயே அக்கிரமம்செய்ய வாரம்பிக்கலாமா? உன் கையிலிருக் கும்——

சே—சற்றே நில்! என் கண்மணி! என் படிப்பை வீணாக்குகிறேனென்றல்லவோ கூறினை. படிப்பதன் முக்கியப் பயனை யறியாதவள் நீ! ஸ்திரீகளோடு மிருதுவாய் சம்பா ஷிப்பதற்கும், அவர்களைத் தேவர்களோடு ஒப்பிட்டுப் பூசிப் பதற்கும், பக்ஷம் என்னும் ஒரு காரணம் ்ங்கலாக வேறு எக்காரணங்கொண்டும அவர்கள்மேல் கைபோடாமலிருப் பதற்கும், இன்னும் அவர்களை எவ்வெவ்விதமாய் உயர்த்த லாமோ அவ்வவ்விதமாய் உயர்த்துவதற்கும் அன்றிப்படிப்பு வேறு எதற்காக என்று நினைத்தனை? நான் கிரமம்செய்யா மல் அக்கிரமம் செய்கிறேன் என்றல்லவோ சொன்னாய். ஆஹா! கேவலம் படியாத மூடர்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்படுகிறவளை அவர்களிடத்தினின்றும் நீக்கி அழகுள்ள வொருவனிடத்தில் விடுவதைக்காட்டிலும் மிக்க கிரமமுமுண்டோ?

மீ—படிப்பின் பயனும், கிரமத்தின் அர்த்தமும் ஆஹா நன்கறித்தவனீ!

சே—மணியோ சுமார் இரண்டிருக்கும் இப்பொழுது. சந்திரனே வெகு தாவள்யமாய்ப் பிரகாசிக்கின்றான். கால மோ குளிர்ந்தகாலம். ஆஹா! அந்த ஆலமரத்தின்கீழ் பார்த் தாயா? மரத்தின் இலைகளின் நிழல்களும், இடையிடையே சந்திரனுடைய அழகுபொருந்திய வெளிச்சமும், கண் ணுக்கு எவ்வளவு ரமணீயமாயிருக்கின்றது. அம்மரத்தின் கீழ் வா. அங்கே யொருவருமில்லை.

மீ—தமயந்தி உயிரோடிருந்த காலம்போல் இதுவு மிருக்குமேல் இப்பொழுதே நீ யெரிந்துபோயிருப்பாய். யாரைப்பார்த்து இவ்விதங் கூறினாய்? போ. உன்னுடைய சொந்த மனைவியிடத்தில் செல். அந்தோ! அவளைவிட்டு

இங்கேவந்து என்னகாரியம் செய்கிறாய்? சொன்னது போதும் போ! நான் போகிறேன் முதலில்.

சே—அம்மணீ! எவ்வளவு அழகாய் இருக்கின்றனை! என் சொந்த மனைவி யிருப்பதனாலன்றோ அவளிடத்தில் போகச்சொன்னாய். இப்பொழுதே அவளைப்பிறந்த அகத்திற் கனுப்பிவிடுகிறேன். உன்னைப்பார்த்த இந்த நிமிஷம் முதற்கொண்டு, நிஷ்களங்கமாய்ப் பிரகாசிக்கும் சந்திரனும் நாம் நின்றுகொண்டிருக்கும் பூமியும் அறிய உன்னைத்தவிர வேறு ஒருத்தியையும் தொடுகிறதில்லை.

மீ—முட்டாள்! வீணாக ஆணையிடுகின்றனை.

சே—வீணாகவா ஆணையிடுகின்றேன்? நான் ரஜபுத்திர வம்சத்துக் கும்பேரசிங் என்று எண்ணிக்கொள். நான் இருக்கவேண்டிய மகாராஜா பதவியில் இருந்திருந்தால் இவ்விதம் நீ யென்னையிகழ்வாயா? ஏதோ காலவித்தியாசத்தினால் நான் சேவகனா யிருக்கக்கண்டு இவ்விதம் கூறுகின்றனை!

மீ—பதிவிரதைக்குத் தன்புருஷன் தவிர மற்ற எவரும் ஒன்றுதான். அவன்திருடனாகிலும், சக்கிலியாகிலும், சேவகனாகிலும், ரஜபுத்திரனாகிலும், எல்லாம் சமந்தான். வீணே காலமாகின்றது, உபயோகமற்ற இவ்வேலையைவிட்டு உபயோகமுள்ள வேறு எவ்வேலையாகிலும் செய் போ!

சே—ரம்பை—உன்பெயர் தெரியாததினால் தெரிகிற வரைக்கும் உன்னை ரம்பையென்பேன்—துன்பத்தினின்றும் விடுவித்த எனக்கு நீ செய்கிற பிரதியுபகாரம் இதுதானோ? நான் உன்னையும் அந்தத் திருடனையும் தனியேவிட்டுச் சென்றிருந்தால் உன்கதி என்னமாயிருக்கும்? யோசித்தனையா? இவ்வளவு பேருதவிபுரிந்த என்னை யிப்படியோ நீ நடத்துவது, தர்மமா உனக்கு.

மீ—நீ யெனக்கு உதவிபுரிந்தது உண்மை, நீ வாராவிட்டால் நான் மிக்க கஷ்டப்பட்டிருப்பேன். அந்தப்பாவிகள் கர்ண கடூரமான பலவார்த்தைகள் பேசினார்கள். இதோ—எடுத்துக்கொள் என்னிடமிருந்து போனநகை நீங்கலாகப் பாக்கியாயிருக்கும் இந்தக் காதணியை யெடுத்துக்கொள்.

என்று காதோலையைக் கழற்றும் மீனாக்ஷியைநோக்கி சேவகன் 'கழற்றவேண்டாம். உன்காதை அணிநீக்கிக்

காண்கிறவன் நந்தவனத்தைப் பூஞ்செடிகள் நீக்கிக் காண்பவனை யொப்பான். இன்னும் அதிகமாய்ப் பூஞ்செடிகள் வைத்தாலன்றோ நந்தவனம் அழகுபடும். இருப்பதையும் எடுத்துவிட்டால்—' என்றான்.

மீ—என்நகைகளில் அதொன்றுதான் என்மீது இப்பொழுதிருக்கின்றது; அதையும் வேண்டாமென்றால் பிரதியுபகாரம் உனக்குச்செய்ய என்னால் முடியாது.

என்றதும் சேவகன் அவளெதிரில் சென்று நின்றுகொண்டான்.

மீ—தருமத்தை நிலைநிறுத்துவதற்காக வேற்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களே இவ்வாறு அக்கிரமஞ்செய்யவாரம்பித்தால் அந்தோ தர்மம் பிறகு எவ்வாறாகுமோ?

சே—இன்னுமொரு விஷயம். நீ இவ்விடத்தைவிட்டு இஷ்டப்படி போகலாமென்றெண்ணாதே. ஒன்று என்னோடு மனைவியாய் என் வீட்டிற்குவா, அல்லது போலீஸ் ஸ்டேஷனுக்கு வா.

மீ—எதற்காக.

சே—கொலைக்கேஸ்.

மீ—நானா இவனைக் கொன்றேன்? உனக்குத்தான் தெரியுமே, கொன்றவன் ஓடிவிடவில்லையா?

சே—எனக்குத் தெரியும் நீ கொல்லவில்லையென்று. மாஜிஸ்திரேட்டுக்கு நான் சொல்லியல்லவோ தெரியப்போகிறது. என்னிஷ்டப்படி நீ நடவாவிட்டால், நீதான் கொன்றுவிட்டாய் என்பேன்.

மீ—பாவீ! கேவலம் இழிந்தன்மையாகிய பிறர்மனை நயத்தலையே பெருந்தன்மையாகக்கொண்டு என்மேல் பழி போடாதே! மகாபாபம்! உனக்கு மனந்துணியுமா அவ்வாற செய்வதற்கு.

சே—மனத்தில் அதிக துன்பத்தினால் வருந்துகிறவன் எதையுஞ் செய்வன். அநேக பொய்களைச்சொல்லி அங்கஹீனமுள்ள பெண்களுக்கும் பிள்ளைகளுக்குங் கலியாணமாகவில்லையா? கேள்விக்கடிதங்களைத் திருட்டுத்தனமாய்

வெளிப்படுத்திப் பிள்ளைகள் பரிக்ஷைகளிற் றேரவில்லையா? ஆதலால் உன்னைக் கூடுதலாகிய ஓரின்பத்தைக்குறித்து ஒரு பொய் கூறின் யென்ன?

மீ—நீ யந்தப் பொய்கூறினால் நான் உன்னைச் சேர்வன் என்ற எண்ணமா? கனவிலும் நினைக்கவேண்டாம்.

சே—நீ யின்னும் நன்றாய் யோசிக்கவில்லை. நீ என்னைக் கூடாவிடில் நீதான் இவனைக் கொன்றவள் என்பேன். உன் கையிலிருக்கும் கத்தியே உனக்கு விரோதமாய்விடும் இவன் மார்பிலிருக்கும் காயத்தையும்பார், உன் கையிலிருக்கும் கத்தியையும்பார். உன்னைக் குற்றவாளியென் றெவர் சொல்லார்? ஒருதரம் பிகிலூதினால் இன்னும் ஒரு சேவகன் வந்துவிடுவன். அவனும் என் பக்கலிலே சாக்ஷிசொல்வன். கேஸ் பிடித்தால் சீக்கிரத்தில் சம்பளம் உயருமென்று அவன் நேரே பார்த்ததாகவே கூறிவிடுவன். ஆகையினால் இரண்டுபேர்களின் சாக்ஷியங்களைக்கொண்டு உன்னை அக்கரைத் தேசத்திற்கு அனுப்பிவிடுவம். அந்தோ? அங்கே எவ்வளவு கள்வர், எவ்வளவு தாழ்ந்தசாதியர், எத்தனைபெயருன்னைத் தொந்தரவு செய்வார்கள்? என்னை கூடுவிடில்—

மீ—மூடன்! முடியாதென்ற காரியத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறான்! நீ சொல்கிறபடியே என்னைக் குற்றவாளியென்று சொல், என் தகப்பனாரிருக்கிறார் ஒரு பெரிய வக்கீல். ஊர், கிராமம், நாடு, நகரம் முழுவதும் பறையறைந்து, மன்னிப்பதாய் வாக்களித்து உண்மையான குற்றவாளியை வரவழைத்து அவன் மூலியமாய் உங்கள் பொய்யை வெளிப்படுத்தித் தகுந்தசிக்ஷைக்குள்ளாக்குகிறேன். போலீஸுக்கே வா போவோம்!

சே—பேதாய்! படித்தும் படியாதவள்போற் பேசுகின்றனை! மாஜிஸ்திரேட்டும் கோர்ட்டாரும் குற்றவாளியாகிய உன் வார்த்தையையும் கள்வனாகிய அவன் வார்த்தையையும் நம்புவார்களா? அல்லது இரண்டு போலீஸார்களின் வார்த்தையை நம்புவார்களா?

மீ—நல்லது அப்படித்தான் கொன்றவள் நான் என்றேற்பட்டாலும் இன்ன காரணத்திற்குக் கொன்றவள்

என்று ஏற்படவேண்டுமே! என்னுடைய நற்குணத்திற்கு அநேகர் சாக்ஷிசொல்வர். ஆகவே யாதொரு உத்தேசமு மின்றித் திடீரெனக் கொலைசெய்வானேன் என்று யோசிப் பார்களே!

(இவ்விடத்தில் மீனாக்ஷி கையிலிருந்த கத்தியைக்குறி த்துச் சிறிது சொல்வோம். வாலாம்பாள் கையில் கத்தி யிருந்ததாகவும், அதை மீனாக்ஷியினிடத்தில் காட்டியதாக வும் கூறினேம். திருடர்கள் காலோசையைக்கேட்டு வா லாம்பாள் ஓடினபொழுது கையிலிருந்த கத்தியை மறந்து கீழே போட்டுவிட்டோடினாள். அதை மீனாக்ஷி யெடுத்து வைத்துக்கொண்டாள்)

சே—பேஷ், நன்கு வாதிக்கின்றனை! இதுவரையிலும் சாதாரண வார்த்தைகளினால் சொல்லிப்பார்த்தேன். இப் பொழுது என் முடிவுவார்த்தையைச் சாவதானமாய்க்கேள். நீ தானாக அந்த ஆலமரத்தின்கீழ் செல்லாவிட்டால் நான் உன்னைப் பிடித்திழுத்துச் செல்வன். நன்றாயறிந்து கொள்.

மீ—அவ்விதம்செய்ய உன் மனம் துணியுமா? ஐயோ! இதுபோன்ற ஸ்திரீகளைக் காப்பாற்றவேண்டியதல்லவோ உன் முக்கிய கடமை. ஐயோ நீயே அநியாயஞ் செய்கிறாயா? என்னை விட்டுவிடு, உனக்குப் பெருமையுண்டு, கண்ணிய முண்டு, லாபமு மதிகமுண்டு. அவ்விதமின்றி யுன்னிஷ்டப் படி நடந்தனையேல் பாவம், பழி, அகௌரவம், வெட்கம், நஷ்டம் ஆகிய இவைகளே உனக்கு உண்டாகும்.' ஆ தெய் வமே! நீ யிருப்பது உண்மையேல் என்னைவந்து காப்பாற்று வாய்."

என்று கண்ணீர்விட்டு அழுததைக்கண்டும் சேவகன் மனம் இளகவில்லை. மீனாக்ஷி கூந்தல் அவிழ்ந்துகிடந்ததை யும் மேனோக்கியபடி அவள்முகம் இருந்ததையும், விசனத் தினால் தாழ்ந்தகுரலோடு அவள் பேசியதையும், கண்ணி னின்று நீர் தாரைதாரையாய்க் கீழேவிழுவதையும் கண்டும் சேவகன்மனம் இளகவில்லை, முன்னிருந்ததைப்பார்க்கிலும் அதிகமாக உறுதிப்பட்டது.

சே—ஸ்திரீகள் அழுதமாத்திரத்தில் ஒருகுடம் கண் ணீர்சொரிவர் என்பதின் உண்மையை உன்விஷயத்தில் கண்

டறிந்தேன் மாமாலி ! அவ்வாறு சொரியும் வெளிக்கண்ணீரினால் நான் பயந்துபோய்விடுவேன் என நினைக்கவேண்டாம். நீ அழ அழ உன் அழகு அதிகமாகின்றது, காலம் ஆக ஆக குளிர்ந்ததன்மை உண்டாகின்றது. ஆதலின் நான்சொல்லும் நிச்சயத்தைக் காதுகொடுத்துக்கேள். மனுஷ்யர்விடும் மூச்சின்பிரகாரம் பத்துவரையும் எண்ணுவன், அதற்குள்ளாக நீயாகவேனும் அவ்விடத்திற்குச் செல்லவேண்டும், அன்றேல் என் மூர்க்கத்திற்காயினும் உட்படல்வேண்டும். வீணாய் அழுவதில் பிரயோஜனமில்லை. எண்ண வாரம்பிக்கிறேன்—என்று ஒன்று இரண்டு........என்றெண்ணி ஒன்பதோடு நிற்கையில்—

மீ—மூர்க்கா ! நீ சொல்கிறபடியே நான்செய்கிறேன்.' என்று இரண்டடி யெடுத்துவைத்து ஆலமரத்தின்கீழ்ச் சென்று வெளிச்சமுள்ள பாகத்தில் நின்றுகொண்டு சேவகனைநோக்கி 'மூர்க்கா ! நீ சொன்னபடி நான் செய்துவிட்டேன். இப்பொழுது இருக்கும் இடத்திலேயே நின்றுகொண்டு நான்சொல்லும் முடிவைக்கேள். மூன்றாவது மனுஷ்ய ரொருவர் வரும்வரையிலும், உனக்கும் எனக்கும் இப்பொழுதிருக்கிற தூரமே இருத்தல்வேண்டும். உன்காமப்பெருக்கினால், நான் சொன்னவார்த்தையைத் தவிர்த்து ஒரு அங்குலமேனும் என்னை நோக்கிப் பெயர்வையேல், என் தேகத்தை அயலானாகிய சேவகனிடத்தில் கொடுப்பதைக் காட்டிலும் என் உயிரை இக்கத்தியினால் மாய்த்துத் தெய்வத்தினிடத்தில் கொடுப்பல்' என்று கத்தியைத் தன் ஹிருதயத்திற்கு நேராக வைத்துக்கொண்டு அவசரமில்லாமல் உறுதியாய்த் தெளிவான மொழிகளினாற் கூறினாள்.

சேவகன் பார்த்தான், ஆலமரத்தின்கீழ்ச் சென்றதை நோக்கிச் சந்தோஷமடைந்தவன், பிறகு மீனாக்ஷியின் வார்த்தையைக்கேட்கத் தீராத்துயரத்தி லாழ்ந்தனன். மீனாக்ஷி பேசின உறுதியையும், கண்ணீர் திடீரென நின்றுவிட்டதையும், கண்கள் இவனையே நோக்கி யிருந்ததையும், கத்தியின் கூர்மையான பாகம் அவள் மார்பில் ஹிருதயத்தின்மேல் உள்ள சதையைக் குத்திக்கொண்டு நின்றதையும், அவள் கை கத்திப் பிடியின்மேல் பலமாக இருந்ததை

யும் சேவகன் கண்டு பயப்பட்டான். தேகமுழுவதும் சிலிர்த்தது. பிடித்திருந்த கத்தியை சற்று உள்ளே யழுத்தினால் மீனாக்ஷியின் கதியென்ன? சேவகன் தன் யோசனையினின்றும் முகத்தைக்கிளப்பி மீனாக்ஷியை நோக்கி, அவள் வார்த்தையை நினைக்கும்பொழுதெல்லாம் ஒரு அங்குலமல்ல ஓரடி பின்னொதுங்கினானேயொழிய முன் செல்லவேயில்லை.

இவ்வாறு இருவரும் ஐந்து நிமிஷம்வரையும் நின்றனர். பிறகு சேவகன் 'அசடே! படித்தும் படியாதவள் போலிருக்கின்றனையே! பேதாய்! பலாத்காரஞ்செய்து கொள்ளும் சுகம் சுகமாகுமோ? "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே யின்பம்" என்பதனைக் கேட்டிலேயோ? உன் பூர்வசம்மதமின்றி யுன்னை யான் தொடுவேனோ? படித்தும் புத்தியற்றாய்! கத்தியைக் கீழேபோடு. என்னிடத்தில் யாதொரு பயமும் உனக்கு வேண்டாம்' என்று சிறிது புன்சிரிப்புடன் கூறினான்.

நீயும் நானும் நீங்கலாக மூன்றாவதாக ஒருவனாகிலும் ஒருத்தியாகிலும் இவ்விடம் வரும்வரையிலும், அவ்வாயுதம் அவ்விடத்திலேயே யிருக்குமென நிச்சயமாயறி. ஒளவையின் பாடல்களை நான் செவ்வனே கற்றிருக்கிறேன். அவைகளின்படி நடப்பவரின்னாரென்பது மெனக்குத் தெரியும்! என்று மீனாக்ஷி முன்னிருந்த உறுதி சற்றேனுங் குறையாமல் மொழிந்தனள்.

சே—அப்படியானல் சரி ஜெயிலுக்குத்தான் போவேனென்கிறாய். கப்பலேறி அந்தமான் தீவுக்குத்தான் செல்வேன் என்கிறாய். ஒரு காசுபெறாத உபயோகமில்லாதவர்களிடத்தில் திட்டுகேட்பேன் என்கிறாய்!—' என்று சொல்லிக்கொண்டே போனதை மீனாக்ஷி தடுத்து.

—'நான் அப்படி யொன்றும் சொல்லவில்லையே' என்றாள்.

சே—அப்படி சொல்லாமற்போனால் அதற்குச் சமானமான வார்த்தையைக்கூறினாய், என்னைக் கூடமாட்டேன் என்கிறாய். அதற்கு அர்த்தம் அதெல்லாந்தான். என்னோடு கூடாவிடில் பிகிலூதுவேன், அதனால் இன்னுமொரு சேவ

கன் வருவன். அவனும் நானுமாக உனக்கு எதிர்சாக்ஷி சொல்லி உன்னைக் குற்றவாளியென்று ஸ்தாபிப்போம்.

மீ—அடா! உனக்கு இரக்கந்தானில்லை, உண்மை கூடவில்லையா? பொய்யும் கொடூரநெஞ்சுமே இவ்விதம் உருக்கொண்டிருக்கிறதோ? பாதகா! என் துன்பத்தை முன்னிருந்ததிலும் அதிகமாக்குவதற்கு நீயெங்கிருந்தடா வந்தாய்? அடா! உன் மனசாக்ஷிக்கு விரோதமாய் நடக்கலாமா? நீ வரும்போதுதானேயடா கொன்றவனோடினான். நானுகொன்றேன்? பாவி! வீண்பழி சாட்டா—

சே—வீணே யேனென்னைத் திட்டுகிறாய்? நீ சொல்வதை நான் கேட்கவேண்டுமென்பதென்ன? ஏதோ சினேகிதத்தினாற்றானே! நான் சொல்வதை நீ கேட்கமாட்டேன் என்கின்றபோது நீ சொல்வதை மாத்திரம் நான் கேட்பானேன்? இதோ பிகிலூதப்போகிறேன். கத்தியைப் போட்டுவிட்டு என்னிடத்தில் வா! சுகமுண்டு, ஊதப்போகிறேன் என்ன சொல்கிறாய்?

மீ—உன்னிஷ்டப்படிசெய், தர்மமேஜெயம்,

சேவகன் பிகிலூதினான், இரண்டு நிமிஷம் உரக்க ஊதிய பிற்பாடு தூரத்தில் மற்றொரு பிகில் காதில்பட்டது.

அதோ வருகிறான் மற்றொருவன், இப்பொழுதாகிலும் என்னிடத்தில் வா! தகுந்த யேற்பாடு செய்கிறேன்.

என்று ஒரு அடி அவளை நோக்கி வைத்தான்.

மீ—நான் சொன்னவார்த்தை ஞாபகம் இருக்கட்டும். உன் கால் நகர்கின்றது, என்கை யழுந்துகின்றது. இன்னும் ஒரு அடி உன் கால்வந்ததேல் என்கத்தி யொரு அங்குலம் உள்ளே செல்லும்.

என்று பேசினதற்குள் மற்றொரு சேவக னோடிவந்தான்.

1-ம் சேவகன் 2-ம் சேவகனைநோக்கிப் பிணமாயிருக்கும் கள்ளனைத் தூக்கிக்கொள் என்றான். 'ஒருவண்டி கொண்டுவருகிறேன்' என்றான் அவன். சரியென்று மற்றவன் சொல்லவே வண்டி கொண்டுவரப்போனான் 2-ம் சேவகன். 1-ம் சேவகனும் மீனாக்ஷியும் நின்றவிடத்திலேயே நின்

றனர். வாயைத்திறந்து ஒருவார்த்தை பேசினரில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியே யெதையோ யோசித்துக்கொண்டே யிருந்தார்கள். அரைமணி நேரத்திற்கெல்லாம் வண்டிவந்தது. அதில் பிரேதத்தைப் போட்டுக்கொண்டு, முதற்சேவகன் வண்டியின்பின்னாலும் அவனுக்குப் 10-அடி தூரத்தில் மீனாக்ஷியும் அவளுக்கு 3-அடி தூரத்தில் 2-ம் சேவகனுமாகச் சென்றார்கள். முதற்சேவகன் சொன்னதையெல்லாம் இரண்டாம்சேவகன் செய்வதைப்பார்த்தால், முதற்சேகவன் தலைவன்போலு மிருந்தது. சுமார் மூன்று மைல் நான்குமைல் சென்று அங்கிருந்த போலீஷ்டேஷனுக்குள் எல்லோரும் நுழைந்தனர்.

*　　*　　*　　*　　*

மறுநாள் காலையில் மணி சுமார் 9½ இருக்கும், மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு முழுவதும் ஜனங்கள். ஓர் அழகுள்ள இளம்பெண் ஓர் கள்ளனைக் கொன்றுவிட்டாள் என்கிறசேதி அவ்வூர் முழுவதும் பரவி ஆண்பெண் ஆகிய இருபாலாரும், பாலியம், யவ்வனம், கிழம் ஆகிய மூவிதத்தரும் வந்து சேர்ந்தனர். கோர்ட்டோ மிகவும் சிறிது. ஆகையால் கோர்ட்டைச் சுற்றிலும் இருபது கஜத்திற்கு ஜனங்கள் நின்றனர். அவ்வூர் மாஜிஸ்திரேட் சரியாய் 10-மணிக்கு வந்து 1 மணிக்குப்போய் இரண்டுமணிக்குவந்து 4-மணிக்குப் போய் விடுவர். 10-ம் அடித்தது, அவரும்வந்தார். ஸ்திரீ சமாசாரம் ஆகையால், அக்கேஸை முதல்முதல் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது. மீனாக்ஷி மாஜிஸ்திரேட்டு முன்பாகக் கொண்டுவரப்பட்டாள். குனிந்ததலையை நிமிர்ந்து மாஜிஸ்திரேட்டைப் பார்த்தாள்.

'ஆ! சிற்றப்பா!' என்றாள் மீனாக்ஷி.

அவ்வூர் பண்ணுருட்டியாதலின், அங்கே சப் மாஜிஸ்திரேட்டாயிருக்கும் இராமஸ்வாமியய்யரும் 'ஐயோ! மீனாக்ஷியா?' என்று அவளை நோக்கி யோடினார். மீனாக்ஷி யவர் மேல் சாய்ந்தாள்.

கோர்ட்டிலுள்ள ஜனங்கள் முழுவதும் ஆச்சரியத்தினால் எவரெவரென்னென்ன செயலில் இருந்தனரோ அவ

ரவர் அந்த அந்த செயலில்தானே நின்றனர். கோர்ட்டு முழுவதும் உயிரில்லாத பொம்மைகள் வைத்திருந்தனபோ லிருந்தது.

நமக்கு இனி யெழுத முடியவில்லை. நாமும் இவ்வத்தி யாயத்தை முடித்து சிறிதுநேரம் ஆச்சரியப்படுவோம்,

---

11-வது அத்தியாயம்.

முகமறியாமை.

பெரிய இராமஸ்வாமி அய்யருக்கிருந்த துக்கத்தினால் அன்றையதினம் கோர்ட்டே நடக்கவில்லை. மறுநாள் கே ஸை ஒத்திவைத்துவிட்டுத் தன்வீடு சென்றார். வீட்டிற்குச் சென்றவுடன் முதன்முதல் ஒருமணி நேரம் எல்லாம் ஒரே யழுகையாயிருந்தது.

பிறகு பெரிய இராமஸ்வாமி அய்யர் வேண்டுகோளால் மீனாக்ஷி முதனாள் நடந்த சமாசாரம் முழுவதையும் சொன் னாள். இராமஸ்வாமி அய்யருக்கு உண்டான கோபத்திற்கு அளவில்லை

மீனாக்ஷியோடு சம்பாஷித்த சேவகன் அன்றையதினம் காலை முழுவதும் தன் தோழனாகிய மறு சேவகனுக்குப் பாடம் கற்பித்தான். 'அடே! நீயும் நானும் ஒரேவிதமாய்ச் சாக்ஷி சொல்லவேண்டும். இல்லாமற்போனால் கேஸ் முழு வதும் கெட்டுப்போகும் ஜாக்கிரதை. இன்னுமொருதரம் வேண்டுமென்றால் சொல்கிறேன் கேள்' என்று சொல்வதைத் தடுத்து மற்ற சேவகன் 'அப்படியாகிலும் அவள்மேல் வீண் பழி போடாமற்போனாலென்ன?' என்றான்.

'உனக்குப் பிரமோஷன் எவ்விதம் அகப்படும்? பொய் சொல்கிறபோது சொல்லத்தான்வேண்டும். நீ யவ்விதம் சொல்லாவிட்டால் நான் சொல்வதையும் நம்பார்கள். அந் தக் கொலையைப்பற்றி மறுபடியும் விசாரிக்கச் சொல்வார் கள். நமக்குக் கஷ்டமாய் முடியும்' என்று முதற்சேவகன் கூற அதற்கு இரண்டாம்சேவகன் அரைமனதோடு ஒத்துக் கொண்டான். கோர்ட்டில் முன்சொன்னவிதம் இராம

ஸ்வாமி ஐய்யருக்கும் மீனாக்ஷிக்கும் நடந்ததைக்கண்டவுடன் முதற்சேவகன் மனம்பகீரென்றது.

கேஸை ஒத்திவைத்து விட்டதனால் சேவகன் வீடு சென்றுகொண்டிருக்கும்பொழுதெல்லாம் மனதில் 'என்ன உறவோ தெரியவில்லையே? அல்லது சொந்த அகமுடையாளோ? நம்முடைய சப் மாஜிஸ்திரேட்டுக்குத்தான் அழகு பொருந்திய அம்மாள் ஒருத்தி சம்சாரம் இருக்கிறாளே! பெண்ணோ? பெண்ணிருக்கிறதாக நமக்குத் தெரியவில்லையே! ஆஹாஹா! திருப்பாப்புலியூர் கலியாணத்திற்குச் சென்றாரே இரண்டரைவருஷத்திற்கு முந்தி? அவருடைய தமயன் பெண்ணாய்த்தானிருத்தல் வேண்டும். ஆம்! ஆம்! "என் தகப்பனார் வக்கீல்" என்றுகூட சொன்னாள். நாம் செய்ததெல்லாம் சொல்லித்தானிருப்பள். அடடா! தெரியாதல்லவோ போய்விட்டது முன்னமே! நம்முடைய தோழன் உளறிக்கொட்டுவான், மன்னித்துவிடுகிறதாகச் சொன்னால் உண்மையாகக் கொன்றவன் வெளிப்பட்டுவிடுவன். அப்புறம்? அப்புறம் நேற்றையதினம் அவளுக்குண்டாகப் போகிறதென்று சொன்னவிஷயங்களெல்லாம் நமக்கேயுண்டாகும். இப்பொழுது செய்யவேண்டியது ஒரேகாரியம். நேராக சப் மாஜிஸ்திரேட்டினிடத்தில் சென்று அவர்காலில் விழுந்து வேலைபோய்விட்டாலும் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டியதுதான். என்று தீர்மானஞ்செய்தான்.

அன்று பகல் 1-மணிக்கு சப் மாஜிஸ்திரேட்டு வீட்டிலிருந்து ஓராள்வந்து சேவகனைக் கூப்பிட்டுச்சென்றான். சேவகன் இராமஸ்வாமி ஐயர் வீடுசென்றதும், அவர் இவனைக் கேள்விகள் கேட்பதற்குமுந்தியே, அவர் காலில் விழுந்து, இராத்திரி செய்ததெல்லாம் மன்னித்துவிடவேண்டுமென்றும், தன்னை வேலையைவிட்டு நீக்கிவிட்டாலும் தன்பேரில் கேஸ் ஒன்றும் செய்யக்கூடாதென்றும் மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டதின்பேரில், மன்னித்துவிட்டு வேலையினின்றும் நீக்காமல், வைத்துக்கொண்டிருந்தார்.

மறுநாள் கேஸை விசாரித்து, சேவகன், தான் நேரே பார்த்ததாகக் கூறுதகினாலும், உண்மையாய்க் கொன்றவன்

ஓடியதைத் தான் பார்த்ததாகக் கூறினதாலும், மீனாக்ஷியை விடுவித்து உண்மையாகக் கொன்றவனைக் கண்டுபிடிக்கும் படி கட்டளையிட்டார்.

* * * *

முன் சமாசாரம் நடந்த இரண்டரை வருஷத்திற்கப் புறம் மீனாக்ஷியும் அவளுக்குப் புதிய சினேகமான, யக்யம் மாள் என்பவளும் விழுப்புரத்தில் ஓர் தெருவில் ஓரகத் தில் வாசற்புறமாயுள்ளதோருள்ளில் இரவு சுமார் 9-மணி க்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

'இரண்டரை வருஷமா? இரண்டரை வருஷம் ஒன் றும் நடக்கவில்லையா?' எனச் சிலர் கேட்பர். சமாசாரம் ஒன்றுமில்லாமலிருக்குமா? எவ்வளவோ சமாசாரங்களிருந் தன. ஆயினும் உங்களுக்குச் சொல்லும்படியாயும், மீனாக்ஷி சம்பந்தப்பட்டதாயும் ஒன்றும் நடக்கவில்லை.

அவ்விரண்டரை வருஷகாலமும் மீனாக்ஷி இராமஸ்வாமி அய்யரோடுகூடவே யிருந்தாள். அவளுக்குத் தனியா யொரு விடுதியுண்டு. அவளோடு புக்ககத்தைப்பற்றிய விஷயங்கள் எவரும் எக்காலமும் எக்காரணம்பற்றியும் பேசுதல்கூடாது. இராஜகோபாலையரும் காமாக்ஷியம்மாளும் மாதத்திற்கொருதரம் மீனாக்ஷியைவந்து பார்ப்பார்கள்.

மீனாக்ஷியோ தன் கலியாணத்தின்பொழுது தாமெண் ணியபடி யெல்லாம் செய்ய வாரம்பித்தாள். அவளொரு நாள் செய்வதைப்பற்றி எழுதுவோம்.

காலையிலெழுந்து முகங்கழுவி பல்துலக்கி தன்னறையி லுட்கார்ந்துகொண்டு தமிழ்க் காவியங்கள் படிப்பள். ஏழரை மணிக்குக் காப்பி சாப்பிடுவள். ஒன்பது மணிக்கு ஸ்நானஞ் செய்து 10-மணிக்கு சிற்றப்பாவுடன் உட்கார்ந்து சாப்பிடு வள். சாப்பிட்டதும், தமிழ்ப் பத்திரிகை யொன்றிற்குச் சில கதைகள் எழுதுவள். இரண்டு மணிக்கு இரண்டாந்தரம் சிற்றுண்டி யேதேனுமுண்பள். பிறகு தன் தோழி யக்யம் மாளும் தானுமாகச் சங்கீதம் பயில்வார்கள். மணி 5-ஆன தும், வெளியிலிருவருங்கிளம்பி, சேவகனொருவன் முன் செல்ல, ஒருமைல் நடந்துசெல்வர். இராத்திரி 7-மணிக்

குத் திரும்பவும் உண்டு சிற்றப்பாவினிடத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்வள். 9-மணிக்குத் தன்னறையினுள் படுத்துக்கொளவள். படுத்துக்கொள்ளும் பொழுதெல்லாம் இவளை யறியாமலே இவளுக்குத் துக்கம்வந்து இருசொட்டுநீர் கண்ணினின்றும் கீழேவிழும்.

மீனாக்ஷியை விழுப்புரத்திலன்றோ விட்டோம். விழுப்புரத்தில்தான் ஒன்றரைவருஷ காலமாக இருக்கிறாள். அவள் சிற்றப்பா தாசீல் வேலையினின்றும் சப் மாஜிஸ்திரேட்டாய் மாற்றப்பட்டபொழுது, விழுப்புரத்தில் போடப்பட்டார்.

அன்றையதினம் இராத்திரி 9-மணிக்கு மீனாக்ஷி யறையில் மீனாக்ஷியும் யக்யம்மாளும் உட்கார்ந்திருந்தார்கள். இரவு அங்கே யக்யம்மாள் வரவேண்டிய காரணம் என்ன? சம்பாஷணையால் விளங்கும்.

யக்—அடீ! உன் சிற்றப்பாவும் போகலாம் என்று உத்திரவு கொடுத்துவிட்டார், உன் சிற்றம்மையும் போகலாம் என்கிறாள், நீ மாத்திரம் வரமாட்டேனென்கிறாயே!

மீ—நீ உன் மாமா அகத்திற்குச் சென்றால் நானும் வரவேண்டியதா, என்ன?

யக்—எனக்கு நடக்கிற உபசாரங்கள் உனக்கும் நடக்கும். இன்னு மதிகமாகவே நடக்கும்.

மீ—உபசாரத்தைப்பற்றியா? அது யென்னவோ எனக்கு வெட்கமாயிருக்கிறது.

யக்—என்னிடத்தி லென்னவெட்கம்? திண்டிவனம் நீ பார்த்ததில்லை. என் மாமாவண்டியைக் கட்டிக்கொண்டு ஊர்முழுதுஞ் சுற்றுவோம், பதினைந்துநாள்தான். பதினாறாவதுநாள் இங்கே வந்துவிடுவோம். நடுவில் அங்கிருக்க உனக்கு இஷ்டமில்லையேல் இரயிலிலேறி வந்துவிடலாம். அதுவும் ரயில்வே ஸ்டேஷன், இதுவும் ரயில்வே ஸ்டேஷன்.

மீ—சரி, உன்னிஷ்டப்படியே.

என்றவுடன் யக்யம்மாள் மிக்க சந்தோஷமடைந்து தன்னகம் சென்றாள்.

மறுநாள் 12-மணிக்கு யக்யம்மாளும் மீனாக்ஷியும் இரயிலிலேறி 2-மணிக்குத் திண்டிவனம்போய்ச் சேர்ந்தனர். இவர்களுடன்கூட யக்யம்மாளுடைய பாட்டியும் போனாள்.

யக்யம்மாள் மாமாவுக்கு திண்டிவனத்தில் வக்கீல்வேலை. அவர் வண்டி ஸ்டேஷனுக்கு வந்திருந்தது. அதிலேறிக்கொண்டு மூவரும் வக்கீலகம்போய்ச் சேர்ந்தனர். வக்கீலகத்தில் சிற்றுண்டியேதோ சிலவற்றையுண்டு இரயிலில்வந்த சிரமத்தினால் இருவரும் படுத்துறங்கினர்.

மீனாக்ஷி கண்விழித்தபோது மணி 5-இருக்கும். சாயங்காலமாயிற்றே யென்று வாசலில் போய்நின்றாள். மனுஷ்யர்கள் போக்குவரவையும் வண்டிகள் போய் வந்துகொண்டிருப்பதையும் பார்த்து நின்றாள்.

அப்போது அவள் தேகமுழுவது முற்றுநோக்கியவர்

‘ மாசறுபொன்னே வலம்புரிமுத்தே
காசறுவிரையே கரும்பேதேனே
அரும்பெற்றபாவா யாருயிர்மருந்தே
பெருங்குடிவக்கீல் பெருமடமகளே
மலையிடைப்பிறவா மணியேயென்கோ
அலையிடைப்பிறவா வமுதேயென்கோ
யாழிடைப்பிறவா விசையேயென்கோ
தாழிருங்கூந்தற் றையாணின்னை.’

என்று ஸ்தோத்திரம் செய்வர்.

அவ்வளவு அழகுபொருந்தியவளாகிய மீனாக்ஷி யங்கே நின்றுகொண்டிருக்கும்பொழுது, அவ்வகத்து வக்கீல் சம்சாரம் வாசலில் வந்தாள். அவள் வாசலில் வந்ததும் தெருவில் ஒரு சேவகன் காகிதக்கட்டு ஒன்று தூக்கிக்கொண்டு முன் சென்றான். பின்னால் சரிகைத் தலைகுட்டை, அல்பாக்கா கோட், பட்டுக்கரைச்சோமன், நல்ல ஜோடு, பட்டுக்குடை ஆகிய இவைகளுடன் ஒரு யவ்வன புருஷன் வந்துகொண்டிருந்தான். வக்கீலகமுடையாள் ‘ அதோ போகிறாரே; அவர்தான் டிஸ்ட்ரிக்ட் முனிசீபு ’ என்றாள். மீனாக்ஷி யவரை நன்றாய்ப் பார்த்தாள். முனிசீபும் மீனாக்ஷியைப் பார்த்தனர். செவ்வையாய்ப் பார்க்காவி

னும் தானிதுவரையும் பார்த்த பல ஸ்திரீகளைக்காட்டினும் மீனாக்ஷி யழகுள்ளவள் என்று அவர் மனத்திற் படும்படியாய்ப் பார்த்தனர்.

மீனாக்ஷி யழகைப்பற்றி யவ்வளவு கூறினோம். இன்னும் அவள் அழகு எத்தன்மைத்து என்றால் அந்த டிஸ்டிரிக்டு முனிசிபு கண்களையும் மனதையும் கவர்ந்து எவ்விதத்திலேயும் மீனாக்ஷியை யடையவேண்டுமெனத் தீர்மானிக்கும்படியாய்ச் செய்தது அவரை. வீடுபோய்ச் சேர்ந்ததும், முனிசிபு தன் சினேகிதராகிய ரிஜிஸ்திராரை அழைத்துவரச் சொன்னார். ரிஜிஸ்திரார் வந்த நம் முனிசிபுக்கும் ரிஜிஸ்திராருக்கும் சம்பாஷணை நடந்தது. வெகு அந்நியோந்நியமாய்ப் பேசினார்களிருவரும்.

மு—இன்றையதினம் சாயங்காலம் கோர்ட்டிலிருந்து வந்துகொண்டிருக்கும்பொழுது நான்கண்ட அதிசயத்தை யென்னென்று சொல்வேன். ஒரு அழகான வஸ்துவைக் கண்டேன். அதை யென்னுடைய வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. நீ யெனக்கு ஆத்மசிநேகிதனாயிற்றே! கொண்டுவந்து கொடுப்பாயா? என்று கேட்க, அவர் அதற்கென்ன, போதுமான பணங் கொடுத்தால் கிடைக்குமென்று பதில்சொல்ல, அது எப்படியோ, எந்தப்பாடாயினும் பட்டுக்கொண்டு வரவேண்டுமென்று சொல்லி

அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டும்
கொங்கை முகிழுங் குழற்காரும்—தங்கியதோர்
மாதர்க் கொடியுளதா நண்பா வதற்கெழுந்த
காதற் குளதோ கரை.

என்று சொல்லும்போதே ரிஜிஸ்தரார் தடுத்து பயித்யம் பிடித்தல்லவோ பெண்களின்மீது திரிகின்றாய். இது முடியாதகாரியமல்லவா என்ன?

மு—எப்படியோ? நாளைதினம் இராவிற்குள் அந்த வஸ்து எனக்கு வேண்டும். கொண்டுவராதேபோனால் உன் சிநேகிதன் விண்ணுலகடைவன்.

ரி—நீ இதுவரைக்கும் எவ்வளவோ புத்திகெட்ட காரியங்களைச் செய்திருக்கிறாய், இதையுஞ் செய்யவேண்டாம். முதலில் செய்கிறாய், பிறகு விசனப்படுகிறாய்.

என்று சொல்லிவிட்டு ரிஜிஸ்திரார் சற்றுநேரம் யோசித்தார். பிறகு முனிசீபைநோக்கி 'நாளையதினம் அவளகத்திற்குப்போய் அவளைப்பற்றி நன்றாய் விசாரித்துவருகிறேன். அவளகத்திற்கு நான் போகும்பொழுது அங்கு ஒருவருமிருக்கக்கூடாது' என்றார்.

மு—வக்கீல் மஹாதேவ ஐயர் கோர்ட்டிற்குப்போயிருப்பர். என்னுடைய அகமுடையாளிடத்திற் சொல்லி மகாதேவ ஐயர் சம்சாரத்தை வரவழைத்துவிடுகிறேன் நீ நாளையதினம் பகல் 1-மணிக்குச் சென்று அவளைக் கொண்டுவந்துவிடு.

ரி—இதென்ன? பகலில் ஒரு ஸ்திரீயைக் கொண்டுவந்தால் ஊரிலிருப்பவர்கள் வாயை மூடிக்கொண்டிருப்பார்களா? சொல்வதெல்லாம் வேடிக்கையாய்த்தான் இருக்கிறது. வேண்டுமென்றால் அவள் மனத்தை யறிந்துவருகிறேன். சாம பேத தானமாகிய மூவகையிலும் பார்க்கிறேன்.

மு—நீ யெந்தவகை பார்த்தாலும் சரி! எனக்குவேண்டியது அப்பெண்.

என்றவுடன் ரிஜிஸ்திரார் எழுந்திருந்து வீட்டிற்குச் சென்றார்.

இஃதென்ன புதுமை? டிஸ்டிரிக்டு முனிசீபாம், ரிஜிஸ்திராராம், பேஷ்! இருவரும் நல்லகாரியம் செய்கிறார்கள்! இவ்விருவருடைய முன் ஸ்திதி யென்? எப்பொழுதுமே இவ்வாறு அக்கிரமஞ் செய்பவர்களா? அல்லது இப்பொழுதுமாத்திரம் ஆரம்பித்துவிட்டார்களா?

டிஸ்திரிக்டு முனிசீபு, ரிஜிஸ்திரார் ஆகிய இவ்விருவர்களுடைய பூர்வ சமாசாரங்களெனக்கு நன்றாய்த் தெரியாது. ஆயினும் தெரிந்த வரையிலும் யோசித்துப் பார்த்தால், இவ்விருவரும் இக்காரியஞ் செய்யத் துணிவது சிறிது நியாயமாய்த்தா னிருக்கின்றது.

டிஸ்டிரிக்டு முனிசீபின் சம்சாரம் அழகுள்ளவளாயிருந்தபோதிலும் ஏதோ சில காரணத்தினால் இருவருக்கும் ஆகிறதில்லை. ஆகையால் டிஸ்டிரிக்ட் முனிசீபுக்கு வீட்டி லதிக சுகமில்லை. இவர் உத்தேசித்திருந்த ஒரு ஸ்திரீ ஏதோ காரணத்தினால் தப்பிப்போய்விட்டதினால் இவர் அது முதற்கொண்டு அவள்போன்ற அவ்வளவு அழகுள்ள ஸ்திரீ அகப்படமாட்டாளா எனப்பார்த்துக்கொண்டே யிருந்தார். மீனாக்ஷியின் அழகைக் கண்டவுடன் தான் உத்தேசித்திருந்ததைக் காட்டிலும் அதிக சௌந்தரியத்தோடு இருப்பதைக் கண்டு மனத்தில் அடங்கியிருந்த எண்ணம் வெளிக்கிளம்பியது.

ரிஜிஸ்திராரோ முனிசீபிற்குப் பால்ய முதற்கொண்டு சிநேகிதம். முனிசீப் சொன்னதைச் செய்வதும் முனிசீப் விசனத்தை மாற்றுவதும் ரிஜிஸ்திராருடைய முதல் வேலை.

டிஸ்ட்ரிக்டு முன்சீபு. பீ. ஏ. கிளாசில் வாசிக்கும்பொழுது இராமாயணம், ஆரண்யகாண்டம், மாரீசன்வதைப் படலம் பாடமாயிருந்தது அங்கே இராவணன் பட்டதாகக் கூறும் கஷ்டங்களைப் படித்துச்சிரிப்பர். அன்றையதினம் இராத்திரி தூங்கவேயில்லை. முனிசீபு இதனால்கம்பருடைய உண்மையை முழுவதும் அறிந்தார்.

மறுநாள் 12-மணிக்கு முனிசீபுவீட்டு வேலைக்காரி வெயிலில் மகாதேவையர் வீட்டுக்கதவைத் தட்டினாள். வக்கீல் சம்சாரம் கதவைத் திறந்தனள்.

வேலைக்காரி—உங்களை யெங்கவீட்டு அம்மா கூப்பிட்டுக்கொண்டு வரச்சொன்னாங்க.

சம்—எதற்காக?

வேலை—அதென்னமோ! கையோடே கூட்டிகிட்டு வரச்சொன்னாங்க.

சம்—இதென்ன? என்றும் இல்லாத வழக்கம்? யக்ஞாம்பாள்! யக்ஞாம்பாள்! நான் முனிசீபுவீட்டிற்குப் போகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்.

யக்—என்ன முனிசீபுவீட்டில்?

சம்—அதென்னவோ? என்னைக் கூப்பிட்டுவரச் சொன்னாளாம் முனிசீபு அகமுடையாள்.

யக்—நானும் வருகிறேன்.

சம்—மீனாக்ஷி யெங்கே?

யக்—தூங்குகிறாள். நேற்றையதினம் முதற்கொண்டு என்னமோ போலிருக்கிறாள்.

சம்—நல்லதோழி யகப்பட்டாள் உனக்கு.

யக்—நல்லவள் அம்மாமி அவள்!

வே—சட்டினுட்டு அழைச்சுவரச்சொன்னு எங்க அம்மா.

சம்—அவள் தூங்கட்டும். நானும் நீயும் போவோம் வா, என்றவுடன் வக்கீல் சம்சாரம் வேலைக்காரி, யக்யம்பாள் மூவரும் முனிசீபு வீட்டிற்குச் சென்றனர்.

யக்யாம்பாள் சொன்னபடியே மீனாக்ஷி முதனாள் சாயங்காலம் முதற்கொண்டு என்னவோபோலிருந்தாள். மீனாக்ஷி வேறு ஸ்திரீயாயிருந்தால் முனிசீபின்பேரில் ஆசைப்பட்டு அவ்விதம் இருக்கிறாள் என்கலாம். ஆயினும் மீனாக்ஷியாதலின் வேறு காரணம் இருத்தல்வேண்டும்.

மீனாக்ஷி கண்மூடிக்கொண்டு படுத்திருந்தனளேயொழிய உண்மையாய்த் தூங்கவில்லை. வேலைக்காரி கூப்பிட்டதும் இவர்கள்பேசியதும் தன்காதில் வீழ்ந்தது. இவர்கள் வெளியேபோனதும் எழுந்திருந்து கதவைத் தாழ்ப்பாளிட்டுக்கொண்டு கூடத்திற்போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அப்பொழுது மீனாக்ஷி எண்ணிய வெண்ணங்களை யாம் கூறோம், நம்முடைய பிரதிக்ஞைக் கேற்ப.

எதையோ யோசித்துக்கொண்டு அரைமணிநேரம் இருந்திருப்பள் மீனாக்ஷி. கதவை யாரோவிடித்தார். அவர்கள் வந்துவிட்டனரென்று கதவைத்திறந்தனள். அவர்களாவில்லை. ஓர்புருஷன் தலைக்குட்டை சொக்காயுடன் உள்ளே நுழைந்தான், மீனாக்ஷிக்கு ஆச்சரியமும் பயமும் உண்டா

கியபோதிலும், இதைவாசிப்பவர் புதிதாய் வந்தவர் ரிஜிஸ்திராரென நன்று யறிவார்.

ரிஜிஸ்திரார் மீனாக்ஷியைப்பார்த்தவுடன் 'ஆஹா! இவ்வளவு அழகுள்ள ஸ்திரீயைக்கண்ட எவர்தாம் ஆசையுறார்-முனிசிபு ஆசைப்பட்டதற்குக் கேட்பானேன்?' என்று நினைத்துக்கொண்டு 'உங்கள் மாமா இல்லையோ?' என்று கேட்டார்.

மீனாக்ஷி அவ்வீட்டு வக்கீலை யாரோ பார்க்கவந்தார் போலிருக்கிறதென நினைத்து 'கோர்ட்டிற்குப் போயிருக்கிறார்' என்றாள்.

உன்னுடைய அம்மாமி? என்று ரிஜிஸ்திரார் கேட்டதற்கு 'என்னுடைய மாமா அன்று இந்த அகத்துவக்கீல். வக்கீல் மருமகளுடைய தோழியான். வக்கீல் சம்சாரமும் வெளியில் போயிருக்கிறாள்' என்றாள். இத்துடன் புதிதாய் வந்தவர் போய்விடுவரென நினைத்தாள். ஆனால் ரிஜிஸ்திராரோ கதவை நன்றாய்த் திறந்துகொண்டு கூடத்திற்குச் சென்று நாற்காலியில் உட்கார்ந்தார். மீனாக்ஷி 'இராம! இராம! என்று சொல்லிய பிராமணனைப்போல் இவரும் செய்வரோவெனப் பயந்தபோதிலும், 'பட்டணந்தானே! ஒரு கூச்சல்போட்டால் சரியாய்ப் போகிறது' என்று துணிந்தாள்.

ரிஜிஸ்திரார் நாற்காலியி லுட்கார்ந்ததும் மீனாக்ஷி வெங்கேயா போவதைப்பார்த்து 'அம்மா! உங்களைத்தானே! அந்த வக்கீல் வந்தால்—' என்பதற்குள் மீனாக்ஷி 'நான் அந்த வக்கீலோடு பேசுகிறதில்லை' என்றாள்.

ரி—அவர் சம்சாரம் வந்தவுடன்—தெரிந்ததா—நான் யார் தெரியுமா?—அந்தம்மாள் வந்தவுடன் சொல்—இந்த ஊர் டிஸ்டிரிக்டு முனிசீபைத் தெரியுமா?

மீ—நேற்றையதினம் இந்த வீதிவழியாய்ப் போனார்.

ரி—அவர்தான்.

மீ—அவருக்கென்ன சம்பளம்?

250-ரூபாய், அவர் நேற்றையதினம் இந்தத்தெருவு வழியாய்ப் போனபொழுது உங்களைப் பார்த்தார்.

மீ—நன்றாய்ப் பார்த்தாரோ ?

ரி—நன்றாய்ப் பார்த்தாரோ வென்னமோ ! தாங்கள் அதிக அழகென்று அறிந்துகொள்ளும் வரையிலும் பார்த்தார். பார்த்து—

மீ—நீங்கள் யார் ?

ரி—நான் அவருக்கு பால்யசிநேகன், இப்பொழுது இவ்வூர் சப் ரிஜிஸ்திரார்.

மீ—அப்புறம்.

ரி—உங்களைப் பார்த்தார் ? பார்த்தவுடன் ஒருவிதமான ஆசை விழுந்தது உங்கள்பேரில்.

மீ—இப்படிப் பார்த்த ஸ்திரீகள்பேரிலெல்லாம் ஆசைப்படுவது அவர் வழக்கமோ ?

ரி—எனக்குத் தெரிந்தவரையிலும் இதுதான் முதற்றரம். அதற்குக் காரணம் தாங்களே !

மீ—ஏன் ?

ரி—தாங்கள் இவ்வளவு அழகோடு வெளியில்சென்று ஏன் நின்றீர்கள்?

மீ—ஆஹா ! வெகு நன்று! திருடனை ஏன் திருடினாய் என்றால் வீட்டிலுள்ளவர்கள் ஏன் ஜாக்கிரதையாயில்லை என்பதுபோலிருக்கிறது!

(மீனாக்ஷி ! அயல்புருஷனோடு எவ்வளவுநேரம் பேசுகிறாய் ? சரியாயிது ?)

ரி—அதென்னவோ ? உங்கள் பேரிலாசைப்பட்டிருக்கிறார் முன்சீபு.

மீ—படட்டும், நானென்ன செய்யலாம் ?

ரி—நீங்களென்ன செய்யலாம் ! உங்களாற்றான் ஆகவேண்டும். உங்கள் பேரில் ஆசைப்பட்டால் தாங்கள்தான் அவ்வாசையைத் தீர்க்கவேண்டும்.

எனலும் மீனாக்ஷி சற்று யோசிப்பவள் போலிருந்து வேறு எவர்பேரிலும் இதுவரையிலு மவர் ஆசைகொள்ளவில்லையோ வெனக் கேட்டு இல்லையென்று பதில் வந்ததும் சரியென்று ஒப்புக்கொண்டாள்.

ரிஜிஸ்திராருக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

ரி—அதாவது அவரோடு—

மீ—அதோடு நிறுத்துங்கள்.

(ஐயோ மீனாக்ஷி! ஒப்புக்கொண்டனையே! கட்குடித்தனையா?)

ரி—நிச்சயமாய்த் தானோ?

மீ—பொய் என்ன இந்த விஷயத்தில்? அத்தனை பெரியவர், டிஸ்டிரிக்டு முனுசீபு நம்முடையபேரில் ஆசைப்படும்பொழுது என்னமாய் மறுக்கிறது?

ரி—நீங்கள் உண்மையாய் அவரிடத்தில் வந்தால் தங்களுக்கு வேண்டிய நகை, பணம்—

மீ—எனக்கு அவை யொன்றும் வேண்டாம்!

ரி—இன்றிரவு 8 மணிக்கு நான்—

மீ—பத்து மணிக்கு ஒரு வண்டியைக் கட்டிக்கொண்டு வரவேண்டும், அவ்வண்டியின் பின்னால் தாங்கள் உட்காரவேண்டும் உள்ளே நான் உட்காரவேண்டும். முனிசீப்பு தமது மெத்தைமீதே யிருத்தல்வேண்டும். நான் உள்ளே நுழைந்ததும் கதவைப்பூட்டிக்கொண்டு நீங்கள் போய்விடவேண்டும்.

ரி—சரி, வண்டி யெங்கே நிற்கலாம்?

மீ—இந்தத் தெருவில் விசையாய்ப் போய் இவ்வீட்டிற்கருகாமையில் மிகவும் மெதுவாய்ப் போகட்டும். நான் அறிந்துகொள்கிறேன்.

ரி—சரி, மிகவும் சந்தோஷம். நான் போகிறேன்.

மீ—சற்று இருந்து, முனிசீபின் பெயர், ஊர், பூர்வ சமாசாரம் எல்லாம் சொல்லுங்கள்.

ரி—இந்த முனிசீபின் விஷயத்தைக் கேட்டால் எல்லாரும் சிரிப்பார்கள்— * * * *

என்று இம்மாதிரியாய் ரிஜிஸ்திராரும் மீனாக்ஷியும் இரண்டாகும் வரையிலும் பேசிக்கொண்டிருந்து பிறகு ரிஜிஸ்திரார் போய்விட்டார்.

அந்தப்பேச்சையெல்லாம் சொல்ல நமக்கிஷ்டமில்லை நமக்கு மீனாக்ஷி இராத்திரி யென்னசெய்வளோ என்று பயமாயிருக்கிறது. ஓடிவிடுவளென்றே நம்முடைய எண்ணம். போகப்போகப் பார்ப்போம்.

ஆயிற்று 3-மணி, வக்கீல் அகமுடையாளும் அவள் மருமகளும் வீடுவந்து சேர்கிறார்கள். என்னமோ வம்புப் பேச்சுகளெல்லாம் பேசுகிறார்கள். டிஸ்திரிக்டு முன்சீபு அகமுடையாள் வெகுகருமியாம், பொல்லாதவளாம், அழகாம், இந்தவார்த்தையெல்லாம் நமக் கென்னத்திற்காக? மீனாக்ஷி யென்னசெய்யப்போகிறாள்? பலப்பல வகையில் யோசனைசெய்திருந்தாள், மணியும் இரவு ஒன்பதாயிற்று.

மீனாக்ஷி உண்டுபடுத்துவிட்டாள். அதுதான்பேஷ்! நாம் சொல்லவில்லையா? மீனாக்ஷி அவ்விதம் செய்யமாட்டாளே! 10-மணிக்கு வண்டியை வரச்சொல்லிவிட்டு இவள் படுத்துறங்குகிறாள். வண்டிவந்து ஏமாந்துபோய்விடும், இவளும் மறுதினம் ஊர்போய்விடுவள்.

10-மணியாகிறது. வண்டி ஒன்று அத்தெருவில் விசையாய் வருகிறது. வக்கீல வீட்டிற்கெதிரில் மெதுவாய்ச் செல்கின்றது. வண்டியை ஓட்டிக்கொண்டுபோ! மீனாக்ஷி வருவள் என்று பார்த்தாயோ? அவள் உங்களையெல்லாம் ஏமாற்றிவிட்டுத் தூங்குகிறாள்.

இதென்ன? வக்கீல்வீட்டுக் கதவுதிறக்கின்றது. வெளியில் ஒருபெண் வருகிறாளே! யக்யம்பாளோ? ஐயையோ! மீனாக்ஷியைபா இவள். மீனாக்ஷி! உள்ளேபோ! உள்ளேபோ! ஐயோ! வண்டியிலேறுகிறாளே! வண்டி கொடைசாயாதா? ஸ்வாமீ! வண்டிக்குள் ஏறியுட்கார்ந்துவிட்டாள். வண்டி செல்கின்றது. அச்சுமுறிந்து வண்டி கீழேவிழுந்து மீனாக்ஷி சாகாளா? வண்டி போகிறது! குதிரை காலொடியாதா? ஐயையோ! வண்டி முனிசீப்பு வீட்டிற்கெதிரில் நிற்கின்றது. மீனாக்ஷி யிறங்குகிறாள். மெத்தைமீது ஏறினள். முனிசீபு இருக்கிற உள்ளிற்குக் கிட்டபோய்விட்டாள். கதவு திறக்கின்றது. மீனாக்ஷி யுள்ளே போய்விட்டாள். ரிஜிஸ்திரார் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்.

ஐயோ ! [illegible] ! நீ செய்த காரியம் உனக்கே தெரிந்ததா? ராமஸ்மரணைசெய்யும் பிராமணனுக்குந்தப்பி, பெண்ணுருவந்தரித்திருந்த வாலாம்பாளுக்குந்தப்பி, கள்ளன் குள்ளனாகிய இரு திருடர்களுக்குந்தப்பி, பயம், நயம் ஆகிய இரண்டினாலும் தன் சாமர்த்தியம் முழுவதும் செலுத்தி வேண்டிக்கொண்ட சேவகனுக்குந்தப்பி, அடாடா! டிஸ்டிரிக்டு முனிசீபினிடத்திலா சேர்ந்தாய்! முனிசீபு உயர்ந்த வேலையிலிருக்கிறவர் என மதிமயங்கினையோ? நீ சொன்ன வார்த்தையையே மறந்துவிட்டனையே? 'பதிவிரதைக்குத் தன் புருஷன் தவிர மற்ற எவரும் ஒன்றுதான், அவன் திருடனாகிலும், சக்கிலியாகிலும், சேவகனாகிலும், ராஜபுத்திரனாகிலும், எல்லாம் சமந்தான்' என்றனையே முனிசீபானால் வேறோ? உன்னைப்பற்றி யிதுவரையும் எல்லாரும் பரிதாபப்பட்டனரே! இனிமேல் இகழ்ச்சிதானே உனக்குண்டாகும். உன்னைப்பற்றியெழுத வாரம்பித்தோமே! உன் புத்தி யிருந்தவாறென்னே?

12-வது அத்தியாயம்.

தம்பதிச்சேர்க்கை.

இதுவரையும் [illegible]யைப்பற்றி வரிசையாகச் சொல்லிக்கொண்டே வந்தோம். [illegible]யோ சோரம்போய்விட்டான். நாயகியோ துன்மார்க்கத்தில் பிரவேசித்துவிட்டாள். நாயகனிருக்குமிடமோ எனக்குத் தெரியாது. இனியவரைப்பற்றி யென்ன சொல்லலாம்?

பரம சாதுக்களாயும், தேவ பூஜிதர்களாயும், யோக்கியர்களாகியும், சிஷ்டபரிபாலன துஷ்ட நிக்கிரகர்களாகியும் இராநின்ற இராஜகோபாலையர் காமா[illegible] இவர்களைப்பற்றிச் சிறிது சொல்வோம்.

[illegible]யோடின மறுதினம் பகல் பன்னிரண்டு மணிவரையும் இருவரும் யாதும் இன்றி யிருந்தனரென்பது யாவரும் அறிவர். எங்கெங்கேயோ ஆட்களை யனுப்புவித்துப் பார்த்தும் யாதும் பயன்படாமற் போயிற்று.

பக்கத்தி லிருக்கும் நாராயணஸ்வாமி அய்யர் மிகவும் கெஞ்சின பிறகு இராஜகோபாலையர் சுமார் இரண்டு மணிக்கு ஸ்நானஞ்செய்ய எழுந்திருந்து இலையி லுட்கார்ந்தெழுந்தார். நாராயணஸ்வாமி அய்யர் சம்சாரம் கட்டாயத்தின் பேரில் காமாக்ஷி யம்மாளும் அவ்விதமே செய்தனள்.

அன்றையத் தினம் சுமார் 4 மணிக்கு நாராயணஸ்வாமி அய்யர் தனக்கு நெல்லிக்குப்பத்தி லேதோ வேலை யிருக்கிறதாகவும், அதற்காகப் புறப்பட்டுப் போவதாகவும் சொல்லிப் போனார்.

மறுநாள் காலையில் வந்துவிட்டார். அன்றையத் தினமும் அவரகத்தில்தான் சாப்பாடாயிற்று. அன்றையத் தினம் மாலை 5 மணிக்கு ஒரு தந்திவந்தது

பண்ணுருட்டி சப்மாஜிஸ்திரேட்டு இராமஸ்வாமி அய்யரிடத்திலிருந்து.

திருப்பாப்புலியூர் வக்கில் இராஜகோபாலையருக்கு.

மீனாக்ஷி இங்கே இருக்கிறாள். கவலைவேண்டாம்.

இதைக் கண்டவுடன் இராஜகோபாலையரும் காமாக்ஷி யம்மாளும் தாங்கள் முழுவதும் துரதிர்ஷ்டசாலிகளல்லவென்று நிச்சயப்படுத்திக்கொண்டார்கள்.

அன்றையத்தினம் சாயங்காலம் இரயிலிலேறி பண்ணுருட்டிபோய் மீனாக்ஷியைத் திருப்பாபுலியூர் வரும்படி வெகுதூரம் வேண்டினர், அவள் மறுத்துவிட்டாள். இராமஸ்வாமி அய்யரும் 'அவள் எங்கிருந்தாலென்ன? இங்கேதானிருக்கட்டுமே!' என்றார். ஆதலின் இவர்கள் பேசாது வந்துவிட்டார்கள். மாதம் ஒருமுறை மீனாளைப்பார்த்து வருவர். ஒவ்வொருதரமும் மீனாளைத் திருப்பாப்புலியூர் வரும்படி வேண்டினபோதிலும் மறுத்துவிடுவள்.

இவ்வாறாக நாம் சொன்ன இரண்டுவருஷ காலமுங் கடந்தது.

மீனாக்ஷி சோரம்போனதாகக் கூறியதற்கு இரண்டு தினத்திற்கப்புறம், இராஜகோபாலையரும் காமாக்ஷியம்மாளும் பகல் மூன்றுமணிக்கு ஏதோ பேசிக்கொண்டிருந்த

னர். அன்றையத்தினம் சனிக்கிழமை இராஜகோபாலையருக்குக் கோர்ட்டு லுிதிகவேலையில்லை, ஆதலின் சீக்கிரமேவந்துவிட்டார்.

இரா—இன்றையதினம் காலை முதற்கொண்டு உன் முகம் என்னவோபோலிருக்கிறதே! ஏன்?

காமா—மீனாட்சியைப் போய்ப்பார்க்கவேண்டும் என்று சொல்லியழுதாள்.

இரா—அசடே! ஏன் அழுகிறாய்! இன்றையதினம் புறப்பட்டாற் போகிறது.

கா—(அழுதுகொண்டே) அவளுடைய அழகிற்கும், வயதிற்கும், குணத்திற்கும்——ஈசுவரா!

இரா—போனதை நினைப்பானேன்?

கா—நேற்றையத்தினம் அவளைப்பற்றி ஒரு கனாக்கண்டேன். அதை நினைக்கநினைக்க வருத்தமாயிருக்கின்றது.

இரா—கனா! கனவு, பல்லிச்சொல், ஜோஸியம், சகுனம் இவையெல்லாம் முழுப்பொய், அவற்றையெல்லாம் நம்பாதே!

கா—(மிகவும் அழுதுகொண்டு) அந்தக்கனவின்படியவளைப்பார்ப்பனோ நான்?

இரா—என்ன? இவ்வளவு விசனப்படுகிறாயே! என்ன கனாவது?

கா—(அழுதுகொண்டு) இவ்வளவு இளம்வயதில் அவளுக்கு இவ்வளவுதுக்கமும் வரவேண்டுமா?

இரா—அதையெல்லாம் இப்பொழுது யேன் சொல்கிறாய்? கனா வென்னசொல்?

கா—என்னமோ கனா! மீனாட்சியும் மருமகப்பிள்ளையும் சேர்ந்து வாழ்வதுபோற் கனாக்கண்டேன்.

என்றவுடன் தைரியஞ்சொல்லிய இராஜகோபாலையர் கண்களும் நீர் ததும்பின. இராஜகோபாலையர் முகம் வெறுமையான இடத்தையும், காமாக்ஷியம்மாளின் முகம் புடவையையும் நோக்கியிருந்தபொழுது, ஒரு சத்தவண்டி வாசலில் வந்து நின்றது.

காமாக்ஷியம்மாள் இரயிலிலிருந்து நம்முடைய அகத்துக்கு யார் வந்திருக்கிறாரென்று கதவைத் திறக்கச்சென்றாள். வந்திருந்தவரும் கதவைத்தட்டினார். இராஜகோபாலையரும் யாரென்று பார்க்கும்பொருட்டு காமாக்ஷியம்மாள் பின்னால் சென்றார். காமாக்ஷியம்மாள் கதவைத் திறந்து பார்த்தனள். கதவினோரமாய்த் தன் பெண் மீனாக்ஷியும் அவளுக்குச் சற்று அப்பால் மருமகப்பிள்ளை இராமஸ்வாமியும் நிற்பதைக் கண்டாள் !!!!

அவர்களுக்குண்டாகிய ஆச்சரியத்தை, இவ்வாறு நான்கு ஆச்சரியக்கோடுகளினால் காண்பிக்க நான் வல்லவனேயன்றி வாயாலியம்பச் சக்தியுடையவனோ?

காமாக்ஷியம்மாள் கண்டகனவும் உண்மைதானோ?

* * * *

மீனாக்ஷியும் டிஸ்டிரிக்டு முனிசீபும் உள்ளே பிரவேசித்ததும் ரிஜிஸ்திரார் கதவைப் பூட்டிக்கொண்டு சென்றாரென முன்னமே கூறியுள்ளோம்.

அவ்வுள்ளில் இளம்வெற்றிலையும் வாசனைகலந்த பாக்கும், சுண்ணாம்பும், பாலும், ஒரு கட்டிலும், அதில் மெத்தையும், அதில் நான்கு தலையணைகளும் தவிர வேறு ஒன்றனையுங் காணோம்.

மீனாக்ஷியுள்ளே நுழைந்தனளோ இல்லையோ முனிசீபு ஓரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து புல்லினார். 'என் கண்ணே!' என்றார். 'என் வேண்டுகோளுக்கிரங்கினையே' என்றார். 'வக்கீலகத்தினின்றும் எவ்விதம் வந்தாய்?' என்றார். 'வக்கிலொன்றுஞ் சொல்லமாட்டாரா?' என்றார்.

'உன் பெற்றோர்கள் எங்கே யிருக்கிறார்கள்?' என்றார்.

'அவர்கள் ஒன்றுஞ் சொல்லமாட்டார்களா? என்றார்.

'நீ அவர்களிடத்தில் போக வேண்டாம். இங்கேயே இரு' என்றார்.

'நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம்!' என்றார்.

'உன்னைப்போ லழகி இவ்வுலகத்தி லிருக்கிறாளோ?' என்றார்.

'உன்னைக் கண்ட நேற்றையத்தினம் சாயங்காலம் முதற்கொண்டு எனக்கு ஆகாரமில்லை' என்றார்.

'உன்னோடுகூட இப்பொழுது குடிக்கப்போகின்றேனே பால் அதுதான் ஆகாரம்' என்றார்.

'உன்னைப்பற்றிக் கேட்பவர்களுக்கு யெனக்கொரு தூரபந்து என்று சொல்லிவிடுகிறேன்' என்றார்.

ஒவ்வொரு வாக்கியத்திற்குப் பிறகும் என்றார், என்றார் என்பதின் காரணம் யாதெனில், ஒவ்வொரு வாக்கியமும் முடிந்தபிறகு முனிசீபு மீனாக்ஷியி னொவ்வொரு அங்கத்திலும் முத்தம் இட்டுக்கொண்டார் என்பதுதான்.

இதற்கெல்லாம் மீனாக்ஷி மனத்திற்குள் சந்தோஷப்பட்டனளேயன்றி வாய்திறந்து யாதொன்று மியம்பவில்லை.

கடைசியில் மீனாக்ஷி 'உங்கள் சொந்தப் பெண்டாட்டி எங்கே?' என்றாள்.

அதற்கு முனிசீபு 'அவள் கிடக்கிறாள், உன் அழகில் ஆயிரத்திலொருபங்கு வருமா அவளுக்கு (முத்தம்). நீதான் எனக்குச் சொந்த பெண்டாட்டி (முத்தம்), நீதான் எனக்கு ஆகாரம் (முத்தம்), நீதான் ஆபரணம் (முத்தம்). நீதான் தெய்வம் (முத்தம்), நீதான் கல்வி (முத்தம்), நீதான் ஆடை (முத்தம்), நீதான்———' என்பதற்குள்

மீனாக்ஷி—இந்த முத்தமெல்லாம் வேண்டாம், நான் கேட்கிற கேள்விகளுக்கு வரிசையாய்ப் பதில் சொல்ல வேண்டும். தங்களுக்கு ஒருபெண்டாட்டிதானா? வேறுபெண்டாட்டியிருக்கிறாளா?

மு—நீ கேட்டதைப்பார்த்தால் உனக்கே தெரியும் போலிருக்கிறது. (இக்கதையைப் படிப்பவர்காள்! அவ்வறையில் விளக்கில்லை என்ற விஷயம் சொல்ல மறந்துவிட்டோம் ஆகிலும் இரு பெரியஜன்னல்களிருந்தமையால் சந்திரன் வெளிச்சம் உள்முழுவதும் பரவிப் போதுமான மட்டில் இருந்தது, விளக்கை வேண்டும்பொழுது ஏற்றிக்கொள்ளும் பொருட்டு, ஒரு கை விளக்கும், பக்கத்தில் ஒரு தீப்பெட்டியும் வைத்திருந்தன).

மீ—இல்லை, இன்றையதினம் ரிஜிஸ்திரார் சொன்னார்.

மு—ஆம், எனக்கு வேறொரு பெண்டாட்டி யிருக்கிறாள்.

மீ—அவளெங்கே?

மு—'அவளிருக்குமிடம் தெரியவில்லை' என்று விசனத்துடன் கூறினார்.

மீ—அவளைப்பற்றிப் பேசினால் விசனம் உண்டாகின்றதோ?

மு—அந்தசமாசாரம் இப்பொழுது என்னத்திற்காக?

மீ—நான் மானம் வெட்கம் எல்லாவற்றையும் விட்டு என்தேகத்தைத் தங்களிடத்தில் ஒப்புவித்தேனே! தாங்கள் தங்கள் மனத்திலுள்ளதை என்னிடத்தில் சொல்லக்கூடாதா?

மு—ஆஹா! உன்னிடத்தில் சொல்லாதிருப்பனோ? அந்த விஷயத்தை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்குத் துக்கம் வருகின்றது. அதினாற்றான் சொல்லவில்லை.

மீ—துக்கமென்ன? நீங்கள் சொல்வதொன்றும் எனக்குப் புரியவில்லையே! நான் புதிதாயிற்றே. எனக்கு முழுவதுஞ் சொல்லுங்கள்.

மு—சொல்கிறேன், நீ எவரிடத்திலும் சொல்லக்கூடாது, உன் சொந்த புருஷனிடத்திலும்சொல்லக்கூடாது. ஏதோ அவளைப்பற்றி யதிக அக்கரை இருக்கின்றதுபோலிருக்கிறதே!

மீ—அக்கரையென்ன? என்னவோ வேடிக்கை சமாசாரங்கள் சில நடந்தனவென்று கேள்விப்பட்டேன், அதனாற்றான்.

மு—சொல்கிறேன், ஆதியோடந்தமாகக் கேள். எனது மூத்தபெண்டாட்டி பெயர் மீனாக்ஷி. அவள் தகப்பனார் இராஜகோபாலையர். அவர் வக்கீல். ஒருநாள் நான் பள்ளிக்கூடத்தில் தாழ்வாரத்தில் உலாத்திக்கொண்டிருந்தபொழுது, ஒருவர்வந்து என்னுடைய சமாசாரங்களெல்லாம் கேட்டார். நான் அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில்சொன்னேனேயன்றி அவர் யாரென்று கேட்கவில்லை.

பிறகு இருபதுநாள் கழித்து அவரே தஞ்சாவூரில் எங்களகத்திற்கு வந்தார். அவரை என் தகப்பனாருக்குத் தெரியும்போலும். வெகு மரியாதையாய் உபசரித்தார். அன்றையதினம் வீட்டில்விருந்து நடந்தது. எனக்கு அவர் இன்னகாரியத்திற்காக வந்திருக்கிறாரென்றுந் தெரியவில்லை. வீட்டில் விருந்துபண்ணவேண்டிய காரணமுந்தெரியவில்லை. எல்லாவற்றிற்குமே அம்மாவைக் கேட்போமென்று கேட்டேன். அதற்கு அவள் "எனக்கு மருமகள் வரப்போகின்றாள், அவளுடைய தகப்பனார்தான் அவர்" என்றாள். நான் வெட்கப்பட்டுக்கொண்டே பேசாதிருந்துவிட்டேன், அன்றையதினம் புதிதாய்வந்த இராஜகோபாலையரும் ஊர் போய்விட்டார். மறுநாள் காலையில் என் தகப்பனார் என்னைத் திருப்பாப்புலியூர் வரும்படிச்சொன்னார். நான் காரணங் கேட்டதற்கு 'நீயே உன் பெண்டாட்டியைப் பார்த்து கலியாணஞ் செய்துகொள்' என்றார். "நீங்கள் பார்த்தால் போதும், நான் பார்க்கவேண்டாம்" என்றேன்.

'அன்றையதினம் இரவு புறப்பட்டுப் பெண்ணைப் போய்ப்பார்த்து வந்தார். பெண் வெகு அழகாய் இருக்கிறதாகவும், கலியாணம் நிச்சயம்பண்ணிவந்து விட்டதாகவும். 1000-ரூபாய் எதிர்ஜாமீன் என்றும் சொன்னார்.

எனக்கு எதிர்ஜாமீனைப்பற்றிய விஷயம் இன்னும் விளங்கவில்லை. பெண்ணையும் வாங்கிக்கொண்டு ரூபாயையும் வாங்கிக்கொள்ளுதல் அன்னமும் அளித்துப் பணமும் கொடுக்கின்றதுபோலிருக்கின்றது; ரூபாயைக் கொடுத்தவர்களுக்கு ஏதேனும் வஸ்து வேண்டுமன்றோ? ஆகையினால் ரூபாயையாவது வாங்கக்கூடாது, அல்லது ரூபாயை வாங்கினவர்கள் பிள்ளையைப் பெண்ணகத்தில் கொண்டுபோயாகிலும் விட்டுவிடவேண்டும். இதுநிற்க, கலியாணத்திற்கு முதனாள் காலையில் புறப்படுவதாயிருந்தோம். அதற்கு முதனாள் சாயங்காலம் "நீங்கள் புறப்படவேண்டாம். கலியாணம் வேறிடத்தில் நிச்சயமாகிவிட்டது" என்ற தந்திவந்தது. ஆதலால் நாங்கள் புறப்படவில்லை. மறுநாள் மாலை இரண்டுமணிக்கு வேறொரு தந்தி வந்தது. 'காலை ரயிலில்

வரவில்லை. விசனமாயிருக்கிறது, உடனே புறப்படவும்' என்றெழுதி யிருந்தது. எங்களுக்கு இவ்விரண்டினையும் பார்க்கவே ஆச்சரியமாகிவிட்டது. 'போகலாமா வேண்டாமா என்ற கேள்வி எங்கள் குடும்பத்தில் உண்டாயிற்று. சிலர் வேறு கலியாணம் பண்ணிவிடுவோம் என்றார்; ஆயினும் என் தகப்பனார் போகத்தான்வேண்டும் என்றார். தூங்குகிறாயா? நான் சொன்னதைக் கேட்கிறாயா?'

மீனாக்ஷி யிதுவரையும் தன் குரலை மாற்றிப் பேசி வந்தாள், இவர் சொல்வதை மிகக் கவனமாய்க் கேட்டுவந்தாள். ஆதலின், தன் உண்மையான குரலோடு 'தூங்கவில்லை, சொல்லுங்கள்' என்றாள்.

மு— ஆகவே கலியாணத்திற்கு முதனாள் இராத்திரி 11-மணிக்கு தஞ்சாவூரிலேறி இரண்டுபணிக்குத் திருப்பாப்புலியூர் போய்ச்சேர்ந்தோம். அங்குபோன பிற்பாடு முதலிலடித்த தந்தி அவர்கள் அடிக்கவில்லை யெனத் தெரிந்தது. அது அடித்தவ ரின்னாரென்பதும் கலியாணத்தில் நடந்த மற்ற விஷயங்களைச் செய்தவ ரின்னாரென்பதும் இன்னும் புலப்படவில்லை.

பிறகு மருமகப்பிள்ளையை யழைத்துப் போவதென்ற சம்பிரதாயத்தின்படிக்கு குதிரைவண்டியி லேற்றினார்கள். எனக்குக் கல்யாணபெண்ணைப் பார்க்கவேண்டுமென்றவாசை அதிகமா யிருந்தது. ஆயினும் அக்காலத்தில் அவளகப்படவில்லை.

'மாலை மாற்றுகிற சமயத்தில் முதன்முத லவளைப் பார்த்தேன். அவளழகில் உனக்குச் சமானமென்று சொல்லலாம். என் மனதிற்குள் மிக்க சந்தோஷமா யிருந்தது' என்று முடிப்பதற்குள் மீனாக்ஷி தன்னையும் மறந்து 'மனதிற்குள் சந்தோஷமாயிருந்தால் வெளியில் கோபமாயிருப்பானேன்? கலியாண முழுவதும் கோபமா யிருந்தீர்களே!' என்றாள்.

முனிசீபாகிய இராமஸ்வாமி சடேரென்று விளக்கேற்றினான். மீனாக்ஷியின் முகத்தைச் சற்றே பார்த்தான். 'மீனாக்ஷி!' என்றான். கெட்டியாய் கட்டிக்கொண்டான். அசை

பலி நேரம் வரையிலும் ஒன்றும் பேசவில்லை. ஆனால் மீனாக்ஷியின் புடைவையும் இராமஸ்வாமியின் சோமனும் நனைந்திருந்தது என்றால், அவர்களிருவரும் செய்த காரியம் அழுகை யென்பது நான் சொல்லாமலே யாவரும் அறிந்துகொள்ளலாம். கடைசியாக இராமஸ்வாமி தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, 'மீனாக்ஷி! நம்மைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் நன்றாய் யோசித்துப்பார்த்தால், கடவுள் அர்த்தமில்லாதவிதமாய்ப் பல காரியங்களைச் செய்கின்றனரென் றேற்படுகின்றது. அழுவதில் பிரயோஜனமில்லை. நீ யந்த வக்கீல் வீட்டிற்குச்சென்ற காரணம் யாது? கேஸ் நடக்கும்பொழுது எங்கேயோ ஓடிவிட்டனையே. எங்கு சென்றனை? அழாதே அம்மா அழாதே' என்றான்.

மிகவும் கஷ்டப்பட்டு தன் கஷ்டங்களைச் சொன்னால் பரிகசிக்காமல் பரிதபிப்பவர்கள் ஒருவருமில்லையேயென வருந்து மொருவற்குத் தன் கஷ்டங்களை யெல்லாம் மனப்பூர்வமாய்க் கபடமின்றிச் சொல்லத்தக்க சிநேகிதரொருவர் அகப்பட்டுவிட்டால், இதுவரையும் உள்ளுக்குள்ளேயே யடங்கியிருந்த அழுகை வெளியாகி வெகு வலிமையோடு விளங்குமென்ற விஷயம் உலகப்பயிற்சி யுள்ளவர்களுக்குச் செவ்வனே விளங்கும்.

தனக்குயிர்த்தோழனாகிய காற்றுவரவில்லையே யென்று வெளிக்கிளம்பாமல் உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண்டிருந்த நெருப்பு. காற்றுவீசி யடித்தவுடன் வெளிக்கிளம்பி மிகுந்த ஜ்வாலையோடு பிரகாசிப்பதைக் காணாதவரெவர்?

இராமஸ்வாமி பல தடவைகளில் 'அழாதே அம்மா! அழுவானேன் அழாதே!' என்று சொல்லிய பிறகு மீனாக்ஷி அழுகைகலந்த குரலுடனே 'தாங்களென்பேரில் முன்கொண்ட அபிப்பிராயத்தை மாற்றிவிட்டீர்களா? அல்லது முன் நினைத்தபடியே என்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா?' என்று கேட்டாள். இவள்கேட்ட மாதிரியில் இராமஸ்வாமியின் துக்கம் அதிகரித்தாலும், அதனை யடக்கிக்கொண்டு 'என் நாயகி! உன்னைப்பற்றி நானெண்ணியிருந்தவெல்லாம் பிழை. உன்னைப் பகைக்கச்செய்த வக்

கடிதமே திரும்பவும் உன்னை சிநேகிக்கச்செய்தது. முதலில் உன்னை நபும்ஸகமென்று சந்தேகிக்கச்செய்த கடிதம் பிறகு நீ சோரம்போனாயென்றது' என்றனன்.

மீ—இதை யோசிக்காமல் நான் கடிதம் எழுதிவைத்தேன் என்றீர்களே! பிழைதானே?

இரா—அச்சண்டையும் உன்னாற்றானே யுண்டாயிற்று. முதன்முதல் நீதான் என்னைப்பற்றித் தூஷித்தாய்.

மீ—நான் தூஷித்ததற்கு நியாயமுண்டு. தங்கள் சிநேகிதனெழுதியதுபோல் அது இருந்ததால், அவ்வாறெல்லாம் யோசித்தேன்.

இரா—தீபாவளியின்பொழுது நீ யெழுதியதாக நானெண்ணிய கடிதமும், அவ்வறையில் உன் கையில் நான்கண்ட கடிதமும் ஓரே யெழுத்தாயிருந்ததனால் அவ்வாறு யான் யோசித்தேன்.

மீ—நீங்களென்னை யடித்தீர்களே! அவ்வாறு அடிக்கலாமா?

இரா—என் கைக்கடிதத்தை நீ பிடிங்கினது பிழைதானே!

மீ—முதலில் கடிதம் என் கையில்தானே யிருந்தது!

இரா—எப்படியோ நடந்தது நடந்துவிட்டது. தம்பதிச்சேர்க்கைக்குக் காரணமாயிருக்கவேண்டிய அன்றிரவு தம்பதிப் பிரிவுக்குக் காரணமாயிற்று. இன்றையதினம்தான் தம்பதிச்சேர்க்கை.

மீ—வேறு கலியாணம் பண்ணிக்கொண்டீர்களே!

இரா—போன விஷயமெல்லாம் இப்பொழுது யோசிப்பானேன்? ஒரு விறகுக் கட்டையின்பேரில் மண்ணெண்ணெயைவிட்டு நெருப்புவைத்தால் சற்றுநேரம் திகுதிகுவென்றெரிந்து பிறகு நின்றுவிடுவதுபோல், கடிதமாகிய கட்டையின்பேரில் உன் வார்த்தையாகிய எண்ணெயைவிட்டு, உன் செய்கையாகிய நெருப்பை வைத்தாய். அது இரண்டு மாதம் எரிந்து பிறகு சட்டென நின்றுவிட்டது. பிறகு கடிதமாகிற கட்டைமாத்திரம் சற்றுநேரம் புகைந்து

கொண்டிருந்தது. சிறிதுநாள் கழித்து அதுவும் நின்றுவிட்டது.

மீ—உங்களுடைய சொந்தப்பெண்டாட்டி யெங்கே?

இரா—(புன்சிரிப்புகொண்டு) இதோ என் மடியில் படுத்திருக்கிறாள் என்று முத்தமிட்டான்.

மீ—உங்களுடைய இரண்டாவது பெண்டாட்டி யெங்கே?

இரா—அவளுள்ளே படுத்துறங்குகிறாள்.

மீ—அவளைவிட்டுவிட்டு இவ்விதம் அக்கிரமம் செய்யலாமா?

இரா—அக்கிரமமென்ன? நியாயமாய் நீதானே யெனக்குப் பட்டமகிஷி.

மீ—நான் மீனாக்ஷியென்று இப்பொழுதல்லவோ தெரிந்தது, அதுவுந் தெய்வச்செயலாய் நேர்ந்தகாரியமன்றோ? என்னுடைய பூர்வோத்திரந் தெரிவதற்கு முந்தியேதானே என்பேரி லாசைகொண்டீர்கள்!

இரா—உண்மையாய் உன்னைவிட்டுப் பிரிந்த இரண்டு மூன்று மாதத்திற்கப்புறம், மறுபடியும் உன்னையுடைய வேண்டுமென்ற வெண்ணம் எனக்குண்டாயிற்று. ஆதலால் சதாகாலமும் உன்னுருவத்தையே மனத்திலமைத்து தியானம்பண்ணிக்கொண்டிருந்த நான் உன்னைப்பார்க்கவே நானிதுவரையு மடைந்திராத பேரவா உன்னிடத்திலுண்டாயிற்று.

மீ—என்பேரில் அன்றிரவு மிக்க கோபத்தோடிருந்தீர்களே! அக்கோபம் எவ்வெக்காரணங்களினால் அகன்றுவிட்டது.

இரா—இன்னின்ன காரணங்களென்று நிச்சயமாய்த் தெரியாது, அந்தக்கேஸ் ஒன்று விசாரித்தார்களே அப்பொழுதுதான் என்பொய் எனக்கு ஸ்பஷ்டமாய் விளங்கிற்று.

மீ—என்னபொய்?

இரா—உனக்குத் தெரியாதோ?

என்று மீனாக்ஷி காதில் ஏதோ சிலவார்த்தைகள் சொன்னான், மீனாக்ஷி சிரித்தாள்.

மீ—வெட்கமில்லாமல் அவ்விதஞ் சொன்னீர்களா?

இரா—ஒருவர்மீது கோபமுண்டாகிவிட்டால், வெட்கம், மானம் எல்லாம் நீக்கி, அவரைக்கெடுத்துவிடுவதற்கு வேண்டியவழிகள் மாத்திரமே தோன்றும். என்னகாரியஞ் செய்தாகிலும் அவர்பெயரைக் கெடுத்துவிடத்தூண்டும்.

மீ—நீங்கள் நியாயாதிபதியாயிற்றே! இவ்வாறு அநியாயம்செய்ய வாரம்பிக்கலாமா?

இரா—நல்லகேள்வி கேட்டனே. இதற்கு அநேக விடைகளுள. சில சொல்கிறேன். சாதாரண மனுஷியர்களுக்குள் இவ்வித அக்கிரமங்கள் அதிகமாய் நடக்கின்றனவென்று மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டுமூல்யமாய் அறிந்துகொள்ளலாம். நியாயாதிபதிகளும் சாதாரண மனுஷ்யர்கள்தானே. அவ்வாறாகின் அவர்கள்பேரில் ஏனதிகமாய் வழக்குகள் வருகிறதில்லையெனக்கேட்கலாமே! அவர்கள் படித்தும் சமர்த்தாயும் இருத்தலின், வழக்குகள் வராமல் தடுத்துவிடுவார்கள். உதாரணமாக, இன்றையதினம் மூன்று மணிக்கு ரிஜிஸ்திரார் உன்னை யேற்றிவந்த கோச்சுவண்டியைக் கொண்டுவருவார். அதிலுன்னையேற்றி உன்வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடுவர். வக்கீல் உன்னை யெங்கே போனாய் என்றுகேட்டால், அதற்குத் தகுந்தபதில் சொல்லும்படியாய் உனக்குக் கற்பிப்பேன், ஆகவே உன்னைக் குற்றத்தினின்றும் நீக்கி என்னையும் விடுவித்துக்கொள்வேன்.

இன்னுமொருவிஷயம் நியாயாதிபதியென்றால் பிறர்க்கு நியாயஞ்சொல்பவன் என்றுமாத்திரம் அர்த்தமேயொழிய தான் நியாயத்தின்படி நடப்பவன் என்று அர்த்தமில்லை.

நீ யென்னைப்பற்றிக் குற்றங் கண்டுபிடிக்கிறாயே! உன் சேதியென்ன? நீயு மென்னையறியாமற்றானே யென்னிடத்தில் வந்தாய்?

மீ—இனி யவ்விதஞ் சொல்லாதேயுங்கள். உங்களை நான் தெருவில்பார்த்தவப்போழுதே அறிந்துகொண்டேன்.

ங்கள் இங்கேவருவதற்குக் காரணமென்னவென்று யான் யோசித்துக்கொண் டிருக்குங்கால், வக்கீ லகமுடையாள், 'இவர்தா னிவ்வூர் முன்சிபு' என்றாள். அவ்விதத்திலேனும் தங்களோடு சேரவேண்டும் என்று நான் தீர்மானித்திருந்த பொழுது மறுநாள் பகலில் தங்களகமுடையாள் வக்கீலக முடையாளைக் கூப்பிடுவதாக ஒருத்தி வந்து கூப்பிட்டாள்.

இரா—அது நான்செய்த வேற்பாடு. உன்னோடு ரிஜிஸ் திரார் பேசும்பொருட்டு அவர்களை வரவழைத்துவிடச் சொன்னேன்.

—அப்படியென்றால் ஞானாம்பாளுக்கு இந்தவிஷயங் களெல்லாந் தெரிந்திருக்குமே!

இரா—அவளுக்குத் தெரியாது, அவர்களைக் கூப்பிடு என்றேன், காரணம் கேட்டதற்கு உன்னிடத்தில் சொல்ல வேண்டிய அவசியமில்லை யென்றுவிட்டேன். வற்புறுத்திக் கேட்டதற்குக் கோபித்துக்கொண்டேன். பேசாதிருந்து விட்டாள்.

—அவர்கள் போனபிறகு ரிஜிஸ்திரார் வந்தார். வக்கீ லைக் காண்பதற்கு யாரோ வந்திருக்கின்றனரென நினைத் தேன். பிறகு உள்ளே வந்து உட்கார்ந்ததும் துன்மார்க்க எண்ணங் கொண்டிருக்கிறாரென நினைத்தேன். உங்களைப் பற்றிப் பேசினதும், உங்களைப்பற்றிய சமாசாரங்களை யெல்லாம் விசாரித்தேன். பிறகு அவர் மொழிந்த வார்த் தையைக்கேட்டு போனந்தத்தில் மூழ்கினேன். ஆகவே, உங்களை முழுவதுந் தெரிந்துகொண்டு உங்களோடு நான் சேர்ந்தேன். நான் செய்தது நியாயம், என்னை இன்னாளென் று அறியாமலே நீங்களென்பேரில் ஆசைப்பட்டீர்கள், ஆத லின் நீங்கள் செய்தது அக்கிரமம்.

இரா—சரி, நீயே நியாயக்காரி. நானே அநியாயக்காரன் என்று வைத்துக்கொள்ளேன்.

—நான் அன்றிராத்திரி சொன்னவார்த்தை ஞாபக மிருக்கிறதா? 'நீங்களொருவழிப்பட்ட மனத்தை யுடைய வர்களா? அல்லது நான் கற்புள்ள ஸ்திரீயா? என்பதை

ஸ்தாபித்துக்கொண்டு மறுபேச்சுப்பேசுவோம் என்றேனே! இப்பொழுது என்னவேற்பட்டது.

இரா—அந்த வார்த்தையெல்லாம் இப்பொழுது வேண்டாம். என்னைப் பிரிந்ததுமுதற்கொண்டு உனக்கு நடந்த விஷயங்களெல்லாம் சொல் பார்ப்போம்.

மீ—உங்களுக்கு நடந்த விஷயங்களெல்லாம் நீங்கள் சொல்லவில்லையே!

இரா—நீ முதலில்சொல்! நான் அப்புறம்—

மீ—நீங்கள் முதலில் சொல்லுங்கள்! நான்—

இரா—(சிரித்துக்கொண்டு) எப்பொழுதும் பிடிவாதக்காரி நீ. நீ சொல்வதற்கு நான் எதிர்சொன்னாற்றானே உன்னுடைய பிடிவாதம் வெளிக்கு வருகின்றது நீ சொல்கிறபடியே நான் கேட்டுவிடுகிறேன் இனிமேல், அப்பொழுதென்னசெய்வாய்.

என்று தனக்கு நேரிட்டவைகளெல்லாம்மொழிந்தான்.

பிறகு மீனாக்ஷியும் தனக்கு நேர்ந்த துக்கங்களையெல்லாம் எடுத்துக் கூறினள்.

இரா—யாரோவொருவர் நடுவிலிருந்துகொண்டு இத்தீங்குகளெல்லாம் செய்கின்றனர். பொய்த்தந்தியடித்தவரும், நகையைத்திருடினவரும், என்னை யழைத்துப் போனவரும், எனக்கு மணியார்டர் செய்தவரும், உன் வாலம்பாளும், எல்லாரும் ஒருவராய்த்தானிருக்கவேண்டும். இன்னவரென்று தெரியவில்லை. உனக்கு ஒருவர்பேரிலும் சந்தேகமில்லையா?

மீ—ஆதியில் எனக்குக் கலியாணமாகிறதற்கு முந்தி என்றோழி என்னிடத்தில் ஒருவார்த்தை சொன்னாள். அதாவது அவள்தகப்பனார் என் தகப்பனாரிடத்தில் கோபித்துக்கொண்டு கலியாணம் முடிவதைப் பார்ப்போம் என்று சொன்னாராம், அவராயிருந்தாலிருக்கலாம்.

இரா—உன் தோழியார்? அவள் தகப்பனார் யார்?

மீ—என் தோழியின் பெயர் சாவித்திரி.

இரா—சாவித்திரியா? ரிஜிஸ்திரார் அகமுடையாள் பெயரும் சாவித்திரிதான். அவள் பிறந்த அகமும் உன் ஊர்தான்.

மீ—அவள் தகப்பனார்பெயர்?

இரா—நாராயணஸ்வாமியையர் என்று கேள்வி.

மீ—நாராயணஸ்வாமியையர் மருமகப்பிள்ளையா ரிஜிஸ்திரார்?

இரா—உனக்கு நாராயணஸ்வாமியையர் என்னமாய்த் தெரியும்?

மீ—எங்களகத்துக்குப் பக்கத்திலிருக்கின்றாரே!

இரா—கலியாணத்தின்போது அடிக்கடிவந்து போய்க் கொண்டிருப்பரே!

மீ—அவர்தான்! அவரே!

இரா—அவரா ரிஜிஸ்திரார் மாமனார்?

மீ—ரிஜிஸ்திரார் அகமுடையாள் சாவித்திரியாயிருந்து அவர் மாமனார் நாராணஸ்வாமியையராயிருந்தால், என் வீட்டிற்குப் பக்கத்து வீட்டு நாராணஸ்வாமியையர்தான் அவர்.

இரா—அவரா கலியாணம் எப்படி நடக்கும் பார்ப்போம் என்று கூறினார்.

மீ—அதென்னவோ? எனக்கு நிச்சயமாய்த்தெரியாது, அவ்விதந்தான் என் தோழி கூறினாள்.

இரா—எனக்கும் அவர்பேரிற்றான் சந்தேகமுண்டாகிறது. அவர் என்னை யாற்றங்கரைக்குக் கூப்பிட்ட சற்று நேரத்திற்கப்புறம் தான் கிழவனும் வந்தான், பாதி ராத்திரியில் உன் சிற்றப்பாவை விட்டுப்போன சற்று நேரத்திற்கெல்லாம் கிழவன் வந்து உன் சிற்றப்பாவை யடித்தான். பிறகு திருடினவனைக் கண்டுபிடித்ததும் நாராயண்ஸ்வாமி அய்யர்தான். இதில் இன்னுமொரு விஷயம், நாராயணஸ்வாமி யய்யரையும் கிழவனையும் ஒருங்கே பார்த்தவர் எவரேனுமுண்டா? மேலும் கேஸில் அகப்பட்ட கிழவன்

ஒரு பார்ப்பான் தன்னைச் சொல்லச்சொன்னதாக முதலில் சொல்லிப் பிறகு ஒரு கிழவனைப்பற்றி யேதோசொல்ல வாரம்பித்தான். இவ்விஷயங்களினால் எனக்குக் கிழவனும் நாராயணஸ்வாமியையரும் ஒருவரா யிருக்கலாம் என்ற சந்தேகமுண்டாயிற்று. இப்பொழுது சொன்ன விஷயத்தைக்கேட்க சந்தேகமுறுதியாகின்றது.

மீ—இவ்வளவு அற்பகாரணங்கொண்டா இவ்வளவு பெரிய தீங்குகளெல்லாம் செய்வர்!

இரா—என்னவோ? அதுதானெனக்கும் சந்தேகமாயிருக்கிறது. இது தெய்வச்செயலாலன்றி மனுஷ்யயத்தனத்தால் வெளிப்படாதுபோலவே தோன்றுகின்றது.

மீ—நாமிப்பொழுது கூடியிருக்கிறோமே! இது மனுஷ்ய யத்தனமா? இவ்வளவு சீக்கிரத்தில் நாம் கூடுவோமென்று கனவிலும் நாம் நினைக்கவில்லையே! இதைப்போல நம்மை யறியாமலே யவ்விஷயங்களும் வெளிப்பட்டுப் போகும்.

இரா—சரி, மேல்நடக்கவேண்டிய விஷயம்? ஞானம்பாளை யென்னசெய்யலாம்?

மீ—அதைப்பற்றி யப்புறம் பேசுவோம். முதல்முதல் கலியாணத்தின்போது என்பேரில் ஏன் கோபித்துக்கொண்டீர்கள்.

இரா—உன்னுடைய உள்ளங்கால் முதற்கொண்டு உச்சந்தலைவரையும் ஒரே நகையாயிருந்ததைப் பார்த்து எனக்குக் கோபம்வந்தது.

மீ—ஆஹா! வெகு நன்று! நகையிருந்ததனால் கெடுதலென்ன?

இரா—நல்ல விஷயத்தில் செலவிடக்கூடிய பணத்தை வீணே நகை வாங்குவதில் செலவழிப்பது கெடுதல். மேன்மேலும் விருத்தியாக்கக்கூடிய பணத்தை நகைமேற்போட்டு நாளுக்குநாள் குறையச்செய்வது கெடுதல். உபயோகமில்லாத நகைக்காகத் தட்டான்களுக்கு கூலிகொடுப்பது கெடுதல். அழகு இயல்பாயுள்ளவர், நகையில்லாமலே சோபிப்

பார், அழகற்றவர்களுக்கோ எவ்வளவு நகைபோட்டாலும் அவர்களுடைய அவலக்ஷணம் முன்னுக்குவந்து விளங்கும். கடவுள் நமக்கு இயல்பாய்க்கொடுத்த சரீரத்தை நாம் சீர்திருத்த முயல்வது, அவர் எல்லாமறிந்தவர், எதையும் பூரணமாய்ச் செய்வர் என்பதற்கு விரோதமாயிருக்கின்றது. மேலும் நகை யென்கிற இவ்விரண்டு எழுத்துக்களினால், நம் தேயத்துப்பெண் பாலர்களுக்குள் பொறாமை, கோபம், சண்டை, வயிராக்கியம் முதலாகிய கெட்ட குணங்களெல்லாம் உண்டாகின்றன, அவர்கள்மட்டுமேயன்றி அவர்களுக்கும் ஆண் பாலர்க்கும் தீராத்துயரத்தை யுண்டுபண்ணுகின்றது. இது மாத்திரமா? புருஷர்களைத் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கச்செய்கின்றது. எப்படியெனில் பரஸ்திரீயைத் தான் வைத்துக்கொண்டிருக்கிறது தன் சொந்த ஸ்திரீக்குத் தெரிந்துபோனால் அவளுக்கு 300, 400-ரூபாயில் நல்ல நகை யொன்று பண்ணிப்போடுகிறான். அப்புறம் மறுபேச்சில்லை நகைசெய்யும் பிழைகள் இவை மாத்திரமா? இரண்டு மூன்று ஸ்திரீகள் சேர்ந்துபேசினால் முதல்பேச்சு நகையைப்பற்றித்தானே! கோவிலுக்குப்போனால் பிறஸ்திரீகளின் நகைகளைப் பார்க்கிறதேயல்லாமல் ஸ்வாமியை யார் பார்க்கிறார்கள். எங்கேயாவது வெளியிற்போனால் போதும், யாரோடாகினும் பேசினாற்போதும். அன்றிரவு தம்பதிகளுக்குள் ஒற்றுமைகிடையாது. அம்மம்ம! இந்த நகையென்பது எவ்வளவு தீச்செயல்களுக்குக் காரணமாயிருக்கின்றது? என்ன சிரிக்கிறாய்?

—நகையைப்பற்றி இவ்வளவு துவேஷமா உங்களுக்கு?

இரா—நான்சொல்லிய விஷயங்கள் உண்மையல்லவோ?

—முதல் முதல் ‘நல்லவிஷயத்தில் செலவிடக்கூடிய பணத்தை வீணே நகைவாங்குவதில்—’ என்றீர்கள். நல்லதற்கும் கெடுதலுக்கும் நடுவில் நடுநிலைமை என்று ஒன்றில்லையா? நகைசெய்வதை நடுநிலைமைக்கும் நல்லதிற்கும் நடுவில் வைக்கலாம். விருத்தியாக்கக்கூடிய பணத்தை நகையில் செலவழிப்பது வீண், வீட்டில் பெட்டியில் தூங்கும் பணத்தைச்செலவழிக்கலாமே! தட்டான்கள்பேரில் பாவம்!

அவர்கள் என்னசெய்வார்கள்? நகைசெய்யச்சொன்னால் அவர்கள் செய்கிறார்கள், பிறகு அழகு இயல்பாயுள்ளவர்களுக்கு நகைபணிந்து கொள்வதனால் அழகு அதிகமாகும்; அழகு இல்லாதவர்களுக்கு அழகையுண்டாக்கும்.

இரா—அதைத்தான் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்.

மீ—இப்பொழுதே உங்களெதிரில் ரூபித்துவிடுகிறேன். நான் அழகாயிருக்கிறேனா இல்லையா?

இரா—என் கண்மணியே! யா. உன்னைப்போன்ற அழகி இந்த பூலோகத்தில் யாரிருக்கின்றார்கள்? என்று இன்ன இடத்திலென்று இல்லை, ஒரு சதுர அங்குலத்திற்கு ஒரு முத்தமாகப் பத்துநிமிஷம் விடாமல் முத்தமிட்டனன்.

மீ—இந்த முத்தங்கள் அப்புறம் ஆகட்டும், நானென்ன ஓடியாவிடுவேன்? நான் கேட்டதற்குச் சரியாக சீக்கிரம் பதில்சொல்லுங்கள், நான் அழகாயிருக்கிறேனே!

இரா—அதற்கென்ன சந்தேகம்?

மீ—என்பேரில் என்னவென்ன நகை யிருக்கின்றது?

இரா—அதிகமாய் ஒன்றையுங் காணோம்.

மீ—இருப்பதைத்தான் சொல்லுங்கள்.

இரா—காதில் ஓர் கம்மலிருக்கின்றது, மூக்கில் புல்லாக் கொன்றிருக்கின்றது கழுத்தில் அட்டிகைப் பதக்கம், தாலி, பவழமாலை இருக்கின்றன. கையில் ஓர் தங்கக்காப்பும், காலில் கொலுசும் காப்பும், இவைதான், வேறே யொன்றையுங்காணோம்.

மீ—சரி இவைகளையெல்லாம் கழற்றுகிறேன். அப்புறம் பாருங்கள்

என்று முதலில் கம்மலைக்கழற்றினாள் மீனாக்ஷி. முகத்தினழகில் பாதிகுறைந்தது. புல்லாக்கைக் கழற்றினாள், முகமே மாறிவிட்டது.

இரா—போதும் போதும், மறுபடியும் போட்டுக்கொள், இப்பொழுதும் உன்முகம் அழகாய்த்தானிருக்கிறது. ஆனாலும் முன்போலில்லை.

மீ—பார்த்தீர்களா?

இரா—சரிதான், ஆனாலும் நகையணிந்திருந்த முகத்தையே நாம் பார்த்திருந்தவர்களாகையால் இப்பொழுது நகையில்லாத முகம் நன்றாயில்லை, நகையே எவரும் போட்டுக்கொள்ளா திருந்துவிட்டால்——

மீ—ஒவ்வொருவராய்த் தானே போட்டுக்கொள்ளா திருக்கவேண்டும்.

இரா—ஆமாம்.

மீ—நான் முதலில் ஆரம்பிக்கிறேன். அப்புறம் ஒவ்வொருவராய் ஆரம்பிப்பார்கள்.

இராமஸ்வாமிக்கு ஒன்றுஞ்சொல்லவில்லை

இரா—இனிமேல் நாழிகையாகிறது. ஞானம்பாளைப் பற்றிச்சொல். அவளை யென்ன செய்யலாம்.

மீ—பேச்சை மாற்றுவதில் கெட்டிக்காரர். தோற்று விட்டேன் என்று சொல்லுங்களேன்.

இரா—தோற்று

—விட்டேன்

இரா—நீதானே!

எனவே மறுபடியும் முத்தமும் தழுவலும் நகையும் உண்டாயின.

மீ—ஒன்றாயிற்று, மறுநாள் பந்தையேன் என்மேல் விட்டெறிந்தீர்கள் ?

இரா—அந்தப்பேச்சையெல்லாம் இப்பொழுதேதனடி பேசுகிறாய்? போனது போய்விட்டது.

மீ—போனது போய்விட்டது! நீங்கள் செய்தது பிசகுதானே!

இரா—என்னமாய்? புல்லாக்கின்பேரில் விட்டெறிந்த பந்து கண்ணில் பட்டுவிட்டால்,

மீ—அதுபோகிறது அப்புறம்—

இரா—பார்த்தாயா? நான் அதெல்லாம் வேண்டாமென்றால்—

மீ—இனிமேலில்லை இனிமேலில்லை.

என்று இராமஸ்வாமியை முத்தமிட்டுக்கொண்டாள்.

இதைப்படிக்கும் நண்பர்காள்! மேற்செய்கையினால் இராமஸ்வாமியின் ஆநந்தத்திற்கு ஓரெல்லை கண்டுபிடிக்க முடியுமா உங்களால்!

இரா—ஞானம்பாளை என்னசெய்யலாம்.

மீ—அவள் பிறந்த அகத்திற்கு ஒருமாதம் அனுப்பி விட்டு என்னோடு இருங்கள், நான் பிறந்த அகத்திற்குப் போனபின்பு ஒரு மாதம் அவளோடிருங்கள்.

இரா—உன்னையா? உன்னைவிட்டு அரைநிமிஷங்கூட இனிமேல் பிரிந்திரேன். என்னுடைய முன்சீபுவேலையை இழந்தாலும், எனக்குக் கொடுத்திருக்கும் பி. ஏ. பி. எல். பட்டங்களை யான் இழந்தாலும், என்தகப்பனாரிடத்திலிருக்கும் அன்பை நான் இழந்தாலும், எனது செல்வம் முழுவதையும் இழந்தாலும் உன்னைவிட்டு ஒரு நொடிநேரமாகிலும் பிரிந்திரேன்.

மீ—அப்படியென்றால் இரண்டுபேரும் இங்கேயே யிருக்கிறோம்.

இரா—அதுமுடியாதவிஷயம். இருமனைவிகள் ஓரகத்திலா? நினைக்கும்பொழுதே பயமாயிருக்கிறதே

மீ—அப்படியானால் உங்களுக்குத் தெரிந்ததைச் செய்யுங்கள்.

இரா—இப்பொழுது 5, 6 மாதத்திற்குப் பயமில்லை. ஞானம்பாள் கருப்பமாயிருக்கின்றாள். ஊரில் விட்டுவிட்டு வந்துவிடலாம். அப்புறம் பார்த்துக்கொள்வோம்.

மீ—ஞானம்பாள் கருப்பமா?

இரா—ஆம்.

மீ—ஈசுவரா! எனதகமுடையானுக்கு என்வயிற்றிலன்றி வேறுவிதமாயும் குழந்தையுண்டாக நான் பார்ப்பதோ?

இரா—பொறாமையெனும் தீக்குணம் ஸ்திரீகளைவிட்டு எப்பொழுது நீங்கும்?

மீ—புருஷரைவிட்டு நீங்குங்காலத்து.

இரா—அவள் பிள்ளை என்பிள்ளையன்றோ?

மீ—நான் இப்பொழுது அப்பிள்ளையைப்பற்றிக் கெட்டவிதமாயொன்றுஞ் சொல்லவில்லையே! என்னுடைய அதிர்ஷ்டத்தைப்பற்றி நானே நிந்தித்துக்கொண்டேன்,

இரா—அதுகிடக்கிறது. ஞானம்பாளைப் பிறந்த அகத்தில் கொண்டுபோய் விட்டுவரவேண்டும். நாளையதினம் புறப்படுவோமா?

மீ—நானென்னத்திற்குக்கூட?

இரா—முதலில் திருப்பாப்புலியூர்போவோம். அங்கே யுன்னைவிட்டுவிட்டு நான் ஞானம்பாளை அழைத்துக்கொண்டு அவளூரில் விட்டுவிட்டுப் பிறகு உன்னையழைத்து இவ்வூருக்கு வருகிறேன்.

மீ—சரி.

இரா—என்ன முகத்தை என்னவோபோல்வைத்திருக்கிறாயே!

ஞானம்பாள் கருப்பம் என்றது முதற்கொண்டு மீனாக்ஷியின் முகம் விசனத்தில் ஆழ்ந்திருந்தது.

இரா—அசடே! ஞானம்பாள் கருப்பமானதற்கு நானென்னசெய்வேன். அதற்கென்ன? இன்னும் ஒன்பது மாதத்தில் உன்வயிற்றிலும் குழந்தை பிறந்துவிடுகிறதுபார்.

என்றவுடன் மறுபடியும் மீனாக்ஷி புன்சிரிப்புகொண்டாள். மறுபடியும் ஒருவரையொருவர் முத்தமிட்டுக்கொண்டார்கள். அன்றிரவுமுழுவதும் சந்தோஷக்கடலிலாழ்ந்திருந்தார்கள்.

இதுதானுண்மையான சாந்திமுகூர்த்தம். அவர்களே யொருவரையொருவர்பார்த்து ஆசைப்பட்டுப் பண்ணிக்கொள்ளுமிதுதான் மெய்யான முகூர்த்தம்.

இஃதன்றி மூச்சுவிடுவதற் கிடமில்லாத தோருள்ளில், பெருக்கென்று வைத்திருக்கும் ஒரு ஜன்னலையும் நன்றாய் மூடிவிட்டு, ஜன்னலிலும் கதவிலுமுள்ள துவாரங்களையும் நன்றாயடைத்துவிட்டு, சாதாரணமாய் உள்சிறிய தாளையாலும், அநேகபேர்கள் கதவிலோரமாய்க் காதைவைத்துக்

கொண்டு கேட்பார்க ளாகையாலும், உரக்கப்பேசுவதை விட்டுவிட்டு வியர்வையினால் ஒருபக்கமும், காற்றின்மை யின் கொசுக்களினா லொருபக்கமும், தன்னையுந்தப்பி யே தேனும் அடைபடாத துவாரத்தின்வழியே பார்ப்பார் களோ என்ற பயத்தினால் இருக்கும் விளக்கையும் அணைத் தலின் உளதாகிய இருட்டினா லொருபக்கமும், நகையோ புடைவையோ தன்மனத்தின்படி யில்லாததினால் தன்மனை யாள் அடைந்திருக்கும் துக்கத்தினா லொருபக்கமும், புதி தாகிய உள்ளே புதிதாகிய புருஷனிடத்தில் கொண்டுவந்து விட்டதனால் தன்மனையா ளடைந்திருக்கும் பயத்தினா லொருபக்கமும் பீடிக்கப்பட்ட, ஆஹா! புதியமணாளர்காள்! உமது சுகமே சுகம்! அடடா!

அன்றிரவே இராத்திரி 3-மணிக்கு ரிஜிஸ்திராராகிய ஐயாசாமி அய்யர் மெத்தையின்மீதேறிவந்தார். இவர் இரா த்திரி 10-மணிக்கு முன்சீபைவிட்டுப் போனபொழுது பே சவே கூடாதென்றும், பேசினால் யாருக்காவது தெரிந்து விடுமென்றும் சொல்லிப்போனார். இப்பொழுது போடுங் கூச்சலைப்பார்த்து, திடுக்கிட்டு என்னபேசுகிறார்கள் பார்ப் போம் என்று கதவினோரமாய்க் காதைவைத்துப் பார் த்தார்.

இதேது! பெருநகையா யிருக்கின்றதே! என்று தன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டு மிருதுவான குர லுடன் 'ஐயாவர்கள்!' என்றார்.

சொன்னவுடன் உள்ளேபோட்டுக்கொண்டிருந்த சப் தம் திடீரென நின்றுவிட்டது.

ஐந்து நிமிஷம் கழித்து இராமஸ்வாமியையர் கதவைத் திறந்தார்.

ஐயாஸ்வாமி அய்யர் சிரித்துக்கொண்டே 'நான் போ னது முதற்கொண்டு இன்னும் தூங்கவில்லையோ?' என்று கேட்டார்.

இராமஸ்வாமி அய்யர் 'உள்ளே யிருக்கிறது யாரென்று நினைத்தாய்?' என்று அவர் கேள்விக்கு இவர் மறுகேள்வி யினால் விடையளித்தார்.

அதற்கவர் சிநேகிதர் சிரிப்பை மாற்றாமல் 'அதெல்லாம் தேவரம்பைதான்! எனக்குத் தெரியும்' என்றார்.

இரா—வேடிக்கைப்பண்ணாதே! உள்ளே இருப்பது எனது முதல் மனைவி மீனாக்ஷி.

ஐயா—இப்பொழுது வேடிக்கை பண்ணாதே! நாழியாகிறது, வாசலில் வண்டிவந்திருக்கிறது. வக்கீலகத்திற்கு அவருக்குத் தெரியாமல் கொண்டுபோய்விட வேண்டாமா?

இரா—என் மனைவியை வக்கீலகத்திற்குக் கொண்டுபோய் விடுவானேன்!

ஐயா—ஒரு நாளிலேயுன் மனைவியாய்விட்டனளோ?' என்று பரிகசித்தார். பிறகு முன்சீபு உண்மையாய் அவள் மீனாக்ஷிதானென்றும், தன் தோழியுடன் திண்டிவனம் வந்தவளென்றும், அன்றேல் ரிஜிஸ்திரார் பேச வாரம்பிக்கு முன்னம், முனிசீபினிடத்தில்வர சம்மதிப்பளாவென்றும், நகையற்ற முகத்துடன் கூறினபிறகு ரிஜிஸ்திரார் ஆச்சரியமடைந்தவராகி 'இப்பொழுதென்ன செய்யலாம்? வக்கீலினிடத்தில்போய் சொல்லவேண்டுமே!' என்றார்.

இரா—அதென்னமோ? உனக்குத்தானெல்லாம் தெரியும். அதற்குத் தகுந்த ஏற்பாடு நீசெய்.

ஐயா—கஷ்டத்திற்கு நான் பாத்தியம், சுகத்திற்கு நீ பாத்தியமோ? வெகு நன்று.

என்று பரிகசித்துவிட்டு வக்கீலகம் நோக்கிச்சென்றார்.

ஞானம்பாள் வழக்கமாய் 6-மணிக்குத்தானெழுந்திருப்பது வழக்கம். இவள் எழுந்திருப்பதற்குள் ஓரம்மாள் வந்து உள்மெழுகிப் பாத்திரம் சுத்திசெய்து வைத்திருப்பள். பரிச்சாரகனொருவன் காப்பிவைத்து இருப்பன். இவள் எழுந்தவுடன் பற்றேய்த்து காப்பி சாப்பிடுவள். வழக்கம் போலெழுந்து உள்ளே சென்றாள். பரிச்சாரகனைக்காணோம். காபி மாத்திரம் வைத்திருந்தது. அம்மாளைக்காணோம், உள் மாத்திரம் மெழுகியிருந்தது. இஃதென்ன புதுமையென்று தோட்டத்திற்குச்சென்றாள். அங்கே தன

து நாயகனும் அவனோடு 15, 16-வயது ஸ்திரீ யொருத்தியும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டாள். மற்றொரு ஸ்திரீ யாரென்று தனது புத்தி முழுவதுஞ் செலுத்திப் பார்த்தனள். யாரோ மிகவும் நெருங்கின பந்துவாயிருத்தல் வேண்டும், தனது நாத்தனார்களைத் தானறிவள், தன் பக்கத்துறவுமில்லை, தன் அகமுடையான் பக்கத்திலும் தானறிந்த வரையிலும் ஒருவருமில்லை. மீனாக்ஷியைக் கண்டவுடன் ஞானம்பாளுக்குப் புருஷனைப் பிறக்கவில்லையே யென்ற துக்கமுண்டாயிற்று. பிறந்திருந்தால் அவளைக் கலியாணம் பண்ணிக்கொண்டிருக்கலாம் ஆதலின்.

ஞானம்பாளைக் கண்டவுடன் மீனாக்ஷியும் தோட்டத்திலிருந்து உள் நோக்கி வந்தாள். தன் வீட்டிற்கு வந்தவள் எவளாயினும் மரியாதை செய்யவேண்டுமென்று ஞானம்பாளும் 'வாருங்கள்!' என்று வெட்கங்கூடிய முகத்துடன் சொல்லிவிட்டு தன்னகமுடையானைக் கேட்கலாமென்று தோட்டத்திற்குப்போய் நாயகனை நோக்கி 'அவள் யார்' என்றாள்.

'அவள் தூரத்துப்பந்து' என்று இயம்பினான் இராமஸ்வாமி 'தூரபந்துவினிடத்திலா இவ்வளவு ஒற்றுமை?' என்ன இராமஸ்வாமி யதற்குச் சிரித்தான்.

'இன்ன உரவென்று என்னிடத்தில் சொல்லக்கூடாதா?

இரா—வேண்டுமானால் சொல்கிறேன், சாவதானமாய்க் கேள். என்னுடைய சித்தி பார்வதியை உனக்குத் தெரியுமே! சிற்றப்பா வீராஸ்வாமியையர் அகமுடையாள் பார்வதி தெரியாதுனக்கு?

ஞா—தெரியும்! தெரியும்!

இரா—அவளுடைய தகப்பனாருக்கு மருமகப்பிள்ளைக்கு தமயன் மருமகள்.

என்று விட்டுச்சிரித்தனன்.

ஞானம்பாளுக்கு அர்த்தம்புரியவில்லை, 'அவ்வளவு தூர உரவு இங்கே வரவேண்டிய காரணமென்ன?' என்றாள்.

இரா—(சிரித்துக்கொண்டே) உரவிற்காக இங்கேவர வில்லை. என்னுடைய சிநேகிதர் ஒருவர் இருக்கிறார், டிஸ்டிரிக்ட்டு முனிசீபு! அவருடைய பாரியாள்!

ஞா—(இன்னும் ஒன்றுந்தோன்றாமல்) அவளுடைய புருஷன் உங்களுக்கு சிநேகிதராயிருந்தால், அவளோடு நீர் பேசவேண்டிய காரணமென்ன?

இரா—அவளுடையபிறந்த அகத்து மனுஷியர்கள் எனக்குத் தெரியும், அவளுடைய தகப்பனார் இராஜகோபாலையரையும் எனக்குத்தெரியும்.

ஞா—(சிறிது ஆச்சரியமடைந்தவளாகி) எந்தவூர் இராஜகோபாலையர்?

இரா—திருப்பாப்புலியூர்.

ஞா—உங்களுடைய முதற்பெண்டாட்டி தகப்பனார் பெயரும் இராஜகோபாலையர்தானே!

இரா—ஆம், அந்த இராஜகோபாலையர் பெண்தானிவள்.

ஞா—மீனாக்ஷியா?

இக்கேள்விக்குப் பதிலுரைக்கு முன்னம், ரிஜிஸ்திரார் ஐயாஸ்வாமி அய்யர் முனிசீபு இராமஸ்வாமியையரைக் கூப்பிடவே, அவர்போய்விட்டார்.

ஞானம்பாள் கால்மணிநேரம் அதேயிடத்தில் நின்றுவிட்டு, பிறகு தோட்டத்திற்குச்சென்று பல்தேய்த்து உள்ளே போனாள்.

மீனாக்ஷி 'பல் தேய்த்து ஆயிற்றா அம்மா! இதோ! இந்த காப்பியைச் சாப்பிடு' என்று பக்ஷமாய்க் காப்பியைக் கொடுத்தாள்.

ஞானம்பாள் கொடுத்தகாப்பியை வாங்கிக்கொண்டு 'நீங்களின்னவரென்று தெரியவில்லையே!' என்றாள். அதற்கு மீனாக்ஷி 'நான் இன்னவள் என்று உனக்குத் தெரியவேண்டுமா? நீதனியாயிருக்கிறாயே யென்று உனக்கு உதவிபுரிவதற்காக வந்தேன். உனக்குத் தமக்கை முறையாதல் வேண்டும். எவ்வாறெனின் நம்மிருவர்க்கும் புருஷரொருவர்' என்றாள்.

15-வது அத்தியாயம்.

நடு நிலமை.

முன் அத்தியாயத்தில் சொன்னசமாசாரங்களெல்லாம் நடந்து நான்குநாளைக்கப்புறம், காலை 7½-மணி வண்டியில் கும்பகோணத்திற்கும் தஞ்சாவூருக்கும் நடுவிலுள்ள ஐயம்பேட்டை ஸ்டேஷனில் ஓர் வாலிபனும் வாலிப ஸ்திரீயும் வந்திறங்கினர். அவர்களோடே 8-ரூபாய் விலையுள்ள எஃகுப்பெட்டி யொன்றும், மெத்தையொன்றும் வந்திறங்கின இரு மூட்டைகளையும் ஒரு ரெயில்வே போர்ட்டர் தூக்கிக்கொள்ள, ஸ்டேஷனுக்குள் சென்றதும் ஒரு வண்டிக்காரன் 'ஸாமீ! ஸாமீ! என்வண்டியிலேறிக்குங்க, சட்காவிலே கொண்டுபோய் விட்டுடேரேங்க' என்றான். மற்றொருவன், 'நான் முன்னயே பிடிச்சு அவரைக்கேட்டிண்டிருக்கேன். போடா! போங்கா!' என்று போர்ட்டரிடத்திலிருந்து பெட்டியைப் பிடுங்கிக்கொண்டான். மற்றவன் படுக்கையைப் பிடுங்கிக்கொண்டான். 'நான் உங்களுக்காக வண்டி சத்தத்தைக்கூட விட்டுட்டேனுங்க' என்றான் முன்னவன். 'ஐயா ரெயிலைவிட்டிறங்கினது மொதக்கொண்டு நான் கேட்டிண்டிருக்கேனே!' என்றான் பின்னவன். 'எந்தூர்போகணம் சாமீ!' என்று கேட்டான் முன்னவன். 'ஆமக்குடி' என்றார் கேட்கப்பட்டவர், 'அஞ்சணாதாங்கசாமி! நொடியிலே கொண்டுவிட்டுடேரேன்!' என்றான முன்னவன். 'நாலணாகொடுங்க சாமி! என்வண்டியிலே ஏறிக்குங்க' என்றான். பின்னவன் 'சாமீ! சாமீ! கொடுத்ததைக்கொடுங்க! என் வண்டிக்கு வாங்க!' என்றான் முன்னவன். பின்னவன் முன்னவனை முறைத்துப்பார்த்து 'இனாமா இட்டுண்டுபோரேன்! இங்கேவாங்க சாமீ!' என்றான்.

அவ்வாலிபர் இங்குமங்கும் பார்த்துநிற்கையில், மூன்றாவதொருவன் அவரிடத்தில்வந்து மிகவும் வணக்கமாய்த் தண்டனிட்டு 'நம்பவண்டி வந்திருக்குதுங்க' என்றான். அவன்றான் எங்க வண்டிக்காரன்' என்றாள் யவ்வன ஸ்திரீ. வாலிபர் அவனை நோக்கி 'அவ்விரண்டு மூட்டையும் கொண்

வோ' என்று விட்டு இரட்டைமாடுகட்டிய பெட்டிவண்டியொன்றை நோக்கிச்சென்றனர் அப்பெட்டிவண்டியில் மெத்தையும் தலையணைகளும் போட்டிருந்தன. இருவரும் ஏறிக்கொண்டனர். வண்டிக்காரனும் வீட்டுவேலைக்காரனுமாகிய இருவரும் முன்னே பெட்டியில் ஏறியுட்கார்ந்தார்கள்.

ஆமக்குடி ஐயம்பேட்டையிலிருந்து மூன்றுமைல். முதலிலாறுமைல் உள்ளே இருக்கும் ஒருவரும் பேசினரில்லை. பிறகு திடீரென ஸ்திரீ வாயைத் திறந்தனள்.

'என்னைக் கொண்டுபோய் விட்டுவிட்டு அவளோடு இருக்கலாம் என்று உங்களுக்கு எண்ணம்போலும்'

'அவளை நான் பார்ப்பதற்கு முந்தியே உன்னை இந்தவூர் அழைத்துவர வேண்டுமென்று நான் சொல்லவில்லையா?'

'என்னமோ? என்பேரில் அவளிடத்திலிருப்பதில் பேர்பாதி யாசையாகிலும் இருக்கட்டும்.

'அசடே! அவ்வளவே யாசையிருக்கும், பயப்படாதே! என்று வாலிப ரியம்பினதும் பாதிவழிசென்றது வண்டி.

இவர் போகுந்திசைக்கு எதிர்மார்க்கமாய், அதாவது ஆமக்குடியிலிருந்து, கையில் குடையும், காலில் ஜோடும், இடுப்பில் அரைச்சட்டையும் தரித்து ஒருபிராமணர் வெகு விசையாய் வந்துகொண்டிருந்தார். வாலிபர் அவரை உற்றுப்பார்த்து, திருப்பாப்புலியூர் நாராயணஸ்வாமி ஐயரெனக் கண்டு இங்கேயவர் வரவேண்டிய காரணமென்ன என்று யோசிக்கையில் நாராயணஸ்வாமி ஐயர் வாலிபரை நோக்கி. நமஸ்காரம், ஆமக்குடிக்கா?' என்றார். வாலிபரும் 'ஆம். தாங்கள் எங்கே?' என்றதும், நாராயணஸ்வாமியையரும் நானும் அங்கேபோய்விட்டுத்தான் வருகிறேன், நாழியாகிறது வரட்டுமா?' என்றார். வாலிபரும் 'ஆஹா' என்றதும் வண்டியும் நகர்ந்தது, ஐயரும் ஐயம்பேட்டையை நோக்கிச்சென்றார்.

இவர்களுக்கு முன்னால் நாம் ஆமக்குடிக்குப்போய், அங்கு சுப்பிரமணிய சாஸ்திரிகளுடைய அகத்தில் என்ன நடக்கின்றது பார்ப்போம்.

ஆமக்குடியில் சுமார் ஐம்பது வீடிருக்கலாம். அவ்வீடுகளிலெல்லாம் மிகப்பெரியது இவர் வீடுதான். குறடு மாத்திரம் 10-அடி அகலமிருக்கும். குறட்டிற்குமேல் திண்ணை 5-அடியிருக்கும். இரண்டு திண்ணைகளிலும் நூறுபேர் விசாலமாய் உட்காரலாம். திண்ணையைவிட்டு நடையிற் சென்றால், அங்கேயும் ஒரு பெரிய திண்ணை, அங்கிருந்து உள்ளேபோனால் நான்கு தாழ்வாரங்கள் 10-அடி அகலத்திலிருக்கும். நடுவில் சதுரமான வாசல், நீளத்தில் இருபது அடியிருக்கும். ஓர் தாழ்வாரத்திற்குப் பக்கத்தில் பதினைந்து அடி கூடமுண்டு. அக்கூடத்தில் பெரியதோரூசல் போட்டிருந்தது. உண்மையாய் அவ்வீட்டில் எல்லாம் பெரியன. ஒவ்வொரு தூணும், தாழ்வாரத்தில் போட்டிருக்கும் ஒவ்வொரு பலகையும் பெரியன.

வீட்டின் பெருமைக்கு ஏற்கவே வீட்டின் எஜமானர் சுப்பிரமணிய சாஸ்திரிகளும் பெரியவர்; அவருடைய தாயார் அவரைவிடப் பெரியவள்; அவளைவிட அவ்வீட்டு வேலைக்காரி பெரியவள். பெரியவர் என்றால் வயதிலாவது, உயரத்திலாவது என்று வைத்துக்கொள்ளக்கூடாது. அகலத்திலும் சுற்றளவிலும் என்க.

இவர்களுக்கெல்லாம் திருஷ்டி பரிகாரமாக சுப்பிரமணிய சாஸ்திரிகள் சம்சாரம் ராதையம்மாள் ஒல்லியாயிருப்பள். நாம் சொன்ன அன்றையதினம் காலையில் சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஊசலில் உட்கார்ந்திருந்தார். ராதையம்மாள் தூணைக்கட்டினாற்போல் நின்றுகொண்டு கண்ணினின்றும் தாரைதாரையாய் நீரைப்பெருக்கினாள். சுப்பிரமணிய சாஸ்திரிகள் தாயார் சேஷியம்மாள் காலைநீட்டி சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு பிள்ளையையும் மருமகளையும் பார்த்துக்கொண்டே இருந்தாள் மாற்றிமாற்றி. அவர்களுக்குள் அடியில் வரும் சம்பாஷணை நடந்தது—

சுப்பிரமணிய சாஸ்திரிகள் தன் சம்சாரம் ராதையம்மாளை நோக்கி 'அப்படியென்றால் நீ உண்மையைச் சொல்லமாட்டாய்! சரி, கையில் என்ன இருக்கின்றது பார்த்தாயா?' என்றார்.

ராதையம்மாள் 'நான் சொல்வது உண்மை தான்' என்றாள் அழுகைகூடிய மெல்லிய குரலுடன். அவள் பேசியதைப்பார்த்தால் எல்லாருக்கும் பரிதாபம் உண்டாகும் போலிருந்தது. ஆனால் அவளுடைய அகமுடையானுக்குக் கோபம் அதிகமாகிக்கொண்டிருந்தது.

சு—நீ பேசுவது உண்மையாயிருந்தால், உன் காது ஓலை யெங்கே?

ரா—கழற்றிவைத்திருந்தேன். பாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

சு—பொய்! சுத்தப்பொய்! நீ யெங்கே கழற்றிவைத்தாய்?

ரா—என் பெட்டியில்தான் வைத்தேன்.

சு—பொய் சொல்கிறாயா? பொய் சொல்லாதே! சொல்லாதே!

என்று தன் கையிலுள்ள பிரம்பினால் பளீரென்று இருதரம் அவள் முதுகில் அடித்தார்.

ரா—இல்லை, இல்லை. நான் சொல்வது உண்மைதான், உண்மைதான்.

சு—நகை யெங்கே?

ரா—பெட்டியில்தான்—

என்று ஆரம்பிப்பதற்குள் சாஸ்திரிகள் 'பொய்! பொய்! பொய்!' என்று ஐந்தடி அடித்தார் முதுகின்மேல்.

ரா—ஐயையோ! பொய் இல்லை! பொய் இல்லை! என்று அழுதாள்.

இதுவரைக்கும் வாயை மூடிக்கொண்டு கண்ணை யங்குமிங்குந் திருப்பிக்கொண்டு மனத்திற்குள் சந்தோஷத்துடன் உட்கார்ந்திருந்த சேஷியம்மாள் 'கத்தச்சொல்லாதேடா! கத்துகிறாளடா ராக்ஷஸீ!' என்று பிள்ளையைப்பார்த்துக் கூறினாள்.

கூறினதற்குப் பதிலாகக் 'கத்தாதே!' என்று பத்துப் பதினைந்து அடிவிழுந்தன.

பாவம்! என்னசெய்வள் ராதையம்மாள்! அகமுடையானே பலமாபடிக்கிறான்! தேகமோ மிகவும் வலிக்கின்

றது! துக்கமோ அதிகமாய் வருகின்றது! அழவோ கூடாதாம்!.

மனதிற்குள் விம்மி விம்மி யழுதுகொண்டிருந்த ராதையம்மாளை சுப்பிரமணிய சாஸ்திரிகள் மறுபடியும் 'அடீ நீலி! நகையைத்தான் பெட்டிக்குள் வைத்தாய்! சரி, அந்தப் படுவாப்பயல் இங்கே என்னத்திற்காகவந்தான்?' என்று இடியிடித்தாற்போன்ற குரலிற் கேட்டார்.

'நான்தான் சொன்னேன்!' என்று விம்மி விம்மிக் கொண்டே சொன்னுள்.

'பொய், திருப்பவும் பொய்சொல்லுகிறுய்! அவள் கிடக்கிறுள், நீசொல் அம்மா!' என்று தாயாரைக்கேட்டார்.

அவர்தாயார், நீட்டினகாலே மடக்காமல் 'அதென்னமோ அப்பா! உன்பெண்டாட்டி செய்கிறதே வேடிக்கையாயிருக்கிறது. நேற்றையதினம் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும் தடியனொருவன் இந்த அகத்திற்கு வந்து "அம்மாளிருக்கிறுளா? என்று கேட்டான். "என்னைப்பார்த்தால் அம்பாளாகத் தோன்றவில்லையோ" என்றேன். மறுபடியும் "ராதையம்மாளைக் கேட்கிறேன்" என்றுன். அதற்குள் உன்னகமுடையாள் "வாருங்கள்! வாருங்கள்!" என்றுள். அவள் பிறந்த அகத்து உரவு யாரோ வந்திருக்கிறுரென்று நான் போய் விட்டேன். இரண்டுபேரும் இரேழியுள்ளே வெகுநாழி பேசிக்கொண்டிருந்தார்கள். என்ன இத்தனைநாழி பேசுகிறுர்களேயென்று சுவற்றின் கிட்ட காதைவைத்துக் கேட்டேன். எனக்குக் காதிலே படவேயில்லை. அவ்வளவு மெதுவாய்ப் பேசினுர்கள்' என்றவுடன் சுப்பிரமணிய சாஸ்திரிகள் ராதையம்மாள் கூந்தலைப்பிடித்து கீழேதள்ளி 'அந்த நெடுந்தடியனேடு உனக்கென்னபேச்சு! அந்தவெறுந்தடியனேடு உனக்கென்னபேச்சு! அந்த நாற்பத்தைந்து வயது புருஷனேடு உனக்கென்னபேச்சு!' என்று இம்மாதிரியான வார்த்தைகளை வாய்பேசவும், பிரம்பிஞலடித்தலாகிய வேலையைக் கைசெய்யவும், உதைத்தலாகிய வேலையைக் கால் செய்யவும் ஆகிய இவ்வாறு பிரம்மானந்தமான வேலைகளில்

இவர் ஆழ்ந்திருக்கும்பொழுது கதவை யாரோ தட்டினர். 'அம்மா' என்று கூப்பிட்டாள் ஞானம்பாள்.

இதுவரையும் மனதிற்குள் புகைந்துகொண்டு கத்தினால் அடிபதிகமாய்விடுமே என்ற பயத்தினால் உள்ளுக்குள்ளேயே யழுதுகொண்டு இருந்த ராதையம்மாள் தன் பெண் குரலைக் கேட்டவுடன் 'ஐயையோ! ஞானம்! ஐயையோ! ஞானம்! என்னுயிர்போகிறதடீ! ஞானம்!' என்று தன் குரல் முழுவதையும் திறந்து கத்தினாள்.

சேஷியம்மாள் நீட்டின காலை மடக்கிக்கொண்டு கதவைத் திறந்தாள். அடிப்பவரும் அடிபடுபவரும் ஆகிய இருவர்களின் மகளும் மருமகனும் வந்தார்கள் உள்ளே.

இராமஸ்வாமியையர் உள்ளேவந்ததும் சுப்பிரமணிய சாஸ்திரியின் கழியைப் பிடுங்கிக்கொண்டு ஊசலில் உட்கார்த்திவைத்து 'அடிக்காதேயுங்கள்! என்ன செய்தாள்? வீணாய் அடிக்கிறீர்களே! என்று அவர்பக்கத்தில் தானும் உட்கார்ந்தார்.

மருமகப்பிள்ளை வந்திருப்பதையப்பொழுதுதான் கண்டாற்போல் 'வாருங்கள்! வாருங்கள்! யாரடாவங்கே! ஈசிசேர் ஒன்று கொண்டுவா' என்றார்.

வாசலில் நின்றுகொண்டிருந்த சேவகன் ஒரு நாற்காலி கொண்டுவந்து போட்டான். அதிலுட்கார்ந்தார் இராமஸ்வாமியையர்.

சற்றுநேரம் வெறுமனேயிருந்து, சாஸ்திரிகளைப் பார்த்து 'என்னகாரணம்? ஏன் அடித்தீர்கள்? தங்களுக்குக் கோபமே வராதென்று எண்ணியிருந்தேனே' என்றார்.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'அவள் வரவர மிகவும் கெட்டுவிட்டாள், 500 ரூபாய் பெறுமான ஓலையைக்கழற்றி யாரோ வொரு பிராமணனிடத்தில் கொடுத்துவிட்டாள். அதைக்கேட்டால் இல்லை என்கிறாள்' என்று மகா கோபத்துடன் கூறினர்.

ராதையம்மாள் அழுதுகொண்டே இராமஸ்வாமி அய்யரிடம் வந்து 'மருமகப்பிள்ளையுடன் பேசக்கூடாதென்று

சொல்வார்கள். ஆனாலும் என்னைப்போன்ற துரதிர்ஷ்டசாலிகளுக்கு வெட்கமென்ன? நான் சொல்வதைத் தயவுசெய்து கேட்கவேண்டும். நேற்றையதினம் பகல் இரண்டு மணிக்கு என் ஓலையைக்கழற்றி பெட்டியில் வைத்தேன். சாயங்காலம் பெட்டியைத்திறந்து பார்த்தேன். ஓலையைக்காணோம். சாவியைப் பெட்டியின் மேலேயே வைத்துவிட்டேன். அதுதான் என்பேரிலுள்ள பிழை. அதற்காக ஜோட்டினாலே, பறையன் தைத்த செருப்பினாலே ஒருமண்டலம் அடித்தாலும் பட்டுக்கொள்ளுகிறேன். இந்த பிசகுக்காக என்பேரில் வீணாக, அநியாயமாக, வேறே பழிபோடுகிறார்கள். நேற்றையதினம் பனிரெண்டு மணிக்கு ஒரு பிராமணன் சாதம் போடு என்று சொல்லிக்கொண்டு வந்தான். நான் சாதம் இல்லையென்றேன். இல்லாமற்போனால் பிராணன் போய்விடுமென்றான். அப்படியானால் இராத்திரிவரைக்கும் இருந்தால் சமைத்துப் போடுகிறேன் என்றேன். அவ்வாறேயவனிருந்தான் நானும் சமைத்துப்போட்டேன். அந்தப் பிராமணன் இராத்திரி சாப்பிட்டுவிட்டு வாசலில் படுத்திருந்து இன்றையதினம் காலையில் உங்கள் மாமனார் வந்ததும் போய்விட்டான். இதுதான் நடந்த விஷயம். ஐயா! அந்த பிராமணனுக்கு நகையைக் கொடுத்துவிட்டேன் என்று இரண்டுபேரும் என்னைக் கொல்லுகிறார்கள்; நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற—'

என்பதற்குள் சேஷியம்மாள் 'மகா யோக்கியமுள்ளவள் தானடீ நீ! அந்த பிராமணன் வந்தவுடனே வாருங்கள், வாருங்கள், வீருங்கள் என்று சொல்லவில்லையா?' என்று கேட்டாள்.

அதற்கு ராதையம்மாள் 'தெய்வங்களா! நீங்களே சாக்ஷி, பூமிதேவீ! நீயே சாக்ஷி, அக்கினி பகவானே!' என்று தேவர்களை விளிப்பதற்குள் சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'சத்தியம், சத்தியம் செய்யாதேயடீ, சத்தியம்!' என்று தலையில் ஓங்கிக்குட்டினார்.

இராமஸ்வாமியையர் 'இவ்விதமெல்லாம் சண்டைபோட்டுக்கொண்டிருந்தால் நன்றாயில்லை. நான்வந்த சமயத்திலே

இதென்ன சண்டை யிது. நன்றாகவேயில்லை. ஒவ்வொரு வரும் நான்கேட்ட கேள்விகளுக்கு மாத்திரம் பதிலுரைத்தால் நான் இங்கே யிருப்பேன். இல்லாவிடில் இப்பொழுதே போகிறேன்' என்றார்.

ராதையம்மாள் 'நீங்களும் போங்கள். நானும் கிணற்றில் விழுந்து சாகிறேன்' என்றாள்.

யாராவது பேசினல் போய்விடுவேன். ஒருவரும் பேசக்கூடாது, முதல்முதல் அந்தப் பிராமணன் என்ன நிறம்?

சு—மான் நிறம்.

சே—சீ போ! நல்ல செகப்பாயிற்றே.

இரா—நான் உங்களைக் கேட்கவில்லை. நீங்கள் சொல்லுங்கள் அம்மா!

ராதை—சிறிது செகப்பாய்த்தானிருப்பார்.

இரா—வயதென்ன விருக்கும்?

ராதை—நாற்பத்தைந்திருக்கும்

இரா—குள்ளமோ? உயரமோ?

ராதை—மத்திமதரமாயிருப்பர்.

இரா—பெயரென்ன?

ராதை—எனக்குத் தெரியாது.

சே—பொய்சொல்கிறாள். பெயர், ஊர் எல்லாம் நன்றாய்த் தெரியும்.

ராதை—எனக்குத் தெரியவேதெரியாது.

இரா—அது கிடக்கட்டும். அவர் இந்த அகத்தை யெப்பொழுது விட்டுப்போனர்?

சு—காலை 7-மணிக்கு.

இராமஸ்வாமிக்கு அந்த பிராமணன் நாராயணஸ்வாமியையென்று நன்றாய்த் தெரிந்துவிட்டது. ஏனென்றால் சிகப்பும், மத்திமதர உயரமும் நாற்பத்தைந்துவயதும் உள்ளவரவர்தான். அவரைத்தான் ஆமக்குடியிலிருந்து ஐயம்பேட்டை போகும்பொழுது இராமஸ்வாமியையர் கண்டார். ஆதலால் இராமஸ்வாமியையர் அவர்களைப்பார்த்து 'அந்தப் பிராமணரை யெனக்குத் தெரியும், அவர் என் சிநேகிதரா

யிருக்கிற திண்டிவனம் ரிஜிஸ்திராரின் மாமனார். நீங்கள் சொல்கிற துன்மார்க்கங்களுக்குப் போகவேமாட்டார், மகா யோக்கியர், நான் அவரை வரும்வழியில் கண்டேன். அவரைக்கேட்டு அக்கம்பக்கத்தில் விசாரித்தெழுதுகிறேன், அதுவரையும் ஒருசண்டையும் போடவேண்டாம் என்றார்.

முன்சீபுக்கு நாராயணஸ்வாமி ஐயரைப்பற்றிச் சந்தேகம் பூர்ணமாயிருந்தபோதிலும், சமாதானம் செய்யும் பொருட்டு அவர் யோக்கியரென்று கூறினார்.

இவ்விதம் சண்டையை ஒருவாறாக விலக்கி, தன் மாமனாரை நோக்கி நகையைப்பற்றி விசாரித்தார்.

நகை மிகவும் நல்ல நகையென்றும் 500, 600-ரூபாய் பெறுமானதென்றும், பெட்டிக்குள் வைத்திருந்தால் களவு போயிருக்காதென்றும், அத்திருட்டுமுண்டை யாருக்கோ கொடுத்துவிட்டாளென்றும், யாருக்கோ என்ன? அந்தப் பிராமணனுக்குத்தான் கொடுத்திருப்பளென்றும், அந்த பிராமணனை யதே ஊரில் அநேகதடவைகளில் பார்த்திருப்பதாகவும், தன்வீட்டிலேயே இரண்டு மூன்றுதரம் பார்த்ததாகவும், ஏதோ சூது இவர்களுக்கு ளிருக்கிறதாகவும், அதை வெளியிடாமல் மறைத்துவைத் திருக்கிறதாகவும், முன்சீபு அவர்கள் தயவுசெய்து இந்தவிஷயத்தை முழுவதும் விசாரித்தல் வேண்டுமென்றும், சுப்பிரமணிய சாஸ்திரிகள் கூறினார்.

அதற்கு மருமகப்பிள்ளை தன்னால் கூடிய அளவு பிரயாசைப்பட்டு விசாரிப்பதாகவும் இனி யந்தவிஷயத்தைப்பற்றி சாஸ்திரிகள் சிறிதேனுங் கவனிக்கவேண்டியதில்லை யென்றும், தான் முழுவதும் விசாரித்துச் சொல்லும்வரைக்கும், வீட்டில் ஒருவகை சண்டையும் வேண்டாமென்றும், தைரியம் சொல்லிவிட்டு, பிறகு தன்விஷயத்தைக்கூற ஆரம்பித்தார்.

மீனாக்ஷியைத் தன்வீட்டில் வைத்துக்கொள்ளப் போகிறதாகக் கூறினதுதான் தாமதம்; ஆரம்பித்துவிட்டார் சாஸ்திரிகள்.

'எனக்கிருக்கிறதெல்லாம் ஒரே கன்னிகைதானே! நான் உங்களுக்குக் கொடுக்கிறபொழுது கேட்டுக்கொண் டேனே! நீங்கள் முதற்பெண்டாட்டியைக் கவனிக்கிற தில்லையென்றீர்களே! அப்பொழுதே சொல்லியிருந்தால் நான் வேறிடத்தில் கொடுத்திருப்பேனே! ஈசுவரா! என் சொந்தபெண்டாட்டியும் எனக்கு விரோதமாகி, என் சொந்தபெண்ணும் அலக்ஷியம் செய்யப்படுகிறாளே!' என்று அழவாரம்பித்தார்.

முன்சீபு 'உங்கள் பெண்ணுக்கு யாதொரு குறைவும் வராது. இப்பொழுது இருந்த நிலைமையிலேயே எப்பொழுதும் இருப்பள். பயப்படவேண்டாம்!' என்று அன்றைய தினம் முழுவதும் தேற்றிக்கொண்டிருந்தார்.

மறுநாள் விடியற்காலையில் புறப்பட்டு ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்குச் சென்றார். முன்சீபு ஆமக்குடியை விட்டுப் புறப்படுவதற்கு முன்னம் ஒருமணிநேரம் ஞானப்பாளைத் தேற்றினார். சீமந்தம் தஞ்சாவூரில் செய்யப்போகிறதாகவும் அழவேண்டாமென்றும், தனக்கு வாரமுமுறை கடிதமெழுதவேண்டுமென்றும், தானும் பதிலெழுதுவதாகவும், அவளுடைய பெற்றோர்களிருக்கும் நிலைமையைப்பற்றி யெழுதவேண்டுமென்றும் சொன்னார். என்னசொல்லித்தா னென்ன? ஞானப்பாள் விசனத்தோடேயே யிருந்தாள்.

ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்குச் சென்ற இராமஸ்வாமியையர் திருப்பாப்புலியூருக்கு டிக்கெட்டுவாங்கி அங்கேயிறங்கி, ஜக்ஷியை யழைத்துக்கொண்டு. தன் லீவ் அன்றோடு முடியு மாதலின். அன்றையதினம் ராத்திரியே புறப்பட்டுத் திண்டிவனம் சென்றார்.

திருப்பாப்புலியூரில் நாராயணஸ்வாமியையரைப்பற்றி விசாரித்ததற்கு அவர்கள் நாலைந்து நாளாய் ஊரில் இல்லையென்ற விஷயம் தெரிந்தது. ஆகையால் அவரை அப்பொழுது கேட்க முடியாமல் அப்புறம் பார்த்துக்கொள்வோம் என்று போய்விட்டார். இவர்கள் திருப்பாப்புலியூரிலிருந்து திண்டிவனம் போனதும், ஓர்வண்டியிலேறி தங்களகம் சென்றார்கள் தங்களகத்துச்சாவி ரிஜிஸ்திராரகத்திலிருந்

தபடியால், அதை வாங்கி வருவதற்கு முன்சீபு சென்றார். முன்சீப் வீட்டிற்கு மூன்றகத்திற்கு அப்பால் ரிஜிஸ்திரார் வீடு என்று சொல்ல மறந்துவிட்டோம்.

ரிஜிஸ்திரார் வீட்டைத்தட்டவேண்டுமே, தூங்குகிறவர்களை எழுப்பவேண்டுமே என்ற விசனத்துடன் சென்ற இராமஸ்வாமியையர் அவ்வீடு திறந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இவர்போகும்பொழுது மணி - 4 இருக்குமாதலின் இவர்பட்ட ஆச்சரியத்திற்கும் நியாயம் உண்டு. திறந்த வீட்டினுள்ளே சென்றதும் இவர் ஆச்சரியம் அதிகரித்ததேயொழிய குறையவேயில்லை. வீட்டிலே வெளிச்சமும் இருந்தது. இவைகளின் அர்த்தம் ஒன்றும் கண்டு பிடிக்க முடியாமல், இரேழியைத் தாண்டித் தாழ்வாரம் சென்றதும், ரிஜிஸ்திராருடைய ஆபிசு சேவகனைப் பார்த்தார். ஆச்சரியம் மிகவும் அதிகமாகி, சேவகனை நோக்கி 'என்னவிசேஷம்?' என்றார். சேவகன் மெத்தையின்மேலேறிச்செல்லும்படிக் கையைக்காட்டி, கண்ணால் நீர்சொரிந்து 'எஜமானுங்க' என்று வாயெடுத்து, பிறகு ஒன்றுஞ் சொல்லத்தோன்றாமல், விம்மிவிம்மி யழுதான்.

முன்சீபு படியின்பேரில் ஏறி அதிசீக்கிரம் அறையையடைந்து உள்ளே பார்த்தார். ரிஜிஸ்திரார் வழக்கமாய்ப் படுத்துக்கொள்ளும் கட்டிலில் மெத்தையில் படுத்திருந்தார். அவர் பக்கத்தில் ஒருவன் விசிறிக்கொண்டிருந்தான். ஒரு வைத்தியர் நாற்காலியிலுட்கார்ந்திருந்தார். ரிஜிஸ்திரார் அகமுடையாள் சாவித்திரியம்மாள் அவர்பக்கத்திலுட்கார்ந்து அவர் தேகத்தைத் தடவிக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள்.

முன்சீபு இரண்டுநிமிஷம் ஒன்றுந் தோன்றாமல் திகைத்துப்போய் நின்றார்.

அப்பொழுது வைத்தியர் ஒருவர்தான் பேசிக்கொண்டிருந்தார். 'அழாதேயுங்கள் அம்மா! அழாதேயுங்கள்! ஒன்றுமில்லை! அழுவானேன்? காயம் நடுமண்டையிலே பட்டதினால் இத்தனைநாழி நம்முடைய ஞாபகம் இல்லாமலிருக்கிறது. இரத்தம் நின்றுவிட்டது! ஒவ்வொன்றாய்த்

தானே யாகவேண்டும்! வாருங்கள்!' என்று முன்சீபை நோக்கிக்கூறி, நாற்காலியினின்றும் எழுந்திருந்து முன்சீபை யதிலுட்காரச்சொல்லி 'தாங்கள் ஊரிலில்லையென்று கேள்விப்பட்டேன்' என்றார். நான் இப்பொழுதுதான் வந்தேன்' என்று சொல்லிவிட்டு கட்டிலினருகிற் சென்று ரிஜிஸ்திரா ருடலைத் தொட்டுப்பார்த்தார். சுவரைத் தொட்டுப்பார்த்திருக்கலாம் அவ்வளவு குளிர்ந்திருந்தது, முகம் வெளுத்திருந்தது தலையில் கட்டுகட்டியிருந்தது. 'அய்யரவர்கள்! என்று கூப்பிட்டதிற்குப் பதிலில்லை. பக்கத்திலிருந்த நாற்காலியில் அப்படியே யுட்கார்ந்துகொண்டு அழத்தொடங்கினார்.

ஐயோபாவம்! இவ்வுலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றினும் மேலாக எண்ணியிருந்த தன் தோழனுயிர் அபாயத்திலிருப்பதைக்கண்டு மனம் சுழன்று, செயல்மறந்து, மீனாக்ஷி தன்னகத்திற்கு எதிரில் நிற்பதையும் மறந்து, வண்டிக்காரன் சத்தத்திற்காகக் காத்து இருப்பதையும் மறந்து, தான் சாவிகொணடுவருவதாகச் சொன்னதையும் மறந்து, நாற்காலியில் ஐயாசாமியையர் முகத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தார். எவ்வளவு நாழி அவ்விதம் இருந்தாரோ அவருக்குத் தெரியாது. ரிஜிஸ்திரார் சேவகன் 'வீட்டுக்கெதிருக்க வண்டிக்கான் காத்திருக்காங்க' என்று சொன்னவுடன் சாவித்திரியம்மாளைப்பார்த்து 'சாவிகொடுத்தேனே கொடுங்கள். என்று கேட்டார், சாவித்திரி சாவியைக் கொண்டுவந்து கொடுத்தாள். சாவியை யெடுத்துத் தன்னகம்சென்று ஏனித்தனைநாழி என்று கேட்ட மீனாக்ஷிக்குப் பதிலுரைக்காமல் விளக்கேற்றச்சொல்லி, பெட்டியைத்திறந்து, வண்டிக்காரனுக்குப் பணங்கொடுத்து மீனாக்ஷியையும் அழைத்துக்கொண்டு ரிஜிஸ்திராரகம் சென்றார். மீனாக்ஷி 'என்ன சமாசாரம்? என்னிடத்தில் சொல்லக்கூடாதா?' என்றுகேட்ட கேள்விகளுக்குப் பதிலொன்றுமில்லை.

[illegible]ஞா[illegible]யின் கையை ரிஜிஸ்திராரகத்துச்கு வெளியிலேயே விட்டுவிட்டு தான் முன்னதாகச் சென்று மறுபடி

யும் முன்போலவே நாற்காலியிலுட்கார்ந்தார். முன்சீபு இவ்வாறுசெய்தது ஒன்று சித்தப்பிரமையாயிருத்தல்வேண்டும். அல்லது விளையாட்டாய் இருத்தல் வேண்டும். விளையாட்டா? தன்னுயிர்த்தோழரின் நிலைமையைக் கண்டும் விளையாட்டென்ன?

ஆஹா! அந்த அறையப்பொழுது இருந்த நிலைமையைப் பார்த்தால் அப்புறம் மறக்கமாட்டீர்கள். முன்சீபு கண்ணினின்றும் நீர் சொரிய ரிஜிஸ்திரார் முகத்தைப் பார்த்தபடியே யுட்கார்ந்திருக்கிறார். அடிக்கடி கன்னத்தில் கைவைத்துப் பார்த்தபடியே யுட்கார்ந்திருக்கிறார். அவரது கன்னத்தில் கைவைத்துப் பார்ப்பதாகிய ஒருவேலையைத் தவிர வேறு ஒன்றையும் செய்கிறாரில்லை. வைத்தியரோ முன்சீபுக்கருகாமையில் ஒரு பெஞ்சியிலுட்கார்ந்துகொண்டு ரிஜிஸ்திராரின் கையை அடிக்கடி பார்க்கிறார். கையைப் பார்ப்பதும், தலையை யசைப்பதும், முன்சீபையேதேனும் கேள்விகேட்பதும், பதிலில்லாததினால் மறுபடியும் பெஞ்சிலுட்காருவதும், இதுதான் அவர் செய்கிற வேலை வீசுகிறவன் கைகள் ஓர் யந்திரம்போன்று இங்குமங்கு மசைகின்றனவேயொழிய, அவைகளின் சொந்தக்காரன் வேறு ஒரு காரியமும் செய்யவில்லை. மீனாக்ஷியும் அவள் தோழி சாவித்திரியும் ஒரு மூலையினின்றுகொண்டு வெகு மெதுவாய்ச் சில வார்த்தைகளைப் பேசிக்கொண்டு நின்றிருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணமாகிய ஐயாசாமியையர் இவ்வுலகசமாசாரம் ஒன்றுந் தெரியாமல் படுத்திருக்கிறார். இவற்றையெல்லாம் நன்றாயுற்றுப்பார்த்த ஒருவன் அவைகளை மறப்பனோ?

கீழே தாழ்வாரத்தில் ஒரு சேவகன் நின்றுகொண்டிருந்ததாய்க் கூறினோம். அவன் இப்பொழுது உட்கார்ந்துகொண்டு தன் மனத்திற்குள் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறான், பாதி வார்த்தைகள் வெளியிலும் கேட்கின்றன 'ஆம் ஆம்! இப்படித்தான்! வண்டி வச்சுகுங்க சாமீ! வண்டி வச்சுகுங்க! இன்னு எத்தனை தரம் சொன்னேன்! வண்டி வச்சுகினு டாக் டாக் இனு நாம்ப பாட்டுக்கு நாம்பபோனா

க்கா ஒருபய நம்பகிட்டக என்வரான்? பணத்தைப்பாத்தா இப்படித்தான்! அமேட அப்பாடா? நினைச்சாக்க பயமாயிருக்கு! எம்மாம் பெரியதடி? பொழைப்பாரோ! ஈம்! போயுடுவார்! நல்ல்ல்ல்லவர்! அந்தப் பயலே யென்னப்பண்ணுத்தான் தரும்! என்னவடீ அடிச்சான்! எய்! அப்போடோ , நம்மைக் கோட்டுக்குப்பிடிச்சு இழுப்பாங்க போயுடுவம், அந்தப்பயலைக் கேப்ரிமலேக்கிக் கொண்டுபோய் தூக்குப்போட்டாக்க ஒரு ரூபா சாராயம் பூஉ உத்தியா சாப்பிடுவேன்—' என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கிறான்.

மறுநாட்காலையில் திண்டிவனம் முழுவதும் விசனத்திலாழ்ந்திருந்தது. ஒவ்வொரு தெருவிலும் எங்குபார்த்தாலும் சிறுசிறு கும்பல்களாய்க் கூடியிருந்தார்கள். எல்லாரும் ரிஜிஸ்திராரைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கும்பலுக்கும் போய் இன்னின்ன பேசுகிறார்களென்று கவனிக்கிறதற்கு காலமில்லை. இரண்டு மூன்று கும்பல்களுக்குப் போவோம்.

ஒருதெருவில் குளிர்காய்ந்துகொண்டு 5. 6, பெயர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் கூலி வேலைசெய்கிறவர்கள். மணி ௬½-இருக்கும், மெதுவாய் வேலைக்குப்போகலாம் என்ற எண்ணத்தினால் அவ்விதம் இருந்தார்கள்போலும்.

1-ம் மனிதன்—டேய்! எட்டிநில்லுடா! வெயிலைமறைச்சுகிட்டு—

2-ம் ம—மகா கிளவண்டா நீ! போயேன்!

3-ம் ம—பேசாதிருங்கடா! இதைக்கேப்போம், சொல்லுடா! அப்புறம்!

4-ம் ம—அப்புறம்! அதான்! ரிஜிஸ்திரார் போய்ட்டார்.

5-ம் ம—பொய்! இன்னிக்கி காலம்பர வண்டிக்காரனைக் கேட்டேன். உசிரோடே இருக்கார் இன்னு சொன்னானே!

4-ம் ம—சொன்னானே, நேததிசாயங்காலம் செத்துப்பூட்டார், நான் பாத்தேனே.

6-ம் ம—நேத்திசாயந்திரம் பூட்டாரா! இன்னிக்கி காலம்பர வந்தூட்டார்! வெகு நன்னாருக்கு!

4-ம் ம—வெகு நன்னாருக்கு! அதென்னமோஅப்பா! நேத்திக்கு அஞ்சுகுடம் அவ்வளவு ரெத்தம் வந்துது.

5-ம் ம—நீதாண்டா அளந்துபாத்தே!

6-ம் ம—எதினாலேடா அடிச்சான்?

4-ம் ம—அடிச்சான் பெரியகழி. தடி! நோக்கி தடக்குன்னு போட்டான்! மண்டே இரண்டாப்போச்சு.

5-ம் ம—ஏன் போட்டான்? பைத்தியமா?

4-ம் ம—பைத்தியமா? பைத்தியம் இன்னுதான் சொல்லராங்க.

1-ம் ம—கிழவனா?

2-ம் ம—நல்ல கிழவன்! 40-வயசு தானிருக்கும்.

1-ம் ம—வெகுசாப் பாத்தூட்டேடா நீ!

4-ம் ம—நான் நேத்திக்குப்பார்த்தேன் எங்கண்ணாலே.

5-ம் ம—கிழவன்தான்! பூலோகமுழுக்க கிழவன் இங்கரா! இந்தப் பயலுக்கு எங்கெருந்தோ தெரிஞ்சுபோச்சு!

6-ம் ம—நெட்டிப்பிடிச்சு வெள்ளே தள்ளுடா.

2-ம் ம—எம்மேலே இவ்வளவு கோபமா? நாஞ்சொல்ரத்தை முழுக்க கேட்டுகிண்டு அப்புறம் கோவிச்சுக்குங்க. இன்னிக்கி காலம்பர போலீஸ்டேஷனுக்குப் போனேன். போனா? கைதியெங்கே இன்னுகேட்டேன். அதோபாரு இன்னு காம்பிச்சாங்க, அவன் 40-வயதுதான் இருக்கும்.

6-ம் ம—யாரையோ காம்பிச்சூட்டாங்கோ. யாரையோ பிடிச்சு இவன்தான் கைதினூட்டாங்க, நீ வந்தூட்டே! அவ்வளவுதானே?

2-ம் ம—இல்லே, இல்லே, அவனைக்காட்டுகிறேன் என்றவுடன் வெகுவிசையாய்ப் போலீஸ்டேஷனை நோக்கிச்சென்றனர்.

இன்னுமொரு தெருவில் காலே பத்து மணிக்கு ஒரு வீட்டில் ஒரு 30-வயது கைம்பெண்சாதி தன் 10-வயது பிள்ளைக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தாள். ‘நாளைய

மொதக்கொண்டு 9-மணிக்கு சாப்பிட்டேட்டு பேசாதே பள்ளிக்கூடம் போகாதே, போனியோ, உன் காலை முறிச்சூடுவேன். நன்னா இருக்கு. எழுமணிக்குப் போனவன் இப்போ வரான், பள்ளிக்கூடம் போகவேண்டாமாடா நோக்கு. இன்னிக்குச் சோறில்லைபோ, மண்ணைவாரி போடறேன்' என்றதற்குப் பதிலாக பிள்ளை 'சோறுவேண்டாம், மண்ணை வாரிப் போடுவியோ நீ, போடேண்டீ பார்ப்போம்' என்றான். தாயாருக்கு மிகவும் கோபம்வந்து 'இவ்வளவு வாயா நோக்கு! இவ்வளவு அந்தஸ்தா நோக்கு!' என்று விறகுக் கட்டையைத் தூக்கிக்கொண்டு பிள்ளையைத் துரத்தியோடினாள். பிள்ளையும் அவளும் முன்னும் பின்னுமாக இரேழி வரைக்கும் ஓடியிருப்பார்கள். அதற்குள் 'என்னடி சுப்பாரு, என்ன?' என்று பக்கத்திலுள்ள 35-வயதுள்ள கைம்பெண்சாதி வந்தாள்.

பக்ககத்தவள் வந்ததனால் தாயோடுவதை நிறுத்தி 'ஆங்! என்ன தெரியிலே சேதி! கூடக்கூட வாயாடறயா?' என்று முடிப்பதற்குள் பையன் 'இல்லாவிட்டால் என்ன பண்ணி யூடுவையாம்? சிரசாக்கினை பண்ணுவியோ?' என்று கேட்டான்.

'இதோ சொல்லறேண்டா! சிரசாக்கினையா? இதோ சொல்லறேன்' என்று ஒரு அடி யெடுத்துவைக்க பையன் இரண்டடி யெடுத்துவைக்க, ஒரு அடியெடுத்தவளை அம்மணியம்மாள் தடுத்து, 'என்ன? எங்கிட்டசொல்லேன்! வண்டி!' என்றாள். அதற்கு கடைக்குப்போய் பச்சை மிளகாய் வாங்கிவரச்சொன்னால் பொழுதுக்கும் எங்கேயோ தூங்கிவிட்டு, போலீஸ் டேஷன்லே கும்பலாயிருந்தது, வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தேன்' என்கிறான். அது என்ன வேடிக்கையென்று அம்மணியம்மாள் கேட்க, அடிபட்டதைச் சொல்ல வாரம்பித்தான். பிள்ளையின்பேரில் ப[illegible]முள்ள தாயார் பையன் வார்த்தையைக்கேட்டு, கண்ணினின்றும் தாரைதாரையாய் நீர்பெருக, விறகுக் கட்டையைக் கீழேபோட்டுவிட்டு,'ஐயோ இந்தப்பிள்ளைக்குப் புத்தி சொல்லுகிறவள் இல்லையே! அநியாயமாய்க் கெட்டுப்

போகிறதே, ரிஜிஸ்திராரை யடிச்சதைப் பார்த்தேனாட்டு நீ சொன்னாக்கா உன்னை கோட்டுக்குப் பிடிச்சு இழுப்பாங்கடா! எனக்கு ஒரே கொழந்தையாச்சேடா நீ! என்னப்பா!' என்று பிள்ளை இறந்தது போன்று அழ ஆரம்பித்தாள்.

பையன் புன்சிரிப்புகொண்டு 'கோட்டுக்கு போனா என்ன, அம்மா!' என்றுகேட்டான். 'ஐயோ! புத்திகெட்ட பிள்ளையைக் கொடுத்தூட்டாரே ஸ்வாமி! அடே! நான் சொல்ரதைக்கேளடா! கோட்டுக்குப் போனாக்கா ஜெயிலிலே போட்டுடுவா! அப்புறம் தூக்கிலே போட்டுடுவாடா அப்பா! எனக்கு ஒருபிள்ளைதாண்டா நீ!' என்று தூக்கிலே போட்டதுபோலேயே அழுதாள்.

இவளழுகையைச் சற்றுங் கவனியாதவளாய் அம்மணியம்மாள் நடந்ததைச்சொல்லும்படி கேட்க, பையன் வெகு விரைவாய்ச் சொல்லவாரம்பித்தான். 'ரிஜிஸ்திராரை யடிச்சானே கிழவன், அவனை போலீஸ் டேஷனில் புடிச்சுவச்சு ஒரு அறையிலே போட்டு பூட்டிவைச்சா. இன்னிக்கிக் காலம்பர சேவகன் போய் கதவைத் திறந்து பாக்கரான், கிழவனைக்காணோம், 40-வயசுபிராமணன்உக்காந்திருக்கான்.

இதைக்கேட்டவுடன் பிள்ளை பிறப்பனே என்று பயந்திருந்த தாயாருங்கூட மிக்க வாச்சரியப்பட்டாள். சற்று நேரம் கழித்து பையன் சொல்லியதைச் சிறிதேனும் நம்பாதவளாகி, 'பொய்யும் புளுகும் சொல்ல எங்கே கத்துக்கொண்டே?' என்றாள். அதற்குப்பையன் 'பொய்யா? இப்போ வாங்கள், காட்டரேன். நேத்திக்கு நான் பாத்தேன். 70-வயசு கிழவனாயிருந்தான். இப்போ நாப்பது வயசு தடியனாயிருக்கான். நேத்திக்குப் பார்த்தேன் சூத்திரனாயிருந்தான், இன்னிக்கிப் பாக்கரேன் பராமணனாயிருக்கான். நேத்திக்குப்பார்த்தேன் கன்னங்கரேனாட்டு இருந்தான், இன்னிக்கிப் பாக்கரேன் செக்க செவேர்னாட்டு இருக்கான்' என்றான்.

'ரொம்ப கூட்டமாயிருக்கோ அங்கே?' என்று இரண்டுபேரும் வெகு ஆவலாய்க் கேட்டனர். பையன் 'கூட்டமா! தேர்க்கூட்டம், திருநாக்கூட்டம் இம்பாளே அப்படியிருக்

கே. இந்த சேவுகன்களெல்லாம் அவன் கிட்டப் போரத்துக்குப் பயப்படராங்க. எத்தனை சேவுகன் வந்திருக்கான்தெரியுமா? இதுமாத்ரமா? போலீஸு இனிஸ்பெக்டரு, சூப்பரிண்டு, அசிட்டாண்டு சூப்பிரண்டு எல்லாரும் வந்திருந்தாங்க, அவன் என்ன ஜோராய் நின்றுகிண்டு இருக்கான் தெரியுமா? கலூப்பூரம் எத்தரா, வெத்தலைப்பாக்குக் கொடுக்கா. அவன்கால்மேலே விழுரா அனேகம்பேர், அவன் பேசாமே யிருக்கான்' என்று சொல்லிக்கொண்டே போனான்.

சுப்பாளு அம்மாள் திறந்தவாயைத் திறந்தபடியே வைத்துக்கொண்டு செல்லம் சொல்வதையெல்லாம் கேட்டாள். அவன் சொல்லி முடிந்தவுடன் 'பாவம் நம்ப சிகாமு ஆம்டையான் கிழமாயிருக்கானே, அந்த மந்திரவாதி கிட்ட அழைச்சிகிண்டு போனுக்கா, என்ன கேட்டாலும் கொடுத்துடுவோம். இங்கே வந்தபோதெல்லாம் கிழவனுக்குக் கொடுத்தூட்டியே, கிழவனுக்குக் கொடுத்தூட்டியே இன்னு சொல்லிக்கிண்டிருக்கா. 70-வயசு கிழவன் 40-வயசு ஆனுக்க, 60-வயசுதானே இவனுக்கு 30-வயசுஆகட்டுமே, போவோண்டீ, அவன் கிட்டபோவோம் வாடீ' என்றாள்.

சிவகாமு சுப்பாளுவின் பெண். அவளுடைய அகமுடையானைப் பாலியமாக்குவதற்கு இவ்வளவும் யோசித்தாள் சுப்பாளு அம்மாள்.

இன்னும் ஓரிடத்திற்குப்போவோம். திண்டிவனம் கோர்ட்டிற்குப்போய் அங்கே வக்கீல்கள் என்னசெய்கிறார்களென்று பார்ப்போம். வக்கீல்களெல்லாரும் ஓரறையில் கூடியிருந்தார்கள். அன்றையதினம் கோர்ட்டில்லையோ? அவர்கள் பேசுவதைக் கேட்டால் தெரியவரும்.

1-ம் வக்கீல்—என்னஸார்? மந்திரவாதியென்று ஒருவனில்லையென்றன்றோ நம்முடைய சட்டங்களில் அவனைத் தண்டிப்பதை நீக்கிவிட்டார்கள். அச்சட்டம் செய்த நிபுணர்களுக்கு இந்தசமாசாரத்தைச் சொல்லவேண்டும்.

2-ம் வ—மந்திரமா யிருக்காதையா? மந்திரத்திலே யொன்றும் செய்யமுடியாது.

1-ம் வ—சரி, நீங்கள் சொல்கிறபடியே மந்திரமில்லையென்று வைத்துக்கொள்வோம்? இதற்கென்ன சொல்கிறீர்கள்?

2-ம் வ—இன்னுமொருதரம் சொல்லுங்கள்.

1-ம் வ—ரிஜிஸ்திராரை ஒருகிழவன் அடித்தான்.

2-ம் வ—கிழவனென்று தெரியுமா?

1-ம் வ—அந்தத்தெருவிலே யுள்ளவர்களெல்லாரும் பார்த்தார்கள்.

3-ம் வ—நேற்றையதினம் போலீஸ் ஸ்டேஷனில் உள்ளவர்களெல்லாரும் கண்டார்கள்.

4-ம் வ—போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றவர்களெல்லாரும் பார்த்தார்கள்.

2-ம் வ—சரி, கிழவனென்பதில் ஐயமில்லை.

1-ம் வ—அவன் இன்றுகாலையில் தடியனானென்பதற்கு மையமில்லை.

2-ம் வ—இன்று காலையில் எப்பொழுது பார்த்தார்கள்?

1-ம் வ—விடியற்காலமே 5-மணிக்குக் கதவைதட்டினனாம்.

2-ம் வ—அவனை யறையில்வைத்துப் பூட்டியிருந்தார்களோ?

1-ம் வ—அடிமுதற்கொண்டே சொல்கிறேனே. நேற்றையதினம் ரிஜிஸ்திரார் சாயங்காலம் ஆபீசிலிருந்து தனியாக வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தார். அவர்வீட்டிற்குப் பக்கத்துச்சந்தில் ஒரு பர்லாங்குக்கப்பால் ஒருகிழவன் ஓடிவந்து பெரியதடியினால் ரிஜிஸ்திராருடைய தலையில் காரணமில்லாமலடித்தான்.

3-ம் வ—ரிஜிஸ்திரார் வழியில்கிடந்த ஒரு நோட்டுபுஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாராம். கிழவன் பின்னால் தடதடவென்று வந்து அடித்தானாம்.

2-ம் வ—அந்த நோட்டுப்புஸ்தகம் இப்பொழுது எங்கே?

3-ம் வ—அடித்து நோட்டுபுஸ்தகத்தைப் பிடுங்கிக்கொண்டு இரண்டடி பெடுத்துவைக்கு முன்னர், போலீஸ் சேவகனும் ரிஜிஸ்திரார் சேவகனும் தடியைப்பிடுங்கிக்கொண்டார்கள். நோட்டுப்புஸ்தகத்தை யவர்கள் பார்க்கவில்லை. கிழவனை என்னவென்னவோ விசாரித்தார்களாம், அவன் ஒன்றிற்கும் பதில்சொல்லவில்லை. கடைசியாக போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து என்னவோ கேட்டாராம். அதற்கும் பதில் சொல்லவில்லை. சூப்பரின்டெண்டெண்டுக்கும் கடிதம் எழுதிவிட்டு, கிழவனை யறையில்வைத்துப் பூட்டிவிடச்சொல்லி, அவனைப்பிடித்த சேவகனையே அறைக்கு வெளியில் படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர் தமதகம் சென்றார். சேவகனும் அவ்வாறே செய்தான்.

2-ம் வ—இங்கேதான் ஏதோ பிசகு நடந்திருக்கும்.

1-ம் வ—என்ன பிசகு? கிழவனை யுள்ளேவிட்டு சாத்திப் பூட்டும்பொழுது போலீஸ் சேவகர்களெல்லாரும் இருந்தார்கள்.

2-ம் வ—திறக்கும்பொழுது?

1-ம் வ—இவர்களா திறக்கவில்லை. உள்ளேயிருந்து கதவை யாரோ யிடித்தார்களாம். வெளியில் வாசற்படியில் படுக்கிருந்த சேவகன் ஹெட்கான்ஸ்டபிளினிடம் சாவியை வாங்கி—

2-ம் வ—அப்படியென்றால் சேவகன் தானே சாவியை வைத்துக்கொள்ளவில்லையோ?

1-ம் வ—கீழ் கான்ஸ்டபிள்கள் சாவியை ஹெட்டினிடத்தில்தான் கொடுப்பது வழக்கமாம். அந்தவிதமாகக் கொடுத்திருந்தான்,

2-ம் வ—அப்புறம்?

1-ம் வ—அப்புறம் சாவியை வாங்கி, கதவைத் திறந்தவுடன், வெகு அவசரமாய் ஒரு பிராமணன் வந்தானும் வெளியில்.

2-ம் வ—அப்பிராமணன் வருவதை யார்பார்த்தார்கள்?

1-ம் வ—அந்த சேவகன் பார்த்தான்.

2-ம் வ—அவனைத்தவிர வேறு எவரும் பார்க்கவில்லையா?

1-ம் வ—ஹெட்கான்ஸ்டபிள் சாவியை அந்த சேவகனிடத்தில் கொடுத்துவிட்டு, போலீஸ்டேஷனுக்கு வெளியில் கேட்டில் நின்றுகொண்டிருந்தான். அவன்தான் பிராமணனைத் தடுத்தானும்?

2-ம் வ—தடுத்து?

1-ம் வ—எங்கே போகிருய் என்று கேட்டானும். அதற்குள் அந்த சேவகன் 'கிழவன் எங்கே' என்றுனும். பிராமணன் 'என்ன கிழவன்?' என்று ஒன்றுமறியாதவன்போல் கேட்டானும். 'அந்த உள்ளே யிருந்த கிழவன்' என்றுனும் சேவகன். பிராமணன் 'எந்த உள்ளே? என்று திரும்பவும் கேட்டானும். ஹெட்கான்ஸ்டபிள் அதற்குள் 'நீ யந்த உள்ளே என்னமாய்ப்போனுய்?' என்று பிராமணனைக் கேட்டானும். அதற்கு பிராமணன் ஒன்றும் பதில்சொல்லவில்லை. அது முதற்கொண்டு இதுவரையிலும் பிராமணன் வாயைத் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர்—

என்ற சொல்வதற்குள் ஒரு குமாஸ்தா வந்து 'இன்றையதினம் கோர்ட்டு இல்லையாம்' என்றுன்.

4-ம் வ—என்னமாய்த் தெரியும்.

குமாஸ்தா—முன்சீபு ரிஜிஸ்திராரகத்தில் ரிஜிஸ்திரார் படித்திருக்கும் அறையில் நாற்காலியில் இன்றையதினம் காலை முதற்கொண்டு இதுவரையிலும் உட்கார்ந்திருக்கிருராம். யார் கூப்பிட்டாலும் பேசுவதில்லையாம். வயித்தியர், சப்மாஜிஸ்திரேட்டு, வக்கீல் இராமநாதய்யர், இவர்களெல்லாரும் பேசிப்பார்த்தார்களாம். பேசப்பேச தலையை மாத்திரம் அசைக்கிருராம்.

வக்—ஏன்?

குமா—அதென்னவோ! கொண்டுபோன காபியை இரண்டு மணிநேரம் கழித்துச் சாப்பிட்டாராம். சாப்பிட இன்னும் எழுந்திருக்கவில்லையாம்.

2-ம் வ—அவர் என்றைக்கு ஊரிலிருந்து வந்தார்?

குமா—இன்றையதினம் காலையில் வந்தாராம். வந்தவுடன் ரிஜிஸ்திராரகத்துக்குச் சாவி வாங்கப்போனாராம். போனவர் நாற்காலியிலுட்கார்ந்தாராம். உட்கார்ந்தவர் இன்னும் எழுந்திருக்கவில்லையாம்.

3-ம் வ—பைத்தியம் பிடித்துப் போயிற்றோ?

குமா—ரிஜிஸ்திராரும் அவரும் மிக்க சிநேகிதர்களாம்.

2-ம் வ—என்ன சிநேகிதமாயிருந்தாலும் இப்படியா? ஆச்சரியமாயிருக்கிறதே!

இவ்விதம் குமாஸ்தா வக்கீல்களிடத்திற் சொல்லியது உண்மையே. முன்சீபும் மீனாக்ஷியும் திருப்பாப்புலியூரிலிருந்து வந்தவுடன் முன்சீபு ரிஜிஸ்திரார் படுத்திருக்கும் அறையிலோர் நாற்காலியில் ரிஜிஸ்திரார் முகத்தை நோக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்ததாகக் கூறினோம். அவ்விதமாகவே பகல் இரண்டுமணி வரைக்கும் உட்கார்ந்திருந்தார். காலை 9-மணிக்குக் காபியும், பகல் 1-மணிக்கு அன்னம் கரைத்தரசமும் சாப்பிட்டவர்தான், ஸ்நானம்இல்லை, வேஷ்டி மாறுதலுமில்லை, நித்திய கர்மானுஷ்டானங்களுமில்லை.

இரண்டு மணிக்கு தென்னாறுகாடு ஜில்லா பெரிய டாக்டர் கூடலூரிலிருந்து வந்தார், வரும்படியாக இவர்கள் தந்தியடித்திருந்தனர். அவரோடுகூட திண்டிவனம் டிரஸ்ஸரும் வந்தனர். ரிஜிஸ்திராருக்கு மனுஷ்யர்களால் செய்யக்கூடிய சகாயங்களெல்லாம் டிரஸ்ஸரே செய்துவிட்டனர். என்றாலும் தைரியத்துக்காக டாக்டரை வரவழைத்தனர்.

டாக்டர், கை, ஹிருதயம், தலை முதலியவைகளையெல்லாம் பரிசோதித்துப்பார்த்து, 'ஆகாரம் இறங்கிற்றா?' என்று கேட்டார், பேசாதிருந்த இராமஸ்வாமி அய்யர் வாய்திறந்து 'இல்லை' என்றார், 'சிறிது பால்கொண்டுவாருங்கள்' என்றார் டாக்டர். இரண்டுநிமிஷத்திற்கெல்லாம் பால்வந்தது. வாயைச் கெட்டியாய் நீக்கிக்கொண்டு ஒருதுளி பாலைவிட்டார், துளிதுளியாக காற்சேர் பாலை உள்ளிறக்கி திண்ணை வைத்துவிட்டார். பிறகு காயத்தை நன்றாய்ப் பார்த்தார்.

நெற்றிமுதற்கொண்டு சிறு விரலாய் பின்தலைவரைக்கும் இருந்தது. இதன்றி நடுத்தலையில் எலும்பு ஒரு அங்குலம் பெயர்ந்திருந்தது. நல்ல அடி அடித்திருக்கிறான். டாக்டரும் அவ்விதம் சொன்னார். 'யாரையா இவ்விதம் அடித்தது? என்னத்திற்காக?' என்று டாக்டர் கேட்டகேள்விக்குப் பதிலில்லை. 'ஒருவருக்கும் தெரியாது?' என்று மறுபடியும் கேட்டார் டிரஸ்ஸர். 'ஒருகிழவனும் அடிக்கும்பொழுது, இப்பொழுது பிராமணனும்' என்று பதிலுரைத்தார். 'பிராமணா?' என்று வெகு ஆவலோடு கேட்டார் இதுவரையிலும் வாயைமூடிக்கொண்டிருந்த டிஸ்டிரிக்டு முன்சீபு.

'நேற்றையதினம் இராத்திரி உள்ளேவைத்து கதவை சாற்றிபொழுது கிழவனாயிருந்தவன். இன்றையதினம் காலையில் பிராமணனாகி விட்டானாம், மந்திரம் என்பதும் உண்டுபோலிருக்கிறது என்று பதிலுரைத்தார் டிரஸ்ஸர்.

முன்சீபு வாயை மூடிவிட்டார்.

டாக்டரும் டிரஸ்ஸரும் வெளியில்வந்தவுடன் 'தாங்களென்னநினைக்கிறீர்கள்?' என்றார் டிரஸ்ஸர்.

டா—மெடுல்லா ஆப் லாங்கேடாவில் அடிப்பட்டிருந்தால் பிராணன் அப்பொழுதே போயிருக்கும், அல்லது டெம்புள் போன்ஸ்களில் பட்டிருந்தாலும் ஐஸ்சக்கெட்டுகள் அழிந்துபோயிருக்கும். இது கிரேனியத்தில் பட்டிருக்கின்றது, இன்னுமொருநாள் போனால்தான் சொல்லலாம்.

டி—முன்சீபை யென்ன என்று சொல்லலாம்?

டா—அவருக்கென்ன?

டி—அவருக்கேதோ ஸெரிப்ரம் கெட்டுப்போய் இருக்குமென்று நினைக்கிறேன்.

டா—ஏன்?

டி—இன்று காலைமுதற்கொண்டு உட்கார்ந்தவிடத்திலேயே உட்கார்ந்திருக்கிறார்.

டா—இதென்னவிது?

என்று மறுபடியும் உள்ளேபோனார்.

முன்சீபை ஐந்துநிமிஷம் உற்றுநோக்கினார், அவர் ரிஜிஸ்திராரைப்பார்த்த வண்ணமே யிருந்தார். இவர் முன்சீபோடு பேசுவதற்கு வாய்திறக்கும்போது ரிஜிஸ்திரார் ஏதோ வாயோடு பேசுவது இவர் காதில் விழுந்தது. முன்சீபும் கவனமாய் அதைக்கேட்டார், அடடா! ஐயோ! என் மாமனாரா, சொந்தமாமனார்! நாலாநாள், ஆமாம்! நோட்டு புஸ்தகம்! சாவித்திரி! என் அம்மா சாவித்திரி! அடீசாவித்திரி! உங்கள் அப்பா! அப்பாடா! மாப்ளை! பேஷ்!' என்றுசொல்லி பிறகு வாயைமூடிவிட்டார். டாக்டருக்கு இதற்கு அர்த்தம் தெரியாததினாலும், வியாதி மிக்க அதிகமாயிருக்கிறதென்ற எண்ணத்தினாலும், ஏதோ பிதற்றுகிறாரென்று எண்ணியிருந்தார்.

முன்சீபுக்கு ரிஜிஸ்திரார் சொல்லும் வார்த்தையெல்லாம் ஏதோ ஒரு அர்த்தத்தைக்கொடுப்பது போலவே யிருந்தது, 'ஐயாசாமீ!' என்று கூப்பிட்டார். டாக்டர் 'அவரோடு பேசவேண்டாம். அவர்பாட்டிற்கு இருப்பதே நலம்' என்றார்.

பிறகு முன்சீபினுடைய பைத்தியத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு 'சாப்பிட்டாயிற்றா?' என்றார். 'ஆயிற்று' எனப் பதிலுரைத்தார் முன்சீபு.

'இங்கேயே உட்கார்ந்திருப்பதில் பிரயோஜனமில்லை, தங்கள் வேலையைத் தாங்கள்பாருங்கள், ஒன்றும் அபாயம் நேரிடாது' என்றார் டாக்டர்.

'எங்கேயுட்கார்ந்திருந்தாலென்ன?' என்று கேட்டார் டிஸ்டிரிக்டு முன்சீபு.

பிறகு டாக்டர் ஒன்றுங் கேட்கவில்லை.

அன்றையதினம் மாலை சுமார் ௫-மணி இருக்கும். ரிஜிஸ்திரார் கண்விழித்துப் பார்த்தார். படுக்கையில் புரண்டார். 'அப்பாடா! ஐயோ!' என்றார். 'அங்கே யாரது?' என்று முன்சீபை நோக்கிக் கூறினார்.

'என்னைத் தெரியவில்லையா உனக்கு?' என்று முன்சீபு நாற்காலியை ரிஜிஸ்திராருக்குச் சமீபத்தில் போட்டு உட்கார்ந்தார்.

'இராமஸ்வாமீ!' என்றார் ஐயாஸ்வாமியையர். 'ஐயாஸ்வாமீ!' என்றார் இராமஸ்வாமியையர். இருவர் கண்களும் நீர் தளும்பின. இராமஸ்வாமியையர் தன்கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ரிஜிஸ்திரார் கண்ணீரையும் துடைத்து 'இந்த கஷ்டம் நான் ஊரிலிருந்துவருவதற்குள்ளா? என்றார்

ரிஜிஸ்திரார் மிக்கதாழ்ந்தகுரலுடன் 'நீ யெப்பொழுது வந்தாய்?' என்று கேட்டார்.

மு—இன்றையதினம் காலையில்தான் வந்தேன்.

ரி—ஐயோ! அப்பாடா! கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவரச்சொல்லேன்.

என்றவுடன் முன்சீபே எழுந்துபோய் தீர்த்தம்கொண்டுவந்தார். ரிஜிஸ்திராருக்கு எழுந்திருக்க முடியாததினால் முன்சீபு சிறிது சிறிதாய் வாயில்விட்டார்.

ரி—முன்னமேயே தெரிந்திருந்தால்—அப்பாடா!—ஐயோ! நான் கலியாணம்பண்ணிக்கொள்வேனா!—அப்பா! தெரியாதவல்லவோ போயிற்று.

மு—என்ன?

ரி—என் மாமனார்தான் இப்படியெல்லாம் செய்தவர். ஈசுவரா! என்ன அவமானத்தைக் கொண்டுவந்து வைத்துவிட்டீர்! ஐயோ!

மு—உன் மாமனாரென்று என்னமாய்த்தெரியும்?

ரி—நேற்றையதினம்—ஐயோ! வலிக்கிறதே!—நேற்றையதினம் ஆபீசிலிருந்து வந்துகொண்டே யிருந்தேன். அப்பா!— கீழே ஒரு நோட்டுபுஸ்தகம் கிடந்தது, அதை எடுத்துப்பார்த்தேன். ஐயோ! மனுஷனுக்கு எவ்வளவு கெட்டகுணம். அப்பாடா, இன்னுங்கொஞ்சந் தீர்த்தம் விடேன் வாயிலே! நீ வந்தாயே! அதுவே போதும்.

என்றதும் இராமஸ்வாமியையர் முன்போலவே சிறிது தீர்த்தத்தைச் செலுத்தினார்.—

ரி—அந்த நோட்டிற்குள்—நன்றாய் ஞாபகமிருக்கிறது. மறந்துபோகுமா?— அந்த நோட்டுப் புஸ்தகத்திலே என்ன எழுதியிருந்தது என்றால்—அப்பா!— நான்பார்க்கக்

டமாட்டேன்—கையெழுத்து என் மாமனுர்கையெழுத்து; ஆகையினுலே பிரித்துப்பார்த்தேன்— பார்த்தவுடனே என் கண்ணிலே யிதுவா அகப்படவேண்டும்— அப்பாடா!—நான் பிழைப்பேனு? அந்த நோட்டுப்புஸ்தகத்திலே எழுதியிருந்தது.—'இன்றையதினம் கிழவன் வேஷம் வெகுதிறமாயிருந்தது. என்னையறிந்தவர் ஒருவருமில்லை. வேலைமாத்திரம் பூர்த்தியானவேலை. 15-மைல் இருக்கும் அலைந்தது. மருமகப்பிள்ளை வந்துவிட்டான். வராமல் செய்திருக்கவேண்டும்.'

இதுவரையிலும் வாசித்தேன், அப்புறம் ஒன்றும் தெரியாது, இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சம் சுயஞானம் வருகிறது, யாரோ இங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். அது தெரியும், என்னுல் பேசமுடியவில்லை.

என்றதும் கண்மூடிவிட்டார். உடலெல்லாம் வியர்த்தது. அரைமணிநேரம் வாயை மூடிக்கொண்டிருந்தார், இவ்வளவு பேசியது அவருக்குத் தாங்கமுடியவில்லை.

விசிறுகிறவன் டாக்டர் சென்றதும் போய்விட்டான்.

ரிஜிஸ்திரார் கிரமமடைந்ததும், அங்கிருந்தபாலை முன்சிபு மெதுவாய் வாய்க்குள் விட்டார். பிறகு சிறிது நேரம் விசிறினுர். குளிர்ந்த ஜலத்தில் துணியை நனைத்து தலையில் போட்டார். இவ்வளவுசெய்தும் சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் ரிஜிஸ்திரார் சுயஞானமடைந்து, 'மிகவும் பலஹீனமாயிருக்கிறது—நீ—அப்பா !—ஒருகாரியஞ்செய்யவேண்டும் — இங்கேயிருந்து — ஐயோ !—போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று—அப்பாடா ! என் மாமனுரை வெளியில் விடுவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்யவேண்டும்—தொண்டையெல்லாம் வலிக்கிறது—எப்படியிருந்தாலும்—இன்னும் கொஞ்சம் தீர்த்தம்விடேன் வாயிலே—எப்படியிருந்தாலும் என் மாமனுர்—சற்றே போயேன்.'

மு—வெளியில் விடும்படியான குற்றம் அன்றே அது,

ரி—வெளியில் விடாமற்போனுலும் ஜெயிலுக்குள்ளே நம்முடைய மனுஷர்களைக்கொண்டு சாதம்—போடும்படி

யாய்—ஏற்பாடு செய்யேன்—என் மாமனார் என்று சொல்—உனக்குத் தெரிந்தவரென்றும் சொல்—சற்று போகிறாயா?

மு—அதுவரையிலும் உன்னிடத்தில்?

ரி—அவள் வந்து இருக்கிறாள்—சேவகன் விசிறுகிறான்.

மு—சரி, போய்விட்டுவருகிறேன்.

என்று புறப்பட்டுப்போனார்.

போலீஸ்ஸ்டேஷனுக்குச்சென்றதும், அங்கே வாசலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டிருந்தார். இவரைக் கண்டதும் சலாம்போட்டு உள்ளே யழைத்துக்கொண்டு போய் நாற்காலியில் உட்காரவைத்து தான் ஒரு பெஞ்சியி லுட்கார்ந்தார். இருவரும் இன்னவை பேசுகிறதென்று தெரியாததினாலேயோ அல்லது யார் முன்னாலே பேசுகிற தென்கிற சந்தேகத்தினாலேயோ சற்றுநேரம் சும்மா இருந் தார்கள்.

பிறகு முன்சீபு தான் கைதியோடு சற்றுநேரம் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் கைதியைக்கொண்டுவரும்படியாக உத்திரவு பண்ணினார். இரண்டு சேவகர்களும் ஒரு பிராமணனும் முன்சீபு எதிரில்வந்து நின்றார்கள். முன்சீபு பிராமணனை உற்று நோக்கினார். ரிஜிஸ்திரார் மாமனார் நாராயணஸ்வாமி யையருக்கும் அவருக்கும் மிக்க வித்தியாசமாயிருந்தது, நாராயணஸ்வாமியையரைவிட இந்த பிராமணன் குள்ளம். அவர் செகப்பு. இவர் மாநிறம். அவர் பெரிய மனுஷ்யத் தனமாய் கம்பீரமாய் இருப்பர். இவர் கிராமத்து ஆளா யிருந்தார். நாராயணஸ்வாமியையர் முகம் புத்தியைக் காண் பித்துக்கொண்டிருக்கும். இவர் முகம் சிறிது மந்தமாயிருந் தது. அப்படிப்பட்ட பிராமணரை ஏற இறங்க 10-தரம் பார்த்தார் டிஸ்டிரிக்டு முன்சீபு.

பிறகு பிராமணன் கைதியல்லவென்று நன்றாய்த் தெரி ந்துகொண்டு 'இவர்தானா கைதி?' என்று கேட்டனர். சேவகர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஒரு குரலுடன் 'இவர்தான்' என்றார்கள்.

'இவரல்லவென்றார்' முன்சீபு.

'என்னமாய்த்தெரியும்? என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்கவே, முன்சீபு சிறிதுநேரம் யோசித்து 'நான் வேறே யொருவரென்று நினைத்தேன். ஏனெனில் இவர் முகம் குற்றம்செய்ததுபோலில்லையே' என்றார்.

'எல்லாசங்கதிகளிலும் முகத்தைப்பார்த்து நாமொன்றுஞ் சொல்லக்கூடாது. நிஷ்களங்கம்போன்ற முகத்தை யுடையவன் மகா குற்றவாளியாயிருப்பான், களங்கமுள்ள முகத்தினை உடையவன் குற்றம் என்பதையே யறியாதிருப்பன்' என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

முன்சீபு பிரமையடைந்தார். 'போலீஸ்ஸ்டேஷன் சென்றதும் நாராயணஸ்வாமியையரைக் காண்போம், அவரோடு என்னமாய்ப்பேசலாம்? என்னவிதமாய்ச் சம்பாஷணையை யாரம்பிக்கலாம்?' என்றெண்ணிக்கொண்டு வந்தவர் நாராயணஸ்வாமியையரல்லாத மற்றொருவரைப் பார்த்தவுடன் இன்னது செய்கிறதென்று தோன்றவில்லை. அச்சமயத்திலுண்டாகிய மனக்குழப்பத்தில் கண்டித்த குரலுடன் 'இவரல்ல' என்றுவிட்டார். பிறகு யோசித்து இவருடைய முகத்தினின்றும் அவ்விதம் சொல்லியதாகக் கூறினார். 'இப்பொழுதென்ன செய்யலாம்? இந்த பிராமணரையே கேட்போம்' என்று, கைதியாக நிற்கும் பிராமணரையே நோக்கி 'நேற்றுக் கிழவனாயிருந்து இன்றையதினம் பிராமணனாகி விட்டீரே, எங்ஙனம்?' என்று கேட்டார்.

பி—எனக்கு ஒன்றுந் தெரியாது. நான்—

போ, இ—அவனை யொன்றுங் கேட்காதேயுங்கள். அவன் பொய்சொல்வதென்றே யாரம்பித்திருக்கிறான். காலை முழுவதும் ஒன்றும் பேசவில்லை, என்ன சொல்லலாம் என்று யோசித்தான்போலும், மத்தியானம் ஒருகதை கட்டினான். நாளையதினம் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தினால் அவன் பொய் ஏற்பட்டுவிடுகிறது.' என்றதும் அதற்குமேல் முன்சீபும் ஒருகேள்வியும் கேட்கவில்லை, பிராமணனும் மொன்றுஞ் சொல்லவில்லை.

முன்சீபு ரிஜிஸ்திராரகத்திற்குச் சென்று தான் பார்த்ததை ரிஜிஸ்திராருடன் சொன்னார். ரிஜிஸ்திரார் முதலில் நம்பவில்லை, பிறகு ஆச்சரியமடைந்தார். 'நேற்றையதினம் நான் நோட்டுபுஸ்தகத்தில் பார்த்தது என் மாமனார் கையெழுத்து, அதிலெழுதியிருந்தது உன் கலியாணவிஷயம், இன்றையதினம் நீ என் மாமனாரல்ல என்கிறாய், எனக்கு நம்பிக்கையில்லை' என்றார்.

ரிஜிஸ்திரார் நம்பினாரோ யில்லையோ, போலீஸ்ஸ்டேஷனில் இருந்த பிராமணர் நாராயணஸ்வாமி யையரல்ல என்பது நிச்சயம். ஏனெனில் மறுநாள் விடியற்காலையில், முன்சீபு வந்த வண்டியிலேயே நாராயணஸ்வாமியையரும் வந்திறங்கி, ஒரு சட்காவண்டியிலேறி ரிஜிஸ்திராரகம் சென்று இரண்டுமணிநேரம் அவர்க்கருகாமையில் ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, முன்சீபும், ரிஜிஸ்திராரும் எவ்வளவு தேற்றியும் தாங்காமல் அழுதனர்.

மருமகப்பிள்ளையை அங்கிலையிற் கண்ட மாமனார் எவர்தான் அழார்?

14-வது அத்தியாயம்.

விசாரணை.

ஜூலைமீ 2உ தென்னாறுகாடு ஜில்லாக் கோர்ட்டில் கூடிய கூட்டத்திற்குக் கணக்குமுண்டோ?

'ரிஜிஸ்திரார் விசாரணை! ரிஜிஸ்திரார் விசாரணை' என்று பட்டப்பெயரொன்று உண்டாகி அநேகஜனங்கள் கூடிவிட்டார்கள். கோர்ட்டு ஹால்முழுவதும் ஹாலருகாமையிலிருக்கும் வக்கீல்கள் ரூம்முழுவதும், ஹாலைச்சுற்றிலும் உள்ள தாழ்வாரங்கள் முழுவதும், 'இஃதென்ன புதுமை! ஜட்ஜ் உட்காரும் இடத்திற்குப் பின்னால் உள்ள தாழ்வாரத்திலுங் கூட நாற்காலிகள், பெரிய மனுஷியர்கள், ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், பி ஏ பி எல்கள், பீ ஏ எல் டிகள், எம் ஏக்கள், முதல்கிரேட்வக்கீல்கள், அநேக பீ ஏக்கள் நிறைந்திருந்ததால் யாரை வேண்டாமென்று சொல்கிறது? ஆஹா! அந்த

பிரம்மாநந்தத்தை தேவேந்திரசபை யென்று சொல்கிறார் களே இதில் பாதியிருக்குமோ ?

இராஜகோபாலையர் கலியாணத்தின்போது இடையூறு செய்தவன், பொய்த்தந்தியடித்தவன், கிழவவேஷம் பூண்டவன், மருமகப்பிள்ளையை யழைத்துப்போனவன், காசிமாலையைத் திருடினவன், கிரகப்பிரவேசத்தைக் கெடுத்தவன், வேறு ஒருவனைப் பொய் கேஸில் அகப்படுத்தியவன், திரக்ஷியைக் கெடுத்தவன், வீட்டிற்குத் தீமூட்டியவன், ரிஜிஸ்திராரைக் கடுங்காய மூட்டியவன், மகாபாதகன், மந்திரவாதி, ஜகஜாலப்புரட்டன், அகப்பட்டுவிட்டான், அகப்பட்டுவிட்டான்' என்று அவனைப்பார்ப்பதற்கு வந்த ஆயிரக்கணக்காகிய ஜனங்கள், ஐயோபாவம்! கோர்ட்டினுட் பிரவேசிப்பதற்கு இடம்பெறாத மைதானத்திலும் குளக்கரையிலும், உட்கார்ந்திருந்தனர்.

ஜூரிகளில் பிரதமர் பாரியண்டுகோ ஏஜண்டு, கிரீக் என்பவன், மற்ற ஆறுபெயர்களில் 3-பெயர் உபாத்தியாயர்கள் பீ. ஏ பாஸ் செய்தவர்கள், இரண்டுபெயர், ஜமீன்தார்கள், ஒருவர் ரத்தினவியாபாரி. எல்லாரும் ஆங்கிலேய பாஷையை நன்றாயறிந்தவர். வழக்கம்போல் ஐவரில்லாமல் அதிகமாய் எழுவரை யேற்படுத்தினபோதிலும், ஹைகோர்ட்டைப்போல் ஒன்பதின்மரில்லையென வந்தவர்களுக்கு மனக்குறைதான்.

கவர்ன்மெண்டார்பக்கம் வக்கீல்கள்—கனம் அட்வோகேட் ஜெனரல் ஹூபி, கூடலூர் கவர்ன்மெண்டு வக்கீல் சாம்பசிவ அய்யர், ஐயாசாமி அய்யர், பி. . பீ.எல்

கைதிபக்கம் வக்கீல்கள்—கனம் அர்பத்நட் (பாரிஸ்டர் அட் லா) இராஜகோபாலையர் பீ. . பி. எல். காருண்ணி மேனன் எம் ஏ. எம் எல் (பாரிஸ்டர் அட் லா) சிவ சிதம்பரச் செட்டியார், செங்கையர், ராமையர்.

கேசில் சுபாவமாயுண்டான ஆச்சரியங்களுடன் இவ்வளவு வக்கீல்களுக்குப் பணம் எங்கிருந்தகப்பட்டதென்று இன்னுமொரு ஆச்சரியம் ஏற்பட்டது. அர்பத்நட்டுக்கே ஒருபையை அவிழ்த்ததாகக் கேள்வி.

இன்னுமொரு ஆச்சரியம் என்னெனில் பரமசாதுவாயும் ஒன்று மறியாதவராயும், இராஜகோபாலையருக்கு அனேக உதவிகளைப் புரிந்தவராயுமுள்ள இரத்தினவியாபாரி ம-ா-ா-ஸ்ரீ நாராயணஸ்வாமி யையரைச் சில அத்தாக்ஷிகளைக்கொண்டு இரண்டாவது கைதியாகச் சேர்த்திருந்தனர். என்ன முகாந்தரமோ, என்னகாரணமோ கேஸ்விசாரணையில் தெரியவரும்.

ஜூரிகள் உறுதிமொழிகூறிய பிறகு ஜட்ஜி அவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். 'இந்தக் கேஸை மிகவும் கவனமாய்க்கேட்டு உங்கள் மனதிற்குத் தோன்றியவற்றைச் சொல்லவேண்டும். இது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. உங்கள் முழுச் சக்தியையும் முழுக் கவனத்தையும் தயவுசெய்து செலுத்தவேண்டும்.'

கனம் அட்வோகேட் ஜெனரல் பின் எழுந்திருந்தார்.

ஜூரிமார்களே ! இப்பொழுது உங்கள் முன்கொண்டு வரப்பெற்ற கேஸின் தன்மையைப்பற்றிச் சிறிது சொல்வோம் உங்கள்முன் நிற்கிற முதல் கைதி இராமசுப்பையர் ' துக்ககரமாயும் அபாயத்தை விளைவிக்கும்படியாயும் காயப்படுத்துதல் ' என்னும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார். இரண்டாவது கைதி மேற்படி முதற்கைதியை அக்குற்றஞ்செய்யத் தூண்டிவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். இந்த விசாரணையில் ஒரு கிழவன் ரிஜிஸ்திராரை அடித்ததாக ஏற்படும். அந்தக் கிழவன் முதற்கைதியாயிருந்தால் இரண்டாவது கைதிதா னடித்தவனாவான்- இரண்டாவது கைதியென் றேற்பட்டால் முதற்கைதி தூண்டினவனாவான்.

' உங்கள்முன் கொண்டுவரப்போகிற சாக்ஷியங்களை நாங்கள் விசாரிப்பதோடு நீங்களும் தீரவிசாரித்து உண்மையையாராய்ந்து, கிழவ னின்னவன் என்ற விஷயத்தை உறுதிப்படுத்தவேண்டும். கிழவன் இரண்டுபேரில் ஒருவனேயொழிய வேறில்லை என்பது திண்ணம்.

'ஆகையால் ஜட்ஜிசொல்லியபிரகாரம் தங்கள் முழுக் கவனத்தையும் பூர்ணமாய் இதிலேயே செலுத்தி ஆராயவேண்டும்.'

என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தார். பிறகு சாக்ஷி விசாரணை யாரம்பித்தது.

முதல் சாக்ஷி ரிஜிஸ்திரார் ஐயாசாமியையர். அவரால் நிற்க முடியாததினால், ஒரு நாற்காலியொன்று போட்டு சாக்ஷிப் பெட்டியிலேற்றி சத்தியம் செய்தபிறகு அதில் வைசகப்பட்டார். அவர் சொல்லியதாவது:—

'என்பெயர் ஐயாஸ்வாமியையர், வயது 24, மதம் ஸ்மார்த்தமதம், உத்தியோகம் சப் ரிஜிஸ்திரார். தற்காலம் இருப்பது திண்டிவனம். எனக்கு முதற்கைதியைத் தெரியாது. தெரியவேதெரியாது இரண்டாவது கைதியை நன்றாய்த்தெரியும், என் மாமனார். ஜூன்மீ 5வ நன்றாய் ஞாபகமிருக்கிறது. அன்றையதினம் சாயங்காலம் என் ஆபீஸை மூடிவிட்டு வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தேன். 5-மணி யிருக்கும் மூடுகிறபொழுது. வழக்கமாய் 5, 6-சிலவேளை 7-மணிக்கும் மூடுவேன். அன்றையதினம் 5-மணிக்குச் சாத்தினேன். சாத்திவிட்டு ஸௌந்தராஜ அக்கிரகாரத்தின் வழியாய் வீடு சென்றுகொண்டிருந்தேன். நானும் சேவகனும் சாயங்காலம் நடந்துதான் போவது வழக்கம். காலையில் வண்டியில் வருவேன். வீடு போகும்பொழுது ஒரு நோட்டு புஸ்தகத்தைக் கண்டேன். என்முன் கிடந்ததனால் பிரித்துப் பார்த்தேன். வேறு ஒருவருடைய கையெழுத்தாய் இருந்தால் கீழே போட்டிருப்பேன். என் சொந்த மாமனார் கையெழுத்து. ஆகையால் சிறிது வாசித்துப் பார்த்தேன். வேறு விஷயமாய் இருந்தாலும் கீழே போட்டிருப்பேன். என் சிநேகிதர் முன்சீபு இராமஸ்வாமி அய்யர் கலியாண விஷயமாய் இருந்தது. நன்றாய் 5, 6-வரி வாசித்தேன். "இன்றையதினம் கிழவன் வேஷம் வெகு திறமாயிருந்தது, என்னை யறிந்தவர் ஒருவருமில்லை வேலைமாத்திரம் பூர்த்தியானவேலை. 15-மைல் இருக்கும் அலைந்தது. மருமகப்பிள்ளை வந்துவிட்டான், வராமற் செய்திருக்கவேண்டும்" என்றெழுதியிருந்தது. அதற்குமேலிருந்தது எனக்குத் தெரியாது. பிற்பாடு மறுநாள் முன்சீபைப் பார்த்ததுதான் தெரியும்.'

அட்வொகேட் ஜெனரல் ஒரு நோட்டு புஸ்தகத்தை ரிஜிஸ்திராரிடத்தில் கொடுத்து, 'இதுதானா நீர் அன்றைய தினம் பார்த்த நோட்டு புஸ்தகம்?' என்று கேட்டார்.

'ஆம், இதுதான். நான் வாசித்த பாகம் இதோ இருக்கிறது. "இன்றையதினம் கிழ——" என்று காட்டினார்

கனம் அர்பத்நட்—அதை யென்னத்திற்காக வாசிக்க வேண்டும்?

கனம் அட்வொகேட் ஜெனரல்—வாசித்ததா லுளதாகிய பிசகென்ன?

க-அர்—ஜூரிமார்களின் மனத்தைக் குற்றவாளிக்கு விரோதமாகச் செய்துவிடும்.

க-அட்வொ—அப்படியானால் கைதிகளுக்கு விரோதமான சாக்ஷிகளெல்லாரையும் விசாரிக்கக்கூடாது. ஒவ்வொரு சாக்ஷி சொல்வதும் உண்மையாயிருந்தால் கைதிக்கு விரோதமாயிருக்கும்.

க-அர்—இரண்டாவது கைதி கிழவன் வேஷம் பூண்டானா? மருமகப்பிள்ளையை யொளித்தானா? 15-மைல் அலைந்தானா? என்பது இப்பொழுது கேள்வியில்லை. அவர் இதற்குமுந்தி ஆயிரம் குற்றம் செய்திருப்பார். இப்பொழுது ரிஜிஸ்திராரை யடித்தவர் இன்னாரென்பது தானே கேள்வி.

க-அட்வொ—எனது கல்விகற்ற நண்பர், இரண்டாவது கைதி, கிழவவேஷம் பூண்டானா என்பதற்கும் இந்தக் கேஸிற்கும் சம்பந்தமில்லை என்றார். உண்மையைப் பார்க்கப்போனால் அதில்தான் கேஸின் ஆதாரம் முழுமையும் இருக்கின்றது. இவன் கிழவன் வேஷம்போடுவது வழக்கமென்று ஏற்பட்டால் அன்றையதினமும் அந்த வேஷம் போட்டுக்கொண்டிருப்பான். அல்லது முதற்கைதியைப் போட்டுக்கொள்ளச் சொல்லியிருக்கலாம்.

க-அர்—இவன் கிழவன் வேஷம்பூண்டது இவனெழுதிய தினின்றும் ஏற்படுத்துவதுகூடாது, வேறுசாக்ஷியங்களைக் கொண்டு ஏற்படுத்தவேண்டும்.

க-அட்வொ. இந்த நோட்டுபுஸ்தகத்தையே ஏன் சாக்ஷியாக எடுத்துக்கொள்ளக்கூடாது?

க-அர்—(சிரித்துக்கொண்டே) கைதியையே சாக்ஷியாக விசாரித்துவிடலாமே இதைவிட.

ஜட்ஜி—(க. அர்பத்நட்டைநோக்கி) இப்பொழுது நீங்கள் சொல்வதென்ன?

க-அர்—அந்த நோட்டு புஸ்தகத்திலுள்ளதை வாசிக்கக்கூடாது.

ஜட்ஜி—ஏன்?

க-அர்—ஒருவனெழுதியது அவனையே குற்றத்திற்குள்ளாக்காது.

க-அட்—அதுமாத்திரமாயிருந்தால் சரிதான். அதையும் ஒருசாக்ஷியமாக ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது?

க-அர்—நீங்கள் சொல்வதெல்லாம் வேடிக்கையாகவேயிருக்கின்றது. ரிஜிஸ்திராரையடித்த விஷயத்திற்கும் அந்த நோட்டு புஸ்தகத்திலுள்ளதற்கும் என்ன சம்பந்தம்?

க-அட்—அந்த நோட்டுபுஸ்தகம் கைதியினின்று அகப்பட்டதல்லவா?

க-அர்—அப்படியொன்றும் ருசுவாகவில்லையே இன்னும்?

க-அட்வொ—இனிமேல் ருசுவாகும்.

க-அர்—அப்பொழுது வேண்டுமென்றால் பார்த்துக் கொள்வோம்.

க-அட்வொ—அப்பொழுது இந்த சாக்ஷியை நாம் விசாரிக்கப்போகிறதில்லையே!

இந்த சமயத்தில் ஜட்ஜியடிவருமாறு உத்தரவளித்தார். "அந்த நோட்டு புஸ்தகத்தை வாசிப்பதனால் எனக்கு ஒருவிதமான பிசகுந் தோன்றவில்லை, அதிலிருப்பதைக் கொண்டு கைதிக்கு விரோதமாய் நாம் ஒன்றும் எண்ணக்கூடாது."

க-அர்—தாங்கள் சொல்லியதைத் தயவுசெய்து காகிதத்தி லெழுதவேண்டும்.

ஜட்ஜி அப்படியே யெழுதினார்.

க-அர்—அந்த நோட்டுப்புஸ்தகத்திலுள்ளது முழுவதும் வாசிக்கப்போகிறீர்களா இப்பொழுது?

க-அட்வொ—ஜூரிகளுக் கிஷ்டமிருந்தால்.

க-அ—(ஜட்ஜியைநோக்கி) ஒருவனைப் பழையகுற்றங்களினால் புதிதாகக் குற்றவாளியாக்கலாமென்பதற்குச் சட்டமில்லையே!

ஜட்ஜி—அவர்செய்த குற்றங்களைநோக்கி வாசிக்கப்போகிறதில்லையே!

க-அர்—அப்படியானால் சரிதான்.

மறுபடியும் ரிஜிஸ்திராரை விசாரித்தார்கள்.

'இந்த நோட்டுப்புஸ்தகத்திலுள்ள கையெழுத்து என் மாமனாருடையதுதான். அட்டையில் போட்டிருக்கிற பெயரும் அவருடையதுதான், உள்ளே போட்டிருக்கிறதும்அவருடையதே, இது என்மாமனாருடையது என்பதற்குச் சந்தேகமில்லை, என்னையடித்தவர் மாமனார்தான், இப்பொழுது நிச்சயமாய்ச் சொல்வேன். இப்பொழுது என்றது இந்த நோட்டுபுஸ்தகத்தை வாசித்ததனால் அதற்குக் காரணம் இந்த நோட்டில் உள்ள விஷயம்தான். இராஜகோபாலையர் பெண் கலியாணத்தின்போது—'

க-அர்—இஃதென்ன? இராஜகோபாலையர் கலியாண விஷயம் இப்பொழுதென்னத்திற்கு?

ஜட்ஜி—சாக்ஷிசொல்வதை சொல்லட்டும்.

க-அர்—ரிஜிஸ்திராரையடித்த விஷயமாய் வேண்டிய மட்டும் சொல்லட்டும்.

ஜட்ஜி—ரிஜிஸ்திராரை யடித்தவன் இரண்டாவது கைதியென்று நம்புவதற்கு நியாயம் கூறுகின்றார்.

க-அர்—நியாயம் அந்த நோட்டுப்புஸ்தகத்திலுள்ள விஷயந்தானே.

க-அட்வொ—அந்த நோட்டுப் புஸ்தகத்தைப்பற்றியொன்றும் சொல்லக்கூடாது போலிருக்கின்றதே!

ஜட்ஜி அடியில்வருமாறு உத்தரவுசெய்தார்.

'சாக்ஷிசொல்வதைத் தடுப்பதற்கு யாதொரு நியாயமு மில்லை?'

க-அர்—சாக்ஷிசொல்வதைத் தடுக்கவில்லை. எமது நண்பர் கேட்டகேள்வி பிழையென்று சொல்லவந்தேன்.

ஜட்ஜி—அந்தக் கேள்வியில் எனக்கு ஒருபிசகுந் தோன்றவில்லை.

ரிஜிஸ்திரார் பிறகு சொல்லவாரம்பித்தார். 'இராஜகோபாலையர் பெண் கலியாணத்தின்போது ஒருகிழவன் பலவிதமான அக்கிரமங்கள் செய்தான். அந்தக்கிழவன்தானே என்று என்மாமனுர் இதில் எழுதியிருக்கின்றார். மேலும் அந்தக்கிழவன் ஒருவிதமான உடுப்பு அணிந்திருந்தானென்றும் தெரியவருகிறது.'

க-அட்வொ—அந்தஉடுப்பைப்பற்றிச்சொல்லிய பாகத்தை வாசியுங்கள்.

ரிஜிஸ்திரார் நோட்டுபுஸ்தகத்தைத் திறந்து வாசித்தார். "ஆலம் அண்டு கம்பெனியில் தைத்த உடுப்பு வீண்போகுமா! அதையணிந்தவுடன் உருவத்தையே மாற்றி விடுகிறது, போட்டுக்கொள்கிறதும் கழற்றுகிறதும்தான் கஷ்டம் தேகத்தோடு எவ்வளவு ஒத்தாற்போலிருக்கின்றது! நல்லவேடிக்கை! மீசை! கிழவன்! நன்றாய் ஏமாந்து போனுர்கள்'" என்றவுடன் க-அட்வொகேட் ஜெனரல் போதுமென்றார்.

க-அட்வொ—உங்கள் மாமனுர்தான் உங்களையடித்ததாகச் சொன்னீர்களே! வேறெவராவது இதேயுடுப்பை யணிந்துகொண்டு அடிக்கலாமே!

ரி—அவரிடத்தில் உள்ள உடுப்பும் புஸ்தகமும் அவரேகொடுத்தாலொழிய வேறு எவரும் எடுத்துப்போயிருக்கமாட்டார்கள்.

க-அட்வொ—அவருடைய தூண்டுகோலினுல் வேறு யாராவது அவற்றை யணிந்துகொண்டிருக்கலாம்.

ரி—இருக்கலாம்.

க-அர்பத்நட் எதிர்விசாரணை செய்தார்.

க-அர்—அவருடைய தூண்டுகோலினால் என்றீரே! அவருக்கும் உமக்கும் விரோதம் உண்டா?

ரி—இல்லை

க-அர்—சிறிதேனுமில்லையே?

ரி—கொஞ்சங்கூட இல்லை.

க-அர்—மிகவும் பக்ஷமாகத்தானே யிருந்தார்?

ரி—ஆம்.

க-அர்—அவ்வளவு பக்ஷமாயிருந்தவர் உமதுபேரில் யாரையாவது தூண்டிவிடுவானேன்?

ரி—அதுதான் தெரியவில்லை.

க-அர்—தெரியாதபொழுது அவர் தூண்டினார் என்று என்ன காரணங்கொண்டு சொன்னீர்?

ரி—உடுப்பும் நோட்டு புஸ்தகமும் அவருடைய கையைவிட்டு அவரது அனுமதியில்லாமல் போயிருக்கமுடியாது.

க-அர்—அவ்வளவு இரகஸியமான நோட்டுப் புஸ்தகத்தை வேறு எவரிடத்திலேனும் கொடுப்பாரா?

ரி—மிகவும் அந்நியோந்நியமாயிருந்தால் கொடுத்திருப்பர்.

க-அர்—இரண்டாவது கைதியும் முதற்கைதியும் அந்நியோந்நிய மானவர்களா?

ரி—எனக்குத் தெரியாது.

க-அர்—நீங்கள் என்னசொல்கிறீர்கள்? நோட்டுப் புஸ்தகத்தையும் உடுப்பையும் ஒற்றுமையுள்ள சிநேகிதனொருவனிடம் கொடுத்து உங்களை யடித்துவரச்சொன்னார்?

ரி—நானப்படி சொல்லவில்லை.

க-அர்—வேறு என்ன?

ரி—நோட்டுப்புஸ்தகமும் உடுப்பும் இவர் கொடுத்துத்தான், வேறு ஒருவன் கையில் போயிருக்கவேண்டும்.

க-அர்—யாராவது திருடிக்கொண்டு போயிருக்கக்கூடாதா?

ரி-திருடும்படியான இடத்தில் வைத்திருக்கமாட்டார்.

க-அர்—திருடும்படியான இடம் என்று உண்டா?

ரி—எங்கேயாவது ரகசியமான இடத்தில் வைத்திருப்பார்.

க-அர்--ரகசியமான இடத்தில் திருடன் வரமாட்டானு?

ரி—வரக்கூடும்.

க-அர்—திருடன் எடுத்துப்போயிருந்தாலும் இருக்கலாம்?

ரி—இருக்கலாம்.

க-அர்—உம்முடையபேரில் தூண்டிவிட்டிருக்கமாட்டார்?

ரி—தூண்டிவிட்டதற்குக் காரணம் தெரியவில்லை.

க-அர்—தூண்டிவிட்டிருப்பாரென்று நினைக்கிறீர்?

ரி—எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

கனம் அர்பத்நட் தம்முடைய எதிர்விசாரணை முடிந்ததாகக்கூறினுர்.

காருண்ணிமீனுன் எழுந்திருந்தார். இவர் முதல் கைதி திறத்து வக்கில் என்று கூற மறந்துபோனேம்.

காருண்—இரண்டாவது கைதி தூண்டினதாகக் கூறினீர்களே! முதற்கைதியைத் தூண்டியிருக்கமுடியுமா?

ரி—முதற்கைதியைப்பற்றி யெனக்கு ஒன்றும் தெரியாது.

காருண்—உம்மிடத்தில் விரோதம் ஒன்றுமில்லை?

ரி—விரோதமுமில்லை, சினேகிதமுமில்லை.

கா—இவ்வளவுதான் நான் கேட்கவேண்டியது.

க-அட்வொகேட் ஜெனரல் மறுபடியும் எழுந்திருந்தார், 'உம்முடைய மாமனுர் தூண்டியிருப்பரென்று உமக்குத் தோன்றுகிறதா?'

ரி—தோன்றுகிறது.

க-அட்வொ—எமது நண்பர் கேட்டபொழுது இல்லை என்றீரே?

ரி—காரணந்தெரியவில்லை யென்றேன்.

அவரும் உட்கார்ந்தார்.

ஜட்ஜி—நீங்கள் சொல்லுவது இதுதானே? 'உடுப்பு உம்முடைய மாமனாருடைய கையைவிட்டுப் போயிருக்கிறதைப் பார்த்தால் அவர் தூண்டியிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது, அதற்குக் காரணம் தெரியவில்லை.'

ரி—ஆம்.

ஜட்ஜி—நோட்டுப் புஸ்தகத்தை வேறொருவனிடம் கொடுத்ததற்குக் காரணமும் தெரியவில்லை?

ரி—ஆம்.

இத்துடன் ரிஜிஸ்திரார் விசாரணை முடிந்தது.

பிறகு இரண்டாவது சாக்ஷி, ரிஜிஸ்திரார் சேவகன். அவன் சொல்லியதாவது:—'நானு மென் எஜமானனும் ஜூன்மீ 5உ வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். ஸௌந்தரராஜ அக்கிரகாரத்தின் வழியாய்ப்போனோம். என்றைக்கும் அதன் வழியாய்ப்போவதில்லை. அன்றைய தினம் அவ்வாறுபோனோம். இன்னும் சிலநாட்களிலும் அம் மார்க்கமாய்ப் போவதுண்டு. வீட்டிற்குச் சிறிது தூரத் திற்கிப்பால் ஒரு கிழவன் ஓடிவந்து எஜமானனையடித்தான். அடிக்கும்பொழுது நான் அருகில் இல்லை. நான்முன்னாலே போய்க்கொண்டிருந்தேன். ஐயையோ என்று போடுகிற கூச்சலைக்கேட்டு அந்த இடத்தை நோக்கியோடினேன். எஜமானர் கீழே விழுந்திருந்தார், அவரைச்சுற்றி இரத்த வெள்ளமாயிருந்தது, கிழவன் கையைச் சேவகன் பிடித் திருந்தான். அவன்கையில் தடியொன்று இருந்தது. இதோ யிருக்கிறதுதானது. பிறகு ஒருவண்டியில் தூக்கிப்போட்டுக் கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தோம் அன்றையதினம் இராத் திரிமுழுவதும் நான் தூங்கவேயில்லை. கிழவன் கையில் நோட்டுப் புஸ்தகத்தை நான் பார்க்கவே யில்லை.

க-அட்வொ—அதோபார்! இரண்டுபேர் கைதிகள் நிற்கிறார்களே! யார் அந்த கிழவனாயிருக்கக் கூடும்?

ரிஜி-சே—எஜமாங்களுக்குத் தெரியாதா! அதான் லோகப்பிரசித்தமாயிருக்கிறதே!

க-அட்வொ—அதல்லடா! யாருக்குக் கிழவன் வேஷம் போட்டால் நீ பார்த்த கிழவன் போலிருப்பான்?

ரிஜி-சே—அது என்னுற் சொல்லமுடியாது.

க-அட்வொ—நான் கேட்கவேண்டியது இவ்வளவு தான்.

க-அர்பத்—உயரத்தில் நீ பார்த்த கிழவனைப்போல் இரண்டுபேரில் யாராவது இருக்கிறுர்களா?

ரிஜி-சே—உயரத்தில் நான் பார்த்தகிழவன் அதிகமா யிருப்பன்.

அவ்வளவுதான் அவர் கேட்டார்.

காருண்ணி ஒன்றுங் கேட்கவில்லை.

மூன்றுவது சாக்ஷி செல்லம் என்ற சுப்பிரமணி யன் அவன்தான் தன் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்குப் போனதாயும், போகும்வழியில் தன்னைப்பிடித்தாற்போன்று ஒருகிழவன் தடியுங்கையுமா யோடினதாயும், ஓடும்பொ ழுது நோட்டுப்புஸ்தகத்தைப்பற்றி யேதோ பேசினதாயும், ரிஜிஸ்திராரை யோடியடித்ததாயும், தான்முன் முதல் முதல் ஐயையோவென்று கதறினதாயும், பிறகு கும்பல்கூடினதா யும் சொல்வதற்குள், கோர்ட்டின்படிக் கருகில் 'வழியை விடடா! சண்டாளா!?' என்ற சத்தம்கேட்டது. கோர் ட்டிலுள்ளவர்கள் எல்லாரும் திகைத்தனர், பையன் தைரிய மாய் 'அப்படிக் கூச்சல்போடுகிறது என்தாயார். என்னை யெங்கே கொன்றுவிடப்போகிறீர்களோ வென்று அவள் பயப்படுகிறுள்' என்றுன்.

ஜட்ஜி யவளை யழைத்துவரச்சொல்லி பையன்பக்கத் தில் உட்காரவைத்தார்.

க-அட்வொ பையனைநோக்கி கைதிகையில் நோட்டுப் புத்தகத்தை நீ பார்த்தாயா? என்றுகேட்டார்.

பையன்—நான்பார்க்கவில்லை

க-அட்வொ—நோட்டு புத்தகத்தைப்பற்றி யென்ன பேசிக்கொண்டிருந்தான் கிழவன்?

பையன்—என்னவோ பேசிக்கொண்டேயிருந்தான், என் காதில் விழவில்லை.

க-அட்வொ—கிழவன் கையிலிருந்து நோட்டுபுத்தகத்தை பெறிவதைத் நீ பார்க்கவில்லையா?

பையன்—நான்பார்க்கவில்லை.

க-அட்வொ—என்விசாரணை முடிந்ததது.

அர்பத்நட் ஒன்றும் கேட்கவில்லை. காருண்ணிமீனனு மொன்றுங் கேட்கவில்லை.

நாலாவது சாக்ஷியை விசாரிப்பதற்குள் ஜட்ஜி கடிகாரத்தைப்பார்த்தார், 4-மணியாயிருந்தது, இரண்டாந்தரம் போஜனங்கூட இன்றித் தான் வேலைசெய்ததற்காக மிக்க வாச்சரியப்பட்டு 'இன்றைபதினம் இதுவரையிலும் போதும் பாக்கிசாக்ஷிகள் நாளையதினம் விசாரிக்கப்படும்' என்று எழுந்து போனார்.

இரண்டாவது கைதி நாராயணஸ்வாமியையருக்கு இராஜகோபாலையர் ஜாமீன் கொடுத்திருந்ததால், அவரை விட்டு விட்டார்கள். முதற் கைதியை மாத்திரம் ஜெயிலில் கொண்டுபோயடைத்தார்கள்

அன்றையதினம் சாயங்காலம் இராஜகோபாலையர் தன் பக்கத்து வீட்டு நாராயணஸ்வாமி அய்யரை யழைத்து வரும்படி தன் சேவகனையனுப்பினார்.

நாராயணஸ்வாமி அய்யர் பாரியாள் சுந்தரியம்மாள் கதவைத்திருந்தாள். சேவகன், 'நாராயணஸ்வாமிஅய்யர் இருக்கிறாரா,' என்றதற்கு 'இன்னும் வரவில்லை' என்று பதில் சொல்லிவிட்டு கதவைத் தாழ்ப்பாளிட்டுக்கொண்டாள்.

அன்றையதினம் இராத்திரி இராஜகோபாலையர் அகத்தில் மருமகப்பிள்ளை இராமஸ்வாமி அய்யருக்கு விருந்து நடந்தது. ரிஜிஸ்திரார் ஐயாஸ்வாமி அய்யர் தன்மாமனாரைக் காண்பதற்கு வெட்கமா யிருக்கிறதென்று புதுப்பாளையத்திலேயே ஒருஹோட்டலில் இருந்துவிட்டார்.

அன்றையதினம் இராத்திரி ஒன்பதுமணிக்குத் திரும்பவும் சேவகனையனுப்பி நாராயணஸ்வாமி அய்யரை பார்

க்துவரச்சொன்னர். சேவகன்தான் கதவைப் பத்து பதினை ந்துதரம் இடித்ததாகவும் யாதொருபதிலும் ஒருவரும் கூற வில்லை யென்றும் வந்துசொன்னன். இராஜகோபாலையர் தான் நாமீன்கொடுத்திருந்தபடியால் எங்கே யோடிவிடப் போகிறரோ எனப் பயங்கொண்டு திருமபவும் சேவகனை யனுப்பிக் கதவை யாரேனுந் திறக்கும்வரையும் இடிக்கும்ப டியாய்ச் சொல்லியனுப்பினர்.

சேவகன் மறுபடியும்போய்க் கதவைத் தட்டினன். 'ஓ! அம்மா! ஐயா! ஐயோ ஓஔவ்! ஓஅம்மோவ்! டப்டப்டப்! ஏஏஏ சுந்தரியம்மோவ்! ஓஓஓ நாராயண ஐயோ-! டப்டப்டப்! இருக்கேங்களா? போய்ட்டேங் களா! கைபோகுதே! ஓ அம்மோவ்! டப்டப்டப்டப்' என்பதற்குள் கும்பகர்ண நித்திரையினின்றும் எழுந்தவள் போன்று சுந்தரியம்மாள் 'யாரடாஅது?' என்றுகேட்டாள். 'உசிரோடிருக்கேங்களே! அதுவே போதும்! என்றான். சேவகன். 'என்னடா வேண்டும்?' என்று சிறிதுகோபத் துடன் கேட்டாள்.

'பலே கோபமாயிருக்குதே! கைநோவுது. எனக்குக் கோபம்வல்லே. நன்ஞய்ப் படுத்துக்கிட்டு இருந்தூட்டு பலே கோபமாயிருக்கே!' என்றான் சேவகன்.

'வேண்டியதைச் சொல்லடா!' என்றாள் மறுபடியும், 'ஐயாயிருக்காங்களா?' என்று சேவகன்கேட்டான். 'ஐயா வுக்கு சுரம். படுத்திருக்கிறார்' என்றாள்.

'இதுக்குத் தானம்மா கூப்பிட்டேன்! இம்மே சும்மாப் படுத்துக்குங்க!' என்று இராஜகோபாலையரிடத்தில் செ ன்று 'அவருக்கு ஜுரமுங்களா' என்றான். வீட்டிலிருக் கிறது போதும் என்று தன் கவலையை நீக்கினர்.

மறுநாள் விடியற்காலமே குடுகுடுப்பாண்டி யொருவன் நாராயணஸ்வாமியையர் வீட்டினெதிரில் நின்றுகொண்டு 'சுகம்வருகுது! சுகம்வருகுது! குடுகுடுகுடு. இந்த வீட்டு ஐயாவுக்குத் தாசில்வேலை யாகப்போகுது! தாசில்வேலை யாகப்போகுது! இந்தவீட்டு ஐயா சுகம்மா இருக்கணம்!

(கதவைத் திறந்துகொண்டு சுந்தரியம்மாள் வருவதைப் பார்த்து) எங்கம்மாளைப்பார்த்தா இராஜாத்திபோலே இருக்குது! இந்த அம்மா கையினாலே ஒரு வஷ்தரம் கொடுக்க வேணும்! ஒரு வஷ்தரம் கொடுக்கவேணும்! குடுகுடுகுடு இந்த அம்மா தங்கக்கையினாலே! தங்கக்கையினாலே ஒரு வஷ்தரம், கிழிஞ்சவஷ்தரம் கொடுக்கவேணும்! இந்த அம்மா முகத்தைப்பாத்தாலேஎஎஎஎ போதும்! என் அம்மா! குடுகுடு— என்பவனை நோக்கி சுந்தரியம்மாள் 'போடா! போ! இங்கே கிழிந்தவேஷ்டியேயில்லை! உனக்காக புதுவேஷ்டியைக் கிழித்துக் கொடுக்கவேண்டும்! போ! போ!' என்றாள். அவ்வாண்டி 'உங்க தங்கவாயினாலே தங்கப்பேச்சு பேசினீளே! அதுவே போதும்! நீங்க ஒண்ணுங் கொடுக்கவாணும்! தேவாமுருதம்! தேவாமுருதம் போலே யிருக்குது உங்கபேச்சு! குடுகுடுகுடுகுடுகுடு— என்று இன்னுமுரக்க அடித்தான். 'இதேதுடா இது தலைவேதனை என்று சுந்தரியம்மாள் கதவைத்தாழ்ப்பாளிட்டுக்கொண்டு உள்ளேபோய்விட்டாள், 'குடு குடு குடு' என்று ஒரு நிமிஷம் வரையிலும் அடித்தும் ஒருவரும் பதில்சொல்லாததினாற் கோபம்வந்து, 'இழவுபுறப்படுது! இழவு புறப்படுது! இன்னிய தினத்துக்குள் இழவு புறப்படுது! சாயந்திரத்துக்குள் இந்த வீட்டுலே புணம் புறப்படுது! புணம் புறப்படுது! என்று தன் உடுக்கையினால் உரக்க அடித்துக்கொண்டே போய்விட்டான்.

அன்றையதினம் 7-மணிக்குத் தேயிலைத் தண்ணீர் தயாராக்கிவைத்துக்கொண்டு இன்னும் நாராயணஸ்வாமியையர் எழுந்திருக்கவில்லையே யென்று சுந்தரியம்மாள் அவர் படுத்திருந்த அறையின்கதவைத்திறக்கச் சென்றாள். அது உள்ளே தாழ்ப்பாள் போட்டிருந்ததைக் கண்டு இரண்டு மூன்றுதரம் மெதுவாய்த்தட்டினாள். அதற்கும்ஒன்றும் பதிலில்லாமற்போகவே உரக்க இடித்தாள். அதற்கும் பதிலைக் காணோம்.

'நேற்றையதினம் இரண்டுமணிவரைக்கும் இராத்திரி விழித்திருந்தாரே, அதனாற்றான் விழிக்கவில்லையோ ஒரு

வேளை' என்று தன் மனதிலெண்ணிக்கொண்டு இராஜகோபாலையர் சேவகன் கதவைத்தட்டியதினும் பதின்மடங்கு அதிகபலமாகத் தட்ட வாரம்பித்தாள். அதற்கும் பதில்வரவில்லை. வேடிக்கை யிப்பொழுதுதான் செய்கிறது! மணி 7 ஆயிற்றே! வேண்டுமென்று படுத்திருந்தால் நானென்ன செய்வேன்' இராஜகோபாலையரிடத்தில் பயமாயிருந்தால் நானெழுப்பினால் எழுந்திருக்கக்கூடாதா? டீ வைத்து ஆறிப்போகின்றது, எழுந்திருங்கள்!' என்று கதவையிடித்தாள். அதற்கும் பதிலில்லை.

'நேற்றைய இராத்திரி இராஜகோபாலையர் சேவகனிடத்தில் ஜுரம் என்று சொல்லச்சொன்னாரே? உண்மையிலேயே ஜுரம் வந்துவிட்டதோ? காலையில் சனீஸ்வரன் போலே அந்தச் சண்டாளன் வந்து இழவுபுறப்படும் என்றேனே, ஐயையோ! ஈசுவரா! என்னைத்தெருவில் விடவேண்டாம்!' என்று இராஜகோபாலையர் அகத்திற்கோடி காமாக்ஷியம்மாளிடம் தான் பார்த்தா படுக்கையறைக் கதவை யிடித்ததாகவும், ஒருபதிலும் யாரும் சொல்லாததாகவும் கூறினாள். காமாக்ஷியம்மாள் அதை இராஜகோபாலையரிடத்திற் சொல்லவே, இராஜகோபாலையர் சென்று அதே கதவைத் தட்டினார், பதிலில்லை. ஜன்னற் கதவைப்போய்ப் பார்த்தார், அது உட்பக்கத்தில் சங்கிலியிட்டிருந்தது. அதை 10-தரம் தட்டினார் பதிலில்லை பிறகு இரண்டு தச்சர்களையழைத்துவரச்சொல்லிச் கதவைப் பெயர்க்கச்சொன்னார்.

ஒன்றாயிருந்த கதவை 10, 15-ஆய்ச்செய்து உள்ளே சென்றதும் அடடா! நாராயணஸ்வாமியையர் தீராத்துயிலில் அமர்ந்து ஊசலாடுவதைக்கண்டார் இராஜகோபாலையர். ஜன்னல் கதவைத் திறந்ததும் உள்ளே இருக்கிற விஷயம் நன்றாய் வெளிப்பட்டது.

உயர்ந்த உத்திரத்திலுள்ள கொக்கியொன்றில் ஓர் அங்கவஸ்திரம் கட்டியிருந்தது. அந்த அங்க வஸ்திரத்திற்கு இன்னும் ஒரு நுனி நாராயணஸ்வாமியையர் கழுத்தில் மாட்டியிருந்தது. கட்டிலில் மெத்தை, தலையணைகள் போட்டபடியே இருந்தன. ஒரு மேஜையின்மேலில் விளக்

கொன்று அணைத்து வைத்திருந்தது அதே மேஜை யில் கடிதம் ஒன்று முத்திரைபோட்டு 'இராஜகோபாலையர் என்று மேல்விலாசம் எழுதிவைத்திருந்தது. கடிதத்தை யெடுத்துத் தன் பையில் போட்டுக்கொண்டு தன் மருமகப் பிள்ளையும் தானுமாக நாராயணஸ்வாமியையர் கழுத்தில் சுருக்கை யவிழ்த்தார். பிராணன் முன்னாலேயே போய் விட்டதென்று வைத்தியரைக் கூப்பிட்டுவரச் சொன்னார். வைத்தியரும்வந்து மூன்றுமணி நேரத்திற்கு முன்னாலேயே பிராணன் போயிருக்கவேண்டுமென்று கூறினார்.

அப்புறம் நடந்ததைச் சொல்லவேண்டுமோ? மார் பிலும் வயிற்றிலும் எல்லாரும் அடித்துக்கொண்டதும், மீனாக்ஷி ஓடிப்போனதைவிட அதிகமாகக் கும்பல்கூடியதும், புருஷர்கள் எல்லாரும் வாசற்றிண்ணையி லுட்கார்ந்திருந்த தும், இடைகழி முதற்கொண்டு தாழ்வாரம் வரைக்கும் பெண்டுகளுட்கார்ந்ததும், நாரர்யணஸ்வாமியையர் பிள்ளை கருமஞ்செய்ததும், நெருப்புப்போட்டதும் இவைகளெல் லாம் நான் சொல்லாமலே படிப்பவர் அறிந்துகொள்வார்கள்.

அன்றையதினம் இராஜகோபாலையர் கோர்ட்டிற்குப் போகவில்லை. இடுகாட்டிலிருந்து வருவதற்கே இரண்டுமணி யாயிற்று. பிறகு போஜனத்தை முடித்துக்கொண்டு தனி யாய் தன் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து காலையில் தன் அரைச்சொக்காய்ப்பையில் போட்டிருந்த கடிதத்தை எடுத் துப்படிக்க ஆரம்பித்தார். அதை வாசிப்பதற்கு 1 மணி நேரம்பிடித்தது என்றால் அதன் நீளத்தைப்பற்றி நான் கூற வேண்டியதில்லை. அவ்வளவு பெரிய கடிதத்தை இதே அத் தியாயத்தில் போடுவதை விட வேறு அத்தியாயம் ஆரம்பிப் பது உசிதம் என்றுகருதி இவ்வத்தியாயத்தை முடிக்கிறேன்.

15-வது அத்தியாயம்.

உண்மையறிவு.

இராஜகோபாலையருக்கு நாராயணஸ்வாமியையர் எழுதியகடிதம் வருமாறு:—

ஐய! தாங்கள் செய்த குற்றங்களைத் தாங்களே வெளியிடுபவர் இவ்வுலகில் சிலர்தானுள்ளர். அச்சிலரும் அவ்வாறு வெளியிடுவதற்குக்காரணமாகப் பிறராவதுஇவ்விதம் செய்யாமலிருக்கட்டும்என்கின்றனர். யான் அத்தகைய மனுஷர்களிலொருவன் அல்லன். என்போல் யாதொரு முகாந்தரமுமின்றிக்கையொன்றே நன்பயனுகக்கொண்டு இவ்வளவு தீமைகளைப்புரிந்தவர் எங்கும் எக்காலத்தும் இலர் என்பது திண்ணம். ஆகவே யான் செய்த குற்றங்களை யானே வெளியிடுவதென்னெனின் என்னிட்டம் என்க.

யானிதற்குச் செலுத்திய புத்தியும், யுத்தியும், வேறே நல்விஷயம் எதற்கேனும் செலுத்தியிருப்பனேல் புரவலரும் பாவலரும் புகழும புனிதனுய் விளங்குவனென்பதற்கையமில்லை. அவ்வாறிருக்க, என் தீவிஷயத்தில் செலுத்தினேன் என்பீரேல், அதற்கு உத்தரம் யான் இயம்பேன் எனமனம் அவ்வாறிருந்த தென்க.

யான் பிரவேசபரீக்ஷை வரைக்கும் படித்தேன். அப்பரீக்ஷையிலும் தேறினேன். உங்களுக்கே தெரியவாலாம் முதல் வகுப்பில் தேறினேனென்று.

கும்பகோணத்தில் அவ்வகுப்பில் யான் படிக்கும் பொழுது எனக்கு வயது 20-இருக்கும் என் பக்கத்தில் ஓர் உபாத்தியாயர் இருந்தனர். அவர் குமரி அதிரூபவதியாயும் இராதை யென்னும் நாமதேயத்தை யுடையவளாயும் இருப்பதை யான்கண்டு உருவிலான் புட்பபாணங்கள் என் மனதைத் துளைக்க அந்நுண்ணிடையை, யாருமிலாவமயத்தில் யான்கண்டு என்கருத்தை வெளியிடவே, அப்பாவையும் என்மனதிற் கிசைந்தனள்.

இருமாதங்கருவுற்ற அத்தையலே, கழுத்திற் றாலிகட்டிய சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு சாந்திமுகூர்த்தம்

செய்து, பெற்றோர்கள் என்னை யவ்விடம் விட்டோடா விடின், உலகத்தவர் தூற்றும்படி செய்விப்பதாகப் பயமுறுத்தினர். உடனே யானும் என்பெற்றோர்களும் இவ்வூர் வந்து சேர்ந்தனம்.

சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு சாந்திமுகூர்த்தம் நடந்த எட்டாம்மாதம் இராதையம்மாள் ஓர் குமரியை ஈன்றாள். அக்குமரிக்கு அவர்கள் ஞானமெனப் பெயர்வைத்தனர். ஆகவே உம்முடைய மருமகப்பிள்ளை எனக்கும் மருமகப்பிள்ளை யாதல்காண்க.

பிறகு என் முழுக்கவனத்தையும் செலுத்தி யான் சாதுரியமாக இயற்றிய குற்றங்களும் தீமைகளும் பல. யான் செய்த அத்தீமைகளைக் கண்டவருமில், இனிக் காண்பவருமில். அவைகளை உம்மிடத்தில் சொல்லிப்பயனில்லை யாதலின் வாளாவிட்டு உம்முடைய பெண் மீனாக்ஷிக்குக் கலியாணம் நடந்த காலத்திற்கு வருவன்.

என்குமாரனுக்குத் தங்கள் குமரியைக் கொடுக்கும்படியாய் வேண்டியது தாங்களறிந்த விஷயம்.. கொடுக்கமாட்டீரென்று நன்றாய் யானறிந்திருந்த போதிலும் ஒருவேளை சம்மதிக்கமாட்டீரா வென்று வற்புறுத்தினன். அதற்காகவே அவன் கையில் தங்கக்காப்பும் போட்டனன். அவனுக்குச் சம்பளமுங்கொடுத்துப் படிக்கவும்வைத்தேன்.

தாங்கள் கண்டித்து மறுத்தீரோ, பிழைத்தீரோ! உண்மையை விசாரிக்குங்கால், உமது குமரியை யென் மகனுக்கு யான் வேண்டியது எனக்குப் பயன்படும் எனக்கருதி.

நீங்கள் மறுத்துவிட்டீராதலின் எவ்விதத்திலேனும் கலியாணத்தை நிறுத்திவிடவேண்டுமென்று யானெண்ணங்கொண்டு உமது சம்பந்திக்கு ஓர் தந்தி யடித்தனன். அதை நம்புவார்களோ மாட்டாரோ வென்று உமது குமாரன் சேஷையருக்கு மொன்று அடித்து அவரையே சம்பந்திக்கும் தெரிவிக்கும்படியாய்க் கூறினேன். நீர் நேரே தந்தியாபீஸுக்குச் சென்று அடித்தது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் வேறுவிதமான ஏற்பாடுகள் செய்

திரும்பேன். அந்தத் தந்தி விஷயங்கள் உமக்கு நன்றாய்த் தெரியும்.

சம்பந்திகள் வரமாட்டாரென்றெண்ணியிருந்த யான், வருவதைக்கண்டு மிக்க கோபமடைந்து இன்னும் புதிய ஏற்பாடுகள்செய்ய வாரம்பித்தனன்.

மூன்றுநாள் காசிமாலையைத் திருடியது நானன்று. திருடுகிற வெண்ணத்தோடு நான் வரவில்லை. என்வீட்டிலிருந்த எல்லாரும் உமது வீட்டிற்குச் சாப்பிட வந்துவிடவே, நானும் வீட்டைப்பூட்டிச் சாவியை யெடுத்துக்கொண்டு உங்கள் வீட்டிற்கு வந்தேன். ஒருவரையுங் காணேம், நீங்களெல்லாரும் சம்பந்தி யிறங்கியிருக்கிற அகத்தில் உட்கார்ந்திருந்தீர்கள் இரேழியுள்ளே யாராவது இருக்கிறார்களாவென்று பார்த்தேன். ஒருவரையுங்காணேம். கட்டிலில் காசிமாலை வைத்திருந்தது. இரேழியின் கதவு சாத்தியிருந்தது. உள்ளே பெண்டுகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். என் சாவி சரியாயிருக்கிறதாவென்று பார்த்தேன். சரியாயிருந்ததுமன்றிக் கதவுந்திறந்தது, உள்ளே நுழைந்தேன், நுழைந்து காசிமாலையைத் தொட்டிருப்பன். யாரோ வருவதாக சப்தங்கேட்டது, என்பாட்டிற்குக் கட்டிலில் உட்கார்ந்துவிடலாம் என்னை யொருவரும் சந்தேகிக்கார். ஏதோ புத்தியீனத்தினால் பீரோவிற்கும் சுவரிற்கும் உள்ள இடத்தில்போய்ப் புகுந்துகொண்டேன். உள்ளே நுழைந்தது லக்ஷ்மி அம்மாள் என்பது எனக்கிப்பொழுது தான் தெரியும். அவள் நகையை இரண்டு தலையணைகளின் நடுவில் வைத்துப்போய்விட்டாள். பிறகு யானுமதை யெடுத்துக்கொண்டு போய்விட்டேன். எனக்குப் பணமில்லாததினால் நான் திருடவில்லை, வேடிக்கையினிமித்தமே திருடினேன்.

கலியாணம் நான்காம்நாள் மாலை 4-மணி முதற்கொண்டு இரவு 4-மணிவரையிலும் நான் அலைந்த அலைச்சலும் செய்த செய்கையும் வேறு எவராலுஞ்செய்யமுடியாது. 4-மணிக்கு மருமகப்பிள்ளை சம்பந்தி யகத்துவாசலில் தனியாய் நிற்பதைக்கண்டேன். ஆற்றுக்குப் போவோம் வரு

கிறாயா என்று கேட்டேன், சம்மதித்தவுடன் நான் ஏதோ காரியம் இருக்கிறது வரவில்லையென்றுவிட்டு உள்ளே போய்விட்டேன். உள்ளேசென்று கதவையெல்லாம் மூடி விட்டு எனது பெட்டியைத்திறந்து எண்ணெய்த் துணியினால் செய்திருந்த சொக்காயை யெடுத்தேன். இது நானிருபத் தைந்து வயதாயிருக்கும்பொழுது தைத்தது. இது உச்சந் தலை முதற்கொண்டு உள்ளங்கால் வரையிலும், மூடிக்கொள் ளும் கண், மூக்கு வாய், மூன்றிற்கு மாத்திரம் இடமிருக் கும். கிழவன்போலிருக்கும் அதைப் போட்டுக்கொண்டு விட்டால். அதை ஐந்தாறு பக்கத்தில் சேர்த்துத் தைத் திருக்கும், தனித்தனியாய்ப் பிரித்துவிடலாம். முகத்தில் சுருக்கங்களிருக்கும். தலையில் சிறிது மயிரிருக்கும். ஒரே மாதிரியாயிருந்தால் சந்தேகத்திற்கு இடமுண்டாகுமென்று மயிர் இருக்கவேண்டிய இடங்களில் மயிர்போல் நீண்டிருக் கும். தேகத்தோடுதேகம் ஒட்டினதாயிருக்கும். ஆஹா! அந்த சொக்காய் இப்பொழுது இருந்தால் உமக்குக் காண் பித்திருப்பேன். அந்தோ! கொளுத்திவிட்டேன். கொ ளுத்தின சந்தர்ப்பமுந் தெரியவரும்.

அச்சொக்காய் பட்டணத்திலோர் தையற்காரக் கம் பெனியில் தைத்தது இருநூறு ரூபாய் கொடுத்தேன், அந்த சொக்காய்க்கென்று இனாமாக வேறு நூறு ரூபாய் கொடுத் தேன். அவர்கள் இது உனக்கு ஏன் என்பதற்கு வேடிக் கைக்காகவென்றேன். எவ்வளவு அழகாயிருக்கும் அச் சொக்காய்! ஐயோ! போய்விட்டதே! சொக்காயும் அல்ல நிஜாருமல்ல! குல்லாயும் அல்ல! முகமூடியும் அங்கியுமல்ல! கால்மூடியும் செருப்புமல்ல! கைமூடியும் அங்கியுமல்ல! எல் லாம் சேர்ந்து ஆஹா! எனக்கு எல்லா துக்கத்தினும் இது வே மேலாயிருக்கின்றது.

அவ்விதமான சொக்காயை மேலே தரித்துக்கொண்டு வாசலிற்சென்றேன். அங்கு ஒருவருமிலாதகவே, வெளி யிற்போய் மருமகப்பிள்ளையைக்கண்டு ‘சாமீ! ஆற்றங் கரைக்குப்போகிறவழி யிதுதானே?’ யென்று கேட்டேன். பிறகு எனக்கும் மருமகப்பிள்ளைக்கும் நடந்த சம்பாஷணை

யை நீர் அவர் வாக்கினாலேயே கேள்விப்பட்டிருக்கிறீர், நான் மருமகப்பிள்ளையினிடம் கொடுத்த கடிதத்தையும் நீவிர் அறிவீர். மருமகப்பிள்ளையையாற்றங் கரைவரையும் அழைத்துப் போனகாரணம் அன்றையமுழுவதும் அவரை யொளித்துவைத்து வேடிக்கை பார்க்கவேண்டுமென்பதே.

இராமஸ்வாமியை இரண்டு மைல்தூரம் வரையிலும் கடிதம் எழுதினவனைக் காட்டுவதாகக் கூறியழைத்து வந்து, பிறகுயாருமில்லாத இடம் பார்த்து, விட்டுவிட்டு, நான் வந்துவிட்டேன். ஊருக்கு அரைமைல் இப்பாலேயேகிழவன் வேஷ உடுப்பைக்கழற்றி அடையாளமாயும் இரகசியமாயும் உள்ளதோரிடத்தில் வைத்துவிட்டு என் சுபாவமான உடுப் பைத்தரித்துக்கொண்டேன். நான்கிழவன்வேஷம் தரித்திரு க்கும் போதெல்லாம் என்கையில் ஒருமூட்டை வைத்திருப் பேன். அம்மூட்டையில் என் சாதாரணவேஷ்டியும் அங்க வஸ்திரமும் இருக்கும். சிலசமயங்களில் அந்த மூட்டை யைத்தலையில் முண்டாசுபோல சுற்றிக்கொண்டிருப்பேன்.

கிழவன் பிராமணனாகி நான் சென்றபோது மருமகப் பிள்ளையைப்பற்றியேதோ பேசிக்கொண்டிருந்தீர்கள், நானு முங்களுடன்கலந்துகொண்டு மருமகப்பிள்ளையைத் தேட வாரம்பிப்பதற்கு யத்தனங்கள் செய்தேன். நான் கருடநதி போவதற்கு ஒத்துக்கொண்டகாரணம் என் வேஷஉடுப்பு கள் அவ்விடம் இருப்பதனாலென்று இப்பொழுது நீங்கள் நன்றாயறிவீர்கள்.

கருடநதியைப்பார்க்கச் சிறிதுதூரம் சென்றதும் என் னுடன் வந்த சேவகர்களைத் தனித் தனியே வெவ்வேறு வழிகளில் போகச்சொல்லிவிட்டு நான் என் உடுப்புவைத் திருக்கும் மரப் பொந்திற்குச்சென்று அதையணிந்து கொண்டுஇயற்கை யுடுப்பை யங்கே வைத்தேன்.

பிறகு கருடநதியோடுபோய் அக்கரைதாண்டி தந்தியா பீசிற்குச்சென்று தஞ்சாவூர் நாகஸ்வாமி ஐயருக்கு சம் பந்தி வீராசாமியையர் தந்தியடித்ததுபோல் ஒன்று எழுதிக் கொண்டு அவர்களிடம்கொடுத்து ஒரு ரூபாயையும் கொடுத்து இதையயா யடித்துவரச்சொன்னார் என்று

விட்டுத்திரும்பவும் கருடநதியைத்தாண்டி ரயில்டேஷனுக்கு சமீபத்திற்செல்லும்பொழுது வீராசாமியையருடைய சேவகர்களைக் கண்டேன். அவர்களுக்கருகில் வீராஸ்வாமியையரிருப்பரென்று அக்கம்பக்கம் பார்க்கையில் ½-மைல்தூரத்தில் மெழுகுவர்த்தி விளக்கைக்கண்டு அதையுடையவர்தான் வீராஸ்வாமி யையரென நிச்சயம் செய்துகொண்டு அவர் பின்னால்போய் என்கையிலிருந்த தடியினால் ஓங்கியடித்தேன்.

அவரைக் கொல்லவேண்டுமென்பது என் எண்ணம் அல்ல. நான்செய்த கடோரமான பல குற்றங்களிலும் கொலையென்பதொன்றல்ல. அன்றேல் எதற்காக அடித்தேன்? வேடிக்கையின் பொருட்டென்க. அவரையடித்துவிட்டு அங்கிருந்தபடியே கருடநதியோரமாய் ஓட்டமாய் ஓடி என் சுபாவமான உடுப்பை எடுத்துக்கொண்டு திருவகீந்திரபுரம் போகும்சாலையை யணுகி அதன் சமீபத்தில் உண்மையான உடுப்பை வைத்துவிட்டு அங்கே கட்குடித்தவன்போல் சாலையில் போய்க்கொண்டிருந்தேன். பெரிய இராமஸ்வாமி யையரைக்கண்டு அவருடன் நடித்தது உமக்குத் தெரியும். மருமகப்பிள்ளையை யடிக்கும் போக்கிரிகளிருக்கிறார்களாவென்று பார்த்துவருவதாகச் சொல்லி என் உண்மை யுடுப்பைத் தரித்துக்கொள்ளப்போனேன், தரித்து கிழவனினின்றும் நாராயணஸ்வாமி யையராகி தங்கள் தம்பியரிடம் வந்து நானும் அதேகிழவனைப் பார்த்ததாகவும் அவன் வஞ்சனைக்காரனென்றுஞ் சொல்லி சேவகர்களைக் கிழவனைப் பார்த்து வரும்படிக்கு அனுப்பிவிட்டேன்.

பிறகு ஏதோசத்தம் கேட்கிறதென்று நானுமெழுந்துபோய் கிழவன்வேஷம் தரித்து மறுபடியும் இராமஸ்வாமியையரிடம் வந்தேன்.

இராமஸ்வாமியையர் கிழவனை விடக்கூடாதென்று என்கையை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார். நான் மறுகையினால் என்னிடத்தில் இருந்த க்ளோரோபாரத்தை (Choloform) அவரது மூக்கினெதிரில் பிடிக்கவே மூர்ச்சையாய்க் கீழேவிழுந்தார், அவருடைய அரைஞாணையும்

கடுக்கனையும் கழற்றிக்கொண்டுபோய் மறுபடியும் பிராமணனானேன்,

கிழவனாயிருந்து பிராமணனாவதும், பிராமணனாயிருந்து கிழவனாவதும் வாயினால் சொல்வது சுலபமாயிருக்கிறதேயொழிய செய்வதற்கு கால்மணிநேரம் பிடிக்கும்.

அன்றையதினம் நான் ஆறுமுறை வேஷமாற்றினேன்.

அன்றையதினம் நானலைந்தது 12-மைல் இருக்கும். இவ்வளவு கருமசிரத்தையோடு செய்வானேன் என்று கேட்கலாம், நான் அதற்குப் பதிற்சொல்ல பாத்தியப்பட்டவனல்லேன்.

மருமகப்பிள்ளை மறுநாள்வரைக்கும் வரானென்று எண்ணி இராமஸ்வாமியையரை நான் வெகுநாழிவரைக்கும் திருவகீந்திரபுரம் ரோட்டிலேயே பேசிக்கொண்டிருக்கச்செய்து. பிறகு இருவரும் எழுந்துவந்தோம். வந்ததும் ஆசீர்வாதத்திற்குத் தயாராயிருப்பதைப் பார்த்து சிறிது ஆச்சரியப்பட்டேன், மறுநாள் நாகஸ்வாமி ஐயருக்கு ஒரு கடிதம் எழுதினேன், அதன்விஷயமும் நீங்கள் அறிவீர்கள். கடிதங்கள் எழுத்து பலவிதமாயிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டீர்கள். நான் பத்துவிதமான எழுத்து எழுதுவேன். கலியாணமும் கிரகப்பிரவேசமும், நான் அனேக இடையூறுகள் செய்தும், தாங்கள் செய்த புண்ணியத்தினால் தடைபடாமலே நடந்துவிட்டன. பிறகு நாயகனுக்கும் நாயகிக்கும் இடையூறு விளைவிப்பான் கருதினேன். கலியாணத்தின் போது இடையூறுகள் செய்த கிழவன் அகப்படாமற்போனால் பிறகு எவ்வளவு தீமைகள் செய்தாலும் அந்தக்கிழவன் செய்ததாகவே ஏற்படுமென நினைத்து, அந்தக்குற்றங்களைச் சாற்றுவதற்கு ஒரு தக்க மறுவியினைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தேன்.

கலியாணமாகி நான்குநாள்கழித்து சூரப்பநாயக்கன் சாவடி மார்க்கமாய் கூடலூருக்கு ஒருநாள் இராத்திரி 10-மணிக்கு கிழவன்வேஷந்தரித்து நான் போய்க்கொண்டிருக்கையில், ஒரு கிழவன் சுருக்கு மாட்டிக்கொண்டு கிணற்

றில் விழத் தயாராயிருப்பதைப்பார்த்தேன். அவனைக் காரணங்கேட்டதற்குத் தன்னிடத்தில் சொத்தொன்றுமில்லையென்றும், தான் கிழவனாகிவிட்டதாகவும், தன்னால் வேலை செய்ய முடியவில்லை என்றும், தன்பெண்டாட்டியும், பிள்ளைகளும் பட்டினிகிடப்பதைப் பார்ப்பதைவிடச் சாவதே நலமென்றும் கூறினான். நம்முடைய எண்ணங்களுக்குத் தக்கவன் இவன்றானென்று நினைத்து, நான்சொல்லுகிறபடி செய்தால் அவனுக்குத் தருந்த இனம் கொடுக்கிறதாகச் சொன்னேன். அவன் முதலில் தயங்கி பிறகு ஒத்துக்கொண்டான் தினந்தோறும் இராத்திரி 10-மணிக்கு அவன்வீட்டிற்குப்போய் 12 - மணிவரைக்கும் பாடம்பண்ணிவைத்தேன் நான்செய்த குற்றங்களையெல்லாம் சொல்லிக்கொடுத்து, இப்படிக்கேட்டால் இப்படி பதிற்சொல் அப்படிக்கேட்டால் அப்படிபதிற்சொல் என்று கிளிக்குச் சொல்லிக்கொடுப்பதுபோல் சொல்லினேன். பூலோகமுழுவதும் தேடித்திரிந்தாலும் அவனைப்போல முட்டாள் அகப்படவே மாட்டான். எத்தனையோதரம் சொல்லிக்கொடுத்து எத்தனையோகேள்விகள் கேட்டும் விசாரணையின்போது அவன் உளறினது தங்களுக்குத் தெரியும் எவ்வெவ்விதமாய்க் கேள்விகள் கேட்டபோதிலும் பதிற்சொல்ல சொல்லிக்கொடுத்தேன்.

இவ்வளவும் செய்ய அவன் ஒத்துக்கொண்டது நான் கொடுத்த 500-ரூபாய் கூலிக்காகத்தான். பின்னும் நான் 200-ரூபாய் பரிசளிப்பதாய்ச் சொல்லியிருந்தேன்.

அவனே யொத்துக்கொண்டால் நம்புவார்களோ வெனக்கருதி அவன் வீட்டுப்பானைகளிலொன்றில் தடையமாக ஒரு கடுக்கனையும் போட்டுவைத்தேன். அந்தப் பானையுள்ள வரிசைதவிர மீதிவரிசைகளில் நாங்கள்தேடி, அவ்வரிசையில் உங்களையேதேடும்படி விட்டேன்.

ஆகவே சோதனையின் முதனாள் சாயங்காலம் நான் தங்களிடத்தில் சொன்னதெல்லாம் பொய்.

700-ரூபாய் செலவழித்தும் உத்தண்டியை ஒத்துக்கொள்ளும்படியாய் எவ்வளவோ ஏற்பாடுகள்செய்தும்

தடையாய்க் கடுக்கனையும் போட்டிருந்தும் இவ்வளவு சிரமங்கள்பட்டும் கிழவன் பைத்தியம்போற் பதிற்சொன்னதால் அவனை மாஜிஸ்திரேட்டார் இரண்டு மாதம் டாக்டர் பரிசோதனையின்கீழ் வைத்தார் அதன்மேல் எனக்குண்டான விசனத்திற்குக் கேட்பானேன்.

நான்செய்த அடுத்தசெய்கை சிறிது விந்தையாயும் சாதுரியமாயுமிருக்கும். தங்களுக்குமெனக்கும் மருமகப்பிள்ளையாகிய இராமஸ்வாமியையர் தீபாவளியின்போது இவ்வூர் வந்திருக்குங்கால், தங்கள்பெண் மீனாக்ஷி யெழுதினதாக வொருகடிதம் எழுதி மருமகப்பிள்ளை தூங்கும்போது அவர் புத்தகத்தில் வைத்துவிட்டேன், அக்கடிதம் தங்கள் மருமகப்பிள்ளையினிடத்திலிருக்கும். கேட்டால் தெரியவரும். அதிலுள்ள சில விஷயங்களினால் நான் பிறர் மனதிலுள்ளதைச் சொல்லத்தக்க அவ்வளவு வல்லவனோவெனச் சிலர் யோசிக்கலாம். ஆனால் உண்மையதன்று. இராமஸ்வாமியும் மீனாக்ஷியும் பந்தாடும்பொழுது இராமஸ்வாமிபந்து மீனாக்ஷியின்மேல் பட்டதும், மீனாக்ஷி யழுததும், இராமஸ்வாமி கோபமாயிருந்ததும் நான்பார்த்திருந்தேன். பிறகு ஒருநாள் இராத்திரி சில துட்டக்குட்டிகள் கூந்தலையும் வஸ்திரத்தையுமுடிய அப்பொழுதும் மருமகப்பிள்ளை கோபித்ததை நான் பார்த்தேன். இவ்விரண்டு விஷயங்களையும் வைத்துக் கொண்டு நான் எழுதிய பொய்க்கடிதத்தை யுமது பெண் மருமகப்பிள்ளையின்மேல் சாற்றுவதாய் நானே கற்பித்துக் கொண்டு, உமது மருமகப்பிள்ளை இரண்டாவது கலியாணம் செய்துகொள்ளப்போகிறதையும் நானே யேற்பாடு செய்துகொண்டு தந்திரமாயும் செந்தமிழாயும் ஓர் கடிதம் எழுதினேன். என் சாமர்த்தியம் தெரியவேண்டுமேல் அந்தக் கடிதத்தையும் பின் நான் சொல்லப்போகிற மறு கடிதத்தையும் பாருங்கள்.

மறு கடிதத்தின் விவரத்தையாராய்வதன் முன்னே எனக்குத் தோழனொருவனுளனென்பதைக் கூறுவன். நான் கும்பகோணத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது எனக்கு ஒரு சிநேகிதனிருந்தான். அவனுக்கு லக்கு எனப்

பெயர். இவன் சமையல் வேலையில் மிகத்தேர்ந்தவன். இவனும் இவன் சிநேகிதன் மற்றொருவனும் சீட்டாட்டத்தைப் பற்றிச் சண்டை செய்துகொண்டிருந்தனர். சமீபத்தில் ஒரு கிணறு இருந்தது. அக்கிணறு இருந்தது இவர்கள் துரதிர்ஷ்டத்தினாலென நினைக்கிறேன். ஏனெனில் இவர்கள் சீட்டுச்சண்டை பலத்து, கைச்சண்டையாகி, இன்னும் கோபமதிகரித்ததனால் லக்கு மற்றவனைக் கிணற்றில் தள்ளிவிட்டான். இதைப் பார்த்திருந்த என்னிடத்தில் லக்கு வந்து அவனுயிரைக்காப்பாற்றினால் எனக்கு வேண்டுமானது செய்வதாகச்சொன்னான். அப் பரிச்சாரகன் தெய்வாதீனமாய் டெபுடிகலெக்டர் கோபாலஸ்வாமியையர் வீட்டிலிருந்தான். தங்கள் பெண்ணுக்குச் சாந்திமுகூர்த்தம் என்று கேள்விப்பட்டு எனது புத்திமுழுவதையும் செலுத்தி ஒரு வேடிக்கையான கடிதம் எழுதி அந்த லக்கு என்கிறபரிச்சாரகனிடத்தில் கொடுத்து, அதில் நமது மருமகப்பிள்ளையின் முத்திரையைப் போடச்சொல்லி சாந்தியுள்ளே வைத்துவிடச்சொன்னேன். அவனும் அவ்வாறேசெய்தான். அக்கடிதத்தினால் உமது பெண்ணுக்கும் மருமகப்பிள்ளைக்கும் சண்டை நடந்தது.

அக்கடிதத்தைக்கண்டு இருவரும் மனஸ்தாபப்பட்டதனால் இருவரினும்பேதையர் ஒருவருமில் என்னலாம். ஏனெனில் கடிதத்தின் முற்பாகத்தில் உமது பெண்ணை அலியெனக்கூறிய யான் பிற்பாகத்தில் துர்நடத்தையுள்ளவளென்றேன். இதைப்பார்த்து கலகமுற்றவர்களின் புத்தியெவ்வளவு அதிகமாயிருத்தல் வேண்டும்.

கடிதம் யானெழுதுவதற்கு இரண்டு நாள் பிடித்தது. அதை நீர்படியும். உமது மருமகப்பிள்ளை யிடத்திலேனும் உமது பெண்ணிடத்திலேனும் இருத்தல்வேண்டும். தங்கள் பெண்ணெழுதியதாக மருமகப்பிள்ளைக்குத் தோற்றல்வேண்டும் என்று தீபாவளிக்கடிதத்தின் எழுத்துப்போலும், மருமகப்பிள்ளைக்கு வந்ததெனப்பெண் நினைக்கவேண்டுமென்று அவன் தோழனெழுதினது போலும் எழுதி ஆஹா! என்

சக்திபேசக்தி! இருவரைக்கெடும்படிச் செய்துவிட்டன னன்றோ?

நான்செய்த மறுகுற்றம்—ஆச்சரியப்படவேண்டாம்! —தங்கள் வீட்டிற்குத் தீமூட்டியதே ஆம்! நான்றான் தங்கள் வீட்டின் கீழ்ப்பாகத்திற்கு தீவைத்தவன், தீப்பற்றி யெரிந்த பொழுது நான் ஊரிலில்லை, அதற்கு இரண்டுநாள் முந்தி பாஸ்பரஸ் (Phosphorus) என்னும் வஸ்துவை சாணி உருண்டைக்குள் வைத்து உருட்டி காய்ந்தவுடன் சிறிது மண்ணெண்ணெயும் அதன்மேல் விட்டுவிட்டு அவ்வுருண்டையை இராத்திரிதங்கள் வீட்டின்மேல் இரண்டு ஓட்டைப் பிரித்து உள்வாரையில் படும்படி வைத்துவிட்டு மேலே சில ஓலைகளைப் பரப்பிவிட்டு மறுநாள் ஊர்போய்விட்டேன். பனைவாரையாயிருந்தால் தீப்பிடியாது தேக்குமர மாகையினாலும் பாஸ்பரஸ் நிறையவைத்திருந்ததனாலும் குப் என்று பிடித்துக்கொண்டது; ஒருவனுக்கும் காயப்படாமலிருந்தது நல்லவேளைதான். இராத்திரியில் பிடித்திருந்தால் உயிர்ச்சேதம் நேரிட்டிருக்கும், நீங்கள்செய்த புண்ணியம் அதில்லாமல் போயிற்று.

நான்போட்ட மறுவேஷம் ஓரழகுள்ள ஸ்திரீயினுடையது. உங்களுக்கு விசாரணைத்தினம் ஞாபகமிருக்குமே! மாஜிஸ்திரேட்டார் தங்கள் குமாரத்தியைப் பரிசோதனை செய்யும்படி உத்தரவளித்ததும் ஞாபகமிருக்கும், அன்றையதினம் இராத்திரி எனக்கு நித்திரையே வரவில்லை நான் செய்ததனாலல்லவோ இவ்வளவு விசாரணையுமுண்டாயிருக்கிறதென்று சந்தோஷப்பட்டுக்கொண்டு ஜன்னல்வழியாய் நிலவையும் குளத்தையும் பார்த்து யோசித்துக்கொண்டிருந்தேன். 11-மணி யடித்து சிறிதுநேரம் இருக்கும், தங்கள் பெண் குளத்தை நோக்கிச்சென்றாள், என்னத்திற்காகப் போகிறாளென்று யோசித்து காலலம்புவதற்காக விருக்குமென்று படுத்துக்கொண்டேன். ஆனால் குளத்திற்குள்போனவள் வெகுநாழிவரைக்கும் வராததினால் ஏதோ வேறுகாரியத்திற்குச் சென்றிருக்கிறாள் என்று எண்ணி யான் எழுந்திருந்து கதவைத்திறந்துகொண்டு குளக்கரைக்குச்சென்று

எட்டிப்பார்த்தேன். அவள் காலில் கல்லைக்கட்டிக்கொண்டு விழுவதற்குத் தயாரா யிருந்ததைப்பார்த்துக் கூப்பிடலா மென்று வாயெடுப்பதற்குள் குளத்திற் கெதிர்க்கரையி லுள்ள வொருவர் 'அலம்பாதே' என்று கூவினார், உடனே மீனாக்ஷி கல்லை யவிழ்த்துவிட்டு வீட்டிற்கு ள்ளேபோய்விட்டாள். இதைப் பார்த்தவுடனே எனக்கு மீனாக்ஷி குளத்திலிறங்கின காரியம் தெரிந்துபோயிற்று. குளத்தில் விழுவதற்குத் துணிந்தவள் கிணற்றிலும் விழுவளென்று நான் அதையும் தடுப்பதற்குத் தோட்டத் திற்குச்சென்று சுவரேறிக்குதித்து உங்கள் வீட்டுத்தோட் டத்தில் வாழைமரத்தோடு சேர்ந்து கிணற்றிற்கு எதிரில் நின்றுகொண்டிருந்தேன் நான் நினைத்தபடியே உங்கள் தோட்டத்துக்கதவு திறந்தது. மீனாக்ஷியும் வந்தாள். ஆனால் கிணற்றில் விழாமல் என்னை நோக்கி வருவதைக்கண்டு நான் சற்று ஒதுங்கினேன். நான் ஒதுங்குவதைப்பார்த்து சற்று மயங்கி, பயந்து, பிறகு நேராகச்சென்று தோட்டத்துக் கதவைத் திறந்துகொண்டு வெளியிற் போய்விட்டாள்.

நானும் இவளெங்கேயோ ஓடிவிடப்போகிறாளென்று நினைத்து உள்ளேபோய்ப் படுத்துக்கொண்டேன். மறுநாள் மீனாக்ஷிபோனவிட மெனக்குத் தெரிந்திருந்தது. நான் தங்க ளிடத்தில் சொல்லவில்லை. சொல்லாமற்போனதுமன்றி யந் தத் திக்கு தவிர மற்றத்திக்குகளில் ஆள்களைத் தேடுவத ற்கு அனுப்பும்படியான வேற்பாடுஞ் செய்தேன். அன் றையதினம் மாலை 3-மணிக்கு அவள்சென்ற திக்கை நோக்கி நானும் சென்று ஒவ்வொரு ஊராய் விசாரித்துக்கொண்டு சென்றேன். கடைசியாய் [illegible]ர்சென்று விசாரிக்கும்பொ ழுது அந்தவூரில் ஒருபெண்ணைக் காலையில் பார்த்ததாகவும், அந்த பெண் சோமயாஜிதிக்ஷிதரிடம் இருப்பதாகவும் கேள் விப்பட்டேன்.

திருடர்களைத் திருடர் அறிவர். இந்த தீக்ஷிதரை யெனக்கு வெகு நன்றாய்த்தெரியும். மீனாக்ஷி யவன் வீட்டி லிருக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் எவ்விதமா கிலும் அவளை வெளிப்படுத்தவேண்டுமென்கிற வெண்

ணங்கொண்டு அன்றிரவு ஓர் ஸ்திரீவேஷந் தரித்துக்கொண்டேன்.

அவ்வேஷங்கொண்டு தீக்ஷிதருடைய தோட்டத்தின் பின்புறத்தில் நான் நின்றுகொண்டிருந்தபொழுது, ஞானம் யாகவே வெளியில் வந்தாள் பழம்நழுவிப் பாலில்விழுந்ததாக நினைத்துக்கொண்டு அவளோடு சிநேகம்செய்ய வாரம்பித்தேன். அவள் ஊர் சிதம்பரம் என்றாள். நான் அவளுக்கு நடந்த விஷயங்களை எனக்கு நடந்த விஷயங்களாகக் கூறினேன். இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டேபோய் ஓர் மண்டபத்தை யடைந்தோம். அம்மண்டபத்தில் என் காரியத்தை நிறைவேற்ற நான் எண்ணி முயலும்பொழுது தங்கள் குமாரத்தி கூக்குரலிட்டாள், அதைக்கேட்டு இருவர் ஓடிவந்தனர். அப்பொழுது யாரோவென்று அவர்களையெண்ணி யோடிவிட்டேன். பிறகு திருடர்களென்று தெரிந்தது இன்னும் 5-நிமிஷம்கழித்து வந்திருப்பார்களாகில் என் காரியத்தை நிறைவேற்றி விடுவேன். பிறகு ஞா யைப்பற்றி யெனக்கொன்றும் தெரியாது தங்களை அநேக தடவைகளில் கேட்டும் சொல்லமாட்டேன் என்று விட்டார்கள்.

பிறகு நமது மருமகப்பிள்ளை இராமஸ்வாமியும் எனது பெண் ஞானம்பாளும் சேர்ந்து பட்டணத்திலிருப்பதைக் கேள்விப்பட்டு ஞானம்பாளுக்கு அனேக கடிதங்களெழுத வாரம்பித்தேன். கடிதங்களில் நானின்னவனென்றியம்பாமல் குசலம்வினவிப் பொது சமாசாரங்களைப்பற்றியும் எழுதினேன். அவைகளைப் புதிதாய் ஏற்படுத்திய போஸ்ட் ஆபீசில் போட்டதினால் இராமஸ்வாமியையருக்கு கடிதம்வந்த இடங்கூட தெரியாது.

ஒருதரம் 10-ரூபாய்க்கு மணியார்டரும் செய்தேன். பணத்தை முதலில் என் தோழன் பரிசாரகனுக்கனுப்பி, அவன் மூலமாய்ப் பட்டணத்திற்கு அனுப்பச்சொன்னேன், கடிதங்களும் அவன் மூலமாய்த்தானெனக்கு வரும் அவன் அப்பொழுது மலையாளம் டெபுடிகலெக்டரிடம் இருந்தான்.

இதற்குப்பிறகு இரண்டு வருஷம் நான் ஒருவிதமான குற்றமுஞ் செய்யவில்லை, ஆனாலடிக்கடி என் முதற்பெண்டாட்டியும் ஞானம்பாள் தாயாரும் ஆகிய ராதையம்மாள் வீட்டிற்குப்போய் அவளோடு சுப்பிரமணிய சாஸ்திரிகளில்லாதவேளையில் பேசிக்கொண்டிருப்பேன். என்னிடத்தில் பணமில்லாமற்போனால் அவளைக்கேட்டு வாங்கிக்கொள்வேன்.

இரண்டரை வருஷம் கழித்து ஒருநாள் அவளைப் பணங்கேட்டேன். அப்பொழுது அவளிடத்தில் பணமில்லாததினால் அப்புறம் வந்தால் தருவதாகச் சொன்னாள். எனக்கு அவசரமாயிருக்கிறதென்று நான்சொல்ல தன் ஓலையைக் கழற்றிக்கொடுத்துவிட்டாள். அவளிடத்தில் இராமஸ்வாமியின் பழையபெண்டாட்டி மீனாக்ஷி இராமஸ்வாமியினிடத்தில் சேர்ந்துவிட்டாளென்ற விஷயம்தெரிந்துகொண்டேன் என்னிடத்தில் பணமில்லாததற்காக நான் ஓலையைவாங்கிவரவில்லை, என்சுபாவம் வெறுமனே யிருக்கும்படி யென்னைவிடாது, ஏதாவது விஷமங்கள் செய்துகொண்டே யிருக்கவேண்டும். அவளும் அவ்வளவு சீக்கிரத்தில் நகையைக் கொடுத்திருக்கமாட்டாள், 'வெளிப்படுத்திவிடுவேன்! வெளிப்படுத்திவிடுவேன்!' என்று பயமுறுத்தவே, பேதை கொடுத்துவிட்டாள்.

நகையை வாங்கிக்கொண்டு நான்வரும்போது நமது மருமகப்பிள்ளையும் எனது பெண் ஞானம்பாளும் ஆமக்குடிக்குச் செல்வதைப்பார்த்தேன். இவர்கள் இரண்டுபேரும் இங்கேவந்து விட்டதனால் மீனாக்ஷி தனியாய்த் திண்டிவனத்திலிருப்பளென நிச்சயம்பண்ணிக்கொண்டு அவ்விடம் போக்கிரித்தனம் செய்ய வெண்ணித் திருப்பாப்புலியூர் சென்று என்கிழவன் உடுப்பை யெடுத்துக்கொண்டு திண்டிவனம் சென்றேன்.

நான் கிழவன் வேஷம்போட்டு 5-வருஷம் ஆனபடியால் என்னை யொருவரும் கண்டுபிடிக்க மாட்டார்களென்று நிச்சயமாய் நம்பியிருந்தேன் திண்டிவனத்தில் போய் கிழவன் வேஷம் பூண்டு ஒருநாள் சாயங்காலம் ஸௌந்தரராஜ அக்

பிரகாரத்தின் வழியாய்ப் போய்க்கொண்டே யெதையோ யோசித்துக்கொண்டிருந்தேன். நான் எங்கேயாவது வெளியூருக்குப்போனால் ஒரு நோட்டுப்புஸ்தகம் எடுத்துப்போவதுண்டு. அந்த நோட்டுப்புஸ்தகத்தில் என் விருத்தாந்தங்களெல்லாம் எழுதியிருக்கும், நான்செய்த செய்கைகளும் அதிற்கண்டிருக்கும். அந்த நோட்டுப்புஸ்தகத்தை தலையில் கந்தைத்துணியில் வைத்துக்கொண்டிருந்தேன், அது எப்படியோ கீழேவிழுந்துவிட்டது. அது காணமற்போகவே திரும்பித் தேடிக்கொண்டேபோனேன், அந்த நோட்டுப் புத்தகம்தான் என்னுயிர்.

அதைத் தேடிக்கொண்டு போன நான் யாரோவொருவர் அதை வாசிப்பதைக்கண்டு எனக்கு மகா கோபம் வந்துவிட்டது. என்கையிலிருந்த தடியால் ஒரேயடியாய் அடித்தேன். அவருங்கீழேவிழுந்தார். விழுந்ததும் நோட்டைப் பிடுங்கிக்கொண்டு அவர் முகத்தைப்பார்க்கவே என் மருமகப்பிள்ளை ஐயாஸ்வாமியையராயிருப்பதைப் பார்த்து எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை. அதற்குள் கும்பல் கூடிவிட்டது. நம்முடைய கையில் நோட்புஸ்தகம் இருந்தால் யாராவதுபார்த்து விடுவார்களென்று அங்கிருந்த சாக்கடையில் எறிந்துவிட்டேன். அதையாரோவெடுத்துக் கோர்ட்டிற்குக் கொண்டுவந்தார்கள்.

என்னை அன்றையதினம் சாயங்காலம் போலீஸ் ஸ்டேஷனில் ஓரறையில் அடைத்தார்கள், வெளியில் கதவைச்சாத்திப் பூட்டிக்கொண்டு சென்றதும் தப்பித்துப்போவதற்கு வழியிருக்கிறதா வென்று பார்த்தேன். ஒன்றையுங்காணோம், நல்லது என்று சேவகனைக் கெஞ்சிக்கேட்டு ஒருவர்த்திக்குச்சி வாங்கினேன் சுருட்டுபிடிப்பதற்கென்று. இராத்திரி எல்லாரு முறங்கினதும் என் கிழ உடுப்பை, ஐயோ! என்கை நடுங்குகிறது! என்மனம் பதைக்கின்றது! ஐயோ! அந்தக்கிழவன் உடுப்பை, என்னமாயினிமேலெழுதுவேன்? கைவரவில்லையே! நான் வெகுபக்ஷமாய் வைத்திருந்த அந்த உடுப்பை, என்னைக்காப்பாற்றின அந்த உடுப்பைக் கொளு

த்திவிட்டேன். ஐயோ ! நான் கொளுத்திவிட்டேன். பிறகு என் சுய உடுப்பைத்தரித்து, சாம்பலினால் விபூதியணிந்து விடியற்காலம் 5-மணிக்குக் கதவைத்தட்டினேன். 5, 6, தரம் தட்டினபிறகு ஒரு சேவகன் கதவைத்திறந்து 'என்னடா !' என்றான். கிழவனென்று நினைத்து அவ்விதம் சொன்னவன் என்னைக்கண்டவுடன் பயத்தினாலோ, ஆச்சரியத்தினாலோ ! என்னைப்போகவிட்டு உள்ளேநுழைந்தான். நான் வெகுவிசையாய்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியில்வந்ததும் அங்கிருந்த சேவகனும் தூக்கக்கலக்கத்தினால் என்னைப் பிடிக்கவில்லை. நாலடிப் பத்துகஜம் சென்றதும் உள்ளேயிருந்த சேவகன் அவனைப்பிடி, அவனைப்பிடி என்று சொன்னது என்காதில் விழவே நான் ஓட்டமாய் ஓடினேன். என்னையொருவரும் துரத்தவில்லை. 'ஏன் துரத்தவில்லை ? ஏன் என்னைப் பிடிக்கவில்லை ?' என்று யோசித்துக்கொண்டு ஓட்டோடியும் சென்று மைலம்சேர்ந்தேன். மைலத்திலிருந்து எனக்குத் தெரிந்த ஒருவரிடம் கடன் வாங்கிக்கொண்டு ரெயிலேறி விழுப்புரம்சென்றேன். விழுப்புரத்தில் திருப்பாப்புலியூரிலிருந்துவந்த வண்டியில் என்சம்சாரத்தைகண்டு ஒன்றுந் தெரியாதவன்போல் 'இப்பொழுது எங்கேபோகிறாய் ?' என்றேன். 'நீங்கள் எங்கேயோ போய்விட்டீர்களே ! நம்முடைய மருமகப்பிள்ளையை யாரோ அடித்துக் காயம்பட்டிருக்கிறதென்று சொன்னாள். அவளுடன்கூட ஏறி நானும் திண்டிவனம்வந்து சேர்ந்தேன். நான் காலையில் யமன்வாயிலிருந்தும் தப்புவதுபோல் தப்பிவந்த போலீஸ் ஸ்டேஷனில் என்னசெய்கிறார்களென்று எட்டிப் பார்த்தேன். ஏக கும்பலாயிருந்தது. என்னவிசேஷமென்று கேட்டதற்கு நேற்றையதினம் ரிஜிஸ்திராரை யடித்த கிழவன் இன்றையதினம் பிராமணனாகிவிட்டான் என்றார்கள். 'பிராமணனெங்கே ?' யென்று யான் கேட்டதற்கு அதோ பார் என்றார்கள், பார்த்தேன். பாவம்! ராமசுப்பய்யரைப்பிடித்து வைத்திருந்தார்கள்.

இந்த ராமசுப்பய்யர் தங்கள் உறவினளாகிய லக்ஷ்மியின் தமயன். இவர் பரம ஏழை. அன்றையதினம் காலை

லோகலில் திண்டிவனத்திலிறங்கினராம். அவர் திண்டிவனம்போன காரணம் நமது மருமகப்பிள்ளை முன்சீபு இராமஸ்வாமியையரைப் பார்ப்பதற்குத்தானும். ஏதோ உறவு என்று சொன்னால் ஏதாவது கைக்குக் கொடுக்க மாட்டாராவென்று திண்டிவனம் போனாராம். $2\frac{1}{2}$-மணிக்கு அவ்விடம் சென்றதும் ஒரேயிருட்டாய் இருந்தபடியினால் காலையில் போவோமென்று ஸ்டேஷனில் படுத்திருந்தாராம், பிச்சைக்குடியில் சனீசுவரன் புகுந்ததுபோல் ஓர் திருடன் இவர் மூட்டையை யெடுத்துப்போய்விட்டான். இவர் மிகவும் துக்கப்பட்டுக்கொண்டு போலீஸ்ஸ்டேஷனுக் கருகாமையில் வந்துகொண்டிருந்தார். அவர் அங்கேவந்த சமயமும் நான் அதைவிட்டுப் புறப்பட்ட சமயமும் ஒன்றாய் இருந்தது. உள்ளேயிருந்த சேவகன் 'அவரைப்பிடி! அவரைப்பிடி!' என்றதும் வெளியிலிருந்த சேவகன் என்னை விட்டுவிட்டு இராமசுப்பையரைப் பிடித்துக்கொண்டான். அவருக்கு என்ன தெரியும்! ஒன்றுந் தெரியாமல் விழித்தார். பாவம்!

பார்த்தீர்களா வேடிக்கையை! நான்செய்த தந்திரத்தினால் ஒன்றுமறியாத அவர் பிடிபட்டார், ஹெட்கான்ஸ்டபிள் உள்ளேயிருந்து வந்த பிராமணனைத் தடுத்ததாகச் சொல்லியது பொய் அவன் என்னை விட்டுவிட்டு உள்ளேயிருந்தவன் சொல்லியதன்பேரில் தெருவில் போய்க்கொண்டிருந்த மற்றவனைப் பிடித்துக்கொண்டான்.

நான் பயமற்றவனாகவே யிருந்தேன். என் நோட்டுப் புஸ்தகம் ஒருவரிடமும் அகப்படவில்லை யென்று நான் தைரியமாயிருந்தேன். இன்றையதினம் கோர்ட்டில் நோட்டு புஸ்தகத்தைக் கண்டதும் என் மனம் பகீரென்றது. உங்கள் முகத்தில் என்னமாய் விழிக்கிறதென்று எனக்கு மிகுந்த வெட்கமாய்ப்போயிற்று, நான் இன்றையதினம் தற்கொலைபுரியப்போவதற்கு இது ஒரு காரணம். மற்றொரு காரணம் என்னுடைய இஷ்டந்தான்.

நானிவ்வளவு ஆச்சரியங்கள் செய்தேனே! என் சரித்திரத்தை யொருவரும் எழுதக்கூடாதா? யாராகிலும் என்

சரித்திரத்தில் நான் செய்தவைகளை விடாமல் எழுதினால் அவருக்கு என் ஆஸ்தியில் பாதியைக்கொடுப்பதற்கு இதுவே உயில்பத்திரமாகும்.

ஐய! நான்போய் வருகிறேன், எங்கே? மேலுகத்திற்கு. முன்னாடி சென்று தங்களுக்கிடம் சம்பாதித்துவைக்கிறேன். ஆனாலும் நான்நரகத்திற்குச்செல்வேன். தாங்கள் சுவர்க்கம் செல்வீர்கள். என்னவாச்சரியம்! இப்பொழுது கடிதம் எழுதுகிறேன். இன்னும் ½-மணிநேரத்தில் நான் எங்கே யிருப்பேன்! எங்கே?

நாராயணஸ்வாமியையர்.

என் குமாரத்தி ஞானம்பாளை சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி முன்சீபு இராமஸ்வாமியையரிடம் சொல்லவும்.

நாராயணஸ்வாமியையர்.

16-வது அத்தியாயம்.

சரித்திரமுடிவு.

மறுநாள் கோர்ட்டில் நாராயணஸ்வாமி அய்யர்கடிதத்தைவாசித்து இராஜகோபாலையர் தன்ஜாமீனினின்றும் தன்னைவிடுவித்துக் கொண்டார், முதற்கைதி இராமசுப்பையரைவிடுவித்ததுமன்றிப் பொய்கூறியவனைதலைமைச் சேவகனைப்ராஸிகூஷன் செய்யும் படிக்கும் உத்தரவு கொடுத்தார்கள்.

நான் சரித்திரம் எழுதினால் பாதி ஆஸ்தி தருகிறேன் என்றானே என்று எழுதினேன். அவர்பிள்ளையினிடத்தில் கொண்டுபோய்க் காட்டவே 'உன்னை எழுதச்சொல்லியது யார்?' என்று கேட்டான். அதற்குநான் 'உன்தகப்பனார் அவர் சரித்திரத்தை யெழுதினவர்களுக்கு பாதியாஸ்தி தருவதாகச் சொன்னார்' என்றேன். அவன்! "அவரைப் போய்க் கேட்டுக்கொள்" என்றான். யோக்கியதை நன்றாயிருக்கிறதென்று அவர் மருமகப்பிள்ளை ஐயாஸ்வாமி அய்யரைக்கேட்டேன். அவர் 'என்மைத்துனன் செய்ததைப் பற்றி யென்னைக் கேட்காதேயுங்கள்' என்றுவிட்டார்.

இப்பொழுது நாராயணஸ்வாமி ஐயரிறந்து ஒன்றரை வருஷமாகின்றது.

ஞானம்பாள் கருப்பமென்றோமே அவளுக்கு வளைகாப்பும் நடக்கவில்லை, சீமந்தமும் நடக்கவில்லை, சுப்பிரமணியசாஸ்திரிகள் அவளையும் அவள் தாயாரையும் நீக்கிவிட்டுத் தான் வேறுகலியாணம் செய்துகொண்டார். ஞானம்பாளுக்கு அவளடைந்த வருத்தத்தினால் 7-ம் மாதத்திலேயே பிரசவமாகிக் குழந்தை பிறந்துவிட்டது. அவளுக்கும் அவள் தாயாருக்கும் முன்சீபு இராமஸ்வாமி அய்யர் மாதம் 20-ரூபாய் அனுப்புகிறார்.

கோபாலஸ்வாமி ஐயர் தன் சம்பந்தி இராஜகோபாலையரை வீணேகோர்ட்டிற்கு இழுத்தோமேயென்று, அவருடைய பெண்ணும் தன்னுடைய நாட்டுப் பெண்ணுமாகிய மீனாக்ஷிக்கு 2000-ரூபாய்க்கு ஒரு வைரக் கம்மல் வாங்கிக்கொடுத்தார்.

இராஜகோபாலையர் 500-ரூபாய்க்குக் குறைந்த கேஸ்களுக்குப்போகிறதில்லை. அவர் பிள்ளை சேஷையருக்குத் தாசில்தார் வேலையாயிருக்கின்றது.

இராமஸ்வாமியையருக்கும் மறுபடியும் இப்பொழுது தாசில்தார் வேலையாயிருக்கின்றது. அவர் அகமுடையாள் 'ஏஏஏஏஎன்ன? மிமிமிமிமின்ன வேலையாறது. ஆஆ அப்பபறம்ப்ப்ப்போய்டறது' என்றாள்.

வீராஸ்வாமியையருக்கு சப்மாஜிஸ்திரேட்டானவுடன் குதிரைவண்டி வைத்துக்கொள்ள வாசைப்பட்டார். ஆனால் பார்வதியம்மாள் 'குதிரைவண்டி வைத்துக்கொண்டால் மாதம் 20-ரூபாய் வீண் செலவுதானே யாகும் அந்த ரூபாயிருந்தால் நம்முடைய குழந்தைக்கு ஒரு வெள்ளிக் காப்பு பண்ணிப்போடலாமே! மேலும் நடந்துபோனால் பலமுண்டாகும். குதிரைவண்டியில் போனால் என்ன உண்டாகும்? என்றதனால் அவர் குதிரைவண்டி யாசையை விட்டுவிட்டார்.

காமாக்ஷியம்மாளும் விசாலாக்ஷியம்மாளும் அந்நியோன்னிய சினேகிதத்துடன் அநேக க்ஷேத்திரங்களைத் தரிசனம்செய்து அநேக விரதங்களை யனுஷ்டித்து வருகிறார்கள்.

இராமசுப்பையர் பட்டகஷ்டத்திற்காக அவருக்கு முன்சீபு மாதம் 5-ரூபாய் அனுப்பிவருகிறார். லக்ஷ்மி 'எல்லாந்தான்! இந்த ரூபா இல்லேன்னாட்டு இப்ப யாரழுதா. முன்னே ஜெயில்லேபோடுவானே? இப்ப பணம் அனுப்புவானே! நானாயிருந்தால் அவன் மூஞ்சியிலேயே விட்டு எறிவேன்! அந்தக் கட்டையிலேபோறவன் அதை வாங்கிக்கிண்டு இருக்கான்' என்றாள்.

நம்முடைய நாயகனும் நாயகியும் சவுக்கியமா யிருக்கிறார்களென்று சொல்லவும் வேண்டுமோ? இவர்களுக்குச் சீக்கிரத்திலேயே ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதன் அழகைக்கண்டு இருவரும் பேரானந்தமடைந்து அழகில் மீனாக்ஷியையும் செய்கையில் இராமஸ்வாமியையும் ஒத்திருக்கிறதென்று பேசிக்கொண்டனர். இக்குழந்தை சம்பந்தமாய்ப் பலவாறு பேசிவருகையில் தகப்பனார் சந்திரகாசன் என்றுபெயரிட வேண்டுமென்றார். தாய், இராமமூர்த்தியென்று வைக்கச்சொன்னாள் இதைத் தகப்பன்மறுக்கவே,

மீ—பிடிவாத மென்றால் எதிலும் பிடிவாதம். நான் இராம மூர்த்தியென்று பெயர்வைக்கச் சொன்னேன்! சந்திரகாசன்! பெயரைப்பார்க்கவில்லை! ஐயோ சந்திரகாசா!

இரா—நீகோபித்துக் கொள்ளாதேயடீ! அடுத்தகுழந்தைக்கு இராமமூர்த்தி யென்று பெயர் வைத்துவிடுகிறேன்.

மீ—அடுத்த குழந்தை பிறந்தபோது பார்த்துக் கொள்வோம். இப்பொழுது சொல்லுங்கள்.

இரா—இன்னுமொருகுழந்தை பிறப்பதற்கு வெகுகாலம் செல்லுமோ? இன்னும்நான்கு மாதந்தானே!

மீ—அது பெண்ணாய்ப்பிறந்தால்?

இரா—மீனாக்ஷி யென்று பெயர்வைக்கிறேன்.

மீ—நீங்கள் வைக்கிற பெயர்தானோ? என்தாயார் தகப்பனார்சொல்கிறபடி.

இரா—தாயார்தகப்பனாரா? இந்தப்பிரசவமும் பிறந்தகம்போகலாமென்று நினைத்தாயோ? ஒவ்வொருபிரஸவத்திற்கும் அங்கேபோயிருக்கிறதோ?

மீ—நான்போகவில்லை. அவர்கள் வந்து கூப்பிட்டால் வரமாட்டேன் என்றுசொல்லஎனக்கு வெட்கமாயிருக்காதோ?

இரா—நான் கண்டித்துச் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது நான்குமாதம் அப்பொழுது 3 மாதம் 7 மாதம் உன்னைவிட்டுவிட்டு————அப்பப்பா! 7 நாள் உன்னைவிட்டிருப்பேனா?

மீ—எல்லாம் பிடிவாதந்தானே! இதுவும் உங்கள் பிடிவாதமாயிருக்கட்டும்.

என்று புன்சிரிப்பு கொண்டாள்.

இரா—நாராயணஸ்வாமி ஐயர் இல்லாமல் விட்டால், 4-வருஷத்திற்கு முந்தியே பிறந்திருக்குமே யிந்தக் குழந்தை.

மீ—ஆமாம். ஆனால் மெலிந்திருக்கும் குழந்தை.

இரா—அது உண்மைதான். இப்பொழுதுபாரேன். எவ்வளவு அழகாயிருக்கிறது! உன்னுடைய அழகு என்னுடைய அழகு இரண்டையும் சேர்த்துவைத்தாற் போலிருக்கிறதே!

மீ—ஆமாம்.

என்று சிரித்து அவன் மடியில் சாய்ந்தாள்.

இதை வாசிக்கும் புருஷர்களும் ஸ்திரீகளும் இராமஸ்வாமியும் மீனாக்ஷியும் கூடியிருப்பதுபோல் யாதொருதொந்தரவுமின்றிச்சுகமாய் இருப்பார்களாக.

மீனாக்ஷி சரித்திரம்.

முற்றிற்று.

தாமோதரன்.

இது ஓர் புதிய தமிழ் நாவல். இங்கிலீஷில் டாம் ஜோன்ஸ் (Tom Jones) என்னும் சிறந்த நாவலின் நேர் மொழிபெயர்ப்பு. இதன் ஆங்கில ஆசிரியர் மிக்க லோகாநுபவர். அதனால் நாம் நேரிற்காணும் ஒவ்வொன்றையும் படிப்போர் கண்ணும் மனமும் கவரும் வண்ணம் எழுதவல்லவர். இவரது அபாரசக்தியைக் காட்டவே இந்த நாவலில் மேல்நாட்டாருடைய நடவடிக்கை, குணவிசேடம், பாவனை, ஆசாரம், வீரம், கற்பு, செல்வப்பெருக்கு, ஆண்மை, அஞ்சாமை முதலிய அருங்குணங்களைப்பற்றிய பல விஷயங்கள் ஆங்காங்கு அமைத்துள்ளார். இவையல்லாமல் மூடத்தனமாய் சாரமில்லாதவும், உண்மையல்லாதவுமான வீண் வார்த்தைகள் பேசுவதால் உண்டாகும் தோஷ நஷ்டங்களை வெள்ளிடைமலைபோல் எடுத்துக் காட்டியிருக்கிறார். இவையெல்லாம் மருந்தை பதமான மூலமாய் நோயாளிக்குக் கொடுப்பது போல் உலகாநுபவ முதிரவேண்டிய ஸ்திரீ புருஷருக்குச் சரித்திர மூலமாய் இன்பமும், சுவையும் மிக எழுதியிருப்பதால் இதனைத் தமிழில் வெளியிடின் நமது நாட்டில் தமிழ்ப்படித்த ஸ்திரீ புமான்களுக்குப் பெரிதும் பிரயோஜனமாயிருக்குமென்று இனிய தமிழ்நடையில் யாவரும் எளிதில் படித்து அறிந்துகொள்ளக்கூடிய மாதிரியில் கடினப் பிரயோகம் சிறிதுமின்றி எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் மேல்நாட்டு ஆசாரம் முற்றும் நாம் உணர்ந்துகொள்ள இடமுண்டாம். படிக்கப்படிக்க இன்பமும் அறிவு விருத்தியுமுண்டாகும். இந்நாவல் சுமார் 330-பக்கங்கொண்டது. திருத்தமாய் உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டுள்ளது. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

விலை 0—12—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

த. இ. அ. மணவாளநாயகர்,
74, தாம்ஸன் ரோட்,
ரங்கோன்.

T. R. VENKATACHALA NAICKER,
Sugar Shop Merchant,
Big Bazaar,
MOULMEIN.

இரங்கூன்.

சுதேசபரிபாலினி

1912௵ ஜூன்௴ 21௳

புஸ்தக விமர்சனம்.

"தாமோதரன்"

இப்பெயர்கொண்ட தமிழ்க்கதை யொன்று எமது பார்வைக் கனுப்பப்பட்டது. இது பிரசித்தி பெற்ற ஆங்கிலக்கவியாகிய ஹென்றி பீல்டிங்க் என்பவர் இயற்றிய டாம்ஜோன்ஸ் என்னும் நாவலின் மொழி பெயர்ப்பு. இனியசெந்தமிழ் நடையில் எழுதப் பட்டுள்ளது. ஒவ்வொருஅத்தியாயத்தின் தலைப்பிலும் சமயோசிதமாகப் பொய்யாமொழிப் புலவருடைய குறளொன்றை மகுடமாகவுடையது. சமஸ்கிருதப் பதங்களைப் பிரயோகிக்கும்போது ஆசிரியர் கூடியபரியந்தம் அவற்றை சமஸ்கிருதத்திலுள்ளவாறு தற்சமமாகப் பிரயோகித்திருக்கிறார். இது ஆசிரியருக்குள்ள ஆங்கிலம், தமிழ், வடமொழி என்னும் மூன்று பாஷைகளிலுமுள்ள விற்பத்தியைத் தெள்ளிதிற் காட்டுகிறது. யாற்றொழுக்குப் போன்று நேரிய செந்தமிழ்நடையும், கதையின் பழங்கீர்த்தியும், ஆசிரியருடைய பாஷா ஞானமும், இந்நூலைச் சிறப்பித்து நிற்கின்றன. இதனுடைய இரண்டாம் பாகம் அச்சிலிருக்கிறதென்று கேட்டு மனங்களிக்கிறோம். படித்துயர்ந்த ஆடவர்கள்முதற்கொண்டு சிறிதே படித்த சிறுமிகளீறாக யாவர்க்கும் இந்நூல் படிக்கப்படிக்க இன்பந்தரும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. இதன் விலை 0—12—0 தபால் சிலவுப் பிரத்தியேகம்.

கிடைக்குமிடம் :

T. R. A. மணவாள நாயகர்,

74. தாம்ஸன் ஸ்ட்ரீட்,

ரங்கோன்.

பாண்டியன் பத்திராதிபர்.

15—11—11.

புத்தகவரவு.

தாமோதரன்.

இத்தலைப் பெயரமைந்த புத்தகமொன்று நமது ஆராய்ச்சிக்குவந்தது. முழுவதும் படித்துப்பார்த்தோம். ஒவ்வொரு அத்தியாயத்தின் தலைப்பிலும், தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய அற்புதத் திருக்குறளைக் கீழ்வரும் விஷயங்களுக்கிசையக் காட்டப்பட்டிருக்கிறது. அடுத்தாரைக் கெடுத்தல். மாதர் மோகத்தில் மயங்கி நிலைதடுமாறல், பொருளை உத்தேசித்துப் பெண்ணைக் கெடுத்தல், பொறாமை, லோபம், இவைபோன்ற விஷயங்களால் நேரிடும் கெடுதிகளையெல்லாம் தெளிவான வசனநடையில்படிக்கப்படிக்க இனிமைதரும்படி எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை ஒருமுறை வாசித்தோர் சிறந்த லௌகிகர்களாய் விடுவார்கள். இரங்கூனைச் சேர்ந்த கம்பையம்பதியில் ஸ்ரீ கல்யாண வேங்கடேசப் பெருமாளைத் திருக்கோவில் கொண்டெழுந்தருளச்செய்த புண்ணியசீலராகிய ஸ்ரீமாந் வேங்கடஸாமி நாயகரவர்கள் ஞாபகார்த்தமாக இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 324-பக்கங்கள் கொண்டதும், சிறந்த பைண்டு செய்யப்பட்டிருப்பதுமாகிய இப்புத்தகத்தின் விலை அணா 12-தான். இது பாண்டியன் ஆபீஸிலும் கிடைக்கும்.

கிடைக்குமிடம் :

T. R. A. மணவாள நாயகர்,

74. தாம்ஸன் ஸ்ட்ரீட்,

ரங்கோன்.

மீனாக்ஷி விற்குமிடங்கள்.

T. R. A. மணவாள நாயகர்,
74, தாம்ஸன் ரோட்,
ரங்கோன்.

ஜனரல் சப்ளேஸ் கம்பெனி,
மயிலாப்பூர்,
சென்னை.

S. ராஜா சாஸ்திரியார்,
ஸ்ரீ வித்தியா புஸ்தகசாலை,
ஸ்ரீ புராணமஞ்ஜரி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

T. K. சாஸ்திரியார்,
மானேஜர்,
அம்பாவிலாச புஸ்தகசாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை.

T. R. VENKATACHALA NAICKER,
Sugar Shop Merchant,
Big Bazaar,
MOULMEIN

விஞ்ஞாபனம்.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

நாங்கள் நமது இராஜதானியின் கனவான்களின் உபயோகத்திற்காகவே பிறதேசத்தில் பெயர்பெற்ற வியாபாரிகளிடமிருந்து மொத்தமாய் அடியில்வரும் சாமான்களை தருவித்து சுவல்ப லாபத்துடன் மொத்தமாயும் சில்லரையாயும் விற்று வருகிறோம். நாங்கள் நேரில் ஏராளமாய் தருவிப்பதால் எல்லா தினுசுகளும் மிக்க குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. மற்றவர்கள் விற்பதைப் பார்க்கிலும் எங்கள் சரக்கு மிகவுறுதியும் நயமுமென நம்பகமாய்ச் சொல்லுகிறோம். காலதாமதமின்னியில் உடனே ஆர்டர்செய்யக் கோருகிறோம்.

நாங்கள் விற்கும் சரக்குகளாவன.

1. (**Primus gas Stove**) என்னும் காஸ் அடுப்புகள்.



நெ,	5	விலை ரூ.	6	0	0
,,	100	,,	5	12	0
,,	9	தகாடின்னுடன்	10	0	0
,,	10	ஷை	9	0	0
,,	11	ஷை	10	0	0

தயவுசெய்து பின்பக்கம் பார்க்கக் கோருகிறோம்.

2. கிராமபோன் மெஷின்
3. ஷை ரிக்கார்டுகள்
4. ஷை ஊசிகள்
5. ஆர்மோனியம் கல்கத்தா (Pear flute)
6. ஷை பாரிஸ் மேக்கர்
7. கத்தி பெட்டிகள்
8. அக்கார்டியன்
9. லெதர்பாக்ஸ்
10. பென்ட்வூட் நாற்காலிகள்
11. (Steel) காஷ்பாக்ஸ்கள்
12 டிரயம் பிலாஸ்க் (அதாவது) வெந்நீர் 24-மணி நேரம் அதுவே சுடுகையில் இருக்கக்கூடியது
13. பவுன்டன் பேனு
14. பென்சல்
.5. (Jocker) டயம்பீசு கெடியாரம்
16. பிரன்சு சோப்பு செண்டுகள்
17. அயாசிந்த் & பொக்கே என்னும் இங்கிலீஷ் அத்தர்கள்
18. சந்தன சோப்புகள்
19. வெள்ளி கைகெடியாரம்
20. வாக்கிங்ஸ்டிக் தடிகள்
21. (Leather) மணிபர்ஸ்கள்
22. மென்தால் யென்னும் தலைவலி மருந்துகள்
23. ஜப்பான் மூங்கில் பிரீப் கூடைகள்
24. முகம்பார்க்கும் கண்ணுடிகள்
25. ஜப்பான் பெட்டிகள்
26 ஷை பட்டு கைகுட்டைகள்
27. காட்டன் கைகுட்டைகள்
28. ரோல்ட் கோல்ட் சங்கிலி சாமான்கள்
29. பெல்ட்கள்
30. வண்டி & குதிரைமணிகள்
31. இமிடேஷன் டயமன் பட்டன்கள் வகையரா
82. ஜபான் மேஜைகள்
33. ஷை ஸ்கிரீன்கள்
34. அலுமியன் டம்லர்கள்
35. செல்வட் கிலாத்து
36. ஜப்பான் பல்பொடி
37. கல்கத்தா தலைமயிர் எண்ணெய்
38. ஜப்பான் அழகான சில்லரை சாமான்கள்
39. English ஷை ஷை சாமான்கள்
40. கிராமபோன் & காஸ் அடுப்பு இதுகளின் தனித் தனிச் சாமான்களும் இன்னும் அநேகவிதமான சாமான்களும் விற்றுவருகிறோம்.

எழுதினல் கேட்லாக் அனுப்புவோம். மொத்தமாய் வாங்கும் வியாபாரிகள் நேரே பெழுதித் தெரிவித்துக் கொள்ளலாம்

H. A. காலீக் H. A. றயிமான்,

2-173, பிராட்வே மதராசு

Progressive Press, Madras.